உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்

வரதராச கவிராசர்

இயற்றிய

சிவராத்திரி புராணம்

மூலமும்

இப்போது சன நூலகம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்து அச்சுவேலி

மயில்வாகனம்பிள்ளை அவர்கள்

குமாரரும்

உடுப்பிட்டி வாசருமாகிய

குமாரசூரியப்பிள்ளை அவர்கள்

இயற்றிய

பதவுரையும்

140638

140638

சிவராத்திரி புராணம் உரை

மூன்றும் பதிப்பு

சாதாரண ஆண்டு மார்கழித் திங்கள் — 1970.

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு.

294.5925

தும்பை நகர்

பிரமஸ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்கள்

பணிப்பின் வழி

மறவன்புலோ மு. கணபதிப்பிள்ளை அவர்களால்

யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

விலை: 12 ரூபா 50 சதம்.

சைவ சித்தாந்த நூலகம்
யாழ்ப்பாணம்

பதிப்புரை

செந்தமிழ் மொழியில் தோன்றிய சைவபுராணங்களுள் சிவராத்திரி புராணமும் ஒன்றாகும். இதனை ஈழமணித் திருநாட்டில் தோன்றிய புலவர்பெருமான், சுன்னாகம் பிரமஸ்ரீ வரதபண்டிதர் அவர்கள் இயற்றியருளினார்கள். சிவராத்திரி புராணத்தின்கண், சிவராத்திரி விரதத்தின் இயல்பும், சிறப்பும் விளக்கப்படுகின்றன. சிவராத்திரி விரதஞ் சிவ விரதங்கள் அனைத்தினுஞ் சிறந்ததாய் இறையருளை எளிதிற்பெற்று இன்பந்துய்த்தற்கு வாயிலாய் அமைந்துள்ளது. சைவநன்மக்கள், சிவராத்திரி காலத்தில் சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சிவராத்திரி புராணத்தைப் பத்திரத்தையுடன் படித்துப் பயன்சொல்லி இட்டசித்திகளை எய்திவருகின்றனர்.

சிவராத்திரி புராணத்தை யாவரும் நன்குகற்றுப் பயன்பெறும் பொருட்டு, அச்சுவேலியூர் மயில்வாகனப்பிள்ளை குமாரரும், உடுப்பிட்டி வாசரும், நல்லறிஞரும் ஆகிய குமாரசூரியப்பிள்ளை அவர்கள் நல்லுரை வகுத்து உதவினார்கள். முன்னர், பிள்ளை அவர்களாலும், பின்னர் தும்பைநகர் பிரமஸ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்களாலும் சிவராத்திரி புராணம் உரையுடன் வெளியிடப்பட்டது.

ஈழநன்னாட்டில், விநாயகப் பெருமான் கோயில் கொண்டருளி, அடியார் அல்லல்களை அகற்றி இன்னருள் சுரக்கும் திருத்தலங்கள் பலவுள. அவற்றுள் வள்ளிக்குளத்திருப்பதியும் ஒன்றாகும். இது யாழ் நகரில் இருந்து பத்துக்கல் தொலைவில் மறவன்புலோ எனும் ஊரின் கண், அமைதி தவழும் நெற்கழனிகளின் நடுவில், தெளிந்த நீரோடையின் பாங்கர் அமைந்து விளங்குகின்றது. இத்திருப்பதியில் ஆண்டுதோறுஞ் சிவராத்திரித் திருநாளிலே, புராணபடனமும் மகேசுர பூசையும் நடைபெற்று வருவதனை அன்பர்கள் அறிவார்கள்.

ஆங்கில ஆண்டு, ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தொன்பதுக்குச் சரியான, வெகுதானிய வருடச் சிவராத்திரித் திருநாளிலே கொழும்புத்துறையூர் யோகசுவாமிகள் இத்தலத்தின்கண் எழுந்தருளி, அனந்தல், ஊண் அகற்றிப் பன்னூற்றுக் கணக்கான அன்பர்களுடன் அமர்ந்து, புராணபடனத்தைச் செவிமடுத்துப் பேறு பெருக்கினர்கள்.

சுவாமிகள் அடியார்களைச் சாதனை மார்க்கத்தில் ஊக்குவிக்கும் முகமாக உடனிருந்து புராண படனத்தைப் பத்தி சிரத்தையுடன் செவிமடுத்து, ஈசனை ஏத்திய பரிசும், சிவநிசியில், புத்திபூர்வமாகவும், அபுத்தி பூர்வமாகவும், விரதம் அனுட்டித்துப் பேறு பெற்றவர்களின் சரிதங்கள் இந்நூலில் பயின்று வரும் பான்மையும், அடியனேன் மனதில் சைவ சமயிகளின் ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவராத்திரி புராணம் உயிர் மருந்து என்னும் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவனவாயின.

சிவராத்திரி புராணத்தில் அடியனேனுக்குள்ள ஆர்வத்தினையும், புராணம் இக்காலத்தில் கிடைக்காத தன்மையினையும் நன்குணர்ந்த தும்பைநகர், பிரமஶ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்கள் இந் நூலை அச்சிட்டு வெளியிடும் பணியை எனக்களித்தார்கள். அப்பணியினை மனமுவந்தேற்ற யான், தமிழன்பர்கள் யாவரும் நூலைப் படித்துப் பயன்பெறல் வேண்டும் என்றும், அதேசமயம் தமிழ் இலக்கணப் பயிற்சி அருகிவரும் இந்நாளில் தமிழ் மரபைச் சிதைக்கலாகாதென்றும் விழைந்தேன். எனது கருத்தினை, வித்துவான், பண்டித மணி திரு. ந. சுப்பையபிள்ளை அவர்களிடமும் அவர்தம் மாணவர் அன்பர் பண்டிதர் திரு. க. மயில்வாகனன் அவர்களிடமும் வெளியிட்டேன். அப் பெரியோர்கள், முதலில் இலக்கண மரபுக்கமையவும், தொடர்ந்து சுடின சந்திகளைப் பிரித்து எளிமைப்படுத்தியும், செய்யுள்களைத் தந்து, பிள்ளை அவர்கள் உரையுடன் வெளி

யிடுவது தக்கதென்று கூறினர்கள். அவ்வண்ணமே வெளியிடலா னேன். முந்திய பதிப்புகளில் இடம்பெறுத நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, செய்யுள் முதற் குறிப்பகராதி, புராண படனவிதி முதலியவற்றையும் புதுவதாகச் சேர்த்துள்ளேன்.

இச் சிவராத்திரி புராணத்தை அச்சிட்டு வெளியிடுவதற்கான எழுச்சியை அளித்து எனது அறுபதாம் அகவையில் அது முற்று தற்கான அநுகூலங்களைத் தந்தருளிய திருவருள் மகிமையை வாழ்த்து கின்றேன். நூலினை வெளியிடுங் காலத்துப் பாடல்களைச் சந்தி பிரித்து எளிமைப் படுத்தி உதவியும், அச்சுத்தாள்களை ஒப்பு நோக்கித் திருத் தியும் நூலாசிரியர், உரையாசிரியர் வரலாறுகளைத் தொகுத்துத் தந்தும் உதவி புரிந்த அன்பர் பண்டிதர் திரு. க. மயில்வாகனன் அவர்களுக்கு ஈசன் இன்னருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

நூலினைச் செம்மைபெற அச்சிட உதவி புரிந்த ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை அலுவலாளர்க்கும் பிற உதவியாளர்க்கும் எனது உளம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சைவத் தமிழன்பர்கள் இந்நூலினைப் பெற்று, சொல்லிய பாட் டின் பொருளுணர்ந்து சிவராத்திரி விரதத்தினை நியமந் தவறுமல் அனுட்டித்து இகபர சித்திகளை எய்த வேண்டும் என்று வள்ளைக் குளத்து வரதனின் திருத்தாள்களை அன்புடன் வழுத்துகின்றேன்.

வேயார்ந்த வெள்ளி வரையுடை யான்ரதம் வீழச்செய்த
சேயே தொழுமடி யார்க்கருள் செய்யத் திகழ்மறவை
வீயார் தருந்திரு வள்ளைக் குளப்பதி மேவியவெந்
தாயே யுனையன்றி நாயேற்கு வேறொரு தஞ்சமுண்டோ.

— மறவை வள்ளைப்பதி விநாயகர் அந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மு. கணபதிப்பிள்ளை

மறவன்புலோ,
15-12-70.

நூலாசிரியர் வரலாறு

ஈழவள நாட்டில் செந்தமிழ் மொழியும் சிவநெறியும் பல்லாயிர ஆண்டுகளாக நிலவி வருகின்றன. இத் திருநாட்டில் நல்லிசைப் புலவோர் பலர் தோன்றித் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சிவநெறிச் சிறப்பிற்கும் பெரும் பணி இயற்றினர். இவர்கள் தாம் பிறந்த பொன்னுட்டில் மட்டுமன்றித் தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் புகழ்பெருக்கி நின்றனர். ஈழநாட்டுப் புலவோர் வரிசையில் தலைமணியாய் விளங்குபவர் சுன்னாகம் வரதபண்டிதர் அவர்கள்.

சுன்னாகம் என்னும் பேரூர் ''கன்னியங் கழுகிற் கயலினங் குதிக்கும் துன்னிய வளவயற் சுன்னாகம்'' என்று புலவர்போற்றும் இயற்கை எழில் நிறைந்தது. மற்றும், நற்றமிழ் அறிஞர் பலரை நாட்டினுக்கு அளித்த பெருமையும் கொண்டது. மிகப் பழைய காலத்திலே காசியம்பதியில் இருந்து அந்தணர் பெருங்குடி மக்கள் பலர் புலம் பெயர்ந்து யாழ்நாட்டின் பல பாகங்களிலும் குடியேறினர். அங்ஙனம் குடியேறிய பெருமக்களின் வழித்தோன்றலாய் அமைந்தவர், பாரத்துவாச கோத்திரத்தைச்சேர்ந்த அரங்கநாதையர் அவர்கள். ஐயரவர்கள் சுன்னாகத்தைத் தமது உறைவிடமாகக்கொண்டு வாழ்ந்தார்கள். இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் அரங்கநாதையர் அவர்களுக்குத் திருமகளுய் வைதிக சைவம் வளர்க்கும் குருமணியாய் வந்து தோன்றியவர்தான் புலவர்தோன் வரதபண்டிதர் அவர்கள்.

வரதபண்டிதர் வளர்மதியென வளர்ந்து கலைபயிலத் தொடங்கினர். செந்தமிழையும் வடமொழியையும் துறைபோகக் கற்றுணர்ந்தார். இளமையில் யாரிடம் பாடங்கேட்டார் என்பது நன்முகத் தெரியவில்லை. 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து' என்பார்களே, அதற்கொப்ப முன்னைப் பிறவிகளில் ஈட்டிய கல்விநலம் இவருக்கு இப்பிறவியில் ஏற்றம் தருவதாயிற்று. இளமையில் வைத்தியம் சோதிடம் முதலிய கலைகளிலும் வல்லாராய் அனுபவம் மிக்குத் திகழ்ந்தார். வேதம், ஆகமம் முதலியவற்றிலும் அறிவுமிக்குத் திகழ்ந்தார். செந்தமிழ்க் கவிதைகளை நவரசம் விஞ்சப் பாடுதலிலும் வல்லவராய் விளங்கினர். வடமொழியில் கவிதை புனையும் வல்லபமும் இவருக்கிருந்ததென்பர். பிறரை வாழவைக்கவும், கெடவைக்கவும் அமைந்த பாடல்களைப் பாடும் பரிசு படைத்திருந்தமையின் உலகோர் பண்டிதர் அவர்களை வரகவி என்று வழுத்தினர்.

இவர் குன்றுதோறுடிவருங் குமரப் பெருமானிடம் அளவிறந்த பத்தி உடையவர். இவர் சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், கிள்ளைவிடுதூது, அமுதாகரம், பிள்ளையார் கதை முதலிய நூல்களை இயற்றி அருளினர்.

சிவராத்திரி புராணம், சிவராத்திரி விரத மகிமையைக் கூறுவது. சிதம்பரத்தின்கண் உள்ள அறிஞர்களின் வேண்டுகோளின்படி ஆகமங்களில் கூறப்பட்ட வரன்முறை பிறழாமல் இயற்றப்பட்டது. இந்நூலின்கண், கடவுள் வாழ்த்து, நற்சிறப்புப்பாயிரம், சிவராத்திரி உற்பவச் சருக்கம், சிவராத்திரி மான்மியச் சருக்கம், சுகுமாரச் சருக்கம், அங்குலச் சருக்கம், சௌமிலிச் சருக்கம், கன்மாடபாதச் சருக்கம், விபரிசச் சருக்கம், குபேரச் சருக்கம், சாலிகோத்திரச் சருக்கம் முதலிய பிரிவுகள் உண்டு.

ஏகாதசிப் புராணம் ஏகாதசிவிரத மகிமை கூறுவது. கிள்ளைவிடுதூது காங்கேயன்துறைக்குத் தென்பால் உள்ள கண்ணியவளை எனும் நலத்தில் வீற்றிருக்கும் குருநாதசுவாமி (கந்தசுவாமி) மீது பாடப்பட்டது. கிள்ளைவிடுதூதில் சிவபிரான் பரவையாரிடம் தூதுசென்ற கதை, பாண்டவர்க்குக் கண்ணபிரான் தூதுபோன கதை, இராமனுக்கு அனுமன் தூது சென்ற கதை, இந்திரற்கு நளன் தூதுபோன கதை முதலியனவும், காங்கேசன்துறையை அடுத்த சிலபகுதிகளின் பான்மையும் பிறவும் விளக்கப்படுகின்றன.

அமுதாகரம் என்பது மருத்துவ நூல். இதில் சித்த வைத்திய நுட்பங்கள் விளக்கப்பட்டுள்ளன. இது முன்னூற்று ஐயிரு விருத்தங்களால் அமைந்துள்ளது. பிள்ளையார் கதை விநாயகரின் உற்பவத்தையும் அருளாட்சியையும் எவரும் அறிந்துகொள்ளும் வகையில் பழகு தமிழில் அமைந்துள்ளது.

வரதபண்டிதரின் காலத்தில் மாதகல் மயில்வாகனப் புலவர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் முதலிய நலிசிறந்த புலவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் சிவராத்திரி புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் தந்து பண்டிதரைச் சிறப்பித்தனர்.

வரதபண்டிதரின் கவிதைகள் சொன்னயம் பொருணயம் மிக்கன. நிறைந்த ஓசை இன்பம் உடையன. உவமை நலம் சான்றன. ஆரியச் சொற்களை தமிழ் அமைதியுடன் எடுத்தாண்டு செல்வதனைப் பல இடங்களில் காணலாம். இடையிடையே யாழ்ப்பாணத்தில் பயிலும் அரிய பிரயோகங்களை புகுத்துவார். திருக்குறள்

பெரிய புராணம் முதலிய நூல்களின் கருத்துக்களும் ஆங்காங்கே மிளிரக் காணலாம். இவரது கவித்துவ ஆற்றலே விளக்க ஓரெடுத்துக் காட்டாக சுன்னகம் குமாரசாமிப் புலவர் அவர்கள் பின்வரும் பாடலைக் குறிப்பிடுவர். அதுவருமாறு :—

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச்
சென்றமர்செய் காம னைம்ஐம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை
அத்திஅதன் புனைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிகம்
இசைத் தமிழில் சிறக்கப் பாடும்
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன்
நாட்டரசு நல்கு மன்றே.

காவரசு — இந்திரன்; ஐம்பூவரசு — மன்மதன்; வேங்கை — புலி; அத்தி அதன் — யானைத் தோல்.

வரதபண்டிதரின் பாடல்களைப் படிக்கும்போது சிவகசிந்தாமணி வில்லிபாரதம் முதலியவற்றின் நடை நமது நினைவிற்கு வரும். இவர் சைவசித்தாந்த உண்மைகளை வெகு அற்புதமாகக் குழைத்துப் பாடுதலிலும் வல்லவர். சுகுமாரச் சருக்கத்தில் இருந்து ஒரு செய்யுளினை இங்கே காட்டுவாம்.

ஆதிநடு ஈறிலியாய் ஆணுடன்பெண் அலியவனுய் அவையுமாகிச்
சோதிபெறும் அருவுருவாய்த் தோற்றுசரா சரமனைத்தும் தோய்ந்தும் தோயாப்
பாதிமதி நுதற்பேதை பாகனுமாய் ஏகனுமாய்ப் பகர்தற் கெட்டாப்
பூதிபுனை திருமேவிப் புனிதனின்தா மரைத்தாள்கள் போற்றி போற்றி.

(சுகுமாரச் சருக்கம் 162)

தமிழ் உலகம் இன்னும் வரதபண்டிதரின் உயர்ந்த புலமையை அறிந்து கொள்ளாதிருப்பது பெரு வியப்புக்குரியதாய் இருக்கின்றது. பண்டிதர் அவர்கள் தாம் வாழ்ந்த கால அமைதிக்கேற்பத் தமது கவித்துவ ஆற்றலைச் சமயச் சார்பிலே செலுத்தித் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் புதுப் பொலிவை ஊட்டினுர்கள். வருங் காலத்தில் இவரது புலமை நலம் தமிழ் அன்பர்களால் போற்றப் படுவது திண்ணம்.

வாழ்க வரதபண்டிதர் திருநாமம்.

உரையாசிரியர் வரலாறு

தமிழ் அறிஞர் குமாரசூரியப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்து அச்சுவேலியூரைச் சேர்ந்த சைவப்பெரியார் மயில்வாகனப்பிள்ளை அவர்களுக்கு அருமகனாய்த் தோன்றினர். இளமையிலே செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அறிஞர்கள் இவரைப் பண்டிதர் என்று போற்றிப் பணிந்தனர். சுன்னாகம் குமாரசாமிப்புலவர் முதலிய வித்துவான்களின் பாராட்டையும் பெற்று விளங்கினர். பின்னாளில் உடுப்பிட்டியைத் தமது வாசத் தானமாகக் கொண்டிருந்தார்.

சைவாசாரசீலம் மிக்க இவர் பார்வைக்கு எளிமையானவராகவும் பணிவு இனிமை என்னும் சீரிய குணங்கள் நிறைந்தவராகவும் விளங்கினர் என்று பெரியோர் கூறுவர். சிவாலயங்களில் புராண படன வேளைகளில் பொருள் கூறுவதனையே தமது இன்பப்பொழுது போக்காகக் கொண்டிருந்தார். இவருடைய சீரிய தொண்டினால் மக்கள் சிவபுண்ணியம் நிறைந்த செய்திகளைக்கேட்டு அருள்நெறியில் ஈடுபடுவாராயினர்.

பிள்ளையவர்களுக்கு அச்சுவேலியூர் வாசரும் நல்லறிஞருமாகிய திரு. அ. வேன்மயில்வாகனப்பிள்ளை என்பவர் அரிய நண்பராயிருந்தார். இவர் சிவராத்திரிபுராணத்தில் ஈடுபாடு மிக்கவர். சுவையை நன்கு அனுபவித்தவர். தமது நண்பர் அறிஞர் குமாரசூரியப்பிள்ளை அவர்களை திருவருள் நலத்தால் சிவராத்திரி புராணத்திற்கு நல்லுரை செய்யும்படி தூண்டினர்.

வேன்மயில்வாகனப்பிள்ளையின் வேண்டுகோளினாலும் இயல்பாகவே தமக்கு இருந்த ஆர்வத்தினாலும் குமாரசூரியப்பிள்ளை அவர்கள் சிவராத்திரி புராணத்திற்கு இனிய பதவுரை ஒன்றினை வகுத்துத் தாமே முதலில் அச்சிட்டு வெளியிட்டார்கள். பிள்ளை அவர்களின் காலத்திற்கேற்ப தொண்டினால் தமிழுலகம் சிவராத்திரி புராணத்தின் செம்பொருளை அறிந்து இன்புற வழிபிறக்கலாயிற்று. உரை காலத்திற்கேற்றதாய்க் கருத்துச் செறிவுடையதாய் விளங்குகின்றது.

குமாரசூரியப்பிள்ளை அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் தமிழ் சைவம் என்பனவற்றில் பேரன்பு மிக்கவர்களாய் ஆசார அநுட்டான சிலர்களாய் வாழ்ந்து வருகின்றனரென்பர்.

வாழ்க குமாரசூரியப்பிள்ளை திருநாமம்.

உரைச்சிறப்புப்பாயிரம்

புலோலி-பிரமஶ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்
சொல்லியது.

உலகம் போற்றிடு நற்சிவ ராத்திரி யுண்மையை
யுணர்த்திடு புராணத்திற்
கிலகநீபத வுரைவெளிப்படுத் தெனவியம்பினர்
வேண்டுகோண் மேற்கொண்டே
திலக மாமுடுப்பிட்டியாம் பதியுறை செல்வவே
ளாளனற் செயன்மிக்கான்
பலக லாவிதன் குமாரசூ ரியப்பெயர்ப்
பண்டிதன் பண்புறவமைத் தானே.

நவிண்டில் — கந்தவன அர்ச்சகர்

பிரமஶ்ரீ சு. கனகசபாபதிக்குருக்களவர்கள்
சொல்லியது.

வரைபக வெறிந்தோன் வரம்பெறு வரதன்
வழங்கிய சிவநிசி வரலா
றுரைதரு புராண முலகின ரெளிதா
வுணர்ந்திட வுரைவரை யென்னத்
தரைபெறு முடுப்பைத் தாவில்வேன் மயிலாந்
தரமக லியவுள் சாற்றிடவே
புரைதவி ரனவூர்க் குமாரசூ ரியனும்
புலமையோன் புரிந்தன னினிதே.

தும்பைநகர் – பிரமஶ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
சொல்லியது.

செய்யசடைச் சிவனிரவின் பெருமை கூறுந்
திவ்வியநற் புராணத்தி னருமை தேர்ந்து
மையலகன் றெவருமுணர் தன்மை யாக
மன்னுமுரை செந்தமிழி னினிது யற்றி
வையகமெங் கும்பரவ வச்சி லிட்டு
வழங்கினனற் குமாரசூ ரியப்பேர் பெற்றோன்
நுய்யமயில் வாகனப்போர்த் தோன்ற லீன்ற
சுதன்வேளாண் மரபின்மிகு சுகுணன் றானே.

தும்பைநகர்

குருஸ்வாமி மந்திரம்

பிரமஶ்ரீ. சிவ. பஞ்சாட்சரக்குருக்களவர்கள்

சொல்லியது.

சுன்னகத் தமருமறைத் தொழுகுலத்து வரதகவித் தோன்றல் சொற்ற
பைந்நாகத் தணிபரம னிசிபுரா ணத்துரையைப் பரிவிற் செய்தான்
கைந்நாகத் தவனுலகை யனவுப்பைப் பதிமயில்வா கனன்சேய் பானன்
மன்னுகத் திசைந்ததொடைக் குமாரசூ ரியப்பிள்ளை மதிவல் லோனே.

சுன்னகம்

மகாவித்துவான் ஶ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள்

சொல்லியது.

கங்கைநதி சூடிசிவ நிசியின் மேன்மை
கருதரிய புராணமுறை யமைத்துச் சுன்னை
தங்கியநான் மறையாளன் வரதன் சொன்ன
தமிழ்க்கவிக ளாய்ந்துபத வுரையொன் றீந்தான்
பங்கமிலாப் பாலியபண் டிதப்பேர் பெற்றோன்
பகருமயில் வாகனவே டந்த பாலன்
கொங்கலரும் பொழிலுடுப்பை நகரி வாசன்
குமாரசூ ரியநாமங் கொண்டோ னன்றே.

உடுப்பிட்டி

வித்துவான் ஶ்ரீமத். பி. ஆறுமுகப்பிள்ளையவர்கள்

சொல்லியது.

ஆரியம் பரந்த வரனரு ளிரவி னமைதியி லொன்றினுக் கறிஞர்
சீரிய வரத மெனவிது காறுஞ் செப்பிய திறமது திறம்பிப்
பேரிய குமார சூரிய மெனமண் பிறக்கின னுரையுடுப் பிட்டிப்
பாரிய மயில்வா கனன்றரு பால பண்டிதன் குமாரசூ ரியனே.

தும்பளை—ஶ்ரீமத். வே. கணபதிப்பிள்ளைச் சோதிடரவர்கள்

சொல்லியது.

சீர்வரத ராசனவில் சிவநிசியின் புராணமிரு டேரா தாய
வார்புவியி லெனவெழுதி யச்சிட்டான் பதவுரையொன் றச்க வேலி
யூர்மயில்வா கனன்மதலை யுடுப்பிட்டி வேளாள ரூர்ந்து புந்தி
கூர்மையுளா னின்னவற்குக் குமாரசூ ரியனெனும்பேர் கூறற் பாற்றே.

நூற்சிறப்புப் பாயிரம்



யாழ்ப்பாணம்

மயில்வாகனப்புலவர் அவர்கள்

இயற்றியது.

பரத ராசனுய ரசல ராசன்மகள்
பங்க னன்புதரு பண்புசேர்
விரத ராசசிவ நிசியி னீள்சரித
மிகவி ளங்கிட விளம்பினுன்
கரத ராசனேய மொழிய ரங்கனருள்
கருணை மாரிநிகர் பருணிதன்
வரத ராசன்மறை வாண ராசன்மிகு
மதுர வாசுகவி ராசனே.

யாழ்ப்பாணம்

சின்னத்தம்பிப்புலவர் அவர்கள்

இயற்றியது.

மைத்தவிடப் பணிப்பணியான் வராசனமுஞ்
சராசனமு மலியாகக் கொண்ட
சித்தனுயர் சிவநிசிமான் மியமதனைச்
செந்தமிழாற் றெரித்தல் செய்தா
னத்தகைய பாரத்து வாசகோத்
திரனரங்க னருளு மைந்தன்
சத்தபுரி களிற்காசி நகர்வரத
பண்டிதன்முத் தமிழ்வல் லோனே.



முகவுரை

அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் சர்வான்மாக்களுக்கும் அனுக்கிரகிக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்கின்ற திருக்கேதீச்சரம் திருக்கோணமாமலை திருக்கரசை சிவஞெளிபாதம் முதலிய சிவஸ்தலங்களையும், சிவசுப்பிரமணியக் கடவுள் ஞானக்காட்சிகொடுத்து வீற்றிருக்கும் அதியற்புதமான ஸ்ரீகதிர்காமகேஷத்திரத்தையும் தன்னுட்கொண்ட இவ்விலங்காபுரியிலே செந்தமிழ் நாவலர் செறிந்து குழீஇய யாழ்ப்பாணத்து அச்சுவேலியில் இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு வருடங்களின்முன் ஸ்ரீகாசியம்பதியிலிருந்து வந்து வசித்தவரும், பாரத்துவாசகோத்திர அரங்கநாத அந்தணர்க்குத் தவக்குழவியாயுற்பவித்தவரும், சுன்னாகவாசியும், வரகவியும், பிள்ளையார் கதை ஏகாதசிப் புராணம் முதலிய நூல்களைப் பாடியவருமாகிய வரதராச பண்டிதர், சிவராத்திரி விரதத்தின் பெருமையை யாவருமறிந்துய்யும்பொருட்டு, தில்லைவனத்தறிஞர் சிலர் கட்டளையிட்டபடி வடநூல்களிலுள்ள சிவராத்திரி மான்மியங்களைத் திரட்டி ஓர் புராணமாகப் பாடினர். இச்சிவராத்திரி புராணம் பொருட்சுவை சொற்சுவைகளால் எப்புலவரையும் மிகமகிழ்விக்கத்தக்கது. இதை நுண்ணுணர்வில்லாத்தகையரு மெளிதினுணரும்பொருட்டு ஒருரையியற்ற வேண்டுமென்னும் கோரிக்கை என்னுள்ளத்தையிழுத்தமையானும், இதற்குதவியாக நம்மூர் வாசரும் நண்புநீங்காத நல்லறிவாளருமாகிய ஸ்ரீமத். அ. வேன்மயில்வாகனப்பிள்ளை என்பவர் பன்னுளும் பன்முறையுந் தூண்டியமையானும், எனது சிற்றறிவுக்கெட்டியவாறு பதவுரையாக எழுதி வெளிப்படுத்தினேன். பருணிதோத்தமர்கள் இவ்வுரையிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களையே கொள்வாரென்பது எனது துணிபாகும்.

"குற்றங்க ணீக்கிக் குணங்கடமைக் கொண்டாடல்
கற்றறிந்தோர்க் கேற்ற கடன்".

"நல்லார் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லாதவர் குற்றங் காண்பரோ — அல்லாத
என்போல்வா ரென்னை யிகழ்வாரோ விவ்வுரைக்குப்
பின்பாரோ காண்பார் பிழை".

பிரமாதீசுவர்ஷத்தில் முதற்பதிப்பாக அச்சிட்ட புத்தகங்கள் செலவாய்விட்டமையால், எமது நண்பர் பிரமஸ்ரீ. ச. சோமசுந்தரையரவர்கள் இதனைத் தமது செலவில் அச்சிட்டு விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டமையால் இரண்டாம் பதிப்பாக இதனை அச்சிடும்படி அனுமதி செய்தேன்.

இங்ஙனம்
ம. குமாரசூரியப்பிள்ளை
உடுப்பிட்டி.

திருச்சிற்றம்பலம்

புராண படன விதி

எல்லாரும் கேட்டு உய்யும் பொருட்டுத் திருக்கோயில்களிலே யோக்கியர்களைக்கொண்டு புராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுவித்தல் மிகமேலாகிய புண்ணியமாகும்.

1. குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து அநுட்டானம் முடித்துக்கொண்டே புராணம் படித்தல், பொருள் சொல்லல், கேட்டல் என்னும் இவைகளைச் செய்தல் வேண்டும்.

2. புராணபடனம் தொடங்கும் தினத்திலும் முடிக்கும் தினத்திலும் புராணம் படிக்கும் மண்டபத்தைப் பட்டு மேற்கட்டி, பூமாலை, வாழை, கரும்பு முதலியவைகளினால் அலங்கரித்தல் வேண்டும்.

3. புராண படனத்தைச் சுபதினத்திலே தொடங்கிச் சுபதினத்திலே முடித்தல் வேண்டும்.

4. நாள்தோறும் புராண மண்டபத்தைக் கோமயத்தினால் மெழுகியும், கருங்கல், சிமெந்துத் தரையாயின் கழுவியும் இடம் பண்ணி அதன்மீது பீடத்தை வைத்து பீடத்தின்மேலே பட்டுப் பரிவட்டம் விரித்து அதன்மேலே திருமுறையை வைத்துச் சந்தனம், மலர், தூபம், தீபம் முதலியவற்றினாலே விதிப்படி வணங்குதல் வேண்டும்.

5. புராணத்திருமுறையினை படிக்கும் காலத்திற்கும் எடுத்துக் கொண்ட பொருளினது குணத்திற்கும் ஏற்ற இராகத்தில் ஒருவர் தெளிவாக வாசிக்க அதே இராகத்தில் ஒருவர் பொருள் சொல்லுதல் வேண்டும்.

6. படிக்கத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் காப்புச் சொல்லுதல் வேண்டும்.

7. காப்புக்கு முன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் என்று உச்சரித்தல் வேண்டும்.

8. புராணம் கேட்போர் புராணத்திருமுறையை வணங்கி புராணம் படித்துப் பொருள் சொல்வோருக்கு ஆசனம் கொடுத்து நமஸ்காரம் செய்து சுற்றமித்திரர்களோடிருந்து சிரத்தையுடன் கேட்டல் வேண்டும்.

9. புராணம் கேட்பவர் ஆதி தொடங்கி ஈறுவரையும் தவறுமல் நியமத்தோடு கேட்டல் வேண்டும். புராணம் முற்றுப் பெற்ற தினத்திலே புராணத் திருமுறைக்கு விசேடபூசை செய்வித்து சிவனடியார்களுக்கு அன்னங்கொடுத்து உபசரித்தல் வேண்டும்.

10. புராணம் படிக்கும் சபையிலே உயர்ந்த ஆசனத்திருத்தல், கால் நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், சிரித்தல், வீண் வார்த்தை பேசுதல், வெற்றிலை பாக்குண்ணுதல், சட்டை அணிந்து கொள்ளுதல், இடையில் எழுந்துபோதல் முதலியன செய்யத்தகாத குற்றங்களாம்.

திருச்சிற்றம்பலம்.



பொருளடக்கம்

பதிப்புரை	iii
நூலாசிரியர் வரலாறு	vi
உரையாசிரியர் வரலாறு	ix
உரைச்சிறப்புப்பாயிரம்	x
நூற்சிறப்புப்பாயிரம்	xii
முகவுரை	xiii
புராணபடனவிதி	xiv
கடவுள் வாழ்த்து	2
தற்சிறப்புப்பாயிரம்	17
சிவராத்திரி உற்பவச் சருக்கம்	19
சிவராத்திரி மான்மியச் சருக்கம்	67
சுகுமாரச் சருக்கம்	99
அங்குலச் சருக்கம்	201
சௌமினிச் சருக்கம்	261
கன்மாடபாதச் சருக்கம்	296
விபரிசச் சருக்கம்	343
குபேரச் சருக்கம்	364
சாலிகோத்திரச் சருக்கம்	391
பாட்டு முதற் குறிப்பகராதி	417

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சிவராத்திரி புராணம்

பதவுரை

விநாயகர் காப்பு

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை
யுரக வேந்தன்
றூங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச்
சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப்
பசும்பொற் றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப்
போற்றல் செய்வாம்.

[ஓங்கும்ஒரு மருப்பானை உயிர்க்(கு)உயிராய் இருப்பானை உரக வேந்தன்
தாங்குநெடு நிலத்(து)ஆனை முகத்தானை வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்தந்(து) அளித்தானை பசும்பொன் தோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப் போற்றல் செய்வாம்.]

இதன்பொருள்: ஓங்கும் ஒரு மருப்பானை — உயர்ந்த ஒரு திருக்கொம்பை யுடையவரும், உயிர்க்கு உயிராய் இருப்பானை — சிவான்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாயிருப்பவரும், உரகவேந்தன் தாங்கும் நெடுநிலத்து ஆனை முகத்தானை வதைத்தானை — (குண்டலினிசத்தியென்னும் சிவசத்தியாகிய) ஆதிசேடனுற் பரிக்கப்படுகின்ற நெடிய நிலவுலகத்தின்கட் கயமுகாசுரனைக் கொன்றருளியவரும், சயிலமானைப் பாங்குவைத்து மழுதானை பரித்தான் தந்து அளித்தானை — இமயமலையின்கண்ணே திருவவதாரஞ் செய்தருளிய நோக்கினுல் மான்போல்பவராகிய உமையம்மையாரை வாமபாகத்திலிருத்தி மழுப்படையைத் திருக்கரத்திலேந்திய சிவபெருமான் பெற்றருளியவரும், பசும் பொன் தோட்டு பூம் கமல பதத்தானை — செம்பொன்மயமான இதழ்கள் பொருந்திய அழகிய தாமரை மலர்களையொத்த திருப்பாதங்களையுடையவரும், பொரு இல் ஐந்து கரத்தானை — ஒப்பில்லாத ஐந்து திருக்கரங்களையுடையவரு மாகிய விநாயகக் கடவுளை, போற்றல் செய்வாம் — (இந்நூல் யாதொரு இடையூறுமின்றி இனிது முடியும்பொருட்டு யாம்) துதிப்பாம் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

கடவுள் வாழ்த்து.

நடராசர் துதி

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந் திருமாலுந்
தேவர் கோவுங்
கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும் பதஞ்சலியுங்
குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை விழிகளிப்ப
மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு வடியிணைகள்
கருத்துள் வைப்பாம்.

[சீர்தந்த கமலமலர்த் திசைமுகனும் திருமாலும் தேவர் கோவும்
கூர்தந்த நகப்புலிக்கால் தவமுனியும் பதஞ்சலியும் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை விழிகளிப்ப மன்றுள் ஆடும்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுள் திரு அடியிணைகள் கருத்துள் வைப்பாம்.]

இ — ள்: சீர் தந்த கமல மலர் திசைமுகனும் — அழகு பொருந்திய செந்தாமரைமலராசனராகிய பிரமதேவரும், திருமாலும் — மகாவிஷ்ணுமூர்த்தியும், தேவர்கோவும் — தேவர்களுக்கெல்லாந் தலைவனாகிய இந்திரனும், கூர் தந்த நகப் புலிக்கால் தவமுனியும் — கூர்மைவாய்ந்த நகங்கள் பொருந்திய புலியின் கால்போன்ற கால்களையுடைய தவசிரேட்டராகிய வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலியும் குழைந்து போற்ற—பதஞ்சலிமுனிவரும் மனமுருகித் துதிக்க, வார் தந்த கலச முலை மலைவனிதை விழிகளிப்ப—கச்சிற்படிந்த பூரண கும்பங்களை நிகர்த்த தனங்களையுடைய இமயமலை அரசன் புத்திரியாகிய உமையம்மையாரது திருநயனங்கள் களிப்படைய, மன்றுள் ஆடும் – கனகசபையின் கண்ணே (சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்கின்ற பஞ்சகிருத்திய காரணமாகத்) திருநடனத்தைச் செய்தருளாநின்ற, கார் தந்த மணி மிடற்றுக் கடவுள் திரு அடி இணைகள் — நஞ்சுண்டு கறுத்த அழகிய திருக்கண்டத்தையுடைய சிவபெருமானது உபய திருப்பாதங்களையும், கருத்துள் வைப்பாம் — மனத்திலிருத்துவாம் எ—று. (1)

சிவகாமியம்மை துதி

கடிகமழ்கட் கமலமலர்க் கட்டிகிரிக் கரளைருசூ
கரம தாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள மலைமருங்கிற்
படரும் பச்சைக்

கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா தின்பமுத்தி
கூடும் வண்ணை
மடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி யம்மைபதத்
தன்பு கூர்வாம்.

[கடிகமழ்கள் கமலமலர்க் கண்திகிரிக் கரன்ஒருகு கரம(து) ஆகிப்
படிஇடந்தும் அறி(வு)அரிய பதப்பவள மலைமருங்கில் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலில் குளித்(து)அழுந்தா(து) இன்பமுத்திகூடும்வண்ணம்
அடியவருக்(கு) அருள்புரியும் சிவகாமிஅம்மைபதத்(து) அன்பு கூர்வாம்.]

இ — ள்: கடி கமழ் கள் கமல மலர் கண் — வாசனைவீசுகின்ற தேன் நிறைந்த தாமரை மலராகிய திருநயனத்தையும், திகிரிக் கரன் — சக்கராயுதத்தைத் தாங்கிய திருக்கரத்தையுமுடைய மகாவிஷ்ணுமூர்த்தி, ஒரு சூகரம் அது ஆகிப் படி இடந்தும் — ஒரு பன்றி வடிவங்கொண்டு பூமியைக் கிழித்துச் சென்றும், அறிவரிய பத பவள மலை மருங்கில் — அறிதற்கரிய திருப்பாதங் களைக்கொண்ட பவளமலைபோன்ற சிவபெருமானது வாமபாகத்தில், படரும் பச்சைக்கொடி — படர்ந்த பச்சைக்கொடிபோன்றெழுந்தருளியிருக்கின்ற, கொடிய பவக்கடலில் குளித்து அழுந்தாது — கொடுமையாகிய பிறவிக்கடலின் கண்ணே அழுந்திவருந்தாது, இன்ப முத்தி கூடும் வண்ணம் — சுத்த சுகவடிவாகிய மோட்சத்தையனுபவிக்கும்படி, அடியவருக்கு அருள் புரியும் சிவகாமியம்மை — தொண்டர்களுக்குக் கருணைபாலிக்கின்ற சிவகாமியம்மையாரது, பதத்து அன்புகூர்வாம் — திருப்பாதங்களினிடத்து அன்பு மிகுவேம் என்று. (2)

விநாயகர் துதி

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு தில்லைமன்று
துலங்கு கோயிற்
பொற்பகலாக் குடதிசைக்கோ புரத்தமரர் கணத்தலைவர்
போற்ற மேவி
யற்பகலுண் மலரிறைத்துத் தொழுமடியார் வேட்டவர
மளித்த லாலே
கற்பகநா மம்பெறுமே ரம்பணையோர் கொம்பனையுட்
கருதி வாழ்வாம்.

[சொல்பகர்நா வினுக்(கு)அடங்கா வளங்குலவு தில்லைமன்று துலங்குகோயில்
பொற்(பு) அகலாக் குடதிசைக்கோ புரத்(து)அமரர் கணத்தலைவர் போற்ற மேவி
அல்பகல்நாள் மலர்இறைத்துத் தொழும் அடியார் வேட்டவரம் அளித்தலாலே
கற்பகநா மம்பெறும்ஏ ரம்பணைஓர் கொம்பனைஉள் கருதி வாழ்வாம்.]

இ—ள் : நா பகர் சொல்லினுக்கு அடங்கா வளம் குலவு — நாவினால் கூறப் படுகின்ற சொற்றொகுதி முழுவதாலும் உரைக்கவியலாத வளம்பொருந்திய, தில்லை என்று துலங்கு கோயில் பொற்பு அகலாக் குடதிசைக் கோபுரத்து — சிதம்பரத்திலுள்ள கனகசபை விளங்காநின்ற திருக்கோயிலினது அழகுகுன் ருத மேலைக்கோபுர வாயிலில், அமரர் கணத் தலைவர் போற்ற மேவி—தேவர் களும் கணநாதர்களும் தோத்திரிக்கும்படியெழுந்தருளி, அல் பகல் நாள் மலர் இறைத்து—இரவும் பகலும் ஓயாது புதிய புஷ்பங்களைத் தூவி, தொழும் அடியார் வேட்ட வரம் அளித்தலால் — வழிபாடுசெய்கின்ற அன்பர்கள் விரும் பிய வரங்களையெல்லாமீந்தருளுதலினால், கற்பக நாமம் பெறும் — கற்பக மென்னும் காரணப்பெயரைப்பெற்ற, ஓர் கொம்பினை ஏரம்பினை—ஒற்றைக் கொம்பையுடைய கணேசமூர்த்தியை, உள் கருதி வாழ்வாம் — மனத்தின் கண்ணே சிந்தித்து வாழக்கடவேம் என்று. (3)

சுப்பிரமணியர் துதி
(பொது)

சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்திண் டகுவியர்மை
தோயும் வாட்க
ணீராட்டுப் பெறமறநீ டவுணருடற் புலவலகை
நிறையத் தேக்கிப்
பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த கரனரன்பர்ப்
பதிக்குச் செல்வச்
சீராட்டுப் பிள்ளையெனு முருகன்முரு கவிழ்மலர்த்தாள்
சென்னி சேர்ப்பாம்.

[சூர்ஆட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்திண் தகுவியர்மை தோயும் வாள்கண் நீர்ஆட்டுப் பெறமறம்நீ(டு) அவுணர்உடல் புல(வு)அலகை நிறையத் தேக்கிப் பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த கரன்அரன்பார்ப் பதிக்குச் செல்வச் சீராட்டுப் பிள்ளைஎனும் முருகன்முரு(கு) அவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம்.]

இ—ள் : சூர் ஆட்டு பயில் சயிலம் துணைமுலை திண் தகுவியர் மைதோயும் வாள் கண் நீராட்டுப் பெற — தேவமாதர்கள் விளையாட்டயராநின்ற மலைகளை யொத்த இரண்டு தனங்களையுடைய வலிய அசுரப் பெண்களது மைதீட் டிய வாள்போன்ற கண்களினின்றும் நீர்சொரியவும், மறம் நீடு அவுணர் உடல் புலவு அலகை நிறையத் தேக்கிப் பாராட்டுத்தர — கொடுமை மிகுந்த அசுரர்களது சரீரத்தின் நிணத்தைப் பிசாசுகள் நிரம்ப உண்டு களிகொண்டாட வும், வடி வேல் படைபணித்த கரன் — கூர்மைபொருந்திய வேலாயுதத்தை யேவியருளிய திருக்கரத்தையுடையவரும், அரன் பார்ப்பதிக்குச் செல்வச் சீராட் டுப் பிள்ளை எனும் முருகன்—சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் செல்வ மாக வாய்ந்த சீராட்டையுடைய குமாரருமாகிய சுப்பிரமணியக் கடவுளது, முருகு அவிழ் மலர் தாள் சென்னி சேர்ப்பாம்—வாசனை கமழுகின்ற செந்தாமரை மலர்களையொத்த திருப்பாதங்களைச் சிரமிசைச் சூடக் கடவேம் என்று; (4)

திருப்பரங்குன்றம்

இரங்குன்றன் றஞ்சநமக் கென்றுமக வான்முதலோ
ரிரப்ப நீண்ட
கரங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ னரிமுகத்தோன்
கதங்கொள் சூரன்
வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த மலர்க்கரத்தோன்
மஞ்சு துஞ்சும்
பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம் பதுமமலர்
பணிதல் செய்வாம்.

[இரங்(கு)உன்றன் தஞ்சம்நமக்(கு)என்றுமக வான்முதலோர் இரப்ப நீண்ட கரம்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோன் அரிமுகத்தோன் கதங்கொள் சூரன் வரங்குன்ற மயில்உகைத்(து)அங்(கு) அயில்எடுத்தமலர்க்கரத்தோன் மஞ்சுதுஞ்சும் பரங்குன்றத்(து) இருந்தசெவ்வேள் அடிக்கடிச்செம் பதுமமலர் பணிதல்செய்வாம்.]

இ—ள்: உன் தன் தஞ்சம் நமக்கு இரங்கு என்று மகவான் முதலோர் இரப்ப—உமதுதுணையையெங்கள்மீது இரக்கங்கொண்டீந்தருளவேண்டுமென்று யாகாதிபதியாகிய இந்திரன்முதலியதேவர்கள்யாவரும் யாசித்துக்கேட்ப, குன்றம் நீண்ட கரம் படைத்தனைய கரிமுகத்தோன்—மலையானது தனக்கோர் நீண்ட கையைப் பெற்றுக்கொண்டாற்போன்ற யானைமுகத்தையுடைய தாரகாசுரனும், அரிமுகத்தோன்—சிங்கமுகாசுரனும், கதங்கொள் சூரன் வரங்குன்ற—வலிமைபொருந்திய சூரபன்மனும் தங்கள் வலிமைகெடும்படி, மயில் உகைந்து அங்கு அயில் எடுத்த மலர்க்கரத்தோன் — மயில்வாகனத்தின் மேலிவர்ந்து சென்று ஆங்கே வேலாயுதத்தைச்செலுத்திய தாமரைமலர்போன்ற திருக்கரத்தைக்கொண்டவராகிய, மஞ்சு துஞ்சும் பரங்குன்றத்து இருந்த செவ்வேள் — மேகங்கள் படிகின்ற திருப்பரங்குன்றத்தின்கண்ணே எழுந்தருளியிருந்த சுப்பிரமணியக்கடவுளது, அடி கடி செம் பதும மலர் பணிதல் செய்வாம் — திருப்பாதங்களாகிய வாசனைபொருந்திய செந்தாமரை மலர்களை வணங்குவோம் என்று. (5)

திருச்சீரலைவாய்

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்குங் களத்தமர்நீத்
தெய்தி நொய்தின்
வாரலைவா யுறுமொருமா வரையோரொன் றேரிரண்டா
வகிர்ந்த வேலோன்

வேரலிவா யழிக்குமென்றோட் கவின்படைத்த வள்ளிசுர
வேழத் தோடு
சிரலிவாய் வருமடிக ளடியரடிப் பொடிமுடியிற்
சேர்த்தல் செய்வாம்.

[ஈரலிவா யசம்கவரப் பிணம்கிடக்கும் களத்(து)அமர்நீத்(து) எய்தி நொய்தின்
வார்அலிவாய் உறும்ஒருமா வரைஓர்ஒன்(று) ஓர்இரண்டா வகிர்ந்த வேலோன்
வேரலிவாய் அழிக்குமென்தோள் கவின்படைத்த வள்ளிசுர வேழத் தோடு
சிரலிவாய் வரும்அடிகள் அடியர்அடிப் பொடிமுடியில் சேர்த்தல் செய்வாம்.]

இ — ள்: ஈரலி வாயசம் கவர பிணம் கிடக்கும் களத்து அமர் நீத்து—ஈரல் களைக் காகங்கள் வாயினுற் கொத்திச் செல்லும்படி பிணங்கள் கிடக்கின்ற யுத்தபூமியில் யுத்தத்தைவிட்டு, நொய்தில் எய்தி வார் அலிவாய் உறும் — வேகமாய்ச்சென்று நீண்ட அலிகள் பொருந்திய சமுத்திரத்தின்கண் வேருன்றப்பெற்ற, ஒரு மாவரை ஓரொன்று ஓரிரண்டாய் வகிர்ந்த வேலோன் — ஒப்பற்ற சூரபன்மனுகிய மாமர மலையொன்றை இரண்டுகூறாய் வெட்டிய வேற் படையையுடையவரும், வேரலி வாய் அழிக்கும் கவின் படைத்த மெல்தோள் வள்ளி சுரவேழத்தோடு — மூங்கிலையுமிகழ்கின்ற வழகையுடைய மிருதுவாகிய தோள்கள் பொருந்திய வள்ளிநாயகி தெய்வயானையம்மையாகிய இரு தேவியர்களோடும், சிரலி வாய் வரும் அடிகள் — திருச்செந்தூரில்கண்ணெழுந்தருளியிருக்கின்றவருமாகிய சுப்பிரமணியக் கடவுளது, அடியர் அடிப்பொடிமுடியில் சேர்த்தல் செய்வாம் — தொண்டர்களின் பாததூளியைச் (சர்வபாவங்களும் தாசமாகும்படி.) எமது சிரசின்கண்ணே தரிக்கக்கடவேம் என்று. (6)

திருவாவினன்குடி

பெருவாவிக் கயனயனக் குறத்திமுகாம் புயமலர்த்தும்
பெட்பி னென்று
மொருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக்
குரைத்தோ னூர்கா
மருவாவி நன்குடிளைப் புனல்மலர்த்தே னுடனளவி
வயற்குப் பாயுந்
திருவாவி னன்குடிவாழ் செல்வேடன் சேவடிகள்
சிந்தை செய்வாம்.

[பெருவாவிக் கயல்நயனக்குறத்திமுக அப்புயம் மலர்த்தும் பெட்பின் என்றும்
ஒருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக்(கு) உரைத்தோன் ஊர்கா
மருவாவி நல்குடிளைப் புனல்மலர்த்தே னுடன்அளவி வயற்குப் பாயும்
திருவாவி னன்குடிவாழ் செல்வேள்தன் சேவடிகள் சிந்தை செய்வாம்.]

இ — ள் : பெருவாவி கயல்நயனகுறத்தி முக அம்புயம் மலர்த்தும் பெட்பின் என்றும் ஒருவா இனன் — பெரிய தடாகத்திற் பொருந்திய கயன்மற் சத்தைநிகர்த்த நேத்திரங்களையுடைய குறமாதாகிய வள்ளிநாயகியாரது முக மாகிய தாமரையை விகசிக்கச்செய்யுந் தன்மையினின்றும் எந்நாளும் நீங்குத லில்லாத சூரியனும், குடிலைப் பொருள் விரித்துத் தாதை தனக்கு உரைத் தோன் — பிரணவப்பொருளை விரிவாகத் தமது தந்தைக்குபதேசித்தவரும், ஊர்கா மருவாவி நல் குடிஞைப் புனல்—ஊர்ச்சோலைகளிற் பொருந்திய வாசனை தங்கிய தடாகத்தினதும் நல்ல சிற்றாறுகளினதும் சலமானது, மலர் தேன் உடன் அளவி வயற்குப் பாயும் — புட்பங்களிலின்றுஞ் சிந்துகின்ற தேனோடு கலந்து வயலுக்குப் பாய்கின்ற, திருவாவினன்குடி வாழ் செல்வேள் தன்—திருவாவினன்குடியில் எழுந்தருளியவருமாகிய சுப்பிரமணியக் கடவுளது, சே அடிகள் சிந்தை செய்வாம் — சிவந்த திருப்பாதங்களை மனத்திற்றியானிப் பாம் எ—று. (7)

திருவேரகம்

பாரகத்தும் விசும்பகத்தும் பயின்முனீவ ரிமையவர்தம்
பழங்க ணீங்கத்
தாரகத்தொன் மறையுருவாய் மருவுசிவ சத்திதரு
சத்தி யால்வெஞ்
சூரகத்தைத் துணைபடுத்தி யொருதோகை யேறியிரு
தோகை மாரோ
டேரகத்தி லிருந்தபிரா னென்னகத்தி லிருக்கவிடர்க்
கிடமின் றென்பால்.

[பாரகத்தும் விசும்பகத்தும் பயில்முனிவர் இமையவர்தம் பழங்கண் நீங்கத்
தாரகத்தொல் மறைஉருவாய் மருவுசிவ சத்திதரு சத்தி யால்வெம்
சூரகத்தைத் துணைபடுத்தி ஒருதோகை ஏறிஇரு தோகை மாரோ(டு)
ஏரகத்தில் இருந்தபிரான் என்அகத்தில் இருக்கஇடர்க்கு) இடம்இன்(று)என்பால்.]

இ — ள் : பார் அகத்தும் விசும்பு அகத்தும் பயில்முனிவர் இமையவர்தம் பழங்கண் நீங்க—பூமியின் கண்ணுஞ் சுவர்க்கத்தின்கண்ணும் வாசஞ்செய்கின்ற முனிவர்களதுந் தேவர்களதுந் துன்பங்களொழிய, தாரகத் தொல்மறை உரு வாய் மருவும் சிவசத்தி தரு சத்தியால் — பிரணவமாகிய பழைய மந்திரவடி வமைந்த சிவசத்தியாகும் உமாதேவியாராலீந்தருளப்பட்ட ஞானசத்தியாகிய வேலாயுதத்தைக்கொண்டு, வெம் சூர் அகத்தைத் துணை படுத்தி — கொடிய சூரபன்மனது மார்பைத் துளைத்து, ஒருதோகை ஏறி — ஒப்பற்ற மயில்வாக னத்தின் மேலேறி, இரு தோகைமாரோடு ஏரகத்தில் இருந்த பிரான் — மயில்போலுஞ் சாயலையுடைய தெய்வயானை வள்ளியம்மையாகிய இரு தேவி மாரோடும் திருவேரகத்தின்கண் எழுந்தருளியிருந்த சுப்பிரமணியக்

கடவுளானவர், என் அகத்தில் இருக்க என்பால் இடர்க்கு இடமின்று—எனது மனத்தின்கண்ணே குடிகொண்டிருத்தலால் என்னிடத்திற் றுன்பங்களெவையேனுந் தங்குதற்கிடமில்லையாம் எ-று. (8)

குன்றுதோறாடல்

நீடலுறழ் கருங்கனங்கள் படிந்துமுழ வெனவதிர
நிரந்து தும்பி
பாடல்புரி தரத்தழைத்த பாசடைச்சந் தனப்பணையிற்
படருஞ் செய்ய
கோடலலர் விளக்கேந்தக் குலமயிலு டகம்புரியுங்
குன்று தோறு
மாடல்புரி முருகனிரு சரணமலர் பரவிவினை
யகற்றி வாழ்வாம்.

[நீ(டு)அல்உறழ் கருங்கனங்கள் படிந்துமுழ(வு) எனஅதிர நிரந்து தும்பி பாடல்புரி தர[த்]தழைத்த பாசடைச்சந் தனப்பணையில் படரும் செய்ய கோடல்அலர் விளக்(கு)ஏந்தக் குலமயில்நா டகம்புரியும் குன்று தோறும் ஆடல்புரி முருகன்இரு சரணமலர் பரவிவினை அகற்றி வாழ்வாம்.]

இ—ள்: நீடு அல் உறழ் கரும் கனங்கள் படிந்து முழவு என அதிர — மிக்க அந்தகாரத்தையொத்த கரிய மேகங்களானவை தங்கிநின்று முழவப் பறை போல ஆரவாரிக்கவும், நிரந்து தும்பி பாடல் புரிதர—நெருங்கிநின்று வண்டுகள் விசைபாடவும், தழைத்த பாசடைச் சந்தனப் பணையில் படருஞ் செய்ய கோடல் — குழைத்த பச்சிலைகளைக்கொண்ட சந்தன மரக்கிளைகளிற் படர்ந்த செங்காந்தள்கள், அலர் விளக்கு ஏந்த — மலராகிய விளக்கைத் தாங்கவும், குலமயில் நாடகம் புரியும் குன்று தோறும் — கூட்டமாகிய மயில்கள் நடனஞ் செய்கின்ற மலைவர்க்கங்கடோறும், ஆடல் புரி முருகன் இரு சரண மலர் பரவி — திருவிளையாடலைச் செய்தருளிய முருகக் கடவுளது இரண்டு பாத தாமரைகளையும் வணங்கி, வினை அகற்றி வாழ்வாம் — எமது பாவவினையை யொழித்து வாழக்கடவேம் எ—று. (9)

திருத்தணிகை

உருத்தணியா வருமசுர ருடறுணிக்கு நெட்டிலைவே
லுரவோய் துன்பக்
கருத்தணியாப் பெருவெயிலுட் டிளைத்திளைத்த கனையகலக்
கருணைக் கண்டந்

திருத்தணியார் கழனிழற்கீ ழென்றுவழி படுமடியா
ரிதயத் துள்ளுந்
திருத்தணியாம் பதியகத்தும் வாழ்குமர குருபரன்ருள்
சிரமேற் கொள்வாம்.

[உருத்(து) அணியா வரும்அசுரர் உடல்துணிக்கும் கெட்டிலேவேல் உரவோய் துன்பக்
கருத்தணியாப் பெருவெயிலுள் திளைத்(து)இளைத்த களை அகலக் கருணைக் கண்தர்(து)
இருத்(து) அணியார் கழல்நிழல்கீழ் என்றுவழி படுமடியார் இதயத் துள்ளும்
திருத்தணியாம் பதிஅகத்தும் வாழ்குமர குருபரன்தாள் சிரமேல் கொள்வாம்.]

இ — ள்: உருத்து அணியா வரும் அசுரர் உடல் துணிக்கும் நெடு இலை வேல் உரவோய் — கோபங்கொண்டு அணியாக வந்த அசுரர்களது சரீரங்களை வெட்டிய நெடிய இலைவடிவாகிய வேலாயுதத்தைத் தாங்கிய வலியவரே, துன்பக் கரு தணியாப் பெரு வெயிலுள் திளைத்து இளைத்த களை அகல — துன்பங்களுக்கெல்லாங் காரணமான பிறவி வேராகிய மிக்க வெயிலில் அழுந்தி வருந்திய இளைப்பு நீங்கும்படி, கருணைக்கண் தந்து அணி ஆர் கழல் நிழல்கீழ் இருத்து என்று வழிபடும் அடியார் இதயத்துள்ளும் — உமது கிருபா நோக்கத்தைச்செய்து அழகுபொருந்திய வீரக்கழலணிந்த திருப்பாதநிழலிலிருத்தியருளுமென்று வழிபாடுசெய்கின்ற தொண்டர்களது இருதயத்தினும், திருத்தணியாம் பதி அகத்தும் — திருத்தணிகையாகிய க்ஷேத்திரத்தினும், வாழ் குமர குரு பரன் தாள் சிரமேல் கொள்வாம் — எழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளது திருப்பாதங்களை எமது சிரமேற் சூடக்கடவேம் எ-று. (10)

கதிர்காமம்

பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ் கதிரைநகர்ப்
புனிதன் பாத
முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து மாறெழுத்து
முணர்ந்து நாவின்
முருகுசர வணபவசண் முககுகவென் றனுதினமு
மொழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின் மீதுவைத்து
வணங்கல் செய்வாம்.

[பொருவில்நறு மலர்பொதுளும் தண்டலைசூழ் கதிரைநகர்ப் புனிதன் பாதம்
உருகிஉளத்(து) அழுத்திவினை நீ(று)அழுத்தும் ஆ(று)எழுத்தும் உணர்ந்து நாவின்
முருகுசர வணபவசண் முககுகஎன்(று) அனுதினமும் மொழிவோர் தங்கள்
மருமருவு கமலமலர் அடிமுடியின் மீதுவைத்து வணங்கல் செய்வாம்.]

இ — ள்: பொரு இல் நறு மலர் பொதுளும் தண்டலைசூழ் கதிரைநகர்ப் புனிதன் பாதம் — ஒப்பில்லாத வாசனை கமழ்கின்ற புட்பங்கள் நிறைந்த சோலைகளாற் சூழப்பட்ட கதிர்காமக்ஷேத்திரத்தின்கண்ணே யெழுந்தருளி யிருக்கின்ற பரிசுத்தராகிய சுப்பிரமணியக்கடவுளது திருப்பாதங்களை, உருகி உளத்து அழுத்தி — சிவுகொண்டு மனத்தின்கண்ணே நிலைபெறப் பதித்து, வினை நீறு அழுத்தும் ஆறெழுத்தும் உணர்ந்து — தீவினைகளெல்லாவற்றை யும் நீருக்குகின்ற ஸ்ரீ சடட்சரங்களைவிதிப்படியறிந்து, நாவில் முருக சரவணபவ சண்முக குக என்று — நாவினால் முருகனே சரவணபவனே சண்முகனே குகனேயென்று, அனுதினமும் மொழிவோர் தங்கள் — தினந் தோறுஞ் செபிக்கின்ற அடியார்களது, மரு மருவும் கமல மலர் அடி முடியின் மீது வைத்து — வாசனைபொருந்திய தாமரை மலரையொத்த திருப்பாதங் களை எமது சிரசின்மேற் சூடி, வணங்கல் செய்வாம் — தோத்திரஞ் செய்யக் கடவேம் எ-று. (11)

திருநந்திதேவர் துதி

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற் றனிவிழியுந்
திண்டோ ணான்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புகவை யடிச்சிறுமான்
கன்றுந் தாங்கி
வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை மலைகாக்க
மதியஞ் சூடு
மையனருள் பெற்றநந்தி யடிக்கமல முடிக்கமல
மாக வைப்பாம்.

[செய்யதழல் புரிசடையும் திருநுதலில் தனிவிழியும் திண்தோள் நான்கும் கையதனில் சுரிகைமழுப் பிரம்புகவை அடிச்சிறுமான் கன்றும் தாங்கி வையமுதல் அனைத்துலகும் தொழும்கயிலை மலைகாக்க மதியஞ் சூடும் ஐயன்அருள் பெற்றநந்தி அடிக்கமல முடிக்கமலம் ஆக வைப்பாம்.]

இ — ள்: செய்ய தழல் புரி சடையும் — செந்நிறம் பொருந்திய அக்கினிப் பிழம்பையொத்த முறுகிய சடையும், திரு நுதலில் தனி விழியும்—திருநெற்றி யின்கண் பொருந்திய ஒப்பற்ற அக்கினிநேத்திரமும், திண்தோள் நான்கும்— வலிய நான்கு திருப்புயங்களும், கை அதனில் சுரிகை மழு பிரம்பு கவையடிச் சிறுமான் கன்றும் தாங்கி—திருக்கரங்களின் கண்ணே உடைவாளும் மழுவாயுத மும் பிரம்பும் பிளவுபொருந்திய பாதங்களைக்கொண்ட சிறிய மான்கன்றும் ஆகிய இவைகளையெல்லாந் தாங்கப்பெற்று, வையம் முதல் அனைத்து உல குந் தொழும் கயிலை மலை காக்க — பூமிமுதலெல்லாவுலகங்களினாலும் வணங் கப்பெற்ற கயிலையங்கிரியைக் காவல்புரியும்படி, மதியம் சூடும் ஐயன் அருள் பெற்ற நந்தி — சந்திரனைத் திருமுடியிற்றரித்தருளிய சிவபிரானது அருளைப்

பெற்ற திருநந்திதேவருடைய, அடி கமலம் முடி கமலம் ஆக வைப்பாம் — பாதாரவிந்தங்களே எமது சிரக்கமலமாகச் சூடக்கடவேம் எ-று. (12)

முடிக்கு அமலம் எனினுமாம்.

சரசுவதி துதி

காரதிருங் கயிலைமலைக் கண்ணுதன்முப் புரமெரிக்கக்
கருது மந்நா
ணீரதிகந் தருந்தரங்கத் தடங்கடல்சூழ்ந் திடும்புட்வி
நெடுந்தே ரூர்ந்த
சாரதிதன் றிருநாவி லடியருளத் தினிலிருக்குந்
தவள மேனிப்
பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும்
பரவல் செய்வாம்.

[கார்அதிரும் கயிலைமலைக் கண்ணுதல்முப் புரமெரிக்கக் கருதும் அந்நாள்
நீர்அதிகம் தரும்தரங்கத் தடங்கடல்சூழ்ந் திடும்புடவி நெடுந்தேர் ஊர்ந்த
சாரதிதன் திருநாவில் அடியர்உளத் தினில்இருக்கும் தவள மேனிப்
பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும் பரவல் செய்வாம்.]

இ — ள்: கார் அதிரும் கயிலைமலைக் கண்ணுதல் — மேகங்கள் முழங்கா நின்ற கயிலாயகிரியின்கண்ணெழுந்தருளிய நெற்றிக்கண்ணையுடைய ஏவெபெரு மான், முப்புரம் எரிக்கக் கருதும் அந்நாள்—திரிபுரதகனஞ்செய்யத் திருவுளங் கொண்ட அக்காலத்து, நீர் அதிகம் தரும் தரங்கத் தடம் கடல் சூழ்ந்திடும் — நீர்நிறைந்த திரைகளைக்கொண்ட விசாலமாகிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட, புடவி நெடுந்தேர் ஊர்ந்த சாரதிதன் திருநாவில் — பூமியாகிய நெடிய தேரைச் செலுத்திய சாரதியாகும் பிரமதேவரது திருநாவிலும், அடியர் உளத்தினில் இருக்கும் — அன்பர்களது இருதயங்களிலும் வீற்றிருந்தருளாநின்ற, தவள மேனி பாரதி செம் பத பதுமத் துணைப்போது — வெண்ணிறமாகிய திருமேனி யைக்கொண்ட சரசுவதிதேவியினது அழகிய திருப்பாதங்களாகிய இரண்டு தாமரை மலர்களையும், முப்போதும் பரவல் செய்வாம் — காலை உச்சி மாலை யாகிய திரிகாலங்களிலுந் துதிக்கக் கடவேம் எ-று. (13)

சண்டேசர் துதி

நீலிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பான் முதற்புனித
நீரி லாட்டி
வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள் வணவழுத்தி
மலர்கள் சாத்தி

யாளிரண்டு பதமளித்தென் றருச்சிக்கு மமையமதி
லவஞ்செய் தந்தை
தாளிரண்டு மறவெறிந்த சண்டேசர் முண்டகப்பொற்
ருளிற் ருழ்வாம்.

[நீள்இரண்டு கரத்(து)எடுத்த நிறைகுடம்பால் முதல்புனித நீரில் ஆட்டி வாள்இரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள் வனைவழுத்தி மலர்கள் சாத்தி ஆள்இரண்டு பதமளித்(து)என்(று) அருச்சிக்கும் அமையம் அதில் அவம்செய்தந்தை தாள்இரண்டும் அறவெறிந்த சண்டேசர் முண்டகப்பொன் தாளில் தாழ்வாம்.]

இ — ள் : நீள் இரண்டு கரத்து எடுத்த நிறை குடம் பால் முதல் புனித நீரில் ஆட்டி — நீண்ட இரண்டு திருக்கரக்களினுலுந் தூக்கிய நிறைந்த குடத் தின் கண்ணேயுள்ள பால்முதலாகச் சுத்தோதகமிறுதியா கவுள்ளவஸ்துக்களைக் கொண்டு அபிடேகித்து, வாள் இரண்டு நிகர்த்த விழிமலைமகள் கேள்வனை — இரண்டுவாளாயுதங்களையொத்த திருநயனங்களைக்கொண்ட இமயபர்வத புத்திரிநாயகராகிய சிவபெருமானை, வழுத்தி மலர்கள் சாத்தி — தோத்திரங் களைக்கூறிப் புட்பங்களைச்சாத்தி, இரண்டுபதம் அளித்து ஆளென்று அருச்சிக்கும் அமையத்தில் — உமது இரண்டு திருப்பாதங்களையும் அடியேற் குத் தந்தருளி ஆட்கொள்ளக்கடவீரென்று பூசைசெய்யுஞ் சமயத்து, அவம் செய் தந்தை தாள் இரண்டும் அற எறிந்த—அப்பூசைக்கிடையூறு செய்த பிதா வாகிய (எச்சதத்தனது) இரண்டு கால்களையும் துணியும்படி வெட்டியருளிய, சண்டேசர் முண்டகம் பொன் தாளில் தாழ்வாம் — சண்டேசுரநாயனாரது கமல மலர்களைப்போன்ற அழகிய திருப்பாதங்களின் கண்ணே விழுந்து வணங்குவாம் என்று, (14)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் துதி

வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து மீனவன்றன்
வெப்புங் கூனு
மெங்குமிசை பெறமாற்றி யமணரெண்ணு யிரர்கழுவி
லிறக்க வேற்றிப்
பங்கமிலென் பரிவையுருப் படைத்துயிர்பெற் றெழப்பதிகம்
பாடி மேன்மை
தங்குமறைத் திருஞான சம்பந்தன் ருட்டுணைக
டலைமேற் கொள்வாம்.

[வெங்குருவில் கவுணியர்தம் குலத்(து)உதித்து மீனவன்றன் வெப்பும் கூனும் எங்கும்இசை பெறமாற்றி அமணர்எண்ணு யிரர்கழுவின்இறக்க ஏற்றிப் பங்கம்இல்என்(பு) அரிவைஉருப் படைத்(து)உயிர்பெற்(று)எழப்பதிகம் பாடிமேன்மை தங்கும்மறைத் திருஞானசம்பந்தன் தாள்துணைகள் தலைமேல் கொள்வாம்:]

இ — ள்: வெங்குருவில் கவுணியர் தம் குலத்து உதித்து — (தேவகுரு வாகிய பிரகஸ்பதியினுலே பூசிக்கப்பட்ட) சிகாழிப்பதியின் கண்ணே கவுணியர் கோத்திரத்திற் றிருவவதாரஞ்செய்து, மீனவன் தன் வெப்பும் கூனும் எங்கும் இசைபெற மாற்றி — கூன்பாண்டியராசனது சுரநோயையுங் கூனையும் எவ்வுலகமும் புகழுண்டாகும்படி மாற்றியருளி, அமணர் எண்ணுயிரர் இறக்க கழுவில் ஏற்றி — (சமயவாதஞ்செய்த) எண்ணுயிரஞ் சமணர்களும் உயிர்துறக் கும்படி கழுமரத்திலேற்றுவித்து, பங்கம் இல் என்பு அரிவை உருபடைத்து உயிர் பெற்று எழ பதிகம் பாடி — (பல திவங்களுக்குமுன் விஷந்தீண்டி உயிர் துறந்த பூம்பாவையென்னுஞ் சிறுமியினது) குற்றமற்ற எலும்புகளானவை (பழைய) பெண்ணுருவமடைந்து உயிர்கொண்டெழும்படி திருப்பதிகத்தைப் பாடியருளி, மேன்மை தங்கும் மறை திருஞானசம்பந்தன் தாள்துணைகள் — மகிமை தங்கப்பெற்ற வேதங்களேயோதிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி களது திருப்பாதங்களிரண்டையும், தலைமேல் கொள்வாம் — (எமது) சிர மிசைச் சூடக்கடவேம் என்று. (15)

சுந்தரமூர்த்திநாயனர் துதி

மங்குனிறத் திருநெடுமால் வலையெயிற்றுப் பெருங்கேழல்
வடிவந் தாங்கி
யங்கணில முழுதுமுழு தறிவரிய கமலமல
ரடிகள் சேப்பச்
சங்கணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப் பரவையென்பா
டன்பா லன்பாற்
பொங்கிருளிற் சுந்தரனே நடப்பித்த சுந்தரனைப்
போற்றல் செய்வாம்.

[மங்குல்நிறத் திருநெடுமால் வலையெயிற்றுப் பெருங்கேழல் வடிவம் தாங்கி அங்கண்நிலம் முழுதும்உழு(து) அறி(வு)அரிய கமலமலர் அடிகள் சேப்பச் சங்(கு)அணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப் பரவைஎன்பாள் தன்பால் அன்பால் பொங்(கு)இருளில் சுந்தரனே நடப்பித்த சுந்தரனைப் போற்றல் செய்வாம்.]

இ — ள்: மங்குல் நிற திரு நெடு மால் வலை எயிற்று பெரும் கேழல் வடிவம் தாங்கி — மேகத்தையொத்த நீலநிறத்தைக்கொண்ட நெடியதிரு வடிவத்தையுடைய மகாவிஷ்ணுமூர்த்தி வலைந்த கொம்புகளையுடைய பெரிய பன்றி வடிவத்தைப் பொருந்தி, அங்கண் நிலம் முழுதும் உழுது அறிவரிய — இடமகன்ற பூமி முழுவதையும் ஊடுருவிச்சென்றும் அறிதற்கரியனவாகிய, கமல மலர் அடிகள் சேப்ப — செந்தாமரை மலர்களையொத்த திருப்பாதங்கள் (சுன்றிச்) சிவக்கும்படி, சங்கு அணி கை குதலை மொழி சரவை விழி பரவை என்பாள் தன்பால்—சங்குவளையல்களணிந்த கரங்களையும் மழலை வார்த்தையையும் அம்பையொத்த கூரிய கண்களையுமுடைய பரவையாரென்னுந் திருநாமத்தைப் பொருந்திய தமது நாயகியாரிடத்தில், அன்பால் பொங்கு இருளில்

அரனே சந்து நடப்பித்த — அன் பிலை மிக்க இருளிலே சிவபெருமானைத் தூதாக நடக்கும்படியேவிய, சுந்தரனே போற்றல் செய்வாம்—சுந்தரமூர்த்தி நாயனரைத் தோத்திரஞ்செய்யக் கடவேம் எ-று. (16)

திருநாவுக்கரசுநாயனார் துதி

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்றமர்செய்
காமனு மைம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை யத்தியதள்
புனைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற்
சிறக்கப் பாடு
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னுட்டரசு
நல்கு மன்றே.

[காஅரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்(று)அமர்செய் காமனும் ஐம்
பூஅரசு படவிழித்துப் புனவேங்கை அத்திஅதள் புனைந்து போர்த்த
தேஅரசு மனமகிழத் திருப்பதிகம் இசைத்தமிழில் சிறக்கப் பாடும்
நாஅரசு பதம்பரசும் நமக்(கு)உயர்பொன் நாட்(டு)அரசு நல்கு மன்றே.]

இ — ள்: கா அரசு மலர் அயன் மால் கடவுளர்க்கு ஆ சென்று — கற்பகச்சோலைக்கதிபதியாகிய தேவேந்திரனும் செந்தாமரையாசனராகிய பிரமதேவரும் மகாவிஷ்ணுமூர்த்தியும் ஆகிய தேவர்கள் பொருட்டாகப் போய், அமர் செய் ஐ பூ அரசு ஆம் காமன் பட விழித்து — யுத்தஞ்செய்த பஞ்சபுட்பபாணங்களுக்கரசனாகிய மன்மதன் இறக்கும்படி நெற்றிக்கண்ணைப் பார்த்தருளி, புனவேங்கை (அதள்) புனைந்து அத்தி அதள் போர்த்த — வனத்திற் சஞ்சரிக்கின்ற புலியினது தோலை யுடையாகவுடுத்தும் யானையினது தோலைப் போர்வையாகப்போர்த்துமருளிய, தே அரசு மனம் மகிழ — தேவாதிதேவராகிய சிவபெருமானது திருவுள்ளமானந்தமடையும்படி, தமிழில் இசை திருப்பதிகம் சிறக்க பாடும் — தமிழிலே பண்ணமைந்த திருப்பதிகங்களைச் சிறப்புண்டாகப் பாடியருளிய, நா அரசு பதம் பரசும் நமக்கு — திருநாவுக்கரசுநாயனரது திருப்பாதங்களை வணங்குகின்ற அடியேங்களுக்கு, உயர் பொன் நாட்டு அரசு நல்கும் — (அத்தொண்டானது) மேன்மையையுடைய சுவர்க்கலோகவரசாட்சியைக் கொடுத்தருளும் எ-று. (17)

அன்று ஏ அசைநிலைகள்.

மாணிக்கவாசகசுவாமிகள் துதி

பெருவாத பித்தகபப் பிணிக்குடையு முடற்சுமக்கும்
பிறந்தை நீக்கி
யொருவாத சிவகதியி னுரிமைபெற நறவமல
ருமிழுஞ் சோலை

மருவாத மனைந்துலவு மன்றுடையாற் குக்கோவை
மாலை சாத்துந்
திருவாத வூரடிக ளடிகள்படி யுறவணங்கிச்
சென்னி சேர்ப்பாம்.

[பெருவாத பித்தகபப் பிணிக்(கு)உடையும் உடல்சுமக்கும் பிறந்தை நீக்கி
ஒருவாத சிவகதியின் உரிமைபெற நறவமலர் உமிழும் சோலை
மருவாதம் அனைந்(து)உலவு மன்றுடையாற் குக்கோவை மாலை சாத்துந்
திருவாத வூரடிகள் அடிகள்படி உறவணங்கிச் சென்னி சேர்ப்பாம்.]

இ—ள்: பெருவாத பித்த கப பிணிக்கு உடையும் — மிக்க வாத பித்த சேட சம்பந்தமாயுதிக்கின்ற நோய்களினுற் பீடிக்கப்பட்டு அழிகின்ற, உடல் சுமக்கும் பிறந்தை நீக்கி — சரீரத்தை எடுத்துழலுகின்ற பிறவித்துன்பம் நீங்கப்பெற்று, ஒருவாத சிவகதியின் உரிமை பெற — என்றும் நீங்காத மோட்ச கதியின் உரித்தையடையும்படி, நறவ மலர் உமிழும் சோலை மருவாதம் அனைந்து உலவும் மன்று உடையாற்கு — தேனைப் புட்பங்கள் சிந்துகின்ற சோலைக்கணுள்ள சுகந்தத்தை (மந்த) மாருதமானது அளாவிவந்து வீசும் கனகசபையிலெழுந்தருளியிருப்பவராகிய சிவபிரானுக்கு, கோவை மாலை சாத்தும் திருவாதவூரடிகள் அடிகள் — திருக்கோவையாராகிய பாமாலையைச் சாத்திய மாணிக்கவாசகசுவாமிகளது திருப்பாதங்களை, படி உற வணங்கி சென்னி சேர்ப்பாம் — நிலத்தில் (உறுப்புகள்) தோயும்படி பணிந்து சிரமேற் சூடக்கடவேம் எ-று. (18)

தில்லைவாயிலவர் துதி

செம்மையா ரழலொருகை துடியொருகை தரித்துமன்றிற்
றிருக்கூத் தாடு
மெம்மையா னுடையபிரான் யாமவரி லொருவரென்றன்
றிசைக்கப் பெற்ற
மும்மையா யிரமுனிவர் பொற்பொதுவிற் றிருப்பணிகண்
முயன்று செய்வோர்
தம்மையா யிரமுறைகை தொழுதனையோர் தாட்டுணைக
டலைமேற் கொள்வாம்.

[செம்மைஆர் அழல்ஒருகை துடிஒருகை தரித்துமன்றில் திருக்கூத்(து) ஆடும்
எம்மைஆள் உடையபிரான் யாம்அவரில் ஒருவர் என்(று) அன்(று) இசைக்கப் பெற்ற
மும்மைஆ யிரமுனிவர் பொன்பொதுவில் திருப்பணிகள் முயன்று செய்வோர்
தம்மைஆ யிரமுறைகை தொழு(து) அனையோர் தாள்துணைகள் தலைமேல் கொள்வாம்.]

இ — ள் செம்மை ஆர் அழல் ஒரு கை துடி ஒரு கை தரித்து — (தாருக வனத்திருடிகளாலனுப்பப்பட்ட) செந்நிறம்பொருந்திய (அபிசாரவேள்வியின்) அக்கினியை ஒரு திருக்கரத்தினும் உடுக்கை மற்றோர் திருக்கரத்தினுந் தாங்கியருளி, மன்றில் திருக்கூத்து ஆடும் எம்மையாளுடைய பிரான் — கனகசபையின்கண்ணே திருநடனஞ்செய்கின்ற எம்மை யடிமையாகவுடைய சிவபிரான், யாம் அவரில் ஒருவர் என்று அன்று இசைக்க பெற்ற — யாமும் அவர்களுக்குள் ஒருவரென்று அந்நாளிற் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற, பொன் பொதுவில் திருப்பணிகள் முயன்று செய்வோர் — கனகசபையின்கண்ணேயுள்ள திருத்தொண்டுகள் யாவற்றையும் ஊக்கத்தோடு செய்கின்ற, மும்மை ஆயிர முனிவர் தம்மை — மூவாயிரவர்களாகிய அந்தணர்களை, ஆயிர முறை கை தொழுது — ஆயிரந்தரம் கைகுவித்து வணங்கி, அவரோர் தாள் துணைகள் தலைமேல் கொள்வாம் — அவர்களது உபய பாதங்களையும் எமது சிரமிசைச் சூடக்கடவேம் எ-று. (19)

சிவனடியார் துதி

பொய்விரவு பவநீறு படப்புரிவெண் டிருநீறு
பூசிக் கண்டி
கைவிரவு மணியினரா யஞ்செழுத்து முணர்ந்துமனக்
களங்க நீங்கி
மெய்விரவு மறைவரம்பி னிலைகடவா தொழுகியருண்
மேன்மை பூண்ட
மைவிரவு கண்டர்தொண்டர் மலரடிகள் சிரத்திருத்தி
வழுத்தல் செய்வாம்.

[பொய்விரவு பவம்நீறு படப்புரிவெண் திருநீறு பூசிக் கண்டி
கைவிரவும் அணியினராய் அஞ்செழுத்தும் உணர்ந்துமனக் களங்கம் நீங்கி
மெய்விரவும் மறைவரம்பின் நிலைகடவா(து) ஒழுகிஅருள் மேன்மை பூண்டு
மைவிரவு கண்டர்தொண்டர் மலர்அடிகள் சிர(து)இருத்தி வழுத்தல் செய்வாம்.]

இ — ள் பொய் விரவு பவம் நீறு படபுரி வெண் திருநீறு பூசி — பொய்யாகிய பிறவித்துன்பம் நீருயழியும்படி செய்கின்ற வெண்ணிறமாகிய விபூதியைத் தரித்து, கண்டிகை விரவும் அணியினராய் — உருத்திராக்க மாலையைத் தரித்தவர்களாய், அஞ்சு எழுத்தும் உணர்ந்து — ஸ்ரீபஞ்சாட்சரத்தையும் விதிப்படியறிந்து, மன களங்கம் நீங்கி — மனத்தின்கண்ணே சிறிதும் மாசில்லாதவர்களாய், மெய் விரவும் மறை வரம்பின் நிலை கடவாது ஒழுகி — உண்மை வடிவாகிய வேதங்களின் விதிமுறைகடவாத ஒழுக்கத்தையுடையவராய், அருள் மேன்மை பூண்ட — திருவருளின் மகிமையை யடைந்துகொண்ட, மைவிரவு கண்டர் தொண்டர் மலர் அடிகள் — நீலநிறம்பொருந்திய திருக்கண்டத்தையுடைய சிவபெருமானது அடியார்களின் மலர்போன்ற பாதங்களை, சிரத்து இருத்தி வழுத்தல் செய்வாம் — சிரசின்கண்ணேசூடித் துதிக்கக்கடவேம் எ-று. (20)

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தற்சிறப்புப் பாயிரம்

கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத் தறிஞர்திருக்
கடைக்க ணோக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ யாகமநூன்
மொழிவ ழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப்
பாடு கென்னச்
செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனற் றிரட்டியொன்றுச்
செப்ப லுற்றேன்.

[கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத்(து) அறிஞர்திருக் கடைக்கண் நோக்கி
முந்தஉரைத் தனர்பலரும் ஆயினும்நீ ஆகமநூல் மொழிவ ழாமல்
பந்தம்அறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப் பாடுகென்னச்
செந்தமிழின் உயர்விருத்தப் பாவதனல் திரட்டிஒன்றுச் செப்ப லுற்றேன்.]

இ — ள்: கந்த மலர் பொழில் புடை சூழ் தில்லைவனத்து அறிஞர் — நறு மணங்கமழாறின்ற மலர்நிறைந்த சோலைகள் பக்கத்திற் சூழ்ந்த சிதம்பரத்தின் கணுள்ள அறிவிற் சிறந்த பெரியோர்கள், திரு கடைக்கண் நோக்கி — திருக் கடாட்சவீட்சணஞ் செய்தருளி, பலரும் முந்த உரைத்தனர் ஆயினும் — பல ரும் முன்னரே கூறினராயினும், ஆகம நூல் மொழி வழாமல் — ஆகமங்களிற் கூறிய கிரமந்தவறுமல், பந்தம் அறுத்திடும் சிவராத்திரி விரத சரிதைதனை— மும்மலங்களையும் நாசஞ்செய்கின்ற சிவராத்திரிவிரத மான்மியத்தைக் கூறுஞ் சரித்திரங்களை, நீ பாடுக என்ன — நீ பாடக்கடவையென்று ஆஞ்ஞாபிக்க, செந்தமிழின் உயர்விருத்தப் பா வதனல் — செந்தமிழ்ப் பாஷையில் உயர்வு பொருந்திய விருத்தப்பாவினல். ஒன்றுய் திரட்டி செப்பலுற்றேன் — ஒன்று சேரக்கூட்டிப் பாடத்தொடங்கினேன் எ-று. (1)

வீணிலிவன் றனதுமடம் வெளிப்படையாச் செய்தனனல்
வித்தின் பாதி
நாணிலனென் றெனையுலகி னவலர்க ணகுவரதை
நாடிச் சற்றும்
பேணிலனின் மலனிரவின் பெருமையெடுத் தூரைக்குமிந்தப்
பேறு கூறு
மேணிலனெற் சிவபதத்து ளிருத்துமெனும் விருப்புளத்தை
யீர்த்த லாலே.

[வீண்இவன் தனதுமடம் வெளிப்படையாச் செய்தனன்ஆல் வித்தின் பாதி
நாண்இலன்என்(று) எனைஉலகில் நாவலர்கள் நகுவர்அதை நாடிச் சற்றும்
பேணிலன்நின் மலன்இரவின் பெருமை எடுத்(து)உரைக்கும்இந்தப் பேறு கூறும்
ஏண் இலன்என்சிவபதத்துள் இருத்தும்எனும் விருப்(பு)உளத்தை ஈர்த்தலாலே.]

இ — ள்: வீணில் இவன் தனது மடம் வெளிப்படையா செய்தனன் — ஒரு பயனுமின்றி இவன் தன்னறியாமையை யார்க்கும் வெளிப்படப் புலப்படுத்தினன், ஆல் வித்தின் பாதி நாண் இலன் என்று — ஆலம்வித்தின் பாதியளவாயினும் இவனிடத்தில் வெட்கமில்லையென்று, நாவலர்கள் உலகில் எனை நகுவர் — பண்டிதர்கள் உலகத்தில் என்னையிகழுவார்கள், அதை நாடி சற்றும் பேணிலன் — அதனைக் குறித்துச் சிறிதாயினும் யான் சிந்திக்கின்றிலேன் (ஏனெனில்), நின்மலன் இரவின் பெருமை எடுத்து உரைக்கும் இந்தப்பேறு— மலரகிதராகிய சிவபெருமானது திரு இரவின் மகிமையை எடுத்துக்கூறுகின்ற இந்தப் பேறுனது, கூறும் ஏன் இலன் என் — அவற்றைக் கூறத்தக்க ஆற்றலிலனாகிய என்னை, சிவ பதத்துள் இருத்தும் எனும் விருப்பு — சிவலோகத்தில் இருத்தும் என்கின்ற விருப்பமானது, உளத்தை ஈர்த்தலால் — என்மனத்தை யிழுத்த காரணத்தால் எ-று. (2)

ஏ அசை.

வேறு

அரியநற் பரத விதிமுறை வழுவா
நாடுந ராடல்கண் டுவப்போர்
விரிசினைத் தருவில் வாழ்கவி நடமுங்
கண்டுள விருப்பொடு வியப்பார்
தெரிதமிழ்ப் புலவ ரமிழ்தெனத் தெருட்டுஞ்
செய்யுள்கேட் டகமகிழ் சிறந்தோ
ருரியரென் புன்சொற் கவிசெவி யேற்றுள்
ளுவப்புறற் கென்பதா லுரைத்தேன்.

[அரியநல் பரத விதிமுறை வழுவா(து) ஆடுநர் ஆடல்கண்(டு) உவப்போர் விரிசினைத் தருவில் வாழ்கவி நடமும் கண்(டு)உள விருப்பொடு வியப்பார் தெரிதமிழ்ப் புலவர் அமிழ்(து)எனத் தெருட்டும் செய்யுள்கேட்(டு) அகமகிழ்சிறந்தோர் உரியர்என் புன்சொல் கவிசெவி ஏற்(று)உள் உவப்(பு) உறற்(கு) என்பதால் உரைத்தேன்.]

இ — ள்: அரிய நல் பரத விதிமுறை வழுவாது ஆடுநர் ஆடல் கண்டு உவப்போர் — அரியதாகிய நல்ல பரத சாஸ்திரத்தின் விதிக்கிரமந் தவருமல் ஆடுகின்ற நாடகர்களது நடனத்தைக்கண்டு மகிழ்பவர்கள், விரிசினை தருவில் வாழ் கவி நடமும் கண்டு உள விருப்பொடு வியப்பார் — பரந்த கொம்பர்களையுடைய விருட்சங்களில் வாசஞ்செய்கின்ற வானரங்களின் நடனத்தையும் பார்த்து உள்ளத்திற் பொருந்திய இச்சைகுன்றாது மகிழுவார்கள் (அதுபோல), தெரி தமிழ் புலவர் அமிழ்து என தெருட்டும் செய்யுள் கேட்டு — தமிழ்ப் பாஷையை நன்கறிந்த கல்விமான்கள் அமுதத்தைப்போலக் கூறிய இன்பத்தைக் கொடுக்கும் பாக்களைச் செவியுற்று, அக மகிழ் சிறந்தோர்—மனமகிழ்ச்சி கொள்ளுகின்ற (புலமையையுடைய) பெரியோர்கள், என் புன் சொல் கவி செவி ஏற்று—எனது எளிய சொற்களாலமைந்த இப்பாக்களையுந் தமது செவியிலேற்று, உள் உவப்பு உறற்கு உரியர் என்பதால் உரைத்தேன் — மனமகிழ்ச்சியடைதற்கும் உரிமையையுடையரென்னுந் துணிபால் இந்நூலைப் பாடினேன் எ-று. (3)

தற்சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவராத்திரி உற்பவச் சருக்கம்

திலக வாணுதற் கலைமகள் செறிதலாற் றினமு
மிலகு நான்மறைத் தொனிநனி யிரைத்திடு தலினு
லலகிலா வுயிர் படைக்குநான் முகற்கிணை யாமென்
றுலகு போற்றுநை மிசவன வளஞ்சிறி துரைப்பாம்.

[திலக வாள்நுதல் கலைமகள் செறிதலால் தினமும்
இலகு நான்மறைத் தொனிநனி இரைத்திடு தலினால்,
அல(கு)இலாஉயிர் படைக்கும்நான் முகற்(கு)இணை யாம்என்(று)
உலகு போற்றுநை மிசவன வளம்சிறி(து) உரைப்பாம்.]

இ — ள்: திலக வாள் நுதல் கலைமகள் செறிதலால் — பொட்டணிந்து விளங்குகின்ற ஒள்ளிய திருநெற்றியையுடைய சரசுவதிதேவி வாசஞ்செய்தலினாலும், தினமும் இலகும் நால் மறை தொனி நனி இரைத்திடுதலினால் — எஞ்ஞான்றும் விளங்குகின்ற நான்கு வேதங்களினது கோஷமும் மிக்கொலித்தலினாலும், அலகு இலா உயிர் படைக்கும் நான்முகற்கு இணையாம் என்று — அளவிறந்த ஆன்ம வர்க்கங்கள் யாவற்றையும் படைத்தருளுகின்ற சதுர்முகப் பிரமாவுக்குச் சமமுடையதென்று, உலகு போற்றும் நைமிச வன வளம் சிறிது உரைப்பாம் — உலகத்தாராற் புகழ்ந்துரைக்கப்படுகின்ற நைமிசாரணியத்தினது வளங்களைச் சிறிது கூறுவாம் என்று. (1)

மண்ட லந்தனைச் செங்கனிப் பவளவாய் மடுத்தன்
றுண்ட முண்டகக் கட்புரு டோத்தம னுறைவை
குண்ட மொண்டழற் கண்ணினன் குலவுல கொப்பென்
றண்டர் யாவரும் புகழ்வது நைமிசா ரணியம்.

[மண்ட லந்தனைச் செங்கனிப் பவளவாய் மடுத்(து) அன்(று)
உண்ட முண்டகக் கண்புரு டோத்தமன் உறைவை
குண்டம் ஒள்தழல் கண்ணினன் குல(வு)உல(கு) ஒப்(பு)என்(று)
அண்டர் யாவரும் புகழ்வது நைமிசா ரணியம்.]

இ — ள்: நைமிசாரணியம் — அந்த நைமிச வனமானது, மண்டலம் தண் செங் கனி பவள வாய் மடுத்து அன்று உண்ட — பூமண்டலத்தைச் செந்நிறம் பொருந்திய (கொவ்வைக்) கனியையொத்த பவளம்போன்ற தமது திருவாயிலிட்டுப் பண்டைநாளிலுண்டருளிய, முண்டக கண்புருட உத்தமன்—தாமரைக் கண்ணையுடையவரும் புருடோத்தமருமாகிய மகாவிஷ்ணுமூர்த்தி, உறை

வைகுண்டம் — எழுந்தருளியிருக்கின்ற வைகுண்டலோகத்துக்கும், ஒள் தழல் கண்ணினன் குலவு உலகு ஒப்பு என்று — ஒளிபொருந்திய அக்கினிநேத்திரத்தை யுடையராகிய சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற சிவலோகத்துக்குஞ் சம முடையதென்று, அண்டர் யாவரும் புகழ்வது — எத்தேவர்களாலும் புகழ்ந் துரைக்கப்படுவது எ-று. (2)

முனிவர் முன்னைநாண் முண்டகத் தவிசினுன் முகனைப்
புனித மாதவம் புரிந்தியாம் வைகிடப் புவியி
னினிய நற்றல மியம்புதி யென்னவெண் கமல
வனிதை கேள்வனுேர் நுண்ணுதித் தருப்பையை வாங்கி.

[முனிவர் முன்னைநாள் முண்டகத் தவிசில்நான் முகனைப்
புனித மாதவம் புரிந்(து)யாம் வைகிடப் புவியில்
இனிய நல்தலம் இயம்புதி என்னவெண் கமல
வனிதை கேள்வன்ஓர் நுண்நுதித் தருப்பையை வாங்கி.]

இ — ள் : முனிவர் — முனிவர்கள் எல்லோரும், முன்னை நாள் — பண் டைக்காலத்தில், முண்டக தவிசில் நான்முகனை — தாமரையாசனராகிய பிரம தேவரைப் பார்த்து, புனித மா தவம் புரிந்து யாம்வைகிட — பரிசுத்தமாகிய பெருமைபொருந்திய தவங்களைச்செய்து யாம்வசித்தற்கு, புவியில் இனிய நல் தலம் இயம்புதி என்ன — பூமியின் கண்ணேயுள்ள தானங்களில் பல்வகைச் சுகங்கட்குமுரிய நல்ல ஒரு க்ஷேத்திரத்தைக் கூறியருளவேண்டுமென்று வேண்ட லும், வெண் கமல வனிதை கேள்வன் — வெண்டாமரையாசனியாகிய சரசு வதிக்கு நாயகராகும் பிரமதேவரானவர், ஓர் நுண்நுதி தருப்பையை வாங்கி – ஒரு நுட்பமாகிய நுதிபொருந்திய தருப்பைப் புல்லையெடுத்து எ—று.

இருகை யால்வளைத் துருட்டியீ திறுத்திடு மிடத்திற்
பொருவின் மாதவம் புரிதிரென் றுரைத்திடப் போனுர்
கருது மக்குசை தங்கிய கானமற் றதனுற்
றிருவு றைந்திடு நைமிச வனமெனச் சிறந்த.

[இருகை யால்வளைத்(து) உருட்டிஈ(து) இறுத்திடும் இடத்தில்
பொருவில் மாதவம் புரிதிர்என்(று) உரைத்திடப் போனுர்
கருதும் அக்குசை தங்கிய கானம்மற்(று) அதனல்
திருஉ றைந்திடும் நைமிச வனம்எனச் சிறந்த.]

இ — ள் : இரு கையால் வளைத்து உருட்டி — (தமது) இரண்டு திருக்கரங் களினுலும் அத்தருப்பைப் புல்லைச் (சக்கரம்போல) வளைத்து உருளச்செய்து, ஈது இறுத்திடும் இடத்தில் — இச்சக்கரமானது தங்குகின்ற தானத்தில்,

பொரு இல் மா தவம் புரிதிர் என்று உரைத்திட போனர் — ஒப்பில்லாத மகிமைதங்கிய தவத்தைச் செய்யுங்களென்று கூறியருளலும் அப்பொழுதே யதன்பின் சென்றனர், கருதும் அக்குசை தங்கிய கானம் — எண்ணப்படுகின்ற அத்தருப்பைச் சக்கரமானது சென்று தங்கிய வனம், அதனுல் — அக்காரணத்தால், திரு உறைத்திடும் நைமிச வனம் என சிறந்த — இலட்சுமீகரம்பொருந்திய நைமிசாரணியமென்று பெயர்பெற்றுச் சிறப்படைந்தது எ - று. (4)

மற்று அசைநிலை.

துன்று கொன்றையாற் பசுங்கொடி விரவலாற் சுடுதீ
யென்று மேவலாற் கடுவிடப் பணிகளெய் துதலாற்
கன்று மாலுகண் டுறைதலாற் கதிர்மணிக் கனக
மன்று ளாடிய பரம்பர னிகர்க்குமவ் வனமே.

[துன்று கொன்றையால் பசுங்கொடி விரவலால் சுடுதீ
என்னும் மேவலால் கடுவிடப் பணிகள்எய் துதலால்
கன்று மான்உகண்(டு) உறைதலால் கதிர்மணிக் கனக
மன்றுள் ஆடிய பரம்பரன் நிகர்க்கும்அவ் வனமே.]

இ — ள் : அவ்வனம் — அந்த நைமிசாரணியமானது, துன்று கொன்றையால் — நெருங்கிய கொன்றைமரங்கள் நிற்றலினுலும், பசுங்கொடி விரவலால் — பச்சைக்கொடிகள் நெருங்கியிருத்தலினுலும், சுடு தீ என்றும் மேவலால் — சுடுகின்ற அக்கினியானது எந்நாளும் (அவியாமல்) இருத்தலினுலும், கடு விட பணிகள் எய்துதலால் — கொடிய நஞ்சையுடைய சர்ப்பங்களிருத்தலினுலும், மான் கன்று உகண்டு உறைதலால் — மான்கன்று துள்ளி வசித்தலினுலும், கதிர்மணி கனக மன்றுள் ஆடிய பரம்பரன் நிகர்க்கும் — கிரணங்களையுடைய இரத்தினகசிதமாகிய கனகசபையின்கண்ணே நிர்த்தஞ் செய்கின்ற சிவபெருமானே ஒக்கும் எ — று. (5)

ஏ — அசைநிலை. சிவபிரானுக்குக் கூறுங்கால், கொன்றை - கொன்றை மலர், பசுங்கொடி - உமாதேவி.

ஆண்டெ ழுந்துயர் சோலைக ளறவருக் கடைகாய்
மாண்ட நற்கனி மலர்முதல் வழங்கினஞ் சுரர்க்கு
மீண்ட ளித்திட வேண்டுமென் றெண்ணிவா னளவாய்
நீண்ட வன்றடஞ் சினைக்கையை நீட்டியே நிற்கும்.

[ஆண்(டு)எ ழுந்(து)உயர் சோலைகள் அறவருக்(கு) அடைகாய்
மாண்ட நற்கனி மலர்முதல் வழங்கினம் சுரர்க்கும்
ஈண்(டு)அ ளித்திட வேண்டும்என்(று) எண்ணிவான் அளவாய்
நீண்ட வன்தடச் சினைக்கையை நீட்டியே நிற்கும்.]

இ — ள்: ஆண்டு எழுந்து உயர் சோலைகள் — அந்தமிசராணியத்திலே தோன்றியுயர்ந்த சோலைகளானவை, அறவருக்கு — அங்கேயுள்ள முனிவர்களுக்கு, அடைகாய் மாண்ட நல் கனி மலர் முதல் வழங்கினம் — பத்திரங்களும் காய்களும் மாட்சிமை பொருந்திய நல்ல கனி வர்க்கங்களும் புஷ்பங்களும் ஆகிய இவற்றைக்கொடுத்தோம், சுரர்க்கும் — தேவர்களுக்கும், ஈண்டு அளித்திட வேண்டும் என்று எண்ணி — இப்பொழுது (யாம் அவ்வஸ்துக்களைக்) கொடுக்க வேண்டுமென்று நினைத்து, வான் அளவாய் — ஆகாயமளவிற்கு, நீண்டவன் தடம் சிலைக் கையை நீட்டி நிற்கும் — நீட்சிபொருந்திய வலிய விசாலித்த கொம்புகளாகிய தம் கைகளையுயர்த்தி நிற்கின்றன எ — று. (6)

சடையர் குண்டிகை தரித்திடுங் கரத்தர்கண் டிகையின்
ரூடைய ராதப மறைத்திடுந் தோகைமென் பீலிக்
குடையர் செய்யகற் ரூய்த்திடுங் கோடிக மிறைஞ்சி
யுடையர் மாதவத் துறுவர்க ளுறுவதவ் வனமே.

[சடையர் குண்டிகை தரித்திடும் கரத்தர்கண் டிகையின்
தொடையர் ஆதபம் மறைத்திடும் தோகைமென் பீலிக்
குடையர் செய்யகல் தோய்த்திடும் கோடிகம் இறைஞ்சி
உடையர் மாதவத்(து) உறுவர்கள் உறுவ(து) அவ் வனமே.]

இ — ள்: அவ்வனம் — அந்த நைமிசாரணியம், சடையர் — சடைமுடியையுடையவர்களும், குண்டிகை தரித்திடும் கரத்தர் — கமண்டலத்தைத் தாங்கிய கைகளையுடையவரும், கண்டிகையின் தொடையர் — உருத்திராக்கமணிமாலையையுடையவரும், ஆதபம் மறைத்திடும் தோகை மென் பீலிக் குடையர் — சூரியவெப்பத்தைத் (தம்மேற்படாது) மறைக்கின்ற மிருதுவாகிய மயிலிறகுகளினூற் செய்யப்பட்ட குடைகளையுடையவரும், செய்யகல் தோய்த்திடும் கோடிகம் இறைஞ்சி உடையர் — சிவந்த காவிக்கல் தோய்க்கப்பெற்ற வஸ்திரங்களையும் மரவுரிகளையும் உடைகளாகக் கொண்டவரும் (ஆகிய), மாதவத்து உறுவர்கள் உறுவது — மகாதவத்தையுடைய முனிவர்கள் வாசஞ் செய்யப்படுவது எ — று. (7)

ஏ – அசை.

ஆத பந்தெறு வேனிலு ளம்புதந் துளித்துச்
சித நீர்பொழி மாரிநா ளிமம்பெயுந் தினங்கண்
மாத வந்தவ ருதிர்ரூத் தும்பரு மதிக்கப்
பாத கங்களைக் கடிந்திடும் படிவரப் படிவர்.

[ஆத பந்தெறும் வேனில்நாள் அம்புதம் துளித்துச்
சித நீர்பொழி மாரிநாள் இமம்பெயும் தினங்கள்
மாத வம்தவ ரு(து)இரூத்(து) உம்பரும் மதிக்கப்
பாத கங்களைக் கடிந்திடும் படிவர்அப் படிவர்.]

இ — ள்: அப்படிவர் — அந்த முனிவர்கள், ஆதபம் தெறும் வேனில் நாள் — வெயில் வருத்துகின்ற வேனிற் காலத்தும், அம்புதம் துளித்து சீத நீர் பொழி மாரிநாள் — மேகங்களானவை திவலைகளாகக் குளிர்ச்சி பொருந்திய மழையைச் சொரிகின்ற மாரிக்காலத்தும், இமம் பெயும் தினங்கள் — பனிக்காலத்தும், மா தவம் தவறுது இனைத்து — பெருமை பொருந்திய தவங்களை வழுவின்றிச் செய்து, உம்பரும் மதிக்க — தேவர்களும் வியக்கும் படி, பாதகங்களைக் கடிந்திடும் படிவர் — பாவங்களை நசித்த புண்ணியத்திரு மேனியையுடையவர்கள் எ — று. (8)

உருப்ப வெந்தழல் வேட்பவ ரொண்மலர் சமிதை
தருப்பை தண்டளி ரெடுப்பவர் தமனியச் சிகரப்
பருப்ப தந்தனைத் தனுவெனக் குனிசெய்த பரனை
விருப்ப மோடருச் சிப்பவ ரெண்ணிலார் விளம்பில்.

[உருப்ப வெம்தழல் வேட்பவர் ஒள்மலர் சமிதை
தருப்பை தண்தளிர் எடுப்பவர் தமனியச் சிகரப்
பருப்ப தந்தனைத் தனுஎனக் குனிசெய்த பரனை
விருப்ப மோ(டு)அருச் சிப்பவர் எண்ணிலார் விளம்பில்.]

இ — ள்: விளம்பில் — கூறுமிடத்து, எண்ணிலார் - (அங்கு தவஞ்செய்கின்ற) எண்ணிறந்த மேலோர்கள், உருப்ப வெம் தழல் வேட்பவர் — சொலிக்கும்படி வெவ்விய அக்கினியை வளர்த்து யாகஞ் செய்பவர்களாயும், ஒள் மலர் சமிதை தருப்பை தண் தளிர் எடுப்பவர் — ஒளிபொருந்திய புஷ்பங்களையும் யாக விறகுகளையும் தருப்பைப் புல்லையுங் குளிர்ச்சி பொருந்திய பத்திரங்களையுஞ் சேகரிப்பவர்களாயும், தமனியச் சிகரப் பருப்பதம் தனை — பொற் கொடுமுடிகளையுடைய மகாமேருகிரியை, தனு எனக் குனிசெய்த பரனை — வில்லாக வணக்கிய பரமசிவனை, விருப்பமோடு அருச்சிப்பவர் — அன்போடு அருச்சனை செய்பவர்களாயுமுள்ளவர்கள் எ — று. (9)

இன்ன நைமிச வனத்தியல் பினைத்தையு மெடுத்து
வன்ன மாமணி கிடந்தொளிர் பஃறலை வாயாற்
சொன்ன வூழிகள் பற்பல தொலைந்திடத் துணிந்து
பன்ன காதிபன் பகரினும் பகர்ந்திடற் கரிதால்.

[இன்ன நைமிச வனத்(து)இயல்(பு) அனைத்தையும் எடுத்து
வன்ன மாமணி கிடந்(து)ஒளிர் பஃறலை வாயால்
சொன்ன ஊழிகள் பல்பல தொலைந்திடத் துணிந்து
பன்ன கஅதிபன் பகரினும் பகர்ந்திடற்(கு) அரிதால்.]

இ — ள்: இன்ன நைமிச வனத்து இயல்பு அனைத்தையும் — இத்தகைய நைமிசாரணியத்தினது இயற்கைகள் யாவற்றையும், பனக அதிபன் — ஆதிசேடனனவன், வனன மா மணி கிடந்து ஒளிர் பல் தலைவாயால் — அழகிய பெரிய இரத்தினங்கள் கிடந்து ஒளிகாலுகின்ற ஆயிரஞ் சிரங்களினுமுள்ள வாய்களினால், சொன்ன ஊழிகள் பல்பல தொலைந்திட துணிந்து எடுத்துப் பகரினும் — (கணித நூலார்) வகுத்துக்கூறிய பல்லூழி காலங்கள் தொலையுமளவும் துணிந்தெடுத்துப் புகன்றாலும், பகர்ந்திடற்கு அரிது — கூறிமுடித்தற்கியலாது எ-று. (10)

ஆல் - அசைநிலை.

தெருண்ம னத்துயர் வியாதன்மா ணைக்கரிற் சிறந்தோன்
மருண்ம னத்தினர்க் களவிடற் கரியநான் மறையின்
பொருண்ம னத்துணர் சூதன்முற் புராணநூல் வல்லோ
னருண்ம னத்துட னனேயனை மிசவன மடைந்தான்.

[தெருள்ம னத்(து)உயர் வியாதன்மா ணைக்கரில் சிறந்தோன்
மருள்ம னத்தினர்க்(கு) அளவிடற்(கு) அரியநால் மறையின்
பொருள்ம னத்(து)உணர் சூதன்முன் புராணநூல் வல்லோன்
அருள்ம னத்துடன் அனேயனை மிசவனம் அடைந்தான்.]

இ — ள்: தெருள் மனத்து உயர் வியாதன் மாணைக்கரில் சிறந்தோன் — ஞானவறிவினையுடைய மனத்தைக்கொண்ட மேலவராகிய வியாசமுனிவரது மாணவருட்டலைமையுடையவரும், முன் புராண நூல் வல்லோன்—ஆதிகாலத்திற் பதினெண்புராணங்களையும் வகுத்துக்கூறிய வலிமையுடையவரும், மருண் மனத்தினர்க்கு — மயங்குகின்ற மனத்தையுடையவர்களுக்கு, அளவிடற்கு அரிய சால் மரையின் பொருள் மனத்து உணர் சூதன் — அளந்தறிதற்கியலாத இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்கின்ற சதுர்வேதங்களின் பொருளோயின்னதென்றறிந்த மனத்தையுடையவருமாகிய சூத முனிவர், அருள் மனத்து உடன் அனேய நைமிசவனம் அடைந்தான் – அருள்நிறைந்த மனத்தையுடையராய் அந்த நைமிசாரணியத்தின்கண் வந்தருளினார் எ — று. (11)

வேறு

வந்தமா முனிவன் றனக்கெதிர் புகுந்து
வருகென வுரைத்திவண் வரநீ
யெந்தமா தவஞ்செய் தனமென முகம
னியம்பியங் கியாவரு மிறைஞ்சி
யந்தமா மணிப்பொற் றவிசினி லிருத்தி
யருத்தியோ டருக்கிய முதலா
முந்தவா தரவிற் பூசனை விதியின்
முறைதவ ருவகை முடித்து.

[வந்தமா முனிவன் றனக்(கு)எதிர் புகுந்து வருகென உரைத்(து)இவண் வரநீ
எந்தமா தவம்செய் தனம்என முகமன் இயம்பிஅங்(கு) யாவரும் இறைஞ்சி
அந்தமா மணிப்பொன் தவிசினில் இருத்தி அருத்தியோ(டு) அருக்கியம் முதலா
முந்தஆ தரவின் பூசனை விதியின் முறைதவ ருவகை முடித்து.]

இ — ள் : வந்த மா முனிவன் தனக்கு எதிர் புகுந்து — ஆங்குவந்த மேலவ ராகிய சூதமகாமுனிவருக்கு எதிர்சென்று, வருகென உரைத்து — வந்தரு ளுகவென்றழைத்து, இவண் நீ வர எந்த மா தவம் செய்தனம் என முகமன் இயம்பி — இவ்விடத்திற்குத் தேவரீர் எழுந்தருளி வருவதற்கு யாங்களெத் தவத்தைச் செய்தோமென்று உபசாரவாக்குக் கூறி, அங்கு யா வ ரும் இறைஞ்சி — அங்கிருந்த முனிவர்களெல்லோரும் நமஸ்காரஞ் செய்து, அந்த மா மணிப் பொன் தவிசினில் இருத்தி — அழகிய பெருமை பொருந்திய இரத் தினங்கள் பதித்துப் பொன்னாற் செய்யப்பட்ட ஆசனத்தின்கண்ணேயிருக்கச் செய்து, அருத்தியோடு — உள்ளன்புடனே, அருக்கியம் முதலாப் பூசனை — அருக்கிய முதலாகிய பூசையை, ஆதரவில் விதியின் முறை தவரு வகை முத்த முடித்து — அன்புடன் விதிக்கிரமந் தவறாமல் முதலிற் செய்துமுடித்து எ-று.

மழைக்கரு முகின்மின் னிறத்தசெஞ் சடில
மாதவர் சூதனை நோக்கி
யிழைப்பதற் கெளிதாய்ப் பவக்கடல் சுவற்றி
யிருங்கதிப் பேறுநல் குவதாய்க்
குழைக்கய னடந்து கழிக்கயன் மருட்டுங்
கூர்விழிக் கோதைபங் கிருக்கு
முழைக்கரப் பெருமான் விரதமொன் றெமக்கீண்
டுரைத்திட வேண்டுமென் றிரப்ப.

[மழைக்கரு முகில்மின் நிறத்தசெம் சடில மாதவர் சூதனை நோக்கி
இழைப்பதற்(கு) எளிதாய்ப் பவக்கடல் சுவற்றி இருங்கதிப் பேறுநல் குவதாய்
குழைக்(கு)அயல் நடந்து கழிக்கயல் மருட்டும் கூர்விழிக் கோதைபங்(கு) இருக்கும்
உழைக்கரப் பெருமான்விரதம்ஒன்(று)எமக்(கு)ஈண்டு உரைத்திட வேண்டும்என்(று)இரப்ப]

இ — ள் : மழை கரு முகில் மின் நிறத்த செம் சடில மாதவர்—மழையைப் பெய்கின்ற கரிய முகில்களினின்றுந் தோற்றுவதாகிய மின்னலியொத்த செந் நிறத்தைக்கொண்ட சடைமுடியைத் தாங்கிய தவசிரேட்டர்கள், சூதனை நோக்கி — சூதமுனிவரைப் பார்த்து, இழைப்பதற்கு எளிதாய் — யாவரும் அனுட்டிப்பதற்கு மிக இலகுவானதாய், பவக் கடல் சுவற்றி இரும் கதிப்பேறு நல்குவதாய் — பிறவிச் சமுத்திரத்தை வற்றச்செய்து பெருமைபொருந்திய மோட்சப்பேற்றைக் கொடுத்தற்கு வலிமையுடையதாய், குழைக்கு அயல் தடந்து — காதணிகள்வரையுந் தாவிச்சென்று, கழி கயல் மருட்டும் கூர் விழி கோதை பங்கு இருக்கும் — (நீர்க்) கழிகளில் வசிக்கின்ற கயல்மற்சங்களையும்

மருளச்செய்யுங் கூரிய திருநேத்திரங்களையுடைய உமாதேவியார் எழுந்தருளிய இடப்பாகத்தைக்கொண்ட, உழைகர பெருமான் விரதம் ஒன்று — மான்கன்றைத் தாங்கிய திருக்கரத்தையுடைய சிவபிரானுக்குரிய விரதமொன்றை, ஈண்டு எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப — இவ்விடத்து எங்களுக்குக் கூறியருளவேண்டுமென்று யாசிப்ப எ-று. (13)

நன்றென முகமு மிதயமு மலர்ந்து
நயனநீர் பொழிதர விருந்தே
முன்றவ மிழைத்த பயனிது கேட்க
முயன்றது நீவிர்முக் குறும்பை
வென்றமா தவத்தீர் விடையுயர்த் தருளும்
விமலனுக் குரியநல் விரத
மொன்றுள தமர ரனைவரு நோற்ப
துரைக்குவ னுவந்துகேட் டிடுமின்.

[நன்(று)என முகமும் இதயமும் மலர்ந்து நயனநீர் பொழிதர இருந்தே முன்தவம் இழைத்த பயன்இது கேட்க முயன்றது நீவிர்முக் குறும்பை வென்றமா தவத்தீர் விடைஉயர்த் தருளும் விமலனுக்(கு) உரியநல்விரதம் ஒன்(று)உள(து) அமரர் அனைவரும் நோற்ப(து) உரைக்குவன் உவந்துகேட் டிடுமின்.]

இ — ள்: நன்று என முகமும் இதயமும் மலர்ந்து — நல்லதென்று முகமும் மனமுமொருசேர விளக்கமுடையனவாகி, நயன நீர் பொழிதர இருந்து — கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரியச் (சிவத்தியானத்தில்) இருந்து (அதன் பின்னர்), முக் குறும்பை வென்ற மா தவத்தீர் — காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூவகைக் குற்றங்களையும் வென்ற பெருந்தவத்தையுடைய முனிவர்காள், நீவிர் இது கேட்க முயன்றது — நீங்களிதனைக் கேட்கும்படி முயற்சிசெய்த செயலானது, முன் இழைத்த தவப் பயன் — முன்னே (சென்ற பல பிறவிகள் தோறும்) செய்த தவத்தின் பலனுகும், விடை உயர்த்து அருளும் விமலனுக்கு உரிய நல் விரதம் ஒன்று உளது — இடபக்கொடியையுயர்த்தியருளிய மலரகிதராகிய சிவபிரானுக்குரிய நல்ல விரதமொன்றுண்டு, அமரர் அனைவரும் நோற்பது — (அது) தேவர்களெல்லோராலும் அனுஷ்டிக்கப்படுவது, உரைக்குவன் உவந்து கேட்டிடுமின் — கூறுவேன் மகிழ்ச்சியுடன் சிரவணஞ் செய்மின் எ-று.

ஏ - அசை. (14)

மின்னேநேர் சடிலத் தவிர்மதிக் கொழுந்து
மிலைச்சிய சிவனிசிப் பெருமை
அன்னவூர் தியுமோ ராயிரங் கவைநா
வனந்தனு மறைந்திடற் கரிதான்

மன்னுமா தவஞ்செய் நந்திவா னவற்கு
வழுவையு முழுவையு முரித்தோன்
முன்னைநா ளுரைத்த தென்னெரு நாவான்
மொழிந்திட முடியுமோ முடியா.

[மின்னைநேர் சடிலத்(து) அவிர்மதிக் கொழுந்து மிலைச்சிய சிவன்நிசிப் பெருமை அன்னவூர் தியும்ஓர் ஆயிரம் கவைநா அனந்தனும் அறைந்திடற்(கு) அரிதால் மன்னுமா தவஞ்செய் நந்திவா னவற்கு வழுவையும் உழுவையும் உரித்தோன் முன்னைநாள் உரைத்த(து) என்ஒரு நாவால் மொழிந்திட முடியுமோ முடியா.]

இ—ள்: மின்னை நேர் சடிலத்து அவிர் மதி கொழுந்து மிலைச்சிய சிவன்நிசிப் பெருமை — மின்னலையொத்த சடைமுடியின்கண்ணே ஒளிபொருந்திய இளஞ் சந்திரனைத் தரித்த சிவபெருமானது திருவிரவின் மான்மியத்தை, அன்ன வூர்தியும் — அன்னவாகனராகிய பிரமதேவரும், ஓர் ஆயிரம் கவை நா அனந் தனும் — ஆயிரம் கவர்பொருந்திய நாக்களையுடைய ஆதிசேடனும், அறைந் திடற்கு அரிது — எடுத்தளவுபடுத்திக் கூறுதல் கூடாது, மன்னு மா தவம் செய் நந்திவானவற்கு — நிலைபெற்ற பெரிய தவத்தைச்செய்த நந்தியந்தேவ ருக்கு, வழுவையும் உழுவையும் உரித்தோன் — யானையையும் புலியையுமுரித் தருளிய சிவபெருமான், முன்னை நாள் உரைத்தது — பண்டைக்காலத்துத் திருவாய் மலர்ந்தருளியது, என் ஒரு நாவால் மொழிந்திட முடியுமோ முடியா — (அதனை) என்னுடைய ஒரு நாவினால் கூறிமுடிக்கவியலுமோ இய லாது என்று. (15)

ஆய் - அசைநிலை.

உலகுயிர் பிரமன் படைப்பதுந் திருமா
லுயிர்த்தொகை காப்பது முலகி
லலகிலா வளம்பெற் றியக்கர்கோ னளகை
யளிப்பதுங் களிப்பொடிந் திரன்ரு
னிலகுபொன் னுலகம் புரப்பது மதிய
மிரவிசெந் தழற்கிறை யிவர்க
டலைமைபெற் றதுவுஞ் சிவநிசி விரதந்
தனையிழைத் தெனவுளத் துணர்வீர்.

[உல(கு)உயிர் பிரமன் படைப்பதும் திருமால் உயிர்த்தொகை காப்பதும் உலகில் அலகிலா வளம்பெற்(று) இயக்கர்கோன் அளகை அளிப்பதுங் களிப்பொ(டு) இந்திரன்ரு னிலகுபொன் உலகம் புரப்பதும் மதியம் இரவிசெந் தழற்(கு) இறை இவர்கள் தலைமைபெற் றதுவும் சிவநிசி விரதந் தனை இழைத்(து) எனஉளத்(தி) உணர்வீர்.]

இ—ள்: உலகு உயிர் பிரமன் படைப்பதும் — உலகத்தையும் உயிர்களை யும் பிரமதேவர் சிருட்டிப்பதும், திருமால் உயிர்த்தொகை காப்பதும் — விஷ்ணுதேவர் ஆன்மாக்களையெல்லாமிரட்சிப்பதும், உலகில் அலகிலா வளம்

பெற்று இயக்கர்கோன் அளகை அளிப்பதும்—உலகின்கண்ணேயளவற்ற பெருஞ் செல்வத்தையனடந்து இயக்கர்களுக்குத் தலைவனுகிய குபேரன் அழகாபுரியைப் பரிபாலிப்பதும், களிப்பொடு இந்திரன்ருன் இலகு பொன் உலகம் புரப்பதும் — மகிழ்ச்சியுடனே தேவேந்திரன் விளங்குகின்ற சுவர்க்கலோகத்தை ஆளுவதும், மதியம் இரவி செம் தழற்கு இறை இவர்கள் தலைமை பெற்றதுவும் — சந்திரனுஞ் சூரியனும் அக்கினிதேவனும் ஆகிய இவர்கள் முதன்மையடைந்ததுவும், சிவ நிசி விரதம் தனை இழைத்து என உளத்து உணர்வீர்—சிவராத்திரி விரதம் அனுஷ்டித்தமையினலென்று மனத்திலறிந்துகொள்ளக் கடவீர் எ-று.

கூறுநான் மறையோர்க் கிருநிலம் பசும்பொற்
குவைபசுக் கோடிநல் கிடினும்
வேறுவே றுரைத்த விரதநோற் றிடினும்
விரியுலாப் புரவியின் வேள்வி
நூறுசெய் திடினும் புரளவெண் டரள
நுரைத்திரை கொழித்திடுங் கங்கை
யாறுசூழ் கிடினுஞ் சிவநிசி நோற்போர்
பெறுபய னடைதன்மற் றரிதால்.

[கூறுநால் மறையோர்க்(கு) இருநிலம் பசும்பொன் குவைபசுக் கோடிநல் கிடினும் வேறுவே(று) உரைத்த விரதம்நோற் றிடினும் விரிஉலாப் புரவியின் வேள்வி நூறுசெய் திடினும் புரளவெண் தரளம் நுரைதிரை கொழித்திடும் கங்கை ஆறுசூழ் கிடினும் சிவநிசிநோற்போர் பெறும்பயன் அடைதல்மற்(று) அரிதால்.]

இ — ள்: கூறு நால் மறையோர்க்கு — (விதந்து) பேசப்படுகின்ற நான்கு வேதங்களையுமறிந்த பிராமணர்களுக்கு, இரு நிலம் — பெருமை பொருந்திய பூமியையும், பசும் பொன் குவை — பசுமையாகிய பொற்குவியல்களையும், கோடி பசு நல்கிடினும் — கோடி பசுக்களையும் (தானமாகக்) கொடுத்தாலும், வேறு வேறு உரைத்த விரதம் நோற்றிடினும் — வெவ்வேருய்க் கூறப்படுகின்ற பல விரதங்களையுமனுஷ்டித்தாலும், விரி உலா புரவியின் வேள்வி நூறு செய்திடினும் — பரந்த பிடர்மயிரையுடைய குதிரைகளைக்கொன்று செய்யப்படுகின்ற நூறு அசுவமேதயாகங்களைச் செய்தாலும், வெண் தரளம் புரள நுரைத்திரை கொழித்திடும் கங்கையாறு சூழ்கிடினும் — வெள்ளிய முத்துக்கள் புரளும்படி நுரைபொருந்திய திரைகளை வீசுகின்ற கங்காநதியிலே ஸ்நானஞ் செய்தாலும், சிவநிசி நோற்போர் பெறுபயன் அடைதல் அரிது — சிவராத்திரி விரதத்தையனுஷ்டிப்பவர்கள் அடைகின்ற பயனைப் பெறுவதரிதாகும் எ-று: மற்று, ஆல் - அசைகள். (17)

அந்தண ரரசர் வணிகர்வே ளாள
ராதியா விழிகுலத் துதித்த
வெந்தொழி லாள ரந்தமா விந்த
விரதமே நோற்றிடி லவர்தா

மிந்திர னயன்மா லிமையவர் முனிவர்
யாவரு மிறைஞ்சிநின் றேத்தக்
கந்தடு களிறன் றுரித்துமெய் தரித்த
கண்ணுதற் கடவுளிற் பொலிவார்.

[அந்தணர் அரசர் வணிகர்வே ளாளர் ஆதியா இழிகுலத்(து) உதித்த வெந்தொழி லாளர் அந்தமா இந்த விரதமே நோற்றிடில் அவர்தாம் இந்திரன் அயன்மால் இமையவர் முனிவர் யாவரும் இறைஞ்சிநின்(று) ஏத்தக் கந்(து)அடு களி(று) அன்(று) உரித்துமெய் தரித்த கண்ணுதல் கடவுளில் பொலிவார்.]

இ — ள்: அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் ஆதியா — பிராமணரும் அரசரும் வைசியரும் சூத்திரருமுதலாக, இழிகுலத்து உதித்த வெம்தொழி லாளர் அந்தமா — எளிய குலங்களிலே தோன்றிய சண்டாளரீறுதியாக, இந்த விரதமே நோற்றிடில் — இச்சிவராத்திரி விரதத்தையநுஷ்டிப்பாராகில், அவர் தாம் — அவர்கள், இந்திரன் அயன் மால் இமையவர் முனிவர் யாவரும் இறைஞ்சி நின்று ஏத்த — இந்திரன் பிரமா விஷ்ணு தேவர்கள் முனிவர்க ளாகிய எல்லோரும் வணங்கிநின்று துதிக்க, கந்து அடு களிறு அன்று உரித்து மெய் தரித்த — கட்டுந் தறியை முரிக்கின்ற யானையை யந்நாளிலுரித்துந் தமது திருமேனியிலணிந்தருளிய, கண்ணுதற் கடவுளிற் பொலிவார் — நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானது திருவுருவத்தைப்பெற்று வாழ்வார்கள் என்று. (18)

ஆவினைப் புரிநூ லணிதரு மருமத்
தருமறைக் கிழவரைக் கருங்கண்
மாவினை யளித்த கடலமு தனைய
மழலைமென் மொழிச்சிறு மகாரைக்
காவினைப் பொருவுங் கருங்குழற் செவ்வாய்க்
கன்னிய ரிவர்களைச் செகுத்த
தீவினை யனைத்தும் பரிதிமுன் னிருள்போற்
சிவநிசி நோற்றிடிற் றீரும்.

[ஆவினைப் புரிநூல் அணிதரும் மருமத்(து) அருமறைக் கிழவரைக் கருங்கண் மாவினை அளித்த கடல்அமு(து) அனைய மழலைமென் மொழிச்சிறு மகாரைக் காவினைப் பொருவும் கருங்குழல் செவ்வாய்க் கன்னியர் இவர்களைச் செகுத்த தீவினை அனைத்தும் பரிதிமுன் இருள்போல் சிவநிசி நோற்றிடின் றீரும்.]

இ — ள்: ஆவினை — பசுக்களையும், புரி நூல் அணிதரும் மருமத்து அரு மறை கிழவரை — முப்புரி நூலணிந்த மார்பையுடைய அரிய வேதங்களையோது கின்ற பிராமணர்களையும், கரும் கண் மாவினை அளித்த கடல் அமுது அனைய —

கரிய கண்களையுடைய இலக்குமிதேவியைப் பெற்ற திருப்பாற்கடலிற்றோன்றிய வமுதத்தையொத்த, மழலை மென் மொழி சிறு மகாரை — நிரம்பாமென் சொல்லையுடைய சிறுகுழந்தைகளையும், காவினை பொருவும் கரும் குழல் செவ் வாய் கன்னியர் இவர்களை — சோலையையொத்த கரிய கூந்தலையுஞ் சிவந்த வாயையுமுடைய பெண்களையுமாகிய இவர்களை, செகுத்த தினை அனைத்தும் — கொன்ற தீச்செயல்கள் யாவும், சிவநிசி நோற்றிடில் — சிவராத்திரி விரதத்தை யனுட்டிப்பின், பரிதி முன் இருள்போல் திரும் — சூரியனுக்கு முன்னேயழிகின்ற இருளைப்போல நீங்கும் எ-று. (19)

மறைகளிற் சாம மகங்களிற் புரவி
மகமலை களின்மக மேரு
நிறைபுன னதியிற் கங்கையோ ரைந்தாய்
நிகழ்ந்தபூ தத்திலா காய
முறைதெரி சுரரிற் கருமுகி லூர்தி
முதன்மைபெற் றுயர்ந்த வாறென்ன
வறைதரு விரத மனைத்தினு முரைக்கு
மரனிர வதிகமென் றறிமின்.

[மறைகளில் சாமம் மகங்களில் புரவி மகம்மலை களில்மக மேரு நிறைபுனல் நதியில் கங்கைஓர் ஐந்தாய் நிகழ்ந்தபூ தத்தில்ஆ காயம் முறைதெரி சுரரில் கருமுகி லூர்தி முதன்மைபெற்(று) உயர்ந்தஆ(று) என்ன அறைதரு விரதம் அனைத்தினும் உரைக்கும் அரன்இர(வு) அதிகம்என்(று) அறிமின்.]

இ — ள்: மறைகளில் சாமம் — வேதங்களுக்குள்ளே சாமவேதமும், மகங்களில் புரவிமகம் — யாகங்களுக்குள்ளே அசுவமேத யாகமும், மலைகளில் மகமேரு — பருப்பதங்களுக்குள்ளே மகாமேரு மலையும், நிறை புனல் நதியில் கங்கை — நிறைந்த சலத்தைக்கொண்ட நதிகளுக்குள்ளே கங்கைநதியும், ஓர் ஐந்தாய் நிகழ்ந்த பூதத்தில் ஆகாயம் — ஒப்பற்ற பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென ஐந்தாக விளங்குகின்ற பூதங்களுக்குள்ளே ஆகாயமும், முறை தெரி சுரரில் கரு முகில் ஊர்தி — விதிவிலக்குகளையறிந்த தேவர்களுக்குள்ளே கரிய மேகவாகனனுகிய இந்திரனும், முதன்மைபெற்று உயர்ந்தவாறு என்ன— மேன்மையடைந்துயர்ந்தாற்போல, அறைதரு விரதம் அனைத்தினும் — கூறப்படுகின்ற விரதங்களெல்லாவற்றினும், உரைக்கும் அரன் இரவு அதிகம் என்று அறிமின் — கூறப்படுகின்ற சிவராத்திரி விரதமொன்றே விசேடித்ததென்றறியக் கடவீர். எ.று. (20)

மற்றொரு விரதஞ் சிவநிசிக் கிணையா
மதிப்பது மாண்டுமீண் டுதித்துப்
பெற்றனை தொழில்க ளியற்றிநின் றுழலும்
பிரமன்மான் முதலிமை யவரைப்

பற்றலர் புரமோர் நொடியினி லடலே
படவட வரைகுனித் தருளுங்
கற்றையஞ் சடிலக் கண்ணுதற் கிணையென்
றறிவிலா ருரைப்பது கடுக்கும்.

[மற்(று)ஒரு விரதம் சிவநிசிக்(கு) இணையா மதிப்பது மாண்டு மீண்(டு)உ தித்துப் பெற்றன தொழில்கள் இயற்றி நின்(று) உழலும் பிரமன்மால் முதல்இமையவரைப் பற்றலர் புரம்ஓர் நொடியினில் அடலே படவட வரைகுனித் தருளும் கற்றை அம் சடிலக் கண்ணுதற்(கு) இணைஎன்(று) அறிவிலார் உரைப்பது கடுக்கும்.]

இ — ள்: மற்று ஒரு விரதம் சிவநிசிக்கு இணையா மதிப்பது — வேறெந்த விரதத்தையாவது சிவராத்திரி விரதத்துக்குச் சமமுடையதாக எண்ணுவது, மாண்டு மீண்டு உதித்து பெற்றன தொழில்கள் இயற்றி நின்று உழலும் — இறந்து பின்னும் பிறந்து தாம்பெற்ற தொழில்களைச்செய்து நின்றலைகின்ற, பிரமன் மால் முதல் இமையவரை — பிரமா விஷ்ணு முதலிய தேவர்களை, பற்றலர் புரம் ஓர் நொடியினில் அடலே பட வடவரை குனித்து அருளும் — அன்பிலிகளாகிய அசுரர்கள் வாழ்ந்த முப்புரங்களையும் கணப்பொழுதினுள்ளே சாம்பராகும்படி மகாமேருமலையை வில்லாக வளைத்தருளிய, கற்றை அம் சடில கண்ணுதற்கு இணை என்று — கூட்டமாகிய சடாமுடியையுடைய சிவபெருமானுக்குச் சமமென்று, அறிவிலார் உரைப்பது கடுக்கும் — அறிவில்லாதவர் சொல்வதையொக்கும் எ-று. (21)

அன்புளா ரன்றி யன்பிலா ரெனினு
மரனிர வினிலுண வகற்றிப்
புன்புலா லுடலம் வருந்திடத் துயில்கண்
பொருந்திடா தருச்சனை புரிந்தாற்
றுன்பநீள் பிறவிச் சுழிக்கட லழுந்தித்
துயருறுர் துறக்கமே முதலா
மின்பமார் பதத்திற் போகமார்ந் தமல
னிணைப்பதம் பெறுவரென் றிசைத்தான்.

[அன்(பு) உளார் அன்றி அன்(பு)இலார் எனினும் அரன் இர வினில்உண(வு) அகற்றிப் புன்புலால் உடலம் வருந்திடத் துயில்கண் பொருந்திடா(து) அருச்சனை புரிந்தால் துன்பம்நீள் பிறவிச் சுழிக்கடல் அழுந்தித் துயர்உறுர் துறக்கமே முதலாம் இன்பம்ஆர் பதத்தில்போகம்ஆர்ந்(து) அமலன் இணைப்பதம்பெறுவர்என்(று) இசைத்தான்]

இ — ள்: அன்புளார் அன்றி அன்பிலார் எனினும் — அன்புள்ளவர்களல்லாமல் அன்பில்லாதவர்களாயினும், அரன் இரவினில் உணவு அகற்றி — சிவராத்திரி தினத்திலே உணவையொழித்து, புன் புலால் உடலம் வருந்திட —

எளிய மாமிசத்தாலாகிய உடம்பானது வருந்தும்படி, கண் துயில் பொருந்திடாது — நித்திரை செய்யாது, அருச்சனை புரிந்தால் — சிவபூசை புரிந்தாராயின், துன்பம் நீள் பிறவி சுழி கடல் அழுந்தி துயர் உறார் — துன்பம் மிகுந்த பிறப்பாகிய சுழியைக்கொண்ட சமுத்திரத்தின்கண்ணே விழுந்து வருந்தார், துறக்கமே முதலாம் இன்பம் ஆர்பதத்தில் போகம் ஆர்ந்து—சுவர்க்கலோகம் முதலாகிய இன்பம் நிறைந்த மேலுலகங்களிற் பலவகைச் சுகங்களையுமனுபவித்து, அமலன் இணை பதம் பெறுவர் என்று இசைத்தான் — முடிவில் நிர்மலராகிய பரமசிவனது இரண்டு திருப்பாதங்களையுமடைவரென்று கூறியருளினார் எ-று. (22)

இனையன மொழிகள் கனைகட லமிழ்த
மெனச்செவிப் புலம்புக முனிவ
ரனைவரு மகிழ்ந்து மெய்ம்மயிர் பொடிப்ப
வங்கையாற் றொழுதுபைங் குவளைச்
சுனைபயில் கயிலைச் சிவநிசி விரதத்
தோற்றமு நோற்றிடு மியல்பும்
வினையக றவத்துச் சூதமா முனிவ
விரித்துரைத் தருளென விளம்பும்.

[இனையன மொழிகள் கனைகடல் அமிழ்தம் எனச்செவிப் புலம்புக முனிவர் அனைவரும் மகிழ்ந்து மெய்ம்மயிர் பொடிப்ப அம்கையால் தொழுதுபைங் குவளைச் சுனைபயில் கயிலைச் சிவநிசி விரதத் தோற்றமும் நோற்றிடும் இயல்பும் வினைஅகல் தவத்துச் சூதமா முனிவ விரித்(து) உரைத் தருள்என விளம்பும்.]

இ — ள்: இனையன மொழிகள் கனை கடல் அமிழ்தம் என செவிப்புலம் புக — இவ்வாறுகிய வார்த்தைகளெல்லாம் ஒலிக்கின்ற திருப்பாற் சமுத்திரத்திற்றோன்றிய அமுதத்தைப்போலச் செவிவழியே செல்லுதலும், முனிவர் அனைவரும் மகிழ்ந்து—(அந்நைமிசாரணிய வாசிகளாகிய) முனிவர்களெல்லோரு மானந்தமடைந்து, மெய் மயிர் பொடிப்ப அம் கையால் தொழுது — சரீர மெங்கணும் ரோமாஞ்சங்கொள்ள அழகிய கைகளைக் குவித்துத் தொழுது, பைங்குவளை சுனை பயில் கயிலை சிவநிசி விரத தோற்றமும்—பசுமையாகிய குவளை மலர்கள் பொருந்திய தடாகங்கள் விளங்குகின்ற கயிலாயகிரியின்கண்ணே யெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருவிரவிற் பொருந்திய விரதத்தினுற்பவத்தையும், நோற்றிடும் இயல்பும் — அவ்விரதத்தை யனுஷ்டிக்குமுறைமையையும், வினை அகல் தவத்து சூத மா முனிவ — தினை முழுவதும் நீங்கப்பெற்ற தவத்தான்மிக்க சூதமகாரிஷியே, விரித்து உரைத்து அருளென— விரித்துக்கூறியருளுகவென்று வேண்ட, விளம்பும் — அம்முனிவர் கூறுவாராயினார் எ-று. (23)

பெற்றுயர் கற்ப வீற்றுல கீன்ற
பிதாமக னுலந்துபே ருலக
முற்றுமற் றொடுங்கிப் பிரளயத் துயிர்கண்
முடிந்திடுங் கங்குலி னுளத்தன்
புற்றுமா மறையா கமவிதிப் படிவண்
டுழுதுதே னுண்டுபாட் டயரும்
பொற்றுணர்க் கடுக்கைத் தொடைமிடை சடிலப்
புனிதனே யருச்சனே புரிந்தாள்.

[பெற்(று)உயர் கற்ப ஈற்(று)உல(கு) ஈன்ற பிதாமகன் உலந்துபே ருலகம் முற்றும்மற்(று) ஒடுங்கிப் பிரளயத்(து) உயிர்கள் முடிந்திடும் கங்குலின்உளத்(து)அன்(பு) உற்(று)உமா மறைஆ கமவிதிப் படிவண்(டு) உழுதுதேன் உண்டுபாட்(டு) அயரும் பொன்துணர்க் கடுக்கைத் தொடைமிடை சடிலப் புனிதனே அருச்சனே புரிந்தாள்.]

இ — ள்: பெற்று உயர் கற்ப ஈற்று உலகு ஈன்ற பிதாமகன் உலத்து — உயர்வுபொருந்திய கற்பாந்தத்தில் எல்லாவுலகங்களையுஞ் சிருட்டித்த பிரம தேவரிறக்கப்பெற்று, பேருலகம் முற்றும் ஒடுங்கி — பெரியவுலகங்களெல்லாம் தங்கி, பிரளயத்து உயிர்கள் முடிந்திடும் கங்குலின் — பிரளய வெள்ளத்திலே சர்வான்மாக்களும் அழிந்தவிரவில், உமா உளத்து அன்புற்று — உமாதேவியார் திருவுள்ளத்திலே யன்புகொண்டு, வண்டு உழுது தேன் உண்டு பாட்டு அயரும் — வண்டுகள் உழக்கிநின்று தேனைப்பருகி இசைபாடுகின்ற, பொன் துணர் கடுக்கைத் தொடைமிடை சடிலப் புனிதனே—பொன்போன்ற விதழ்கள் பொருந்திய கொன்றைமலராற் சமைக்கப்பட்ட மாலையையணிந்த சடை முடியையுடைய பரிசுத்தராகிய சிவபெருமானே, மறை ஆகமவிதிப்படி — வேதாகமங்களிற் பொருந்திய விதிதவறாமல், அருச்சனே புரிந்தாள் — பூசனை செய்தனர் எ-று. (24)

மற்று - அசை.

யாமமோர் நான்குஞ் சென்றகன் றுகாந்தத்
திருட்பொழு தகன்றபி னிதழித்
தாமமார் புனைந்த சோமசே கரன்பொற்
றுளினை பணிந்தவண் றனது
வாமமா ரிமய வல்லியின் றுனையான்
வழிபடு கங்குல்வா னவரு
நாமநீர் வேலி யுலகுளோ ரெவருஞ்
சிவநிசி யெனநவின் றிடவும்.

[யாமம்ஓர் நான்கும் சென்(று)அகன்(று) உகாந்தத்(து) இருட்பொழு(து) அகன்றபின் இதழித்
தாமம்ஆர் புனைந்த சோமசே கரன்பொன் தாள்இணை பணிந்(து) அவன் றனது
வாமம்ஆர் இமய வல்லிஇன்(று) உனையான் வழிபடு கங்குல்வா னவரும்
நாமநீர் வேலி உல(கு)உளோர் எவரும் சிவநிசி எனநவின் றிடவும்.]

இ — ள் : யாமம் ஓர் நான்கும் சென்று அகன்று — நான்கு சாமங்களும் போய்க்கழிந்து, உகாந்தத்து இருட்பொழுது அகன்ற பின் — யுகமுடிவினிரவு கழிந்தபின்பு, அவன் தனது வாமம் ஆர் இமய வல்லி — அப்பெருமான்இடப் பாகத்திலெழுந்தருளிய இமயமலையரசன் புத்திரியாராகிய உமாதேவியார், இதழித் தாமம் ஆர் புனைந்த சோமசேகரன் பொன் தாள் இணை பணிந்து — கொன்றைமலர்மாலையையும் ஆத்திமாலையையுந்தரித்த சந்திரசேகரராகிய சிவ பெருமானது பொன்மயமாகிய உபயபாதங்களையும் நமஸ்கரித்து, யான் இன்று உனை வழிபடும் கங்குல் — நான் இன்றுதேவரீரை வழிபட்ட இவ்விரவை, வானவரும் நாம நீர் வேலி உலகுளோர் எவரும் — தேவர்களும் கடல்சூழ்ந்த பூமியின்கண்ணேயுள்ள மனுடர்களும் மற்றும்யாவரும், சிவநிசி எனநவின்றிட வும் — சிவராத்திரியென்றுகூறவும் எ - று. (25)

இச்சிவ நிசிநோற் றியாவரா யினுமுன்
னினையடித் தாமரை கருதிப்
பச்சிமத் தடைந்த பரிதிபூ ருவத்திற்
பருப்பதத் துதித்திடு மளவு
நச்சிநற் பூசை புரிந்தவர் முத்தி
நண்ணவும் வேண்டுமென் றிரப்ப
வுச்சியின் மணிசே ருரகபூ டணனு
முமையவட் கவ்வர மளித்தான்.

[இச்சிவ நிசிநோற்(று) யாவர்ஆ யினும்உன் இணையடித் தாமரை கருதிப்
பச்சிமத்(து) அடைந்த பரிதிபூ ருவத்தில் பருப்பதத்து உதித்திடும் அளவும்
நச்சிநல் பூசை புரிந்தவர் முத்தி நண்ணவும் வேண்டும்என்(று) இரப்ப
உச்சியின் மணிசேர் உரகபூ டணனும் உமையவட்(கு) அவ்வரம் அளித்தான்.]

இ — ள் : யாவர் ஆயினும் இச் சிவநிசி நோற்று — எச்சிறுநிலையையுடை யராயினும் இச்சிவராத்திரிவிரதத்தையனுஷ்டித்து, உன் இணை அடித் தாமரை கருதி — தேவரீரது உபயபாதாரவிந்தங்களையும் சிந்தனைசெய்து, பச்சிமத்து அடைந்த பரிதி பூருவத்தில் பருப்பதத்து உதித்திடும் அளவும் — மேற்றிசை யின் கண்ணே சென்றஸ்தமித்த சூரியன் கீழ்த்திசையின்கணுள்ள உதயகிரியிற் றோன்றுமளவும், நச்சி நல் பூசை புரிந்தவர் — அவாவுடனே நல்லசிவபூசையைச் செய்தவர்கள், முத்தி நண்ணவும் வேண்டும்என்று இரப்ப — மோக்ஷவின் பத்தைப் பெறுதலும்வேண்டுமென்று யாசிப்ப, உச்சியின் மணி சேர் உரகபூ

ணனும் — சிரசின்கண்ணே மாணிக்கரத்தினத்தைப்பொருத்திய சர்ப்பங்களையா பரணமாகவுடைய எம்பெருமானும், அவ்வரம் உமையவட்கு அளித்தான் — அவ்வரத்தையுமாதேவிக்கீந்தருளினர் எ - று. (26).

ஆதலாற் சிவராத் திரியெனு நாம
மனைவரு மறைந்திட நிகழ்ந்த
தீதலாற் பரம னிரவினிற் றோற்ற
மின்னுமோர் காரண முளதென்
றோதவா ரிதிசூ ழுலகுளோர் பொருட்டா
லுறுவர்கேட் டுவந்துள முருகச்
சூதமா முனிவன் வியாதன்முன் மொழிந்த
சொற்படி சொல்லுவான் றுணிந்தே.

[ஆதலால் சிவராத் திரிஎனும் நாமம் அனைவரும் அறைந்திட நிகழ்ந்த(து) ஈ(து)அலால் பரமன் இரவினில் தோற்றம் இன்னும்ஓர் காரணம் உள(து) என்(று) ஓதவாரிதிசூழ் உல(கு)உளோர் பொருட்டால் உறுவர்கேட்(டு) உவந்(து)உளம்உருகச் சூதமா முனிவன் வியாதன்முன் மொழிந்த சொற்படி சொல்லுவான் துணிந்தே.]

இ — ள் : ஆதலால்—ஆகியவிக் காரணத்தால், சிவராத்திரி எனும் நாமம் அனைவரும் அறைந்திட நிகழ்த்தது — சிவராத்திரியென்கின்றவித் திருப்பெயரானது யாவருஞ் சொல்லும்படி வழங்கியது, ஈது அலால் — இக்காரணமேயல்லாமல், பரமன் இரவினில் தோற்றம் — சிவராத்திரியுற்பவத்திற்கு, இன்னும் ஓர் காரணம் உளது என்று—இன்னுமொரு காரணமுள்ளதென்று, ஓதம் வாரிதி சூழ் உலகு உளோர் பொருட்டால் — நீர்நிறைந்த சமுத்திரத்தினாற் சூழப்பட்ட உலகத்தின்கணுள்ள மானுடர்களின் நிமித்தமாய், உறுவர் கேட்டு உவந்து உளம் உருக — அந்தமிசாரணியத்து முனிவர்கள் கேட்டு மனங்கசியும்படி, வியாதன்முன் மொழிந்த சொற்படி — வியாசமுனிவரானவர் தமக்கு முன்னேயுபதேசித்தவண்ணம், சூதமாமுனிவன் துணிந்து சொல்லுவான் — சூதமகாரிஷியானவர் (அப்பெருமையைத் தம்மாலளத்தலியலாததாயினும் பக்திவலிமையால்) துணிந்து சொல்வாராயினர் எ-று. (27)

ஏ - அசை.

பின்னுமோர் கற்ப விறுதியி னிரசப்
பிரசமென் கமலவீட் டிருக்கு
மன்னவா கனனு முலகுமா ருயிரு
மழிந்திடு மற்றைநா ளிருண்ட
வன்னமா முகில்க ளீண்டியோ ரேழு
மறிகட னீர்முகந் தெழுந்து
முன்னமே பொழிந்த பிரளயப் புனல்வான்
முகட்டள வளாவி முட்டியதால்.

[பின்னும்ஓர் கற்ப இறுதியின் இரசப் பிரசமென் கமல வீட்(டு) இருக்கும்
அன்னவா கனனும் உலகும்ஆ ருயிரும் அழிந்திடும் அற்றைநாள் இருண்ட
வன்னமா முகில்கள் ஈண்டிஓ ரேழும் மறிகடல் நீர் முகந்(து) எழுந்து
முன்னமே பொழிந்த பிரளயப் புனல்வான் முகட்டள(வு) அளாவி முட்டியதால்.]

இ — ள் : பின்னும் ஓர் கற்ப இறுதியின்—பின்னருமொரு (பிரம) கற்பாந்தத்தில், இரசப் பிரச மென் கமல வீட்டு இருக்கும் அன்ன வாகனனும்—இனிய தேன் நிறைந்த மிருதுவாகிய தாமரைமலரை யாசனமாகக்கொண்டெழுந்தருளியிருக்கும் அன்னத்தை வாகனமாகவுடைய பிரமதேவரும், உலகும்—(அவராற் சிருட்டிக்கப்பட்ட) உலகங்களும், ஆருயிரும்—(அவற்றில் வாழாநின்ற) நிறைவாகிய ஆன்மாக்களும், அழிந்திடும் அற்றைநாள்—அழிந்த அற்றைத்தினமாகிய (சங்கார காலத்து), இருண்ட வன்ன மா முகில்கள் ஓரேழும் ஈண்டி—கருநிறம் பொருந்திய சப்த மேகங்களுமொன்றுகத் திரண்டு, மறி கடல் நீர் முகந்து எழுந்து—திரைமறிகின்ற சமுத்திரத்தின் சலத்தைக் குடித்து மேலெழுந்து, முன்னமே பொழிந்த பிரளயப் புனல்—முன்னரே பொழிந்த பிரளயவெள்ளமானது, வான்முகட்டு அளவு அளாவி முட்டியது—ஆகாய முகடுவரையும் நிறைந்து முட்டியது எ - று. (28)

ஆல் - அசை.

ஊறிலா னுயிருக் குயிரதா யிருக்கு
மொருபொரு ளொப்புட னுயர்வு
வேறிலா வகண்ட பூரண மான
வெறுவெளி வெறுத்தெதி ரடக்கு
மாறிலா னிமய மலைமக டனைத்தன்
வாமமீ திருத்தினேன் வாழ்நா
ளீறிலா முதல்வன் யாவரு முய்ய
யோகமுற் றிருந்தன னிப்பால்

[ஊ(று)இலான் உயிருக்(கு) உயிர(து)-ஆ(ய்) இருக்கும் ஒருபொருள் ஒப்புடன் உயர்(வு)
வே(று)இலான் அகண்ட பூரணம் ஆன வெறு வெளி வெறுத்(து) எதிர் அடக்கும்
மா(று)இலான் இமய மலைமகள் தனைத்தன் வாமமீ(து) இருத்தினேன் வாழ்நான
ஈ(று)இலா முதல்வன் யாவரும் உய்ய யோகம் உற்(று)இருந்தனன் இப்பால்.]

இ — ள் : ஊறு இலான் — எவ்வகைக் குறைவுமில்லாதவரும், உயிருக்கு உயிரதாய் இருக்கும் ஒரு பொருள் — சிவான்மாக்களுக்குப் பரமான்மாவாகவிருக்கின்ற ஒரு வஸ்துவும், ஒப்புடன் உயர்வு வேறு இலான் — ஒப்புடைப் பொருளும் உயர்வுடைப் பொருளும் வேறில்லாதவரும், அகண்ட பூரணமான வெறு வெளி — கண்டிக்கப்படாது நிறைந்த சுத்தவெளியும், வெறுத்து எதிர் அடக்கும் மாறு இலான் — பகைத்து எதிர்கொண்டு தம்மை யடக்கத்தக்க பகைமையொன்றுமில்லாதவரும், இமய மலை மகள் தனை தன் வாமம் மீது

இருத்திலேன் — இமயபர்வதபுத்திரியாராகிய உமாதேவியாரை இடப்பாகத்தில் வைத்தருளியவரும், வாழ் நாள் ஈறு இலா முதல்வன் — முடிவில்லாத வாயுட்காலத்தையுடைய முதல்வருமாகிய சிவபெருமான், யாவரும் உய்ய யோகம் உற்று இருந்தனன்—எல்லாவான்மாக்களும் (பாவத்தினின்று) முய்யும் பொருட்டு யோகநிலையையடைந்திருந்தனர். இப்பால் — இதன்மேல் எ-று. (29)

கானிமிர் துளபக் கண்ணியு மணியுங்
கவின்பெறப் புனைந்திடுங் கரிய
மேனிய னளித்த சராசர மனைத்து
மீளவும் படைப்பதற் கெண்ணி
யூனிமி ருடற்செங் கட்பெ ருங்கேழ
லுருத்தரித் தாழ்ந்தபே ருலகைக்
கூனிய மருப்பிற் முங்கியப் புனலுட்
குளித்துமீ தெடுத்துயர்த் தியபின்.

[கான்நிமிர் துளபக் கண்ணியும் மணியும் கவின்பெறப் புனைந்திடும் கரிய மேனியன் அளித்த சராசரம் அனைத்தும் மீளவும் படைப்பதற்(கு) எண்ணி ஊன்நிமிர் உடல்செங் கட்பெருங் கேழல் உருத்தரித்(து) ஆழ்ந்தபேர் உலகைக் கூனிய மருப்பில் தாங்கிஅப் புனலுள் குளித்துமீ(து)எடுத்(து)உயர்த் தியபின்.]

இ — ள் : கான் நிமிர் துளபக் கண்ணியும் மணியும் கவின் பெறப் புனைந்திடும் கரிய மேனியன் — பரிமளங்கமழுகின்ற துளசிமாலையையுங் கௌத்துவமணியையும் அழகுபொருந்தும்படி தரித்த கருவண்ணராகிய மகாவிஷ்ணுமூர்த்தியானவர், அளித்த சர அசரம் அனைத்தும் மீளவும் படைப்பதற்கு எண்ணி — தாம் முன்னே காத்தருளிய இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களாகிய யாவற்றையும் பின்னருஞ் சிருட்டித்தற்கு நினைத்து. ஊன் நிமிர் உடல் செம் கண் பெரும் கேழல் உருத் தரித்து — தசைநிறைந்த உடலத்தையும் சிவந்தகண்களையுமுடைய பெரிய (வெண்) பன்றி வடிவத்தைக்கொண்டு, ஆழ்ந்த பேர் உலகை—(பிரளயசலத்திலே) யமிழ்ந்திக்கிடந்த பெரியவுலகத்தை. அப் புனல் குளித்து — அப்பிரளயவெள்ளத்திலமிழ்ந்தி, கூனிய மருப்பில் தாங்கி—வளைந்த தமது கொம்புகளினுற் சுமந்து. எடுத்து மீது உயர்த்திய பின் — தூக்கியவ் வெள்ளத்தின்மேலே யுயர்த்தியபின்பு எ-று. (30)

சரிதிசைக் கிரிக ளெட்டுமெண் டிசையிற்
றளம்பிடா வகைமுத லெட்டி
விரிகதிர்ப் பசும்பொற் கொடுமுடி விளங்கு
மேருவை யணிபெற நிறுத்திப்

பரிவுறு முயிர்க ளனைத்து மீரேழு
புவனமும் பண்டுபோற் படைத்தற்
குரியநான் முகத்துக் குரவனை விரவு
முத்தியம் போதினு ளுதவி.

[சரிதிசைக் கிரிகள் எட்டும்எண் டிசையில் தளம்பிடா வகைமுதல் நாட்டி விரிகதிர்ப் பசும்பொற் கொடுமுடி விளங்கு மேருவை அணிபெற நிறுத்திப் பரி(வு)உறும் உயிர்கள் அனைத்தும் ஈரேழு புவனமும் பண்டுபோல் படைத் தற்(கு) உரியநான் முகத்துக் குரவனை விரவும் உந்தி அம் போதினுள் உதவி.]

இ — ள் : சரி திசைக்கிரிகள் எட்டும் எண் திசையில் தளம்பிடாவகை முதல் நாட்டி — சரிந்த திக்குமலைகளெட்டையும் அட்ட திக்குகளிலுமுறுதியாக முத லில்நிறுத்தி, விரிகதிர் பசும்பொன் கொடுமுடி விளங்கும் மேருவை அணிபெற நிறுத்தி — பரந்த கிரணங்களையுடைய செம்பொற் சிகரங்கள் விளங்குகின்ற மகாமேருகிரியை யழகுதங்க நிலைப்படுத்தி, பரிவு உறும் உயிர்கள் அனைத் தும்—அன்பு பொருந்தியவான்மவர்க்கங்களெல்லாவற்றையும், ஈரேழு புவன மும்—பதினான்குலகுகளையும், பண்டுபோல் படைத்தற்கு உரிய நான்முகத்துக் குரவனை — முன்போலச் சிருட்டித்தற்கு உரிமையையுடைய நான்கு முகங்களைக் கொண்ட பிரமாவை, விரவும் உந்தியம் போதினுள் உதவி — பொருந்திய உந் தியங்கமலத்தினின்றுந் தோற்றுவித்து எ-று. (31)

பங்கயத் தயனைக் கடைக்கணித் துலகம்
பண்டுபோற் படைத்திடப் பணித்துத்
துங்கவேற் றடங்கட் டிருமகள் சுருதி
துதித்திடுந் துணைப்பதம் வருட
வெங்கண்மா மணிச்சூட் டரவணைப் புறத்து
வெண்டிரைப் பாற்கட னடுவ
ணங்கண்மா ஞால முழுது முண்டுமிழ்ந்த
வமலனங் கறிதுயில் புரிந்தான்.

[பங்கயத்(து) அயனைக் கடைக்கணித்(து) உலகம் பண்டுபோல் படைத்திடப்பணித்துத் துங்கவேற் றடங்கண் திருமகள் சுருதி துதித்திடும் துணைப்பதம் வருட வெம்கண்மா மணிச் சூட்(டு) அரவணைப் புறத்து வெண்திரைப் பாற்கடல் நடுவண் அம்கண்மா ஞாலம் முழுதும் உண் டுமிழ்ந்த அமலன் அங்(கு) அறிதுயில் புரிந்தான்.]

இ — ள் : அங்கண் மா ஞாலம் முழுதும் உண்டு உமிழ்ந்த அமலன் — அழ கிய இடமகன்ற பெரிய பூமியை முற்றவுண்டு கக்கிய நிர்மலராகிய மகாவிஷ்ணு மூர்த்தியானவர், பங்கயத்து அயனைக் கடைக்கணித்து—தாமரையாசனராகிய பிரமதேவரைத் திருக்கடைக்கணைக்சுஞ்செய்து, உலகம் பண்டுபோல் படைத் திட பணித்து — அழிந்த உலகங்களெல்லாவற்றையும் முன்போலச் சிருட்டிக்

கும்படி ஆஞ்ஞாபித்து, துங்க வேல் தடம் கண் திரு மகள் சுருதி துதித்திடும் துணை பதம் வருட — அழகுபொருந்திய வேற்படையையொத்த விசாலித்த கண்களையுடைய இலக்குமிதேவி வேதங்களினுற்றுநிக்கப்படுகின்ற உபயபாதங்களையுந் தைவர, வெம் கண் மாமணி சூட்டு அரவு அணைப்புறத்து — கொடிய கண்களையும் மாணிக்கரத்தினம் பொருந்திய உச்சியையுமுடைய சர்ப்பசயனத்தின்மேல், வெண்திரை பாற்கடல் நடுவண் — வெள்ளிய திரைகளைக்கொண்ட பாற்கடலின் மத்தியில், அறி துயில் புரிந்தான் — யோகநித்திரை செய்தருளினார் எ-று. (32)

அங்கு - அசைநிலை.

உந்தியி லுதித்த நான்மறைப் பிரம
னுரைக்குமுக் காலமு முணர்ந்து
புந்தியிற் றெளிந்தீ ரேழுல குடனே
புலவர்கந் தருவர்கிம் புருடர்
வெந்திற லரக்க ரியக்கர்வா ளசுரர்
விஞ்சையர் கருடர்பை சாசர்
முந்திய சித்தர் மனுடர்நீ டுரகர்
முனிவரர் முதன்முதற் படைத்தே.

[உந்தியில் உதித்த நால்மறைப்பிரமன் உரைக்கும்முக் காலமும் உணர்ந்து
புந்தியில் தெளிந்(து)ஈ ரேழ்உல குடனே புலவர்கந் தருவர்கிம் புருடர்
வெம்திறல் அரக்கர் இயக்கர்வாள் அசுரர் விஞ்சையர் கருடர் பைசாசர்
முந்திய சித்தர் மனுடர்நீ(டு) உரகர் முனிவரர் முதன்முதல் படைத்தே.]

இ — ள் : உந்தியில் உதித்த நால்மறைப் பிரமன் — விஷ்ணுதேவரின் கமல நாபியினின்றுந் தோன்றிய நான்கு வேதங்களையுமுணர்ந்த பிரமதேவர், உரைக்கும் முக்காலமும் உணர்ந்து — கூறப்படுகின்ற இறப்பு நிகழ் வெதிர்வென்னும் மூன்று காலங்களையுமறிந்து, புந்தியில் தெளிந்து — தமது விவேகத்திற் தெளிவடைந்து, ஈரேழு உலகுடன் — பதினான்குலகங்களையும், புலவர் கந்தருவர் கிம்புருடர் — தேவர்களையும் கந்தருவர்களையும் கிம்புருடர்களையும், வெம் திறல் அரக்கர் இயக்கர் வாள் அசுரர் — கொடிய வலிய அரக்கர்களையும் யக்ஷர்களையும் வாட்பயிற்சியைக் கொண்ட அசுரர்களையும், விஞ்சையர் கருடர் பைசாசர் — வித்தியாதரர்களையும் கருடர்களையும் பிசாசபதத்தினர்களையும், முந்திய சித்தர் மனுடர் நீடு உரகர் — முதன்மைபொருந்திய சித்தர்களையும் மனுடர்களையும் நெட்டுடலினையுடைய நாகர்களையும், முனிவரர் — முனிவர்களையும், முதன் முதல் படைத்து — முன்னரே சிருட்டித்து எ-று. (33)

ஏ - அசை.

பூதிய மைந்தி னனுபவம் பொருந்திப்
பொருவின்முக் குணங்களைத் தழுவி
யாதியிற் புகனெ கிருபதின் மேனெ
கமைந்தநூ ருயிர பேத

மோதிய யோனி நாலிடத் துதிப்பித்
தொற்றையா ழியந்தடந் தேரூர்
சோதிவா னிரவி குளிர்கதிர் மதியந்
தோற்றுவித் தனனனத் துவசன்.

[பூதியம் ஐந்தின் அனுபவம் பொருந்திப் பொருஇல்முக் குணங்களைத் தழுவி ஆதியில் புகல் நான்(கு) இருபதின் மேல்நான்(கு) அமைந்தநூ றுயிர பேதம் ஓதிய யோனி நால்இடத்(து) உதிப்பித்(து) ஒற்றைஆ ழிஅம்தடம் தேர்ஊர் சோதிவான் இரவி குளிர்கதிர் மதியம் தோற்றுவித் தனன்அனத் துவசன்.]

இ — ள் : அனத் துவசன் — அன்னக்கொடியையுடைய பிரமதேவர், பூதியம் ஐந்தின் அனுபவம் பொருந்தி — (உலக சிருட்டிப்புக்குக் காரணமாகிய) சுத்த பஞ்சபூதங்களினதும் அனுபவம் வாய்க்கப்பெற்று, பொருவில் முக்குணங்களைத் தழுவி — ஒப்பில்லாத சாத்வீக இராசத தாமதங்களாகிய முக்குணங்களையும் பொருந்த அமைத்து, ஆதியில் புகல் — ஆதிகாலத்திலே கூறப்பட்டுள்ள, நான்கு இருபதின்மேல் நான்கு அமைந்த நூறு ஆயிர பேதம் ஓதிய யோனி — எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதமாக விரித்துரைக்கப்பட்ட ஆன்மாக்களையும், நாலு இடத்து உதிப்பித்து — அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நான்கினதும் வழியாகத் தோற்றுவித்து, ஒற்றை ஆழி அம் தடம் தேர் ஊர் சோதி வான் இரவி — ஒற்றைச் சக்கரத்தையுடைய அழகிய விசாலித்த தேரின்கண்ணேறிச் செல்லுகின்ற ஒளிபொருந்திய ஆகாய சஞ்சாரியாகிய சூரியனையும், குளிர் கதிர் மதியம் — குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய சந்திரனையும், தோற்றுவித்தனன்—சிருட்டித்தனர் எ-று. (34)

பாருல கெவையுஞ் சராசரத் தொகையும்
படைத்தபின் பண்ணவர் முதலாச்
சீருல விடுமீ ரொன்பது கணமுந்
திரண்டிரு மருங்குசே விப்பக்
கூருல வியவெள் ளுகிர்ப்பெரும் பேழ்வாய்க்
கோளரி சுமந்தபொற் றவிசிற்
காருல வியமைக் குழற்கருந் தடங்கட்
கலிமகள் கொழுநன்வீற் றிருந்தான்.

[பாருல(கு) எவையும் சராசரத் தொகையும் படைத்தபின் பண்ணவர் முதலாச்
சீர்உல விடும்சு ரொன்பது கணமும் திரண்(டு)இரு மருங்குசே விப்பக்
கூர்உல வியவெள் உகிர்ப் பெரும் பேழ்வாய்க் கோளரி சுமந்தபொன் தவிசில்
கார்உல வியமைக் குழல்கருந் தடங்கண் கலிமகள் கொழுநன்வீற் றிருந்தான்.]

இ — ள் : பாருலகு எவையும் சர அசர தொகையும் படைத்தபின் — பூமண்டலங்கள்யாவற்றையும் அவற்றில் வாழாநின்ற இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களையுஞ் சிருட்டித்தபின்மேல், பண்ணவர் முதலா சீர்உலவிடும்

சொன்பது கணமும் — தேவர்கள்முதலாகச் சிறப்புப்பொருந்திய பதினெட்டு வகைக்கணத்தவர்களும், திரண்டு இரு மருங்கு சேவிப்ப — கூடிநின்று இரண்டு பக்கங்களினுஞ் சேவைபுரிய, கூர் உலவிய வெள் உகிர் — கூர்மைதங்கிய வெள்ளிய நகங்களையும், பெரும் பேழ்வாய் — பெரிய பிளர்ந்த வாயையுமுடைய, கோளரி சுமந்த பொன் தவிசில் — சிங்கங்களினுலே தாங்கப்பெற்ற அழகிய ஆசனத்தின்மேல், கார் உலவிய மைக்குழல் — கருமையமைந்த மேகத்தையொத்த கூந்தலையும், கரும் தடம் கண் — கரிய விசாலித்த கண்களையுமுடைய, கலிமகள் கொழுநன் வீற்றிருந்தான் — சரசுவதிநாயகராகிய பிரமதேவர் வீற்றிருந்தனர் எ-று. (35)

பின்னரோர் தினத்திற் முன்வகுத் தமைத்த
பேருல கினத்தையு நோக்கச்
சொன்னமா கணங்கள் சூழ்வர வெழுந்து
துலங்குமே லுலகுபா தலங்கள்
பொன்னவிர் குடுமிப் பூதர முதலாப்
போயவன் கண்டுடல் புளகித்
தென்னினு முதல்வ ரினிப்பிற ரொருவ
ரிலரென விருஞ்செருக் குற்றே.

[பின்னர் ஓர் தினத்தில் தான்வகுத்(து) அமைத்த பேருல(கு) அினத்தையும் நோக்கச் சொன்னமா கணங்கள் சூழ்வர எழுந்து துலங்கும்மேல் உலகுபா தலங்கள் பொன் அவிர் குடுமிப் பூதரம் முதலாப் போய்அவன் கண்(டு)உடல் புளகித்(து) என்னினும் முதல்வர் இனிப்பிறர் ஒருவர் இலர்என இரும்செருக்குற்றே.]

இ — ள் : பின்னர் ஓர் தினத்தில் — பின்பு வேறொருதினத்திலே, அவன் தான் வகுத்து அமைத்த பேருல்கு அினத்தையும் நோக்க — அப்பிரமதேவர் தாம் வகைப்படச்சிருட்டித்த பெரியவுலகங்கள்யாவையுங் காணும்பொருட்டு, சொன்ன மா கணங்கள் சூழ்வர எழுந்து போய் — கூறிய பதினெண்கணத்தலைவர்களுந் தம்மைச்சுற்றிவர எழுந்து புறப்பட்டு, பொன் அவிர் குடுமி பூதரம் முதலா — பொன்னலமைந்துவிளங்குகின்ற சிகரங்களையுடைய மகாமேருகிரி முதலாக, துலங்கு மேல் உலகு பாதலங்கள் — விளங்குகின்ற சுவர்க்காதிமேலேழுலகங்களையும் அதலாதிகீழேழுலகங்களையும், கண்டு உடல் புளகித்து — பார்த்து (மகிழ்ச்சியினுல்) சரீரமானது ரோமாஞ்சங்கொண்டு, இனி என்னினும் முதல்வர் பிறர் ஒருவர் இலர் என — இனி எம்மிலும்பார்க்க மேலாகியதலைவர் வேறொருவருமில்லையென்று, ஈரும் செருக்கு உற்று — மிக்ககர்வங்கொண்டு எ-று. (36)

உளமிகத் தருக்கிக் கொண்டுமண் டலம்பண்
டுண்டவன் றொண்டையங் கனிவாய்த்
தளரிடைக் கரிய கெண்டையந் தடங்கட்
டாக்கணங் கின்றவன் சரமாத்
துளவணி மருமத் தரியர வவ்வியிற்
றுணைவிழி முகிழ்த்தறி துயில்செய்
கிளர்நெடுந் தமரத் திரைமணி கொழிக்குங்
கீரவா ரிதிமருங் கடைந்தான்.

[உளம்மிகத் தருக்கிக் கொண்டுமண் டலம்பண்(டு)உண்டவன் தொண்டை அம்கனிவாய்த்
தள ரிடைக் கரிய கெண்டைஅம் தடங்கண் தாக்(கு)அணங் கின்றவன் சரமாத்
துள(வு)அணி மருமத்(தி) அரிஅர(வு)அணையில் துணைவிழி முகிழ்த்(து)அறி துயில்செய்
கிளர் நெடுந் தமரத் திரைமணி கொழிக்கும் கீரவா ரிதிமருங்(கு) அடைந்தான்.]

இ — ள்: உளம் மிக தருக்கி கொண்டு — மனத்திலே மிகவுமகங்காரங் கொண்டு, மண்டலம் பண்டு உண்டவன் — பூமிமுழுவதையும் முன்னொருகாலிலே யுண்டருளியவரும், தொண்டை அம் கனிவாய் — கொவ்வைக்கனியையொத்த அழகிய வாயையும், தளர் இடை — அசைகின்ற (நுண்ணிய) இடையையும், கரிய கெண்டை அம் தடங்கண் — கருமையாகிய கெண்டைமற்சம் போன்ற அழகிய விசாலித்த கண்களையுமுடைய, தாக்கணங்கின் தவன் — இலக்குமி தேவிக்கு நாயகரும், துளவ சரமா அணி மருமத்து அரி — துளசியை மாலை யாகவணிந்த திருமார்பையுடையவருமாகிய விஷ்ணுமூர்த்தியானவர், அரவு அணையில் துணை விழி முகிழ்த்து அறிதுயில் செய் — சர்ப்பசயனத்தின்மேல் இரு நயனங்களையும் மூடி யோகநித்திரை செய்கின்ற, கிளர் நெடும் தமர திரை மணி கொழிக்கும் — பிரகாசம் பொருந்திய நீண்ட ஒலிநிறைந்த திரைக ளானவை இரத்தினங்களை வாரி வீசுகின்ற, கீர வாரிதி மருங்கு அடைந்தான்— திருப்பாற்கடலின் கரையையடைந்தார் எ-று. (37)

விண்ணினின் றிழிந்து முதிர்ந்தசூற் காள
மேகமொன் றமுதசா கரத்தி
னண்ணிய தெனவே நெட்டுடற் பகுவாய்
நகுமணிச் சுடிகைவா ளரவிற்
புண்ணிய முதல்வன் யோகநித் திரைமுன்
புரிவது கண்டுளம் பொருமல்
லெண்ணிநின் றடர்ந்து கண்படை வளர்வோன்
யாவனீ யெழுந்திரென் றிசைத்தான்.

[விண்ணின்நின்(று) இழிந்து முதிர்ந்தசூல் காள மேகம்ஒன்(று) அமுத்சா கரத்தில்
நண்ணிய(து) எனவே நெட்டுடல் பகுவாய் நகுமணிச்சுடிகைவாள் அரவில்
புண்ணிய முதல்வன் யோகநித் திரைமுன் புரிவது கண்(டு) உளம் பொறுமல்
எண்ணிநின்(று) அடர்ந்து கண்படைவளர்வோன் யாவன்நீ எழுந்திருஎன்(று) இசைத்தான்.]

இ —ள் : விண்ணின்நின்று இழிந்து—ஆகாயத்தினின்றுங் கீழேயிறங்கி, சூல் முதிர்ந்த காள மேகம் ஒன்று — கருமுதிர்ச்சியையுடைய காரியவொரு மேகமானது, அமுத சாகரத்தில் நண்ணியது என — திருப்பாற்சமுத்திரத்தின்கண்ணே வந்து தங்கினாற்போல, நெட்டு உடல் பகுவாய் நகுமணி சுடிகை வாள் அரவில்— நெடியவுடலையும் பிளந்தவாயையும் பிரகாசம்பொருந்திய இரத்தினத்தைக் கொண்டவுச்சியையுமுடைய ஒளிபொருந்திய சேஷனாகிய சர்ப்பத்தின்மேல், புண்ணிய முதல்வன் யோக நித்திரை முன் புரிவது கண்டு — புண்ணியசொரூபியாகிய விஷ்ணுமூர்த்தியானவர் முன்னரே யோகநித்திரைசெய்வதைப்பார்த்து, உளம் பொறுமல் எண்ணி நின்று அடர்ந்து—மனதினிடத்திற் பொறுமைதோன்றலினால் சிறிதுநேரம் ஆலோசித்து நின்று (பின்னர்) நெருங்கி, கண்படை வளர்வோன் நீ யாவன் — (இங்கு) துயில்புரிகின்ற நீ யார், எழுந்திரு என்று இசைத்தான் — எழுந்திருக்கக்கடவையென்று கூறினர் எ-று.

ஏ-அசை (38)

வேறு

அகலந்தனி லலர்மின்பயி லமலன்றுயி லொருவி
யிகல்கொண்டிவை புகல்கின்றனீ யார்நீயென வினவப்
புகலம்பர முலகும்பர்கள் புவனங்கனல் பவனஞ்
சகலந்தனி யுதவும்பொரு டானென்றுரை தந்தான்.

[அகலந்தனில் அலர்மின்பயில் அமலன்துயில் ஒருவி
இகல்கொண்(டு) இவை புகல்கின்றனீ யார்நீஎன வினவப்
புகல் அம்பரம் உல(கு) உம்பர்கள் புவனம்கனல் பவனம்
சகலம்தனி உதவும்பொருள் தான்என்(று)உரை தந்தான்.]

இ — ள் : அகலம் தனில் அலர் மின் பயில் அமலன்—திருமார்பின்கண்ணே கமலாசனியாகுமிலக்குமி வாசஞ்செய்கின்ற மலரகிதராகிய விஷ்ணுமூர்த்தியானவர், துயில் ஒருவி — தமது யோகநித்திரையைவிட்டெழுந்து, இகல் கொண்டு இவை புகல்கின்றனீ — பகைமைகொண்டிவைகளைக்கூறுகின்றாய், நீ யார் என வினவ — நீயாரென்றுவினவுதலும், புகல் அம்பரம் உலகு உம்பர்கள் புவனம் கனல் பவனம் சகலம் — கூறப்படுகின்ற திக்கு உலகம் தேவர்கள் புவனங்கள் அக்கினி வாயு முதலிய எல்லாவற்றையும், தனி உதவும் பொருள் தான் என்று உரை தந்தார் — பிறர்துணையின்றிச்சிருட்டித்த முதற்பொருள் தாமேயென்று கூறினர் எ-று. (39)

பூவுந்தியில் வந்தோனிவை புகலப்புய லனையான்
தாவுந்திரை தவழுங்கட றரையெண்டிசை வரைபார்
மேவும்பல வுயிரும்பர்கள் விதியிங்குனை முதன்மற்
றியாவுந்தரு பரதத்துவன் யானென்றுரை செய்தான்.

[பூஉந்தியில் வந்தோன்இவை புகலப்புயல் அனையான்
தாவும்திரை தவழும்கடல் தரைஎண்திசை வரைபார்
மேவும்பல உயிர்உம்பர்கள் விதிஇங்(கு)உனை முதல்மற்(று)
யாவும்தரும் பரதத்துவன் யான்என்(று)உரை செய்தான்.]

இ — ள்: பூ உந்தியில் வந்தோன் இவை புகல — விஷ்ணுவினது கமலநாபியினின்றுந்தோற்றிய பிரமதேவரிவ்வாறுகூறுதலும், புயல் அனையான் — மேக வண்ணராகிய விஷ்ணுமூர்த்தியானவர், தாவும் திரை தவழும் கடல் — தாவிப்பாய்கின்ற திரைவீச்சைக்கொண்ட சமுத்திரங்களையும், தரை எண்திசை வரை — பூமியையும் அதனெண்டிக்கினுமுள்ள மலைகளையும், பார் மேவு பல உயிர் — அப்பூமியின்கண்ணே வாசஞ்செய்கின்ற பல்வகையான்மாக்களையும், உம்பர்கள் — தேவர்களையும், இங்கு விதி உனை முதல் மற்றுயாவும் தரும் — இங்கேதிற்கின்ற பிரமாவாகிய நீமுதலாக மற்றெப்பொருள்களையும் உண்டாக்கிய, பரதத்துவன் யான் என்று உரைசெய்தான் — மேலாகிய தத்துவத்தையுடைய தலைவன் யானேயென்று கூறினர் எ-று. (40)

மறைநாலுமென் னுளுற்றது மண்கால்புனல் விண்டூ
நிறைவாகிய பொருள்யாவுமென் னினைவின்படி படைப்பே
னிறைவாகிய பரதத்துவன் யானல்லது நீயென்
றறைவாயறி வற்றுயென வயனுங்கழ றுற்றான்.

[மறைநாலும்என் நாஉற்றது மண்கால்புனல் விண்தீ
நிறைவாகிய பொருள்யாவும்என் நினைவின்படி படைப்பேன்
நிறைவாகிய பரதத்துவன் யான்அல்லது நீஎன்(று)
அறைவாய்அறி(வு) அற்றுய்என அயனும்கழ றுற்றான்.]

இ — ள்: மறை நாலும் என் நாவுற்றது—இருக்கு யசுர் சாமம் அதர்வணமாகிய நான்கு வேதங்களும் என்நாவினின்றுந்தோன்றின, மண் கால் புனல்விண் தீநிறைவாகிய பொருள் யாவும்—பிருதிவியும் வாயுவும் சலமும் ஆகாயமும் அக்கினியுமாகிய பஞ்சபூதங்களின் நிறைவாகிய வெப்பொருள்களையும், என் நினைவின்படி படைப்பேன் — எனதெண்ணத்தின்படியே சிருஷ்டிக்கவல்லேன், ஆதலினால், நிறைவாகிய பரதத்துவன் யான் அல்லது—சர்வவல்லமையும் நிறைந்த மேலாகியதத்துவத்தையுடையவன் யானேயல்லாமல், நீ என்று அறைவாய் அறிவற்றாய் என — நீ (பதிப்) பொருளென்றுகூறுகின்றனை யறிவிலியேயென்று, அயனும் கழறுற்றான் — பிரமதேவருங்கூறினர் எ-று. (41)

அக்காலையி லிருவோரையு மடர்மாயை மறைக்கப்
புக்காருணர் வில்லாரமர் பொருவான்முயல் பொழுதிற்
கைக்கார்முக முனிவுற்றெதிர் கண்ணன்குனி வித்துத்
திக்காணைகள் வெருவும்படி சிறுநாணொலி செய்தான்.

[அக்காலையில் இருவோரையும் அடர்மாயை மறைக்கப்
புக்கார்உணர்(வு) இல்லார்அமர் பொருவான்முயல் பொழுதில்
கைக்கார்முகம் முனி(வு)உற்(று)எதிர் கண்ணன்குனி வித்துத்
திக்(கு)ஆணைகள் வெருவும்படி சிறுநாண்ஒலி செய்தான்.]

இ — ள் : அக்காலையில் இருவோரையும் அடர் மாயை மறைக்க — அச் சமயத்திற் பிரம விஷ்ணுக்களிருவரையும் நிறைந்த மாயை மறைவு செய்தலி னால், உணர்வு இல்லார் அமர்பொருவான் புக்கார் முயல் பொழுதில் — சுத்த வறிவில்லாதவர்களா யுத்தஞ்செய்தற்குச் சென்று முயன்ற சமயத்தில், எதிர் கண்ணன் முனிவு உற்று கைக்கார்முகம் குனிவித்து — எதிர்நின்ற விஷ்ணுமூர்த்தி யானவர் கோபங்கொண்டு தமது திருக்கரத்தின்கண்ணேயுள்ள (சார்ங்கமென் னும்) வில்லை வளைத்தருளி, திக்கு ஆணைகள் வெருவும்படி சிறு நாண் ஒலி செய் தான் — திக்கு யானைகளெல்லாமஞ்சும்படி தமது வில்நாணினின்றுஞ் சிறிது தொனியை விளைத்தனர் எ-று. (42)

வலிசேர்புய நெடுமால்கர மருவுங்கொடு மரநா
ணொலியாலர வரசும்பர்க ளுடனுட்கிட வுவரார்
கலியார்கடை யனல்கால்கிளர் காலங்கள் கடுப்பச்
சலியாதட லுடனின்றடு சரமாரி பொழிந்தான்.

[வலிசேர்புய நெடுமால்கரம் மருவும்கொடு மரநாண்
ஒலியால் அரவர(சு) உம்பர்களுடன்உட்கிட உவர்ஆர்
கலிஆர்கடை அனல்கால்கிளர் காலங்கள் கடுப்பச்
சலியா(து)அடல் உடன்நின்(று)அடு சரமாரி பொழிந்தான்.]

இ — ள் : வலி சேர் புய நெடு மால் — வலிமை தங்கிய புயங்களையுடைய நெடிய மகாவிஷ்ணுமூர்த்தியானவர், கரம் மருவும் கொடுமர நாண் ஒலி யால் — தமது திருக்கரத்திற் பொருந்திய வில்லினது நாணோசையினால், அரவு அரசு உம்பர்கள் உடன் உட்கிட — சர்ப்பராசனாகிய ஆதிசேடனுந் தேவர்களு மொருங்கே நடுங்கும்படி, உவர் ஆர்கலி ஆர் கடை அனல் கால் கிளர் காலங் கள் கடுப்ப — உவர்க்கடலும் அக்கடலிற் பொருந்திய வடவாமுகாக்கினியும் பிரசண்டமாருதமும் நிமிர்ந்து பரவுகின்ற ஊழிக்காலத்தைப்போல, சலியாது அடல்உடன் நின்று — சோர்வில்லாமல் வலிமையுடனேநின்று, அடுசரமாரி பொழிந்தான் — கொலைசெய்கின்ற அம்புகளா மழைபோலச் செலுத்தினர் எ — று. (43)

கடுத்தானுருத் தெழுந்தாலெனக் காயுங்கத மிகவந்
தடுத்தான்முத லகிலஞ்சுடு மயிலம்புகள் பலவும்
விடுத்தானவை முடுகாதயல் விலகும்படி விரைவிற்
றடுத்தாளெரு குசைகொண்டுயர் சலசத்தவி சுறைவோன்.

[கடுத்தான் உருத்(து) எழுந்தால்எனக் காயும்கதம் மிகவந்(து)
அடுத்தான்முதல் அகிலம்சுடும் அயில்அம்புகள் பலவும்
விடுத்தான்அவை முடுகா(து)அயல் விலகும்படி விரைவில்
தடுத்தான்ஒரு குசைகொண்(டு)உயர் சலசத்தவி(சு) உறைவோன்.]

இ — ள் : கடு தான் உருத்து எழுந்தால் என — ஆலகாலநஞ்சானது மிக ஆங்கோபங்கொண்டெழுந்தாற்போல, காயுங் கதம் மிக வந்து அடுத்தான்— கொதிக்கின்ற கோபமானது மிகவும்மூளப்பெற்றவராய், முதல் அகிலம் சுடும் அயில் அம்புகள் பலவும் விடுத்தான்—முன்னாளிலே திரிபுரங்களாயுந்தகித்த கூர்மையாகிய அம்புகள் பலவற்றையுந்தெரிந்தேவினர், அவைமுடுகாது அயல் விலகும்படி — அப்பாணங்கள் தம்மிடத்திலே நெருங்காது அயலில் நீங்கும்படி யாய், உயர் சலசத் தவிசு உறைவோன் — உயர்வுபொருந்திய தாமரையாசன னாகிய பிரமதேவர், விரைவில் ஒரு குசைகொண்டு தடுத்தான்—வேகமாயொரு தருப்பைப் புல்லைக்கொண்டு தடைசெய்தனர் எ-று. (44)

சீறித்திசை முகனீடிய சிறையோதிம மதன்மே
லேறிப்பல படைமந்திர மெடுத்தோதினன் விடுத்தா
னூறித்தரு கருணைக்கட லுவணப்பு ளுகைத்தே
நூறிச்சில கணைகொண்டொரு நொடியிற்றுகள் செய்தான்.

[சீறித்திசை முகன்நீடிய சிறைஓதிமம் அகன்மேல்
ஏறிப்பல படைமந்திரம் எடுத்(து)ஓதினன் விடுத்தான்
ஊறித்தரு கருணைக்கடல் உவணப்புள் உகைத்தே
நூறிச்சில கணை கொண்(டு)ஒரு நொடியில் துகள்செய்தான்.]

இ — ள் : சீறி திசைமுகன் நீடிய சிறை ஓதிமம் அதன்மேல் ஏறி— கோபங் கொண்டு சதுர்முகனுகிய பிரமதேவர் நீண்ட சிறகுகளையுடையை அன்னவாகனத் தின்மேலேறி, பல படை எடுத்து மந்திரம் ஓதினன் விடுத்தான் — பலபடைக் கலங்களாயெடுத்து அவ்வவற்றின் மந்திரங்களைச் செபித்துச் செலுத்தினர், ஊறித்தரு கருணைக்கடல் — பெருகாநின்ற கிருபாசமுத்திரமாகிய விஷ்ணுதேவ ரானவர், உவணப்புள் உகைத்து — கருடவாகனத்தின் மேலாரோகணித்து, சில கணை கொண்டு — சில பாணங்களினால், ஒரு நொடியில் நூறித் துகள் செய் தான் — ஒரு கணப்பொழுதினுள் அவற்றையெல்லாம் அழித்துத் துகளாகச் செய்தனர் எ-று. (45)

கண்டந்தண னிவனுகமொர் கடிகைப்பொழு தளவிற்
துண்டஞ்செய்வ னென்றேழ்கடல் சுவறச்சுரர் பதற
வண்டங்கள் வெடித்துட்கிட வசனிக்குல நாணுந்
தண்டொன்றது கொண்டங்கரி தடமார்பி லெறிந்தான்.

[கண்(டு)அந்தணன் இவன்ஆகமொர் கடிகைப்பொழு(து) அளவில்
துண்டம்செய்வன் என்(று)ஏழ்கடல் சுவறச்சுரர் பதற
அண்டங்கள் வெடித்(து) உட்கிட அசனிக்குலம் நாணும்
தண்(டு)ஒன்ற து கொண்(டு)அங்(கு)அரி தடமார்பில் எறிந்தான்.]

இ — ள்: அந்தணன் கண்டு — பிரமதேவரதனைக்கண்ணுற்று, இவன் ஆகம் ஓர் கடிகை பொழுது அளவில் துண்டம் செய்வன் என்று — இவனது சரீரத்தை ஓர் கணப்பொழுதினுள்ளே யான் துணித்து விடுவேனென்று, ஏழ் கடல் சுவற — சப்தசாகரங்களும் வறப்பவும், சுரர் பதற — தேவர்கள் நடுங்கவும், அண்டங்கள் வெடித்து உட்கிட — பல அண்டங்களும் பிளந்து குலுங்கவும், அசனிக்குலம் நாணும் தண்டு ஒன்றது கொண்டு — இடியேற்றின் நெருகுதிகளெல்லாம் வெட்கமடையத்தகுந்த ஓர் தண்டாயுதத்தையெடுத்து, அங்கு அரி தட மார்பில் எறிந்தான் — அவ்விடத்தில் விஷ்ணுதேவரது விசால மாகிய திருமார்பின்கண்ணே வீசினர் எ—று. (46)

முதிரச்சின மெதிரச்சுதன் முடுகுங்கதை கடுகிற்
பிதிர்பட்டுதிர் தரமைப்புயல் பிளிறுற்றிடு மொலிபோ
லதிரப்பொரு செருவிற்றின மட்டாட லரக்க
ருதிரப்பிண முடைநாறிடு மோர்தண்டமு னுய்த்தான்.

[முதிரச்சினம் எதிர்அச்சுதன் முடுகும்கதை கடுகில்
பிதிர்பட்(டு)உதிர் தரமைப்புயல் பிளிறுற்றிடும் ஒலிபோல்
அதிரப்பொரு செருவில்தினம் அட்(டு)ஆடல் அரக்கர்
உதிரப்பிண முடைநாறிடும் ஓர்தண்டுமுன் உய்த்தான்.]

இ — ள்: சினம் முதிர — கோபமானது அதிகரிக்கவும், அச்சுதன் — திருமாலானவர், எதிர் முடுகும் கதை கடுகில் பிதிர்பட்டு உதிர்தர — எதிர்த்து நெருங்கிவருகின்ற தண்டாயுதம் கடுகைப்போலத்துகளாய்ச் சிதறவும், மை புயல் பிளிறுற்றிடும் ஒலி போல் அதிர — கருநிறமாகிய மேகங்கள் சத்திக்கின்ற தொனியைப்போல அதிர்ச்சியுண்டாகவும், பொரு செருவில் தினம் அட்டு ஆடல் அரக்கர் உதிர பிண்முடை நாறிடும் — செய்யப் படுகின்ற யுத்தத்தில் தினந்தோறுங்கொலைசெய்து வலியவரக்கர்களது இரத்தஞ் சிந்திய பிணத் தினது முடைநாற்றம் வீசுகின்ற, ஓர் தண்டு முன் உய்த்தான் — ஒரு தண்டாயுதத்தை எதிரேயெடுத்துச்செலுத்தினர் எ — று. (47)

விண்ணுடெரி கதுவத்திரை விரியுங்கடல் சுவறத்
தண்ணூர்மதி தபனன்றிசை தடுமாறினர் திரிய
மண்ணுடழி வுற்றும்பரு மடியும்படி மறமுற்
றெண்ணுதமர் பொருதிட்டன ரீரைம்பது வருடம்.

[விண்நா(டு)எரி கதுவத்திரை விரியும் கடல்சுவறத்
தண்ஆர்மதி தபனன்திசை தடுமாறினர் திரிய
மண்நா(டு)அழி(வு) உற்(று)உம்பரும் மடியும்படி மறம்உற்(று)
எண்ணு(து) அமர் பொருதிட்டனர் ஈரைம்பது வருடம்.]

இ—ள்: விண் நாடு எரி கதுவ—சுவர்க்கலோகமானது அக்கினிபற்றவும், திரை விரியும் கடல் சுவற — திரைபரவுகின்ற சமுத்திரங்கள் வற்றவும், தண் ஆர் மதி தபனன் திசை தடுமாறினர் திரிய — குளிர்ச்சிநிறைந்த சந்திரனும் சூரியனுந்தாஞ்செல்லுந்திக்கறியாது தடுமாறித்திரியவும், மண் நாடு அழிவு உற்று உம்பரும் மடியும் படி — பூமியுமழிந்து தேவர்களுமழிந்துபோகும்படி, மறம் உற்று—பகைகொண்டு, ஈரைம்பது வருடம் எண்ணுது அமர் பொருதிட்டனர்—நூறுவருடகாலம் வேறுசிந்தனையின்றி யுத்தஞ்செய்தனர் எ-று. (48)

பொருதிப்படி மலிவுற்றிடு போதிற்றிரு மார்பன்
சுருதிக்கிறை வன்சென்னி துணிக்கும்படி நெஞ்சிற்
கருதித்துணை விழியிற்கனல் காலக்கனல் காலும்
பரிதிப்படை விட்டானது பலியாதுறல் கண்டே.

[பொரு(து)இப்படி மலி(வு)உற்றிடு போதில்திரு மார்பன்
சுருதிக்(கு)இறை வன்சென்னி துணிக்கும்படி நெஞ்சில்
கருதித்துணை விழியில்கனல் காலக்கனல் காலும்
பரிதிப்படை விட்டான்அது பலியா(து)உறல் கண்டே.]

இ—ள்: பொருது இப்படி மலிவு உற்றிடு போதில் — எதிர்த்து இவ்விதமாகப்போர்புரியுஞ்சமயத்தில், திருமார்பன் — இலக்குமியை மார்பகத்திற் கொண்டதிருமாலானவர், சுருதிக்கு இறைவன் சென்னி துணிக்கும்படி நெஞ்சில் கருதி — சதுர்வேதங்களுக்குந்தலைவராகிய பிரமதேவரது சிரசைவெட்டும்படி மனத்திற் சிந்தித்து, துணைவிழியில் கனல் கால — இரண்டுகண்களினின்று மக்கினியானதுசொலிக்க, கனல் காலும் பரிதிப்படை விட்டான் — அக்கினியைக்கக்குகின்ற சக்கராயுதத்தைச்செலுத்தினர், அது பலியாது உறல் கண்டு—அப்படைக்கலமொன்றுஞ்செய்யாமையைக்கண்டு எ-று. (49)

குரமாமுகத் துருமேலினிக் கொள்வான் கொதித்தேதன்
சரமானதங் கெடுத்தேவினன் றனியாடல்விற் குனித்தே
திரமாமுக மொருநான்குள செழுநான்மறை யவன்றன்
வரமார்கணை விடுத்தான்வளர் வடவைக்கனன் மான.

[குரமாமுகத்(து) உருமேல்இனிக் கொள்வான் கொதித்தேதன்
சரம்ஆன(து)அங்(கு) எடுத்(து) ஏவினன் தனிஆடல்வில் குனித்தே
நிரமாமுகம் ஒருநான்(கு)உள செழுநால்மறை யவன்தன்
வரம்ஆர்கணை விடுத்தான்வளர் வடவைக்கனல் மான.]

இ — ள்: இனி மேல் குரமாமுகத்து உரு கொள்வான் கொதித்து — இனிமேற்கர்க்கியவதாரங்கொள்பவராகிய விஷ்ணுமூர்த்தியானவர் கோபமிகப்பெற்று, தனி ஆடல் வில் குனித்து — ஒப்பில்லாத வலிய (சார்ங்கம்) என்னும் வில்லேவளைத்து, தன் சரம் ஆனது அங்கு எடுத்து ஏவினன் — தமது நாராயணாஸ்திரத்தை ஆங்கேயெடுத்துச் செலுத்தினர், நிர மா முகம் ஒரு நான்கு உள செழு நால் மறையவன் — உறுதியாகிய நான்கு முகங்களையுடைய பொருள் விரிந்த சதுர்வேதங்களுக்குந் தலைவராகிய பிரமதேவர், வளர் வடவைக் கனல் மான — பொங்கியெழும்புகின்ற வடவாமுகாக்கினியையொப்ப, தன் வரமார் கணை விடுத்தான் — தமது வரப்படைக்கலமாகிய பிரமாஸ்திரத்தைச் செலுத்தினர் எ — று. (50)

ஏ — அசை.

பெண்டான்முடி கொண்டானிடம் பெற்றுனுத லிற்றீக்
கண்டானுறு மெண்டோளிறை கண்டானகன் மண்டா
னுண்டானுறு நுண்டாதித ழொண்டாமரை யுறைவோன்
றண்டானுதி வண்டான்முதிர் சமரம்பொரு தமரம்.

[பெண்தான்முடி கொண்டான்இடம் பெற்றுன்றுத லில்தீக்
கண்தான்உறும் எண்தோள்இறை கண்டான்அகல் மண்தான்
உண்டான்உறு நுண்தா(து)இதழ் ஒள்தாமரை உறைவோன்
தண்டால்நுதி வண்டால்முதிர் சமரம்பொரு தமரம்.]

இ — ள்: அகல் மண் தான் உண்டான் — விசாலமாகிய பூமியையுண்டருளிய விஷ்ணுதேவரும், நுண் தாது உறு இதழ் ஒள் தாமரை உறைவோன் — நுண்ணிய பராகத்தைக்கொண்ட இதழ்களமைந்த ஒளிபொருந்திய தாமரைமலரில் வாசஞ்செய்பவராகிய பிரமதேவரும், தண்டால் — தண்டாயுதத்தினாலும், நுதி வண்டால் — கூரிய அம்புகளினாலும், முதிர் சமரம் பொரு தமரம் — மிக்கயுத்தஞ் செய்கின்றதினாலுண்டாகிய ஆரவாரத்தை, பெண்தான் முடி கொண்டான் — கங்காதேவியைச் சடையின் கண்ணேதரித்தருளியவரும், இடம் (பெண்) பெற்றுன் — இடப்பாகத்தே உமாதேவி

யாரை வைத்தருளியவரும், நுதலில் தீ கண் உறும் எண் தோள் இறை கண்டான் — திருநெற்றியில் அக்கினிக்கண்ணைக்கொண்ட எட்டுத் திருப்புயங் களையுடைய தலைவருமாகிய சிவபெருமான் திருநோக்கஞ் செய்தனர் எ — று. (51)

கடுவெஞ்சின மொடுதம்படை விடுகின்றனர் கடிதின்
றடுவெங்களி மிசைதுஞ்சுவ ரரியம்புய ரெனவே
சுடுவெங்கனல் சிகைகொண்டெழு சுடரின்றிரள் வடிவாய்
நடுநின்றனன் மதியம்பொதி நளிர்செஞ்சடை முதல்வன்.

[கடுவெம்சின மொடுதம்படை விடுகின்றனர் கடி(து)இன்(று)
அடுவெம்களம் மிசைதுஞ்சுவர் அரிஅம்புயர் எனவே
சுடுவெம்கனல் சிகைகொண்(டு)எழு சுடரின்திரள் வடிவாய்
நடுநின்றனன் மதியம்பொதி நளிர்செம்சடை முதல்வன்.]

இ — ள்: அரி அம்புயர் — விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும், சுடுவெம் சினமொடு தம் படை விடுகின்றனர் — மிக்க கோபத்தோடு தமது படைக் கலங்களைச் செலுத்துகின்றனர், கடிது இன்று அடு வெம் களமிசை துஞ்சுவர் என — வேகமாயித்தினத்தில் கொலைத்தொழிற்குரிய கொடிய யுத்த களத் திலே இறந்துவிடுவார்களென்று (திருவுளங்கொண்டு), சுடு வெம் கனல் சிகை கொண்டு எழு சுடரின் திரள் வடிவாய் — சுடுகின்ற கொடியவக்கினி யானது கிளர்த்தெழுகின்ற சுவாலை வடிவாய், நளிர் மதியம் பொதி செம் சடை முதல்வன் — குளிர்ந்த சந்திரனைத் தாங்கிய சிவந்த சடைமுடியை யுடைய சிவபெருமான், நடு நின்றனன் — (அவ்விருவருக்கும்) நடுவே தோன்றி நின்றனர் எ — று. (52)

ஏ — அசை.

எடுக்குங்குட மாதத்தினி லிலகும்பிறை குறையத்
தொடுக்குந்திதி பன்னென்கெனச் சொல்லுஞ்ச துர்த்தசியி
னடுக்கங்குலி னப்பேரொளி நண்ணுற்றபி னன்னேர்
விடுக்கும்படை நீருயவை வெந்திட்டன மாதோ.

[எடுக்கும்குட மாதத்தினில் இலகும்பிறை குறையத்
தொடுக்குந்திதி பன்ன(கு)எனச் சொல்லுஞ்ச துர்த்தசியில்
நடுக்கங்குலின் அப்பேர்ஒளி நண்ணுற்றபின் அன்னேர்
விடுக்கும்படை நீருய்அவை வெந்திட்டன மாதோ.]

இ — ள்: எடுக்கும் குட மாதத்தினில்—(வியந்து) எடுத்துக்கூறப்படுகின்ற மாசிமாதத்தில், இலகும் பிறை குறையத் தொடுக்கும் திதி பன்னன்கு எனச் சொல்லும் சதுர்த்தசியில் — விளங்குகின்ற சந்திரன் கலைகள் குறைந்துவரும

பரபக்கத்துப் பதிஞன்காந்திதியாகச் சொல்லப்படுஞ் சதுர்த்தசிதினத்தில், நடுக்கங்குவில் அப்பேரொளி நண்ணுற்றபின் — நடுவிரவில் அந்தப்பெரிய அக்கினிச்சுவாலையானது தோன்றிய பின்னர், அன்னேர் விடுக்கும் படைநீறும் அவை வெந்திட்டன — அப்பிரமவிஷ்ணுக்கள் செலுத்திய படைக்கலங்கள் வெந்து நீறுயின எ-று.

மாதோ-ஈற்றசை. (53)

வேறு

நின்மலே தனக்கு மூத்த நீலமா மலேக்கும் வேதப்
பொன்மலே தனக்கு நாப்பட் புரைதவிர் பதும ராக
மன்மலே நின்ற தென்ன மாறுகொண் டவர்தம் மிற்ருஞ்
சொன்மலே வுருத வண்ணத் தோன்றிய சுடரைக் கண்டார்.

[நின்மலே தனக்கு மூத்த நீலமா மலேக்கும் வேதப்
பொன்மலே தனக்கும் நாப்பண் புரைதவிர் பதும ராக
மன்மலே நின்ற(து) என்ன மாறுகொண்(டு) அவர்தம் மில்தாம்
சொல்மலே(வு) உருத வண்ணம் தோன்றிய சுடரைக் கண்டார்.]

இ — ள் : நின்மலே தனக்கு மூத்த நீல மா மலேக்கும்—உமாதேவியாருக்கு முன்தோன்றிய விஷ்ணுமூர்த்தியாகிய நீலமலேக்கும், வேதப் பொன்மலே தனக்கும் நாப்பண் — சதுர்வேதங்களேயுமறிந்த பிரமதேவராகிய பொன்மலேக்கும் நடுவணுக, புரை தவிர் பதுமராக மன் மலே நின்றது என்ன—குற்றமற்ற நீலே யாளை பதுமராக மலேயொன்று நின்ருற்போல, மாறுகொண்டு அவர் தம் மில் தாம் சொல் மலேவு உருத வண்ணம் — மாறுபாடாக அவ்வரிபிரமர்கள் தமக்குள்ளேதாம் வாதஞ்செய்யாவண்ணம், தோன்றிய சுடரை கண்டார்— தோன்றிய அக்கினிப்பிழம்பைக் கண்டனர் எ-று. (54)

பங்கயத் தயன்மால் விண்ணேர் பார்த்தகட் புலனுக் கெட்டா
தங்கவர் மனத்தி னுலு மளவிடற் கரிய தாகிச்
செங்கதிர்ப் பரிதி கோடி திரண்டொரு வடிவாய்க் கூடிப்
பொங்கொளி விரித்தா லென்னப் பொலிந்தபே ரொளியை நோக்கி.

[பங்கயத்(து) அயன்மால் விண்ணேர் பார்த்தகண் புலனுக்(கு) எட்டா(து)
அங்(கு) அவர் மனத்தினுலும் அளவிடற்(கு) அரிய(து) ஆகிச்
செங்கதிர்ப் பரிதி கோடி திரண்(டு) ஒரு வடிவாய்க் கூடிப்
பொங்(கு) ஒளி விரித்தால் என்னப் பொலிந்தபேர் ஒளியை நோக்கி.]

இ — ள் : பங்கயத்து அயன் மால் விண்ணேர்—தாமரையாசனராகிய பிரமதேவரும் திருமாலும் மற்றைய தேவர்களும், பார்த்த கட்புலனுக்கு எட்டாது — நோக்கிய கண்பார்வைக்கப்படாது, அங்கு அவர் மனத்தினுலும்

அளவிடற்கு அரியது ஆகி — அவ்விடத்து அவர்களுடைய மனத்தாலுமளவு செய்தற்கருமையையுடையதாய், செம்கதிர் பரிதி கோடி திரண்டு ஒரு வடிவாய்க் கூடி — சிவந்த கிரணங்களையுடைய கோடி சூரியர்கள் ஒருமித்தொரே வடிவங் கொண்டு, பொங்கு ஒளி விரித்தால் என்ன — பொலிவு பொருந்திய ஒளியைக் கக்கினாற்போல, பொலிந்த பேரொளியை நோக்கி — பரந்த பெரிய சோதிவடிவத்தைப் பார்த்து எ-று. (55)

அதிசய மடைந்து நீண்ட வழற்பிழம் பாகி நிற்கு
மிதினடி முடிகள் காண்பா னிருவரு மிசைந்து தம்மிற்
கதிதரு மடிக டேடக் கடவனென் றேன மாகித்
துதிபெறு முகுந்தன் கீழேழ் தொன்னிலங் கீண்டு சென்றான்.

[அதிசயம் அடைந்து நீண்ட அழல்பிழம்(பு) ஆகி நிற்கும்
இதின்அடி முடிகள் காண்பான் இருவரும் இசைந்து தம்மில்
கதிதரும் அடிகள் தேடக் கடவன்என்(று) ஏனம் ஆகித்
துதிபெறு முகுந்தன் கீழ்ஏழ் தொல்நிலம் கீண்டு சென்றான்.]

இ — ள்: அதிசயம் அடைந்து — ஆச்சரியகரத்தராய், நீண்ட அழல் பிழம்பு ஆகி நிற்கும் இதின் அடிமுடிகள் காண்பான் — நெடிய அக்கினிப் பிழம்பாகநிற்கின்ற இச்சோதிவடிவத்தின் அடியையும் முடியையும் தேடிக் காணும்படி, இருவரும் தம்மில் இசைந்து — இருவருந் தங்களுக்குள் மன ஒற்றுமை கொண்டு, கதிதரும் அடிகள் தேட கடவன் என்று — மோட்சத்தைக் கொடுத்தற்கு வல்லதாகிய இதனது அடியை யான் தேடிக்காண்குவனென்று, துதி பெறு முகுந்தன் — (எல்லா ஆன்மாக்களாலுந்) துதிக்கப்படுகின்ற திருமாலானவர், ஏனமாகி — ஒரு (வெண்) பன்றிவடிவங்கொண்டு, கீழ் ஏழ் தொல் நிலம் கீண்டு சென்றான் — கீழேயுள்ள பழமையாகிய சப்த பாதலங்களையுங் பிளித்துச் சென்றார் எ-று. (56)

கன்னமா மதங்கள் சிந்துங் கரிமுத லாக முன்னோர்
சொன்னவா ருயிர்க ளெல்லாந் துணுக்கிடப் பவளச் செங்கா
லன்னமாய்ச் சிறைக்கான் மேரு வசைத்திடப் பறந்து வாச
வன்னவா ரிசத்தோன் வானின் மணிமுடி தேடிப் போனான்.

[கன்னமா மதங்கள் சிந்தும் கரிமுத லாக முன்னோர்
சொன்ன ஆ ருயிர்கள் எல்லாம் துணுக்கிடப் பவளச் செங்கால்
அன்னமாய்ச் சிறைக்கால் மேரு அசைத்திடப் பறந்து வாச
வன்னவா ரிசத்தோன் வானின் மணிமுடி தேடிப் போனான்.]

இ — ள்: கன்ன மா மதங்கள் சிந்தும் கரி முதலாக — கபோலத்தினின்று மதிகுமாகிய மதம்பாய்கின்ற யானைமுதலாக, முன்னோர் சொன்ன ஆர் உயிர்கள் எல்லாம் துணுக்கிட — மேலோர்களினாலே, கூறப்பட்டுள்ள நிறைவாகிய ஆன்மவர்க்கங்களெல்லாம் நடுங்கும்படி, வாச வன்ன வாரிசத்தோன் — பரி

மளங்கமழாநின்ற அழகிய தாமரையாசனராகிய பிரமதேவர், பவள செம்கால் அன்னமாய் — பவளம்போன்ற சிவந்த கால்களையுடைய அன்னவடிவாகி, சிறை கால் மேரு அசைத்திட — அதன் சிறகுகளினின்றுந் தோன்றிய காற்றுன்று மகாமேருகிரியையுமசைக்கும்படி, வானில் பறந்து — ஆகாயமார்க்கமாய்ப் பறந்து, மணி முடி தேடிப்போனன் — அழகிய முடியைத் தேடிச்சென்றார் எ-று. (57)

மருவருந் துளப மாலு மலர்மிசை வதிகின் ரோனு
மிருவரு மனந்த கால மிறந்துட லிழைத்த தன்றித்
திருவரு மழலின் செய்ய சேவடி முடிகா ணுமல்
வெருவரு மனத்த ராகி வெள்கினர் மீள்கின் றூரால்.

[மருவ ரும் துளப மாலும் மலர்மிசை வதிகின் ரோனும்
இருவரும் அனந்த காலம் இறந்(து)உடல் இழைத்த(து)அன்றித்
திருவரும் அழலின் செய்ய சேவடி முடிகா ணுமல்
வெருவரும் மனத்தர் ஆகி வெள்கினர் மீள்கின் றூரால்.]

இ — ள்: மரு வரும் துளப மாலும்—வாசனை பொருந்திய துளசிமாலையையணிந்த மகாவிஷ்ணுமூர்த்தியும், மலர் மிசை வதிகின்ரோனும் இருவரும் — தாமரை மலரின்கண்ணேயெழுந்தருளிய பிரமதேவருமாகியவிருவரும், அனந்த காலம் இறந்து உடல் இழைத்தது அன்றி — அளவற்ற காலங்கழிந்து தம்முடல்களுமிளைக்கப்பெற்றதேயன்றி, திருவரும் அழலின் செய்ய சே அடி முடி காணுமல் — அழகுதங்கிய அச்சோதிவடிவத்தினது செம்மைவாய்ந்த திருவடியையுந் திருமுடியையுங் காணுதவர்களாய், வெரு வரும் மனத்தர் ஆகி — அச்சம் பொருந்திய மனத்தையுடையவராகி, வெள்கினர் மீள்கின்றூர்—நாணமடைந்து (பாதலத்தினின்றும் ஆகாயத்தினின்றும்) மீண்டுவருகின்றூர் எ-று. (58)

ஆல் - அசை.

கூடியங் கிருவர் தாமுங் கோலநீ டொளியை நோக்கி
யாடியி னடங்கும் வெற்பி னமர்ந்துய ரன்ப ருள்ளத்
தூடிருந் தருள்வோய் நின்னை யுணர்ந்தில மெமது சென்னி
சூடியாம் வாழ வின்றுன் றுணைப்பதங் காட்டு கென்றூர்.

[கூடி அங்(கு) இருவர் தாமும் கோலம்நீ(டு) ஒளியை நோக்கி
ஆடியின் அடங்கும் வெற்பின் அமர்ந்(து)உயர் அன்பர் உள்ளத்(து)
ஊ(டு)இருந்(து) அருள்வோய் நின்னை உணர்ந்திலம் எமது சென்னி
சூடியாம் வாழ இன்(று)உன் துணைப்பதம் காட்டு கென்றூர்.]

இ — ள்: அங்கு இருவர் தாமும் கூடி — அவ்விடத்திலவ்விருவருமொருங்குகூடி, கோலம் நீடு ஒளியை நோக்கி — அழகுமிகுந்த சோதிவடிவத்தைப் பார்த்து, ஆடியின் அடங்கும் வெற்பின் அமர்ந்து — (சிறு) கண்ணாடியினுள்ளே யடங்கிக் காணப்படும் பெரிய மலையைப்போல அணுவடிவாகி, உயர் அன்பர் உள்ளத்து

ஊடு இருந்து அருள்வோய் — உயர்வுபொருந்திய அடியார்களது உள்ளத்தினுள்ளே விற்றிருந்தருளுகின்ற எம்பெருமானே, நின்னை உணர்ந்திலம் — (எளிய யாங்கள் முன்னர்) உம்மையறிந்தேமல்லேம். இன்று உன் துணை பதம் எமது சென்னி சூடி யாம் வாழ — இற்றைத்தினத்தே தேவரீருடைய திருவடிகளிரண்டையும் எமது சிரசிற்றரித்து யாம் வாழ்வடையும்படி. காட்டுக என்னுர் — அடியேங்களுக்குக் காட்டியருளவேண்டுமென்று வேண்டினர் எ-று. (59)

மாசிமா தத்திற் ரேன்று மதிக்கலே குறைந்து தேயு
மாசில்பன் னுன்காம் பக்கத் தரையிரு ளியாமந் தன்னிற்
ரேசினுல் விளங்குஞ் சோதிச் செழுஞ்சுட ராகி நின்ற
காசிலா நுதற்கட் பெம்மான் றனதுருக் காட்டி நின்ரூன்.

[மாசிமா தத்தில் தோன்றும் மதிக்கலே குறைந்து தேயும்
ஆ(சு)இல்பன் னுன்காம் பக்கத்(து) அரைஇருள் யாமம் தன்னில்
தேசினுல் விளங்கும் சோதிச் செழும்சுட ராகி நின்ற
காசு(இ)லா நுதற்கண் பெம்மான் தன(து)உருக் காட்டி நின்ரூன்.]

இ — ள்: மாசி மாதத்தில் தோன்றும் மதிக்கலே குறைந்து தேயும் ஆசு இல் பன்னுன்காம் பக்கத்து — மாசிமாதத்தின்கண்ணே வருகின்ற சந்திரன் தனது கலைகள் தேய்ந்து குறைகின்ற குற்றமில்லாத அபரபக்கச் சதுர்த்தசியில், அரை இருள் இயாமம் தன்னில் — அர்த்தராத்திரியில், தேசினுல் விளங்கும் சோதி செழும் சுடர் ஆகி நின்ற — அழகுநிறைந்து பிரகாசிக்கும் மிக்க ஒளியையுடைய அக்கினிப்பிழம்பாகி யெழுந்தருளிநின்ற, காசு இலா நுதல் கண் பெம்மான் — குற்றமில்லாத நெற்றிக்கண்ணையுடைய பரமபதியானவர், தனது உரு காட்டி நின்ரூன் — (அப்பிரம விஷ்ணுக்களுக்குத் தோன்றத்தக்கதாய்) தமது திருவுருவத்தைக் காட்டிநின்றருளினர் எ-று. (60)

நீலகண் டமுமெண் டோளு நெற்றியிற் கண்ணு நீறுங்
காலனைக் காய்ந்த காலுங் கையின்மான் மழுவுங் கண்டு
மாலவன் வாமந் தன்னின் மலரயன் வலப்பா லின்று
சூலபா ணியனை நோக்கித் துதிபல சொல்ல லுற்றூர்.

[நீலகண் டமும்எண் தோளும் நெற்றியில் கண்ணும் நீறும்
காலனைக் காய்ந்த காலும் கையில்மான் மழுவும் கண்டு
மாலவன் வாமம் தன்னில் மலரயன் வலப்பால் நின்று
சூலபா ணியனை நோக்கித் துதிபல சொல்ல லுற்றூர்.]

இ — ள்: நீலகண்டமும் — காயதிருமிடற்றையும், எண்தோளும் — எட்டுப்புயங்களையும், நெற்றியில் கண்ணும் நீறும் — திருநெற்றியில் அக்கினிக் கண்ணையும் விபூதியையும், காலனைக் காய்ந்த காலும் — யமனையுதைத்தருளிய திருப்பாதத்தையும், கையில் மான் மழுவும் கண்டு — திருக்கரங்களின்

கண்ணே மான்கன்றையும் மழுவாயுதத்தையுங்கண்டு, மாலவன் வாமம் தன்னில் — மகாவிஷ்ணு இடப்பாகத்திலும், மலரயன் வலப்பால் நின்று — கம்லாசனராகிய பிரமதேவர் வலப்பாகத்திலும்நின்றுகொண்டு, சூலபாணியைநோக்கி — சூலாயுதத்தைத்தாங்கிய திருக்கரத்தையுடைய சிவபெருமானைப் பார்த்து, துதிபல சொல்லலுற்றார் — பலதோத்திரங்களையுங் கூறுவாராயினர் என்று. (61)

ஒதியா யணுவா யெண்ணி லுயிர்க்குயி ராகி யென்றும்
பேதியாப் பரம தாகிப் பிறப்புட னிறப்பி லாமற்
சோதியா யெழுதாக் கேள்விச் சுருதியின் முடிவா யெங்கட்
காதியா யநாதி யாகு மடிகணின் னடிகள் போற்றி.

[ஒதியாய் அணுவாய் எண்ணில் உயிர்க்(கு)உயிர் ஆகி என்றும்
பேதியாப் பரம(து) ஆகிப் பிறப்புடன் இறப்(பு)இ லாமல்
சோதியாய் எழுதாக் கேள்விச் சுருதியின் முடிவாய் எங்கட்(கு)
ஆதியாய் அநாதி யாகும் அடிகள்நின் அடிகள் போற்றி.]

இ — ள் : ஒதியாய் — ஞானமாகியும், அணுவாய் — நுண்பொருளாயும், எண்ணில் உயிர்க்கு உயிர் ஆகி — அளவுகடந்த ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாகியும், என்றும் பேதியாப் பரம் அது ஆகி —எக்காலத்திலும் வேற்றுமையடையாத பரப்பிரமமாகியும், பிறப்புடன் இறப்பு இலாமல் — தோற்றமும் நாசமுமின்றி, சோதியாய் — சுயஞ்சோதிவடிவாயும், எழுதாக் கேள்விச் சுருதியின் முடிவாய் — எழுதாக்கேள்வியாகிய சதுர்வேதங்களின் துணிவுப்பொருளாகியும், எங்கட்கு ஆதியாய் — எம்மனோர்க்குமுன்னுளையும், அநாதியாகும் அடிகள் — தொடக்கமின்றியுமுள்ள பெருமானே, நின்அடிகள் போற்றி — உமது திருப்பாதங்களுக்கு நமஸ்காரம் என்று. (62)

விடைக்கொடி யுயர்த்தாய் போற்றி
விரிமலர்ச் செழும்பொற் கொன்றைத்
தொடைப்புயா சலனே போற்றி
துலங்குபொற் றோட்டிற் றூவும்
படைக்கருங் கடைக்கட் செவ்வாய்ப்
பைந்தொடி பங்கா போற்றி
சடைப்பரம் பரனே போற்றி
சங்கரா போற்றி போற்றி.

[விடைக்கொடி உயர்த்தாய் போற்றி விரிமலர்ச் செழும்பொன் கொன்றைத்
தொடைப்புய அசலனே போற்றி துலங்குபொன் தோட்டில் தாவும்
படைக்கரும் கடைக்கண் செவ்வாய்ப் பைந்தொடி பங்கா போற்றி
சடைப்பரம் பரனே போற்றி சங்கரா போற்றி போற்றி.]

இ — ள் : விடை கொடி உயர்த்தாய் போற்றி — இடபக்கொடியையு யர்த்தியவரேநமஸ்காரம், செழும் பொன் கொன்றை விரிமலர் தொடைப்புய அசலனே போற்றி — செழுமைபொருந்திய பொன்மயமாகிய கொன்றையின் விரிந்த மலர்மாலையயணிந்த புயமலைகளையுடைய பெருமானே நமஸ்காரம், துலங்கு பொன் தோட்டில் தாவும் படைகரும் கடைக்கண் செவ்வாய் பைந் தொடி பங்கா போற்றி — ஒளிவிளங்குகின்ற பொன்னாலாகிய காதணியள வும்நீண்ட வேற்படையையொத்த கரிய கூரிய கடைக்கண்களையும் சிவந்த திருவாயையும் பசுமையாகிய வளையல்களையுமுடைய உமாதேவியாரை இடப் பக்கமாகக்கொண்டருளியவரே நமஸ்காரம், சடைப்பரம்பரனே போற்றி — சடைமுடியையுடைய பரம்பொருளேநமஸ்காரம், சங்கரா போற்றி போற்றி— (ஆன்மாக்களுக்கெல்லாம்) சுகத்தைச்செய்பவரே நமஸ்காரம் நமஸ்காரம் எ-று. (63)

விரித்துல கனைத்து மாக்கி வீக்குநாட் சராச ரங்கள்
பரித்துள புவன மூன்றும் பாலநேத் திரத்தீ யூட்டி
யெரித்துநீ ருக்கிப் பூசி யென்பணிந் திலங்கு சூலந்
திரித்துநின் ருடு நின்பொற் சேவடி போற்றி போற்றி.

[விரித்(து)உல(கு) அனைத்தும் ஆக்கி வீக்குநாள் சராசரங்கள்
பரித்துள புவனம் மூன்றும் பாலநேத் திரத்தீ ஊட்டி.
எரித்துநீ(று) ஆக்கிப் பூசி என்(பு)அணிந்து இலங்கு சூலம்
திரித்துநின் ருடு நின்பொற் சேவடி போற்றி போற்றி.]

இ — ள் : விரித்து உலகு அனைத்தும் ஆக்கி — மிக்க விரிவுடையதாயுல கங்களெல்லாவற்றையுஞ்சிருட்டித்து, வீக்கு நாள் — அவைகளைச்சங்கரிக்கின்ற காலத்தில், சர அசரங்கள் பரித்துள புவனம் மூன்றும் — சென்றும் நின்றும் வாழாநின்ற ஆன்மவர்க்கங்களையெல்லாந்தரித்துள்ள சுவர்க்கமத்திய பாத லங்களாகிய திரிலோகங்களையும், பால நேத்திரத் தியூட்டி — நெற்றிக்கண் ணிற்பொருந்திய அக்கினியைப்பற்றச்செய்து, எரித்து நீருக்கிப்பூசி — தக னித்து நீருக்கித் (திருமேனியெங்கணும் பரவப்) பூசி, என்பு அணிந்து — (பிர மவிஷ்ணுக்களின்) என்புமாலைகளையணிந்து, இலங்கு சூலம் திரித்து நின்று ஆடும் — விளங்குகின்ற சூலாயுதத்தைச்சுழற்றிநின்று நடனம்புரியும், நின் பொன் சே அடி போற்றி போற்றி — உமது சுவர்ணமயமாகிய சிவந்த திருப் பாதங்களுக்கு நமஸ்காரம் நமஸ்காரம் எ-று. (64)

இலகொளிக் கதிரொன் ருகி யீர்ம்புனற் கும்பந் தோறும்
பலவுரு வாகித் தோன்றும் பான்மைபோ லங்கங் காய்நின்
றுலகுயிர்க் கனுப வங்க ளூட்டுவித் தொழிந்த காலத்
தலகிலாக் கருணை நல்கு படிகணின் னடிகள் போற்றி.

[இல(கு)ஒளிக் கதிர் ஒன்ருகி ஈர்ப்புனல் கும்பம் தோறும்
பலஉருவாகித் தோன்றும் பான்மைபோல் அங்(கு)அங்காய்நின்(று)
உல(கு)உயிர்க்கு அனுப வங்கள் ஊட்டுவித்(து) ஒழிந்த காலத்(து)
அல(கு)இலாக் கருணை நல்கும் அடிகள்நின் அடிகள் போற்றி.]

இ — ள் : இலகு ஒளிக்கதிர் ஒன்றுகி—விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரியனொருவனேயாகியும், சுர்ம் புனல் கும்பம் தோறும் பல உருவாகித் தோன்றும் பான்மைபோல் — குளிர்ச்சிபொருந்திய சலம்நிறைந்த குடங்கள்பல வற்றினும் வெவ்வேறுகிய பலசூரியர்களைப்போலக்காணப்படுகின்ற தன்மையை யொப்ப, அங்கு அங்காய் நின்று—ஆங்காங்கே(பலவற்றினும்தோற்றி)நின்று, உலகு உயிர்க்கு அனுபவங்கள் ஊட்டு வித்து — உலகங்கள் தோறும் வாசஞ் செய்கின்ற ஆன்மவர்க்கங்களெல்லாம் அவைகள் புசிக்கவேண்டிய ஜுழின்பி ரகாரம் அனுபவங்கள்யாவற்றையுமுண்ணும்படி செய்து, ஒழிந்த காலத்து— (அவ்வான்மாக்கள் தாமனுபவிக்கவேண்டிய அனுபவங்கள்) கழிந்துநின்ற(பற் றற்ற)காலத்து, அலகு இலா கருணை நல்கும் அடிகள் — கணித்தற்கியலாத வுமது கிருபையையீந்தருள் செய்கின்ற சுவாமி, நின் அடிகள்போற்றி — உமது திருப்பாதங்களுக்கு நமஸ்காரம் எ-று. (65)

அருவமா யுருவமாகி யகண்டமா யசல மாகி
யொருபரம் பொருளாய் வண்ண மொப்புட னுயர்வுமின்றி
நிருமல னுகி யெங்கு நிறைந்துநீங் காதுநிற்குங்
கருதரு ஞான னந்தக் கருணையங் கடலே போற்றி.

[அருவமாய் உருவம்ஆகி அகண்டமாய் அசலம் ஆகி
ஒருபரம் பொருளாய் வண்ணம் ஒப்புடன் உயர்வும்இன்றி
நிருமலன் ஆகி எங்கும் நிறைந்துநீங் காதுநிற்கும்
கரு(து)அரு ஞான ஆனந்தக் கருணைஅம் கடலே போற்றி.]

இ — ள் : அருவமாய் — உருவமற்றவராயும், உருவமாகி — (கரசரணாதி களோடுங்கூடிய) உருவுடையராயும், அகண்டமாய் — சர்வபொருளுந்தா னேயாகியும், அசலமாகி — அசைவில்லாதவராயும், ஒரு பரம்பொருளாய்— தனித்த முதற்பொருளாயும், வண்ணம் ஒப்புடன் உயர்வும் இன்றி நிரும லன்ஆகி — நிறமும் சமத்துவமும் உயர்வுடைமையும் தமக்கில்லாத மலரகித ராகியும், எங்கும் நிறைந்து நீங்காது நிற்கும் — சர்வவியாபகியாயென்று மன்னிலதளராதுநிற்கின்ற, கருதரு ஞான ஆனந்தக் கருணையம் கடலே போற்றி — நிகினவினுலளக்கலாற்றுத சுத்தஞானத்தையும் நித்தியானந்தத்தை யுமுடைய கிருபாசாகரமே நமஸ்காரம் எ-று. (66)

காலனுர் வீழத் தாக்குங் கணைகழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா முழுமுதற் பொருளே போற்றி
பாலநேத் திரனே போற்றி படர்திரைப் பாலின் வேலை
யாலமுண் டிருண்ட கண்டத் தண்ணலே போற்றி போற்றி.

[காலனுர் வீழத் தாக்கும் கணைகழல் காலா போற்றி
மூலமாம் பொருளுக்(கு) எல்லாம் முழுமுதற் பொருளே போற்றி
பாலநேத் திரனே போற்றி படர் திரைப் பாலின் வேலை
ஆலம்உண்(டு) இருண்ட கண்டத்(து) அண்ணலே போற்றி போற்றி.]

இ — ள் : காலனுர் வீழத் தாக்கும் கூர் சுழல் காலா போற்றி — இயமனும் விழுந்திறக்கும் படியுதைத்தருளிய ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த திருப்பாதத்தையுடையவரே நமஸ்காரம், மூலமாம் பொருளுக்கு எல்லாம் முழுமுதல் பொருளே போற்றி — ஆதிகாரணமாகியவெல்லாப் பொருள்களுக்கும் அநாதிகாரணமாகிய பொருளே நமஸ்காரம், பால நேத்திரனே போற்றி — திரு நெற்றியிற் கொண்டவக்கினிக் கண்ணரே நமஸ்காரம், படர் திரைப் பாலின் வேலை ஆலம் உண்டு இருண்ட கண்டத்து அண்ணலே போற்றி போற்றி — விசாலமாகிய திரைகளையுடைய திருப்பாற் கடலிற்றோன்றிய ஆலகால நஞ்சையுண்டு கறுத்த திருமிடற்றைக் கொண்ட தலைவரே நமஸ்காரம் நமஸ்காரம் எ—று. (67)

பொடியெழப் புரமோர் மூன்றும் புன்னகை
கோட்டிச் சுட்டாய்
கொடியின்மீ னெழுதும் வேலைக் குளவிழி
யழலிற் கொன்றாய்
படிமுதற் ககனமீரும்ப் பரந்தியாம்
பரிந்து தேடி
யடிமுடி காண்டற் கெட்டா வத்தனே
போற்றி போற்றி.

[பொடிஎழப் புரம்ஓர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய்
கொடியில்மீன் எழுதும் வேலைக் குளவிழி அழலில் கொன்றாய்
படிமுதல் ககனம் ஈரும்ப் பரந்(து)யாம் பரிந்து தேடி
அடிமுடி காண்டற்(கு) எட்டா அத்தனே போற்றி போற்றி.]

இ — ள் : பொடி எழப் புரம் ஓர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய் — சாம்பராகும்படி முப்புரங்களையுந் தேவரீரது சிறுநகையாகிய (அக்கினியை) கொண்டு தகித்தருளினீர், கொடியில் மீன் எழுதும் வேலைக்குளவிழி அழலில் கொன்றாய் — மீனெழுதிய துவசத்தையுடைய மன்மதனைத் திருநெற்றிக்கொண்ட நேத்திரத்தினக்கினியால் தகித்தருளினீர், படிமுதல் ககனம் ஈரும்ப் பரந்து யாம் பரிந்து தேடி — பூமிமுதலாகாயபரியந்தம் எங்குந்திரிந்து யாங்கள் வருந்தித்தேடியும், அடி முடிகாண்டற்கு எட்டா அத்தனே போற்றி போற்றி — திருவடியையுந் திருமுடியையுங் காண்பதற்கு அரிதாகவிருக்கின்ற தலைவரே நமஸ்காரம் நமஸ்காரம் எ-று. (68)

நீர்வடி வான செய்ய நெருப்புல வுலவை வானம்
பார்வடி வாகத் தோன்றப் படைத்திட முன்ன மன்னுங்
கார்வடி வான கூந்தற் கவுரியு நீயு மொன்றுப்
பேர்வடி வின்றி நின்ற பிஞ்ஞகா போற்றி யென்றே.

[நீர்வடி(வு) ஆன செய்ய நெருப்(பு) உல(வு) உலவை வானம்
பார்வடி(வு) ஆகத் தோன்றப் படைத்திட முன்னம் மன்னும்
கார்வடி வான கூந்தல் கவுரியும் நீயும் ஒன்றுய்
பேர்வடி.(வு) இன்றி நின்ற பிஞ்ஞகா போற்றி என்றே.]

இ — ள் : நீர் வடிவு ஆன செய்ய நெருப்பு உலவு உலவை வானம்பார் — தண்ணீரும் அழகமைந்த சிவந்த அக்கினியும் சலனம்பொருந்திய காற்றும் ஆகாயமும் மண்ணுமாகிய இவ்வைந்தும், வடிவாக தோன்ற படைத்திட முன்னம் — உருவமாகத்தோன்றும்படி சிருட்டித்தற்குமுன்னே, மன்னும் கார் வடிவான கூந்தல் கவுரியும் நீயும் ஒன்றுய் — நிலைபெற்ற மேகம்போன்ற கரி யவழகிய கூந்தலையுடைய உமாதேவியாருந்தேவரீரும் அத்துவிதமாய், பேர் வடிவு இன்றி நின்ற பிஞ்ஞகா போற்றி என்று — நாமரூபமில்லாமலெழுந் தருளிநின்ற சடைமுடியையுடையவெம்பெருமானே நமஸ்காரம் என்று எ-று. (69)

எய்ச்சிலை யுண்டென் றேதற் கேதுவா மிடையாண் மாரன்
கைச்சிலைப் புருவ மைக்கட் கவுதமன் பன்னி கொண்ட
மைச்சிலை யுருவ மாற்று மலர்ப்பதன் வடத்தண் டார்ந்த
பச்சிலைப் பள்ளியானுட் பரிவுடன் பழிச்சி யேத்த.

[எய்ச்(சு)இலை உண்(டு)என்(று) ஓதற்(கு) ஏதுவாம் இடையாள் மாரன்
கைச்சிலைப் புருவ மைக்கண் கவுதமன் பன்னி கொண்ட
மைச்சிலை உருவம் மாற்றும் மலர்ப்பதன் வடத்தண்(டு) ஆர்ந்த
பச்சிலைப் பள்ளி யான்உள் பரிவுடன் பழிச்சி ஏத்த.]

இ — ள் : எய்த்து இலை உண்டு என்று ஓதற்கு ஏதுவாம் இடையாள் — சிறுத்து இல்லையோவுண்டோவென்று (சந்தேகித்துக்) கூறுதற்கேது வாகிய இடையையுடையவளும், மாரன் கைச்சிலை புருவம் மைகண் கவுதமன் பன்னி — மன்மதனுடையகையின் கண்ணேயுள்ள வில்லையொத்த புருவம் வாய்ந்த கரிய கண்களையுடையவளும் கௌதமரிஷியினது மனைவியுமாகிய அகலிகையானவள், கொண்ட மை சிலை உருவம் மாற்றும் மலர்ப்பதன் — (சாபத்தினால்) அடைந்திருந்த கருங்கல்வடிவத்தை மாற்றியருளிய தாமரை மலர்போன்ற திருப்பாதங்களையுடையவரும், வடத்தண்டு ஆர்ந்த பச்சிலை பள்ளியான் — ஆலவிருட்சத்தின் கிளையிற்பொருந்திய பச்சிலையைப்பாயலாகக் கொண்டவருமாகிய விஷ்ணு மூர்த்தியானவர், உள் பரிவுடன் பழிச்சி ஏத்த — மனத்திற்கொண்ட அன்போடு தோத்திரஞ்செய்து துதிக்க எ—று.
எய்த்து என்பது எதுகைநோக்கி எய்ச்சு என்றுயிற்று. (70)

மருவிரி கமலப் போதின் மன்னுநான் முகத்தோன் வெற்பி
னருவிபோல் விழிநீர் சோர வாகநெக் குருகி யன்பாற்
றருவிரி மலர்க ளூவித் தமனியச் சபையி லாடும்
பொருவிரி கமலச் செம்பொற் பூவடி போற்றி செய்தான்.

[மருவிரி கமலப் போதில் மன்னும்நான் முகத்தோன் வெற்பின்
அருவிபோல் விழிநீர் சோர ஆகம்நெக்(கு) உருகி அன்பால்
தருவிரி மலர்கள் தூவித் தமனியச் சபையில் ஆடும்
பொருஇரி கமலச் செம்பொன் பூஅடி போற்றி செய்தான்.]

இ — ள் : மரு விரி கமல போதில் மன்னும் நான்முகத்தோன் — வாசனை கமழுகின்ற தாமரைமலரின்மேல் வாசஞ்செய்யும் நான்குமுகங்களையுடைய பிரமதேவர், வெற்பின் அருவிபோல் விழி நீர் சோர — மலையருவியைப்போலக் கண்களினின்றும் நீரானது சொரிய, ஆகம் நெக்கு உருகி — மனமானது கசிந்துருகி, அன்பால் தரு விரிமலர்கள் தூவி — அன்போடு பஞ்சதருக்களினலர்ந்த புஷ்பங்களைத்தூவி, தமனியச் சபையில் ஆடும் — கனகசபையின்கண்ணே நின்று நடனஞ்செய்கின்ற, பொரு இரி செம்பொன் கமல பூ அடி போற்றி செய்தான் — ஒப்பில்லாத சிவந்த அழகிய தாமரைமலர் போன்றதிருப்பாதங்களை நமஸ்காரஞ்செய்தனர் எ—று. (71)

வேறு

நிலத்தானைக் கடுவொடுக்கு மிடற்றானை மழுத்தானை
நீங்காச் செங்கை
வலத்தானை மலைமகள்சே ரிடத்தானை வரிசிலைக்கை
மதனைக் காய்ந்த
சலத்தானை முசலபுயா சலத்தானை தனைச்சூழத்
தருக்கி வாழ்தென்
புலத்தானை யுதைத்தமலர்ப் பதத்தானைப்போற்றிசெய்தார்
புலவ ரெல்லாம்.

[நிலத்தானைக் கடுஒடுக்கும் மிடற்றானை மழுத்தானை நீங்காச் செங்கை
வலத்தானை மலைமகள்சேர் இடத்தானை வரிசிலைக்கை மதனைக் காய்ந்த
சலத்தானை முசலபுயஅ சலத்தானை தனைச்சூழத் தருக்கி வாழ்தென்
புலத்தானை உதைத்தமலர்ப் பதத்தானைப்போற்றிசெய்தார் புலவர் எல்லாம்.]

இ — ள் : நில தானை கடுஒடுக்கும் மிடற்றானை — பூமியினுடையாகிய (சமுத்திரத்திற்றேன்றிய) நஞ்சையடக்கிய திருக்கண்டத்தையுடையவரும், மழு தானை நீங்கா செங்கை வலத்தானை — மழுப்படைநீங்காத சிவந்த வலத்திருக்கையையுடையவரும், மலைமகள் சேர் இடத்தானை — மலையரசன்புத்திரியாகிய உமாதேவியார் பொருந்தப்பெற்ற இடப்பாகத்தையுடையவரும், வரிசிலைகை மதனை காய்ந்த சலத்தானை — வரிந்து சுட்டிய வில்லைக்கையிலேந்திய மன்மதனையழித்த கோபத்தையுடையவரும், முசலபுய அசலதானை தனைச்சூழ தருக்கி வாழ் தென்புலத்தானை உதைத்தமலர் பதத்தானை — இருப்புலக்கைபோன்ற புயமலைகளையுடைய சேனைகள் தன்னைச்சூழும்படி செருக்குடனேவாழ்கின்ற தென்புலத்தையுடையவனாகிய இயமனையுதைத்தருளிய மலர்

போன்ற திருப்பாதத்தையுடையவருமாகிய சிவபெருமானே, புலவர் எல்லாம் போற்றி செய்தார் — தேவர்களெல்லோருந் தோத்திரஞ் செய்தனர் எ—று. (72)

கந்தரநேர் கந்தரத்தான் கருணைவிழிக் கடையருளிக்
களிப்பி னேடு
மந்தரவா னவர்புகழ்புள் ளரசுகைக்கு மச்சுதனே
யளிதே னுண்ணுங்
கொந்தவிழ்நாண் மலர்க்கமலத் தவிசிருக்கு நான்முகனைக்
குறித்து நீவிர்
சிந்தைதனில் விழைந்தவரங் கேண்மினது தருவலெனச்
செப்ப லுற்றான்.

[கந்தரம்நேர் கந்தரத்தான் கருணைவிழிக் கடைஅருளிக் களிப்பினேடும்
அந்தரவா னவர்புகழ்புள் ளர(சு)உகைக்கும் அச்சுதனே அளிதேன் உண்ணும்
கொந்(து)அவிழ்நாள் மலர்க்கமலத் தவி(சு)இருக்கும் நான்முகனைக்குறித்துநீவிர்
சிந்தைதனில் விழைந்தவரம் கேண்மின்அது தருவல் எனச் செப்பல் உற்றான்.]

இ — ள் : கந்தர நேர் கந்தரத்தான் — மேகத்தையொத்து விளங்குகின்ற திருக்கண்டத்தையுடையவராகிய சிவபெருமான், கருணை விழி கடை அருளி — கிருபாநோக்கஞ்செய்தருளி, களிப்பினேடும் — திருவுள்ள மகிழ்ச்சியோடும், அந்தர வானவர் புகழ் புள் அரசு உகைக்கும் அச்சுதனே — சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்களெல்லாம் புகழுகின்ற கருடவாகனத்திலேறுபவராகிய விஷ்ணுமூர்த்தியையும், அளி தேன் உண்ணும் கொந்து அவிழ் நாள் மலர் கமல தவிசு இருக்கும் நான்முகனை — வண்டுகள் தேனேப்பருகுகின்ற இதழ்கள் விரிந்த புதிய தாமரைமலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரையும், குறித்து — பார்த்தருளி, நீவிர் சிந்தைதனில் விழைந்தவரம் கேண்மின் — நீங்களுங்கள் மனத்தில் விரும்பிய வரங்களைக் கேட்கக்கடவீர், அது தருவல் என செப்ப லுற்றான் — அவ்வரங்களைத் தருவோமென்று திருவாய்மலர்ந்தருளினர் எ —று. (73)

கரியெனநின் றுயிர்க்கருள்செய் கண்ணுதனீ கனற்பிளம்பாய்
நின்ற காலே
விரிசுடர்விட் டெழுமொளிசேர் விளக்கில்விழும் விட்டிலென
வீழ்ந்து நீரு
யெரியுமெம தத்திரங்க ளீங்கெமக்கு மீண்டுதவி
யாங்க ளென்றும்
புரியுமிரு தொழிலுநிலை பெறவுனருள் புரிதியெனப்
போற்றி நின்றார்.

[கரிஎனநின்(று) உயிர்க்(கு) அருள்செய் கண்ணுதல்நீ கனற்பிழம்பாய்
நின்ற காலை
விரிசுடர்விட்(டு) எழும் ஒளிசேர் விளக்கில்விழும் விட்டில்என
வீழ்ந்து நீரூய்
எரியும்எம(து) அத்திரங்கள் ஈங்(கு) எமக்கு மீண்(டு) உதவி
யாங்கள் என்றும்
புரியும்இரு தொழிலும் நிலை பெறஉன்னருள் புரிதிஎனப்
போற்றி நின்றூர்.]

இ — ள் : கரி என நின்று உயிர்க்கு அருள் செய் கண்ணுதல் — சாட்சியாய் நின்று ஆன்மாக்களுக் கெல்லாமனுக்கிரகஞ் செய்கின்ற நெற்றிக்கண்ணையுடைய எம்பெருமானே, நீ கனல் பிழம்பாய் நின்ற காலை — தேவரீர் அக்கினிக்கண்டமாய் நின்ற அப்பொழுது, விரிசுடர் விட்டு எழும் ஒளி சேர் விளக்கில் விழும் விட்டில் என வீழ்ந்து நீரூய் எரியும் எமது அத்திரங்கள் —விரிந்த கிரணத்தைப் பரப்பித் தோன்றுகின்ற ஒளிபொருந்திய தீபத்தில் வீழ்ந்தவியும் விட்டிற்பறவைபோல விழுந்து சாம்பராக எரிந்துபோன எமது அம்புகளே, ஈங்கு எமக்கு மீண்டு உதவி — இவ்விடத்திலே பின்னருமெங்களுக்குத் தந்தருளி, யாங்கள் என்றும் புரியும் இரு தொழிலும் நிலை பெற — அடியேங்களெக்காலமும் நடாத்துகின்ற படைத்தல் காத்தலாகிய இரு தொழில்களும் நிலைபெறும்படி, உன் அருள் புரிதி என போற்றி நின்றூர் — உமது திருவருளைச்செய்தருளுகவென்று தோத்திரஞ் செய்துகொண்டு நின்றூர்கள் எ—று.

(74)

அன்றமரி லிருவீரு முடியாமற் சோதிவடி
வாயா நும்மு
னின்றவிராச் சிவநிசியந் நிசிவருநாட் களில்விதித்த
நியமத் தோடு
மன்றன்மலர் கொடுபூசை புரிந்திடினீர் நிலைந்தவெலாம்
வழங்கல் செய்வா
மென்றயன்மா லிருவருக்கு மனமகிழ வரமளித்திட்
டியம்பும் பின்னும்.

[அன்(று)அமரில் இருவீரும் முடியாமல் சோதிவடி வாய்யாம் நும்முன்
நின்றஇராச் சிவநிசிஅந் நிசிவருநாள் களில்விதித்த நியமத்தோடும்
மன்றல்மலர் கொடுபூசை புரிந்திடில்நீர் நிலைந்தஎலாம் வழங்கல் செய்வாம்
என்(று)அயன் மால் இருவருக்கும் மனம்மகிழ வரம்அளித்திட்(டு) இயம்பும் பின்னும்]

இ — ள் : அன்று அமரில் இருவீரும் முடியாமல் சோதிவடிவாய் யாம் நும் முன் நின்ற இரா சிவநிசி — அக்காலத்துச்செய்த யுத்தத்தின்கண்ணே நீவிரிருவீருமழிந்துபடாமல் அக்கினிவடிவமாகி உமக்குமுன்னே யாம் தோன்றி

நின்ற இரவானது சிவராத்திரியாகும், அத்திரி வருநாட்களில் — அச்சிவராத்திரி வந்துசேருகின்ற தினங்களில், விதித்த நியமத்தோடு — ஆகமங்களிற் கூறிய விதிக்கிணங்க, மன்றல் மலர் கொடுபூசை புரிந்திடில் — வாசனை பொருந்திய புஷ்பங்களைக்கொண்டு பூசனை செய்வீராகில், நீர் நினைந்த எலாம் வழங்கல் செய்வாம் என்று அயன்மால் இருவருக்கும் மனம் மகிழ வரம் அளித்திட்டு — நீங்கள் விரும்பியவெல்லாம் யாம் கொடுத்தருள்வோமென்று பிரமவிஷ்ணுக்களிருவருக்கும் மனக்களிப்புண்டாகும்படி வரம்கொடுத்து, பின்னும் இயம்பும் — மேலுங்கூறியருளுவார் எ — று: (75)

ஆதியிலம் பிகைநோற்ற விரதமிதன் பெருமையெவ
ரளக்க வல்லார்
சாதிமுறை நெறிதவறுஞ் சண்டாளர் நோற்றிடினுந்
தக்கோ ராகி
மோதிவருங் கடல்புடைசூ முலகில்விரும் பியபோக
முற்றிப் பின்னர்ப்
பூதிதரும் பெரும்பாவக் கடல்கடந்து முத்திநெறி
பொருந்து வாரால்.

[ஆதியில்அம் பிகைநோற்ற விரதம்இதன் பெருமைஎவர் அளக்க வல்லார் சாதிமுறை நெறிதவறும் சண்டாளர் நோற்றிடினும் தக்கோர் ஆகி மோதிவரும் கடல்புடைசூழ் உலகில்விரும் பியபோகம் முற்றிப் பின்னர்ப் பூதிதரும் பெரும்பாவக் கடல் கடந்து முத்திநெறி பொருந்து வாரால்.]

இ — ள்: ஆதியில் அம்பிகை நோற்ற விரதம் இதன் பெருமை — ஆதி காலத்தில் உமையவளிஞலேயனுஷ்டிக்கப்பட்ட இவ்விரதத்தின் மகிமையை, எவர் அளக்க வல்லார் — யார் அளந்துசொல்ல வல்லவர், சாதிமுறைநெறி தவறும் சண்டாளர் நோற்றிடினும் — வருணத்துக்கிசைந்த முறைமையாகிய வொழுக்கங்களைத் தவறவிட்ட எளியவர்களனுஷ்டித்தாலும், தக்கோராகி — மேலவர்களாகி, மோதிவரும் கடல் புடைசூழ் உலகில் — திரைமோதிப்புரளுகின்ற கடலினால் நாற்புறமுஞ்சூழப்பட்ட உலகத்தில், விரும்பிய போகம் முற்றி — தாம்விரும்பிய போகங்களையனுபவித்து, பின்னர் பூதி தரும் பெரும் பாவ கடல் கடந்து — அதன்மேல் நரகங்களைக் கொடுக்கின்ற பெரிய பாவமாகிய சமுத்திரத்தைக் கடந்து, முத்தி நெறி பொருந்துவார் — மோட்ச பதத்தையடைகுவர் எ—று.

ஆல்-அசை. (76)

ஆவிந்த மறையவர்கட் களித்தாலும் புரவிமக
மாற்றினாலு
மேவிந்தச் சிவநிசிபோற் பலன்ரூரா வெனவியந்து
விண்ணி னேங்கு

மாவிந்த நடைபயின்று வந்தனைய கரியுரித்த
வரதன் வாமக்
கோவிந்த னரவிந்தன் கோவிந்தன் முகநோக்கிக்
கூறிப் போனன்.

[ஆவிந்தம் மறையவர்கட்(கு) அளித்தாலும் புரவிமகம் ஆற்றினாலும்
மே(வு)இந்தச் சிவநிசிபோல் பலன்தாரா எனவியந்து விண்ணின் ஓங்கு
மாவிந்தம் நடைபயின்று வந்தனைய கரியுரித்த வரதன் வாமக்
கோஇந்தன் அரவிந்தன் கோவிந்தன் முகம் நோக்கிக் கூறிப் போனன்.]

இ — ள் : ஆ விந்தம் மறையவர்கட்கு அளித்தாலும் — பசுக்களோ விந்தக் கணக்காய்ப் பிராமணர்களுக்குத் (தானமாகக்) கொடுத்தாலும், புரவி மகம் ஆற்றினாலும் — அசுவமேதயாகஞ் செய்தாலும், மேவு இந்த சிவநிசிபோல் பலன் தாரா என வியந்து — பொருந்திய இந்தச் சிவராத்திரியைப் போல் நற்பலனைத் தரமாட்டாவென்று புகழ்ந்து, விண்ணின் ஓங்கும் மாவிந்தம் நடைபயின்று வந்தனைய கரி உரித்த வரதன் — ஆகாயத்திலுயர்ந்து வளர்ந்த பெரிய விந்தகிரியானது நடந்து வந்தாற்போன்ற யானையை யுரித்த வரதரும், வாம கோ இந்தன் — இடக்கண் சந்திரனுடையவருமாகிய சிவபெருமான், அரவிந்தன் கோவிந்தன் முகம் நோக்கி — பிரமா விஷ்ணுவாகியவிருவர் முகங் களையும் பார்த்து, கூறி போனன் — திருவாய்மலர்ந்தருளிச் சென்றார் எ—று.

(77)

உலங்குலவும் புயமுகுந்த னிவ்விரத நோற்றுயிர்காத்
துடற்று போரிற்
சலங்குலவு மரக்கர்குலச் சலதிவட வையிற்சுவற்றுந்
தானை பெற்றுப்
பொலங்குலவு மிதழ்விரிந்து தேன்றுளித்து வழிந்திடுமம்
புயப்பொற் பூவி
னிலங்குலவு மயிலிமணந் திமையவர்கண் முதலெவர்க்கு
மிறைவ னானன்.

[உலம்குலவும் புயமுகுந்தன் இவ்விரதம் நோற்(று) உயிர்காத்(து)
உடற்று போரில்
சலம்குலவும் அரக்கர்குலச் சலதிவட வையில்சுவற்றும்
தானை பெற்றுப்
பொலம்குலவும் இதழ்விரிந்து தேன்துளித்து வழிந்திடும்அம்
புயப்பொற் பூவின்
இலம்குலவும் மயிலிமணந்(து) இமையவர்கள்முதல் எவர்க்கும்
இறைவன் ஆனன்.]

இ—ள்: உலம் குலவும் புய முருந்தன் இவ்விரதம் நோற்று — திரண்ட கல்லியொத்த புயங்களையுடைய விஷ்ணுமூர்த்தி இவ்விரதத்தையனுட்டித்து, உயிர்காத்து — ஆன்மாக்களையெல்லாங் காவல்செய்தும், உடற்று போரில் சலங்குலவும் அரக்கர்குல சலதி — எதிர்த்துச் செய்யப்படுகின்ற யுத்தத்தில் கோபம் பொருந்திய அரக்கர்கூட்டமாகிய சமுத்திரத்தை, வடவையில் சுவற்றுந் தானே பெற்று — வடவாமுகாக்கினியைப்போல வற்றச் செய்கின்ற சக்கராயுதத்தைப்பெற்றும், பொலம் குலவும் இதழ் விரிந்து தேன் துளித்து வழிந்திடும் அம்புய பொன் பூவின் இலம் குலவும் மயிலை மணந்து — பொன்போல விளங்குகின்ற இதழ்கள் மலர்ந்து தேன்துள்ளியாகச் சிந்துகின்ற அழகிய தாமரைமலராகிய இல்லத்தில் வாசஞ்செய்கின்ற இலக்குமியை விவாகஞ் செய்தும், இமையவர்கள் முதல் எவர்க்கும் முதல்வன் ஆனன் — தேவர்கள் முதலாகிய எல்லோர்க்குந் தலைவருமாயினர் எ — று. (78)

நல்லுணர்வுற் றுயர்கமல நான்முகனேற்
றுலகமுநால் வகையிற் ரோற்றும்
பல்லுயிரு நினைத்தமனப் படிபடைத்துத்
தனதுகரப் படையும் பெற்றுச்
சொல்லுமறை முழுதுணர்ந்து தூவியனப்
புள்ளூர்ந்து சுணங்கு பூத்த
வல்லுறழ்மைக் கருங்கண்முலை வாணிதனை
மணந்துபெரு வாழ்வு பெற்றான்.

[நல்உணர்(வு) உற்(று) உயர்கமல நான்முகன் நோற்(று)
உலகமும் நால்வகையில் தோற்றும்
பல்உயிரும் நினைத்தமனப் படிபடைத்துத்
தனதுகரப் படையும் பெற்றுச்
சொல்லுமறை முழுதுணர்ந்து தூவிஅனப்
புள் ஊர்ந்து சுணங்கு பூத்த
வல்உறழ்மைக் கருங்கண்முலை வாணிதனை
மணந்துபெரு வாழ்வு பெற்றான்.]

இ — ள்: நல் உணர்வு உற்று உயர் கமல நான்முகன் நோற்று — நல்லறிவுகொண்டு உயர்ச்சி பொருந்திய தாமரையாசனராகிய பிரமதேவரதனையனுட்டித்து, உலகமும் நால் வகையில் தோற்றும் பல் உயிரும் நினைத்தமனப் படி படைத்து — சகலவுலகங்களையும் அண்டசம் முதலாக நான்கு வகையாய்ப் பிறக்கின்ற பலவான்மாக்களையும் தாம் நினைத்த எண்ணத்தின்படி சிருட்டித்தும், தனது சர படையும் பெற்று — தம்முடைய திருக்கரத்திற் பொருந்திய பிரமாஸ்திரத்தைப்பெற்றும், சொல்லு மறை முழுதுணர்ந்து — சொல்லப்படுகின்ற சதுர்வேதங்கள் முழுவதையுமறிந்தும், தூவி அனப்புள்

ஊர்ந்து — சிறகுகளையுடைய அன்னவாகனத்தைச் செலுத்தியும், சுணங்கு பூத்த வல் உறழ் மை கரும் கண் முலை வாணிதனை மணந்து — தேமல் படர்ந்த சூதாடுகருவியை நிகர்த்த கரிய கண்களையுடைய தனங்கள் பொருந்திய சரசுவதிதேவியை விவாகஞ் செய்தும், பெருவாழ்வு பெற்றுன் — பெருவாழ்வனடந்திருந்தார் எ — று. (79)

சீதரனுந் திசைமுகனு நோற்றதற்பி
னிவ்விரதஞ் சிறந்த தெங்கு
மோதவரு மாகமதிச் சிவநிசியுற்
பவமீதென் றுணர்வீ ரென்றே
மாதவத்தி லுயர்சனகன் முதலானை
மிசவனத்தோர் மகிழ்ந்து கேட்பச்
சூதமுனி வரனிகழ்ந்த சரித்திரத்தை
விரித்தெடுத்துச் சொன்னன் மன்னே.

[சீதரனும் திசைமுகனும் நோற்றதன்பின்
இவ்விரதம் சிறந்த(து) எங்கும்
ஓதவரும் மாகமதிச் சிவநிசிஉற்
பவம் ஈ(து)என்(று) உணர்வீர் என்றே
மாதவத்தில் உயர்சனகன் முதலாம்னை
மிசவனத்தோர் மகிழ்ந்து கேட்பச்
சூதமுனி வரன்நிகழ்ந்த சரித்திரத்தை
விரித்(து) எடுத்துச் சொன்னன் மன்னே.]

இ — ள்: சீதரனும் திசைமுகனும் நோற்றதன்பின் — விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவருமிவ்விரதத்தையனுஷ்டித்ததன்பின்பு, இவ்விரதம் எங்கும் சிறந்தது — இச்சிவராத்திரிவிரதமானது உலகமெங்குஞ் சிறப்படைந்தது, ஓதவரும் மாக மதி சிவநிசி உற்பவம் ஈது என்று உணர்வீர் என்று — எடுத்துக் கூறப்படுகின்ற மாசிமாதத்தில்வரும் சிவராத்திரியின் தோற்றமானது இதுவாகுமென அறியக்கடவீரென்று, மா தவத்தில் உயர் சனகன் முதலாம் நைமிசவனத்தோர் மகிழ்ந்து கேட்ப — மகத்தாகிய தவத்திலுயர்ந்த சனக முனிவர் முதலாகிய நைமிசாரணியத்திலுள்ள முனிவர்கள் களிகூர்ந்து கேட்கும்படி, சூதமுனிவரன் — சூதமகாமுனிவரானவர், நிகழ்ந்த சரித்திரத்தை விரித்து எடுத்துச் சொன்னன் — தோன்றிய இச்சிவராத்திரி சரித்திரத்தை எடுத்து விசாலமாகக் கூறினர் எ — று. (80)

ஏ மன் ஓ அசைகள்.

சிவராத்திரியுற்பவச் சுருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆக விருத்தம் 103.

திருச்சிற்றம்பலம்

சிவராத்திரி மான்மியச் சருக்கம்

சொன்ன சூதனை நோக்கியவ் வனத்துறை
துறவர்கண் மறைகூறு
மன்ன மாவிர தத்தினை நோற்றிடு
மடைவுமன் றரன் ருளிற்
பன்ன மாமல ரிட்டருச் சனைபுரி
பரிசுநீ பரிவோடின்
றின்ன வாறென விரித்தெமக் குரைத்தியென்
றிரப்பவங் கிசைக்கின்ருன்.

[சொன்ன சூதனை நோக்கிஅவ் வனத்(து)உறை
துறவர்கள் மறைகூறும்
அன்ன மாவிர தத்தினை நோற்றிடும்
அடைவும்அன்(று) அரன்தாளில்
பன்ன மாமலர் இட்(டு)அருச் சனைபுரி
பரிசும்நீ பரிவோ(டு) இன்(று)
இன்ன ஆ(று)என விரித்(து)எமக்(கு) உரைத்தியென்(று)
இரப்பஅங்(கு) இசைக்கின்ருன் .]

இ — ள்: அவ்வனத்து உறை துறவர்கள் — அந்நைமிசாரணியத்தின் கண்ணே வாசஞ்செய்கின்ற முனிவர்கள், சொன்ன சூதனை நோக்கி — இவ்வாறு கூறிய சூதமகாமுனிவரைப் பார்த்து, மறைகூறும் அன்ன மாவிரதத்தினை நோற்றிடும் அடைவும் — வேதங்களினுலெடுத்துக் கூறப்படுகின்ற அப்பெரிய விரதத்தை அனுஷ்டிக்கும் முறைமையும், அன்று அரன் தாளில் பன்ன மா மலர் இட்டு அருச்சனை புரி பரிசும் — அத்தினத்திற் சிவபெருமானுடைய திருப்பாதங்களுக்குப் பச்சிலைகளையும் மகத்தாகிய பூக்களையுஞ் சொரிந்து பூசனைசெய்கின்ற கிரமமும், இன்று நீ பரிவோடு இன்னவாறு என விரித்து எமக்கு உரைத்தி என்று இரப்ப — இப்பொழுது தேவரீரன்புடனே இத்தன்மையை யுடையதென்று விரிவாக எங்களுக்குக் கூறியருளவேண்டுமென்று யாசிப்ப, அங்கு இசைக்கின்ருன் — அவ்விடத்தேயதனைக் கூறுவாராயினர் எ—று. (1)

மாக மாமதிச் சிவநிசி யுற்பவம் வகுத்துரைத் தனமிப்பா
லாக வத்துட னேந்துள வரனிரா வவற்றைநீ ருணர்வீரால்
யோக ராத்திரி சோமவா ரத்தினன் முதயகா லையிலேதொட்
டேக மாகவந் நிசிக்கடை யளவுவா விசைந்திடி லிதுவாமே.

[மாக மாமதிச் சிவநிசி உற்பவம் வகுத்(து) உரைத் தனம்இப்பால்
ஆக அத்துடன் ஐந்(து) உள அரன்இரா அவற்றைநீர் உணர்வீர்ஆல்
யோக ராத்திரி சோமவா ரத்தின்அன்(று) உதயகா லியிலேதொட்(டு)
ஏகமாக அந்நிசிக்கடை அளவும்உவா இசைந்திடில் இதுவாமே.]

இ — ள்: மாக மா மதி சிவநிசி உற்பவம் வகுத்து உரைத்தனம் — மாசி மாதத்தின்கண்ணே வருகின்ற மகாசிவராத்திரியின் உற்பவத்தை விரித்துக் கூறினேம், இப்பால் — மேல், ஆக அத்துடன் ஐந்துள அரன் இரா — அம் மகாசிவராத்திரியுடன் ஐந்து சிவராத்திரிகளுள்ளன, அவற்றை நீர் உணர் வீரால் — அவைகளைக் கிரமமாக நீங்களறியக்கடவீர், யோகராத்திரி — (அவைகளுள்) யோகசிவராத்திரியானது, சோமவாரத்தினன்று உதய காலியிலே தொட்டு — திங்கட்கிழமை சூரியோதய காலத்திற்றொடங்கி, ஏகமாக அந்நிசிக்கடை அளவும் உவா இசைந்திடில் இதுவாம் — தனிமை யாக அன்றிரவினிறுதிக் காலம்வரையும் அமாவாசை பொருந்துமாயின் இதுவேயாகும் எ—று. (2)

ஏ - அசை.

திங்க ளின்கலை குறைசதுர்த் தசிமதிக்
கிழமையிற் றிகழல்லிற்
றங்கு சாமநான் களவுதொட் டிருந்திடிற்
சயிலமீன் றருண்மானைப்
பங்கில் வைத்திடும் பரமனைப் பூசனை
பண்ணுக பரிவோடு
மிங்கு ரைத்தவா கமங்கண்மற் றிதனையும்
யோகராத் திரியென்றே.

[திங்க ளின்கலை குறைசதுர்த் தசிமதிக் கிழமையில் திகழ்அல்லில்
தங்கு சாமம்நான்(கு) அளவுதொட்(டு) இருந்திடில் சயிலம்ஈன்(று)
அருள்மானைப்
பங்கில் வைத்திடும் பரமனைப் பூசனை பண்ணுக பரிவோடும்
இங்கு உரைத்தஆ கமங்கள் மற்(று) இதனையும் யோகராத் திரிஎன்றே.]

இ — ள்: திங்களின் கலை குறை சதுர்த்தசி — சந்திரனது கலைகள் தேய் கின்ற (அபரபக்கத்துச்) சதுர்த்தசியானது, மதிக்கிழமையில் திகழ் அல்லில் தங்கு சாமம் நான்கு அளவு தொட்டு இருந்திடில் — சோமவாரத்தில் விளங்கு கின்ற இரவிற்பொருந்திய நான்கு சாமங்களிலும் தொடர்ந்திருக்குமாயின், சயிலம் ஈன்றருள் மானைப் பங்கில் வைத்திடும் பரமனைப் பரிவோடு பூசனை பண்ணுக — மலையரசன் பெற்ற புத்திரியாராகிய உமாதேவியாரையிடப்பா கத்தின்கண்ணே கொண்டருளிய சிவபெருமானை அன்போடு பூசைசெய்யக் கடவீர், ஆகமங்கள் இதனையும் யோகராத்திரி என்று இங்கு உரைத்த — ஆகமங்களானவை இதனையும் யோகசிவராத்திரியென்றே இங்கு கூறின எ—று.
மற்று ஏ அசைகள். (3)

ஈறு வந்தசா மத்தரை நாழிகை யிருளுவா விருந்தாலுந்
தேறு கின்றவச் சதுர்த்தசி யப்படிச் சேரினுங் கொளல்வேண்டு
மூறு தீர்தவத் துறவிர்காள் விதிமுறை யுரைக்குமிங் கிவைநோற்கிற்
கூறு மற்றுள சிவநிசி விரதமுக் கோடிநோற் றிடலொக்கும்.

[ஈறு வந்தசா மத்(து)அரை நாழிகை இருள்உவா இருந்தாலும்
தேறு கின்றஅச் சதுர்த்தசி அப்படிச் சேரினும் கொளல் வேண்டும்
ஊறு நீர்தவத் துறவிர்காள் விதிமுறை உரைக்கும் இங்(கு) இவைநோற்கில்
கூறு மற்(று) உள சிவநிசி விரதமுக் கோடிநோற் றிடல்ஒக்கும்.]

இ — ள்: ஈறு வந்த சாமத்து அரை நாழிகை இருள் உவா இருந்தாலும் — (இரவின்) நான்காஞ் சாமத்திற்பின் அரைநாழிகையளவு இருள் நிறைந்த அமாவாசை பொருந்தினும்லும், தேறுகின்ற அச் சதுர்த்தசி அப்படிச்சேரினும் — (கணித்துத்) தெளியப்பட்ட அவ்வபரபக்கத்துச் சதுர்த்தசியானது அவ்வாறு நான்காஞ்சாமத்தின் முன் அரைநாழிகையில் வந்து கூடினும், கொளல் வேண்டும் — (யோகசிவராத்திரியாகக்) கொள்ளல் வேண்டும், ஊறுதீர் தவத் துறவிர்காள் — குற்றம் நீங்கிய தவவொழுக்கத்தைக் கொண்ட முனிவர்களே, விதிமுறை உரைக்கும் இங்கு இவைநோற்கில் — விதிக்கிரமந் தவருமற் கூறப்படுகின்ற இவ்விரதங்களையனுஷ்டிக்கில், கூறும் மற்று உள சிவநிசி விரதம் — சொல்லப்பட்ட வேறு சிவராத்திரிவிரதங்கள், முக்கோடி நோற்றிடல் ஒக்கும் — மூன்றுகோடிக்கணக்கானவற்றை யனுஷ்டித்தலை நிகர்க்கும் எ — று. (4)

பருவ மாறுள வருடமோ ரொன்றுறு பன்னிரு மதிதோறு
முருவ மாமதி நிறைந்தது குறைந்திடு மோரிரு பக்கத்து
மருவு மாசதுர்த் தசியறு நான்கினு நோற்பது வழக்காகுந்
திருவ மர்ந்தமா தவரிதை நித்திய சிவநிசி யெனச்சொல்வார்.

[பருவம் ஆ(று)உள வருடம்ஓர் ஒன்(று)உறு பன்னிரு மதிதோறும்
உருவ மாமதி நிறைந்(து)அது குறைந்திடும் ஓர்இரு பக்கத்(து)ம்
மருவு மாசதுர்த் தசிஅறு நான்கினும் நோற்பது வழக்(கு)ஆகும்
திருஅ மர்ந்தமா தவர்இதை நித்திய சிவநிசி எனச்சொல்வார்.]

இ — ள்: ஆறு பருவம் உள வருடம் ஓர் ஒன்று உறும் பன்னிரு மதி தோறும் — ஆறுபருவங்களைக்கொண்ட ஒவ்வொரு வருடகாலத்தினுமுள்ள பன்னிரண்டு மாதங்களிலும், உருவ மா மதி நிறைந்து அது குறைந்திடும் ஓர் இரு பக்கத்தும் — அழகிய பெரிய சந்திரனையன் வளர்ந்துந் தேய்ந்தும் வருகின்ற ஒவ்வொரு பூருவ அபரபக்கங்களிரண்டினும், மருவு மா சதுர்த்தசி

அறுநான்கினும் — பொருந்திய பெருமையையுடைய இருபத்துநான்கு சதுர்த்தசி தினங்களினும், நோற்பது வழக்கு ஆகும் — இவ்விரதத்தையநுஷ்டிப்பது வழக்கமாகும், திரு அமர்ந்த மாதவர் — அருள் நிறைந்த மகாதவத்தையுடையபெரியோர்கள், இதை நித்திய சிவதிசி எனச் சொல்வார் — இதனை நித்தியசிவராத்திரியென்று கூறுவர் எ — று. (5)

அதிக மாகமா தத்தினிற் குளிர்கதி ரம்புலி குறைபக்கத்
திதிபன் னன்குமீன் றிங்கண்முற் றிருதியை சித்திரை மதிதேயு
மதியி னட்டமி யிடபமா தத்துமுன மருவுமட் டமிமாசில்
பதிக யாழ்மதி மதிவளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கடகத்தில்.

[அதிக மாகமா தத்தினில் குளிர்கதிர் அம்புலி குறைபக்க
திதிபன் னன்குமீன் திங்கள்முன் திருதியை சித்திரை மதிதேயும்
மதியின் அட்டமி இடபமா தத்துமுன் மருவும்அட் டமிமா(சு)இல்
பதிக யாழ்மதி மதிவளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கடகத்தில்.]

இ — ள்: அதிக மாக மாதத்தினில் — பெருமையையுடைய மாசிமாதத்தில், குளிர் கதிர் அம்புலி குறை பக்க திதி பன்னெங்கு — குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் கலைகள் குறைந்த அபரபக்கச் சதுர்த்தசியும், மீன் திங்கள் முன் திருதியை — பங்குனி மாதத்தில் பூருவபக்கத்திருதியையும், சித்திரை மதிதேயும் மதியில் அட்டமி — சித்திரை மாதத்தில் அபரபக்கத்தட்டமியும், இடப மாதத்து முன் மருவும் அட்டமி — வைகாசி மாதத்தில் பூருவபக்கத் தட்டமியும், மாசில் பதிக யாழ் மதி மதி வளர் சதுர்த்தி — குற்றமில்லாத ஆனி மாதத்தில் பூருவபக்கச் சதுர்த்தியும், பகர்ந்த கற்கடகத்தில் — கூறப்பட்ட ஆடிமாதத்தில் எ — று. (6)

விரியும் வெண்ணிலாக் கலைகுறை பஞ்சமி விளங்குமா வணிதன்னிற்
பரியுஞ் சுக்கில பக்கவட் டமிபுரட் டாதிமுற் பதின்மூன்று
மரிய வைப்பசிக் கம்புலி வளர்திதி யாறிரண் டறைதேளிற்
றெரியு முற்படு சத்தமி பிற்படு திதியிலட் டமிதானும்.

[விரியும் வெண்நிலாக் கலைகுறை பஞ்சமி விளங்கும்ஆ வணிதன்னில்
பரியும் சுக்கில பக்கஅட் டமிபுரட் டாதிமுன் பதின்மூன்றும்
அரிய ஐப்பசிக்(கு) அம்புலி வளர்திதி ஆ(று)இரண்(டு) அறைதேளில்
தெரியும் முன்படு சத்தமி பின்படு திதியில்அட் டமிதானும்.]

இ — ள்: விரியும் வெண் நிலா கலை குறை பஞ்சமி — கிரணங்கள் விரிந்த வெள்ளிய சந்திரனது கலைகள் தேய்ந்த அபரபக்க பஞ்சமியும், விளங்கும் ஆவணிதன்னில் பரியும் சுக்கிலபக்க அட்டமி — விளங்குகின்ற ஆவணிமாதத்தில் பொருந்திய பூருவபக்கத்தட்டமியும், புரட்டாதி முன் பதின்மூன்றும் —

புரட்டாதிமாதத்தில் பூருவபக்கத்திரயோதசியும், அரிய ஐப்பசிக்கு அம்புலி வளர் திதி ஆறிரண்டு — அருமையாகிய ஐப்பசி மாதத்திற் சந்திரன் வளருகின்ற பூருவபக்கத்துவாதசியும், அறை தேளில் தெரியும் முன்படு சத்தமி — சொல்லப்படுகின்ற கார்த்திகை மாதத்தில் எண்ணப்படும் பூருவபக்கச்சத்தமியும், பின்படு திதியில் அட்டமி தானும் — அபரபக்கத்தட்டமியும் எ — று. (7)

ஒப்பின் மார்கழி யுபயபக் கத்தினி லுறுதிதி பதிஞன்குஞ்
செப்பு மான்மதி வளர்மதி தனிலுறு திருநியை யிவைசூலக்
கப்பு வேற்கரக் கண்ணுத லருச்சனைக் குரியவா கமமெல்லாந்
தப்பி லாதெடுத் திவைகண்மா தச்சிவ நிசியெனச் சாற்றும்மே.

[ஒப்(பு)இல் மார்கழி உபயபக் கத்தினில் உறுதிதி பதிஞன்கும்
செப்பு மான்மதி வளர்மதி தனில்உறு திருதியை இவைசூலக்
கப்பு வேல்கரக் கண்ணுதல் அருச்சனைக்(கு) உரியஆ கமம்எல்லாம்
தப்(பு)இ லா(து)எடுத்(து) இவைகள்மா தச்சிவ நிசிஎனச் சாற்றும்மே.]

இ — ள்: ஒப்பு இல் மார்கழி உபய பக்கத்தினில் உறு திதி பதிஞன்கும் — ஒப்பில்லாத மார்கழி மாதத்திற் பொருந்திய பூருவ அபரபக்கங்களிரண்டினு முள்ள சதுர்த்தசிகளும், செப்பு மான் மதி வளர் மதி தனில் உறு திருதியை — சொல்லப்பட்ட தைமாதத்தில் வருகின்ற பூருவபக்கத்திருதியையும், இவை — ஆகிய இப்பதிஞன்குதிதிகளும், கப்புவேல் சூலக்கரக்கண்ணுதல் அருச்சனைக்கு உரிய — முக்கருப் பொருந்திய சூலாயுதத்தைத் தாங்கிய திருக்கரத்தையும் நெற்றிக்கண்ணையுமுடைய சிவபெருமானை யருச்சனைசெய்தற்குரிய (காலமாகும்), இவைகள் — இத்திதிகளே, ஆகமம் எல்லாம் தப்பிலாது எடுத்து — எல்லா ஆகமங்களும் தவறுமலெடுத்து, மாதசிவநிசி என சாற்றும் — மாதசிவராத்திரியென்று கூறும் எ — று. (8)

மாறின் மார்கழிச் சதுர்த்தசி யாதிரை மருவிலுத் தமமாகு
மூறி லாக்குடத் திங்களிற் குளிர்கதி ருடுபதி குறைபக்கந்
தேறி நின்றிடு சதுர்த்தசி குசன்கதிர்க் கிழமையிற் சேர்வுற்ற
லீறி னற்கதி கொடுக்குமுக் கோடியாஞ் சிவநிசிக் கிணையாமால்.

[மா(று)இல் மார்கழிச் சதுர்த்தசி ஆதிரை மருவில்உத் தமம்ஆகும்
ஊ(று)இ லாக்குடத் திங்களில் குளிர்கதிர் உடுபதி குறைபக்கம்
தேறி நின்றிடு சதுர்த்தசி குசன்கதிர்க் கிழமையில் சேர்வுற்றால்
(சு)றுஇல் நற்கதி கொடுக்குமுக் கோடியாம் சிவநிசிக்(கு) இணையாம்ஆல்.]

இ — ள்: மாறு இல் மார்கழிச் சதுர்த்தசி ஆதிரை மருவில் உத்தமம் ஆகும் — குற்றமில்லாத மார்கழிமாதத்துச்சதுர்த்தசியானது திருவாதிரை யுடன் கூடிலுத்தமமாகக் கொள்ளப்படும், ஊறு இலாக் குடத்திங்களில் — குற்றமில்லாத மாசிமாதத்தில், குளிர் கதிர் உடுபதி குறைபக்கம் — குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன்தேயாநின்ற அபரபக்கத்தில், தேறி நின்றிடு சதுர்த்தசி — தெளியப்பட்டு நின்ற சதுர்த்தசியானது, குசன் கதிர்க்கிழமையிற் சேர்வுற்றால் — செவ்வாய்க்கிழமையிலேனும் ஞாயிற்றுக்கிழமையிலேனும் பொருந்துமாகில், ஈறு இல் நல் கதி கொடுக்கும் முக்கோடியாம் சிவநிசிக்கு இணையாம் — அழிவற்ற மோக்ஷத்தைக்கொடுக்கின்ற மூன்றுகோடிக்கணக்காகிய சிவராத்திரிக்குச்சமமுடையதாகும் எ — று.

ஆல்-அசைநிலை: (9)

உற்ற பன்னிரு மதியிலிவ் வீரதநோற் றுளம்விழைந் தனமுன்னாட்
பெற்று ளோரயன் மாசியிற் கேசவன் பிறங்குபங் குனிதன்னிற்
சொற்ற சித்திரைத் திங்களிற் பார்ப்பதி சூரியன் விடைமாதத்
தற்ற மற்றிடு மிதுனமா தத்தர னுடியிற் குமரேசன்.

[உற்ற பன்னிரு மதியில்இவ் விரதம்நோற்(று) உளம்விழைந்தன முன்நாள்
பெற்று ளோர்அயன் மாசியில் கேசவன் பிறங்குபங் குனிதன்னில்
சொற்ற சித்திரைத் திங்களில் பார்ப்பதி சூரியன் விடைமாதத்(து)
அற்றம் அற்றிடும் மிதுனமா தத்(து)அரன் ஆடியில் குமரேசன்.]

இ — ள்: உற்ற பன்னிரு மதியில் இவ்விரதம் நோற்று — பொருந்திய பன்னிரண்டுமாதத்தினும்வருகின்ற இம்மாத சிவராத்திரிகளை அனுட்டித்து, உளம் விழைந்தன முன் நாள் பெற்றுளோர் — மனதின் கண்ணே விரும்பியவைகளை முன்னைநாளிலே பெற்றவர்கள் (யாரெனில்), மாசியில் அயன் — மாசிமாதத்தில் பிரமாவும், பிறங்கு பங்குனி தன்னில் கேசவன் — விளங்கா நின்ற பங்குனி மாதத்தில் விஷ்ணுவும், சொற்ற சித்திரைத் திங்களில் பார்ப் பதி — சொல்லப்பட்ட சித்திரைமாதத்தில் பார்ப்பதிதேவியாரும், விடை மாதத்து சூரியன் — வைகாசிமாதத்தில் சூரியனும், அற்றம் அற்றிடு மிதுன மாதத்து அரன் — கேடற்ற ஆனிமாதத்தில் உருத்திரனும், ஆடியில் குமரே சன் — ஆடிமாதத்தில் குமாரக்கடவுளும் எ — று. (10)

சிங்கத் தப்புலி கன்னியிற் சேடனிந் திரனெடுந் துலைத்திங்க
டங்கு கார்த்திகை நாமக டனுமதி தனின்மனுன் மனிதையிற்
றுங்க மாரிமி லிடபதே வன்பசுஞ் சுகமொழி யுமைவாம
பங்க நீடரு டந்திடத் தக்கநற் பக்கராத் திரிசொல்வாம்.

[சிங்கத்(து) அம்புலி கன்னியில் சேடன்இந் திரன்நெடும் துலைத்திங்கள்
தங்கு கார்த்திகை நாமகள் தனுமதி தன்னில் மனைன் மனிதையில்
துங்கம் ஆர்இமில் இடபதே வன்பசும் சுகமொழி உமைவாம
பங்கன் நீ(டு)அருள் தந்திடத் தக்கநல் பக்கராத் திரிசொல்வாம்.]

இ — ள்: சிங்கத்து அம்புலி — ஆவணிமாதத்திற் சந்திரனும், கன்னியில் சேடன் — புரட்டாதிமாதத்தில் ஆதிசேடனும், நெடும் துலைத் திங்கள் இந்திரன் — நெடிய ஐப்பசிமாதத்தில் இந்திரனும், தங்கு கார்த்திகை நாமகள் — பொருந்திய கார்த்திகைமாதத்தில் சரசுவதியும், தனுமதி தன்னில் மனைன் மனி — மார்கழிமாதத்து மனைன்மனிதேவியும், தையில் துங்கம் ஆர்இமில் இடபதேவன் — தைமாதத்தில் உயர்வுபொருந்திய முரிப்பையுடைய நந்திதேவருமாகிய (இவர்களேயாம்), பசும் சுக மொழி யுமை வாம பங்கன் — பச்சைநிறம்பொருந்திய கிளிமொழியையொத்த இனியவார்த்தையையுடைய உமாதேவியாரை இடப்பாகத்திற்கொண்டருளிய சிவபெருமான், நீடு அருள் தந்திடத் தக்க நல் பக்கராத்திரி சொல்வாம் — மிகவுமனுக்கிரகஞ் செய்தற்குரிய நல்ல பக்கசிவராத்திரியை இனிக்கூறுவாம் எ — று. (11)

மகர திங்களி னபரபக் கத்திடை வருபிர தமையெய்தப்
புகலு மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்றுநாட் புசிப்பதோர் பொழு
பகர்த ரும்பதி னன்கினி னேற்பது பக்கராத் திரியாகு [தாகிப்
மிகப ரந்தரு விரதமற் றிதற்கிணை யாவரே புகல்கிற்பார்.

[மகர திங்களின் அபரபக் கத்திடை வருபிர தமைஎய்தப்
புகலும் அன்றுதொட்(டு) எதிர்ந்தபன் மூன்றுநாள் புசிப்பது ஓர் பொழு(து)
பகர்த ரும்பதி னன்கினில் நோற்பது பக்கராத் திரியாகும் [ஆகிப்
இகப ரந்தரு விரதம்மற்(று) இதற்(கு)இணை யாவரே புகல்கிற்பார்.]

இ — ள்: மகர திங்களின் அபரபக்கத்திடை வரும் பிரதமை எய்த — தைமாதத்தின்கண்ணே அபரபக்கத்தில் வருகின்ற பிரதமையானது பொருந்த, புகலும் அன்று தொட்டு — சொல்லப்படுகின்ற அத்தினந்தொடங்கி, எதிர்ந்த பன்மூன்றுநாள் — எதிராக வருகின்ற பதின்மூன்று தினங்களும், ஓர் பொழுது புசிப்பது ஆகி — ஒரு பொழுது மாத்திரம் புசிப்பதாய், பகர்தரும் பதினன்கினில் நோற்பது — கூறப்படுகின்ற பதினான்காந்திதியாகிய சதுர்த்தசிதினத்திலுபவாசஞ்செய்வது, பக்க ராத்திரியாகும் — பக்க சிவராத்திரியென்று கூறப்படும், இதற்கு இணை—இச்சிவராத்திரிக்குச் சமமாக, இகபரம் தரும் விரதம் — இம்மை மறுமைச் சுகத்தைத் தரத்தக்க விரதங்கள், யாவரே புகல்கிற்பார் — யார்தாம் எடுத்துக் கூறவல்லவர் எ — று.

மற்று அசை. (12)

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட் டனவாகு
முருகு காதலோ டைந்தையு நோற்றனன் றுரைத்தவை முடியாதேன்
மருவு மிங்கிதி லொன்றனே விதித்திடும் வரன்முறை வழுவாமற்
பெருகு மன்புட னேற்றவர் பெறற்கரும் பெருங்கதி பெறுவாரால்.

[அருள்த ரும்சிவ ராத்திரி இப்படி ஐந்துபட் டனஆகும்
உருகு காதலோ(டு) ஐந்தையும் நோற்றல்நன்(று) உரைத்தவை முடியாதேல்
மருவும் இங்(கு) இதின் ஒன்றனே விதித்திடும் வரன்முறை வழுவாமல்
பெருகும் அன்புடன் நோற்றவர் பெறற்(கு)அரும் பெருங்கதி பெறுவர்ஆல்.]

இ — ள்: அருள் தரும் சிவராத்திரி இப்படி ஐந்து பட்டனவாகும் — அனுக்கிரகத்தைக் கொடுக்கின்ற சிவராத்திரியானது இவ்வாறு ஐந்து பிரிவையுடையதாகும், உருகு காதலோடு ஐந்தையும் நோற்றல் நன்று — கசிவு கொண்ட அன்போடு இவ்வைந்து சிவராத்திரிகளையும் அனுஷ்டிப்பது நன்மையாம், உரைத்தவை முடியாதேல் — கூறப்பட்ட அவையனைத்தையும் அனுஷ்டிக்க முடியாதாயின், மருவும் இங்கிதில் ஒன்றனே — பொருந்திய இவ்விரதத்தில் ஒன்றைமாத்திரம், விதித்திடும் வரன்முறை வழுவாமல் — விதிக்கப்பட்ட கிரமந்தவறாமல், பெருகும் அன்புடன் நோற்றவர் — மிக்க காதலோடு அனுஷ்டித்தவர்கள், பெறற்கு அரும் பெருங்கதி பெறுவார் — பெறுதற்கரிய மோக்ஷப்பேற்றை அடைகுவர் எ — று.

ஆல் அசை. (13)

ஊதை முன்படு பஞ்சியி னுறுவினை யோட்டியொண் டுவரோட்டக்
கோதை பங்கன தருட்கடற் குளித்திடுங் கோதறு குணத்தீர்கா
ளேதை யாமெடுத் துரைப்பதிங் குமக்கினி யிமையவ ரறியாரிப்
பேதை மானுட ரறிவரோ சிவநிசிப் பெருமையின் றிறனம்மா.

[ஊதை முன்படு பஞ்சியின் உறுவினை ஓட்டிஒண் டுவர் ஓட்டக்
கோதை பங்கன(து) அருட்கடல் குளித்திடும் கோ(து)அறு குணத்தீர்காள்
ஏதை யாம்எடுத்(து) உரைப்ப(து)இங்(கு) உமக்(கு)இனி இமையவர் அறியாப்
பேதை மானுடர் அறிவரோ சிவநிசிப் பெருமையின் திறன்அம்மா.]

இ — ள்: ஊதை முன்படு பஞ்சியின் உறுவினை ஓட்டி — காற்றின்முன் அகப்பட்ட பஞ்சைப்போலப்பொருந்திய தீவினையையோட்டெடுப்பச்செய்து, ஒள் துவர் ஓட்டக்கோதை பங்கனது — ஒளிபொருந்திய பவளம் போன்ற அதரங்களையுடைய உமாதேவிபங்கராகிய சிவபெருமானது, அருள் கடல் குளித்திடும் கோது அறு குணத்தீர்காள் — கிருபாசாகரத்தின் கண்ணே யமிழ்ந்தாநின்ற குற்றமற்ற குணத்தையுடைய முனிவர்களே, இங்கு உமக்கு இனி ஏதை யாம் எடுத்து உரைப்பது — இங்கே உங்களுக்கு இவியெவற்றை யாமெடுத்து (விதந்து) கூறுவது, சிவநிசிப் பெருமையின்திறன் — சிவராத்திரியினது மகிமையின் வலிமையை, இமையவர் அறியார் — தேவர்களும் முற்ற அறிந்திலர், இப்பேதை மானிடர் அறிவரோ — இந்த அறியாமையையுடைய மனுடர்களறிவார்களோ (அறியார்) எ — று.

அம்மா வியப்பு. (14)

வேறு

மத்தகமால் களிற்றுரிவை போர்த்துழுவை
யுரித்துடுத்து மதியஞ் சூடும்
வித்தகனீ னிறமிடற்றுச் சிவனிரவா
கியவிரதம் விளங்க நோற்கி
லுத்தமமத் திமமதம மெனவொருமூ
வகைப்படுமவ் வொழுங்கிற் சொல்வன்
முத்தழல்வேட் டிடுமுனிவீர் கேண்மினெனச்
சூதமுனி மொழிவ தானன்.

[மத்தகமால் களிற்(று)உரிவைபோர்த்(து)உழுவை உரித்(து)உடுத்துமதியம்சூடும் வித்தகன்நீல் நிறமிடற்றுச் சிவன்இர(வு) ஆகியவிரதம் விளங்க நோற்கில் உத்தமம்மத் திமம்அதமம் எனஒருமூ வகைப்படும்அவ் ஒழுங்கில் சொல்வன் முத்தழல்வேட் டிடும்முனிவீர் கேள்மின்எனச் சூதமுனி மொழிவ தானன்.]

இ — ள்: மத்தக மால் களிற்று உரிவை போர்த்து — மத்தகத்தையுடைய மயக்கம் பொருந்திய யானையின்தோலைப் போர்வையாகக்கொண்டும், உழுவை உரித்து உடுத்து — புலியையுரித்து (அத்தோலை) உடையாகத்தரித்தும், மதி யஞ்சூடும் வித்தகன் — சந்திரனைத் திருமுடியிற் சூடிய வித்தகத்தன்மைய யுடையவராகிய, நீல் நிற மிடற்றுச் சிவன் இரவாகிய விரதம் — கரிய கண் டத்தைக்கொண்ட சிவபெருமானது திருவிரவின்விரதத்தை, விளங்க நோற் கில் — விளக்கமாக அனுஷ்டிக்கில், உத்தமம் மத்திமம் அதமம் என ஒரு மூவ கைப்படும் — உத்தமம் மத்திமம் அதமம் என மூன்று பேதப்படும், அவ்வொ ழுங்கில் சொல்வன் — அவைகளைக் கிரமமாகக் கூறுவேன், முத்தழல் வேட்டி டும் முனிவீர் கேண்மின் என — ஆகவனீயம் காருகபத்தியம் தக்கணாக்கினீயம் என்கின்ற மூன்றுவகையாகிய அக்கினியையுங்கொண்டு யாகஞ்செய்கின்ற முனி வர்களே கேட்கக்கடவீர்களென்று, சூதமுனி மொழிவதானன் — சூதமகாமுனி வர் சொல்லுவாராயினர் எ — று. (15)

விரித்தசெழுங் கதிர்ப்பரிதி மேற்றிசைபோ
யந்திவந்து மேவுங் காறுந்
தெரித்ததிர யோதசியாந் திதிநின்று
பின்புசதுர்த்தசிதான் கூடித்
தரித்தவிரா வன்றிமற்றைப் பகன்முழுதுந்
தங்கியிடிற் றறுகட் டந்தி
யுரித்தபிரா னிரசனிக்கு ளுத்தமத்தி
லுத்தமமா யுரைப்பர் மன்னே.

[விரித்தசெழும் கதிர்ப்பரிதி மேல்திசைபோய் அந்திவந்து மேவும் காறும் தெரித்ததிர யோதசியாம் திதிநின்று பின்புசதுர்த் தசிதான் கூடி தரித்தஇரா அன்றிமற்றைப் பகல்முழுதும் தங்கியிடில் தறுகண் தந்தி உரித்தபிரான் இரசனிக்குள் உத்தமத்தில் உத்தமமாய் உரைப்பர் மன்னே.]

இ — ள்: விரித்த செழும் கதிர்ப்பரிதி மேல் திசை போய் அந்தி வந்து மேவும் காறும் — பரந்த செழுமையாகிய கிரணங்களையுடைய சூரியன் மேற்குத் திசையையடைந்து அந்திக்காலம் வரும்வரையும், தெரித்த திரயோதசியாம் திதி நின்று — கணிக்கப்பட்ட திரயோதசித்திதியானது நின்று, பின்பு சதுர்த்தசி தான் கூடி — பின்பு சதுர்த்தசித்திதியானது கூடப்பெற்று, தரித்த இரா அன்றி — பொருந்திய இரவுமாத்திரமன்றி, மற்றைப்பகல் முழுதும் தங்கியிடில் — மற்றைநாட்பகல் முழுவதும் செறிந்து நிற்குமாயின், தறுகண் தந்தி உரித்த பிரான் இரசனிக்குள் — வன்கண்மையுடைய யானையையுரித்த சிவபெருமானது இராத்திரிக்குள், உத்தமத்தில் உத்தம மாய் உரைப்பர் — உத்தமோத்தம சிவராத்திரியென்று கூறுவர் எ — று.

மன் ஒ அசைநிலைகள். (16)

உதித்தகதி ரத்தமித்த பின்கூடுஞ் சதுர்த்தசியுத்
தமமா மென்பர்
துதித்தவுத யாதியுத யாந்தமதாய்ப் பகலிரவு
தோய்ந்து நிற்குங்
கதித்தசதுர்த் தசிகதிரத் தமிக்குமுன்சேர்
சதுர்த்தசிநற் கங்குற் போதின்
மதித்தபத்து நாழிகையின் பின்கூடுஞ் சதுர்த்தசிமத்
திமமா மன்றே.

[உதித்தகதிர் அத்தமித்த பின்கூடும் சதுர்த்தசிஉத் தமமாம் என்பர் துதித்தஉத யாதிஉத யஅந்தம(து)ஆய்ப் பகல்இரவு தோய்ந்து நிற்கும் கதித்தசதுர்த் தசிகதிர்அத் தமிக்குமுன்சேர் சதுர்த்தசிநல் கங்குல் போதில் மதித்தபத்து நாழிகையின் பின்கூடும் சதுர்த்தசிமத் திமமாம் அன்றே.]

இ — ள்: உதித்த கதிர் அத்தமித்த பின் கூடும் சதுர்த்தசி — உதயஞ் செய்த சூரியனவன் அஸ்தமனமானபின்பு கூடுகின்ற சதுர்த்தசியானது, உத்தமமாம் என்பர் — உத்தமசிவராத்திரியென்று புகலுவர், துதித்த உதயாதி உதய அந்தமதாய் பகல் இரவு தோய்ந்து நிற்கும் கதித்த சதுர்த்தசி — துதிக்கப்படுகின்ற உதயந்தொடங்கி மற்றநாள் உதயம் இறுதியாகவுள்ள பகலும் இரவும் செறிந்து நிற்கின்ற சிறந்த சதுர்த்தசியும், கதிர் அத்தமிக்கு முன் சேர் சதுர்த்தசி — சூரியன் அஸ்தமிக்குமுன்னே கூடுகின்ற சதுர்த்தசியும், நல் கங்குல் போதில் மதித்த பத்து நாழிகையின் பின் கூடும் சதுர்த்தசி — நல்ல இரவின் கண்ணே கணிக்கப்பட்ட பத்துநாழிகைக்குமேல் வந்து கூடுகின்ற சதுர்த்தசியும், மத்திமமாம் — மத்திமசிவராத்திரியாகும் எ — று

அன்று ஏ அசைநிலைகள் (17)

அல்லினிரு பதுகடிகை யளவுசதுர்த் தசிதானின்
றதற்குப் பின்னர்ச்
சொல்லினுயர் மதிபரிதி யுடன்கூடு மமாவாசை
தொட்டத் தோடு

புல்லியிடி னதமசிவ ராத்திரியா மெனவெடுத்துப்
புகல்வ ரல்லி
லல்லியல்சேர் பதின்மூன்றுந் திதிதொட்ட சதுர்த்தசியே
நன்ற தாமால்.

[அல்லின் இரு பதுகடிகை அளவுசதுர்த் தசிதான்நின்(று) அதற்குப் பின்னர்ச் சொல்லின்உயர் மதிபரிதி உடன்கூடும் அமாவாசை தொட்(டு)அத் தோடு புல்லிஇடின் அதமசிவ ராத்திரியாம் எனஎடுத்துப் புகல்வர் அல்லில் நல்இயல்சேர் பதின்மூன்றும் திதிதொட்ட சதுர்த்தசியே நன்ற தாம்ஆல்.]

இ — ள்: அல்லின் இருபது கடிகை அளவும் சதுர்த்தசிதான் நின்று — இரவிலிருபது நாழிகைவரையும் சதுர்த்தசித்திதிநின்று, அதற்குப் பின்னர் — அதன்மேல், சொல்லின் உயர் மதி பரிதிஉடன் கூடும் அமாவாசைதொட்டு அத்தோடு புல்லியிடின் — மேலாகக்கூறப்படுகின்ற சந்திரனனவன் சூரிய னுடன் வந்துகூடுகின்ற அமாவாசைத்திதியானது தொடங்கி அச்சதுர்த்தசி யோடு பொருந்துமாயின், அதம சிவராத்திரியாம் என எடுத்துப் புகல்வர் — அதமசிவராத்திரியென்று விதந்து கூறுவர், அல்லில் நல் இயல் சேர் பதின் மூன்றுந்திதி தொட்ட சதுர்த்தசியே — இரவில் நன்கமைந்த பதின்மூன்றும் திதியாகிய திரயோதசித்திதியோடு பொருந்தப்பெற்ற சதுர்த்தசித் திதியே, நன்றதாம் — நன்மையையுடைத்தாம் எ — று.

ஆல் அசை. (18)

கங்குறனிற் பதின்மூன்றுந் திதியுடனே சதுர்த்தசிபோர்
கலிதான் கூடி
லங்கதுவே சிவநிசியாக் கொளல்வேண்டுஞ் சிவரூப
மாகு மேனமை
தங்குசதுர்த் தசிதிரயோ தசிசத்தி ரூபமிவை
தாமொன் றாகித்
துங்கமுறக் கூடுமிராச் சிவலிங்கா காரமெனச்
சொல்வர் மன்னே.

[கங்குல்தனில் பதின்மூன்றும் திதிஉடனே சதுர்த்தசிஓர் கலிதான் கூடில் அங்(கு)அதுவே சிவநிசியாக் கொளல் வேண்டும் சிவரூபம் ஆகும்மன்னை தங்குசதுர்த் தசிதிரயோ தசிசத்தி ரூபம்இவை தாம்ஒன்(று)ஆகித் துங்கம்உறக் கூடும்இராச் சிவலிங்கா காரம் எனச் சொல்வர் மன்னே.]

இ — ள்: கங்குல்தனில் பதின்மூன்றுந் திதியுடனே சதுர்த்தசி ஓர் கலிதான் கூடில் — இரவில் திரயோதசித் திதியோடு சதுர்த்தசித் திதியானது ஓர் கலியளவுகாலமாயினும் பொருந்தில், அங்கு அதுவே சிவநிசியாக் கொளல் வேண்டும் — அதனையே சிவராத்திரிதினமாகக் கொள்ளல்வேண்டும், மேன்மை தங்கு சதுர்த்தசி சிவரூபம் ஆகும் — மகிமைபொருந்திய சதுர்த்தசித்திதி சிவவடிவமாகும், திரயோதசி சத்திரூபம்—திரயோதசித்திதி சத்திவடிவமாகும்.

இவைதாம் ஒன்றுகித் துங்கமுறக்கூடும் இரா — இவ்விரண்டு திதிகளும் ஒன்றுபட்டு உயர்வுபொருந்தக்கூடுகின்ற இரவானது, சிவலிங்காகாரம் எனச் சொல்வர் — சிவலிங்க வடிவமுடையதுஎன்றுகூறுவர் (அறிஞர்) எ — று.

மன் ஒ அசைநிலைகள். (19)

ஆசிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதா னுவியக
லங்கம் போலாம்
பேசுமிதிற் பூசைசெய்யிற் பிரமகத்தி தோடமுண்டாம்
பிறங்கு மந்தத்
தேசமுழு வதுங்கெடுமுற் புண்ணியம்போஞ்
சிந்தைசெய்யிற் றிடுக்கிட் டுள்ளங்
கூசுநர கங்கடம்மிற் கொடியவிரௌ ரவமதனிற்
குளிப்பர் மாதோ.

[ஆகில்அமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் ஆவிஅகல் அங்கம் போலாம் பேசும்இதில் பூசைசெய்யில் பிரமகத்தி தோடம் உண்டாம் பிறங்கும் அந்தத் தேசம்முழு வதும்கெடும்முன் புண்ணியம்போம் சிந்தைசெய்யில் திடுக்கிட்(டு) [உள்ளம்
கூசுநர கங்கள் தம்மில் கொடிய இரௌ ரவம்அதனில் குளிப்பர் மாதோ.]

இ — ள்: ஆசில் அமாவாசை தொட்ட சதுர்த்தசிதான் — குற்றமில்லாத அமாவாசைத்திதியை (அர்த்தராத்திரியில்) நீண்டிநிற்குஞ் சதுர்த்தசியானது, ஆவி அகல் அங்கம்போலாம் — உயிர் நீங்கப்பெற்ற சரீரத்துக்குச் சமமாகும், பேசும் இதில் பூசைசெய்யில் — கூறப்படுகின்ற இத்தினத்திற்சிவராத்திரிபூசை செய்யின், பிரமகத்தி தோடம் உண்டாம் — பிராமணனைக்கொன்ற தோஷ முண்டாகும், பிறங்கும் அந்த தேசம் முழுவதும் கெடும் — விளங்குகின்ற அந்த நாடு முழுவதும் நாசமடையும், முன்புண்ணியம் போம்—முன்னெளிற்செய்த புண் ணியங்களுமழியும், சிந்தைசெய்யில் — மனதினுல் நினைத்தாலும், திடுக்கிட்டு உள்ளம் கூசு நரகங்கள் தம்மில் — நடுக்கங்கொண்டு மனங் கூசுகின்ற நரகங்க ளுக்குள், கொடிய இரௌரவம் அதனில் குளிப்பர் — கொடுமையையுடை ரௌரவம் என்னும் நரகத்தில் விழுந்து வருந்துவர் எ — று.

மாது ஒ அசைநிலைகள்; (20)

ஊறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிவை திகர்
விரத்தர்க்குரிய தாகுங்
கூறுபுகழ்ச் சைவர்முன்னுட் கொளல்வேண்டுந்
திருவோணங் கூடி நிற்கு

மாறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் விரத்தருக்கும்
வாழ்வின் மிக்க
தூறில்கிரு கத்தருக்கு மாகுமமா வாசையெனுந்
தோட மின்றே.

[ஊ(று)இல்அமா வாசைதொட்ட சதுர்த்தசிவை நிகர்விரத்தர்க்(கு) உரிய(து)
[-ஆகும்
கூறுபுகழ்ச் சைவர்முன்நாள் கொளல்வேண்டும் திருவோணம் கூடி நிற்கும்
மா(று)இல்அமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் விரத்தருக்கும் வாழ்வின்மிக்க
தூ(று)இல்கிரு கத்தருக்கும் ஆகும்அமா வாசைஎனும் தோடம் இன்றே.]

இ — ள்: ஊறு இல் அமாவாசை தொட்ட சதுர்த்தசி — குற்றமற்ற அமாவாசைத்திதியோடு பொருந்திய சதுர்த்தசியானது, வைதிகர் விரத்தர்க்கு உரியது ஆகும் — வேதஒழுக்கத்தை யுடையவர்களுக்கும் துறவிகளுக்குமுரிய விரதமாகும், கூறுபுகழ் சைவர் முன் நாள் கொளல் வேண்டும் — சொல்லப் பட்ட கீர்த்தியையுடைய ஆகமகிரமத்தைக்கொண்ட சைவர்கள் முதற் றினத்தையே அனுஷ்டிக்கவேண்டும், திருவோணம் கூடி நிற்கும்மாறு இல் அமாவாசை தொட்ட சதுர்த்தசிதான் — திருவோணநட்சத்திரத்தோடு சேர்ந்துநிற்கின்ற குற்றமில்லாத அமாவாசையுடன் கூடிய சதுர்த்தசியானது, விரத்தருக்கும் வாழ்வின் மிக்க தூறு இல் கிருகத்தருக்கும் ஆகும் — துறவி களுக்கும் மிக்கவாழ்வையுடைய இழிவற்ற இல்லாச்சிரமிகளுக்குமுரியதாகும், அமாவாசை எனும் தோடம் இன்று — அமாவாசை தீண்டுதலாகிய குற்றம் இல்லையாம் எ — று.

ஏ - அசை. (21)

அற்றமிலத் தராத்திரிமுன் சதுர்த்தசியோர் கலிகூடி லன்றுகொள்க
செற்றமிலச் சதுர்த்தசிநள் ளிரவினிற்பின் னொருகலிதான்
[சேடித்துற்றுன்
மற்றநாட் கொளல்வேண்டும் வைதிகரும் விரத்தர்களு மதிக்கும்பக்க
முற்றதுதா னிரண்டுபடி லிரவிலதி கத்திதிதா னுசிதமாமே.

[அற்றம்இல்அத் தராத்திரிமுன் சதுர்த்தசிஓர் கலிகூடில் அன்று கொள்க
செற்றம்இல்அச் சதுர்த்தசிநள் ளிரவினில்பின் ஒருகலிதான் சேடித்(து) உற்றால்
மற்றநாள் கொளல்வேண்டும் வைதிகரும் விரத்தர்களும் மதிக்கும் பக்கம்
உற்றதுதான் இரண்டுபடில் இரவில்அதி கத்திதிதான் உசிதம் ஆமே.]

இ — ள்: அற்றம் இல் அர்த்தராத்திரி முன் சதுர்த்தசி ஓர் கலி கூடில் — கேடில்லாத நடுஇரவின்முன் சதுர்த்தசித்திதியானது ஒரு கலியளவு கூடினின் றால், அன்றுகொள்க — அத்தினத்திலே விரதத்தைக் கொள்ளல் வேண்டும், செற்றம் இல் அச் சதுர்த்தசி — பகைமையில்லாத அச்சதுர்த்தசித்திதியானது, நள் இரவினில் பின் ஒரு கலிதான் சேடித்து உற்றால் — மறுநாள் அர்த்தராத் திரியின் பின் ஒரு கலியளவு எஞ்சி நிற்குமாயின், வைதிகரும் விரத்தர்களும்

மற்றநாள் கொளல் வேண்டும் — வைதிகரும் துறவிகளும் பின்னளிலே விரதத்தைக்கொள்ளல்வேண்டும் (சைவர் முதனாட்கொள்ள வேண்டுமென்பதாம்). மதிக்கும் பக்கம் உற்றதுதான் இரண்டுபடில் — மதிக்கப்படுகின்ற சதுர்த்தசித்திதி இரண்டு அர்த்தராத்திரிகளினும்வந்து இரண்டு பட்டுவருமாயின், இரவில் அதிகத்திதிதான் உசிதமாம்—இரவிற்சதுர்த்தசித்திதியதிகமாய்நிற்குந்தினமே விரததினமாகக்கொள்ளத்தக்கதாம் எ — று.

ஏ அசை. (22)

திதித்திரயஞ் சேர்ந்துவரில் வைதிகர்க்குஞ்
சைவருக்குஞ் சிறந்த தாகு
மதிக்குமற்றை நிசிக்கடையி லமாவாசை கூடமுதன்
மழுமா னேந்து
நதிச்சடையோன் றனைப்பூசை புரிந்திடுதல்
சைவருக்கு நன்று மென்றே
விதித்தனரான் மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கு
மிந்தமுறை வேண்டுந் தானே.

[திதித்திரயம் சேர்ந்துவரில் வைதிகர்க்கும் சைவருக்கும் சிறந்த(து)ஆகும் மதிக்கும் அற்றை நிசிக்கடையில் அமாவாசை கூடமுதல் மழுமான் ஏந்தும் நதிச்சடையோன் தனைப்பூசை புரிந்திடுதல் சைவருக்கு நன்றும் என்றே விதித்தனரால் மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கும் இந்தமுறை வேண்டும் தானே.]

இ — ள்: திதித் திரயம் சேர்ந்துவரில் — (திரயோதசியின் பிற்கூறும் சதுர்த்தசியின் முழுக்கூறும் அமாவாசையின் முற்கூறுமாகிய) மூன்று திதிகளும் ஒரு தினத்தில் வருமாயின், வைதிகர்க்கும் சைவருக்கும் சிறந்ததாகும் — வேத ஒழுக்கத்தையுடையவர்களுக்கும் ஆகம ஒழுக்கத்தையுடையவர்களுக்கும் சிறப்புடையதாகும். மதிக்கும் அற்றை நிசிக்கடையில் அமாவாசை கூட முதல் — விரததினமாக நிச்சயிக்கப்பட்ட அத்தினத்தினிராமுடிவில் அமாவாசையானது வந்துகூடுமுன்னர், மழு மான் ஏந்தும் நதிச் சடையோன் தனை பூசை புரிந்திடுதல் — மழுவாயுதத்தையும் மான்கன்றையுந்தாங்கிய கங்கைநதியைக் கொண்ட சடைமுடியையுடைய சிவபெருமானைப்பூசிப்பது, சைவருக்கு நன்றும் என்று விதித்தனர் — ஆகமிகளுக்கு நன்மையையுடையதென்று (மேலோர்) கூறினர், மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கும் இந்தமுறைவேண்டும்— சோமவாரத்திலேவருகின்ற சதுர்த்தசித்திதிக்கும் இந்தக்கிரமங்கொள்ளல்வேண்டும் எ-று.

ஏ ஆல் தான் ஏ அசைகள். (23)

அற்றனின்மூ வைந்துகன்ன லாமளவிற் சதுர்த்தசிமுற் றினத்திற் கூடி
மற்றைநா ளிரவுபதி னைந்துகன்ன ளளவிலுவா வந்தொன் றாகி
யுற்றிடிற்பிற் றினந்தனிலே பூசைபுரிந் திடலாகா தொழிக முந்தச்
சொற்றதினத் தருச்சனைசெய் திடவிதித்தார் சைவநெறித் துறைநின்
[றோர்க்கே.

[அல்தனில்மூ ஐந்துகன்ன லாம்அளவில் சதுர்த்தசிமுன் தினத்தில் கூடி
மற்றைநாள் இரவுபதி னேந்துகன்னல் அளவில்உவா வந்(து)ஒன்(று) ஆகி
உற்றிடில்பின் தினத்தனிலே பூசைபுரிந் திடல்ஆகா(து) ஒழிக முந்தச்
சொற்றதினத் (து) அருச்சனைசெய் திடவிதித்தார் சைவநெறித் துறைநின்
[றேர்க்கே.]

இ — ள்: அல் தனில் மூவைந்து கன்னல் ஆம் அளவில் — இரவிற் பதி னேந்துநாழிகையளவில், சதுர்த்தசி முன் தினத்தில் கூடி — சதுர்த்தசித்திதியா னது முதலுளிற் கூடி, மற்றைநாள் இரவு பதினேந்து கன்னல் அளவில் — பின்னைநாள் இரவு பதினேந்துநாழிகையளவில், உவாவந்து ஒன்றுகி உற்றிடில் — அமாவாசையானது வந்து ஒன்றுகக் கூடுமாயின், பின் தினத்தனிலே பூசை புரிந்திடல் ஆகாது ஒழிக — பின்னைத்தினத்திலே பூசனை செய்தல் நன்றன்று ஆதலின் அதனை நீக்கக்கடவர், சைவ நெறித்துறை நின்றேர்க்கு — ஆகமவழி யிலே நிற்கின்றவர்களுக்கு, முந்தச் சொற்ற தினத்து அருச்சனை செய்திட விதித் தார் — முதலாகச் சொல்லப்பட்டநாளிற் பூசனைசெய்யும்படி கூறினர் எ — று.

ஏ அசை. (24)

முற்றிதியி லோர்பொழுதுண் டிடையில்விதித்
திடுந்திதியின் முழுது முண்ணு
திற்றிதனிற் றுயிலொருவி யேறேறி தனைப்பூசித்
தியாம நான்கும்
பிற்றிதியிற் சிவனடியார்க் கன்னதல்கிப்
பாரணந்தான் பின்னர்ச் செய்யச்
சொற்றிடுமா கம்மாதச் சிவநிசிநோற்
றிடக்கருதித் துணிந்து ளோர்க்கே.

[முன்திதியில் ஓர்பொழுதுஉண்(டு) இடையில்விதித் திடும்திதியில் முழுதும்
[உண்ணு(து)
இற்(று)இதனில் துயில்ஒருவி ஏ(று)ஏறி தனைப்பூசித்(து) யாமம் நான்கும்
பின்திதியில் சிவனடியார்க்(கு) அன்னம்தல்கிப் பாரணம்தான் பின்னர்ச்செய்யச்
சொற்றிடும் மாகம்மாதச் சிவநிசிநோற் றிடக்கருதித் துணிந்(து) உளோர்க்கே.]

இ — ள்: மாக மாத சிவநிசி நோற்றிட கருதி துணிந்துளோர்க்கு — மாசி மாதத்தின்கண்வருகின்ற மகாசிவராத்திரியை அனுஷ்டிக்க நினைத்துத்துணிந்த வர்கட்கு, முன் திதியில் ஓர் பொழுது உண்டு — முற்றிதியாகிய திரயோதசி வருந்தினத்தில் ஒரு பொழுது மாத்திரம் உணவுகொண்டு, இடையில் விதித்தி டும் திதியில் முழுதும் உண்ணுது — இடையிலே கூறப்பட்ட சதுர்த்தசித்திதியில் முழுதும் உடவாசியாகி, இற்று இதனில் துயில் ஒருவி — இந்தத்தினத்திலே

நித்திரையுமின்றி, ஏறு ஏறிதனே யாமம் நான்கும் பூசித்து — இடபவாகனருடராகிய சிவபிரானே அவ்விரவின் நான்குயாமங்களும் பூசனே செய்து, பின் திதியில் சிவன் அடியார்க்கு அன்னம் நல்கி — பின் திதியாகிய அமாவாசையிற் சிவபெருமானுடைய அடியவர்களுக்கு அன்னதானஞ்செய்து, பின்னர் பாரணந் தான் செய்ய சொற்றிடும் — பின்பு பாரணஞ்செய்யும்படி எ — று.

ஏ அசை. (25)

ஓதவருஞ் சோமசிவ நிசிதனக்குச் சதுர்த்தசியி லுண்டு வாவிற் றூதவிழ்பூங் கொன்றையணி வேணியனேப் பூசைசெய்து சாம நான்குந் தீதகன்ற பிரதமையிற் பாரணஞ்செய் திடவேண்டுஞ் செப்பு மைந்து பேதமுள்ள சிவநிசிக்குட் சதுர்த்தசிசங் கரநிரவாய்ப் பிறங்கி நின்றுல்.

[ஓதவரும் சோமசிவ நிசிதனக்குச் சதுர்த்தசியில் உண்(டு)உ வாவில் தா(து)அவிழ்பூம் கொன்றைஅணி வேணியனேப் பூசைசெய்து சாமம் நான்கும் நீ(து)அகன்ற பிரதமையில் பாரணம்செய் திடவேண்டும் செப்பும் ஐந்து பேதம்உள்ள சிவநிசிக்குள் சதுர்த்தசிசங் கரன்இரவாய்ப் பிறங்கி நின்றுல்.]

இ — ள்: ஓத வரும் சோம சிவ நிசி தனக்கு — எடுத்துக் கூறத்தகும் (பெருமையையுடைய) திங்கட்கிழமையின் கண்ணே வருகின்ற யோகசிவராத்திரிக்கு, சதுர்த்தசியில் உண்டு - சதுர்த்தசித்திதியில் ஒருபொழுதுணவுகொண்டு, உவாவில் — அமாவாசைத்திதியில், தாதுஅவிழ்கொன்றைபூஅணிவேணியனே— இதழ்விரிந்த கொன்றை மலர்மாலையையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானே, சாமம் நான்கும் பூசைசெய்து — (இரவின்) நான்குசாமங்களிலும் அருச்சனேபுரிந்து, நீது அகன்ற பிரதமையிற் பாரணம் செய்திடல் வேண்டும் — குற்றம் நீங்கிய பிரதமைத்திதியிற் பாரணஞ்செய்தல்வேண்டும், செப்பும் ஐந்து பேதம் உள்ள சிவநிசிக்குள்—(முன்)கூறப்பட்ட மகாசிவராத்திரி யோகசிவராத்திரி நித்தியசிவராத்திரி மாசசிவராத்திரி பக்கசிவராத்திரி யென்கின்ற ஐந்து வகைப்பட்ட சிவராத்திரிகளுக்குள், சதுர்த்தசி சங்கரன் இரவாய் பிறங்கி நின்றுல் — சதுர்த்தசித்திதியானது சிவராத்திரிதினமாக விளங்கிக்கிடந்தால் எ — று. (26)

இன்னசிவ நிசிவிரத நோற்றிடுவோர் முற்றினத்தி
லெய்தா நின்ற
வன்னநிர யோதசியி லொருபொழுதுண் டரிவையர்தோ
ளணேத லின்றிச்
சொன்னவிர வகற்றியற்றை வைகறையிற் புனிதநதித்
தோயத் தாடிப்
பின்னர்தின மணியுதிக்குங் காலையிற்செய்
கடனனேத்தும் பிறழா தாற்றி.

[இன்னசிவ நிசிவிரதம் நோற்றிடுவோர் முன்தினத்தில் எய்தா நின்ற
அன்னதிர யோதசியில் ஒருபொழு(து)உண்(டு) அரிவையர் தோள்அணைதல்
[இன்றிச்
சொன்னஇர(வு) அகற்றிஅற்றை வைகறையில் புனிதநதித் தோயத்(து)ஆடிப்
பின்னர்தின மணிஉதிக்கும் காலையில்செய் கடன்அனைத்தும் பிறழா(து) ஆற்றி.]

இ — ள்: இன்ன சிவநிசி விரதம் நோற்றிடுவோர் — இவ்விதமாகிய சிவராத்திரி விரதத்தையனுஷ்டிப்பவர்கள், முன்தினத்தில் எய்தாநின்ற அன்னதிரயோதசியில் ஒரு பொழுது உண்டு — முதல்நாளில் வந்த அந்தத்திரயோதசித்திதியில் ஒருபொழுதுணவு கொண்டு, அரிவையர் தோள் அணைதல் இன்றி — பெண்களோடு சையோகமில்லாதவர்களாய், சொன்ன இரவு அகற்றி — கூறிய திரயோதசியிரவைக்கழித்து, அற்றை வைகறையில் — அந்த விடியற்காலத்தில், புனிதநதித் தோயத்து ஆடி — பரிசுத்தமாகிய நதிநீரில்ஸ்நானஞ் செய்து, பின்னர் தினமணி உதிக்கும் காலையில் — பின்பு சூரியனுதயஞ் செய்கின்ற சமயத்தில், செய்கடன் அனைத்தும் பிறழாது ஆற்றி — செய்யவேண்டிய கடமைகள் யாவற்றையும் வழுவாது செய்து எ — று. (27)

மதிமுடியோன் கோயிறனை வலம்வந்து தண்டனிட்டு
வணங்கி வாயாற்
றுதிபுகன்றில் வயினேகி யிழிகுலத்தோர்
பாதகர்பாற் றுன்னி டாமற்
கதியறுமற் றவருடன்வாய் பேசாமற்
கண்ணினெதிர் கண்டி டாம
னதியிடைப்போய் நண்பகலி னானவிதி
வழுவாது நன்னீ ராடி.

[மதிமுடியோன் கோயில்தனை வலம்வந்து தண்டனிட்டு வணங்கி வாயால்
துதிபுகன்(று)இல் வயின்ஏகி இழிகுலத்தோர் பாதகர்பால் துன்னி டாமல்
கதிஅறும்மற்(று) அவருடன்வாய் பேசாமல் கண்ணதிர் கண்டி டாமல்
நதிஇடைப்போய் நண்பகலில் நானவிதி வழுவாது நல்நீர் ஆடி.]

இ — ள்: மதி முடியோன் கோயில்தனை வலம்வந்து — சந்திரனைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானது திருக்கோவிலைப் பிரதக்ஷிணஞ் செய்து, தண்டனிட்டு வணங்கி — தண்டாகாரமாக (விழுந்து) கும்பிட்டு, வாயால் துதி புகன்று — வாயினால் ஸ்தோத்திரங்களைக்கூறி, இல்வயின் ஏகி — தமது இல்லத்தையடைந்து, இழிகுலத்தோர் பாதகர்பால் துன்னிடாமல் — தாழ்ந்த குலத்தவர்களையும் கொலையாளர்களையுஞ்சேராமல், கதி அறும் அவருடன் வாய்பேசாமல் — நற்கதிக்கு அருகரல்லாத அவர்களோடுரையாடாமலும், கண்ணின் எதிர் கண்டிடாமல் — கண்ணினால் எதிரேகாணுமலும், நதியிடைப்போய் — ஆற்றிற்சென்று, நண்பகலில் ஆன விதி வழுவாது நல் நீர் ஆடி — மத்தியான காலத்தில் சொல்லிய விதிமுறை வழுவாமல் சுத்தசலத்தில் ஸ்நானஞ்செய்து எ — று.

மற்று அசை. (28)

துய்ய வெண்டூ சிரண்டுடுத்திட் டுச்சியிற்செய்
கடன்கழித்துச் சுடலே யாடு
மையணைப்பூ சிக்குமிடங் கோமயத்தான்
மெழுகியபின் னம்பொன் னுடை
செய்யதுகி னேத்திரத்தால் விதானித்து
வாழைகன்னல் சிறக்கநாட்டி
மையகலுண் மலர்மாலே தோரணங்கு
ணிரைநிரையின் வயங்கநாற்றி.

[துய்யவெண் தூ(சு) இரண்(டு) உடுத்திட்(டு) உச்சியில்செய் கடன்கழித்துச்
[சுடலே ஆடும்
ஐயணைப்பூ சிக்கும்இடம் கோமயத்தால் மெழுகியபின் அம்பொன் ஆடை
செய்யதுகில் நேத்திரத்தால் விதானித்து வாழைகன்னல் சிறக்க நாட்டி
மைஅகல்நாள் மலர்மாலே தோரணங்கள் நிரைநிரையின் வயங்க நாற்றி.]

இ — ள்: துய்ய வெண் தூசு இரண்டு உடுத்திட்டு — பரிசுத்தமாகிய இரண்டு வெள்ளை வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, உச்சியில் செய் கடன் கழித்து — மத்தியானகாலத்திற்செய்யவேண்டிய கிரியைகளை முடித்து, சுடலே ஆடும் ஐயனே பூசிக்கும் இடம் கோமயத்தால் மெழுகியபின் — மயான பூமியின் கண்ணே நடனஞ்செய்கின்ற சிவபெருமானுக்குப் பூசை செய்யு மிடத்தைச் சாணத்தினாற்றிருமெழுக்கிட்டபின்னர், அம்பொன் ஆடை செய்யதுகில் நேத்திரத்தால் விதானித்து — அழகியபொற்பீதாம்பரங்களினாலுஞ் செந்நிறமாகிய வஸ்திரங்களினாலும் பட்டுவஸ்திரங்களினாலும் மேற்கட்டிகட்டி, வாழை கன்னல் சிறக்க நாட்டி — வாழைகளையும் கரும்புகளையுஞ் சிறப்புறும்படி நட்டு, மை அகல் நாள் மலர் மாலே தோரணங்கள் நிரை நிரையின் வயங்கநாற்றி — குற்றம் நீங்கிய அன்றலர்ந்த பூமாலைகளையும் தோரணங்களையும் வரிசைவரிசையாக விளங்கும்படி தூங்கக்கட்டி எ — று. (29)

கண்ணுதலே யருச்சித்தற் குரியபொரு ளனேத்தினையுங் கருதித்தேடி
விண்ணுலவு கதிரருக்கன் மேற்றிசைவே லியின்முழுக வீழும் வேலே
தண்ணுலவு சந்தனநற் றூபதீ பாதியிம சயில மீன்ற
வொண்ணுதலோர் பாகனுறை சந்நிதியின் முன்னமிவையு தவியன்பால்

[கண்ணுதலே அருச்சித்தற்கு உரியபொருள் அனேத்தினையும் கருதித் தேடி
விண்உலவு கதிரருக்கன் மேல்திசைவே லியின் முழுக வீழும் வேலே
தண்உலவு சந்தனம்நல் தூபதீப ஆதிஇம சயிலம் ஈன்ற
ஒண்ணுதல்ஓர் பாகன்உறை சந்நிதியின் முன்னம்இவை உதவி அன்பால்.]

இ — ள்: கண்ணுதலே அருச்சித்தற்கு உரியபொருள் அனைத்தினையும் கருதித்தேடி — லலாடநேத்திரராகிய சிவபிரானுக்குப் பூசைசெய்தற்கு வேண்டிய பொருள்களெல்லாவற்றையும் நினைவோடு சம்பாதித்து, விண் உலவு கதிர் அருக்கன் மேல் திசை வேலையில் முழுக வீழும் வேலை — ஆகாய சஞ்சாரியாகிய சூரியன் மேற்குத் திக்குச் சமுத்திரத்தில் அமிழ்ந்தியஸ்தமிக்குஞ் சமயத்தில், இம சயிலம் ஈன்ற ஒள் நுதல் ஓர் பாகன் உறை சந்நிதியில் — இமயமலை அரசன் பெற்ற ஒளி விளங்குந் திருநெற்றியையுடைய உமாதேவியாரோர் பாகத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானெழுந்தருளிய திருக்கோவிலில், தண் உலவு சந்தனம் நல் தூபம் தீபாதி இவை முன்னம் அன்பால் உதவி — குளிர்ச்சி பொருந்திய சந்தனம் நல்ல தூபம் தீபமாகியவிப் பொருள்களை முன்னமேயன்போடுபகரித்து எ — று. (30)

அந்தியினிற் றண்புனலேய்ந் தருக்கியநற் கிரியைசெப மாற்றிப் பின்
வந்திளமா மதிமுடித்த வள்ளறனைப் பீடிகையில் வைத்துத்தாபித்[னர்
திந்தியமோ ரைந்தவித்திட்டாகமநூன் மறைகளெடுத் தியம்பாநிற்கு
முந்தியமந் திரங்களினுற் பூசைவிதி வழுவாமன் முடித்தல் வேண்டும்.

[அந்தியினில் தண்புனல் தோய்ந்(து) அருக்கியம் நல் கிரியை செபம்ஆற்றிப்பின் வந்(து)இளமா மதிமுடித்த வள்ளல்தனைப் பீடிகையில்வைத்துத்தாபித்(து)[னர் இந்தியம் ஓர் ஐந்(து)அவித்திட்(டு) ஆகமநூல் மறைகள் எடுத்(து)இயம்பாநிற் முந்தியமந் திரங்களினுல் பூசைவிதி வழுவாமல் முடித்தல் வேண்டும்.] [கும்

இ — ள்: அந்தியினில் தண் புனல் தோய்ந்து — சாயம்போதிற் குளிர்ந்த சலத்தில் ஸ்நானஞ் செய்து, அருக்கியம் நல் கிரியை செபம் ஆற்றி — அருக்கியம் நன்கிதாகியகிரியைகள் மந்திர செபங்களாதியவற்றை (விதிப்படி) செய்து, பின்னர் வந்து — பின்புவந்து, இள மா மதி முடித்த வள்ளல்தனை பீடிகையில் வைத்து தாபித்து — இளஞ்சந்திரனைத் திருமுடியிற்தரித்த சிவபெருமானைப்பீடத்தின் கண்ணே வைத்து ஸ்தாபித்து, இந்தியம் ஓர் ஐந்து அவித்திட்டு — பஞ்சப் புலன்களையுமடக்கிக்கொண்டு, ஆகமநூல் மறைகள் எடுத்து இயம்பா நிற்கும் முந்திய மந்திரங்களினுல் — ஆகமங்களிலும் வேதங்களிலுமெடுத்து முன்னமே சொல்லப்பட்ட மந்திரங்களினுல், பூசை விதி வழுவாமல் முடித்தல் வேண்டும் — பூசாக்கிரமத்தைத் தவறுமற் செய்து முடித்தல்வேண்டும் எ — று. (31)

முன்னமுதற் சாமத்தி லானினைந்தா லாட்டிடுக முறைமையாகப்
பின்னிரண் டாஞ்சாமத் தைந்தமிர்தா லாட்டிடுக பிரசந்தன்னு
ணன்னயஞ்சேர் மூன்றய சாமத்தி லாட்டிடுக நாலாஞ் சாமங் [றன்றே.
கன்னலின்சாற் றினிலாட்டக் காரணவா கமமெடுத்துக் கழறிற்

[முன்னம் முதல் சாமத்தில் ஆனின் ஐந்தால் ஆட்டிடுக முறைமையாகப்
பின்இரண் டாம்சாமத்(து) ஐந்(து) அமிர்தால் ஆட்டிடுக பிரசம் தன்னுல்
நல் நயம்சேர் மூன்றுய சாமத்தில் ஆட்டிடுக நாலாம் சாமம்
கன்னலின்சாற் றினில் ஆட்டக் காரண ஆகமம் எடுத்துக் கழறிற்(று) அன்றே.]

இ — ள்: முன்னம் முதற்சாமத்தில் ஆனின் ஐந்தால் ஆட்டிடுக — முன்னமே முதற்சாமத்தில் பஞ்சகௌவியத்தினுல் அபிடேகிக்க, முறைமையாக பின்னர் இரண்டாம் சாமத்து ஐந்து அமிர்தால் ஆட்டிடுக — கிரமப்படி பிந்திய இரண்டாஞ்சாமத்தில் பஞ்சாமிர்தத்தினுலபிடேகிக்க, நல்நயம் சேர் மூன்றுய சாமத்தில் பிரசம் தன்னுல் ஆட்டிடுக — மிக்கநன்மை பொருந்திய மூன்றுஞ்சாமத்தில் தேனினுலபிடேகிக்க, நாலாம் சாமம் கன்னலின் சாற்றினில் ஆட்ட — நான்காஞ்சாமத்திற் கருப்பஞ்சாற்றினுலபிடேகிக்கவென்று, காரண ஆகமம் எடுத்து கழறிற்று — காரணுகமம் எடுத்து (விதந்து) கூறிற்று எ — று.

அன்று ஏ அசைகள்: (32)

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவியமைந் தாகுஞ்
[செந்தேன்
காசகல்சர்க்கரை ததிபானெய்யிவையைந்தமிர்தமெனக்கரைவரித்தை
மாசகல்கௌ வியம்போலத்தனித்தனியே தாபித்து மதியஞ் சூடு
மீசன்மணி முடிமீதி லாட்டிடவா கமநூல்க ளெடுத்துக்கூறும்.

[ஆ(சு)அகல்கோ சலம்தயிர்பால் கோமயம்நெய் கௌவியம் ஐந்(து)ஆகும்
[செந்தேன்
கா(சு)அகல் சர்க் கரைததிபால் நெய் இவை ஐந்(து) அமிர்தம் எனக்கரைவர்
[இத்தை
மா(சு)அகல் கௌவியம் போலத் தனித்தனியே தாபித்து மதியம் சூடும்
ஈசன்மணி முடிமீதில் ஆட்டிட ஆகமநூல்கள் எடுத்துக் கூறும்.]

இ — ள்: ஆசு அகல் கோசலம் தயிர் பால் கோமயம் நெய் கௌவியம் ஐந்து ஆகும் — குற்றமில்லாத பசுவின்சலமும் தயிரும் பாலும் சாணமும் நெய்யுமாகிய இவைகளைந்தும் பஞ்சகவ்வியமாகும், செம் தேன் காச அகல் சர்க்கரை ததி பால் நெய் ஐந்து அமிர்தம் எனக்கரைவர் — சிவந்த தேன் குற்றமில்லாத சர்க்கரை தயிர் பால் நெய்யாகிய இவ்வைந்தையும் பஞ்சாமிர்தமென்று கூறுவர், இத்தை — இவைகளை, மாசு அகல் கௌவியம்போல தனித்தனியே தாபித்து — குற்றமில்லாத பஞ்சகௌவியத்தைப் போலத் தனிமை தனிமையாக ஸ்தாபனஞ்செய்து, மதியம் சூடும் ஈசன் மணி முடி மீதில் ஆட்டிட — சந்திரனைத்தரித்த சிவபெருமானது அழகிய திருமுடியின் மேலபிடேகஞ்செய்யும்படி, ஆகம நூல்கள் எடுத்து கூறும் — ஆகமசாத்திரங்கள் எடுத்து (விதந்து) ரைக்கும் எ — று. (33)

சந்தனமுற் சாமத்தி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாம மூன்றிற்
கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ்செங் கமலப் போதில்
வந்தருணுன் முகன்முகுந்தன் மகபதிவா னவரெவரும் வணங்கியேத்து
மந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமிகு மன்பிற் சாத்தி.

[சந்தனம்முன் சாமத்தில் அகில் இரண்டாம் சாமம் அதில் சாமம் மூன்றில்
கந்தம்மிகும் கருப்பூரம் கடைச்சாமம் குங்குமம்செம் கமலப்போதில்
வந்(து) அருள்நான் முகன்முகுந்தன் மகபதிவா னவர்எவரும் வணங்கி ஏத்தும்
அந்தம் இலா முழுமுதல்வன் திருமேனிகுளிர மிகும்அன்பின் சாத்தி.]

இ — ள்: செம் கமல போதில் வந்து அருள் நான்முகன் முகுந்தன் மகபதி வானவர் எவரும் வணங்கி ஏத்தும் — செந்நிறமாகிய தாமரைமலரின் கண்ணே வீற்றிருந்தருள்கின்ற நான்குமுகங்களையுடைய பிரமதேவரும் மகாவிஷ்ணு மூர்த்தியும் யாகாதிபதியாகிய இந்திரனும் மற்றையதேவர்களுமாகியவெல் லோரும் வணங்கித்துதிக்கின்ற, அந்தம் இலா முழுமுதல்வன் திருமேனி குளிர — அழிவில்லாத முழுமுதற்பொருளாகிய சிவபெருமானது திருமேனியானது குளிர்ச்சியடையும்படி, முன் சாமத்தில் சந்தனம் — முதற்சாமத்திற் சந்தனத் தையும், இரண்டாம் சாமமதில் அகில்— இரண்டாஞ்சாமத்தில் அகிலஞ்சந்தனத் தையும், சாமம் மூன்றில் கந்தம் மிகும் கருப்பூரம் — மூன்றுஞ்சாமத்தில் வா சனை மிகுந்த கருப்பூரப்பொடியையும், கடைச்சாமம் குங்குமம் — இறுதிச்சா மத்திற்குங்குமத்தையும், மிகும் அன்பில் சாத்தி — மிகுந்த அன்புடனே சாத்தி எ — று. (34)

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம முளரிமலர் மூன்றுஞ் சாம
நற்சாதி மலர்நாலாஞ் சாமமதி னந்தியா வர்த்தப் பூக்கொண்
டற்சாரு நளத்திறைக்குச் சாத்துகவென் றுகமத்து ளதிக மான
சொற்சார முள்ளசித்த தந்திர நூறெருகுத்திதனைச் சொன்ன தாமால்.

[முன்சாமம் வில்வம் அதின் பின்சாமம் முளரிமலர் மூன்றும் சாமம்
நல்சாதி மலர்நாலாம் சாமம்அதில் நந்தியாவர்த்தம் பூக்கொண்(டு)
அல்சாரும் களத்(து)இறைக்குச் சாத்துகஎன்(று) ஆகமத்துள் அதிகமான
சொல்சார முள்ளசித்ததந்திரநூல்தொகுத்(து)இதனைச் சொன்ன(து)ஆம்ஆல்.]

இ — ள்: ஆகமத்துள் அதிகமான சொல் சாரம் உள்ளசித்ததந்திர நூல் — ஆகமங்களுக்குள் விசேடமாகிய சொற்பொருளடங்கப்பெற்ற சித்த தந்திர மென்னும் நூலானது, அல்சாரும் களத்து இறைக்கு — அந்த சாரத்தை யொத்த திருமிடற்றையுடையவராகிய சிவபெருமானுக்கு, முன் சாமம் வில் வம் — முதற்சாமத்தில் வில்வத்தையும், அதின்பின் சாமம் முளரிமலர் — அதன் பின்னையிரண்டாஞ்சாமத்திற்றுமரைமலரையும், மூன்றும் சாமம் நல்சாதிமலர் — மூன்றுஞ்சாமத்தில் நல்ல சிறுசண்பகமலரையும், நாலாம்

சாமமதில் நந்தியாவர்த்தப்பூ கொண்டு சாத்துக என்று — நான்காஞ்சாமத்தில்நந்தியாவர்த்தமலரையுங்கொண்டு சாத்தக்கடவரென்று, தொகுத்து இதனிச்சொன்னது — தொகுத்திதனிக்கூறிற்று எ — று.

ஆம் ஆல் அசைகள். (35)

முண்டகமுற் சாமமநிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றுஞ் சாமங்
கண்டகஞ்சேர் கூவிளமுத் தளக்கினோ நான்கெனப் பகுத்த கடையிற்
[சாமம்
விண்டலர்ந்துமதுத்துளிக்கு முற்பலத்தின்மலர்சாத்த வேண்டுமென்றே
யண்டரெலாம் புகழ்ந்தேத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்ததன்றே.

[முண்டகம்முன் சாமம்அதில் துளசிஇரண் டாம்சாமம் மூன்றும் சாமம்
கண்டகம்சேர் கூவிளமுத் தளக்கினோநான்(கு) எனப்பகுத்த கடையில் சாமம்
விண்(டு) அலர்ந்(து) மதுத்துளிக்கும் உற்பலத்தின் மலர்சாத்தவேண்டும்என்றே
அண்டர்எலாம் புகழ்ந்(து) ஏத்தும் சிந்தியமாம் ஆகமநூல் அறைந்த(து)
[அன்றே.]

இ — ள்: அண்டர் எலாம் புகழ்ந்து ஏத்தும் சிந்தியமாம் ஆகமநூல் — தேவர்களெல்லாராலும் புகழ்ந்து துதிக்கப்படுகின்ற சிந்தியமென்னுமாகமநூலானது, முன்சாமமதில் முண்டகம் — முதற்சாமத்தில் தாமரைமலரையும், இரண்டாம் சாமம் துளசி — இரண்டாஞ்சாமத்தில் துளசியையும், மூன்றும் சாமம் கண்டகம் சேர் கூவிள முத்தளக் கினோ — மூன்றுஞ்சாமத்தில் முட்களோக் கொண்ட வில்வத்தினது மூவிதழ்கள் பொருந்திய பத்திரத்தையும், நான்கு என பகுத்த கடையில் சாமம் விண்டு அலர்ந்து மது துளிக்கும் உற்பலத்தின் மலர்சாத்த வேண்டும் என்றே அறைந்தது — நான்காவதாகப் பகுக்கப்பட்ட கடைசிச்சாமத்தில் இதழ்கள் விரிந்து தேனைப்பிலிற்றுகின்றநீலோற்பலமலரையும் சாத்தவேண்டுமென்றே கூறிற்று எ — று.

அன்று ஏ அசைகள். (36)

வில்வநொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்பஞ்ச வில்வமாகச்
சொல்வரிவற் றின்றழைமுக்கினோயாகக்கொண்ட யன்மா லொடர்ந்துங்
நல்வரதன் றிருமுடியி னுன்குசாமமுஞ்சாத்த நன்று மென்று [காணு
கல்வியறிந் தவருணரக் காரண கமமுரைத்த கருத்தா மன்றே.

[வில்வம்நொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்பஞ்ச வில்வமாகச்
சொல்வர்இவற் றின்தழைமுக் கினோயாகக் கொண்(டு) அயன்மால் தொடர்ந்
நல்வரதன் திருமுடியில் நான்குசாமமும் சாத்த நன்றும் என்று [தும் காணு
கல்விஅறிந் தவர்உணரக் காரணஆகமம் உரைத்த கருத்தாம் அன்றே.]

இ — ள்: வில்வம் நொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில் பஞ்ச வில்வமாகச் சொல்வர் — வில்வமும் நொச்சியும் மாவிலங்கையும் முட்கிளுவையும் விளாவுமாகிய (இவ்வைந்தையும்) பஞ்சவில்வமென்று கூறுவர், இவற்றின் தழை முக்கோயாகக்கொண்டு — இவற்றின் தழைகளில் மூவிதழ்கள் கொண்ட பத்திரங்களைக்கொண்டு, அயன்மால் தொடர்ந்தும் காணு நல்வரதன் திருமுடியில் நான்கு சாமமும் சாத்த நன்றும் என்று — பிரமவிஷ்ணுக்கள் தேடியுங் காண்டற்கரிய நல்லவரங்களைக்கொடுத்தருளுகின்ற சிவபிரானது திருமுடியில் நான்குசாமமுமணிதலும்நன்மையையுடையதென்று, கல்விஅறிந்தவர் உணர காரணாகமம் உரைத்த கருத்தாம் — கற்றறிந்தவர்களறியும்படி காரணாகமம் (எடுத்துக்) கூறிய துணிபாகும் எ — று.

அன்று ஏ அசைகள். (37)

ஏதமின்முற் சாமமுற்கப் பருப்பொ டன்ன மாகுமற்றை யிரண்டாஞ் [சாமந்
தீதகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற் றிலஞ்சே ரன்ன
மோதவரு சாமமொரு நான்கதனிற் சுத்தான்ன முரைத்தார் பூத
நாதனிவேத் தியந்தனக்குச் சுத்தான்ன மாஞ்சாம நான்கிற் கும்மே.

[ஏதம்இல்முன் சாமம் முற்கப்பருப் பொ(டு) அன்னம் ஆகும் மற்றை இரண் [டாம் சாமம்
தீ(து)அகல்பா யசம்ஆகும் சாமம்ஒரு மூன்(று) அதனில் திலம்சேர் அன்னம்
ஓதவரு சாமம்ஒரு நான்(கு) அதனில் சுத்தஅன்னம் உரைத்தார்பூத
நாதன்நிவேத் தியந்தனக்குச் சுத்தஅன்னம் ஆம்சாமம் நான்கிற்குமே.]

இ — ள்: பூதநாதன் நிவேத்தியம் தனக்கு — பூதங்களுக்குத் தலைவராகிய சிவபெருமானுடைய நிவேதனத்திற்கு, ஏதமில் முன் சாமம் முற்கப்பருப் பொடு அன்னம் ஆகும் — குற்றமில்லாத முதற்சாமத்திற் பயற்றம்பருப்புச் சேர்ந்த அன்னமாகும், மற்றை இரண்டாம் சாமம் நீது அகல் பாயசம் ஆகும்— மற்றைய இரண்டாஞ்சாமத்திற்றீங்கற்ற பாயசமாகும், சாமம் ஒரு மூன்று அதனில் திலம் சேர் அன்னம் — மூன்றுஞ்சாமத்தில் எள்சேர்ந்த அன்னமாகும், ஓத வரு சாமம் ஒரு நான்கு அதனில் சுத்த அன்னம் உரைத்தார் — சொல்லப் படுகின்ற நான்காஞ்சாமத்தில் சுத்த அன்னமாகுமென்று (மேலோர்) கூறினர் (இதுவன்றி), சாமம் நான்கிற்கும் சுத்த அன்னம் ஆம் — சாமங்கள் நான்கிற் கும் சுத்த அன்னமுமமையும் எ — று.

ஏ அசை. (38)

சறுவனே யுக்கிரனே சங்கரனே சிவனேசாம் பவனே சான்றுப்
பெறுகதியை நல்கியிடு மீசான னேமகவுக் கிரனே பேசு
மறுவறுபூ தாதிபதி யேயென்று மந்திரமோ ரெட்டுமோதி
யுறுதியுடன் றூபாதி நிவேதனங்க ளனைத்தினையு மொழுங்கிற்செய்தே.

[சருவனே உக்கிரனே சங்கரனே சிவனேசாம் பவனே சான்றுப்
பெறுகதிய நல்கியிடும் ஈசான னேமகஉக் கிரனே பேசு
ம(று)அறுபூ தாதிபதி யேஎன்று மந்திரம்ஓர் எட்டும் ஓதி
உறுதியுடன் தூபஆதி நிவேதனங்கள் அனைத்தினையும் ஒழுங்கிற் செய்தே.]

இ — ள்: சர்வனே — சர்வனும், உக்கிரனே — உக்கிரனும், சங்கரனே — சங்கரனும், சிவனே — சிவனும், சாம்பவனே — சாம்பவனும், சான்றுப் பெறுகதிய நல்கியிடும் ஈசானனே — (எவரது செய்கைகளுக்குஞ்) சாட்சியாய் நின்று (அவரவர்) அடையவேண்டிய பலங்களை யீந்தருளாநின்ற ஈசானனும், மக உக்கிரனே — மகோக்கிரனும், பேசும் மறு அறு பூத அதிபதியே — கூறப்டுகின்ற குற்றமில்லாத பூதாதிபதியும், என்னும் மந்திரம் ஓர் எட்டும் ஓதி — என்று கூறப்டும் அஷ்டமந்திரங்களையுமுச்சரித்து, தூபம் நிவேதனங்கள் ஆதி அனைத்தினையும் — தூபம் நிவேதனங்கள் முதலாகிய சர்வோபசாரங்களையும், உறுதி உடன் ஒழுங்கில் செய்து — நிலையாகிய மனத்தோடு கிரமமாகச்செய்து எ — று.

ஏ அசை. சர்வ என்னும் வடமொழியைத் தொடைநோக்கிச் சறுவ என்றார். (39)

நாமத்தி னிருக்கெனுஞ்சொன் னட்டுமறை முந்தவந்து
நண்ணுஞ் சாமந்
தோமத்தி னகற்றிரண்டாஞ் சுருதியிரண் டாஞ்சாமஞ்
சொற்ற மூன்றுஞ்
சாமத்திற் சாமமறை யீற்றிலுறு மறைநாலாஞ்
சாமந் தன்னி
லீமத்தி னின்றுடு மாதிதிரு மூன்றோதி
யிருகை கூப்பி.

[நாமத்தில் இருக்(கு) எனும்சொல் நாட்டுமறை முந்தவந்து நண்ணும் சாமம் தோமத்தின் அகற்(று) இரண்டாம் சுருதிஇரண் டாம்சாமம் சொற்ற மூன்றும் சாமத்தில் சாமம் மறை ஈற்றில் உறு மறை நாலாம் சாமம் தன்னில் ஈமத்தில் நின்(று)ஆடும் ஆதிதிரு மூன்றோதி இருகை கூப்பி.]

இ — ள்: நாமத்தில் இருக்குஎனும் சொல்நாட்டு மறை முந்த வந்து நண்ணும் சாமம் — பெயரினாலே இருக்கு என்று உயர்த்திக்கூறப்படும் முதல் வேதத்தை முதலில் வருகின்ற சாமத்திலும், தோம் அகற்று இரண்டாம் சுருதி இரண்டாம் சாமம் — குற்றத்தை நீக்குகின்ற இரண்டாம் வேதமாகிய யசுர்வேதத்தை இரண்டாஞ் சாமத்திலும், சாம மறை சொற்ற மூன்றும் சாமத்தில் — (மூன்றும் வேதமாகிய) சாமவேதத்தைக் கூறப்பட்ட மூன்றுஞ்

சாமத்திலும், ஈற்றில் உறு மறை நாலாம் சாமம் தன்னில் — இறுதிக் கணுள்ள தாகிய (நான்காம்வேதமாகும்) அதர்வணவேதத்தை நான்காஞ்சாமத்திலும், ஈமத்தில் நின்று ஆடும் ஆதி திருமுன் ஓதி — மயானபூமியின் கண்ணே நின்று நடனஞ்செய்கின்ற ஆதிகர்த்தாவாகிய சிவபெருமானது திருமுன்னிலையில் (சுரபேதங்கள்) தவறுமல் ஓதி, இருகை கூப்பி — இரண்டுகைகளையுங்குவித்து எ — று.

அத்து இன் சாரியைகள். (40)

உருகுமுளத் துடனிருந்தே யூணொருவி யிருவிழியு
முறக்க மின்றி
யிருளுறுகங் குலின்யாம நான்கினுமிப் படியருச்சித்
திறுதி தோறும்
பொருவிலருக் கியங்கொடுத்து நாயடியே ன்
புரியுமிந்தப் பூசைதன்னைத்
திருவுளத்தி னயந்தருள்வா யெனத்துதித்துத் தண்டனிட்டுத்
திருமுன் வீழ்ந்தே.

[உருகும்உளத் துடன்இருந்தே ஊண்ஒருவி இருவிழியும் உறக்கம் இன்றி இருள்உறும்கங் குலின்யாமம் நான்கினும்இப் படிஅருச்சித்(து) இறுதி தோறும் பொருஇல் அருக் கியம்கொடுத்து நாய் அடியேன் புரியும் இந்தப் பூசை [தன்னைக் நிருஉளத்தில் நயந்(து) அருள்வாய் எனத்துதித்துத் தண்டனிட்டுத் திருமுன் வீழ்ந்தே.]

இ — ள்: உருகும் உளத்துடன் இருந்து — கசிவுகொண்ட மனத்தோடு இருந்து; ஊண் ஒருவி இரு விழியும் உறக்கம் இன்றி — உணவையொழித்து இருகண்களிலுந் தூக்கமுமின்றி, இருள் உறும் கங்குலின் யாமம் நான்கினும் இப்படி அருச்சித்து — இருள் நிறைந்த சிவராத்திரியின் சாமங்கள் நான்கிலும் இவ்வாறு பூசித்து, இறுதிதோறும் பொரு இல் அருக்கியம் கொடுத்து — முடிவுகடோறுமொப்பில்லாத அர்க்கியசலத்தினாலுபசரித்து, நாய் அடியேன் புரியும் இந்த பூசைதன்னை திரு உளத்தில் நயந்து அருள்வாய் என — நாய்போன்ற எளிய யான்செய்யுமிந்தப் பூசையை திருவுள்ளத்திலேற்று அருள் செய்யக்கடவிரென்று, திருமுன் தண்டனிட்டு வீழ்ந்து துதித்து — சந்நிதியில் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரித்து எ — று.

ஏ இரண்டும் அசைகள். (41)

இன்னணநற் சிவபூசை யியற்றியற்றைப் புலரிதனி லெழுந்து போகி
நன்னதியிற் புனலாடிக் காலையிற்செய் கடன்கழித்து நவின்றவாறே
யன்னதினத் தினுட்பகற்போ தரனையருச் சித்ததற்பி னிதி தீக்கை
சொன்னகுர வடிப்போற்றி யந்தணருக் காடையன்னஞ் சொன்ன
[மீந்தே.

[இன்னணம்நல் சிவபூசை இயற்றிஅற்றைப் புலரிதனில் எழுந்து போகி நல்நதியில் புனல்ஆடிக் காலையில்செய் கடன்கழித்து நவின்ற ஆறே அன்னதினத் திலும்பகற்போ(து) அரனேஅருச் சித்ததன்பின் ஆதி நிக்கை சொன்னகுர வனைப்போற்றி அந்தணருக்(கு) ஆடைஅன்னம் சொன்னம் ஈந்தே.]

இ — ள்: இன்னணம் நல் சிவபூசை இயற்றி — இவ்வாறு நன்கமைந்த சிவபூசையைச்செய்து, அற்றை புலரிதனில் எழுந்து போகி — அன்று விடியற் காலத்தில் எழுந்து சென்று, நல் நதியில் புனல் ஆடி — நல்ல ஆற்றின் சலத் திலே ஸ்நானஞ்செய்து, காலையில் செய்கடன் கழித்து — உதயகாலத்திற் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து முடித்து, நவின்றவாறே அன்னதினத் திலும் பகற்போது அரனே அருச்சித்து — முன்னர்க் கூறியபடியேயத்தினத் திலும் பகற்காலத்தில் சிவபிரானுக்குப் பூசனைசெய்து, அதன்பின் — அதன் பின்னர், ஆதி நிக்கை சொன்ன குரவனைப் போற்றி — சிவதீக்ஷை செய்த குருவை நமஸ்கரித்து, அந்தணருக்கு ஆடை அன்னம் சொன்னம் ஈந்து — பிராமணர்களுக்கு வஸ்திரங்களையும் அன்னத்தையும் பொன்னையும் தான மாகக்கொடுத்து எ — று.

ஏ அசை, (42)

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வேண்டு
மற்றை வைகற்
றங்குபகற் கடனனைத்துங் காலசந்தி யுடன்முடித்துத்
தாழுங் கீழ்பாற்
செங்கதிர்வந் துதித்தாறு கன்னலுக்குட் பாரணந்தான்
செய்தா ராகிற்
றுங்கமுறு கவளமொன்றுக் கனந்தபல முளதென
நூல் சொல்லு மாதோ.

[அங்(கு)அவர்தம் அனுமதியால் பாரணம்செய் திடல்வேண்டும் அற்றைவைகல் தங்குபகல் கடன்அனைத்தும் காலசந்தி உடன்முடித்துத் தாழும் கீழ்பால் செங்கதிர்வந் துதித்(து)ஆறு கன்னலுக்குள் பாரணம்தான் செய்தார் ஆகில் துங்கம்உறு கவளம்ஒன்றுக்(கு) அனந்தபலம் உள(து)என நூல் சொல்லும் மாதோ.]

இ — ள்: அங்கு அவர்தம் அனுமதியால் பாரணம் செய்திடல் வேண் டும் — அவ்விடத்து அவ்வந்தணர்களது உத்தரவின்மேற் பாரணஞ்செய்யக் கடவர், அற்றை வைகல் தங்குபகல் கடனனைத்தும் காலசந்தியுடன் முடித்து — அந்தத்தினத்திலே பகலுக்குரிய கிரியைகள் யாவற்றையும் காலையிற்செய்கின்ற கிரியைகளோடுசேர்த்துச் செய்துமுடித்து, தாழும் கீழ்பால் செங்கதிர் வந்து உதித்து ஆறு கன்னலுக்குள் பாரணந்தான் செய்தார் ஆகில் — தாழ்வாகிய கீழ்த்திசையிற்சூரியன்வந்துதோன்றி ஆறுநாழிகைக்குள் பாரணத்தைச் செய்

வார்களாகில், துங்கமுறு கவளம் ஒன்றுக்கு அனந்தபலம் உளதென நூல் சொல்லும் — (அங்ஙனம்புசிக்கின்ற) உயர்வுபொருந்திய கவளம் ஒன்றுக்கு அளவற்றபலன்களுண்டென்று ஆகம நூல்கள் கூறும் எ — று.

மாதோ ஈற்றசை. (43)

அலைசெறிபாற் கடல்விடமுண் டருள்வான்முப் புரந்தழலுக்
களிப்பான் மேருச்
சிலைகுனித்த சிவனிரவிப் படிநோற்போர் சிவகதியிற்
செல்வ ரன்றிக்
கலைமுழுதுங் கற்றுணர்ந்த மாதவத்தீ ரன்னவர்முற்
கருவின் மூவேழ்
தலைமுறையி லுள்ளவருஞ் சத்தியமுத் தியிற்சேர்த
றப்பிடா தால்.

[அலைசெறிபால் கடல்விடம்உண்(டு) அருள்வான்முப் புரம்தழலுக்(கு)
[அளிப்பான் மேருச்
சிலைகுனித்த சிவன்இர(வு) இப்படி நோற் போர் சிவகதியில் செல்வர் அன்றிக்
கலைமுழுதும் கற்(று)உணர்ந்த மாதவத்தீர் அன்னவர்முற் கருவில் மூஏழ்
தலைமுறையில் உள்ளவரும் சத்தியம்முத் தியில்சேர்தல் தப்பிடா(து) ஆல்:]

இ — ள்: அலை செறி பாற்கடல் விடம் உண்டு அருள்வான் — திரைமிகுந்த திருப்பாற்கடலிலிருந்து தோற்றிய நஞ்சையுண்டருளியவரும், முப்புரம் தழலுக்கு அளிப்பான் மேரு சிலை குனித்த சிவன் இரவு இப்படி நோற்போர் — திரிபுரங்களையுமக்கினிக்குணவாகக் கொடுக்கும் பொருட்டு மகாமேருகிரியை வில்லாகவளைத்தருளியவருமாகிய சிவபெருமானது திருவிரவை முன்னர்க் கூறியபடியனுட்டிப்பவர்கள், சிவ கதியில் செல்வர் — சிவபதத்தையடைவார்கள், அன்றி — அதுவுமல்லாமல், கலை முழுதும் கற்று உணர்ந்த மாதவத்தீர் — கலைஞானங்கள் முழுவதையும் படித்தறிந்த பெருமை பொருந்திய தவத்தையுடையவர்களே, அன்னவர் முன் கருவில் மூவேழ் தலை முறையில் உள்ளவரும் — அவர் முதலாக விந்துசம்பந்தமாயுள்ள இருபத்தொரு தலைமுறையிலுள்ளவர்களும், முத்தியில் சேர்தல் சத்தியம் — மோக்ஷத்தையடைதலுண்மையாகும், தப்பிடாது — இது தவறமாட்டாது எ — று.

ஆல் - அசை. (44)

அறைமறைமந் திரவிதியா லருச்சிக்க விரகிலரே லன்பருள்ளத்
துறைபரம னேந்தெழுத்தை யுச்சரித்தீ ரெட்டுவகை யுபசாரத்தாற்
பொறைதருமன் புடன்பூசை புரிந்திடுக பொறியளிகள் பூந்தா தாது
நறைகமழ்செங் கமலமலர் நான்முகத்தோன் பூசையினு னயப்ப
[னம்பன்.

[அறைமறைமந் திரவிதியால் அருச்சிக்க வீர(கு)இலரேல் அன்பர் உள்ளத்து
உறைபரமன் ஐந்(து)எழுத்தை உச்சரித்தீர் எட்டுவகை உபசாரத்தால்
பொறைதருமன்பு புடன்பூசை புரிந்திடுக பொறிஅளிகள் பூந்தா(து)ஊது
நறைகமழ்செம் கமலமலர் நான்முகத்தோன் பூசையினும் நயப்பன் நம்பன்.]

இ — ள்: மறை அறை மந்திர விதியால் அருச்சிக்க விரகிலரேல் — வேதங்கள் கூறுகின்ற மந்திரவிதிப்படி பூசனைசெய்தற்கருகரல்லாதவராயின், அன்பர் உள்ளத்து உறை பரமன் ஐந்து எழுத்தை உச்சரித்து — தொண்டர்களுடைய உள்ளத்தின் கண்ணே யெழுந்தருளியிருப்பவராகிய சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தைச்செபித்து, ஈரெட்டு வகை உபசாரத்தால் பொறைதரும் அன்புடன் பூசை புரிந்திடுக — சோடசோபசாரங்களினுற் பொறுமை பொருந்திய அன்போடு பூசிக்கக்கடவர், நம்பன் — சிவபெருமான், பொறி அளிகள் பூதாது ஊதும் நறை கமழ் செம் கமல மலர் நான்முகத்தோன் பூசையினும் நயப்பன் — புள்ளிபொருந்திய வண்டுகள் பூஞ்சுண்ணத்தையூதுகின்ற வாசனை கமழுஞ் செந்தாமரைமலராசனராகிய நான்கு முகங்களையுடைய பிரமதேவர் து சிவபூசையிலும் பார்க்க அங்கீகாரஞ் செய்தருளுவர் எ—று. (45)

இத்தகைய சிவார்ச்சனைசெய் திடமாட்டார் விருத்தர் கொடி
யிடையார் நோய
ருத்தமநற் சிவநிசியி லூணொருவித் துயினீத்துச் சாம நான்குஞ்
சித்தமிகக் களிகூர்ந்த சிவபுரா ணங்கேட்டுச் செபங்கள் பண்ணி
முத்தனுறை சினகரத்திற் சென்றரனைச் சேவித்தன் முறைமை யாமே.

[இத்தகைய சிவஅர்ச்சனைசெய் திடமாட்டார் விருத்தர் கொடிஇடையார்
உத்தமநல் சிவநிசியில் ஊண்ஒருவித் துயில்நீத்துச் சாமம் நான்கும் [நோயர்
சித்தம்மிகக் களிகூர்ந்த சிவபுரா ணம்கேட்டுச் செபங்கள் பண்ணி
முத்தன்உறை சினகரத்தில் சென்(று) அரனைச் சேவித்தல் முறைமை ஆமே.]

இ — ள்: இத்தகைய சிவார்ச்சனை செய்திடமாட்டார் விருத்தர் கொடி இடையார் நோயர் — இவ்விதமாகிய சிவபூசையியற்றுதற்கு அருகரல்லாதவர்களாகிய வயோதிபர்களும் கொடிபோன்ற இடையையுடைய பெண்களும் நோயாளர்களும், உத்தம நல் சிவநிசியில் ஊண் ஒருவி துயில் நீத்து — உத்தமமாகிய நன்மைபயத்தற்குரிய சிவராத்திரினத்தில் போசனமின்றியும் நித்திரையின்றியும், சாமம் நான்கும் — இரவில் நான்குசாமங்களிலும், சித்தம் மிகக் களி கூர்ந்து — மனமானது மிகவும் மகிழ்வடைந்து, சிவபுராணம் கேட்டு — சிவபுராண சரித்திரங்களைக் கேட்டும், செபங்கள் பண்ணி — ஸ்ரீ பஞ்சாட்சர செபங்கள் செய்தும், முத்தன் உறை சினகரத்தில் சென்று அரனைச் சேவித்தல் முறைமையாம் — இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய பதிப் பொருளாகுஞ் சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற திருக்கோவிலையடைந்து அப்பெருமானைச்சேவித்தல் தகுதியாகும் எ — று. (46)

ஏ - அசை.

அசிக்கணுமை பங்கனேமுற் சாமத்தி லருச்சித்தாங் கதற்குப் பின்னர்ப்
பசிக்கழிந்தோர் நீர்சிறிது பால்சிறிது பருகவன்றேற் பழங்கள் சற்றே
புசிக்கசல பானநன்று மத்திமம்பால் பழமதமம் பொருவில் கந்தஞ்
சுசிக்கொளப்பந் தோசைபிட்டு மாந்தலத மத்ததமஞ் சொல்லுங்
[காலே.

[அசிக்கண் உமைபங்கனேமுன் சாமத்தில் அருச்சித்(து) ஆங்(கு) அதற்குப்பின்னர்ப்
பசிக்(கு) அழிந்தோர் நீர்சிறி(து) பால்சிறிது பருக அ(து) அன்றேல் பழங்கள்சற்றே
புசிக்கசல பானம்நன்று மத்திமம்பால் பழம்அதமம் பொருவில் கந்தம்
சுசிக்கொள்அப்பம் தோசைபிட்டு மாந்தல்அதமத் ததமம் சொல்லும் காலே.]

இ — ள்: அசி கண் உமை பங்கனே — வாள்போன்ற கூரியகண்களையுடைய உமாதேவிபங்கராகிய சிவபெருமானே, முன்சாமத்தில் அருச்சித்து — முதற் சாமத்திலே பூசனைசெய்து, ஆங்கு அதற்குப்பின்னர் — அவ்விடத்தேயப்பூசை முடிந்தபின்பு, பசிக்கு அழிந்தோர் சிறிது நீர் சிறிது பால் பருக — பசியினாலே வருந்தியவர்கள் அற்பநீராவது அற்பபாலாவது பானஞ்செய்யக் கடவர், அன்றேல் பழங்கள் சற்றே புசிக்க — அது அமையாதாயின் பழங்களை அற்பமாகப் புசிக்கக்கடவர் (இவற்றுள்), சலபானம் நன்று — தண்ணீர்பருகியிருத்தலுத்தமமாகும், பால் மத்திமம் — பால் பருகுதல் மத்திமமாகும், பழம் அதமம் — பழமுண்ணுதலதமமாகும், பொருவில் கந்தம் சுசிக்கொள் அப்பம் தோசை பிட்டு மாந்தல் சொல்லுங்கால் அதமத்து அதமம் — ஒப்பில்லாத கிழங்குகளையும் சுவைகொண்ட அப்பம் தோசை பிட்டு முதலியவற்றையும் புசித்தல் வகுத்துக்கூறுமிடத்து அதமாதமமாகும் எ — று.

ஏ-அசை. (47)

பகர்தருபா ரணமுமுவாப் புணர்ந்திடமுன் பலன்கொள்சைவர் பண்
[ணல் வேண்டு
மிகறருமுப் புரமெரித்த பரமனுயர் சீர்த்திகளை யெடுத்து முன்னோர்
புகல்சரிதை பாராட்டிப் பிற்பொழுது போக்கியெழு புரவித் தேரோ
னகல்பொழுதிற் கடன்கழித்துத் துயில்வரற்றை யந்தியன்ன மருந்த
[லாகா.

[பகர்தருபா ரணமும் உவாப் புணர்ந்திடமுன் பலன்கொள்சைவர் பண்ணல்
இகல்தருமுப் புரம்எரித்த பரமன்உயர் சீர்த்திகளை எடுத்துமுன்னோர் [வேண்டும்
புகல்சரிதை பாராட்டிப் பின்பொழுது போக்கிஎழு புரவித் தேரோன் [ஆகா.]
அகல்பொழுதில் கடன்கழித்துத் துயில்வர் அற்றை அந்தி அன்னம் அருந்தல்

இ — ள்: பலன்கொள் சைவர் — நற்பலனையடைதற்கு விரும்பிய சைவர்கள், உவா புணர்ந்திடமுன்-அமாவாசை கூடுமுன்னரே, பகர்தரு பாரணமும் பண்ணல்வேண்டும் — விதிக்கப்பட்ட பாரணத்தையுஞ்செய்து முடித்தல் வேண்டும், இகல் தரு முப்புரம் எரித்த பரமன் உயர் சீர்த்திகளை — பகைமைகொண்ட

முப்புரங்களைத்தகித்தருளிய சிவபெருமானது உயர்வுபொருந்திய சிறப்புகளை, முன்னோர் எடுத்து புகல் சரிதை பாராட்டி பின்பொழுதுபோக்கி — மேலோர் எடுத்துக்கூறுகின்றகதைகளைக்கேட்டுப்பாராட்டுதல்செய்து பின்பகலைக்கழித்து, எழு புரவி தேரோன் அகல் பொழுதில் கடன்கழித்து துயில்வர் — ஏழு குதிரைகள் பூண்ட இரதத்தையுடையவனுகிய சூரியன் அஸ்தமிக்குஞ்சமயத்திற் செய்ய வேண்டியகடமைகளைச்செய்துமுடித்து நித்திரை செய்குவர், அற்றை அந்தி அன்னம் அருந்தல் ஆகா — அன்று மாலையுணவுபுசித்தலாகாவாம் எ — று. (48)

பாரணந்தான் புரிந்ததற்பின் பகற்பொழுதிற் சோம்பொடுகண் படை [செய் தாரே
லாரணங்கள் பயின்றகுல வந்தணரைம் பதிற்றிரட்டி யாயி னேரைக்
காரணங்களொன றுமின்றிக்கொன்றகடும்பழியடைவர் கருதுஞ்சாந்தி
பேரணங்கி லோமமறை விதிப்படியே புரியிலந்தப் பிழைபோ மன்றே.

[பாரணந்தான் புரிந்ததன்பின் பகற்பொழுதில் சோம்பொடு கண்படைசெய் [தாரேல்
ஆரணங்கள் பயின்றகுல அந்தணர் ஐம்பதிற்(று)இரட்டி ஆயினேரைக் [தாரேல்
காரணங்கள் ஒன்றும்இன்றிக் கொன்றகடும் பழிஅடைவர் கருதும் சாந்தி
பேர்அணங்(கு)இல் ஓமம்மறை விதிப்படியே புரியில் அந்தப்பிழைபோம்
அன்றே;)

இ — ள்: பாரணந்தான் புரிந்ததன்பின் பகற்பொழுதில் சோம்பொடு கண் படை செய்தாரேல் — பாரணஞ்செய்தபின்பு அற்றைப்பகலிலே சோம்பலினல் நித்திரைசெய்தாராயின், ஆரணங்கள் பயின்றகுல அந்தணர் ஐம்பதில் இரட்டி ஆயினேரை — சதுர்வேதங்களோயுமோதிய குலோத்தமர்களாகிய பிராமணர் கள் நூறுபெயரை, காரணங்கள் ஒன்றும் இன்றிக்கொன்ற கடும் பழி அடை வர் — யாதொருகாரணங்களுமின்றிக்கொலைபுரிந்தகொடிய பாதகத்தையடை குவர், கருதும் சாந்தி — அதற்கு மதிக்கப்பட்ட சாந்தியாவது, பேர் அணங்கு இல் ஓமம் மறை விதிப்படியே புரியில் — மிக்க துன்பமற்ற ஓமத்தை வேதவிதிப் படி செய்வாராயின், அந்தப்பிழைபோம் — அக்குற்றம் நீங்கும் எ — று.
அன்று ஏ அசைகள். (49)

முத்தியீனு விரும்பிமுதற் சங்கற்பந் தவருது மூவெட் டாண்டு
பத்தியுட னிவ்விரத நோற்றதற்பின் வேதியர்க்குப் பசுப்பூதான
நித்திலவெண் ணைகைக்கன்னி காதான மன்னமுட னிதியநல்கிப்
புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழி வதுவழக்காப் புகல்வர் மன்னே.

[முத்தியீனு விரும்பிமுதல் சங்கற்பம் தவருது மூவெட்(டு) ஆண்டு
பத்தியுடன் இவ்விரதம் நோற்றதன்பின் வேதியர்க்குப் பசுப்பூ தானம்
நித்திலவெண் ணைகைக்கன்னி காதானம் அன்னமுடன் நிதியம் நல்கிப்
புத்தியுடன் சிவநிசியாம் விரதம் ஒழிவது வழக்காப் புகல்வர் மன்னே.]

இ — ள்: முத்தியினை விரும்பி — மோக்ஷத்தை விரும்பி, முதல் சங்கற்பம் தவருது மூவெட்டு ஆண்டு பத்தியுடன் இவ்விரதம் நோற்றதன்பின் — தொடக்கத்திலே செய்துகொண்ட நியமங்கள் தவறுமல் இருபத்துநான்கு வருடம் அன்புகொண்டு இவ்விரதத்தை அனுஷ்டித்தபின்னர், வேதியர்க்கு — பிராமணர்களுக்கு, பசு பூதானம் — கோதானபூதானங்களும், நித்தில வெண் நகைக்கன்னிகாதானம் — முத்தையொத்த வெண்மையையுடைய பற்களைக் கொண்ட கன்னிகைகளைக்கொடுக்குந்தானமும், அன்னமுடன் நிதியம் நல்கி — அன்னதானமுஞ்சுவர்ணதானமுமீந்து, புத்தியுடன் சிவநிசியாம் விரதம் ஒழி வது வழக்காப்புகல்வர் — விவேகபூர்வமாய்ச்சிவராத்திரிவிரதத்தைநிறுத்துதல் முறையாமென்று கூறுவர் (அறிஞர்) எ — று.

மன் ஓ அசைகள். (50)

வேறு

இந்தநல்விர தந்தனீச்சிவனந்திக்கிசைத்திடவுணர்ந்துசெங் கதிரோன்
கந்தவேள் கதைக்கைக் காலன்விற் காமன் கடவுளர் கண்ணிரா
[யிரத்தோன்
செந்தழற் கடவுண் மதிநிதிக் குபேரன் செப்பிய வரன்முறைநோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத் தகைபெறு தலிவராயினரால்.

[இந்தநல் விரதம் தனீச்சிவன் நந்திக்(கு)
இசைத்திட உணர்ந்துசெங் கதிரோன்
கந்தவேள் கதைகைக் காலன் விற்காமன்
கடவுளர் கண்ணிரா யிரத்தோன்
செந்தழல் கடவுள் மதிநிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலிவர்ஆ யினர்ஆல்.]

இ — ள்- இந்த நல் விரதந்தனீ சிவன் நந்திக்கு இசைத்திட — இந்த நல்ல விரதத்தைச்சிவபெருமான் நந்தியந்தேவருக்கு முதலிலுபதேசிக்க, உணர்ந்து — அவரிடமதனைக் கேட்டறிந்து, செங்கதிரோன் — சிவந்த கிரணங்களையுடைய சூரியனும், கந்தவேள் — சுப்பிரமணியக்கடவுளும், கதைகைகாலன் — தண்டா யுதத்தையேந்திய கையையுடையயமனும், வில்காமன் — வில்லையுடைய மன் மதனும், கடவுளர் — தேவர்களும், கண்ணிராயிரத்தோன் — ஆயிரங்கண்களை யுடைய இந்திரனும், செம் தழல் கடவுள் — செந்நிறத்தையுடைய அக்கினிதேவ னும், மதி — சந்திரனும், நிதி குபேரன் — செல்வப்பெருக்கையுடைய குபேர னும், செப்பிய வரன்முறை நோற்று — முன்கூறியவிதிவழுவாது அனுஷ்டித்து, தம்தம மனத்தில் விழைந்தன பெற்று — தங்கள் தங்கள் மனத்தில் விரும்பிய வைகளை அடைந்து, தகைபெறு தலிவர் ஆயினர் — உயர்வுபொருந்திய அதி காரிகளாகப்பெற்றனர் எ — று.

ஆல்-அசை. (51)

என்றுரைத்திடலு நைமிச வனத்தி லிருந்தவ ரிருகரங் கூப்பி
நன்றுரைத் தனீநீ நானிலத் துள்ளோர் நவையறு சிவநிசி நோற்றிட்
டொன்றுதற் கரிதா முத்திபெற் றவர்களுளரெனி லுரையெனவுயர்ந்த
குன்றுறழ் தவத்துச் சூதமா முனிவன் கூறுவன் கேண்மினென் றிசைப்
[பான்.

[என்(று) உரைத்திடலும் நைமிச வனத்தில்
இருந்தவர் இருகரம் கூப்பி
நன்(று) உரைத் தனீநீ நானிலத்(து) உள்ளோர்
நவைஅறு சிவநிசி நோற்றிட்(டு)
ஒன்றுதற்(கு) அரிதாம் முத்திபெற்ற வர்கள்
உளர்எனில் உரைஎன உயர்ந்த
குன்(று)உறழ் தவத்துச் சூதமா முனிவன்
கூறுவன் கேண்மின் என்(று) இசைப்பான்.]

இ — ள்: உயர்ந்த குன்று உறழ் தவத்து சூதமா முனிவன் — உன்னதமாகிய மலையை நிகர்த்த தவப்பெருக்கையுடைய சூதமகாமுனிவர், என்று உரைத்திடலும் — என்றிவ்வாறு கூறுதலும், நைமிசவனத்தில் இருந்தவர் இரு கரம் கூப்பி — நைமிசாரணியத்தின்கண்ணேயிருந்த முனிவர்கள் இரண்டுகைகளோயுஞ் சிரசின்கண்ணேகுவித்து, நீ நன்று உரைத்தனே — தேவரீர்நன்றுய் விரித்துக் கூறினீர், நானிலத்து உள்ளோர் நவை அறு சிவ நிசி நோற்றிட்டு — பரந்த பூமியின்கண்ணேயுள்ள மனுடருள் குற்றமில்லாத சிவராத்திரிவிரதத்தை அனுஷ்டித்து, ஒன்றுதற்கு அரிதாம் முத்திபெற்றவர்கள் உளர் எனில் உரை என — அடைதற்கரிய மோக்ஷத்தைப் பெற்றவர்களுண்டாயின் கூறக்கடவீரென்றுவேண்டலும், கூறுவன் கேண்மின் என்று இசைப்பான் — சொல்லுவேன்கேளுங்களென்று புகல்வாராயினர் எ — று. (52)

சிவராத்திரிமான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆகவிருத்தம் 155.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

சுகுமாரச் சருக்கம்

கந்த நாண்மலர்க் குவளைநட் புறுகதிர் மதியஞ்
சந்த னடவிப் பொதும்பரிற் றவழ்ந்துசெல் சாரல்
விந்த மால்வரைக் குத்தரத் துததியின் விரிநீ
ருந்து வெண்டிரைச் சிந்துவென் றொருநதி யுளதால்.

[கந்த நாள்மலர்க் குவளைநட்பு றுகதிர் மதியம்
சந்த னஅடவிப் பொதும்பரில் தவழ்ந்துசெல் சாரல்
விந்த மால்வரைக்(கு) உத்தரத்(து) உததியின் விரிநீர்
உந்தும் வெண்திரைச் சிந்(து)என்(று) ஒருநதி உளதால்.]

இ — ள்: கந்த நாள் மலர் குவளை நட்புறு கதிர் மதியம் — பரிமளமிகுந்த அன்றலர்ந்த குமுதத்தோடு நண்புபூண்ட கிரணங்களையுடைய சந்திரனைவன், சந்தன அடவிப் பொதும்பரில் தவழ்ந்து செல் சாரல் — சந்தனமரச்சோலையின் கண்ணே தவழ்ந்து செல்லுகின்ற சாரலையுடைய, விந்தமால் வரைக்கு உத்தரத்து — பெரியவிந்தகிரியின் வடக்குப்பக்கத்தில், உததியின் விரி நீர் உந்தும் வெண் திரைசிந்து என்று ஒரு நதி உளது — சமுத்திரத்தைப்போல விரிந்த சலத்தை வீசுகின்ற வெள்ளிய திரைகள் பொருந்திய சிந்துவென்னும் பெயரையுடைய ஒருநதியுள்ளது எ — று.

ஆல் அசை. குமுதம் அஸ்தமனகாலத்திலலர்தலால் சந்திரனைக் குமுத நண்பனென்றுவழங்குவர். (1)

விடுங்க திர்த்திர ணித்திலக் கோடுகள் விரவி
நெடுந்த ருக்களை முரித்துநன் னீலவண் டார்ப்ப
வடுந்தொ ழிற்புரிந் தடவிமால் வரைநின்று வரலாற்
கொடுங்கொ லைக்கடம் பொழிகவுட் களிறெனக் குலவும்.

[விடும்க திர்த்திரள் நித்திலக் கோடுகள் விரவி
நெடும்த ருக்களை முரித்துநல் நீலவண்(டு) ஆர்ப்ப
அடும்தொ ழில்புரிந்து அடவிமால் வரைநின்று வரலால்
கொடும்கொ லைக்கடம் பொழிகவுள் களி(று)எனக் குலவும்.]

இ — ள்: விடும் கதிர்த்திரள் நித்திலக் கோடுகள் விரவி — (அச்சிந்து நதியானது) வீசுகின்ற கிரணக்கூட்டங்களமைந்த முத்துக்களையுடைய கரைகள் பொருந்தப்பெற்று, நெடும் தருக்களை முரித்து — உயர்ந்த விருட்சங்களை முரித்து, நல் நீல வண்டு ஆர்ப்ப — நல்லநீலநிறத்தைக்கொண்ட வண்டுகள் ஆரவாரிக்க, அடும் தொழில் புரிந்து — கொலைத்தொழிலைச்செய்து, அடவி

மால் வரை நின்று வரலால் — மரச்செறிவையுடைய பெரிய மலையினின்றும்வரு தலினுல், கொடும் கொலை கடம் பொழி கவுள் களிறு என குலவும் — கொடிய கொலைத்தொழிலையும் மதம்பாய்கின்ற கபோலத்தையுங்கொண்டயானை யென்றுசொல்லும்படிசெல்லும் எ — று.

யானைக்குக்கூறுங்கால் கோடு-கொம்பு; (2)

கலிகள் கற்றறி புலவர்வாய்த் தோன்றிய கவிபோன்
மலியி டைப்பிறந் தளக்கரும் பொருள்கொடு வந்து
தலைமை யுற்றசீர் பெற்றுயர் சங்கமார்ந் தெங்கு
முலவி மாநிலத் தவர்களுக் கின்பமே யுதவும்.

[கலிகள் கற்(று)அறி புலவர்வாய்த் தோன்றிய கவிபோல்
மலிஇ டைப்பிறந்(து) அளக்கரும் பொருள்கொடு வந்து
தலைமை உற்றசீர் பெற்(று)உயர் சங்கம் ஆர்ந்(து) எங்கும்
உலவி மாநிலத் தவர்களுக்(கு) இன்பமே உதவும்.]

இ — ள்: கலிகள் கற்றறி புலவர் வாய் தோன்றிய கவிபோல் — பலகலை களையுங்கற்றறிந்த கல்விமான்களது வாயினின்றும்பிறந்த செய்யுள்களைப்போல, மலியிடைப்பிறந்து — மலையினின்றுமுற்பத்தியாகி, அளக்க அரும் பொருள் கொடு வந்து — கணக்கற்ற திரவியங்களைவாரிக்கொண்டுபாய்ந்து, தலைமை உற்ற சீர் பெற்று — தலைமையாகிய சிறப்பைத்தாங்கி, உயர் சங்கம் ஆர்ந்து — மேலாகிய சங்குகள் பொருந்தப்பெற்று, எங்கும் உலவி — தேசமெங்கும்பரந்து, மாநிலத்தவர்களுக்கு இன்பமே உதவும் — பெரிய பூமியின்கண்ணுள்ளவர்களுக்கு எந்நாளுஞ்சுகத்தையே தரும் எ — று.

கவிக்குக்கூறுங்கால் மலை பொதியமலை, பொருள் - அர்த்தம்; சீர் அசை களாலாயசீர், சங்கம் கற்றோர்சபை. இன்பம் மகிழ்ச்சி. (3)

ஏந்து பூண்முலை யெயிற்றியர் வயிறலைத் திரங்கக்
காய்ந்த புற்குரம் பைகளழித் தம்புவிற் கவர்ந்தே
யாய்ந்த பாலியிற் குறும்புக ளடக்கி வேலரசர்
வாய்ந்த வெள்வளை முழங்கவந் தாலென வருமால்.

[ஏந்து பூண்முலை எயிற்றியர் வயி(று) அலைத்(து) இரங்கக்
காய்ந்த புல்குரம் பைகள்அழித்(து) அம்புவில் கவர்ந்தே
ஆய்ந்த பாலியில் குறும்புகள் அடக்கி வேல்அரசர்
வாய்ந்த வெள்வளை முழங்கவந் தால்என வரும்ஆல்.]

இ — ள்: பூண் ஏந்து முலையிற்றியர் வயிறு அலைத்து இரங்க — ஆபரணங்களைத் தாங்கிய தனங்களையுடைய வேட்டுவப்பெண்கள் தம்வயிற்றைப் பிசைந்துகலங்கும்படி, காய்ந்த புல் குரம்பைகள் அழித்து — உலர்ந்த புல்லினால் வேயப்பட்ட சிறுகுடில்களைச் சிதைத்து, அம்பு வில் கவர்ந்து — அம்புகளையும் விற்களையும் வாரிக்கொண்டு, ஆய்ந்த பாலியில் குறும்புகள் அடக்கி — ஆராயப்பட்ட பாலிநிலத்திலேயுள்ள வெப்பத்தைமாற்றி, வாய்ந்த வெள்வளை முழங்க வேல் அரசர் வந்தால் என வரும் — சிறந்த வெண்ணிறத்தையுடைய சங்குகள் ஒலிக்க வேற்படையையேந்திய அரசர்கள் வந்தாற்போலப் பாயாநிற்கும் எ — று.

அரசர்க்குக்கூறுங்கால் குறும்பு - குறுநிலமன்னர். (4)

கருது மந்நதிக் கரைமருங் குளதுகட் கமலத்
திரும கட்கணி யன்னது தேவரும் வியப்பத்
தரும நீதியுஞ் செல்வமுந் தழைப்பது தகைசால்
பொருவில் குஞ்சர புரியெனப் புகல்வதோர் நகரம்.

[கருதும் அந்நதிக் கரைமருங்(கு) உளதுகள் கமலத்
திரும கட்(கு)அணி அன்னது தேவரும் வியப்பத்
தரும நீதியும் செல்வமும் தழைப்பது தகைசால்
பொருஇல் குஞ்சர புரிஎனப் புகல்வ(து) ஓர் நகரம்.]

இ — ள்: கருதும் அந்நதி கரை மருங்கு உளது — எண்ணத்தகுந்த அச்சிந்துநதிக்கரையின் பக்கத்திலுள்ளது, கள் கமல திருமகட்கு அணி அன்னது — தேனிறைந்த தாமரைமலராசனியாகிய இலக்குமிதேவிக்கு ஆபரணம்போன்றது, தேவரும் வியப்ப தரும நீதியும் செல்வமும் தழைப்பது — தேவர்களும் புகழ்ந்துரைக்கத்தக்க நூன்முறையான நீதியுஞ்சம்பத்துங் காலந்தோறும் பெருகுந்தன்மையையுடையது, தகை சால் பொரு இல் குஞ்சர புரி என புகல்வது ஓர் நகரம் — தகுதியையுடைய ஒப்பற்ற குஞ்சரபுரியென்று சொல்லப்படுகின்ற ஒருநகரம் எ — று. (5)

உழவ ருவயற் கமலவாண் முகத்திய ருவப்ப
மழவ ருதநல் லாடவர் மணவினை முடிக்கும்
விழவ ருதவெண் சங்கொலி வீதிதோ றிரட்ட
முழவ ருதவம் முதுநகர்ப் பெருமையார் மொழிவார்.

[உழ(வு)அ ருவயல் கமலவாள் முகத்தியர் உவப்ப
மழ(வு)அ ருதநல் ஆடவர் மணவினை முடிக்கும்
விழ(வு)அ ருதவெண் சங்(கு)ஒலி வீதிதோ(று) இரட்ட
முழ(வு)அ ருதஅம் முதுநகர்ப் பெருமையார் மொழிவார்.]

இ — ள்: உழவு அரு வயல் கமல வாள் முகத்தியர் உவப்ப — உழுதொழில் நீங்காத வயல்களின்கணுள்ள தாமரைமலர்போன்ற ஒளிபொருந்திய முகத்தையுடைய பெண்கள் மகிழும்படி, மழவு அருத நல் ஆடவர் மணவினைமுடிக்கும் — இளமைநீங்காத நற்குணமமைந்த ஆண்மக்கள் மணத்தொழிலைச்செய்கின்ற, விழவு அருத வெண் சங்கு ஒலி வீதி தோறு இரட்ட — சிறப்புகள் நீங்காத வெள்ளியசங்கின் முழக்கமானது வீதிகடோறுஞ்சத்திக்க, முழவு அருத அம் முது நகர் பெருமை யார் மொழிவார் — முழவுவாத்தியத்தின் ஒலி நீங்காத பழமைபொருந்திய அக்குஞ்சரபுரியினது பெருமையையாரெடுத்துச்சொல்ல வல்லர் எ — று. (6)

நீரு கந்தகார் நிகர்நிறம் படைத்திடு நெடுமால்
ஏரு கந்தபைந் துகிலுடுத் தரிக்கலை யிகந்து
பாரு கந்தளந் திடநிமிர்ந் தாலெனப் படுமம்
போரு கந்திக ழகழிசூழ்ந் திடுநெடும் புரிசை.

[நீர்உ கந்தகார் நிகர்நிறம் படைத்திடு நெடுமால்
ஏர்உ கந்தபைந் துகில்உடுத்(து) அரிக்கலை இகந்து
பார்உ கந்(து)அளந் திடநிமிர்ந் தால்எனப் படும்அம்
போரு கம்திகழ் அகழிசூழ்ந் திடும்நெடும் புரிசை.]

இ — ள்: அம்போருகம் நிகழ் அகழி சூழ்ந்திடு நெடும் புரிசை — தாமரைகள்விளங்குகின்ற அகழியினற்சூழப்பட்ட நீண்டமதிலானது, நீர் உகந்த கார் நிகர் நிறம் படைத்திடு நெடுமால் — நீரைவிரும்பியுண்ட மேகத்தையொத்த நீலவர்ணத்தையுடைய நெடிய மகாவிஷ்ணுமூர்த்தியானவர், அரிக்கலை இகந்து — பீதாம்பரத்தையகற்றி, ஏர் உகந்த பைந்துகில் உடுத்து — அழகு பொருந்திய பசுமையாகிய வஸ்திரத்தையணிந்து, பார் உகந்து அளந்திட நிமிர்ந்தால் எனப்படும் — பூமியைவிரும்பியளக்கும்படிநெடிய வடிவுகொண்டாற்போலுமுயர்ந்திருக்கின்றது எ — று.

தாமரையிலைநெருங்கிய அகழிசூழ்ந்தமையாற்பச்சைவஸ்திரந்தரித்ததிருமாலையுவமித்தார். (7)

வீழ்ந்து விண்முகில் வேலையென் றுண்ணநீர் மிகுந்திட்
டாழ்ந்த கன்றுநீ டிஞ்சியை வணைந்தபே ரகழி
தாழ்ந்து மீதுய ரடிமுடிச் சக்கர கிரியைச்
சூழ்ந்து வெண்டிரைப் பெருங்கடல் சுற்றிய தொக்கும்.

[வீழ்ந்து விண்முகில் வேலைஎன்(று) உண்ணநீர் மிகுந்திட்(டு)
ஆழ்ந்(து)அ கன்றுநீ(டு) இஞ்சியை வணைந்தபேர் அகழி
தாழ்ந்து மீ(து)உயர் அடிமுடிச் சக்கர கிரியைச்
சூழ்ந்து வெண்திரைப் பெருங்கடல் சுற்றிய(து) ஒக்கும்.]

இ — ள்: ஆழ்ந்து அகன்று நீடு இஞ்சியை வலீந்த பேர் அகழி — ஆழ முடைத்தாய் விசாலம்பொருந்தி நீண்ட மதிலைச் சுற்றியிருக்கின்ற பெரிய அகழியானது, விண்முகில் — ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற மேகமானது, வேலை என்று வீழ்ந்து உண்ண நீர் மிகுந்திட்டு — சமுத்திரமென்று கருதிப் படிந்து பருகும்படியான நீர்மிகுதியையுடையதாய், அடி தாழ்ந்து முடிமீது உயர் சக்கர கிரியை சூழ்ந்து — அடியாழமுடைத்தாயும் முடிமிக்க உன்னதமுடைத் தாயுமுள்ள சக்கரவாள மலையை வலீந்து, வெண்திரை பெரும் கடல் சுற் றியது ஒக்கும் — வெள்ளிய திரையையுடைய புறவாழிச் சமுத்திரமானது சுற்றியிருப்பதை நிகர்க்கும் எ — று. (8)

குறையில் பொன்னெயிற் குடுமியிற் றொடுத்துயர் கொடிக
ளறைதி ரைப்புன லகழிசூ ழந்நக ரரிவை
நிறைவ னப்பெதிர் நோக்குறு மாடியா நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களிற் கலினும்.

[குறைஇல் பொன்எயில் குடுமியில் தொடுத்(து)உயர் கொடிகள்
அறைதி ரைப்புனல் அகழிசூழ் அந்நகர் அரிவை
நிறைவ னப்(பு)எதிர் நோக்குறும் ஆடியாம் நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களில் கலினும்.]

இ — ள்: குறை இல் பொன் எயில் குடுமியில் தொடுத்து உயர் கொடிகள்— எவ்வகைக்குறைவுமில்லாத அழகிய மதிலினுச்சியிற்கட்டப்பட்டுயர்ந்த கொடிகளானவை, அறை திரை புனல் அகழி சூழ் அந்நகர் அரிவை — ஒலிக்கின்ற திரைபொருந்திய நீரையுடைய அகழியினுலேசூழப்பட்ட அக் குஞ்சரபுரியாகிய பெண்ணனவள், நிறை வனப்பு எதிர் நோக்குறும் ஆடியாம் நிலவின் கறை துடைத்திட நீட்டிய கரங்களில் கலினும் — தன்னுடைய நிறைந்த அழகை எதிரிலேபார்க்கப்படுகின்ற கண்ணாடியாகிய சந்திரனது களங்கத்தைத்துடைக்கும்பொருட்டு நீட்டிய கைகளேயொத்துவிளங்கும் எ — று. (9)

நிலவு மாமணி விமானங்க ணிலத்திருந் தென்னப்
பலவு மால்வரைக் குலநிரைத் தெனக்கதிர் பரப்பி
யுலவு மான்மதிக் கூன்முது குரிஞ்சிட வுயர்ந்து
குலவு மாடகத் தியற்றிய கூடமா டங்கள்.

[நிலவு மாமணி விமானங்கள் நிலத்(து)இருந்(து) என்னப்
பலவும் மால்வரைக் குலம்நிரைத்(து) எனக்கதிர் பரப்பி
உலவு மால்மதிக் கூன்முது(கு) உரிஞ்சிட உயர்ந்து
குலவும் ஆடகத்(து) இயற்றிய கூடமா டங்கள்.]

இ — ள்: நிலவு மா மணி விமானங்கள் நிலத்து இருந்து என்ன—விளங்குகின்ற மகத்தாகிய இரத்தினங்கள் பதித்துச்செய்யப்பட்ட விமானங்களானவை பூமியின்கண்ணே வந்து தங்கினற்போலவும், மால் வரை குலம் பலவும் நிரைத்தென — பெரிய மலைக்குழாங்கள் பலவற்றையும் வரிசையாகவைத்தாற்போலவும், கதிர் பரப்பி உலவு மால் மதி கூன் முதுகு உரிஞ்சிட — கிரணங்களைப் பரவச்செய்து செல்லுகின்ற பெரிய சந்திரனது வளைந்தமுதுகானது தேயும்படி, ஆடகத்து இயற்றிய கூட மாடங்கள் உயர்ந்து குலவும் — ஆடகம் என்னும் பொன்னினாற்செய்யப்பட்ட கூடங்களும் மாடங்களும் உயர்ந்து விளங்காநிற்கும் எ — று. (10)

மாற தாமென நிழலுடன் மலைகர மலைக
ளாற தாமென விடுமதம் பெருக்கெடுத் தலைப்பச்
சேற தாய்நெடுந் தேர்களுஞ் சனங்களுஞ் செல்ல
நீற தாய்த்துக ளெழுந்துவிண் புதைக்குநீள் வீதி.

[மாற(து) ஆம்என நிழல்உடன் மலைகர மலைகள்
ஆறதாம் என விடுமதம் பெருக்(கு)எடுத்(து) அலைப்பச்
சேற(து) ஆய்நெடுந் தேர்களும் சனங்களும் செல்ல
நீ(ற)து ஆய்த்துகள் எழுந்துவிண் புதைக்கும்நீள் வீதி.]

இ — ள்: மாறது ஆம் என நிழலுடன் மலை கர மலைகள் — (பகையானை யென்றுநினைத்து) தனது சாயையோடுபொராநின்ற யானைகளானவை, ஆறது ஆம் என விடு மதம் பெருக்கு எடுத்து அலைப்ப நீள் வீதி சேறதாய் — (கண்டோரிதனையியற்கையாகிய) நதியேயென்று சொலும்படி சொரிந்த மதநீரானது பெருகி அலைகொண்டு பாய்தலினால் நீண்டதெருவீதிகளெங்குஞ்சேறுகி, நெடும் தேர்களும் சனங்களும் செல்ல நீறதாய் — பெரிய இரதங்களும் மனுடர்களுஞ் செல்லுதலினால் புலர்ந்து துகளாகி, துகள் எழுந்து விண் புதைக்கும் — அத்துகள் கிளம்பி ஆகாயத்தை மறைவுசெய்யும் எ — று. (11)

வையம் யாவையும் விலைபெற வளர்முலை வருத்த
நையு நுண்ணிடை நாரியர் புலவியிற் கழித்த
துய்ய மான்மதச் சேற்றொடு துவளு முத்தாரஞ்
செய்ய மாமணிக் கலன்கிடந் தெறிப்பன தெருக்கள்.

[வையம் யாவையும் விலைபெற வளர்முலை வருத்த
நையும் நுண்ணிடை நாரியர் புலவியில் கழித்த
துய்ய மான்மதச் சேற்றொடு துவளும் முத்தாரம்
செய்ய மாமணிக் கலன்கிடந்(து) எறிப்பன தெருக்கள்;]

இ — ள்: வையம் யாவையும் விலைபெற வளர் முலை வருத்த தையும் நுண் இடைநாரியர் — பூமிமுழுவதையும் விலையாகப்பெறும் பொருட்டு வள ராநின்ற தனபாரம் வருத்துதலினல் துன்புறுகின்ற மிருதுவாகிய இடை யையுடைய பெண்கள், புலவியில் கழித்த துய்ய மான் மதச் சேற்றொடு — ஊடலினுலே நீக்கிய சுத்தமாகிய கஸ்தூரிக்குழம்புடனே, துவளும் முத்து ஆரம் — அசைகின்ற முத்துமாலைகளும், செய்ய மா மணி கலன்கள் — செந் நிறமாகிய மாணிக்க ரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட ஆபரணங்களும், தெருக்கள் கிடந்து எறிப்பன — வீதிகளின் கண்ணே பரவிக்கிடந்து பிரகாசிப் பன எ—று. (12)

ஆதி நூலுண ரந்தணர் சாலைக ளொருபா
னீதி மன்னவர் நிறைமணி மாளிகை யொருபா
லூதி யம்பெறு வணிகர்வாழ் வசதிக ளொருபாற்
கோதின் மண்மகள் புதல்வர்தங் குலமனை யொருபால்.

[ஆதி நூல்உணர் அந்தணர் சாலைகள் ஒருபால்
நீதி மன்னவர் நிறைமணி மாளிகை ஒருபால்
ஊதி யம்பெறு வணிகர்வாழ் வசதிகள் ஒருபால்
கோ(து)இல் மண்மகள் புதல்வர்தம் குலமனை ஒருபால்.]

இ — ள்: ஆதி நூலுணர் அந்தணர் சாலைகள் ஒருபால் — முதனூலாகிய வேதங்களையறிந்த பிராமணர்கள்வசிக்கின்றசாலைகள் ஓர் பக்கத்திலும், நீதி மன்னவர் நிறை மணி மாளிகை ஒருபால் — நியாயவொழுங்கு தவறுத அர சர்களது முழுவதும் இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட மண்டபங்கள் ஓர்பக்கத்திலும், ஊதியம் பெறு வணிகர் வாழ் வசதிகள் ஒருபால் — ஆதா யத்தையடைகின்ற செட்டிகள்வசிக்கின்ற இல்லங்கள் ஓர்பக்கத்திலும், கோது இல் மண்மகள் புதல்வர் தம் குல மனை ஒருபால் — குற்றமில்லாத வேளாளர் கள்வசிக்கின்ற உயர்வுபொருந்திய இல்லங்கள் ஓர்பக்கத்திலுமுள்ளன எ — று. (13)

மெலிக்கு நூலிடை யறுமென மேகலை யரற்றிச்
சலிப்ப நாண்மலர்த் தாளணி தண்டைநூ புரங்கள்
கலிப்ப நீடிய காந்தளங் கைவளை கலினென்
றொலிப்ப மாதர்க ணாடக மாடரங் கொருபால்.

[மெலிக்கும் நூல்இடை அறும்என மேகலை அரற்றிச்
சலிப்ப நாள்மலர்த் தாள்அணி தண்டைநூ புரங்கள்
கலிப்ப நீடிய காந்தளங் கைவளை கலின்என்(று)
ஒலிப்ப மாதர்கள் நாடகம் ஆ(டு)அரங்(கு) ஒருபால்.]

இ—ள்: மெலிக்கும் நூல் இடை அறும் என மேகலை அரற்றி கலிப்ப— மெல்லிய நூல் போன்ற இடையானது முரியுமென்று மேகலாபரணம் புலம்பித் துன்புறவும், நாள் மலர் தாள் அணி தண்டை நூபுரங்கள் கலிப்ப — அன்றலர்ந்த தாமரை மலர்போன்ற பாதங்களின் கண்ணே அணியப்பட்ட தண்டைகளும் சிலம்புகளும் ஒலிக்கவும், நீடிய காந்தள் அம்கை வளைகளின் என்று ஒலிப்ப — நீண்ட செங்காந்தள் மலர்போன்ற கைகளின் கண்ணே யணியப்பட்ட வளையல்கள் கலினென்னுங் குறிப்புடன் ஒலிக்கவும், மாதர்கள் நாடகம் ஆடு அரங்கு ஒருபால் — பெண்கள் நடனம் புரிகின்ற சபாமண்டபங்கள் மற்றோர் புறத்துமுள்ளன எ — று. (14)

அலைக டற்கடைந் தரிசுரர்க் கமுதளித் ததுபோற்
றலைமை பெற்றமுத் தமிழ்க்கட லுலமத் ததனு
லுலைவு றக்கலக கிச்சுவை செவிப்புலத் துண்பான்
கலைகள் கற்பவர்க் குரைப்பவர் கழகங்க ளொருபால்.

[அலைக டல்கடைந்(து) அரிசுரர்க்(கு) அமு(து)அளித் ததுபோல்
தலைமை பெற்றமுத் தமிழ்க்கடல் தாலமத்(து) அதனுல்
உலை(வு)உ றக்கலக் கிச்சுவை செவிப்புலத்(து) உண்பான்
கலைகள் கற்பவர்க்(கு) உரைப்பவர் கழகங்கள் ஒருபால்.]

இ — ள்: அலை கடல் கடைந்து அரி சுரர்க்கு அமுது அளித்ததுபோல் — திரைபொருந்திய பாற்கடலைக்கடைந்து மகாவிஷ்ணுமூர்த்தியானவர் தேவர்களுக்கு அமுதத்தைக்கொடுத்தாற்போல, தலைமை பெற்ற முத்தமிழ் கடல் — முதன்மையையுடைய இயல் இசை நாடகம் என்கின்ற மூவகைத்தமிழாகிய சமுத்திரத்தை, தாலமத்து அதனுல் — நாவாகிய மத்தைக்கொண்டு, உலைவு உறக் கலக்கி— கலங்கும்படி கலக்கி, சுவை செவிப்புலத்து உண்பான் — அதன் தெளிவாகிய இரசத்தைச் செவியுணர்வினுல் நுகரும்படி, கலைகள் கற்பவர்க்கு— சாஸ்திரங்களை அப்பியாசஞ்செய்கின்ற மாணவர்களுக்கு, உரைப்பவர் கழகங்கள் ஒருபால் — கற்பிக்கின்ற ஆசிரியர்களது பாடசாலைகள் பின்னேர்பாங்கரினுமுள்ளன எ — று. (15)

வார்வி சித்திடு மணிமுர சோதையுங் கொடிஞ்சித்
தேர்வி டுத்திடு மோதையும் பிளிறுசிந் துரங்கள்
போர்வி டுத்திடு மோதையும் புரவியின் கணைப்புங்
கார்வி டுத்திடு மோதையின் மும்மடி காட்டும்.

[வார்வி சித்திடும் மணிமுர(சு) ஓதையும் கொடிஞ்சித்
தேர்வி டுத்திடும் ஓதையும் பிளிறுசிந் துரங்கள்
போர்வி டுத்திடும் ஓதையும் புரவியின் கணைப்பும்
கார்வி டுத்திடும் ஓதையின் மும்மடி காட்டும்.]

இ — ள்: வார் விசித்திடு மணி முரசு ஓதையும் — வாரினாலே இறுக்கப் பட்ட அழகிய முரசப்பறையினது ஆரவாரமும், கொடிஞ்சி தேர் விடுத்திடும் ஓதையும் — கூம்புகளைக்கொண்ட தேர்களைச்செலுத்துகின்ற முழக்கமும், பிளிறு சிந்துரங்கள் போர் விதித்திடும் ஓதையும்—முழங்குகின்ற யானைகளை ஒன்றோடொன்று யுத்தஞ்செய்யும்படி ஏவுகின்ற ஆரவாரமும், புரவியின் கனைப்பும் — குதிரைகளின் கனைப்பொலியும், கார் விதித்திடும் ஓதையின் மும் மடி காட்டும் — மேகத்தினின்றுபிறக்கின்ற முழக்கத்தினும் பார்க்க மும்மடங் காய்த்தொனிக்கும் எ — று. (16)

மறைவி ரித்துரை பயிற்றுந ரோதையு மன்னர்
திறைய ளக்கவந் தீண்டின ரோதையுந் தேவர்க்
கிறைமை யிற்றினஞ் சாறய ரோதைபு மெழுந்திட்
டறைக டற்படு முழக்கமுந் துளக்குற வலைக்கும்.

[மறைவி ரித்து(து)உரை பயிற்றுநர் ஓதையும் மன்னர்
திறைஅ ளக்கவந்(து) ஈண்டினர் ஓதையும் தேவர்க்(கு)
இறைமை யில்தினம் சா(று)அயர் ஓதையும் எழுந்திட்(டு)
அறைக டல்படு முழக்கமும் துளக்(கு)உற அலைக்கும்.]

இ — ள்: மறை விரித்து உரை பயிற்றுநர் ஓதையும் — வேதங்களை விரித் துக்கூறிச் சுவரங்களை மாணாக்கர்களுக்குப்பழக்குபவர்களுடைய சத்தமும், மன் னர் திறை அளக்க வந்து ஈண்டினர் ஓதையும் — அரசர்களுக்குத் திறைகொடுக் கும்படி வந்து நெருங்கிய சிற்றரசர்களுடைய ஆரவாரமும், தேவர்க்கு இறை மையில் தினம் சாறு அயர் ஓதையும் — தேவர்களுக்கு முதன்மையோடு எந் நாளுந்திருவிழாநடாத்துகின்ற ஆரவாரமும், எழுந்திட்டு — ஒன்றுயத்திரண்டு மேலெழுந்து, அறை கடல் படு முழக்கமும் துளக்குற அலைக்கும் — திரைமோது கின்ற சமுத்திரத்திலுண்டாகிய ஒலியுமமையும்படி அடக்கும் எ — று. (17)

துண்ட மாமதி தவழ்மதிற் றொன்னக ரதனுட்
கண்ட வாருயிர்த் தொகைமுழு தடங்கிய கணக்கா
லண்ட கோளகை கவித்திடும் பேருல கனைத்து
முண்ட முண்டகக் கண்ணினு னுதரமொத் துளதால்.

[துண்ட மாமதி தவழ்மதில் தொல்நகர் அதனுள்
கண்ட ஆருயிர்த் தொகைமுழு(து) அடங்கிய கணக்கால்
அண்ட கோளகை கவித்திடும் பேருல(கு) அனைத்தும்
உண்ட முண்டகக் கண்ணினன் உதரம்ஒத்(து) உள(து)ஆல்.]

இ — ள்: துண்ட மா மதி தவழ் மதில் தொல் நகர் அதனுள் — பாதியாகிய இளம்பிறைச்சந்திரனுனவன் தவழ்ந்துசெல்லுகின்ற மதில்களினூற் சூழப்பட்ட பழமையாகிய அக்குஞ்சரபுரியின்கண்ணே, கண்ட ஆர் உயிர் தொகை முழுது அடங்கிய கணக்கால்—காணப்பட்ட நிறைவாகிய ஆன்மவர்க்கங்கள் யாவும் அடங்கியகாரணத்தால், அண்ட கோளகை சுவித்திடும் பேருலகு அனைத்தும் உண்ட — அண்ட கடாகத்தினுலே சூழப்பட்ட பெரியவுலகங்களெல்லாவற்றையும் விழுங்கிய, முண்டக கண்ணினன் உதரம் ஒத்துளது — தாமரைக்கண்ணராகிய நாராயணமூர்த்தியினது திருவயிற்றை ஒத்திருந்தது எ — று. ஆல் அசை. (18)

அரிபு ரந்தரன் விரும்புமந் நகரளிப் பவன்றோ
லுரிபு ரந்தரித் துயர்வட வரைகுழைத் துருத்துத்
திரிபு ரஞ்சுடு சிவனடி சிந்தைசெய் பவன்றாட்
பரிபு ரந்திகழ் திருவுறை பரபுரஞ் சயனே.

[அரிபு ரந்தரன் விரும்புமந் நகர்அளிப் பவன்தோல்
உரிபு ரந்தரித்(து) உயர்வடவரைகுழைத்(து) உருத்துத்
திரிபு ரம்சுடு சிவனடி சிந்தைசெய் பவன்தாள்
பரிபு ரந்திகழ் திருஉறை பரபுரஞ் சயனே.]

இ — ள்: அரி புரந்தரன் விரும்பும் அந்நகர் அளிப்பவன் — விஷ்ணுமூர்த்தியினுலும் இந்திரனுலும் விரும்பப்படுகின்ற அக்குஞ்சரபுரியைப்பரிபாலனஞ் செய்பவனும், தோல் உரி புரம் தரித்து உயர் வட வரை குழைத்து உருத்து திரிபுரம் சுடும் சிவன் அடி சிந்தை செய்பவன் — யானையின் தோலையுரித்துத் திருமேனியிலணிந்து உயர்ந்த மகாமேருபர்வதத்தை வில்லாக வளைத்துக் கோபங்கொண்டு முப்புரங்களையுந்தகித்தருளிய சிவபிரானது திருவடிகளை மனத்தின்கண்ணே தியானஞ்செய்பவன், தாள் பரிபுரம் திகழ் திரு உறை பரபுரஞ்சயன் — பாதங்களின் கண்ணே சிலம்புகள் விளங்குகின்ற இலக்குமிதங்கப் பெற்றவனும் (ஆகிய) பரபுரஞ்சயன் (என்னுமோரரசனுளன்) எ — று.
ஏ அசை. (19)

காந்து செம்மணிச் சேடனுங் கமடமுங் கடம்பா
யேந்து கோட்டுமோட் டிபங்களோ ரெட்டுமெண் கிரியு
நாந்த கத்தொடு சமரமேற் றெதிருற நணுகும்
வேந்த ருஞ்சுமை யாறிட மேதினி பரிப்போன்.

[காந்து செம்மணிச் சேடனும் கமடமும் கடம்பாய்
ஏந்து கோட்டுமோட்(டு) இபங்கள்ஓர் எட்டும்எண் கிரியும்
நாந்த கத்தொடு சமரம்ஏற்(று) எதிர்உற நணுகும்
வேந்த ரும்சுமை ஆறிட மேதினி பரிப்போன்.]

இ — ள்: காந்து செம் மணி சேடனும் — பிரகாசிக்கின்ற சிவந்த மாணிக் கரத்தினம்பொருந்திய (உச்சியையுடைய) ஆதிசேடனும், கமடமும் — ஆதி கூர்மமும், கடம் பாய் ஏந்து கோட்டு மோட்டு இபங்கள் ஓரெட்டும் — மதம் பாய்கின்ற ஏந்திய கொம்புகளேக்கொண்ட உயர்ந்த திக்குயானைகளெட்டும், எண்கிரியும் — அட்டமலைகளும், நாந்தகத்தொடு சமரம் ஏற்று எதிருற நணுகும் வேந்தரும் — வாளாயுதத்துடனே யுத்தத்தைமேற்கொண்டு எதிர்த்து வருகின்ற அரசர்களும், சுமை ஆறிட மேதினி பரிப்போன் — தத்தம்சுமைகள் நீங்கும்பொருட்டுப் பூமியையரசாட்சிசெய்யுந்தன்மையையுடையவன் எ — று: (20)

வேத நூன்முறை திறம்பிடா தெங்கணும் விளங்க
மாதர் கற்பெனும் வரம்பழி யாமன்மா நிலத்தோர்
பாத கம்பழி பயின்றிடா தருள்விழி பரப்பி
யாத ரத்துட னறப்பயிர் வளர்த்தர சளித்தான்.

[வேத நூல்முறை திறம்பிடா(து) எங்கணும் விளங்க
மாதர் கற்(பு)எனும் வரம்(பு)அழி யாமல்மா நிலத்தோர்
பாத கம்பழி பயின்றிடா(து) அருள்விழி பரப்பி
ஆத ரத்துடன் அறப்பயிர் வளர்த்(து) அர(சு) அளித்தான்.]

இ — ள்: வேத நூல் முறை திறம்பிடாது எங்கணும் விளங்க — வேத சாஸ்திரங்களின்விதிதவறாது எவ்விடத்தும்வழங்கவும், மாதர் கற்பு எனும் வரம்பு அழியாமல் — பெண்கள் தமது கற்பொழுக்கந்தவறாமலும், மாநிலத் தோர் பாதகம் பழி பயின்றிடாது அருள் விழி பரப்பி — பெரியபூமியின் கண் ணேயுள்ள மாந்தர்கள் பாவச்செயல்களேயும் பழிக்குரியவற்றையுஞ்செய்யாம லும் அருளேக்கஞ்செய்து, ஆதரத்துடன் அறப்பயிர் வளர்த்து அரசு அளித் தான் — அன்போடு தருமமாகிய பயிரை வளர்த்து அரசாட்சிசெய்து வந்த னன் எ — று. (21)

அனைய கோமகற் காசிசொல் புரோகித னேனன்.
வினையி னீங்கிய சுரர்குரு நிகர்ப்பவன் வெண்ணூல்
வனையு மார்பினன் முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்
றனைய ரின்றியே நெடிதுநாட் டவத்தொடு சரித்தான்.

[அனைய கோமகற்(கு) ஆசிசொல் புரோகிதன் ஆனன்
வினையில் நீங்கிய சுரர்குரு நிகர்ப்பவன் வெண்ணூல்
வனையும் மார்பினன் முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்
தனையர் இன்றியே நெடிதுநாள் தவத்தொடு சரித்தான்.]

இ—ள்: அனைய கோமகற்கு ஆசி சொல் புரோகிதன் ஆனேன்—அப்பர புரஞ்சய மகாராசனுக்கு ஆசீர்வாதங் கூறுகின்ற குரவரும், வினையில் நீங்கிய சுரர் குரு நிகர்ப்பவன்—தீவினைகளினின்றும் நீங்கப்பெற்ற தேவகுருவாகிய வியாழபகவானையொப்பவரும், வெண் நூல் வனையும் மார்பினன்—வெள்ளிய உபவீதமணிந்து விளங்குகின்ற மார்பையுடையவரும், முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்—மூவகை அக்கினிகொண்டு யாகங்களைப் புரிபவரும் (ஆகியபிராமணரொருவர்), தனையர் இன்றியே நெடிது நாள் தவத்தொடு சரித்தான்—புத்திரர்களில்லாமற் பலகாலந் தவவொழுக்கம் பூண்டார் எ—று. (22)

சொற்ற வேதிய னில்வயிற் றூர்சுதன் றீமை
முற்று மோருருக் கொண்டென முடங்கு வெண் டிரைக
ளெற்று பாற்கட லிடைவிட முதித்தென வெழில்கூர்
பெற்ற மூர்மறைக் கொழுந்தின தருள்பெறப் பிறந்தான்.

[சொற்ற வேதியன் இல்வயிற்(று) ஓர்சுதன் தீமை
முற்றும் ஒருருக் கொண்டென முடங்குவெண் திரைகள்
எற்று பாற்கடல் இடைவிடம் உதித்(து)என எழில்கூர்
பெற்றம் ஊர்மறைக் கொழுந்தின(து) அருள்பெறப் பிறந்தான்.]

இ—ள்: சொற்ற வேதியன் இல் வயிற்று—முற்கூறப்பட்ட அப்பிராமணேத்தமரது மனையாளின் உதரத்து, தீமை முற்றும் ஓர் உரு கொண்டென—தீவினைகளெல்லாம் ஒருவடிவங்கொண்டு வந்தாற்போலவும், முடங்குவெண் திரைகள் எற்றும் பாற்கடல் இடை விடம் உதித்து என—வளைந்தவெள்ளிய திரைகளை வீசுகின்ற திருப்பாற் கடலின் கண்ணே ஆலகாலவிஷந் தோன்றினாற்போலவும், எழில் கூர் பெற்றம் ஊர் மறை கொழுந்தினது அருள் பெற—அழகு மிகுந்த இடபத்தின் மேலிவர்ந்து செல்லுகின்ற வேதமுதல்வராகிய சிவபெருமானது அருளைப் பெறும் பொருட்டு, ஓர் சுதன் பிறந்தான்—ஒரு புத்திரனவன் சனனமாயினன் எ—று. (23)

தோன்று மைந்தனுக் குயர்சுகு மாரனென் றருளா
லீன்ற தந்தைபே ரிட்டழைத் தேர்மணி யழுத்தி
யான்ற பொன்னணி யணிந்தையாண் டணுகிடு மளவின்
மூன்று நூல்வீ நான்மறை விதிப்படி முடித்து.

[தோன்று மைந்தனுக்(கு) உயர்சுகு மாரன்என்(று) அருளால்
ஈன்ற தந்தைபேர் இட்(டு) அழைத்(து) ஏர்மணி அழுத்தி
ஆன்ற பொன்னணி அணிந்(து) ஐயாண்(டு) அணுகிடும் அளவில்
மூன்று நூல்வீ நால்மறை விதிப்படி முடித்து.]

இ—ள்: தோன்று மைந்தனுக்கு — இவ்வாறுபிறந்த அப்புத்திரனுக்கு, அருளால் ஈன்ற தந்தை உயர் சுகுமாரன் என்று பேரிட்டு அழைத்து— அன் புடனே பெற்ற பிதாவானவர் உயர்வாகிய சுகுமாரனென்ற நாமகரணஞ் செய்து, ஏர்மணிஅழுத்தி ஆன்றபொன் அணி அணிந்து— அழகியஇரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட உயர்வாகிய பொன்னுபரணங்களையணிந்து, ஐ ஆண்டு அணுகிடும் அளவில்—ஐந்து வயது நிகழும்பொழுது, நால் மறை விதிப்படி மூன்று நூல் விதி முடித்து—சதுர்வேத முறைப்படி உபநயனச் சடங்கைச் செய்துமுடித்து எ—று. (24)

ஆத வன்வட திசையணை யுத்தரா யணத்திற்
றீத கன்றிடு மோரைகூ டியசுப தினத்திற்
றூத விழ்ந்தவெண் டாமரை யாள்சரண் வழுத்திப்
பாத கபயின் மகற்குநான் மறைபயில் வித்தான்.

[ஆதவன்வட திசைஅணை உத்தரா யணத்தில்
தீ(து)அ கன்றிடும் ஓரைகூ டியசுப தினத்தில்
தா(து)அ விழ்ந்தவெண் டாமரை யாள்சரண் வழுத்திப்
பாத கம்பயில் மகற்குநால் மறைபயில் வித்தான்.]

இ—ள்: ஆதவன் வடதிசை அணை உத்தராயணத்தில்—சூரியன் வடக்குத் திக்கையணைந்து செல்லுகின்ற உத்தராயண காலத்தில், நீது அகன்றிடும் ஓரை கூடிய சுபதினத்தில்—எவ்வகைத் தீங்குமில்லாத சுபமுகூர்த்தமமையப் பெற்ற நல்லநாளில், தாது அவிழ்ந்தவெண் தாமரையாள் சரண் வழுத்தி— இதழ்விரிந்த வெள்ளிய தாமரை மலரின்கண் வாசஞ் செய்கின்ற சரசுவதி தேவியினது திருப்பாதங்களைத் தோத்திரஞ்செய்து, பாதகம் பயில் மகற்கு— பாதகங்களைச் செய்பவனுகிய தன்புத்திரனுக்கு, நால்மறை பயில்வித்தான்— இருக்கு யசுர் சாமம் அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களையும் ஓதுவித்தார் எ—று. (25)

ஆய்ந்த பற்பல கலைகளு மரவினுக் கமுத
மீந்த தாமெனக் கமரிடை யுகுத்தபா லென்ன
வோய்ந்தி டாமலற் பகலெலா முணர்ந்திட வுணர்ந்து
வாய்ந்த காமவேள் கணைக்கிலக் காமென வளர்ந்தான்.

[ஆய்ந்த பற்பல கலைகளும் அரவினுக்(கு) அமுதம்
ஈந்த(து) ஆம்எனக் கமரிடை உகுத்தபால் என்ன
ஓய்ந்தி டாமல்அல் பகல்எலாம் உணர்ந்திட உணர்ந்து
வாய்ந்த காமவேள் கணைக்(கு)இலக்(கு) ஆம்என வளர்ந்தான்.]

இ—ள்: ஆய்ந்த பல்பல கலைகளும்—ஆராயப்பட்ட பலபல சாஸ்திரங்களையும், அரவினுக்கு அமுதம் ஈந்தது ஆமென—(விஷத்தைக் கொடுக்கின்ற) சர்ப்பத்துக்குப் பாலைக் கொடுத்தாற்போலவும், கமர் இடை உகுந்த பால் என்ன—நிலவெடிப்பின் கண்ணேழூற்றிய பாலைப்போலவும், ஓய்ந்திடாமல் அல் பகல் எலாம் உணர்த்திட உணர்ந்து—ஒழிதலின்றி இரவு பகல் முழுவதும் கற்பிக்கக் கற்றுணர்ந்து, வாய்ந்த காமவேள் கணைக்கு இலக்காம் எனவளர்ந்தான்—அழகுவாய்க்கப்பெற்ற மன்மதனது புஷ்ப பாணங்களுக்கு இலக்காகும் படி (இளமை பெற்று) வளர்ந்தான் எ—று. (26)

கவள மால்களி றெனவரு காட்சிகண் டுருகித்
துவள நூலிடை நடந்துபின் றொடர்ந்துதூ முல்லைத்
தவள வாணகை கோட்டிமா றருந்தனங் காட்டிப்
பவள வாயினர் காமுறு பருவமெய் தினனால்.

[கவள மால்கவி(று) எனவரு காட்சிகண்(டு) உருகித்
துவள நூல்இடை நடந்துபின் தொடர்ந்துதூ முல்லைத்
தவள வாள்நகை கோட்டிமால் தரும்தனம் காட்டிப்
பவள வாயினர் காமுறு பருவம்எய் தினன்ஆல்.]

இ—ள்: கவள மால் களிறு என வரு காட்சி கண்டு—கவளமாயுண்ணுகின்ற பெரியயானையென்று சொல்லும்படி வளர்ந்து வந்த (அப்புத்திரன தழகுநிறைந்த) தோற்றத்தைக்கண்டு, உருகி—மனங்கசிந்து, நூல் இடை துவளநடந்து—நூலொத்த நுண்ணிய இடையானது அசையும்படி நடந்து, பின்தொடர்ந்து—(அவன்செல்லுமிடங்களேறும்) பின்சென்று, தூ முல்லை தவள வாள் நகை கோட்டி—சுத்தமாகிய முல்லையரும்பையொத்த வெள்ளிய ஒளிகொண்ட பற்களைத் தோற்றுவித்து, மால் தரும் தனம் காட்டி—மயக்கத்தைத்தருகின்ற தனங்களைக் காண்பித்து, பவளவாயினர் காமுறும்—பவளம்போன்ற சிவந்தவாயினையுடைய பெண்கள் விரும்பத்தக்க, பருவம் எய்தினன்—காளைப்பருவம் வந்தெய்தப்பெற்றான் எ—று. (27)

ஆல்-அசை.

கஞ்ச நாண்மலர்க் கண்ணினன் கலைமதி தகர்த்து
விஞ்ச வேநிரைத் திணக்கிவைத் தனையவெண் ணகையான்
சஞ்ச ரீகமட் டார்பசுந் தாரொடுந் தழுவி
மஞ்சு கிண்டெழு மின்னென நுடங்குநூன் மார்பான்:

[கஞ்ச நாள்மலர்க் கண்ணினன் கலைமதி தகர்த்து
விஞ்ச வேநிரைத்(து) இணக்கிவைத்(து) அனையவெள் நகையான்
சஞ்ச ரீகம்மட்(டு) ஆர்பசும் தாரொடும் தழுவி
மஞ்சு கிண்டுஎழு மின்என நுடங்குநூல் மார்பன்.]

இ—ள்: கஞ்ச நாண் மலர் கண்ணினன் — அன்றலர்ந்த தாமரை மலரை யொத்த கண்களையுடையவனும், கலைமதி தகர்த்து விஞ்ச நிரைத்து இணக்கி வைத்தனைய வெள் நகையான்—கலைகள் பொருந்திய சந்திரனைச் சிறி தாகப்பிளந்து அதிகமாக நிரைத்து வைத்தாற்போன்ற வெண்ணிறமாகிய பற்களையுடையவனும், சஞ்சரீகம் மட்டு ஆர் பகும் தாரொடும் தழுவி—வண்டுகளானவைதேனைப்பருகுகின்ற பசுமையாகிய புஷ்பமாலையோடு சார்ந்து, மஞ்சு கிண்டு எழும் மின் என நுடங்கு நூல் மார்பன்—மேகத்தைக்கிழித்துத் தோன்றும் மின்னலையொத்தசைகின்ற உபவீதந்தங்கிய மார்பையுடையவனும் எ—று. (28)

ஏ-அசை.

பெய்யு மாமழை முகிலெனப் பிளிறுசிந் துரத்தின்
கைய தாமெனக் கவின்றரு தாழ்தடக் கையான்
றுய்ய வாரிச முகைமுறுக் கவிழ்செழுந் துணரின்
செய்ய தாளினன் றேடரு மாடவர் திலகன்.

[பெய்யும் மாமழை முகில்எனப் பிளிறுசிந் துரத்தின்
கைய(து) ஆமெனக் கவின்தரு தாழ்தடம் கையான்
துய்ய வாரிச முகைமுறுக்(கு) அவிழ்செழும் துணரின்
செய்ய தாளினன் தேடரும் ஆடவர் திலகன்.]

இ—ள்: மா மழை பெய்யும் முகிலென பிளிறு சிந்துரத்தின் கையதாம் என்—பெரிய மழையைவருஷிக்கும் மேகங்களைப்போல முழங்குகின்ற யானையினது துதிக்கையென்று சொல்லும்படி, கவின் தரு தாழ் தடகையான்—அழகார்ந்து தூங்குகின்ற விசாலித்த கைகளையுடையவனும், துய்யவாரிச முகை முறுக்கு அவிழ் செழும் துணரின் செய்யதாளினன்—சுத்தமாகிய தாமரை யரும்பினது சுருள்விரியப்பெற்ற செழுமைதங்கிய மலரையொத்த சிவந்த பாதங்களையுடையவனும், தேடரும் ஆடவர் திலகன்—தேடுதற்கரிய (அழகு வீரம் முதலியவைகள் நிறைந்த) ஆண்மக்களுக்குள்ளேசிறந்தவனும் எ—று. (29)

சொன்ன விண்டுவிற் றிரண்டுயர் பணைத்தடந் தோளான்
வன்ன மேகலை மடந்தையர் கண்கவர் வதனன்
கன்ன லஞ்சிலைக் காமனே காட்சிதந் தனையா
னன்ன வன்றிருப் பேரெழி லாரெடுத் தறைவார்.

[சொன்ன விண்டுவில் திரண்டுயர் பணைத்தடம் தோளான்
வன்ன மேகலை மடந்தையர் கண்கவர் வதனன்
கன்னல் அஞ்சிலைக் காமனே காட்சிதந்(து) அனையான்
அன்னவன் திருப் பேரெழில் ஆர்எடுத்(து) அறைவார்.]

இ—ள்: சொன்ன விண்டுவில் திரண்டு உயர் பணை தடம் தோளான்—மேருமலையைப்போலத் திரண்டு உயர்ந்த பருத்த விசாலமாகிய தோள்களையுடையவனும், வன்ன மேகலை மடந்தையர் கண் கவர் வதனன்—அழகிய மேகலாபரணமணிந்த பெண்களினது கண்களைக்கவருகின்ற முகத்தையுடையவனும், கன்னல் அம்சிலை காமனே காட்சி தந்தனையான்—கரும்பாகிய அழகிய வில்லையுடைய மன்மதனே தனது ரூபத்தைக் காட்டி வந்தாற்போலும் வடிவத்தையுடையவனுமாகிய, அன்னவன் திரு பேரெழில் ஆர்எடுத்து அறைவார்—அந்தச்சுகுமாரனது நிறைந்த பெரிய அழகுகளை யார் எடுத்து முற்றகூறி முடிக்கவல்லர் எ—று. (30)

தென்ற லந்தடந் தேர்மிசை வருமதன் செங்கை
மன்ற லம்புகள் படப்படப் பதைத்துளம் வருந்திப்
பொன் றயங்குபூண் புணர்முலைக் கணிகையர் போக
மன்றி லென்றிட நுகர்ந்தவா வடங்கில னுகி.

[தென்றல் அம்தடம் தேர்மிசை வருமதன் செங்கை
மன்றல் அம்புகள் படப்படப் பதைத்(து)உளம் வருந்திப்
பொன்த யங்குபூண் புணர்முலைக் கணிகையர் போகம்
அன்றில் என்றிட நுகர்ந்(து)அவா அடங்கிலன் ஆகி.]

இ—ள்: தென்றல் அம் தடம் தேர்மிசை வருமதன் செம் கை மன்றல் அம்புகள் பட பட—தென்றற்காற்றுகிய விசாலித்த தேரின்மேல் வருகின்ற மன்மதனது கிவந்தகைகளினின்றும் (ஏவப்படுகின்ற) வாசனை பொருந்திய மலர்ப்பாணங்கள்வந்து தாக்குந்தோறெல்லாம், உளம் பதைத்து வருந்தி—மனங்கலங்கித்துன்புற்று, பொன் தயங்கு பூண் புணர் முலை கணிகையர் போகம் அன்றில் என்றிட நுகர்ந்து—பொன்னைற் செய்து விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த நெருங்கிய தனங்களையுடைய வேசியர்களது இன்பத்தை (தனதுபெடையையொருபோதும் விட்டுப்பிரியாத) அன்றிற்பட்சியென்றுசொல்லும்படி அனுபவித்தும், அவா அடங்கிலன் ஆகி—காமவிருப்பம் தணியப்பெறுதவனுய் எ—று. (31)

பழுதி லன்புட னுதயமுற் பகருமுப் பொழுதுங்
கொழுந ரன்றியோர் கடவுளைத் தளிர்க்கரங் குவியா
வழுவில் சுற்புடை மடந்தையர் தமைமன மருட்டித்
தழுவி யானினைத் தொருமழ விடையெனச் சரித்தான்.

[பழு(து)இல் அன்புடன் உதயம்முன் பகருமுப் பொழுதும்
கொழுநர் அன்றிஓர் கடவுளைத் தளிர்க்கரம் குவியா
வழுஇல் சுற்புடை மடந்தையர் தமைமனம் மருட்டித்
தழுவி ஆன்இனத்(து) ஒருமழ விடைஎனச் சரித்தான்.]

இ — ள்: பழுதில் அன்புடன் உதயம் முன்பகரு முப்பொழுதும் — கெடுதலில் லாத அன்போடு உதயமுதலாகக் கூறப்படுகின்ற முக்காலங்களிலும், கொழுநர் அன்றி ஓர் கடவுளே தனிர் கரம் குவியா — தம்நாயகரையல்லாமல் வேறொரு தெய்வத்தையும் மாந்தளிர்போன்ற கைகளைக்குவித்து வணங்காத, வழுவில் கற்புடை மடந்தையர் தமை — தவறற்றகற்பமைந்த பெண்களை, மனம் மருட்டி தழுவி — மனதை மயக்கிப்புணர்ந்து, ஆன் இனத்து ஒரு மழவிடை எனச் சரித்தான் — பசுக்கூட்டத்தினுள்ளே (திரிகின்ற) ஒரு இளமையையுடைய இடபத்தைப்போலத் திரிந்தனன் எ — று. (32)

மாம ணனை மசானன மாக்குமா ரிதழித்
தாம ணகம புராணநூல் சதுர்மறை யென்னு
நாம நாவினி னவின்றிடா ணடொறுஞ் சிலைக்கைக்
காம ணகமம் வேதமீ தாமெனக் கற்பான்.

[மாமன் ஆனனம் அசஆனனம் ஆக்கும்ஆர் இதழித்
தாமன் ஆகம புராணநூல் சதுர்மறை என்னும்
நாமம் நாவில் நவின்றிடான் நாள்தொறும் சிலைக்கைக்
காமன் ஆகமம் வேதம்ஈ(து)ஆம்எனக் கற்பான்.]

இ—ள்: மாமன் ஆனனம் அச ஆனனம் ஆக்கும் — மாமனுடைய தக்கனது முகத்தை ஆட்டுமுகமாக மாற்றியருளிய, ஆர் இதழித் தாமன் ஆகம புராண நூல் சதுர்மறை என்னும் நாமம் — ஆத்திமாலையையுங் கொன்றை மாலையையுமணிந்த பரமசிவனது இருபத்தெட்டாகமங்களும் பதினெண்புராணங்களும் நான்கு வேதங்களுமாகிய இவைகளின் பெயரையாவது, நாவினில் நவின்றிடான் — நாவினுச்சரியாதவனும், நாள் தொறும் சிலை கைகாமன் ஆகமம் — தினந்தோறும் கருப்புவிற்கரத்தனுடைய மன்மதனது காம சாஸ்திரத்தை, வேதம் ஈது ஆம் என கற்பான் — வேதம் இதுவேயென்று அப்பியாசஞ் செய்வான் எ — று. (33)

ஈடு வாடைமற் றிலேபன மெனுமருந் தியற்றிப்
பீடு சானிறை முறைமையிற் பெருந்தகை பெற்ற
கோடு மாமணிக் கும்பநேர் குவிமுலை சுமக்கும்
வாடு நூலிடை மகளிரை வசப்பட மயக்கும்.

[ஈடு வாடைமற்(று) இலேபனம் எனும்மருந்(து) இயற்றிப்
பீடு சால்நிறை முறைமையில் பெருந்தகை பெற்ற
கோடு மாமணிக் கும்பம்நேர் குவிமுலை சுமக்கும்
வாடு நூல்இடை மகளிரை வசப்பட மயக்கும்.]

இ—ள்: ஈடு வாடை இலேபனம் எனும் மருந்து இயற்றி— இடுமருந்தும் வாடைமருந்தும் பூசுமருந்துமாகிய வசியமருந்துகளைச்செய்து, பீடுசால் நிறை முறைமையில் பெருந்தகைபெற்ற — பெருமை மிகுந்த கற்பொழுக் கத்தில் பெருந்தகைமையையுடைய, கோடு மா மணி கும்ப நேர் குவிமுலை சுமக்கும்— யானைக்கொம்புகளையும் இரத்தின கலசங்களையுமொத்த குவித்த தனங்களைத்தாங்கிய, வாடு நூல் இடை மகளிரை வசப்பட மயக்கும்— துவளுகின்ற நூல்போன்ற இடையையுடைய பெண்களைத் தன்வசமாகும்படி மயலுறுவிப்பான் எ—று. (34)

உலக்கு நாளணித் தாயினர்க் கொளிக்கு மீனெக்கு
நலத்தி னேர்சிலைக் காமவே ணணுகினு நழுவாப்
பெலத்த முல்லையாந் தருக்களை வேரொடும் பிடுங்கி
நிலத்தி னீங்கிட விசைத்தெறி சுழல் வளிநிகர்த்தான்.

[உலக்கு நாள் அணித்(து) ஆயினர்க்(கு) ஒளிக்கும் மீன்ஒக்கும்
நலத்தி னேர்சிலைக் காமவேள் நணுகினும் நழுவாப்
பெலத்த முல்லையாம் தருக்களை வேரொடும் பிடுங்கி
நிலத்தின் நீங்கிட விசைத்(து)எறி சுழல்வளி நிகர்த்தான்;]

இ—ள்: உலக்கும்நாள் அணித்தாயினர்க்கு ஒளிக்கும் மீன் ஒக்கும் நலத் தினேர்—இறக்குந்தினஞ் சமீபித்தவர்களுக்குத் தோன்றுது மறைகின்ற அருந் ததியைநிகர்த்த கற்பொழுக்கத்தையுடைய பெண்களது, சிலைகை காமவேள் நணுகினும் நழுவா பெலத்த முல்லையாம் தருக்களை—கருப்புவில்லையுடைய மன்மதன்வந்தாலும் நிலைதவறுத உறுதியாகிய கற்பென்னும் விருக்ஷங்களை, வேரொடும் பிடுங்கி நிலத்தின் நீங்கிட விசைத்து எறி சுழல் வளி நிகர்த் தான்—வேரோடும் பறித்து நிலத்தினின்றும் பிரியும்படி விசைகொண்டெறி கின்ற சூறைக்காற்றுக்கு ஒப்பாயினன் எ—று. (35)

அந்தி வெண்பிறை முடித்தவ னடித்துணைக் கமலஞ்
சிந்தை செய்கிலன் றிருவுருக் களைச்சிலை யென்றே
நிந்தை செய்தன னீதியாய் நித்தமு மியற்றுஞ்
சந்தி வந்தனை மறந்தனன் றுறந்தனன் தருமம்.

[அந்தி வெண்பிறை முடித்தவன் அடித்துணைக் கமலம்
சிந்தை செய்கிலன் திருவுருக் களைச்சிலை என்றே
நிந்தை செய்தனன் நீதியாய் நித்தமும் இயற்றும்
சந்தி வந்தனை மறந்தனன் துறந்தனன் தருமம்.]

இ — ள்: அந்தி வெண் பிறை முடித்தவன் துணை அடி கமலம் சிந்தை செய்கிலன் — அந்திக்காலத்திற்றோன்றுகின்ற வெள்ளிய பிறையைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானது இரண்டுபாத தாமரைகளையும் மனதிலே சிந்தியாது, திரு உருக்களை சிலை என்றே நிந்தை செய்தலன்—சிவலிங்கம் முதலிய தேவவிக்கிரகங்களைக் கல்லென்று அவமதித்து, நீதியாய் நித்தமும் இயற்றும் சந்தி வந்தனை மறந்தனன்—விதிப்படி தினந்தோறுஞ் செய்யப்படுவதாகிய சந்தியாவந்தனையை மறந்து, தருமமும் துறந்தனன்—பல தருமங்களையும் ஒழித்தான் எ—று. (36)

இந்த வாறிவ னெழுகிய படிறுகண் டியாருந்
தந்தை பாலெடுத் துணர்த்திடத் தனையனைக் கூவி
யந்த மாநகர்க் கலிஞரை யழைத்தரு கிருத்திச்
சிந்தை தேறுற வுறுதிநன் மதிபல செப்பும்.

[இந்த வா(று)இவன் ஒழுகிய படிறுகண்(டு) யாரும்
தந்தை பால்எடுத்து உணர்த்திடத் தனையனைக் கூவி
அந்த மாநகர்க் கலிஞரை அழைத்(து) அரு(கு) இருத்திச்
சிந்தை தேறுற உறுதிநன் மதிபல செப்பும்.]

இ — ள்: இந்தவாறு இவன் ஒழுகிய படிறு கண்டு—இவ்விதமாக இச்சுகுமாரனுனவன் செய்த குற்றங்களைப் பார்த்து, யாரும் தந்தை பால் எடுத்து உணர்த்திட—எல்லோரும் அவனது பிதாவிடத்து அக்குற்றங்கள் யாவற்றையுமெடுத்துக் கூறுதலும், தனையனை கூவி—அவர் தமது புத்திரனையழைத்து, அந்த மா நகர் கலிஞரை அழைத்து அருகு இருத்தி—அப்பெருமைதங்கிய நகரத்தின்கண்ணுள்ள கல்விமான்களை ஆங்குவருவித்துப் பக்கத்தேயிருக்கச் செய்து, சிந்தை தேறுற உறுதி நல் மதி பல செப்பும்— மனந்தெளிவடையும் பொருட்டு உறுதியாகிய நற்புந்திகள் பலவற்றையும் கூறுவராயினர் எ—று. (37)

பிறர்ம னைக்குரித் தாகிய பேதையைப் புணர்ந்தோ
ரறமு டித்தநண் பொடுபுகழ் பெருமையொன் றடையார்
மறமி குத்தவெம் பவம்பழி மாற்றரு மச்ச
மிறலி யற்றிடும் பகையிவை நான்குமெய் திடுவார்.

[பிறர்மனைக்(கு) உரித்(து) ஆகிய பேதையைப் புணர்ந்தோர்
அறம்அ டித்தநண்(பு)ஒடு புகழ்பெருமைஒன்(று) அடையார்
மறம்மி குத்தவெம் பவம்பழி மாற்றரும் அச்சம்
இறல்இ யற்றிடும் பகைஇவை நான்கும்எய் திடுவார்.]

இ — ள்: பிறர் மனைக்கு உரித்தாகிய பேதையை புணர்ந்தோர்—பிறர்மனை யியராகிய பெண்களைப் புணர்ந்தவர்கள், அறம் அடுத்த நன்பொடு புகழ் பெருமை ஒன்றும் அடையார்—தருமம் பொருந்திய சிநேகம் கீர்த்தி பெருந் தகைமையாகிய இந்நான்களுளொன்றையும் பெறார், மறம் மிகுத்த வெம் பவம் பழி மாற்றரும் அச்சம் இறல் இயற்றிடும் பகை இவை நான்கும் எய் திடுவார்—கொடுமை மிகுந்த தீயபாவங்கள் பழிகள் நீக்குதற்கரிய பயம் தன் னைக் கொலைபுரியத்தக்க (வெவ்விய) பகையாகிய இந்நான்கையும் பெறுவர் எ—று. (38)

நீடு ருதுநல் விளமையென் றுளத்திடை நிணைந்து
நாடு ருர்பிறர் மனையெனி னுமநீர் வைப்பில்
வீடு ருப்புகழ் மேவுவர் வித்தைகை வித்தங்
கூடு ருர்நர கக்குழி கிடந்தழுந் துகிலார்.

[நீ(டு)ஊருதுநல் இளமைஎன்(று) உளத்திடை நிணைந்து
நாடுருர்பிறர் மனைஎனில் நாமநீர் வைப்பில்
வீடுருப் புகழ்மேவுவர் வித்தைகை வித்தம்
கூடுருர் நரகக்குழி கிடந்(து) அழுந்து கிலார்.]

இ — ள்: நல் இளமை நீடு உருது என்று உளத்திடை நிணைந்து—நல்ல இளமைப்பருவமானது நிலையாதென்று மனத்தினினைத்து, பிறர் மனை நாடு ருர் எனில்—பிறர்மனைவியரிடத்துச் செல்லாராயின், (அவர்கள்) நாம நீர் வைப்பில் விடுருப்புகழ் வித்தை கை வித்தம் மேவுவர்—அச்சம் பொருந்திய சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியின் கண்ணே அழியாத கீர்த்தியையும் கல் வியையும் கைப்பொருளையுமடைகுவர், (அதுவுமன்றி மறுமைக்கண்) நரகக் குழி கூடுருர் கிடந்து அழுந்துகிலார்—நரகக் குழியையடைந்து ஆங்குக் கிடந்து வருந்துதலுருர் எ—று. (39)

ஊறு தீர்மரத் தூரியி னென்றென வொன்றி
வேறு பேதகங் காட்டுபுன் மனத்தினோர் விழைவாற்
கூறு நீணிதி கவர்விலை மகளிர்பாற் குறுகி
யேறு காமமே நுகர்பவர்க் கிகபர மில்லை.

[ஊறு தீர்மரத் தூரியின் ஒன்றென ஒன்றி
வேறு பேதகம் காட்டுபுன் மனத்தினோர் விழைவால்
கூறு நீள்நிதி கவர்விலை மகளிர்பால் குறுகி
ஏறு காமமே நுகர்பவர்க்(கு) இகபரம் இல்லை.]

இ — ள்: ஊறு தீர் மரத்தூரியின் ஒன்றென ஒன்றி—குற்றமில்லாத புல் தூரிவியைப்போல ஒன்றுகப் பொருந்தி, வேறு பேதகம் காட்டும் புல் மனத் தினோர் விழைவால்—மனத்தினுலே வேறுபட்டுக் காட்டுகின்ற எளிய குணத் தோரது சிநேகத்தால், கூறு நீள் நிதி கவர் விலை மகளிர்பால் குறுகி—சொல் லப்படுகின்ற மிக்க திரவியத்தையபகரிக்கும் வேசியரிடத்திற்சென்று, ஏறு காமமே நுகர்பவர்க்கு இகபரம் இல்லை—மிக்க காமவிச்சையே பொருளென்று அனுபவிப்பவர்களுக்கு இம்மை மறுமை இன்பங்களில்லையாம் எ—று. (40)

என்று பற்பல நன்மதி துன்மதி யிதயந்
துன்று மச்சுகு மாரனுக் குரைத்தலுஞ் சொற்ற
தொன்று மற்றவன் செவிப்புல நுழைந்தில துபலஞ்
சென்று தைத்திடா நெடுமர முளேயெனச் சிதைந்த.

[என்று பற்பல நன்மதி துன்மதி இதயம்
துன்றும் அச்சுகு மாரனுக்(கு) உரைத்தலும் சொற்ற(து)
ஒன்றும் மற்(று)அவன் செவிப்புலம் நுழைந்தில(து) உபலம்
சென்று தைத்திடா நெடுமர முளேனச் சிதைந்த.]

இ — ள்: என்று பல் பல நன்மதி துன்மதி இதயம் துன்றும் அ சுகுமார னுக்கு உரைத்தலும்—இவ்வாறு பலவித நற்புத்திகளைத் துர்ப்புத்திகள் மனத்திலேகுடிகொண்ட அந்தச்சுகுமாரனுக்குக் கூறுதலும், சொற்றது ஒன் றும் அவன் செவிப்புலம் நுழைந்திலது—கூறியதொன்றும் அவனது செவி யிற்சென்று பலன் தந்திலது. உபலம் சென்று தைத்திடா நெடுமர முளே எனசிதைந்த—கற்பாறையின் கண்ணேசென்று தையாத நெடிய மரமுளே யைப்போல (எல்லாப்புத்திகளும்) அழிந்துபட்டன எ—று. (41)

மற்று - அசை.

கப்பி நாடொறுங் கழித்துண வளிப்பினுங் கோழி
தப்பி லாதுபுன் குப்பைபோய்க் கிளைத்திட றவிரா
தொப்பி னூல்படித் துறுமதி யோர்பல கோடி
செப்பி னுலுந்தம் மனம்புரி செயல்விடார் தியோர்.

[கப்பி நாள்தொறும் கழித்(து)உணவு அளிப்பினும் கோழி
தப்(பு)இ லாதுபுன் குப்பைபோய்க் கிளைத்திடல் தவிரா(து)
ஒப்(பு)இல் நூல்படித் (து)உறுமதி யோர்பல கோடி
செப்பினுலும் தம்மனம்புரி செயல்விடார் தியோர்.]

இ — ள்: கோழி—கோழியானது, நாள்தொறும் கப்பி கழித்து உணவு அளிப்பினும்—தினந்தோறும் கப்பிமுதலிய தாழ்ந்த பொருள்களே யொழித்து நல்ல உணவைக் கொடுத்துவந்தாலும், தப்பிலாது புன் குப்பை போய் கிளைத்திடல் தவிராது—தவறுமலெனிய குப்பையிற் சென்று கிளறுதலே நீங்காது (அதுபோல), தீயோர்—தீக்குணம்நிறைந்தவர்கள், ஒப்பு இல் நூல் படித்து உறு மதி பல கோடி செப்பினலும்—ஒப்பில்லாத பல நூல்களைக் கற்று மிக்க புத்திகள் பலவற்றைக் கோடிக்கணக்காயெடுத்துரைப்பினும், தம்மனம் புரி செயல் விடார்—தம்மனத்தில் விரும்பிய எளிய செய்கைகளே விடார் எ—று. (42)

ஓர் அசை.

களிப்பி னுஞ்சுடுங் கடவுளர் கடல்கடை யமிர்த
மளிப்பி னுஞ்சுடு மறைதிரைக் குளிர்புன லகத்துக்
குளிப்பி னுஞ்சுடுங் குன்றுறு குகைகளிற் குறுகி
யொளிப்பினு ஞ்சுடுங் காமமிக் கூர்தர வுழன்ரூன்.

[களிப்பி னும்சுடும் கடவுளர் கடல்கடை அமிர்தம்
அளிப்பி னும்சுடும் அறைதிரைக் குளிர்புனல் அகத்துக்
குளிப்பி னும்சுடும் குன்(று)உறு குகைகளில் குறுகி
ஒளிப்பி னும்சுடும் காமம்மிக்(கு) ஊர்தர உழன்ரூன்.]

இ — ள்: களிப்பினும் சுடும்—மகிழ்வுறும் போதுஞ் சுடத்தக்கதும், கடவுளர் கடல் கடை அமுதம் அளிப்பினும் சுடும்—தேவர்கள் பாற்கடலைக் கடைந்து பெற்ற அமிர்தத்தைக் கொடுத்தாலுஞ் சுடத்தக்கதும், அறை திரை குளிர் புனல் அகத்து குளிப்பினும் சுடும்—ஒலிக்கின்ற திரைநிறைந்தகுளிர்ந்த சமுத்திர சலத்தினுள்ளே அமிழ்ந்திக் கிடந்தாலுஞ் சுடத்தக்கதும், குன்று உறு குகைகளில் குறுகி ஒளிப்பினும் சுடும்—மலைகளிற் பொருந்திய குகைகளினிடத்துச் சென்று ஒளித்தாலுஞ் சுடத்தக்கதுமாகிய, காமம் மிக்கு ஊர் தர உழன்ரூன்—காமநோயானது மிகுந்து அதிகரித்தலினுல் அலைந்தான் எ—று. (43)

தூய நீத்திழி தொழில்புரி துர்க்குணத் திவனேத்
தாயு நீத்தன டந்தையு நீத்தனன் றமர்க
ணேய நீத்தனர் நிலநிதி மகளிர்மே னிகழு
மாய நீத்ததின் மயக்கறத் துறந்தவர் மனம்போல்.

[தூய நீத்(து)இழி தொழில்புரி துர்க்குணத்(து) இவனேத்
தாயும் நீத்தனள் தந்தையும் நீத்தனன் தமர்கள்
நேயம் நீத்தனர் நிலம் நிதி மகளிர்மேல் நிகழும்
மாயம் நீத்(து) அதின் மயக்(கு) அறத் துறந்தவர் மனம்போல்.]

இ—ள்: நிலம் நிதி மகளிர்மேல் நிகழும் மாயம் நீத்து—மண் பொன் பெண்களிடத்துண்டாகுமாசையையொழித்து, அதின் மயக்கு அற துறந்தவர் மனம்போல்—அவற்றின் மயக்கத்தினின்றும் முற்றத்துறந்த துறவிகளது மனத்தைப்போல, தூய நீத்து இழி தொழில் புரி துர் குணத்து இவனே—நற்கருமங்களே விடுத்து எளியகருமங்களைப் புரிகின்ற கெட்ட குணத்தையுடைய இச்சுகுமாரனே, தாயும் நீத்தனள் தந்தையும் நீத்தனன்—மாதாவும் நீக்கினுள் பிதாவும் நீக்கினன், தமர்கள் நேயம் நீத்தனர்—சுற்றத்தவர்களும் அன்பு நீங்கப் பெற்றார்கள் எ—று. (44)

தொழுகு லத்தவர் மரபினிற் ரோமறத் தோன்றிப்
பழுது பற்பல வினைத்திழி குலத்தொழில் பயின்ரான்
முழுமு தற்பொரு ளாய்மறை நடஞ்செய்நான் முகத்தோ
னெழுது மத்தக விதிவழி விலக்கினே ரெவரே.

[தொழுகு லத்தவர் மரபினில் தோம் அறத் தோன்றிப்
பழுது பற்பல வினைத்(து) இழி குலத்தொழில் பயின்ரான்
முழுமுதற்பொரு ளாய்மறை நடம்செய் நான் முகத்தோன்
எழுதும் மத்தக விதிவழி விலக்கினோர் எவரே.]

இ—ள்: தொழு குலத்தவர் மரபினில் தோமற தோன்றி—பிராமண வருணத்திலே குற்றமின்றிப்பிறந்தும், பழுது பல்பல வினைத்து இழிகுலத் தொழில் பயின்ரான்—குற்றங்கள் பலவற்றை வினைவித்து எளியகுலத்தவர்களது தொழிலைச் செய்துவந்தான், முழு முதல் பொருள் ஆய் மறைநடம்செய் நான்முகத்தோன் எழுதும் மத்தக விதிவழி விலக்கினோர் எவர்—எல்லாவற்றிற்கும் முதற்பொருளாகிய பரமபதியை ஆராய்தறிதற் கிடமாயுள்ள சதுர்வேதங்களும் நடனஞ்செய்கின்ற நான்கு முகங்களையுடைய பிரமாவாலெழுதப்பட்ட தலைவிதிக்கிரமத்தை நீக்கிக்கொண்டவர் யாருளர் எ—று:

ஏ அசை. (45)

கன்னி மாடமும் கடிமதிற் காவலும் கட்ந்து
துன்னு மாரிருட் பொழுதின்மங் கையர்முலை தோய்வா
னன்ன மன்னவர் தமைப்பிறர் விலக்கினு மமையா
ரின்ன தன்மையி னீங்கிவை நிகழ்ந்துறு மேல்வை.

[கன்னி மாடமும் கடிமதிற் காவலும் கடந்து
துன்னும் ஆரிருள் பொழுதில்மங் கையர்முலை தோய்வான்
அன்னம் அன்னவர் தமைப்பிறர் விலக்கினும் அமையார்
இன்ன தன்மையின் ஈங்(கு)இவை நிகழ்ந்(து)உறும் ஏல்வை.]

இ — ள்: கன்னி மாடமும் கடி மதில் காவலும் கடந்து—கன்னிகாமாடங் கோயுங் காவல்பொருந்திய மதிற்காப்பையுந்தாண்டி, துன்னும் ஆர் இருள் பொழுதில்—மிக நெருங்கிய இருட்காலத்தில், மங்கையர் முலே தோய்வான் — பெண்களது தனபோகத்தை யனுபவிப்பான், அன்னம் அன்னவர் தமை பிறர் விலக்கினும் அமையார்—அன்னம்போன்ற அம்மகளிரைப் பிறர் தடுத்தவழியுந் தடைப்படார், இன்ன தன்மையின் ஈங்கு இவை நிகழ்ந்து உறும் ஏல்ஏவ—இவ்விதமாய் இவ்விடத்திவைகள் நடைபெறுகின்ற காலத்தில் எ—று. (46)

முத்த மீதினு முளரிமென் முகிழ்முலே முகத்தும்
வைத்த பற்குறி நகக்குறி சுண்டுதம் மனையார்
தத்த மக்குள கற்பழிந் தாரெனச் சலித்துக்
கைத்த சிந்தைய ராகியக் கடிநக ருள்ளார்.

[முத்தம் மீதினும் முளரிமென் முகிழ்முலே முகத்தும்
வைத்த பற்குறி நகக்குறி கண்டுதம் மனையார்
தத்தமக்(கு)உள கற்(பு)அழிந் தார்எனச் சலித்துக்
கைத்த சிந்தையர் ஆகிஅக் கடிநகர் உள்ளார்.]

இ — ள்: முத்தம் மீதினும் முளரி மென் முகிழ் முலே முகத்தும்—வாயிதழ்களினும் தாமரை முகையையொத்த மிருதுவாகிய முகிழ்த்த தனங்களினும், வைத்த பல் குறி நக குறி கண்டு—பதித்த பற்குறி நகக்குறிகளைப் பார்த்து, தம் மனையார் தம் தமக்கு உள கற்பு அழிந்தார் என சலித்து—தமது பெண்கள் தங்கள் தங்கள் கற்பு நெறி கெடப்பெற்றனரென்று துன்பமடைந்து, அ கடி நகர் உள்ளார் கைத்த சிந்தையர் ஆகி—அக்காவலமைந்த நகரவாசிகள்யாரும் வெறுத்த மனமுடையராய் எ—று. (47)

காவல் கட்டழித் திரவினிற் கரவினு லெய்தி
யாவ ரித்தொழில் புரிபவ ரெனமனத் தெண்ணிப்
பாவ முற்றிய படிற்றொழுக் கச்சுகு மாரன்
மாவ னப்புடை யான்செய லிதுவென மதித்து.

[காவல் கட்(டு)அழித்(து) இரவினில் கரவினுல் எய்தி
யாவர் இத்தொழில் புரிபவர் எனமனத்(து) எண்ணிப்
பாவம் முற்றிய படிற்(று)ஒழுக் கச்சுகு மாரன்
மாவ னப்புடை யான்செயல் இதுஎன மதித்து.]

இ — ள்: காவல் கட்டழித்து—எமது காவல் வரம்பைக்கெடுத்து, இரவினில் கரவினுல் எய்தி—இராக்காலத்தில் மறைவாய்வந்து, யாவர் இதொழில் புரிபவர் என மனத்து எண்ணி—யார் இக்காரியத்தைச் செய்பவரென்று மனத்திலாலோசித்து, மா வனப்பு உடையான்—பேரழகினை யுடையவனும், பாவம் முற்றிய படிற்று ஒழுக்கச் சுகுமாரன்—பாவம் நிறைந்த பொய்யொழுக்கத்தையுடையவனுமாகிய சுகுமாரனது, செயல் இது என மதித்து—செய்கையேயிதுவென்று நிச்சயித்து எ—று. (48)

அற்ற நோக்கியாம் பற்றினு மகப்படா ஞசை
பெற்ற மாதர்நம் மொழிப்படி யினிமனம் பிரியா
ரிற்ற தாகுமில் வாழ்க்கையென் றிரங்கியுட் கவலை
யுற்று ளோர்திரண் டென்செய்கே மிதற்கென வுசாவி.

[அற்றம் நோக்கியாம் பற்றினும் அகப்படான் ஆசை
பெற்ற மாதர்நம் மொழிப்படி இனிமனம் பிரியார்
இற்ற(து) ஆகும்இல் வாழ்க்கைஎன்(று) இரங்கிஉள் கவலை
உற்றுளோர் திரண்(டு) என்செய்கேம் இதற்(கு)என உசாவி:]

இ — ள்: யாம் அற்றம் நோக்கி பற்றினும் அகப்படான்—நாம் சமயம் பார்த்துப் பிடிப்பினும் அகப்படான், ஆசை பெற்ற மாதர்—அவனிடத்தே விருப்பம்வைத்த பெண்கள், நம் மொழிப்படி மனம் இனி பிரியார்—எமது சொல்லின்படி மனத்தையினிமீளார், இல்வாழ்க்கை இற்றது ஆகும் என்று இரங்கி—எமது இல்லொழுக்கமானது அழிந்ததுவென்று துன்புற்று, உள் கவலை உற்றுளோர் திரண்டு—உள்ளத்திலே கவலை நிறையப் பெற்றவராய் மாந்தர்களெவருமொருங்குகூடி, என் செய்கேம் இதற்கு என உசாவி—இதற்கு யாம் யாதுசெய்வோமென்று தம்முள் வினவி எ—று. (49)

வேறு

காசினி யென்னு மாதின் கலிக்கரி யாடை நீக்கி
மாசகல் புகழ்வெள் ளாடை சாத்திய மன்னன் முன்போய்க்
கூசுத லின்றி நந்தங் குறைதிறந் தறைவோ மென்னத்
தூசகல் வாரின் மான மிழந்தவர் துணிந்து சூழ்ந்து.

[காசினி என்னும் மாதின் கலிக்கரி ஆடை நீக்கி
மா(சு)அகல் புகழ்வெள் ளாடை சாத்திய மன்னன் முன்போய்க்
கூசுதல் இன்றி நந்தம் குறைதிறந்(து) அறைவோம் என்னத்
தூ(சு)அகல் வாரின் மானம் இழந்தவர் துணிந்து சூழ்ந்து:]

இ — ள்: காசினி என்னும் மாதின் கலி கரி ஆடை நீக்கி—பூமிதேவியினது தீமையாகிய கரிய வஸ்திரத்தைக் கழித்து, மாசு அகல் புகழ் வெள் ஆடை சாத்திய—குற்றமற்ற கீர்த்தியாகிய வெள்ளுடையைத்தரித்த, மன்னன் முன் போய்—மகாராசனது முன்னிலையிற் சென்று, கூசுதல் இன்றி நம் தம் குறை திறந்து அறைவோம் என்ன—மனக்கூச்சமின்றி நமது குறைவை வெளிப்படுத்திச் சொல்லுவோமென்று, தூசு அகல்வாரில் மானம் இழந்தவர் துணிந்து சூழ்ந்து—தமது வஸ்திரத்தை யிழந்தவர் கூறப்போல மானமழியப் பெற்றயாவரு மனவுறுதிகொண்டொருங்குகூடி எ—று. (50)

கால்வழி சென்னீ ரென்னைக் கருத்தொருப் படுத்தி மான
வேல்வழி கண்ட நெஞ்சர் வெள்வளீ கொழுக்கள் கீண்ட
சால்வழி பரந்து மேயுந் தண்பணீ நாடு நீதி
நூல்வழி புரக்கு மன்னன் வாயிலை நோக்கி யேகி.

[காவ்வழி செல்நீர் என்னைக் கருத்(து)ஒருப் படுத்தி மான
வேல்வழி கண்ட நெஞ்சர் வெள்வளைக் கொழுக்கள் கீண்ட
சால்வழி பரந்து மேயும் தண்பணீ நாடு நீதி
நூல்வழி புரக்கும் மன்னன் வாயிலை நோக்கி ஏகி.]

இ — ள்: மான வேல் வழி கண்ட நெஞ்சர்—மானமாகிய வேல்துளைத்துப் புறத்தேபோகப்பட்ட நெஞ்சையுடையவர்களாகிய அம்மாந்தர், கால் வழி செல் நீர் என்ன கருத்து ஒருப்படுத்தி—வாய்க்கால்வழியே பாய்கின்ற சலத்தைப்போல தம்மனத்தை ஒருவழிநிறுத்தி, கொழுக்கள் கீண்ட சால்வழி வெள்வளீ பரந்து மேயும்—கலப்பை முனையினுற் கிழிக்கப்பட்ட சால்மார்க்கமாய் வெள்ளியசங்குகள் பரந்து மேயாநின்ற, தண்பணீ நாடு நீதி நூல் வழி புரக்கும் மன்னன் வாயிலை நோக்கி ஏகி—குளிர்ந்த வயல்பொருந்திய நாட்டை நீதி சாஸ்திர விதிப்படி பரிபாலனஞ்செய்யு மரசனது மாளிகை வாயிலை நோக்கிச்சென்று எ—று. (51)

வாயிலோர் தம்மைக் கண்டெம் வரவுரைத் திடுதி ரென்னப்
போயிலோர்க் கன்னீ யன்ன புரவலற் போற்றி மாந்த
ராயினேர் கோடி யோரிங் கடைந்தன ரென்னைக் கஞ்சக்
கோயிலோ ரிருவர் மேவுங் கொற்றவன் கொணர்மி னென்றான்.

[வாயிலோர் தம்மைக் கண்(டு)எம் வர(வு)உரைத் திடுதிர் என்னப்
போய் இலோர்க்(கு) அன்னீஅன்ன புரவலன் போற்றி மாந்தர்
ஆயினேர் கோடியோர்இங்(கு) அடைந்தனர் என்னைக் கஞ்சக்
கோயிலோர் இருவர் மேவும் கொற்றவன் கொணர்மின் என்றான் ;]

இ — ள்: வாயிலோர் தம்மை கண்டு எம்வரவு உரைத்திடுதிர் என்ன— வாயிற்காவலரைப் பார்த்து எமதுவருகையை அரசனுக்குத் தெரிவியுங்க ளென்று சொல்ல, போய்—அக்காவலர் சென்று, இ ல் லோ ர் க் கு அன்னை அன்ன புரவலற்போற்றி—ஆதுலர்க்கு (அன்னம்முதலியவற்றை வேண்டியபடி கொடுத்து வளர்த்தலால்) தாய்போன்ற அவ்வரசனை நமஸ்கரித்து, மாந்தர் ஆயினோர் கோடியோர் இங்கு அடைந்தனர் என்ன—கோடிக்கணக்கான மனு டர்களிங்கு வந்திருக்கின்றார்களென்று கூற, கஞ்ச கோயிலோர் இருவர்மேலும் கொற்றவன்—தாமரையாசனிகளாகிய இலக்குமி சரசுவதியென்னும் இருவ ரும் வீற்றிருக்கின்ற அவ்வரசனனவன், கொணர்மின் என்றான்—அவர்களை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தான் எ—று. (52)

அரசர்கோ னருளிப் பாடென் றவரையுட் புகுத்தப் போந்து
கரசரோ ருகங்கள் கூப்பிக் கணைகழற் முளிற் முழ்ந்து
பரசநீள் கடைக்க ணேக்கம் பரப்பிநுங் குறையா தென்ன
முரசகே தனனே யொப்பாய் கேளென மொழிய லுற்றார்.

[அரசர்கோன் அருள்இப் பா(டு) என்(று) அவரைஉட் புகுத்தப் போந்து
கரசரோ ருகங்கள் கூப்பிக் கணைகழற் முளின் தாழ்ந்து
பரசநீள் கடைக்கண் நோக்கம் பரப்பிநும் குறையா(து) என்ன
முரசகேதனனே ஒப்பாய் கேள்என மொழியல் உற்றார்.]

இ — ள்: அரசர் கோன் அருள் இப்பாடு என்று — அரசர்க்கு அரசனாகிய பரபுரஞ்சயமகாராசனது கிருபையானதித்தகையதென்று, அவரை உள்புகுத் தப் போந்து — அவர்களையுள்ளே அனுப்பச்சென்று, சரோருககரங்கள் கூப்பி— தாமரைமலர்போன்ற கைகளைக்குவித்து நின்று, கணைகழல் தாளில் தாழ்ந்து பரச — ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த பாதங்களில் வீழ்ந்து வணங்க, நீள் கடைக்கண் நோக்கம் பரப்பி — நீண்ட கடைக்கண்ணாற் பார்த்தருளி, நும் குறை யாது என்ன — உமக்கு நேர்ந்த குறைவு என்னையென்று வினவ, முரச கேதனனே ஒப்பாய் கேளென மொழியலுற்றார் — முரசக்கொடியையுடையவ னாகிய தருமராசனை யொத்ததன்மையோய் கேட்டருள்கவென்று கூறுவாராயி னார் எ — று. (53)

பூசுர குலேச னுநின் புரோகிதன் மைந்த னெந்து
வாசநீள் கணைக ரந்த மதன்சுகு மார னென்பா
னீசனுய்த் தனது சாதி நீதியா நியம நீத்துத்
தூசகல் கரவு வஞ்சஞ் சூது செய் தூர்த்த னாகி.

[பூசுர குலேச னும்நின் புரோகிதன் மைந்தன் ஐந்து
வாசநீள் கணைக ரந்த மதன்சுகு மாரன் என்பான்
நீசனுய்த் தனது சாதி நீதியாம் நியமம் நீத்துத்
தூ(சு)அகல் கரவு வஞ்சம் சூதுசெய் தூர்த்தன் ஆகி:]

இ — ள்: பூசுர குல ஈசனும் நின் புரோகிதன் மைந்தன் — பிராமண குலோத்தமராகிய உமது ஆசாரியருடைய புத்திரனும், வாசம் நீள் ஐந்து கணை கரந்த மதன் சுகுமாரன் என்பான் — வாசனைபொருந்திய நீண்ட ஐந்து புஷ்ப பாணங்களும் மறையப்பெற்ற மன்மதனையொத்தவனுமாகிய சுகுமாரனென்னும் பெயரினையுடையவன், தனது சாதி நீதியாம் நியமம் நீத்து நீசனும் — தனது சாதிக்குரிய நீதியொழுக்கங்களை விடுத்து இழிகுலத்தவனும், தூசு அகல் கரவு வஞ்சம் சூது செய் தூர்த்தன் ஆகி — சுத்தமற்ற களவையும் கபடத்தையும் சூதாடலையும் செய்கின்ற தூர்த்தகுணத்தனாகி எ — று. (54)

சூல்வளை முழங்கி யார்க்குந் தொடுகடல் வளாக வைப்போர்
கோல்வளை யாமற் காக்குங் குரிசினின் னகரந் தன்னிற்
கால்வளை வரிவில் லேய்க்குங் கருங்கொடிப் புருவ மின்னூர்
மால்வளை மனத்த ராய்க்கற் பிகந்திட வருத்து கின்றான்.

[சூல்வளை முழங்கி ஆர்க்கும் தொடுகடல் வளாக வைப்(பு)ஓர்
கோல்வளை யாமல் காக்கும் குரிசில்நின் நகரம் தன்னில்
கால்வளை வரிவில் ஏய்க்கும் கருங்கொடிப் புருவ மின்னூர்
மால்வளை மனத்த ராய்க்கற்(பு) இகந்திட வருத்து கின்றான்.]

இ — ள்: சூல் வளை முழங்கி ஆர்க்கும் தொடு கடல் வளாக வைப்பு — கருமுதிர்ச்சியையுடைய சங்குகளானவை முழங்கிச்சத்திக்கின்ற (சகரர்களினாலே) தோண்டப்பட்ட சமுத்திரஞ்சூழ்ந்த பூமியை, ஓர் கோல் வளையாமல் காக்கும் குரில் — ஒப்பற்ற செங்கோல்முறைவதறுமற் பரிபாலனஞ் செய்கின்ற மகாராசனே, நின் நகரம் தன்னில் — உமது நகரத்தின்கண்ணே, கால் வளை வரி வில் ஏய்க்கும் கொடி கரும் புருவ மின்னூர் — காலினாலே வளைக்கப்பட்ட வரிந்து கட்டிய வில்லையொத்த கொடிபோன்ற கரிய புருவத்தைக் கொண்ட பெண்கள் யாவரும், மால் வளை மனத்தராய் — மயக்கத்தினாலே சுவரப்பட்டமனத்தையுடையராய், கற்பு இகழ்ந்திட வருத்துகின்றான் — தமது நிறையாகியவொழுக்கங்கெடும்படி துன்பஞ்செய்கின்றனன் எ — று. (55)

இல்லின்மே வியமின் னர்தங் குணகுண மெவர்க்கு முன்னுஞ்
சொல்லநா ணுறுவர் யாருந் தோற்றுநோய் துடைத்து மாற்ற
வல்லரா மருத்து வர்க்கு மறைப்பவ ருளரோ மன்ன
புல்லரே மானங் காத்துப் புரந்தரு ளெம்மை யென்றூர்.

[இல்லின்மே வியமின் னர்தங் குணகுணம் எவர்க்கு முன்னும்
சொல்ல நா ணுறுவர் யாரும் தோற்றும்நோய் துடைத்து மாற்ற
வல்லராம் மருத்துவர்க்கும் மறைப்பவர் உளரோ மன்ன
புல்லரேம் மானம் காத்துப் புரந்தருள் எம்மை என்றூர்:]

இ — ள்: மன்ன — அரசனே, யாரும் — யாராயினும், இல்லின் மேவிய மின்னுர் தம் குண அகுணம் எவர்க்கு முன்னும் சொல்ல நாண் உறுவர் — தமது இல்லத்தில் வாசஞ்செய்கின்ற மனைவியர்களின் குணகுற்றங்களை எவர் முன்னிலையிலாயினும் வெளிப்படுத்திக்கூற வெட்கமடைவர், தோற்றும்நோய் துடைத்துமாற்ற வல்லராம் மருத்துவர்க்கு — தம்மிடத்துண்டாகியரோகத்தை முற்றச்சுகப்படுத்தவல்ல வயித்தியர்களுக்கு, மறைப்பவர் உளரோ — (தமது துன்பங்களைக் கூறுது) மறைத்துவைப்பவர்களுண்டா (அதுபோல எங்கட்குநேர்ந்த இடரைநீக்கவல்ல நுமக்கு உண்மையைக் கூறினேம்), புல்லரேம் மானம் காத்து புரந்தருள் எம்மை என்னுர் — தாழ்ந்தநிலையேமாகிய எங்களது மானத்தைக்காப்பாற்றி நம்மையிரட்சித்தருளுகவென்று வேண்டினர் எ — று. (56)

கேட்டபோ திருகைப் போதாற் கிளர்செவித் துளைகண் மூடிக்
கோட்டமி றனிக்கோ லோச்சுங் கோவிரு கோக்கள் சேப்ப
வாட்டமில் குமுதச் செய்ய வாயிதழ் துடிப்ப விந்த
நாட்டர சளித்த நீதி நன்றுநன் றென்ன நக்கான்.

[கேட்டபோ(து) இருகைப் போதால் கிளர்செவித் துளைகள் மூடிக்
கோடம்இல் தனிக்கோல் ஓச்சும் கோஇரு கோக்கள் சேப்ப
வாட்டம்இல் குமுதச் செய்ய வாய்இதழ் துடிப்ப இந்த
நாட்(டு) அர(சு) அளித்த நீதி நன்று நன்(று) என்ன நக்கான்.]

இ — ள்: கோட்டம் இல் தனிக் கோல் ஓச்சும் கோ—கோணுதலின்றி ஒப்பில்லாத நீதியைச் செலுத்துகின்ற அவ்வரசனவன், கேட்டபோது—அதனைக் கேட்டமாத்திரத்தில், இரு கை போதால் கிளர் செவி துளைகள் மூடி—மலர்போன்ற இரண்டு கைகளாலும் விளங்குகின்ற செவித்துவாரங்களைப் பொத்திக்கொண்டு, இரு கோக்கள் சேப்ப—இரண்டு கண்களும் சிவப்பேற, வாட்டம் இல் குமுத செய்ய வாய் இதழ் துடிப்ப—வாடுதலற்ற செவ்வாம்பன் மலரைநிகர்த்த சிவந்த வாயினுதடுகள் துடிக்க, இந்த நாட்டு அரசு அளித்த நீதி நன்று நன்று என்னநக்கான்—இந்த நகரத்தை யான் பரிபாலனஞ் செய்த நீதிமுறை நல்லது நல்லது என்று சிரித்தான் எ—று.

நன்று என்பது குறிப்பாற் பழித்தது. (57)

சிற்றமீக் கூர நின்ற சேனைகா வலரை நோக்கி
மாற்றரும் படிற ஞகி மறைக்குலந் தோன்றி னேனைக்
காற்றென விரைந்து சென்றிக் கணத்தினிற் கொணர்மி னென்ன
வேற்றுரி முரசு நாண விடியென முழங்கிச் சொன்னன்.

[சிற்றம்மீக் கூர நின்ற சேனைகா வலரை நோக்கி
மாற்றரும் படிறன் ஆகி மறைக்குலம் தோன்றி னேனைக்
காற்றென விரைந்து சென்(று)இக் கணத்தினில் கொணர்மின் என்ன
ஏற்(று)உரி முரசு நாண இடிஎன முழங்கிச் சொன்னான்.]

இ — ள்: சீற்றம் மீக் கூர — (அவ்வரசன்) கோபமதிகரிக்க, நின்ற சேனை காவலரைநோக்கி — ஆங்குநின்ற சேனபதிகளைப்பார்த்து, மறை குலம் தோன்றி மாற்றரும் படிறன் ஆகினானை — பிராமணகுலத்திற் பிறந்து (அக் குலத்திற்குரிய நல்லொழுக்கங்களைநீத்து) தடுத்தற்கரிய தூர்த்தவொழுக்கத் தையுடையவனுகிய சுகுமாரனை, காற்று என விரைந்து சென்று — காற்றைப் போல வேகமாய் நீவிர் சென்று, இக்கணத்தினில் கொணர்மின் என்ன — இப்பொழுதே பிடித்துவாருங்களென்று, ஏற்று உரி முரசு நாண இடி என முழங்கி சொன்னன் — இடபத்தோல்கொண்டு சமைக்கப்பட்ட முரசப் பறை யும் நாணமடையும்படி இடியேற்றைப்போலப் பெருந்தொனியாகக் கூறினன் எ — று. (58)

குரைகடல் விடத்திற் ரோன்றுங் கூற்றுவன் றூத ரொப்பா
ரரைநொடிப் பொழுதி லோடி யந்நகர் முழுதுந் தேடி
வரையில்புன் ரொழில்க ளாற்று மறையவன் றன்னைப் பற்றி
விரைவுடன் கொணர்ந்து கொற்றவேந்தர் கோன்றிருமுன் விட்டார்.

[குரைகடல் விடத்தில் தோன்றும் கூற்றுவன் தூதர் ஒப்பார்
அரைநொடிப் பொழுதில் ஓடி அந்நகர் முழுதும் தேடி
வரைஇல்புன் தொழில்கள் ஆற்றும் மறையவன்றன்னைப் பற்றி
விரைவுடன் கொணர்ந்து கொற்றவேந்தர் கோன்திருமுன் விட்டார்.]

இ — ள்: குரை கடல் விடத்தில் தோன்றும் கூற்றுவன் தூதர் ஒப்பார்— ஒலிக்கின்ற பாற்சமுத்திரத்திற்ரோன்றிய ஆலகால நஞ்சைப்போலக் காணப் படும் இயமனது தூதுவர்களை நிகர்த்த சேனைத்தலைவர், அரைநொடி பொழு தில் ஓடி—அரைக்கணத்தினுள்ளே ஓடிச்சென்று, அந்நகர் முழுதும்தேடி— அந்த நகரமெங்கும் தேடிப்பார்த்து, வரை இல் புன் தொழில்கள் ஆற்றும் மறையவன் தன்னை பற்றி—கணக்கற்றவெளிய தொழில்களைச் செய்பவனுகிய அச்சுகுமாரனைப்பிடித்து, விரைவுடன் கொணர்ந்து—வேகமாய்க் கொண்டு வந்து, கொற்ற வேந்தர் கோன் திருமுன் விட்டார்—வெற்றி பொருந்திய பரபுரஞ்சயமகாராசனது திருமுன்னிலையில் விடுத்தனர் எ—று. (59)

வெய்யவேல் விடலை தூர்த்த விப்பிரன் றன்னை நோக்கிச்
செய்யநான் மறையோர் நீதி திறம்பிடு மிவனைச் சென்னி
கொய்திட வேண்டு மென்னைக் குலமறை யவரைக் கோற
லையநின் மரபு நீதிக் கடாததென் றமைச்சர் கூற,

[வெய்யவேல் விடலை தூர்த்த விப்பிரன் றன்னை நோக்கிச்
செய்யநான் மறையோர் நீதி திறம்பிடும் இவனைச் சென்னி
கொய்திட வேண்டும் என்னைக் குலமறையவரைக் கோறல்
ஐயநின் மரபு நீதிக்(கு) அடாத(து) என்(று) அமைச்சர் கூற,]

இ—ள்: வெய்ய வேல் விடலை—உக்கிரமாகிய வேலையுடைய அவ்வரசனுவன், தூர்த்த விப்பிரன் தன்னை நோக்கி—காமுகனாகிய அச்சுகுமாரனைப் பார்த்து, செய்ய நால் மறையோர் நீதி திறம்பிடும் இவனை—செம்மையாகிய சதுர்வேதங்களையுமுணர்ந்த வேதியர்க்குரிய வொழுக்கங்களைக் கடந்த இப் பார்ப்பானை, சென்னி கொய்திட வேண்டும் என்ன—சிரசை வெட்டுதலே தக்கதென்று கூற, அமைச்சர்—(அதனைக் கேட்ட) மந்திரிமார், ஐய—மகாராசனே, குல மறையவரைக் கோறல்—மேன்குலத்தராகிய பிராமணரைக் கொல்லுதல், நின் மரபு நீதிக்கு அடாததென்று கூற—உமது சுத்திரியவொழுக்கத்திற்கு இசையாததென்று (தடுத்துச்) சொல்ல எ—று. (60)

கோமுகங் குளிர்ந்து கோபக் கொடுங்கன றணிந்து பின்ன
ரேமுகக் கருங்கண் மாதர்க் கிசைந்தகற் பெனுங்கான் காம
மாமுகத் தியி னெற்சுட் டரும்பழி சுமந்த விந்தக்
காமுகன் றனை நம் மெல்லி கடத்திநீர் விடுத்தி ரென்றான்.

[கோ முகம் குளிர்ந்து கோபக் கொடும்கனல் தணிந்து பின்னர்
ஏமுகக் கருங்கண் மாதர்க்(கு) இசைந்த கற்(பு)எனும்கான் காம
மாமுகத் தியினுல்சுட்(டு) அரும்பழி சுமந்த இந்தக்
காமுகன் றனை நம் எல்லி கடத்திநீர் விடுத்திர் என்றான்.]

இ—ள்: கோ முகம் குளிர்ந்து—(அம்மந்திரிமார் கூறிய வசனத்தைக் கேட்ட) அரசன் முகமலர்ச்சிகொண்டு, கொடும் கோப கனல் தணிந்து—உக்கிரமாகிய கோபாக்கினியவியப்பெற்று, பின்னர்—அதன்மேல், ஏ முககரும் கண் மாதர்க்கு இசைந்த கற்பு எனும் கான்—அம்பின் முனையையொத்த கூரிய கரிய கண்களையுடைய பெண்களுக்கு இயல்பாயுள்ள கற்பு நெறியாகிய பெருங் காட்டை, காம மாமுக தியினுல் சுட்டு—காமமென்கின்ற வடவாமுகாக்கினியினுலே தகித்து, அரும்பழி சுமந்த இந்த காமுகன் தன்னை—நீர்த்தற்கரிய பழிகளைச்செய்த இந்தத்தூர்த்தனை, நீர் நம் எல்லி கடத்தி விடுத்திர் என்றான்—நீங்கள் நமது தேசவெல்லைக்கப்பால் துரத்திவிடுங்களென்று கட்டளை செய்தான் எ—று. (61)

அனையரவ் வுரைகேட் டந்த வந்தணன் றன்னைப் பற்றி
வனைகழன் மன்னன் காக்கு மாநிலங் கடத்தி யப்பால்
விளைவலி யுனக்குச் சூழ்ந்த தென்றவர் விடுத்து மீண்டார்
சினைவளர் தருக்கண் மேவுங் காநெறி சேணிற் சென்றான்.

[அனையர்அவ் உரைகேட்(டு) அந்த அந்தணன் தன்னைப் பற்றி
வனைகழல் மன்னன் காக்கும் மாநிலம் கடத்தி அப்பால்
விளைவலி உனகுச் சூழ்ந்த(து) என்(று)அவர் விடுத்து மீண்டார்
சினைவளர் தருக்கள் மேவும் கான்நெறி சேணில் சென்றான்;]

இ — ள்: அனையர் அவ்வுரை கேட்டு—அச்சேனைத்தலைவர் அவ்வாஞ்ஞை யைக்கேட்டு, அந்த அந்தணன் தன்னைப்பற்றி—அச்சுகுமாரனைப்பிடித்து, வனை கழல் மன்னன் காக்கும் மா நிலம் கடத்தி—அழகிய வீரக்கழலணிந்த அவ் வரசனுலரசாட்சி செய்யப்படுகின்ற பெரிய தேசத்தைத்தாண்டி, அப்பால் விடுத்து—அப்புறத்தேவிட்டு, வினை வலி உனக்கு சூழ்ந்தது என்று—நீ முன் செய்த ஊழ்வினைப்பலனே இப்போது உன்னை வந்து சுற்றிக்கொண்டதென்று கூறி, அவர் மீண்டார்—அவர்கள் மீண்டுவந்தனர், சினைவளர் தருக்கள் மேவும் கான்நெறி சேணில் சென்றுன்—அச்சுகுமாரன் கிளைகள் மலிந்த விருகூங்கள்பொருந்திய காட்டுமார்க்கமாய் நெடுந்தூரம் போயினன் எ—று. (62)

விண்ணுறு வரைக ளென்ன விளங்குதன் றுணைத்தோள் சேர்ந்த
பண்ணுறு மொழியி னுரை நினைதொறும் பரிந்து நீண்ட
கண்ணுறு புனலா றென்னக் கலுழவேள் கணைகள் பாய்ந்த
புண்ணுறு மார்பிற் றென்றல் புகுந்தழல் போல வீச.

[விண்உறு வரைகள் என்ன விளங்குதன் துணைத்தோள் சேர்ந்த
பண்உறு மொழியி னுரை நினைதொறும் பரிந்து நீண்ட
கண்உறு புனல்ஆ(று) என்னக் கலுழவேள் கணைகள் பாய்ந்த
புண்உறு மார்பில் தென்றல் புகுந்(து)அழல் போல வீச.]

இ — ள்: விண் உறு வரைகள் என்ன விளங்கு தன் துணை தோள் சேர்ந்த—ஆகாயத்தையளாவிய மலைகளைப்போலக் கிளர்ந்து விளங்கிய தனது இரண்டு புயங்களையுமணைந்த, பண் உறு மொழியினுரை—பண்ணமைந்த இனிய வார்த்தைகளையுடைய மங்கையர்களை, நினை தொறும் பரிந்து—சிந்திக்குந் தோறும் மனம் வருந்தி, நீண்ட கண் உறு புனல் ஆறு என்னக்கலுழ—நெடிய கண்களினின்றுந்தோன்றிய நீரானது ஆறுபோலப்பாய, வேள்கணைகள் பாய்ந்த புண் உறு மார்பில் தென்றல் புகுந்து அழல் போல வீச—மன்மதனது அம் புகள் தைத்துப் புண்பட்ட மார்பினிடத்துத் தென்றற் காற்றுனது பாய்ந்து அக்கினியைப்போல அழற்ற எ—று. (63)

அடுசினக் கரடி கோடி யாடுநீ டரவ மாளி
படுமதக் கலுழி தூங்கும் பணைக்கைமால் யானை பாயுங்
கொடுவரிப் புலிவாழ் காட்டிற் கூளிபோற் றனித்துத் துன்பத்
தொடுதிரிந் துழல்வான் றன்மு னுனைடையொன் றுற்ற தன்றே.

[அடுசினக் கரடி கோடி ஆடுநீ(டு) அரவம் ஆளி
படுமதக் கலுழி தூங்கும் பணைக்கைமால் யானை பாயும்
கொடுவரிப் புலிவாழ் காட்டில் கூளிபோல் தனித்துத் துன்பத்
தொடுதிரிந்(து) உழல்வான் தன்முன் ஓடைஒன்(று) உற்றது அன்றே.]

இ — ள்: அடு சின கரடி—கொலைத்தொழிலைச் செய்கின்ற கோபம் மிக்க கரடிகளும், கோடி ஆடு நீடு அரவம்—வளைந்தாடுகின்ற நீண்ட சர்ப்பங்களும், ஆளி—சிங்கங்களும், படு மத கலுழி தூங்கும் பிணை மால் யானை—மதம்பாய்கின்ற சுவட்டையும் தூங்குகின்ற பருத்த துதிக்கையையுமுடைய பெரியயானைகளும், பாயும் கொடு வரி புலி வாழ் காட்டில்—தாவிப் பாய்கின்ற கொடிய பலவரிகளமைந்த புலிகளும் வாசஞ்செய்கின்ற கானகத்தில், கூளிபோல் தனித்துத் துன்பத்தொடு திரிந்து உழல்வான் தன்முன்—பேய் போலத் தனித்துக் கவலைகொண்டு திரிந்தலைபவனுகிய சுகுமாரனுக்கு முன்னே, ஓடை ஒன்று உற்றது—ஓர் தடாகம் காணப்பட்டது எ—று

அன்று ஏ அசைகள். (64)

தத்திவீழ் திரைக ளெற்றத் தவழ்ந்துசூற் சங்க மீன்ற
நித்திலங் கரைகடோறு நிலவுகா னிழனீர்ப் பொய்கை
மெத்திய நீள மாழம் விரிவுறு மகல மெல்லா
மத்தியென் றுரைப்ப தல்லா லாரதன் பெருமை சொல்வார்.

[தத்திவீழ் திரைகள் எற்றத் தவழ்ந்துசூற் சங்கம் ஈன்ற
நித்திலம் கரைகடோறும் நிலவுகால் நிழல்நீர்ப் பொய்கை
மெத்திய நீளம் ஆழம் விரி(வு)உறும் அகலம் எல்லாம்
அத்திஎன்(று) உரைப்ப(து) அல்லால் ஆர்அதன் பெருமை சொல்வார்.]

இ—ள்: தத்தி வீழ் திரைகள் எற்ற—குதித்துப் பாய்கின்ற திரைகள் மோத, தவழ்ந்து சூல் சங்கம் ஈன்ற நித்திலம் கரைகள் தோறும் நிலவுகால்—ஊர்ந்து சென்று கருமுதிர்ச்சியையுடைய சங்குகளீன்ற முத்துக்களானவை கரைகளெங்குமொளியைக் கக்குகின்ற, நிழல் நீர் பொய்கை—மரநிழலையும் சலத்தொகுதியையுங்கொண்ட அத்தடாகத்தை, மெத்திய நீளம் ஆழம் விரிவுறும் அகலம் எல்லாம்—மிக்க நீளமும் ஆழமும் பரந்த விசாலமுமாகிய எல்லாவற்றினுலும், அத்தி என்று உரைப்பது அல்லால்—(கண்டோர்) சமுத்திரமென்று கூறுவதன்றி, ஆர் அதன் பெருமை சொல்வார்—எவர் அதின் பெருமையை யெடுத்துக் கூற வல்லர் எ—று. (65)

அம்புய முகமென் காவி யம்பக மாம்பல் வாய்வெண்
கம்புகந் தரங்கோ கங்கொங் கைகணைக் கால்வ ராற்கூர்
மம்புகழ் புறந்தாண் ஞெண்டு வருமுழந் தாள்க ளாகப்
பம்புநீர்ப் படுகர் மென்சொற் பாவைய ருருவங் காட்ட.

[அம்புயம் முகம், மென் காவி அம்பகம் ஆம்பல் வாய், வெண்
கம்பு கந்தரம்கோ கங்கொங் கை, சணைக் கால்வ ரால், கூர்
மம்புகழ் புறந்தாள்; ஞெண்டு வருமுழந் தாள்கள் ஆகப்
பம்புநீர்ப் படுகர் மென்சொற் பாவையர் உருவம் காட்ட.]

இ—ள்: பம்பு நீர் படுகர்—ஒலிக்கின்ற சலம்நிறைந்த அத்தடாகமானது, அம்புயம் முகம்—தாமரைமலரை முகமாகவும், மென் காவி அம்பகம்—மிருதுவாகிய கருங்குவளை மலரைக்கண்களாகவும், ஆம்பல் வாய் — செங்குமுத மலரை வாயாகவும், வெண் சும்பு கந்தரம் — வெள்ளிய சங்கைக்கழுத்தாகவும், கோகம் கொங்கை—சக்கரவாகப்பட்சிகளை ஸ்தனங்களாகவும், வரால் கணைக்கால்—கெண்டைமற்சங்களைக் கணைக்கால்களாகவும், சுமம் புகழ் புறந்தாள்—ஆமைகளைப் புகழப்படுகின்ற புறங்கால்களாகவும், ஞெண்டு வரு முழந்தாள்கள் ஆக—நண்டுகளைப் பொருந்திய முழந்தாள்களாகவும் கொண்டு, மென்சொல் பாவையர் உருவம் காட்ட—மிருதுவாகிய வசனங்களையுடைய பெண்களினது வடிவத்தைத் தோற்றுவிக்க எ—று. (66)

முரிதிரைச் சிலைகால் கோட்டி மூசுவண் டெனுநாண் பூட்டி
விரிமலர்க் கமலங் காவி விசிகங்கள் விரைவின் மாட்டிப்
பிரிவெனுந் துயராற் றுவிப் பிரன்றனைப் பெருத்த பூசல்
புரிதர மதனின் றென்னப் பொலிந்ததப் பொய்கை மன்னே.

[முரிதிரைச் சிலைக்கால் கோட்டி மூசுவண்(டு) எனும்நாண் பூட்டி
விரிமலர்க் கமலம் காவி விசிகங்கள் விரைவில் மாட்டி
பிரி(வு)எனும் துயர்ஆற்று,விப் பிரன்றனைப் பெருத்த பூசல்
புரிதர மதன்நின்(று) என்னப் பொலிந்த(து) அப்பொய்கை மன்னே.]

இ — ள்: அப்பொய்கை — அத்தடாகமானது, முரி திரை சிலை கால் கோட்டி—வளைந்த திரைகளாகிய வில்லைக் காலுறவளைத்து, மூசு வண்டு எனும் நாண் பூட்டி—இரைகின்ற வண்டுகளாகிய நாண்கயிற்றைத் தொடுத்து, விரிமலர் கமலம் காவி விசிகங்கள் விரைவில் மாட்டி—விரிந்த தாமரைமலர் குவளைமலராகிய பாணங்களை வேகமாய்த்தொடுத்து, பிரிவு எனும் துயர் ஆற்று விப்பிரன் தனை—பிரிதலாகிய துன்பத்தைச்சகிக்க மாட்டாத அச்சுகமாரனை, பெருத்த பூசல் புரிதர—பெருஞ்சண்டையைச் செய்தலினால், மதன் நின்று என்னப் பொலிந்தது—மன்மதன் உருவங்கொண்டு வெளிநின்றாற்போலத் தோற்றியது எ—று.

மன் ஓ அசைகள். (67)

மூண்டவெம் பசியாற் செய்ய முளரியார் முளரி யெங்கு
மாண்டமீ னிரைதேர் வன்மீன் வாய்ப்படா துகண்டு தப்பிக்
தூண்டகு வாளை தாவுந் துழனிகேட் டெழுந்து துள்ளி
நீண்டபைங் கயலை நேடித் துரந்துபோய்ப் பாயு நீர்நாய்.

[மூண்டவெம் பசியால் செய்ய முளரிஆர் முளரி எங்கும்
மாண்டமீன் இரைதேர் வன்மீன் வாய்ப்படா(து) உகண்டு தப்பி
தூண்தகு வாளை தாவும் துழனிகேட்(டு) எழுந்து துள்ளி
நீண்டபைங் கயலை நேடித் துரந்துபோய்ப் பாயும் நீர்நாய்.]

இ — ள்: மூண்ட வெம் பசியால்—கொதித்தெழுந்த கொடிய பசியினாலே, செய்ய முளரி ஆர் முளரி எங்கும்—செந்தாமரை நிறைந்த (அத்தடாகமாகிய) காடுமுழுவதிலும், மாண்ட மீன் இரை தேர் வன் மீன் வாய்ப்படாது உகண்டு தப்பி தூண் தகு வானோ—பெரிய மீன்களே இரையாகத் தேடித் திரிகின்ற முதலியினது வாய்க்கு அகப்படாமல் துள்ளிப்பிழைத்துத் தூண்களே யொத்த வானோமற்சங்கள், தாவும் துழனி கேட்டு—பாய்கின்ற ஆரவாரத்தைக்கேட்டு, நீர் நாய்—நீர் நாயானது, துள்ளி எழுந்து—துள்ளிப் பாய்ந்து, நீண்ட பைங்கயலே நேடி துரந்து போய் பாயும்—நீளமாகிய பசிய கயல்மற்சங்களைத் தேடிப்பின் தொடர்ந்து பாய்ந்து செல்லும் எ—று. (68)

முத்தியி லவப்பொய் வேட முயன்றுகண் முகிழ்த்தி யோகம்
புத்தியி னிருந்து தீமை புரிபவ ரென்னத் தூங்கித்
துத்தியா டரவி னெட்டைக் கழுத்தினைச் சுருக்கி மீனைக்
குத்திநுங் கிடக்கண் மூடி யிருப்பன குரண்டங் கோடி.

[முத்திஇல் அவப்பொய் வேடம் முயன்று கண்முகிழ்த்(து) யோகம்
புத்தியின் இருந்து தீமை புரிபவம் என்னத் தூங்கித்
துத்திஆ(டு) அரவின் நெட்டைக் கழுத்தினைச் சுருக்கி மீனைக்
குத்திலுங் கிடக்கண் மூடிஇருப்பன குரண்டம் கோடி.]

இ — ள்: முத்தி இல் அவப் பொய் வேடம் முயன்று—மோட்சசாதனமல்லாத வீணாகிய பொய் வேடங்களேப்பூண்டு, கண்முகிழ்த்து—கண்ணை மூடிக் கொண்டு, யோகம் புத்தியில் இருந்து தீமை புரிபவர் என்ன—யோகநிலையில் விவேகத்தோடிருந்து தீமைகளேயெல்லாம் மறைவாய்ச் செய்பவர்கள்போல, கோடி குரண்டம்—கோடிக்கணக்கான கொக்குகள், தூங்கி—தூக்கத்தோடிருந்து, துத்தி ஆடு அரவின் நெட்டைக் கழுத்தினைச் சுருக்கி—படம்விரித்தாடுகின்ற சர்ப்பத்தைப்போல நெடிய கழுத்தைச் சுருக்கிக்கொண்டு, மீனைக்குத்தி நுங்கிட—மீன்களைக் கொத்தி விழுங்கும்படி, கண்மூடியிருப்பன—கண்களே மூடிக் கொண்டிருப்பன எ—று. (69)

ஈட்டுவல் வினையின் கொட்பா லெடுத்திடு மியாக்கை மாண்டு
மீட்டும்வந் துலகிற் றோன்றும் விகற்பமித் தன்மை யென்னக்
கோட்டுவெண் டிரைகண் மோதுங் குரைகடற் புவியுள் ளோர்க்குக்
காட்டுவ தென்ன நீரிற் குளித்தெழு கரண்டங் கொள்ளை.

[ஈட்டுவல் வினையின் கொட்பால் எடுத்திடும் யாக்கை மாண்டு
மீட்டு வந்(து) உலகில் தோன்றும் விகற்பம் இத்தன்மை என்னக்
கோட்டுவெண் திரைகள் மோதும் குரைகடற் புவிஉள்ளோர்க்குக்
காட்டுவ(து) என்ன நீரில் குளித்(து)எழு கரண்டம் கொள்ளை.]

இ — ள்: ஈட்டு வல் வினையின் கொட்பால் எடுத்திடும் யாக்கை—(ஆன் மாக்கள் முன்னரே) செய்துகொண்ட கொடிய வினைப்பகுதியின் காரணத் தால் எடுத்த சரீரமானது, மாண்டு மீட்டும் வந்து உலகில் தோன்றும் விகற்பம் இத்தன்மை என்ன—அழிந்து பின்னருமுலகத்தில் வந்து பிறக் கின்ற பேதம் இத்தன்மையையுடையதென்று, கோட்டு வெண் திரைகள் மோதும் குரைகடல் புவி உள்ளோர்க்கு காட்டுவது என்ன—கரையிலே வெள் ளிய திரைகள் வந்து வீசுகின்ற ஆர்ப்பரிப்பையுடைய கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள மனுடர்களுக்கு விளங்கக் காண்பிப்பதுபோல, கொள்ளை கரண் டம் நீரில் குளித்து எழும்—தொகையாகிய நீர்க்காகங்களானவை அச்சலத் தினுள்ளமிழ்ந்தி பின்னர் மேலெழும்பும் எ—று. (70)

தூயவெண் ணிறக்கூன் சங்கஞ் சூலுளோந் தேறி முட்டாண்
மேயசெங் கமலப் போதின் மீதிருந் தொளிருந் தோற்ற
மாயர்கண் படைகண் டன்னே ரகத்துறி சரித்து மாயன்
சேயகைத் தலத்தில் வாரித் திரட்டிய வெண்ணெய் போலும்.

[தூயவெண் நிறக்கூன் சங்கம் சூல்உளோந்(து) ஏறிமுள்தாள்
மேயசெங் கமலப் போதின் மீ(து)இருந்(து) ஒளிரும் தோற்றம்
ஆயர்கண் படை கண்(டு) அன்னோர் அகத்(து) உறிசரித்து மாயன்
சேயகைத் தலத்தில் வாரித் திரட்டிய வெண்நெய் போலும்.]

இ — ள்: தூய வெள் நிற கூன் சங்கம் சூல் உழைந்து முள் தான் மேய செம் கமல போதில் மீது ஏறி இருந்து ஒளிரும் தோற்றம்—சுத்தமாகிய வெள்ளிய நிறத்தையுடைய வளைந்த சங்குகளானவை ஈற்றுளைந்து முள்ள மைந்த நாளங்களைக்கொண்ட செந்தாமரைமலரின்மேல் ஏறியிருந்து விளங்கு கின்ற காட்சியானது, மாயன்—கிருஷ்ணமூர்த்தியானவர், ஆயர் கண் படை கண்டு—இடையர்களினது நித்திரைக் காலம் பார்த்து, அன்னோர் அகத்து உறி சரித்து—அவர்களது இல்லத்தின்கணுள்ள உறிகளைச்சாய்த்து, சேய கை தலத்தில் வாரி திரட்டிய வெண்ணெய் போலும்—தமது செந்நிறமாகிய திருக்கரத்தின்கண்ணே அள்ளித் திரட்டிய வெண்ணெயையொக்கும் எ—று. (71)

கல்லுநீர்க் கயத்து மீனைக் கதுவவீழ்ந் ததுபெ ருமற்
சில்லுகிர்ச் சிரலே வெள்கிச் சிறைவிரித் திருப்ப தோர்பாற்
சொல்லுநற் றிகிரிப் புள்ளுத் துணைச்சிறை புலர்த்திக் கோதிப்
புல்லுயிர்ப் பேடை யோடு புளினமே னடப்ப தோர்பால்.

[கல்லுநீர்க் கயத்து மீனைக் கதுவவீழ்ந்(து) அதுபெருமல்
சில்உகிர்ச் சிரலே வெள்கிச் சிறைவிரித் திருப(து) ஓர்பால்
சொல்லுநற் திகிரிப் புள்ளுத் துணைச்சிறை புலர்த்திக் கோதிப்
புல்லுயிர்ப் பேடையோடு புளினம்மேல் நடப்ப(து) ஓர்பால்.]

இ — ள்: ஓர்பால்—ஓர்பக்கத்தில், சில் உகிர் சிரலே—சிறிய நகங்களையுடைய சிரலேப்பட்சியானது, கல்லுநீர் கயத்து மீனைக் கதுவ வீழ்ந்து—தோண்டப்பட்ட நீர்நிறைந்த அத்தடாகத்தின்கணுள்ள மற்சத்தைக் கவ்வும்படி பாய்ந்து, அதுபெறுமல் வெள்கி சிறை விரித்து இருப்பது—அவைகளகப்படாமையால் நாணடைந்து சிறகுகளைவிரித்துக்கொண்டிருக்கும், ஓர்பால்—ஒருபக்கத்தில், சொல்லுநல் திகிரிப்புள்ளு—கூறப்படுகின்ற நல்லசக்கரவாகப்பட்சியானது, துணை சிறை கோதி புலர்த்தி—தனது இரண்டு சிறகுகளையுங் கோதிக்காய்ச்சி, புல் உயிர் பேடையோடு புளினமேல் நடப்பது—தன்னுற்றழுவப்படும் உயிரன்ன பெடைப்புள்ளுடன் மணற்குன்றின்மேல் நடக்கும் எ—று. (72)

மண்டனி லுயர்ந்த பெண்ணைக் கிழங்கினை வகிர்ந்தா லன்ன
துண்டவண் டானஞ் சூழ்ந்த தொழுதிக ளொருபா னீருட்
கொண்டருந் தாக நீக்கிக் குதிக்குமா வினங்க ளோர்பா
லொண்டழை சிறைப்பா லன்னங் கின்னர மிதுன மோர்பால்.

[மண்டனில் உயர்ந்த பெண்ணைக் கிழங்கினை வகிர்ந்தால் அன்ன
துண்டவண் டானஞ் சூழ்ந்த தொழுதிகள் ஒருபால் நீர்உள்
கொண்(டு)அரும் தாகம் நீங்கிக் குதிக்கும்மா இனங்கள் ஓர்பால்
ஒள்தழைச் சிறைப்பால் அன்னம் கின்னர மிதுனம் ஓர்பால்.]

இ — ள்: ஒருபால் — ஒருபக்கத்தில், மண் தனில் உயர்ந்த பெண்ணை கிழங்கினை வகிர்ந்தால் அன்ன துண்ட வண்டானம் சூழ்ந்த தொழுதிகள் — பூமியிலுயர்ந்து வளர்ந்த பனையின் கிழங்கை இரண்டாய்ப்பிளந்தாற்போன்ற அலகுகளையுடைய கொய்யடி நாரைகள் குழுமிய கூட்டங்கள் உள்ளன, ஓர்பால் — ஒருபக்கத்தில், நீர் உட்கொண்டு அரும் தாகம் நீக்கி குதிக்கும் மா இனங்கள் — சலத்தைப்பருகித் தமது கொடிய தாகம் நீங்கப்பெற்றுத் துள்ளுகின்ற விலங்குக்கூட்டங்கள் உள்ளன, ஓர்பால் — ஒருபக்கத்தில், ஒள்தழை சிறை பால் அன்னம் கின்னர மிதுனம் — ஒளிபொருந்திய மிருதுவாகிய சிறகுகளையுடைய வெள்ளிய அன்னங்களும் கின்னரமிதுனமாகிய பட்சிகளும் உள்ளன எ — று. (73)

இன்னதன் மையநீர் வாவி யிருங்கரை தன்னி னெய்தித்
தன்னமர் பேடை தன்னைத் தழீ இச்சிறைக் கரத்துள் ளாக்கி
யன்னமா தரவிற் புல்லு மதுதெரிந் தணங்க ளுர்மேற்
பன்னரு மாசை கூர விருந்தனன் பரிவுற் றிப்பால்.

[இன்னதன் மையநீர் வாவி இருங்கரை தன்னில் எய்தித்
தன்னமர் பேடை தன்னைத் தழிஇச்சிறைக் கரத்துள் ஆக்கி
அன்னம்ஆ தரவில் புல்லும்அது தெரிந்(து) அணங்(கு) அனர்மேல்
பன்னரும் ஆசை கூர இருந்தனன் பரி(வு)உற்(று) இப்பால்.]

இ — ள்: இன்ன தன்மைய நீர் வாவி இரும் கரை தன்னில் எய்தி—(அச் சுகுமாரனனவன்) இத்தன்மையாகிய நீர் நிறைந்த அப்பொய்கையினது பெரிய கரையையடைந்து, அன்னம் தன் அமர் பேடை தன்னே தழீச்சிறை கரத்துள் ஆக்கி ஆதரவில் புல்லும் அது தெரிந்து — அன்னப்பட்சியானது தனக்குரிய பெடைப்பட்சியைத் தழுவிச்சிறகுகளாகிய கைகளினுலணைத்து அன்போடு புணருவதைக்கண்டு, அணங்கு அன்னர் மேல் பன்னரும் ஆசை கூர பரிவு உற்று இருந்தனன்—தேவமாதரையொத்த பெண்களிடத்துச் சொல் லொணுப் பேரிச்சைபிறக்க மனக்கவலிகொண்டு இருந்தான், இப்பால் — இதன்மேல் எ—று. (74)

வேறு

பஞ்சணி பதப்பரி புரத்தொலி பரப்பி
நஞ்சன விழிக்கடை குழைக்கய னடப்பக்
குஞ்சர மருப்பினிரு கொங்கைகள் குலுங்க
வஞ்சியென வோர்புலி மடந்தையவ ணுற்ருள்.

[பஞ்(சு)அணி பதப்பரி புரத்(து)ஒலி பரப்பி
நஞ்(சு)அன விழிக்கடைக் குழைக்கயல் நடப்பக்
குஞ்சர மருப்பின்இரு கொங்கைகள் குலுங்க
வஞ்சிஎன ஓர்புலி மடந்தை அவண் உற்ருள்.]

இ — ள்: பஞ்சு அணி பத பரிபுரத்து ஒலி பரப்பி—செம்பஞ்சூட்டப்பட்ட பாதங்களின் கண்ணேயணிந்த சிலம்புகளினுலொலியை யுண்டாக்கி, நஞ்சு அன்ன கடை விழி குழைக்கு அயல் நடப்ப — நஞ்சையொத்த கொடிய கடைக் கண்கள் காதளவுஞ் செல்லவும், குஞ்சர மருப்பின் இரு கொங்கைகள் குலுங்க—யானைத்தந்தத்தையொத்த இரண்டு பயோதரங்களும் அசையவும், வஞ்சி என ஓர் புலி மடந்தை அவண் உற்ருள் — கொடியைப்போல ஓர் புலிமாது அவ்விடத்து வந்தனள் எ—று: (75)

மன்றல்கமழ் மாலையணி வார்குழ றனக்கு
மின்றமிழ் மொழிக்குமை விழிக்குமெய் யொளிக்கு
மென்றளி ரடிக்குநிகர் வேறுலகி லொப்புண்
டென்றவ டனக்குவமை யாவர்புகல் கிற்பார்.

[மன்றல்கமழ் மாலை அணி வார்குழல் தனக்கும்
இன்றமிழ் மொழிக்கும்மை விழிக்கும்மெய் ஒளிக்கும்
மேன்தளிர் அடிக்கும்நிகர் வே(று) உலகில் ஒப்(பு)உண்டு
என்(று)அவ டனக்(கு) உவமை யாவர் புகல் கிற்பார்.]

இ — ள்: மன்றல் கமழ் மாலை அணி வார் குழல் தனக்கும்—நறுமணம் பரிமளிக்கின்ற புஷ்பமாலையையணிந்த நீண்ட அளகபாரத்துக்கும், இன் தமிழ் மொழிக்கும்— (வசனிக்கப்படுகின்ற) இனிய தமிழ்வார்த்தைக்கும், மை விழிக்கும்—அஞ்சனந்தீட்டிய கண்களுக்கும், மெய் ஒளிக்கும்—தேககாந்திக்கும், மென் தளிர் அடிக்கும்—மிருதுவாகிய மாந்தளிரன்ன பாதங்களுக்கும், உலகில் வேறு நிகர் ஒப்பு உண்டு என்று—உலகத்தின்கண்ணே வேறுசமமாகிய உவமானப்பொருளுண்டென்று, அவள் தனக்கு உவமையாவர் புகல்கிற்பார்—அப்புலிமகளுக்கு உவமானமெடுத்து யார் கூறவல்லுநர் எ—று (76)

ஏர்மருவு நூனிக ரிடைக்கொடி நுடங்கத்
தார்மருவு வார்குழல் சரிந்திட விரிந்தே
யார்பத மிரங்கவரு மன்னநடை மின்னே
மாரனிக ரானசுகு மாரனெதிர் கண்டான்.

ஏர்மருவு நூல்நிகர் இடைக்கொடி நுடங்கத்
தார்மருவு வார்குழல் சரிந்திட விரிந்தே
ஆர்பதம் இரங்க வரும் அன்னநடை மின்னே
மாரன் நிகர் ஆனசுகு மாரன் எதிர் கண்டான்.

இ — ள்: ஏர் மருவு நூல் நிகர் இடை கொடி நுடங்க—அழகுதங்கிய நூலையொத்த நுண்ணிய இடையாகிய கொடிதுவளவும், தார் மருவு வார் குழல் சரிந்திட—மாலையையணிந்து விளங்குகின்ற நீண்ட கூந்தல் சோரவும், விரிந்து ஆர்பதம் இரங்க—பரந்து வண்டுகள் சத்திக்கவும், வரும் அன்ன நடை மின்னே—வந்த அன்னம்போன்ற நடையையுடையபுலிமாதை, மாரன் நிகர் ஆன சுகுமாரன் எதிர் கண்டான்—மன்மதனையொத்த சுகுமாரனவன் எதிரிலே கண்டான் எ—று; (77)

ஏ-அசை:

பொன்னுலகில் வாழுமட மாதுகொல் பொறிப்பைப்
பன்னக நகர்க்கணுறை பாவைகொல் பசுங்கார்
மின்னவிர் சிலம்பினுறை மெல்லியல்கொ லென்னு
வின்னன நினைந்துபி னெழுந்தருகி லெய்தி.

பொன்னுலகில் வாழும்மட மாதுகொல் பொறிப்பைப்
பன்னக நகர்க்கண்உறை பாவைகொல் பசுங்கார்
மின்அவிர் சிலம்பில்உறை மெல்லியல்கொல் என்னு
இன்னன நினைந்துபின் எழுந்(து) அருகில் எய்தி;

இ — ள்: பொன் உலகில் வாழும் மட மாது கொல்—சுவர்க்க லோகத்தில் வசிக்கின்ற மடைமை தங்கிய தெய்வப்பெண்ணே, (அன்றேல்) பொறியை பன்னக நகர்க்கண் உறை பாவை கொல்—புள்ளிபொருந்திய படத்தையுடைய சர்ப்பர்கள் வாசஞ்செய்கின்ற நாகலோகத்து மாதோ, (அன்றேல்) பசும் கார் மின் அவிர் சிலம்பில் உறை மெல்லியல் கொல் என்ன—பசிய மேகங்களும் மின்னலும் விளங்குகின்ற குன்றுகளில் வாசஞ்செய்யும் மிருதுவாகிய இயல்பையுடைய வரையரமகளோவென்று, இன்னன நினைந்து—இவ்வாறுகிய பலவற்றையுஞ் சிந்தித்து, பின் எழுந்து அருகில் எய்தி—பின்பு எழுந்து அப்புலோமாதின் பக்கத்தேயணுகி எ—று. (78)

சேயவரி வாள்விழி யிணைமத்திடு திறத்தாற்
றோயநில மீதடி மிதித்திடு சுவட்டா
லாயபுவி மீதுவள ரன்னமிவ ளென்னத்
தியகுண வேதியன் மனத்திடை தெளிந்தான்.

[சேயவரி வாள்விழி இமைத்திடு திறத்தால்
தோயநில மீ(து)அடி மிதித்திடு சுவட்டால்
ஆயபுவி மீதுவளர் அன்னம்இவள் என்னத்
தியகுண வேதியன் மனத்திடை தெளிந்தான்.]

இ — ள்: சேய வரி வாள் விழி இமைத்திடு திறத்தால்—செவ்வரிபரந்த வாள்போன்ற கூரிய கண்களிமைக்குந் தன்மையாலும், நிலமீது அடிதோய மிதித்திடு சுவட்டால்—பூமியின்மேல் பாதங்கள் படிய மிதிக்குஞ் சுவடுடைமையாலும், ஆய புவி மீது வளர் அன்னம் இவள் என்ன—பொருந்திய பூமியின்மேல் வாசஞ்செய்கின்ற மானிடப் பெண்ணேயிவளென்று, தியகுண வேதியன் மனத்திடை தெளிந்தான்—கொடிய குணத்தையுடையவனகிய சுகுமாரன் மனத்திலே நிச்சயித்தான் எ—று. (79)

மங்குனிற முற்றிடு மடப்பிடியை நாடும்
வெங்கய மெனத்தனி விரைந்துமு னடந்தே
யிங்கெனெதி ருற்றிடுவன் யாவனிவ னென்னத்
திங்கணிகர் வாணுத றிகைத்தன டரித்தே.

[மங்குல்நிறம் உற்றிடும் மடப்பிடியை நாடும்
வெம்கயம் எனத்தனி விரைந்துமுன் நடந்தே
இங்(கு)என் எதிர் உற்றிடுவன் யாவன் இவன் என்னத்
திங்கள்நிகர் வாணுதல் திகைத்தனள் தரித்தே.]

இ — ள்: மங்குல் நிறம் உற்றிடும் மடப்பிடியை நாடும் வெம் கயம் என — மேகத்தைப்போன்ற கரியநிறத்தையுடைய இளமைபொருந்திய பெண்யானையைத்தேடிச்செல்லுகின்ற கொடிய ஆண்யானையைப்போல, தனி விரைந்து முன் நடந்து — தனித்தவனும் வேகத்தோடு முன்னே நடந்து, இங்கு என் எதிர் உற்றிடுவன் — இவ்விடத்து என்முன்னேவருகின்றான், இவன் யாவன் என்ன — இவன் யாரென்று, திங்கள் நிகர் வாள் நுதல் தரித்து திகைத்தனள் — சந்திரனையொத்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய அப் பூமகள் நின்று திகைப்படைந்தாள் எ — று.

ஏ அசை. (80)

ஏமமணி மால்வரை யெனக்குலவு கொங்கை
வேமசனி காலுமுகின் மீதெழு தடித்தின்
வாமமிகு நேரிடை மடந்தையரை வெல்லுங்
காமனிவ னுமென மனத்திடை கணித்தாள்.

[ஏமமணி மால்வரை எனக்குலவு கொங்கை
வேம்அசனி காலும்முகில் மீதுஎழு தடித்(து)இன்
வாமம்மிகு நேரிடை மடந்தையரை வெல்லும்
காமன்இவ னுமென மனத்திடை கணித்தாள்.]

இ — ள்: ஏமமணி மால் வரை எனக் குலவு கொங்கை — பொன்போன்ற அழகிய பெரிய மலைகளையொத்து விளங்குகின்ற தனங்களையும், வேம் அசனி காலும் முகில் மீது எழு தடித்தின் வாமம் மிகு நேரிடை மடந்தையரை — எரிகின்ற இடியேற்றைக்கக்கும் முகில்களினின்றுந் தோன்றுகின்றமின்னை யொத்த அழகுமிக்க இடையையுமுடையபெண்களை, வெல்லும் காமன் இவனும் என மனத்திடை கணித்தாள் — வெற்றிகொள்ளுகின்ற மன்மதனேயிவனென்று மனதின்கண் மதித்தனள் எ — று. (81)

உட்புலமை யற்றுமய லுற்றசுகு மாரன்
மட்குட மெனத்திகழ் வரைப்புய மிலக்காய்க்
கொட்புற நெரித்தபுரு வச்சிலை குனித்தே
கட்கணை தொடுக்கவிர கக்கடல் குளித்தான்.

[உள்புலமை அற்றுமயல் உற்றசுகு மாரன்
மண்குடம் எனத்திகழ் வரைப்புயம் இலக்காய்க்
கொட்(பு)உற நெரித்தபுரு வச்சிலை குனித்தே
கண்கணை தொடுக்கவிர கக்கடல் குளித்தான்;]

இ — ள்: உள் புலமை அற்று மயல் உற்ற சுகுமாரன் — உள்ளறி வழிந்து மயக்கங்கொண்ட சுகுமாரனது, மண் குடம் என திகழ் வரை புயம் இலக்காய் — மண்ணாலாகிய குடத்தையொத்துவிளங்குகின்ற மலைபோன்ற புயங்களை

இலக்காகக்கொண்டு, கொட்பு உற நெரித்த புருவச்சிலை குனித்து — தெளியும்படி நெரித்த புருவங்களாகிய விற்களை வளைத்து, கண் கணை தொடுக்க — கண்களென்னும் பாணங்களைச் செலுத்துதலும், விரகக் கடல் குளித்தான் — அவன் காமமாகிய சமுத்திரத்துள் அழுந்தினன் எ — று. (82)

முளைத்தெரி கனற்கணெய் முகந்துகுவ தென்ன
விளைத்தமரில் வென்றிபுனை வேள்கழையி னீள்வில்
வளைத்துமண மேவுமலர் வாளிக டுரந்தான்
துளைத்தவ னுரத்தினிடை தூவலள வாழ.

[முளைத்(து)எரி கனற்கண்நெய் முகந்(து) உகுவ(து) என்ன
விளைத்(து) அமரில் வென்றிபுனை வேள்கழையின் நீள்வில்
வளைத்(து) மணம் மேவுமலர் வாளிகள் துரந்தான்
துளைத்(து)அவன் உரத்தினிடை தூவல்அள(வு) ஆழ:]

இ—ள்: முளைத்து எரி கனல் கண் நெய் முகந்து உகுவது என்ன — சுவாலித்தொளிக்கின்ற அக்கினியில் நெய்யையள்ளிச்சொரிந்தாற்போல, விளைத்த அமரில் வென்றி புனை வேள் — செய்யப்படுகின்ற யுத்தத்தில் வெற்றியைப் பெறுகின்றவனுகிய மன்மதன், கழையின் நீள் வில் வளைத்து — கரும்பாகிய நீண்ட வில்லைவளைத்து, அவன் உரத்தினிடை துளைத்து தூவல் அளவு ஆழ — அவனது மார்பைத் துளைத்து அம்பினிறகுவரையும் புதையும்படி, மணமேவு மலர் வாளிகள் துரந்தான் — வாசனைகமழுகின்ற புஷ்பபாணங்களைச் செலுத்தினன் எ — று. (83)

மெய்வச மழிந்துதழன் மீதின்மெழு காகிப்
பொய்வசன மன்றிது புலங்கொளுதி பொன்னே
உய்வதரி தாமுயி ருலந்துபடு முன்னுன்
கைவச மெனவிவை கரைந்தன னிரங்கி.

[மெய்வசம் அழிந்துதழல் மீதில்மெழு(கு) ஆகிப்
பொய்வசனம் அன்(று)இது புலங்கொளுதி பொன்னே
உய்வ(து)அரி தாம்உயிர் உலந்துபடும் முன்உன்
கைவசம் எனஇவை கரைந்தனன் இரங்கி.]

இ — ள்: மெய் வசம் அழிந்து தழல் மீதில் மெழுகு ஆகி — உடல் தன் வசங்கெட்டு (மனமும்) அக்கினியிற்பட்ட மெழுகுபோலுருகி, பொன்னே பொய்வசனம் அன்று இது புலம் கொளுதி — பொன்னையொத்தவளே அசத்தியவார்த்தையன்று இதனைச்சிந்திக்கக்கடவை, உய்வது அரிதாம் — யான் உய்ந்துபிழைப்பது மிகவுமரிதாகும், உலந்து படுமுன் உயிர் உன் கைவசம் எனு — இறந்துபடுவதற்குமுன்னமே ஆன்மா உன்கைவசமாகக்கடவதென்று, இரங்கி இவை கரைந்தனன் — மனமிரங்கிப் பின்வருவனவற்றைக்கூறினன் எ — று: (84)

இக்குவளே வார்விலி னிருத்திமத னேவு
மக்குவளே வாளிவரு மென்றுமன மஞ்சேன்
மிக்குவளே மீதுலவி மீளுநின் முகத்தின்
மைக்குவளே தானருள் வழங்கலுறின் மாதோ.

[இக்கு வளே வார்விலின் இருத்திமதன் ஏவும்
அக்குவளே வாளிவரும் என்றுமனம் அஞ்சேன்
மிக்குவளே மீ(து)உலவி மீளும்நின் முகத்தின்
மைக்குவளே தான்அருள் வழங்கலுறின் மாதோ.]

இ — ள்: மிக்கு வள்ளே மீது உலவி மீளும் — அதிகரித்து வள்ளைக் கொடியையொத்த காதளவுஞ்சென்று மீளுகின்ற, நின்முகத்தின் மைகுவளே தான் அருள் வழங்கல் உறின் — உனது முகத்திற்பொருந்திய கருங்குவளே மலர்போன்ற கண்களானவை எனக்குக் கிருபைசெய்யுமாயின், மதன் வளே வார் இக்கு வில்லின் இருத்தி ஏவும் அக்குவளே வாளிவரும் என்று — மன்மத னெனவன் வளைந்த நீண்ட கருப்புவில்லிற்றொடுத்துச்செலுத்துகின்ற அந்தக் குவளைமலர்ப்பாணம் வருமென்று, மனம் அஞ்சேன் — மனத்திற்பயங்கரமடை யேன் எ — று.

மாது ஓ அசைகள், வள்ளை வளையெனத்தொக்கது. (85)

தீரமுறு வேலிவரு செய்யதுவர் வாயி
னூரமுறு வாணில வரும்பிடி னணுத்தான்
கோரமுறு மாரழ லெனக்குட திசைக்க
ணீரமுறு வாணிலவ தென்செயு மெழுந்தே.

[தீரம்உறு வேலிவரு செய்யதுவர் வாயின்
ஆரம்உறு வாள்நில(வு) அரும்பிடில் அணுத்தான்
கோரம்உறும் ஆரழல் எனக்குட திசைக்கண்
ஈரம்உறு வாள்நில(வு)அ(து) என்செயும் எழுந்தே.]

இ — ள்: தீரம் உறு வேலி வரு செய்ய துவர் வாயின் — கரைகளமைந்த சமுத்திரத்திற்றோன்றுகின்ற நிவந்த பவளம் போன்ற வாயின்கணுள்ள, ஆரம் உறு வாள் நிலவு அணுத்தான் அரும்பிடில் — (பற்களாகிய) முத்துக்களினின்று தோன்றுகின்ற ஒளிதங்கிய நிலவு அணுவளவேனும் வெளிப்படுமாயின், கோரம் உறும் ஆர் அழலென — பயங்கரம் பொருந்திய நிறைந்த அக்கினி யைப்போல, குடதிசைக்கண் ஈரம் உறு வாள் நிலவு எழுந்து என்செயும் — மேற்றிசையின்கண் குளிர்ச்சிபொருந்திய ஒளியுள்ள சந்திரன்தோன்றி என்னை என்னசெய்வான் எ — று.

ஏ அசை. (86)

கூடவீணை யாகவளர் கும்பமுலை யென்னு
மாடன்மத மால்களிறெ னங்கைவச மாகு
னீடனுவ ணக்கியமர் நித்தமு மியற்றும்
வேடனுயர் வேழமதை வேறன்மிகை யன்றே.

[கூடஇணை யாகவளர் கும்பமுலை என்னும்
ஆடல்மத மால்களி(று)என் அங்கைவசம் ஆஞல்
நீள்தனு வணக்கிஅமர் நித்தமும் இயற்றும்
வேள்தன்உயர் வேழமதை வேறன்மிகை அன்றே.]

இ — ள்: கூடஇணை ஆக வளர் கும்ப முலை என்னும் ஆடல் மத மால் களிறு என் அம் கை வசம் ஆஞல் — ஒருங்கேயொத்துவளருகின்ற பூரணகும் பங்களேயொத்த தனங்களாகிய வலிய மதம்பொருந்திய பெரிய யானைகள் னைது அழகிய கைவசப்படுமாயின், நீள்தனு வணக்கி நித்தமும் அமர் இயற் றும் வேள் தன் உயர் வேழமதை வேறல் மிகை அன்று — நீண்ட வில்லே வளைத்துத் தினந்தோறும் போர்புரிகின்ற மன்மதனது உயர்ந்த (இருளாகிய) யானேயை வெல்லுதல் அரிதன்று எ — று.

ஏ அசை. (87)

தூயகுமு தத்திஞெடு தொண்டைதுவ ரொக்கும்
வாயினித ழுற்றகுடி நீரது வழங்கிற்
காயமுட னத்திகள் கனற்றிவரு பித்த
மேயவிர கப்பெரிய வெப்பவியு மெற்கே.

[தூயகுமு தத்திஞெடு தொண்டைதுவர் ஒக்கும்
வாயின்இதழ் உற்றகுடி நீர்அது வழங்கில்
காயமுடன் அத்திகள் கனற்றிவரு பித்தம்
ஏயவிர கப்பெரிய வெப்(பு)அவியும் எற்கே.

இ — ள்: தூய குமுதத்திஞெடு தொண்டை துவர் ஒக்கும் வாயின் இதழ் உற்ற குடிநீர் அது வழங்கில் — சுத்தமாகிய செவ்வாம்பன் ம ல ரை யும் கொவ்வைக்கனியையும் பவளத்தையும் நிகர்த்த வாயிற்பொருந்திய அதரத் தினின்றுமுறுநின்ற பானத்தைக்கொடுப்பையாயின், காயம் உடன் அத்திகள் கனற்றி வரு பித்தம் ஏய விரக பெரிய வெப்பு எற்கு அவியும் — சரீரத்தை யுமதனென்புகளையும் அனற்படுத்தியெழுகின்ற பித்தசம்பந்தமாகிய காம மென்னும்பெரியசுரமானது எனக்குத்தணியும் எ — று.

ஏ அசை. (88)

என்றலே மருட்டுகுழ லுக்கினைய கூறித்
துன்றலே கடற்படு துரும்பினிலே யற்றேன்
மன்றலே மிகக்கமழ் மலர்க்கர மெடுத்துத்
தன்றலே குவித்திரு சரண்டொழுது நின்றான்.

[என்(று)அலே மருட்டுகுழ லுக்(கு) இனைய கூறித்
துன்(று)அலே கடல்படு துரும்பின்நிலே அற்றேன்
மன்றலே மிகக்கமழ் மலர்க்கரம் எடுத்துத்
தன்தலே குவித்(து)இரு சரண்தொழுது நின்றான்.]

இ — ள்: அல்லே மருட்டு குழலுக்கு என்று இனைய கூறி — இருவினையும் (கருமையினால்) வென்ற கூந்தலையுடைய அப்புலமகளுக்கு என்று இவை போல்வனவற்றைச்சொல்லி, துன்று அலை கடல் படு துரும்பின் நிலை அற்றேன் — நெருங்கி அலைகின்ற கடலிற்பொருந்திய துரும்பைப்போல நிலையற்ற சுகுமாரன், மன்றலே மிக கமழ் மலர் கரம் எடுத்து — வாசனையை அதிகமாக வீசுகின்ற மலர்போன்ற கைகளையுயர்த்தி, தன் தலை குவித்து இரு சரண் தொழுது நின்றான் — தனது சிரமேற் குவித்து அவளதிரண்டுபாதங்களையும் வணங்கி நின்றான் எ — று. (89)

மம்மருற வேள்கணை வருத்தமய லென்னு
மம்மகர வாரிதி யடக்கலரி தாகி
விம்மமன மீதது வெளிப்படைசெய் வாளாய்ப்
பொம்மன்முலை யாள்சிறிது புன்னகை புரிந்தாள்.

[மம்மர்உற வேள்கணை வருத்தமயல் என்னும்
அம்மகர வாரிதி அடக்கல்அரி (து)ஆகி
விம்மமனம் மீ(து)அது வெளிப்படைசெய் வாளாய்ப்
பொம்மல்முலை யாள்சிறிது புன்னகை புரிந்தாள்.]

இ — ள்: மம்மர் உற வேள் கணை வருத்த — மயக்கமடையும்படி மன்மதனுடைய பாணங்கள் வருத்துதலினால், மயல் என்னும் அம்மகர வாரிதி அடக்கல் அரிது ஆகி — காமமயக்கமென்கின்ற அந்தச்சமுத்திரப் பெருக்கைத் தடுக்கவியலாது, மனம் மீது விம்ம — மனத்திற்பொங்க, அது வெளிப்படை செய்வாள் ஆய் — அதனை வெளியிலே புலப்படுத்தக்கருதினவளாய், பொம்மல் முலையாள் சிறிது புன்னகை புரிந்தாள் — பூரித்த தனங்களையுடைய அப்புலமாது சிறிதுபுன்முறுவல்செய்தாள் எ — று.

மகரவாரிதி என்பது சாதியடை. (90)

செம்பவள வாயிதழ் திறந்தெயி றிலங்கக்
கும்பமுலை யாண்முறுவல் கொண்டகுறி கண்டே
வெம்புதழ லொத்தவிர கத்தினின் மிகுத்தோ
னம்புய மலர்க்கையவ ளங்கைமலர் பற்றி.

[செம்பவள வாய்இதழ் திறந்(து)எயி(று) இலங்கக்
கும்பமுலை யாள்முறுவல் கொண்டகுறி கண்டே
வெம்புதழல் ஒத்தவிர கத்தினின் மிகுத்தோன்
அம்புய மலர்க்கைஅவள் அங்கைமலர் பற்றி.]

இ — ள்: செம்பவள வாய் இதழ் திறந்து எயிறு இலங்க — சிவந்த பவளம்போன்ற வாயினுதடுகளைத் திறந்து பற்கள் தோன்றும்படி, கும்பமுலை யாள் முறுவல் கொண்ட குறி கண்டு — குடம்போன்ற தனங்களையுடைய அப்புலைமாது புன்னகைசெய்தகுறிப்பைக்கண்டு, வெம்பு தழல் ஒத்த விரகத் தினின் மிகுத்தோன்—வெப்பமாகிய அக்கினியையொத்த காமவிரகமதிகரிக்கப் பெற்ற சுகுமாரன், அம்புய மலர் கை அவள் மலர் அம் கை பற்றி — தாமரை மலர்போன்ற தனது கையினுல் அவளது மலர்போன்ற அழகிய கையைப் பிடித்து எ — று. (91)

ஏகமன மாகியிரு வோருமெவ ராலும்
போகவரி தாகுமொர் பொதும்பரிடை புக்கு
மேகநிற மானபிடி யுங்கரட மேவு
நாகமு மெனக்கலவி நன்றல நுகர்ந்தே.

[ஏகமனம் ஆகிஇரு வோரும் எவ ராலும்
போகஅரி(து) ஆகுமோர் பொதும்பர்இடை புக்கு
மேகம்நிற மானபிடி யும்கரடம் மேவு
நாகமும் எனக் கலவி நல்நலம் நுகர்ந்தே.]

இ — ள்: இருவோரும் ஏக மனமாகி — அவ்விருவரும் ஒத்த சிந்தையு டையவர்களாய், எவராலும் போக அரிது ஆகும் ஓர் பொதும்பரிடை புக்கு — யாருமூடறுத்துச்செல்லவியலாத ஒரு சோலையினுட்போய், மேகம் நிறமான பிடியும் கரடம் மேவும் நாகமும் என — மேகம் போன்ற கரிய நிறத்தையுடைய டெண் யானையும் மதம்பாய்கவட்டையுடைய ஆண்யானையும்போல, கலவி நல் நலம் நுகர்ந்து — புணர்ச்சியாகிய நல்ல இன்பத்தையனுபவித்து எ — று:

ஏ அசை: (92)

வேறு

இன்றளவு மன்றுடல மெத்துணைநா ளினியிருக்கு
மன்றளவும் பிரியாம லிருப்போமென் றலராத
மென்றளவ முகைநகையும் வேதியனு மிசைந்துதம்மிற்
புன்றசைகண் முடைகமழும் புலைப்பாடி தனிற்புகுந்தார்.

[இன்(று)அளவும் அன்(று)உடலம் எத்துணைநாள் இனிஇருக்கும்
அன்(று)அளவும் பிரியாமல் இருப்போம் என்(று) அலராத
மென்தளவ முகைநகையும் வேதியனும் இசைந்து தம்மில்
புன்தசைகள் முடைகமழும் புலைப்பாடி தனில்புகுந்தார்].

இ — ள்: இன்று அளவும் அன்று — இத்தினம்மாத்திரமன்று, உடலம் எத்துணை நாள் இனி இருக்கும் அன்று அளவும் — எமது உடம்பு இன்னும் எவ்வளவுகாலமிருக்குமோ அவ்வளவுகாலம்வரையும். பிரியாமல் இருப்போம் என்று — நாமிருவரும் ஒருவரைவிட்டொருவர் நீங்காமலிருக்கக்கடவோ மென்று, அலராத மென் தளவ முகைநகையும் வேதியனும் தம்மில் இசைந்து —முகைவிரியாத மிருதுவாகிய முல்லையரும்பையொத்த பற்களையுடைய புலை மகளும் சுகுமாரனும் தம்முள் மனமொத்து, புன் தசை கள் முடைகமழும் புலைப்பாடிதனில் புகுந்தார் — எளிய மாமிசமும் கள்ளும் முடைநாற்றம்வீசு கின்ற புலைச்சேரியையடைந்தனர். எ — று. (93)

தரைபயிலான் பசும்பச்சை தனைக்கவ்வி யிசித்துகளுங்
குரைமுகநாய்ச் சிறுபறழின் குறுங்கழுத்தி னெடுங்கயிற்றூற்
சுரைபடர்நீள் புற்குரம்பை துன்றுகரும் புதல்வர்பிணித்
தரையினிசைத் திடுசதங்கை கறங்கிடவீர்த் தாட்டயர்வார்.

[தரைபயில்ஆன் பசும்பச்சை தனைக்கவ்வி இசித்(து) உகளும்
குரைமுகநாய்ச் சிறுபறழின் குறுங்கழுத்தில் நெடும்கயிற்றூல்
சுரை படர் நீள் புல்குரம்பை துன்றுகரும் புதல்வர்பிணித்(து)
அரையில் இசைத் திடுசதங்கை கறங்கிடஈர்த்(து) ஆட்(டு) அயர்வார்]

இ — ள்: தரை பயில் ஆன் பசும் பச்சைதனை கவ்வி — பூமியின் கண்ணே வாசஞ்செய்கின்ற பசுவினது பசியதோலைக் கௌவிக்கொண்டு, இசித்து உக ளும் குரை முக நாய் சிறு பறழின் குறும் கழுத்தில் — இழுத்துக்கொண்டு துள்ளுகின்ற குரைக்கும்வாயையுடைய சிறிய நாய்க்குட்டியின் குறுத்த கழுத் தில், சுரை படர் நீள் புல் குரம்பை துன்று கரும் புதல்வர்—சுரைக்கொடி படர்ந்த நீண்ட புல்லினால் வேயப்பட்ட சிறுகுடில்களில் நெருங்கிய கரிய நிறத்தையுடைய புத்திரர்கள், நெடும் கயிற்றூல் பிணித்து—நெடிய கயிற்றி னாற்கட்டி, அரையில் இசைத்திடும் சதங்கை கறங்கிட—தம்மரையின்கண்ணே தொடுக்கப்பட்ட சதங்கை மணிகள் சத்திக்கும்படி, ஈர்த்து ஆட்டுஅயர்வார்— இழுத்து விளையாடுவார்கள் எ—று. (94)

அணைதிரைநன் மணிவரன்றி யார்த்திடுமார் கலியமிழ்திற்
கிணைபுகல்மென் மொழிபயிலா விளங்குழவி பசிக்கிரங்கித்
துணைமுலைப்பால் சுரந்தருத்தித் தோற்பாய றனிற்றுயிற்றிப்
பிணைவிழிப்புன் புலைமகளிர் தாலாட்டு மிசைபெருகும்.

[அணை திரை நல் மணிவரன்றி ஆர்த்திடும்ஆர் கலிஅமிழ்திற்(கு)
இணைபுகல்மென் மொழிபயிலா இளங்குழவி பசிக்(கு) இரங்கித்
துணைமுலைப்பால் சுரந்(து) அருத்தித் தோல்பாயல்தனில் துயிற்றிப்
பிணைவிழிப்புன் புலைமகளிர் தாலாட்டும் இசைபெருகும்.]

இ—ள்: பிணை விழி புன் புலைமகளிர்—மான்போன்ற கண்களையுடைய எளிய புலைப்பெண்கள், அணை திரை நல் மணி வரன்றி ஆர்த்திடும் ஆர்கலி அமிழ்திற்கு இணை புகல்—கரையிலே திரைகளானவை நல்ல இரத்தினங்களை வாரி எறிந்து ஆரவாரிக்கின்ற சமுத்திரத்திற்றோன்றிய அமுதத்திற் கொப்பாகச் சொல்லுகின்ற, மெல் மொழி பயிலா இளங்குழவி பசிக்கு இரங்கி—குதலை வார்த்தை பழகாத சிறுகுழந்தைகளது பசிக்காக உருகி, துணைமுலைப்பால் சுரந்து அருத்தி—இரண்டு தனங்களினின்றும் பாலைப்பெருக்கியூட்டி, தோல் பாயல் தனில் துயிற்றி—தோலாகிய சயனத்தின் கண்ணே தூங்குவித்து, தாலாட்டும் இசை பெருகும்—தாலாட்டுகின்ற ஒலியானது மிகுந்துதொனிக்கும் எ—று. (95)

பிறங்கியபுன் மாலைகளிற் பெருங்குடம்பெய் பிழிபருகிக்
கறங்குபறை முகத்தறைந்து களித்தாடிக் களைத்துவிழுந்
துறங்குபறைப் புருடர்துயி லொழிந்தெழுவான் புலரிதனின்
மறங்குலவு முட்படைக்கால் வாரணங்க ளோலமிடும்.

[பிறங்கியபுன் மாலைகளில் பெருங்குடம்பெய் பிழிபருகிக்
கறங்குபறை முகத்(து) அறைந்து களித்(து)ஆடிக் களைத்துவிழுந்(து)
உறங்குபறைப் புருடர்துயில் ஒழிந்(து)எழுவான் புலரிதனில்
மறம்குலவும் முட்படைக்கால் வாரணங்கள் ஓலமிடும்.]

இ—ள்: பிறங்கிய புன்மாலைகளில் பெரும் குடம் பெய் பிழி பருகி—விளங்குகின்ற புல்லிய மாலைக்காலங்களிற் பெரிய குடங்களில் வார்க்கப்பட்ட மதுவைக்குடித்து, கறங்கு பறை முகத்து அறைந்து களித்து ஆடி களைத்து விழுந்து உறங்கு பறை புருடர்—ஒலிக்கின்ற பறைமுகத்திலடித்து களித்துக் கூத்தாடிக் களைத்து விழுந்து நித்திரை செய்கின்ற புலையர்கள், துயில்ஒழிந்து எழுவான்—நித்திரை நீங்கியெழும்படி, புலரிதனில்—விடியற்காலத்தில், மறம் குலவும் முள் படை கால் வாரணங்கள் ஓலமிடும்—வலிமை பொருந்திய முள்ளாகிய படையமைந்த கால்களையுடைய சேவல்கள் கூவும் எ—று. (96)

இத்தகைய புலைச்சேரி தன்னிலிருந் திருண்டமன
மத்தனெனப் புலவுதின்று மதுப்பருகி வசமழிந்து
மூத்தநகைப் புலைமகடன் முலைநலத்தே றலுநுகர்ந்து
சித்தமிகக் களிகூர்ந்து சிலவைகல் கழித்ததற்பின்.

[இத்தகைய புலைச்சேரி தன்னில் இருந்(து) இருண்டமன
மத்தன்எனப் புலவுதின்று மதுப்பருகி வசம்அழிந்து
மூத்தநகைப் புலைமகள்தன் முலைநலத்தே றலும்நுகர்ந்து
சித்தம்மிகக் களிகூர்ந்து சிலவைகல் கழித்ததன்பின்.]

இ — ள்: இத்தகைய புலைச்சேரி தன்னில் இருந்து—இத்தன்மையையுடைய பறைச்சேரியில் வாசஞ்செய்து, இருண்ட மனமத்தன் என—அறிவழிந்த மனத்தையுடைய பைத்தியகாரனைப்போல, புலவுதின்று மதுப்பருகி—மாமிசத்தையுண்டு மதுபானஞ்செய்து, வசம் அழிந்து—(காமமிகுதியினால்) தன்வசமழிந்து, முத்த நகை புலைமகள் தன் முலை நல தேறலும் நுகர்ந்து—முத்துப்போன்ற பற்களையுடைய அப்புலைப்பெண்ணினது தனபோகமாகிய தேனையுண்டுகொண்டு, சித்தம்மிக களிகூர்ந்து—மனமானது மிகவும் களிப்படைந்து, சிலவைகல் கழித்ததற்பின்—சிறிது நாட் சென்றபின்னர் எ—று. (97)

பங்கயக்கட் புலைமகளாற் பன்னமெனப் பகர்வயிற்றுச்
செங்கண்மழ விடைபோலச் செனித்துதித்தார் சிறுவரைவ
ரங்கவர்க்கு மதுப்பிசித மருத்தியருத் தியின்வளர்க்கப்
பங்கமிகுங் கடற்புவியிற் பாதகமைந் தெனவளர்ந்தார்.

[பங்கயக்கண் புலைமகள்ஆல் பன்னம்எனப் பகர்வயிற்றுச்
செங்கண்மழ விடைபோலச் செனித்(து) உதித்தார் சிறுவர்ஐவர்
அங்(கு) அவர்க்கு மதுப்பிசிதம் அருத்திஅருத் தியின் வளர்க்கப்
பங்கம்மிகும் கடல்புவியில் பாதகம் ஐந்(து) எனவளர்ந்தார்.

இ — ள்: பங்கய கண் புலைமகள் ஆல் பன்னம் என பகர் வயிற்று—தாமரைமலரையொத்து விளங்குகின்ற கண்களையுடைய அப்புலைமாதினது ஆலமிலையென்று உருவகித்துக் கூறத்தக்க வயிற்றினிடமாக, செம் கண் மழ விடைபோல — சிவந்த கண்களையுடைய இளமையாகிய இடபங்களைப் போல, ஐவர் சிறுவர் செனித்து உதித்தார் — ஐந்து சிறுவர்கள் கருப்பமாகிப் பிறந்தனர், அங்கு அவர்க்கு மது பிசிதம் அருத்தி—அவ்விடத்தே அப்புத்திரர்களுக்குக் கள்ளையும் மாமிசத்தையுமூட்டி, அருத்தியின் வளர்க்க—அன்புடனே வளர்த்தலும், பங்கம் மிகுங்கடல் புவியில்—சேறுமிகுந்த சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியின் கண்ணே, பாதகம் ஐந்து என வளர்ந்தார்—கொலை களவு கள்ளுக்காமம் குருநிந்தையாகிய பஞ்சபாதகங்களென்று கண்டோர் சொல்லும்படி வளர்ந்தனர் எ—று. (98)

மன்னுநெடும் பொதியவரை மன்றல்கமழ் தென்றலுடன்
பன்னுதமிழ் பயந்ததெனப் பண்ணவர்பற் பலர்பயிலும்
பொன்னுலகி லரம்பையுருப் பசிநிகராம் பொற்பினுடன்
பின்னுமிரு கன்னியரைப் பெற்றுமனப் பிரியமுற்றான்.

[மன்னுநெடும் பொதியவரை மன்றல்கமழ் தென்றலுடன்
பன்னுதமிழ் பயந்த(து) எனப் பண்ணவர்பற் பலர்பயிலும்
பொன்உலகில் அரம்பைஉருப் பசிநிகராம் பொற்பினுடன்
பின்னும்இரு கன்னியரைப் பெற்றமனப் பிரியமுற்றான்].

இ—ள்: மன்னு நெடும் பொதிய வரை மன்றல் கமழ் தென்றலுடன் பன்னு தமிழ் பயந்ததென—நிலைபெற்ற நெடிய பொதியமலையானது நறு மணத்தையளாவி வீசுகின்ற வசந்தமாருதத்தையும் கூறப்படுகின்ற தமிழை யும் பெற்றாற்போல, பண்ணவர் பற்பலர் பயிலும் பொன்னுலகில் அரம்பை உருப்பசி நிகராம் பொற்பினுடன்—தேவர்கள் பலரும் வாசஞ் செய்கின்ற சுவர்க்கலோகத்திலுள்ள அரம்பை உருப்பசியென்னும் தேவமாதர்களை யொத்த அழகினோடு, பின்னும் இரு கன்னியரை பெற்று—பின்னரும் இரண்டு புத்திரிகளைப்பெற்று, மனப்பிரியம் உற்றான் — மனத்தின்கண்ணே மகிழ்வடைந் திருந்தனன் எ—று. (99)

மறமறலி யையவரென வளருமைந்து மைந்தருடன்
கறைவடிவாட் படைகதைகூர்ங் கணைநெடுங்கார் முகந்தாங்கி
யறைதருபே ரடவிகளி லாறலைத்துப் பொருள்வவ்விச்
சிறைபடுநீர்க் கயல்கவர்ந்த சிரலையெனக் கடிதகல்வான்.

[மறமறலி ஐவர்என வளரும்ஐந்து மைந்தருடன்
கறைவடிவாட் படைகதைகூர்ங் கணைநெடுங்கார் முகம்தாங்கி
அறைதருபே ரடவிகளில் ஆறலைத்துப் பொருள்வவ்விச்
சிறைபடுநீர்க் கயல்கவர்ந்த சிரலையெனக் கடி(து) அகல்வான்].

இ—ள்: மற மறலி ஐவர் என வளரும் ஐந்து மைந்தர் உடன்—வலி மைபொருந்திய ஐந்து இயமர்களென்று சொல்லும்படி வளர்ந்த தனது ஐந்து புத்திரர்களோடும், கறை வடி வாட்படை கதை கூர்ங்கணை நெடும் கார் முகம்தாங்கி—இரத்தக்கறையையுடைய வாட்படை தண்டு கூரிய அம்பு நெடிய வில்லாகிய ஆயுதங்களைத்தாங்கி, அறை தரு பேரடவிகளில்—கூறப்படுகின்ற பெரியகாடுகளில், ஆறலைத்து பொருள் வவ்வி—வழிச்செல்வோரை வருத்தி அவர்களது திரவியத்தைக் கவர்ந்து, சிறை படு நீர் கயல் கவர்ந்த சிரலை என—அடைபட்டுள்ள நீரின்கண்ணே வாசஞ்செய்கின்ற கயல் மற்சங்களைக் கவர்ந்துசெல்லும் சிரலைப்பட்சியைப்போல, கடிது அகல்வான்—வேகமா யோடிப்போவான் எ—று. (100)

அந்தணரெண் ணிலர்குழக்கன் றூனிடப மளவிறந்த
கொந்தவிழ்நாண் மலர்க்கோதைக் கோதையர்கள் குதலைமொழி
மைந்தர்நரை முதிர்விருத்தர் வருந்துறவர் வருந்துறக்கொல்
லிந்தவிதக் கொலைகடம்மை யாவர்கணித் தெடுத்துரைப்பார்.

[அந்தணர்எண் ணிலர்குழக்கன்(று) ஆன்இடபம் அள(வு) இறந்த
கொந்(து) அவிழ்நாள் மலர்க்கோதைக் கோதையர்கள் குதலைமொழி
மைந்தர்நரை முதிர்விருத்தர் வரும்துறவர் வருந்துறக்கொல்
இந்தவிதக் கொலைகள்தம்மை யாவர்கணித்(து) எடுத்துரைப்பார்.]

இ — ள்: எண்ணிலர் அந்தணர்—அளவில்லாத பிராமணர்களும், குழக்கன்று—இளமையாகிய பசுக்கன்றுகளும், ஆன்—பசுக்களும், இடபம்—எருதுகளும், அளவிறந்த கொந்து அவிழ் நாள் மலர் கோதை கோதையர்கள்—அளவில்லாத கொத்துவிரிந்த புதிய மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய பெண்களும், குதலை மொழி மைந்தர்—மழலைவார்த்தையையுடைய சிறுவர்களும், நரை முதிர் விருத்தர்—நரைமுதிர்ந்த வயோதிபர்களும், வருந்துறவர்—வழிச் செல்லுகின்ற துறவிகளும் வருந்துறக்கொல் இந்தவித கொலைகள் தம்மை—துன்புறும்படி கொலைசெய்த இந்தவிதமாகிய கொலைகளின் தொகையை, யாவர் கணித்து எடுத்து உரைப்பார்—யார் அளவிட்டு எடுத்துக்கூறவல்லர் (ஒருவருமில்லை) எ—று.
(101)

புக்குபுனற் றடங்கரையிற் புரிதருகண் ணியிற்படுத்துத்
தொக்கநெடுங் கயலிரைதேர் தோலடிப்புட் டுவர்முட்டாண்
மிக்குயர்வண் டானமுடன் விரிந்தசிறைப் பெரும்போதாக்
கொக்குமுதற் பக்கிகளைக் கொன்றுகொன்று தின்றுபின்னும்.

[புக்குபுனல் தடங்கரையில் புரிதருகண் ணியில் படுத்துத்
தொக்கநெடும் கயல்இரைதேர் தோலடிப்புள் துவர்முள்தாள்
மிக்(கு)உயர் வண் டானம் உடன் விரிந்தசிறைப் பெரும்போதாக்
கொக்குமுதல் பக்கிகளைக் கொன்றுகொன்று தின்றுபின்னும்.]

இ — ள்: புனல் தடம் கரையில் புக்கு—நீர்நிறைந்த தடாகக்கரைகளிற் சென்று, தொக்க நெடும் கயல் இரைதேர் தோலடிப்புள்—கூட்டமாகிய கொடிய கயல்மீன்களை உணவாகத் தேடுகின்ற தோலடிப்பறவைகளையும், துவர் முள் தாள் மிக்கு உயர் வண்டானமுடன்—சிவந்த முட்கள் பொருந்திய கால்களையுடைய மிகவுயர்ந்த கொய்யடி நாரைகளையும், விரிந்த சிறை பெரும் போதா—பரந்த சிறகுகளையுடைய பெருநாரைகளையும், கொக்கு முதல் பக்கிகளை—கொக்குமுதலாகிய பட்சிகளையும், புரிதரு கண்ணியில் படுத்து கொன்று கொன்று தின்று—அமைக்கப்பட்ட கண்ணிகளிலகப்படுத்திக் கொலைசெய்து கொலைசெய்து புசித்து, பின்னும்—பின்னரும் எ—று.
(1

மேவிவளர் வனங்கடொறும் வில்வணக்கி விறற்பகழி
தூவிவெரு வொடுகுதித்துத் துள்ளுபுள்ளி மானினங்க
டாவியுக ளிரலேயுரற் றலைக்கேழன் மரைக்குலங்க
ளாவிசெகுத் தூனருந்தி யடுபுலிபோற் றிரியுமந்நாள்.

[மேவிவளர் வனங்கள் தொறும் வில்வணக்கி விறற்பகழி
தூவிவெரு வொடுகுதித்துத் துள்ளுபுள்ளி மான் இனங்கள்
தாவிஉகள் இரலேஉரல் தலைக்கேழல் மரைக்குலங்கள்
ஆவிசெகுத்(து) ஊன்அருந்தி அடுபுலிபோல் திரியும்அந்நாள்.]

இ — ள்: மேவிவளர் வனங்கள் தொறும் வில் வணக்கி விறல் பகழிதூவி— அடர்ந்து வளர்ந்த காடுகள்தோறும்போய் வில்லே வணைத்து வலிய அம்பு களேச் செலுத்தி, வெருவொடு குதித்து துள்ளு புள்ளி மான் இனங்கள்—அச்சத் தோடு துள்ளிப்பாய்கின்ற புள்ளிபொருந்திய மான்கூட்டங்களேயும், தாவி உகள் இரலே—தாவிப்பாய்கின்ற கலேமான்களேயும், உரல் தலே கேழல்—உரல் போன்ற தலேயையுடைய பன்றிகளேயும், மரைக்குலங்கள்—மரைக்கூட்டங் களேயும், ஆவி செகுத்து ஊன் அருந்தி—உயிரை வதைத்து அவற்றின் மாமி சத்தைப் புசித்து, அடு புலி போல் திரியும் அந்நாள்—கொலேத்தொழிலேச் செய்கின்ற புலியைப்போலத் திரிகின்ற அக்காலத்தில் எ—று. (103)

விரிந்தகொடு விணவசத்தான் மெயிற்பிணிகள் பிடித்தலேத்துப்
புரிந்தசுரு ளிருளோதிப் புலேமகள்பொன் றிடப்புலம்பிப்
பரிந்தனலின் மெழுகாகிப் பற்பலநாட் பயில்பெடையைப்
பிரிந்தவன்றிற் சேவலெனப் பெருந்துயரக் கடல்வீழ்ந்தான்.

[விரிந்தகொடு விணவசத்தால் மெய்யில்பிணிகள் பிடித்(து)அலேத்துப்
புரிந்தசுருள் இருள்ஓதிப் புலேமகள்பொன் றிடப்புலம்பி
பரிந்(து) அனலின் மெழு(கு)ஆகிப் பற்பலநாள் பயில்பெடையைப்
பிரிந்த அன்றில் சேவல் எனப் பெருந்துயரக்கடல் வீழ்தான்.]

இ — ள்: விரிந்த கொடு விணை வசத்தால்—மிகுந்த கொடிய ஊழ்வினையின் வயத்தால், புரிந்த சுருள் இருள் ஓதி புலேமகள் மெய்யில் பிணிகள் பிடித்து அலேத்து பொன்றிட—முறுகிய சுருண்ட கரிய கூந்தலேயுடைய அப்புலேப்பெண் ணானவள் சரீரத்தில் நோய்களானவைபற்றி வருத்துதலாலிறக்க, புலம்பி பரிந்து அனலின் மெழுகு ஆகி—புலம்பி இரங்கி அக்கினியிற்பட்ட மெழுகு போலுருகி, பல்பல நாள் பயில் பெடையை பிரிந்த அன்றில் சேவல் என— அனேக காலங்களாகப் பழகிய பெடையைப் பிரிந்த சேவலன்றிலேப்போல, பெரும் துயரக்கடல் வீழ்ந்தான்— பெரிய துக்க சாகரத்திலமிழ்ந்தினன் எ—று.

(104)

எழுமயங்கு முளந்தேறு தேங்குமுடற் பொறைசோர்ந்து
விழுமிருகட் புனல்குமிழி விட்டோட விம்மிவிம்மி
யழுமசனிக் குடைந்துபுர ளரவெனநீ ணிலந்தலையா
லுழுமிரங்கும் வெதும்புறுநெட் டுயிர்ப்புயிர்த்துப் புழுங்கிடுமால்.

[எழும்மயங்கும் உளம்தேறு(து) ஏங்கும்உடற் பொறைசோர்ந்து
விழும்இருகண புனல்குமிழி விட்(டு)ஓட விம்மி விம்மி
அழும் அசனிக்(கு) உடைந்துபுரள் அர(வு) எனநீள் நிலந்தலையால்
உழும் இரங்கும் வெதும்புறும்நெட் டுயிர்ப்(பு)உயிர்த்துப் புழுங்கிடும்ஆல்]

இ — ள்: எழும்—எழும்புவான், மயங்கும்—மயக்கமடைவான், உளம் தேறுது ஏங்கும்—மனத்தெளிவற்றவனுயேங்குவான், உடல் பொறை சோர்ந்து விழும்—உடற்பாரஞ்சகியாது சோர்ந்து விழுவான், இரு கண் புனல் குமிழி விட்டு ஓடவிம்மி விம்மி அழும்—இரண்டு கண்களினின்றும் நீர் குமிழியாகப் பாயும்படி விம்மிவிம்மி அழுவான், அசனிக்கு உடைந்து புரள் அரவென நீள் நிலம் தலையால் உழும்—இடிக்கஞ்சி மயங்கிப்புரளுகின்ற சர்ப்பத்தைப்போல நீண்ட பூமியைத் தலையாலுழக்குவான், இரங்கும்—இரக்கமடைவான், வெதும்புறும்—வெப்பமடைவான், நெட்டு உயிர்ப்பு உயிர்த்து புழுங்கிடும்—நெடுமூச்செறிந்து புழுங்குவான் எ—று.

ஆல் அசை.

(105)

கண்மணியே யெனதாசைக் கங்குல்விடிந் திடவுதித்த
விண்மணியே யிப்பியின்வாய் விண்டுமிழும் வெண்டரளத்
தண்மணியே பாற்சலதி தருமமுதே தயங்குகதி
ரொண்மணிநீத் திடுமரவி னுனையிழந்து முய்வேனே.

[கண்மணியே என(து) ஆசைக் கங்குல்விடிந் திடஉதித்த
விண்மணியே இப்பியின்வாய் விண்(டு) உமிழும் வெண்தரளத்
தண்மணியே பாற்சலதி தரும் அமுதே தயங்கு கதிர்
ஒண்மணி நீத் திடும் அரவின் உனை இழந்தும் உய்வேனே.]

இ — ள்: எனது கண்மணியே—எனது கண்களிலுள்ள மணிக்குச் சமானமானவளே, ஆசை கங்குல் விடிந்திட உதித்த விண்மணியே—காமாசையாகிய இருள்விடியும்படி தோன்றிய சூரியனையொத்தவளே, இப்பியின்வாய் விண்டு உமிழும் வெண் தரள தண் மணியே—இப்பிகள் வாய்திறந்து கக்குகின்ற வெண்ணிறமாகிய குளிர்ந்த முத்துமணியைப்போன்றவளே, பாற் சலதி தரும் அமுதே—திருப்பாற் கடலிற்றோன்றிய அமுதத்தை நிகர்த்தவளே, தயங்கு கதிர் ஒண் மணி நீத்திடும் அரவின் உனை இழந்தும் உய்வேனே—பிரகாசிக்கின்ற கிரணங்களையுடைய ஒள்ளிய இரத்தினத்தைபிழந்த சர்ப்பத்தைப் போல உன்னைப்பிரிந்தும் யானுய்வேனே (உய்யமாட்டேனென்பதாம்) எ—று.

(106)

துப்புறள்செவ் வாயிதழுந் துடியிடையுங் கடிதடமு
மைப்புருவக் கார்முகமு மதிமுகமு மிருவிழியுங்
கொப்புலவு மிருகுழையுங் குருகுலவு கரதழகு
மெப்பிறவி பிறந்துனா னினிக்காண்ப தென்றயரும்.

[துப்(பு)உறள்செவ் வாய்இதழும் துடிஇடையும் கடிதடமும்
மைப்புருவக் கார்முகமும் மதிமுகமும் இருவிழியும்
கொப்(பு)உலவும் இருகுழையும் குரு(கு) உலவு கரத்(து) அழகும்
எப்பிறவி பிறந்(து) உனா நான் இனிக்காண்ப(து) என்(று) அயரும்]

இ — ள்: உன் துப்பு உறள் செவ் வாய் இதழும்—உனது பவளம்போன்ற சிவந்தவாயிற்பொருந்திய அதரங்களையும், துடி இடையும் கடிதடமும்—உடுக்கைப்போன்ற இடையையும் நிதம்பத்தையும், மை கார் முக புருவமும்—கரிய வில்லையொத்த புருவங்களையும், மதிமுகமும் இருவிழியும்—சந்திரனையொத்த முகத்தையும் இரண்டு கண்களையும், கொப்பு உலவும் இருகுழையும்—கொப் பணிந்து விளங்குகின்ற இருகாதுகளையும், குருகு உலவு கரத்து அழகும்—வளையல்கிடந்து பிரகாசிக்கின்ற கைகளினலங்காரத்தையும், நான் இனி எப் பிறவி பிறந்து காண்பது என்று அயரும்—நான் இனி எந்தப்பிறவியிற் பிறந்து காண்பேனென்று சோர்வடைவான் எ—று. (107)

ஓங்கினைய பெருந்துயர முழந்துமிக வருந்துமந்நாட்
பூங்கமலக் குறுமுகைபோற் புடைத்தரும்பிக் குமிழ்த்தெழுந்து
கோங்கமுகை யெனக்குலவக் கொங்கைகளங் கவனளித்த
மாங்குயிற்சொல் லியர்விரக மருவுமங்கைப் பருவமுற்றூர்.

[ஓங்(கு) இனைய பெருந்துயரம் உழந்துமிக வருந்தும் அந்நாள்
பூங்கமலக் குறுமுகைபோல் புடைத்(து) அரும்பிக் குமிழ்த்(து) எழுந்து
கோங்கமுகை எனக்குலவக் கொங்கைகள் அங்(கு) அவன் அளித்த
மாங்குயில்சொல் லியர்விரகம் மருவும் மங்கைப் பருவம்உற்றூர்.]

இ — ள்: இனைய ஓங்கு பெரும் துயரம் உழந்து மிக வருந்தும் அந்நாள்—இவ்வாறுக மிகப்பெரிய துயரமடைந்து அதிகம் வருத்தமுறுகின்ற அக்காலத் தில், அங்கு அவன் அளித்த மாங்குயிற் சொல்லியர்—அவ்விடத்து அவன் பெற்ற மாங்குயிலினிசைபோன்ற இனியவார்த்தையையுடைய புதல்வியர்கள், பூம் கமல குறு முகைபோல் கொங்கைகள் புடைத்து அரும்பி உமிழ்த்து எழுந்து—அழகிய தாமரையினது குறுகிய மொட்டைப்போல முலைகள் விம்மித் தோன்றி முகிழ்த்து உயர்ந்து, கோங்க முகை என குலவ—கோங்கரும்பு போலப்பிரகாசிக்க, விரகம் மருவும் மங்கை பருவம் உற்றூர்—கண்டோர்காமு றத்தக்க மங்கைப் பருவத்தையடைந்தனர் எ—று. (108)

மாரிவளந் தருமுகிலே மணிக்கருநீ னிறமணியே
வேரிகமழ் செழுந்துணர்கள் விளங்கிதழிக் கருங்கனியை
நீரிலெழுஞ் சைவலத்தை நிகர்த்துநெய்த்து நெறித்திருண்ட
காரிருளின் பிழம்பென்னக் கவின்கொண்ட கருங்குழல்கள்.

[மாரிவளம் தருமுகிலே மணிக்கரு நீல் நிறமணியே
வேரிகமழ் செழும்துணர்கள் விளங்(கு) இதழிக் கரும்கனியை
நீரில்எழும் சைவலத்தை நிகர்த்து நெய்த்து நெறித்(து) இருண்ட
கார்இருளின் பிழம்(பு) என்னக் கவின்கொண்ட கருங்குழல்கள்:]

இ — ள்: கருங்குழல்கள்— (அப்பெண்களது) கரிய கூந்தல்களானவை, மாரிவளம் தரு முகிலே—மழையைப் பெய்கின்ற வளம்பொருந்திய மேகத்தையும், கருமணி—கருமணியையும், நீல் நிற மணியே—கருமணியையும், வேரி கமழ் செழும் துணர்கள் விளங்கு கரும் இதழி கனியை—தேன்கமழ்கின்ற செழித்த பூங்கொத்துகள் விளங்குகின்ற கரிய கொன்றைக்கனியையும், நீரில் எழும் சைவலத்தை—நீரிலுண்டாகின்ற பாசியையும், நிகர்த்து—ஒத்து, நெய்த்து நெறித்து இருண்ட கார் இருளின் பிழம்பு என்ன—பசுமைகொண்டு நெறிப்புற்று இருண்ட கரிய இருட்பிழம்பைப்போல, கவின் கொண்ட—அழகையடைந்தன எ—று. (109)

கஞ்சநெடுங் கயல்கமழுங் காவிபிணை கணைக்கிணையா
யஞ்சனந்தோய்ந் தடலனங்க னாகமங்கற் றலைகடலி
னஞ்சமுதங் கலந்திலங்கு நகுமணிப்பொற் குழைகிழித்து
வஞ்சமிகுங் கொலைபயின்று மதர்த்தனவால் வரிவிழிகள்.

[கஞ்சம் நெடும் கயல் கமழும் காவி பிணை கணைக்(கு) இணையாய்
அஞ்சனம் தோய்ந்(து) அடல் அனங்கன் ஆகமம் கற்(று) அலைகடலின்
நஞ்(சு) அமுதம் கலந்(து) இலங்கும் நகுமணிப்பொன் குழைகிழித்து
வஞ்சம்மிகும் கொலைபயின்று மதர்த்தனவால் வரிவிழிகள்:]

இ — ள்: வரி விழிகள்—இரேகைபொருந்திய கண்களானவை, கஞ்சம்—தாமரைமலரையும், நெடும் கயல்—நெடிய கயல்மீனையும், கமழும் காவி—நறுமணம்பொருந்திய கருங்குவளைமலரையும், பிணை—மானையும், கணைக்கு இணையாய்—அம்பையும் ஒத்து, அஞ்சனம் தோய்ந்து—மைதீட்டப்பெற்று, அடல் அனங்கன் ஆகமம் கற்று—போராடல் பொருந்திய மன்மதனது மதனனூலைப்பயின்று, அலை கடலின் நஞ்சு அமுதம்கலந்து—திரைபொருந்திய பாற்கடலிற்றோன்றிய நஞ்சோடும் அமுதத்தோடும் கலப்புற்று, இலங்கும் நகுமணி பொன்குழை கிழித்து—பிரகாசிக்கின்ற ஒளியையுடைய இரத்தினங்கள் பதித்த பொன்னாலாகிய காதணியிற் பாய்ந்து, வஞ்சம் மிகும் கொலை பயின்று—வஞ்சனை மிகுந்த கொலைத் தொழிலைப்பழகி, மதர்த்தன—மதர்ப்புற்றன எ—று.

ஆல் அசை. (110)

கன்னியர்க ளின்னணநற் கலிவளர்ந்த மதியமொப்பத்
துன்னியமுட் டாட்கமலத் தூயமுகை முறுக்குடைந்து
மன்னியமென் றோடவிழும் பதநோக்கி மதுநுகர்வா
னின்னிசைப்பூம் பொறிச்சுரும்ப ரிருந்ததென விருந்தவனும்.

[கன்னியர்கள் இன்னணம்நல் கலிவளர்ந்த மதியம் ஒப்பத்
துன்னியமுள் தாள்கமலத் தூயமுகை முறுக்(கு) உடைந்து
மன்னியமெல் தோ(டு) அவிழும் பதம்நோக்கி மதுநுகர்வான்
இன்னிசைப்பூம் பொறிச்சுரும்பர் இருந்(து)என இருந்(து) அவனும்;]

இ — ள்: கன்னியர்கள்—அக்கன்னிகைப்பெண்கள், இன்னணம் நல்கலி-வளர்ந்த மதியம் ஒப்ப—இவ்விதமாய் நல்ல கலிகள் வளரப்பெற்ற சந்திரனுக்கொப்பாக வளர, துன்னிய முள் தாள் கமல தூய முகை முறுக்கு உடைந்து மன்னிய மெல் தோடு அவிழும் பதம் நோக்கி—நெருங்கிய முள் நாளங்களையுடைய தாமரையின் சுத்தமாகிய மொட்டானது முறுக்கினைப் பொருந்திய மிருதுவான இதழ்கள் விரிகின்ற சமயம் பார்த்து, இன் இசைபூம் பொறி சுரும்பர் மது நுகர்வான் இருந்தது என—இனிய இசையைப் பாடுகின்ற அழகிய புள்ளிபொருந்திய வண்டுகள் தேனுண்ணும்படி காத்திருந்தாற்போல, அவனும் இருந்து—அச்சுகுமாரனுங் காத்திருந்து எ—று. (111)

செக்கரெழு மிளமதியுந் தென்றலுமன் றிலும்பகைப்பக்
கைக்கணைகொண் டடர்ந்துமதன் கடும்பூசல் பொரக்கனலின்
மிக்ககொடுங் காமமெனும் விடந்தலைக்கொண் டாற்றிலனுய்
மக்களிரு வரையுமனை மருண்டுமனே யெனமணந்தான்.

[செக்கர்எழும் இளமதியும் தென்றலும் அன்றிலும் பகைப்பக்
கைக்கணைகொண்(டு) அடர்ந்து மதன் கடும்பூசல் பொரக்கனலின்
மிக்ககொடும் காமம்எனும் விடம் தலைக்கொன்(டு) ஆற்றிலனுய்
மக்கள்இரு வரையும்மனம் மருண்டுமனே எனமணந்தான்.]

இ — ள்: செக்கர் எழும் இள மதியும் தென்றலும் அன்றிலும் பகைப்ப—அந்திக்காலத்தில் தோற்றுகின்ற இளஞ்சந்திரனும் தென்றற்காற்றும் அன்றிற் பட்சியும் பகைமைகொள்ள, கைகணை கொண்டு அடர்ந்து மதன் கடும் பூசல் பொர—கையின் கண்ணே அம்பைக்கொண்டு நெருங்கி நின்று மன்மதனவன் பெரும்போர்புரிய, கனலின் மிக்க கொடும் காமம் எனும் விடம் தலைக்கொண்டு ஆற்றிலனுய்—அக்கினியினும் மிக்க கொடிய காமமாகிய விஷமானது தலையிலேறிச் சகிக்கலாற்றாதவனுய், மக்கள் இருவரையும் மனம் மருண்டு மனே என மணந்தான்—தனது புத்திரிகளிருவரையும் மனமயக்கமுற்று மனைவியர்களாகக் கலந்தான் எ—று. (121)

பெருவரைபோ லகன்மார்பிற் பிறங்கியபொற் சுணங்குபொடித்
திருவரைக ளெனவளரு மிளமுலைக்கோ டுழுதுழக்கப்
பொருவருமா தரவினுடன் புணர்ந்துநல னுகர்ந்திடுநாண்
மருவருபூங் குழலியரு மைந்தரிரு வரைப்பயந்தார்.

[பெருவரைபோல் அகன்மார்பில் பிறங்கியபொற் சுணங்குபொடித்(து)
இருவரைகள் எனவளரும் இளமுலைக்கோ(டு) உழு(து) உழக்கப்
பொருஅரும்ஆ தரவினுடன் புணர்ந்துநலன் நுகர்ந்திடு நாள்
மருவருபூங் குழலியரும் மைந்தர்இரு வரைப்பயந்தார்.]

இ — ள்: பெரு வரை போல் அகல் மார்பில் பிறங்கிய பொன் சுணங்கு பொடித்து—பெரிய மலையையொத்து விசாலித்த மார்பில் விளங்குகின்ற பொன்னிறமான தேமல்பரந்து, இரு வரைகள் என வளரும் இள முலை கோடுகள் உழுது உழக்க—இரண்டு மலைகளென்று சொல்லும்படி வளர்ந்த இள மையையுடைய தனங்களாகிய கொம்புகள் புதைந்து அழுந்த, பொரு அரும் ஆதரவின் உடன் புணர்ந்து நலம் நுகர்ந்திடு நாள்—ஒப்பற்ற அன்போடு கலந்து இன்பசுகத்தை அனுபவிக்குங் காலத்தில், மரு வரு பூ குழலியரும் மைந்தர் இருவரை பயந்தார்—வாசனைபொருந்திய பூவணிந்த கூந்தலையுடைய பெண்களிருவரும் இரண்டு புத்திரரைப் பெற்றார்கள் எ—று. (113)

தரைமிசைத்தன் புதல்வியர்க டாமீன்ற தனையரிரு
வரையுமன மகிழ்ந்தெடுத்து மடிமீது வைத்துமுரி
திரையெறிவா ரிதிபிறந்த தெள்ளமுதக் குதலைகள்கேட்
டுரைதருவெண் ணுரைச்சுரையூ ளூட்டிவளர்த் துவப்புற்றான்.

[தரைமிசைத்தன் புதல்வியர்கள் தாம்ஈன்ற தனையர்இரு
வரையும் மனம் மகிழ்ந்(து) எடுத்து மடிமீது வைத்துமுரி
திரைஎறிவா ரிதிபிறந்த தெள்ளமுதக் குதலைகள் கேட்(டு)
உரைதருவெள் நுரைச் சுரைஉன் ஊட்டி வளர்த்(து) உவப்புற்றான்.]

இ — ள்: தரை மிசை தன் புதல்வியர்கள் தாம் ஈன்ற தனையர் இரு வரையும்—பூமியிலே தன் புத்திரிகள் பெற்ற புத்திரரிருவரையும், மனம் மகிழ்ந்து எடுத்து மடிமீது வைத்து—மனமகிழ்ச்சியோடு தூக்கி மடிமேல் வைத்து, முரி திரை எறி வாரிதி பிறந்த தெள் அமுத குதலைகள் கேட்டு—முரிகின்ற திரைகளை வீசும்பாற் கடலிற்றோன்றிய தெளிந்த அமுதம் போன்ற மழலைவார்த்தைகளைக்கேட்டு, உரைதரு வெள் நுரை சுரை ஊன் ஊட்டி வளர்த்து உவப்புற்றான்—கூறப்படுகின்ற வெள்ளிய நுரைகள் பொருந்திய கள்ளையும் பாலிசத்தையுமுண்பித்து வளர்த்து மகிழ்வடைந்தான் எ—று. (114)

வேறு

இவ்வண்ண மிங்கிவன்ருனிருந்திடுநாட் பசும்புரவி
யிரவி தன்னை
மைவண்ணப் பாந்தள்பகு வாயினிற்பெய் துமிழ்காலை
மறையோர்க் கெல்லாஞ்
செவ்வண்ணக் கனகமுதற் கலைமுலைப்பாற் ருரைவிடுஞ்
செருத்த னல்லான்
கொய்வண்ண மலர்க்கோதை கோமகன்ருன் ருனமிகக்
கொடுப்ப வாங்கி.

[இவ்வண்ணம் இங்(கு) இவன்தான் இருந்திடுநாள் பசும்புரவி
இரவி தன்னை
மைவண்ணப் பாந்தள்பகு வாயினில்பெய்(து) உமிழ்காலை
மறையோர்க்(கு) எல்லாம்
செவ்வண்ணக் கனகமுதல் கலைமுலைப்பால் தாரை விடும்
செருத்தல் நல்ஆன்
கொய்வண்ண மலர்க்கோதை கோமகன்தான் தானமிகக்
கொடுப்ப வாங்கி.]

இ — ள்: இவ்வண்ணம் இங்கு இவன்தான் இருந்திடுநாள்—இவ்வாருக இவ்விடத்து இந்தச்சுகுமாரன் வாழ்ந்திருக்குங் காலத்தில், பசும் புரவி இரவி தன்னை மை வண்ண பாந்தள் பகுவாயினில் பெய்து உமிழ்காலை—பசியநிறத் தைக்கொண்ட குதிரைபூண்டதேரையுடைய சூரியனைக் கரிய நிறம் பொருந் திய (இராகு) என்னும் பாம்பு தனது பகிர்ந்த வாயிலுலுண்டு விமோசனஞ் செய்கின்ற கிரகண காலத்தில், கொய் வண்ணமலர் கோதைகோமகன்—கொய் யப்பட்ட அழகியமலர்மாலையையணிந்த அரசன், எல்லா மறையோர்க்கும்—சகல பிராமணர்களுக்கும், செவ்வண்ண கனகம்—சிவந்த நிறத்தையுடைய பொன், கலை—வஸ்திரம், முலை பால் தாரை விடும் செருத்தல் நல் ஆன் முதல்—முலைகளினின்றும் பாலைத் தாரையாகச் சொரிகின்ற மடிகளையுடைய நல்ல பசுக் கள் ஆகிய இவை முதலியவற்றை, மிகத் தானம் கொடுப்பவாங்கி—மிகவும் தானமாகக்கொடுக்க அதனைப்பெற்று எ—று. (115)

வத்தநல்லந் தணர்கடமை வனசரியின் மறித்துருத்து
மைந்தரோடுங்
குந்தநெடுங் கதைவடிவாள் கொடுமரஞ்சா யகங்களினுற்
கொடிறு தந்தஞ்
சிந்தவுடற் செதுக்கை செய்து கலக்கியவர் கைப்பொருள்கள்
சேரவவ்வி
வெந்தழலார் விழித்தறுகண் மிருகாரி யெனத்தனதின்
மேவினனே.

[வந்தநல்அந் தணர்கள்தமை வனசரியின் மறித்(து) உருத்து மைந்த ரோடும்
குந்தம்நெடும் கதைவடிவாள் கொடுமரம்சா யகங்களினுல் கொடிறு தந்தம்
சிந்தஉடல் செதுக்கை செய்து கலக்கிஅவர் கைப்பொருள்கள் சேர வவ்வி
வெம்தழல்ஆர் விழித்தறுகண் மிருகாரி எனத்தன(து)இல் மேவி னனே.]

இ — ள்: வந்த நல் அந்தணர்கள் தமை மைந்தரோடும் வனசரியின் மறித்து உருத்து—வந்த நல்ல பிராமணர்களைத் தனது ஐந்து புத்திரர்களோடும் காட்டுவழியிலே தடுத்துக் கோபித்து, குந்தம் நெடும் கதை வடிவாள் கொடுமரம் சாயகங்களினுல்—கைவேல் நீண்ட தண்டு கூரியவாள் வில் அம்பு ஆகிய இவற்றால், கொடிறு தந்தம் சிந்த உடல் செதுக்கை செய்து கலக்கி—கபோலங்களும் பற்களுஞ் சிதறச்சரீரத்தின் கண்ணே காயங்களை யுண்டாக்கிக் கலக்கஞ்செய்து, அவர் கைப்பொருள்கள் சேரவவ்வி—அவர்களது கையிலுள்ள திரவியம் முழுவதையும் பறித்து, வெம் தழல் ஆர் விழித்தறுகண் மிருகாரிஎன—கொடிய அக்கினிபோன்ற கண்களையும் வன்கண்மையையுமுடைய சிங்கத்தைப்போல, தனது இல்மேவினன்—தன்னுடைய இல்லத்தை யடைந்தான் எ—று. ஏ அசை. (116)

பல்லொடிந்து கவுளொடிந்து பழுவொடிந்து முழவெழுவிற்
பணைத்த திண்டோட்
கல்லொடிந்து கரமொடிந்து காலொடிந்து மார்பொடிந்து
கலங்கி வாயிற்
சொல்லொடிந்து பலவரெல்லாம் பகைத்திமிரந் துடைத்திலங்குஞ்
சுடர்வேன் மன்னன்
செல்லொடிந்து முடிதவழுங் கோயில்வா யிலைநோக்கிச்
சென்ரு ரன்றே.

[பல்ஒடிந்து கவுள்ஒடிந்து பழுஒடிந்து முழ(வு) எழுவில் பணைத்த திண்தோள்
கல்ஒடிந்து கரம்ஒடிந்து கால்ஒடிந்து மார்(பு) ஒடிந்து கலங்கி வாயில்
சொல்ஒடிந்து பலவர்எல்லாம் பகைத்திமிரம் துடைத்(து) இலங்கும் சுடர்வேல் மன்னன்
செல்ஒ(டு)இந்து முடிதவழும் கோயில்வா யிலைநோக்கிச் சென்ரூர் அன்றே.]

இ — ள்: பலவர் எல்லாம்—அப்பிராமணர்கள் யாவரும், பல்லொடிந்து—பற்களொடிந்தும், கவுள் ஒடிந்து—கபோலங்களொடிந்தும், பழுஒடிந்து—விலாக்கண்முரிந்தும், முழவு எழு வில் பணைத்த திண் தோள் கல் ஒடிந்து—மத்தளத்தையும் இருப்புலக்கையையும் ஒத்த பருத்த வலிய புயமலைகள் முரியப்பெற்றும், கரம் ஒடிந்து—கைகள் முரிந்தும், கால் ஒடிந்து—கால்கள் முரிந்தும், மார்பு ஒடிந்து—மார்புகள் சிதைந்தும், கலங்கி வாயில் சொல்ஒடிந்து—கலக்கமடைந்து வாயால் யாதும்பேசவியலாதவராயும், பகை திமிரம் துடைத்து இலங்கும் சுடர் வேல் மன்னன்—பகைவர்களாகிய விருளாயகற்றி விளங்குகின்ற ஒளியையுடைய வேற்படையைத்தரித்த அரசனது, செல் ஒடு இந்து முடிதவழும் கோயில் வாயிலை நோக்கிச் சென்ரூர்—மேகங்களுஞ் சந்திரனும் சிகரங்களிலே தவழாநின்ற மாளிகை வாயிலைப் பார்த்துப் போயினர் எ—று; அன்று ஏ அசைகள். (117)

சென்றுமுறை யோமுறையோ வென்றசொற்றிண் டிறல்வேந்தன்
செவியிற் கேட்டுக்
குன்றுறழ்கோ புரவாயிற் காவலரைக் கூயவரைக்
கொணர்மி னென்னப்
பொன்றுயிலு மணிமார்ப னரசிருக்கு மண்டபத்திற்
புகுத்தப் போனர்
கன்றுமனத் துடனவர்தங் காயமுறுங் காயமெலாங்
கண்ணிற் கண்டான்.

[சென்றுமுறை யோமுறையோ என்றசொல்நிண் டிறல்வேந்தன் செவியில் கேட்டுக் குன்(று)உறழ்கோ புரவாயில் காவலரைக் கூய்அவரைக் கொணர்மின் என்னப் பொன்துயிலும் மணிமார்பன் அரசிருக்கும் மண்டபத்தில் புகுத்தப் போனர் கன்றுமனத் துடன் அவர்தம் காயமுறும் காயம்எலாம் கண்ணில் கண்டான்.]

இ — ள்: சென்று முறையோ முறையோ என்ற சொல் திண் திறல் வேந்தன் செவியில் கேட்டு—சென்று முறையோ முறையோ வென்றலறிய சத்தமானது மிக்க வலிமையையுடைய அரசனது செவியிற் கேட்டு, குன்று உறழ் கோபுர வாயில் காவலரை கூய்—மலையையொத்து விளங்குகின்ற கோபுரவாயிலிலுள்ள காவலரை அழைத்து, அவரைக் கொணர்மின் என்ன—அவர்களை இங்கேயழைத்து வாருங்களென்று ஆஞ்ஞாபிக்க, பொன்துயிலும் மணிமார்பன் அரசிருக்கும்மண்டபத்தில் புகுத்தப்போனர்—இலக்குமி வாசஞ்செய்கின்ற அழகிய மார்பையுடைய அரசன் வீற்றிருக்கும் மாளிகையினுட் செலுத்தச் சென்றனர், கன்று மனத்துடன் அவர் தம் காயம் உறும் காயம் எலாம் கண்ணில் கண்டான்—கொதிக்கின்ற மனத்திலேடும் அவர்களது சரீரத்திலுள்ள காயங்கள் யாவற்றையுங் கண்ணினாற் பார்த்தனன் எ—று. (118)

யாவரிது செய்தனரிங் கெனவினவ நீயெமக்கிண்
டீந்த வெல்லாம்
பாவநெறிச் சண்டாள னொருவன்மைந்த ருடன்மறித்துப்
பறித்துக் கொண்டே
யாவவென வவீத்தடித்திட் டாயுதத்தா லவஞ்செய்தெமை
யடர்ந்தா னென்னக்
காவலன்வா யிதழ்துடிப்பக் கண்டழல்கான் றொருகை மற்றைக்
கையிற்ருக்கி.

[யாவர் இது செய்தனர் இங்(கு) எனவினவ நீஎமக்(கு) ஈண்(டு) ஈந்த எல்லாம் பாவநெறிச் சண்டாளன் ஒருவன்மைந்தர் உடன்மறித்துப் பறித்துக் கொண்டே ஆவஎனவீத்(து)அடித்திட்(டு) ஆயுதத்தால் அவஞ்செய்(து) எமை அடர்ந்தான் என்னக் காவலன்வாய் இதழ்துடிப்பக் கண்டழல்கான்(று) ஒருகை மற்றக்கையில் தாக்கி.]

இ — ள்: இங்கு யாவர் இது செய்தனர் என வினவ—இவ்விடத்து யாவரிதனைச் செய்தவரென்று கேட்டலும், நீ எமக்கு ஈண்டு ஈந்த எல்லாம்—நீர் எங்களுக்கு இத்தினத்தில் தானமாகக் கொடுத்த எல்லாப் பொருள்களையும், பாவ நெறிச்சண்டாளன் ஒருவன் மைந்தர் உடன் மறித்து பறித்து கொண்டு—பாவவொழுக்கத்தையுடைய ஒரு புலையனவன் தனது புத்திரர்களோடுங் கூடி வழிமறித்துப் பறித்துக்கொண்டு, ஆவ என வனைத்து அடித்திட்டு ஆயுதத்தால் அவஞ்செய்து எமை அடர்ந்தான் என்ன—ஆவாவென்று (அலறும்படி.) வனைத்து அடித்து ஆயுதங்களினால் ஊறுபாடு செய்து எங்களை தெருக்கினன் என்று கூறலும், காவலன் வாய் இதழ் துடிப்ப கண் தழல் கான்று—அவ்வரசனவன் வாயினுதடுகள் துடிக்கக் கண்களினின்று கோபாக்கினி சொலிக்க, ஒரு கை மற்றக் கையில் தாக்கி—ஒரு கையை மற்றக்கையோடு மோதி எ—று. (119)

முன்னின்ற முடங்குளாவான் மடங்களிகர் படைத்தலைவர்
முகத்தை நோக்கி
மின்னின்ற விறற்றூனைக் கரத்தானை சிலகொடுபோய்
விளங்கு செங்கே
ழென்னின்ற கதிர்சுருக்கி யிரவிகுடதிசைக்கடல்வா
யெய்து முன்னர்க்
கன்னின்ற மனத்தவனைக் கடிதோடிக் கொணர்மினெனக்
கற்பித்தானே.

[முன்நின்ற முடங்(கு) உளவான் மடங்கல்நிகர் படைத்தலைவர் முகத்தை நோக்கி மின்நின்ற விறல்தானைக் கரத்தானை சில கொடு போய் விளங்கு செங்கேழ் எல்நின்ற கதிர்சுருக்கி இரவிகுட திசைக்கடல்வாய் எய்து முன்னர்க் கல்நின்ற மனத்தவனைக் கடி(து) ஓடிக் கொணர்மின்னெனக் கற்பித் தானே.]

இ — ள்: முன் நின்ற முடங்கு உளவால் மடங்கல் நிகர் படைத்தலைவர் முகத்தை நோக்கி— முன்னிலையில் நின்ற முடங்கிய பிடர் மயிரையும் வாலையுங் கொண்ட சிங்கங்களையொத்த சேனாபதிகளின் முகத்தைப் பார்த்து, மின்நின்ற விறல் தானை கரதானை சில கொடு போய்—ஒளி வீசுகின்ற வலிய ஆயுதங்களைத் தாங்கிய கையையுடைய சில சேனைகளைக் கொண்டுபோய், விளங்கு செங்கேழ் எல் நின்ற கதிர் சுருக்கி இரவி குடதிசைக்கடல் வாய் எய்து முன்னர்—விளங்குகின்ற சிவந்ததிறத்தையுடைய ஒளிதங்கிய கிரணங்களை யொடுக்கிக் கொண்டு சூரியன் மேற்றிசைச் சமுத்திரத்தை அடைதற்குமுன், கல் நின்ற மனத்தவனை கடிதோடி கொணர்மின் என கற்பித்தான்—கல்லைப்போன்ற (வலிய) மனத்தையுடைய (அக்கள்வனை) வேகமாயோடிச் சென்று பிடித்து வாருங்களென்று ஆஞ்ஞாபித்தான் எ—று.

ஏ அசை. (120)

ஆயவரும் விரைந்துகதை யாழிசிலை வாளியொள்வா
ளயில்வே லேந்திக்
காயவரும் கடுமறலி தூதரிவ ரெனவெருவக்
கண்டோர் கானிற்
போயவனை முடுக்கர்மரப் பொதும்பர்செறி யடவிதொறும்
புழைக்கை வேழஞ்
சியமுய லெண்குபுலி திரிசரிக டுருவியெங்குந்
திரியலுற்றார்.

[ஆயவரும் விரைந்துகதை ஆழிசிலை வாளிஒள்வாள் அயில்வேல் ஏந்திக்
காயவரும் கடுமறலி தூதர் இவர் எனவெருவக் கண்டோர் கானில்
போய்அவனை முடுக்கர்மரப் பொதும்பர்செறி அடவிதொறும் புழைக்கை வேழம்
சியம்முயல் எண்குபுலி திரிசரிகள் துருவிஎங்கும் திரிய லுற்றார்.]

இ—ள்: ஆயவரும்—அச்சேனைத்தலைவர்களும், கதை ஆழி சிலை வாளி ஒள் வாள் அயில் வேல் ஏந்தி—தண்டு சக்கரம் வில் அம்பு ஒளி பொருந்திய வாள் கூரிய வேல் என்னுமிவற்றைத் தாங்கிக்கொண்டு, காயவரும் கடு மறலி தூதர் இவர் என கண்டோர் வெருவ விரைந்து கானில் போய்—கொலைத்தொழிலைச் செய்யும்படி வருகின்ற கொடிய யமதூதுவர்களிவனென்று கண்டவர்களஞ்சும்படி வேகமாய்க் காட்டையடைந்து, முடுக்கர் மரப்பொதும்பர் செறி அடவி தொறும்—மலை முழைஞ்சுகளிலும் மரச்சோலைகள் நெருங்கிய காடுகளிலும், புழைக்கை வேழம் சியம் முயல் எண்கு புலி திரி சரிகள்—உட்டுளை பொருந்திய துதிக்கையையுடைய யானைகளும் சிங்கங்களும் முயல்களும் கரடிகளும் புலிகளும் திரிகின்ற வழிகளிலே, அவனைத்துருவி எங்கும் திரியலுற்றார்—அவனைத்தேடி யெவ்விடமுந் திரிவாராயினர் எ—று. (121)

கையரிக்கொண் டிடுஞ்சேனைக் கணங்கண்டு மருண்டு மனங்
கலங்கிக் காதன்
மையரிக்கண் ணியரோடு மக்களொடு மவ்வனத்தின்
மறைந்து வைகி
நெய்யரியிற் றீக்கொண்டு நன்ககற்றும் படிற்றொழுக்க
னெடிக ளோதை
செய்யரிற்கா னகன்றிரவிற் பற்பலகா வதங்கடந்து
சென்ற பின்னர்.

[சையரிக் கொண் டிடுப்சேனைக் கணம்சண்டு மருண்டுமனம் கலங்கிக் காதல்
மைஅரிக்கண் ணியரோடும் மக்களொடும் அவ்வனத்தில் மறைந்து வைகி
நெய்அரியில் தீக்கொண்டு நன்(கு)அகற்றும் படிற்(று)ஒழுக்கன் நெடிகள் ஓதை
செய் அரில் கான் அகன்(று) இரவில் பற்பலகா வதம்கடந்து சென்ற பின்னர்.]

இ—ள்: கையரி கொண்டிடும் சேனை கணம் கண்டு மருண்டு மனம் கலங்கி—தேடிச்செல்கின்ற சேனைகளின் கூட்டத்தைக்கண்டு வெருண்டு மனக் கலக்கமுடையவனாய், காதல் மை அரி கண்ணியரோடும் மக்களொடும் அவ்வனத்தின் மறைந்துவைகி—அன்புபொருந்தியமைதிட்டப்பட்ட ரேகைகள் பரந்த கண்களையுடைய மனைவியர்களோடும் புத்திரர்களோடும் அக்காட்டின் கண்ணே யொளித்திருந்து, நெய் அரியில் தீக்கொண்டு நன்கு அகற்றும் படிற்று ஒழுக்கன்—(கழிக்கப்படவேண்டிய பொருள்களை வைத்துக்கொண்டு நல்ல பொருள்களைச் சிந்தவிடுகின்ற) பன்னுடையைப்போலத் தியசெயல்களைக்கைக்கொண்டு நற்செயல்களை விலக்கிய தூர்த்தவொழுக்கத்தையுடைய சுகுமாரன், நெடிகள் ஓதை செய் அரில் கான் அகன்று—சில்வண்டுகள் சத்திக்கின்ற சிறந்த பருக்கைக் கற்களையுடைய காட்டை விட்டு நீங்கி, இரவில் பல் பல காவதம் கடந்து சென்ற பின்னர் — இராக் காலத்தே அதிக காததூரம் கடந்து போயபின்பு என—று. (122)

காட்டியசெந் நிறச்சூட்டு வாரணங்கூ யழைப்பவொற்றைக்
காற்றேர் தூண்டிச்
சேட்டிளஞ்செங் கதிர்ப்பரிதி கீழ்த்திசைக் கணுதயவரை
சேருங் காலை
நாட்டியதீ வினைக்கொடியோன் பயமூல மாநடந்து
நரருக் கின்ப
மூட்டியவூ ணவதேயப் புடையிலொரு வரைச்சார
லொளித்திட் டானே.

[காட்டிய செந் நிறச்சூட்டு வாரணம்கூய் அழைப்ப ஒற்றைக்
கால்தேர் தூண்டிச்
சேட்(டு) இளம் செங் கதிர்ப்பரிதி கீழ்த்திசைக்கண் உதயவரை சேரும் காலை
நாட்டியதீ வினைக்கொடியோன் பயமூல மாநடந்து நரருக்(கு) இன்பம்
ஊட்டியஊ ணவதேயப் புடையில் ஒரு வரைச்சாரல் ஒளித்திட் டானே.]

இ—ள்: செந்நிறம் காட்டிய சூட்டு வாரணம் கூய் அழைப்ப—சிவந்த நிறத்தைக் காட்டுகின்ற சூட்டையுடைய சேவல்கள் கூவியழைத்தலும், ஒற்றை கால் தேர் தூண்டி சேட்டு இளம் செம் கதிர் பரிதி கீழ்த்திசைக் கண் உதய வரை சேரும் காலை—ஒருருளைபொருந்திய இரதத்தைச் செலுத்தி மிக்க இளமையாகிய சிவந்த கிரணங்களையுடைய சூரியன் கிழக்குத் திசையின் கண்ணே உதயகிரியை யடையும்பொழுது, நாட்டிய தீவினைக் கொடியோன்—நீலியான தீச்செயல்களையுடைய கொடிய சுகுமாரன், பய மூலமா நடந்து—அச்சமே காரணமாகச் சென்று, நரருக்கு இன்பம் ஊட்டிய—மனுடர்களுக்குச் சுகத்தையூட்டிய, ஊணவதேய புடையில் ஒருவரை சாரல் ஒளித்திட்டான்—ஊணவம் என்னுந் தேசத்தின் பக்கத்தே ஓர் மலைச்சாரலில் ஒளித்திருந்தான் என—று. (123)

தொல்வினையின் படிநெடிய வரைவனங்க டொறுமுழன்று
தொடர்ந்து கானிற்
பல்வினையும் புரிந்துவழி மறித்திரலை முயலுடும்பு
பன்றி மான்கள்
கொல்வினையஞ் செய்து கடுங் கொடுங்கூற்ற மிவனெனப்பேர்
கொண்டு நாளு
நல்வினைய மொன்றுமின்றித் தீவினைமேம் படச்செலுத்தி
வாழு நாளில்.

[தொல்வினையின் படிநெடிய வரைவனங்கள் தொறும் உழன்று
தொடர்ந்து கானில்
பல்வினையும் புரிந்துவழி மறித்(து) இரலை முயல் உடும்பு பன்றி மான்கள்
கொல்வினையம் செய்து கடும் கொடும் கூற்றம் இவன் எனப்பேர்
கொண்டு நாளும்
நல்வினையம் ஒன்றும் இன்றித் தீவினைமேம் படச்செலுத்தி வாழும் நாளில்.]

இ — ள்: தொல் வினையின்படி நெடிய வரை வனங்கள் தொறும் உழன்று—பழைய ஊழின்படி நீண்ட மலைகளிலும் காடுகளிலும் அலைந்து திரிந்து, கானில் தொடர்ந்து பல் வினையும் புரிந்து—வனங்களிற் சென்று பல தீச்செயல்களையுஞ் செய்து, இரலை முயல் உடும்பு பன்றி மான்கள் வழி மறித்து கொல் வினையம் செய்து—கலைமான்களையும் முயல்களையும் உடும்புகளையும் பன்றிகளையும் மான்களையும் செல்லும் வழிகளில் தடுத்துக் கொலைபுரிந்து, கடும் கொடும் கூற்றம் இவன் என பேர் கொண்டு—மிக்க கொடிய யமன் இவனென்று பேர்படைத்து, நல் வினையம் ஒன்றும் இன்றி—சற்கருமம் ஒன்றையுமில்லாது, நாளும் தீவினை மேம்படச் செலுத்தி வாழும் நாளில்—நாடோறும் தீச்செயல்களை அதிகரிக்க நடாத்தி வாழுங்காலத்தில் எ—று. (124)

அவ்வரையி னெடுஞ்சாரற் கரைக்காதத் தளவையின்மா
லயன்புத் தேளிர்
தெவ்வரைவென் றிடுகுலிசப் படையோன்மா னுடரெவரும்
திரண்டு போற்றக்
கைவரையொன் றுரித்தருளுங் கறைமிடற்றுக் கண்ணுதல்கட்
கருணை நல்கிச்
சைவரையே டேற்றுகிற்பான் வீற்றிருக்கு நாகநகர்
தானென் றுண்டால்.

[அவ்வரையின் நெடுஞ்சாரற்(கு) அரைக் காதத்(து) அளவையில்மால்
அயன்புத் தேளிர்
தெவ்வரைவென் றிடுகுலிசப் படையோன்மா னுடர்எவரும்
திரண்டு போற்றக்
கைவரைஒன்(று) உரித்(து)அருளும் கறைமிடற்றுக் கண்ணுதல்கண்
கருணை நல்கிச்
சைவரைஏ டேற்றுகிற்பான் வீற்றிருக்கும் நாகநகர் தான்ஒன்(று) உண்டால்.]

இ — ள்: அவ் வரையின் நெடும் சாரற்கு அரைக்காதத்து அளவையில் — அம்மலையினது நெடிய சாரலினின்றும் அரைக்காததூரத்தில், மால் அயன் புத்தேளிர் தெவ்வரை வென்றிடு குலிசப்படையோன் மானுடர் எவரும் திரண்டு போற்ற — மகாவிஷ்ணுவும் பிரமதேவரும் தேவர்களும் பகைவரை வென்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரனும் மனுடர்களுமாகிய யாவரு மொருங்கே நின்று துதிக்க, கை வரை ஒன்று உரித்து அருளும் கறை மிடற்று கண்ணுதல் — யானையையுரித்த தஞ்சுபொருந்திய கண்டத்தையும் நெற்றிக்கண் னையுமுடைய சிவபிரான், கண் கருணை நல்கி சைவரை ஈடேற்றுகிற்பான் வீற்றிருக்கும் — திருபாதோக்கஞ் செய்து சைவரையுய்விக்கும்பொருட்டு எழுந் தருளியிருக்கின்ற, நாக நகர்தான் ஒன்று உண்டு — திருநாகேச்சுரம் என்னுந்தல மொன்றுளது எ — று.

ஆல் அசை. (125)

அந்தநகர்ப் பூசுரர்பார்த் திவர்வணிகர் சூத்திரர்முன்
னுயிலேரும்
பந்தணிகைச் சந்தமுலைப் பண்டருசொற் பைந்தொடியார்
பலரும் பானற்
கொந்தவிழ்நாண் மலர்வாசங் கமழோடை களிற்குழுமிக்
குளிர் நீராடிச்
சுந்தரஞ்சே ராசார முடுத்தபின்னு சாரமிகு
சுத்த ராகி.

[அந்தநகர்ப் பூசுரர்பார்த் திவர்வணிகர் சூத்திரர்முன் ஆயிலேரும் பந்துஅணிகைச் சந்தமுலைப் பண்தருசொல் பைந்தொடியார் பலரும் பானல் கொந்(து) அவிழ்நாள் மலர்வாசம், கமழ்ஓடை களில்குழுமிக் குளிர்நீர் ஆடிச் சுந்தரம்சேர் ஆசாரம் உடுத்தபின் ஆசாரமிகு சுத்தர் ஆகி.]

இ — ள்: அந்த நகர் பூசுரர் பார்த்திவர் வணிகர் சூத்திரர்முன் ஆயிலே ரும் — அந்த நகரத்தில் வசிக்கின்ற பிராமணர் அரசர் வைசியர் சூத்திரர் முத லிய ஏனையரும், பந்து அணி கை சந்த முலை பண் தரு சொல் பைந்தொடி யார் பலரும் — பந்தாடுகின்ற கைகளையும் சந்தனமணிந்த தனங்களையும் இனிய வார்த்தையையும் பசிய வளையல்களையுமுடைய பெண்கள்பலரும், கொந்து அவிழ் நாள் பானல் மலர் வாசம் கமழ் ஓடைகளில் குழுமி — இதழ் விரிந்த புதிய கருங்குவளைமலர்கள் வாசனையை வீசுகின்ற பொய்கைகளிற் கூடி, குளிர் நீர் ஆடி — குளிர்ந்த சலத்தில் முழுகி, சுந்தரம் சேர் ஆசாரம் உடுத்தபின் — அழகிய வஸ்திரங்களைத் தரித்தபின்னர், மிகு ஆசார சுத்த ராகி — மிக்க ஆசாரசீலராய் எ — று. (126)

வெய்யகொடும் பாதகங்க ணீருக்குந் திருநீறு
விரவச் சாத்தித்
துய்யமணிக் கண்டிகையின் றொடைபுனைந்தஞ் செழுத்தோதித்
துலங்குஞ் சோதிச்

செய்யமணிக் குண்டலங்கண் முதலாம் பொற் கலனிலங்கச்
செக்கர் மேனி
யையனுறைந் தருடருநாகேச்சுரத்திற் சென்றுதொழு
தன்பு கூர.

[வெய்யகொடும் பாதகங்கள் நீருக்கும் திருநீறு விரவச் சாத்தித்
துய்யமணிக் கண்டிகையின் தொடைபுனைந்(து) அஞ் செழுத்(து) ஓதித்
துலங்கும் சோதிச்
செய்யமணிக் குண்டலங்கள் முதலாம்பொற் கலன் இலங்கச் செக்கர் மேனி
ஐயன்உறைந்(து) அருள்தரும்நா கேச்சுரத்தில் சென்று தொழு(து) அன்பு கூர.]

இ — ள்: வெய்ய கொடும் பாதகங்கள் நீருக்கும் திருநீறு விரவ சாத்தி— மிக்க கொடிய பாவங்களைத் தகிக்கவல்ல விபூதியைப்பரவப்பூசி, துய்ய கண்டிகை மணியின் தொடை புனைந்து—சுத்தமாகிய உருத்திராக்க மாலைகளைத் தரித்து, அஞ்சு எழுத்து ஓதி—பஞ்சாக்ஷரஞ் செபித்து, சோதி துலங்கு செய்ய மணிக்குண்டலங்கள் முதலாம் பொன் கலன் இலங்க—ஒளிவிளங்குகின்ற மாணிக்கரத்தினங்கள் பதித்துச்செய்யப்பட்ட குண்டலம் முதலிய பொன்னாபரணங்கள் பிரகாசிக்க, செக்கர் மேனி ஐயன் உறைந்து அருள் தரும் நாகேச்சுரத்தில் சென்று அன்பு கூர தொழுது—செக்கர்மேகத்தையொத்த திருமேனியையுடைய சிவபெருமான் வீற்றிருந்து அனுக்கிரகஞ் செய்கின்ற திருநாகேச்சுரமென்னுத் தலத்தையடைந்து அன்பதிகரிக்க வணங்கி ஏறு. (127)

வெண்டரளத் தொடைநாற்றி விதானித்து நெய்த்தகளி
விளக்கு மேற்றி
வண்டமரும் வலம்புரிமா தவிமுல்லை மல்லிகைசெவ்
வந்தி பிச்சி
தண்டளிர்சேர் மணமிகுத்த மந்தாரங் கரவீரஞ்
சாதி வாசப்
புண்டரிகங் கருங்குவளைப்போதுகடு யருச்சனைகள்
புரிந்து போற்றி.

[வெண்தரளத் தொடைநாற்றி விதானித்து நெய்த் தகளி விளக்கும் ஏற்றி
வண்(டு) அமரும் வலம்புரிமா தவிமுல்லை மல்லிகை செவ்வந்தி பிச்சி
தண்தளிர்சேர் மணமிகுத்த மந்தாரம் கரவீரம் சாதி வாசப்
புண்டரிகம் கருங்குவளைப் போதுகள்தூய் அருச்சனைகள் புரிந்து போற்றி.]

இ — ள்: விதானித்து—மேற்கட்டிகட்டி, வெண்தரள தொடைநாற்றி—வெள்ளிய முத்துமாலைகளைத்தூக்கி, நெய் தகளி விளக்கும் ஏற்றி—நெய்யிடப்பட்ட தகளிகளில் விளக்குகளையுமேற்றி, வண்டு அமரும் வலம்புரி—வண்டுகள் படிகின்ற நந்தியாவர்த்தமும், மாதவி—துளசியும், முல்லை—முல்லையும், மல்விகை—மல்லிகையும், செவ்வந்தி—செவ்வந்தியும், பிச்சி—பிச்சியும், தண் தளிர் சேர் மணம் மிகுத்த மந்தாரம்—குளிர்ந்த தளிரையுடைய வாசனைமிகுந்த மந்தாரமும், கரவீரம்—அலரியும், சாதி—சிறுசண்பகமும், வாச புண்டரிகம்—வாசனைபொருந்திய தாமரையும், கருங்குவளை—கருங்குவளையுமாகிய இவற்றின், போதுகள் தூய்—புஷ்பங்களைத் தூவி, அருச்சனைகள் புரிந்து போற்றி—பூசனைகள் செய்து தோத்திரம்பண்ணி எ—று. (128)

சங்குபட கந்துடிமத் தளந்தாளந் தளங்கியசல் லரிமல் லாரி
மங்குன்முழக் கெனமுழங்கப் பரதவிதிப் படிநடனை மகளி ராடக்
கங்குறனிற் கண்டுயிலா தண்டர்பிரா னருட்கோலக் கடலிற்காரி
னுங்குசிவ நிசிவிரத மாசியிற்பிற் சதுர்த்தசியி னோற்க லுற்றார்.

[சங்குபட கம்துடிமத் தளம்தாளம் தளங்கியசல் லரிமல் லாரி
மங்குல்முழக்(கு) எனமுழங்கப் பரதவிதிப் படிநடன மகளிர் ஆடக்
கங்குல்தனில் கண்துயிலா(து) அண்டர்பிரான் அருட்கோலக் கடலில் காரின்
நுங்குசிவ நிசிவிரதம் மாசியின்பின் சதுர்த்தசியில் நோற்கல் உற்றார்.]

இ — ள்: சங்கு படகம் துடி மத்தளம் தாளம் தளங்கிய சல்லரி மல்லாரி மங்குல் முழக்கு என முழங்க—சங்கும் ஒருகட்பறையும் உடுக்கும் மத்தளமும் தாளமும் விளங்குகின்ற சல்லரியும் பம்பைமேளமும் ஆகிய இவைகள் மேகமுழக்கத்தைப்போல ஆரவாரிக்க, பரத விதிப்படி நடன மகளிர் ஆட—பரதசாத்திரமுறைப்படி நாடகக்கணிகையர்கள் நடிக்க, கங்குல் தனில் கண் துயிலாது—அவ்விரவின்கண்ணே நித்திரைசெய்யாது, அண்டர் பிரான் அருள் கோல கடலில்—தேவநாயகராகிய சிவபெருமானது அழகிய கிருபா சமுத்திரத்தில், காரின் நுங்கு—மேகமானது நீரையுண்ணுவதுபோல (அருள்நீரையுண்ணுதற்கிடமாயுள்ள) சிவநிசி விரதம்—சிவராத்திரி விரதத்தை, மாசியின் பின் சதுர்த்தசியில் நோற்கல் உற்றார்—மாசிமாதத்தில் வருகின்ற அபரபக்கத்துச் சதுர்த்தசியில் அனுஷ்டித்தார்கள் எ—று. (129)

ஈதுணரா னல்வினையொன் றிருந்ததலற் சுகுமார
னிருபொற் றோட்டின்
மீதுலவு தடநெடுங்க ணுமைபாகன் சன்னிதிமுன்
மேவி வாசத்

தாதுலவு நந்தனங்க டடவிமட மனவியர்கூந்
தற்குச் சூட்டப்
போதுகொய்வான் போதுமந்தப் போதுகண்டா னவணடந்த
புதுமை யெல்லாம்.

[ஈ(து)உரைரான் நல்வினைஒன்(று) இருந்ததனல் சுகுமாரன்
இருபொன் தோட்டின்
மீ(து)உலவு தடநெடுங்கண் உமைபாகன் சன்னிதிமுன் மேவி வாசத்
தா(து)உலவு நந்தனங்கள் தடவிமட மனவியர்கூந் தற்குச் சூட்டப்
போது கொய்வான் போதும் அந்தப் போதுகண்டான் அவண் நடந்த
புதுமை எல்லாம்.]

இ — ள்: சுகுமாரன்—சுகுமாரனனவன், ஈது உரைரான் நல் வினை ஒன்று இருந்த அதனல்—இதனையறியாதவனுய் நல்லூழின்பாகமொன்று கிடந்தமையால், இரு பொன் தோட்டின் மீது உலவு தட நெடும் கண் உமை பாகன் சன்னிதி முன் மேவி—பொன்னலாகிய இரண்டு குண்டலங்களையுமணிந்த காதளவோடுகின்ற விசாலமாகிய தெடிய கண்களையுடைய உமாதேவிபங்கராகிய சிவபெருமானது திருக்கோயிலின்முன்னேசென்று, வாச தாது உலவு நந்தனங்கள் தடவி—வாசனைபொருந்திய பூஞ்சோலைகளைத்தேடி, மட மனவியர் கூந்தற்கு சூட்ட போதுகொய்வான்போதும் அந்த போது—மடமையையுடைய தன்மனவியர்களது அளகபாரத்துக்குச் சூட்டுதற்கு மலர்களைக் கொய்யும் பொருட்டுச் செல்லுஞ் சமயத்தில், அவண் நடந்த புதுமை எல்லாம் கண்டான்—அவ்விடத்து நடைபெற்ற அதிசயங்கள் யாவற்றையும் கண்டான் என்று.

(180)

இங்கிதொரற் புதமிதுவெ னிரவிலென்றத் திசைநோக்கு
மெல்லை மாந்த
ரங்கணிறைந் தரகரசங் கரவெனமூ வைந்துகன்ன
லகன்ற பின்னர்த்
தங்கியபொங் கொளித்தீபத் தட்டேந்திப் பரிமாறுஞ்
சமயந் தன்னிற்
றிங்களணி செஞ்சடையோ னினிதுறையுஞ் சிவலிங்கந்
தெரிசித் தானே.

[இங்(கு) இ(து) ஒ(ரு) அற் புதம் இது என் இரவில் என்(று) அத்திசைநோக்கும்
எல்லை மாந்தர்
அங்சண் நிறைந்(து)அரகரசங் கரனெமூ வைந்து கன்னல் அகன்ற பின்னர்த்
தங்கியபொங்(கு) ஒளித்தீபத் தட்(டு) ஏந்திப் பரிமாறும் சமயம் தன்னில்
திங்கள்அணி செஞ்சடையோல் இனி(து) உறையும் சிவலிங்கம்
தெரிசித் தானே.]

இ — ள்: இரவில்—இராக்காலத்தில், இங்கு ஒரு அற்புதம் இது என் என்று—இங்கே ஒரு ஆச்சரியம் இருந்தபடி என்னே என்று, அத்திசை நோக்கும் எல்லே—அத்திக்குமுகமாகப் பார்க்கும்பொழுது, மாந்தர் அங்கண் நிறைந்து அரகர சங்கர என-மனுடர்கள் அவ்விடத்துக்கூடி அரகரசங்கர வென்றுதோத்திரித்து, மூவைந்து கன்னல் அகன்ற பின்னர்—பதினைந்து நாழிகைசென்று அர்த்தராத்திரிப்போதில், பொங்கு ஒளி நீப தட்டு ஏந்தி பரிமாறும் சமயம் தன்னில்—பொலிவாகிய ஒளிதங்கிய நீபத்தட்டைத்தாங்கி ஆராதனைசெய்கின்ற சமயமாயிற்று அப்போது, திங்கள் அணி செம் சடையோன் இனிது உறையும் சிவலிங்கம் தெரிசித்தான்—சந்திரனைத் தரிசித்த சிவந்த சடையையுடைய சிவபெருமான் நன்குவீற்றிருத்தருளுகின்ற சிவலிங்கத்தை தரிசித்தான் என்று.

ஏ அசை.

(131)

மீட்டுமந்த வனத்திலெய்தி வெவ்வினைகள் பலபுரிந்து
விருப்ப நெஞ்சிற்
காட்டுமனைக் கிழத்தியரோ டின்பநல நுகர்ந்துசின்னாட்
கழிந்த பின்னர்
வாட்டுபெரும் பிணியலைப்ப மத்தெறியுந் தயிரின்மன
மறுகி மாழ்கி
யீட்டுபெரும் பாதகந்தா னிறந்ததெனத் தனதுடனீத்
திறந்திட் டானே.

[மீட்டும்அந்த வனத்தில்எய்தி வெவ்வினைகள் பலபுரிந்து விருப்பம் நெஞ்சில் காட்டும்மனைக் கிழத்தியரோ(டு) இன்பநலம் நுகர்ந்து சின்னாள் கழிந்த பின்னர் வாட்டுபெரும் பிணிஅலைப்ப மத்(து) எறியும் தயிரின்மனம் மறுகி மாழ்கி ஈட்டுபெரும் பாதகந்தான் இறந்த(து)எனத் தன(து) உடல்நீத்(து) இறந்திட் டானே.]

இ — ள்: மீட்டும் அந்த வனத்தில் எய்தி வெவ் வினைகள் பல புரிந்து—பின்னருமக்காட்டிற் சென்று கொடிய தீமைகள் பலவற்றையுஞ் செய்து, நெஞ்சில் விருப்பம் காட்டும் மனைக்கிழத்தியரோடு இன்ப நலம் நுகர்ந்து சின்னாள் கழிந்த பின்னர்—மனத்தில் ஆசையைக் கொடுக்கின்ற தன்மனைவியரோடு இன்பசுகத்தை யனுபவித்துச் சிலதினங்கள் சென்ற பின்பு, வாட்டுபெரும் பிணி அலைப்ப—வருத்துகின்ற பெருநோய்வருத்த, மத்து எறியும் தயிரின் மனம் மறுகி மாழ்கி—மத்தினற் கடையப்படுகின்ற தயிரைப்போல மனம் கலங்கி மயங்கி, ஈட்டுபெரும் பாதகந்தான் இறந்தது என—நம்பாதித்த மிக்கபாவங்களெல்லாம் அழிந்தாற்போல, தனது உடல் நீத்து இறந்திட்டான்—தன்னுடம்பை விடுத்து உயிர் துறந்தனன் என்று.

ஏ அசை.

(132)

வேறு

பெரிய வாயரகல் வானி னுற்றசிறு
பிறையெ யிற்றர்சிகை பெற்றெழுந்
தெரியு நீள்வடவை யொத்த குஞ்சிய
ரிடித்த சொல்லினர் துடித்துநீர்
சொரியு மாரிமுகி லால காலமிவை
தொக்க நீலவரை யொக்குமா
கரியமேனியர் சிவந்த கண்ணினர்கள்
காலதூதர்பலர் மேவினர்.

[பெரிய வாயர் அகல் வானின் உற்றசிறு
பிறைஎ யிற்றர்சிகை பெற்(று) எழுந்(து)
எரியும் நீள்வடவை ஒத்த குஞ்சியர்
இடித்த சொல்லினர் துடித்து நீர்
சொரியும் மாரிமுகில் ஆல காலம்இவை
தொக்க நீலவரை ஒக்குமா
கரிய மேனியர் சிவந்த கண்ணினர்கள்
காலதூ தர்பலர் மேவினர்.]

இ—ள்: பெரிய வாயர்—அகன்ற வாயையுடையவர்களும், அகல்வானின் உற்ற சிறு பிறை எயிற்றர்—விசாலமாகிய ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சிறிய பிறையையொத்த வக்கிரதந்தங்களையுடையவர்களும், சிகைபெற்று எழுந்து எரியும் நீள் வடவை ஒத்த குஞ்சியர்—கொழுந்து விட்டு மேல்நோக்கி யெரிகின்ற நீண்டவடவா முகாக்கினியைப் போன்ற (சிவந்த) குடுமியையுடையவர்களும், இடித்த சொல்லினர்—இடிபோன்ற வார்த்தையையுடையவர்களும், துடித்து நீர் சொரியும் மாரி முகில் ஆல காலம் இவை தொக்க நீல வரை ஒக்கும் மா கரிய மேனியர்—மின்னி மழையைப் பெய்கின்ற முகிலும் ஆலகாலவிடமுமாகிய இவை செறியப்பெற்ற நீலமலைகளை நிகர்த்த மிகக் கரிய உருவத்தையுடையவர்களும், சிவந்த கண்ணினர்கள்—சிவந்த கண்களையுடையவர்களுமான, காலதூதர் பலர் மேவினர்—யமதூதர்கள் பலர் ஆங்கு வந்தனர் எ—று. (132)

தூலமொத்தகர மீதெடுத்தசில
தண்டுவாளிவலை சக்கரஞ்
சூல மிக்கவடி வாள்சி ரத்தொகை
துணிக்கு நீடிய கணிச்சிகூர்
வேல ழற்கழுமுள் பிண்டி பாலமொடு
வீசு பாசமிவை கொண்டு நீள்
வால சைத்துமிகு புலிபுல் வாயினை
வலைத்த தாமென வலைத்தனர்.

[தாலம் ஒத்தகரம் மீ(து)எ டுத்தசிலை தண்டு வாளிவலீ சக்கரம்
சூலம் மிக்கவடி வாள்சி ரத்தொகை துணிக்கும் நீடிய கணிச்சிகூர்
வேல்அ மற்கழுமுள் பிண்டி பாலமொடு வீசு பாசம்இவை கொண்டுநீள்
வால்அ சைத்துமிகு புலிபுல் வாயினே வலீத்த(து) ஆம்என வலீத்தனர்.]

இ — ள்: தாலம் ஒத்த கரம் மீது எடுத்த — பனையைப்போன்ற நீண்ட கைகளிற்றாங்கிய, சிலை — வில்லும், தண்டு — தண்டமும், வாளி — அம்புகளும், வலீ — வலீதடியும், சக்கரம் — சக்கரமும், சூலம் — சூலமும், மிக்க வடிவாள் — மிகக்கூரிய வாளும், சிர தொகை துணிக்கும் நீடிய கணிச்சி — (பகைவர்களது) சிரங்களே வெட்டுகின்ற நீண்டமழுவும், கூர்வேல் — கூரிய வேலும், அழல்கழுமுள் — அக்கினிபோன்ற ஈட்டியும், பிண்டிபாலம் ஒடு — இருப்புலக்கையுடன், வீசு பாசம் இவை கொண்டு — வீசப்படுகின்ற பாசமும் ஆகிய இவற்றைக்கொண்டு, மிகு புலி நீள் வால் அசைத்து — மிகுதியாகிய புலிகள் நீண்டவாலே அசைத்துக்கொண்டு, புல்வாயினே வலீத்தது ஆம் என வலீத்தனர் — மானைச் சூழ்ந்தாற்போல வந்து வலீத்தார்கள் எ—று;

(134)

பற்று மென்பர்சிலர் பாவி யாவிபத றிப்பதைக்கவிரி பாறையி
னெற்று மென்பர்சில ரீரநாவ தனீயீரு மென்பர்சிலர் பாரெலா
முற்று ணர்ந்துகொலே செய்த கால்கரமொ டித்தி ரென்றிவையு ரைத்துமுன்
மற்றடம்புய முரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே.

[பற்றும் என்பர்சிலர் பாவி ஆவி பதறிப் பதைக்கவிரி பாறையின்
எற்றும் என்பர்சிலர் ஈரநா அதனே ஈரும் என்பர்சிலர் பார்எலாம்
உற்(று)உணர்ந்துகொலே செய்த கால்கரம் ஒடித்திர் என்(று)இவை உரைத்துமுன்
மல்தடம் புயம்மு ரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே;]

இ — ள்: சிலர் பற்றும் என்பர் — அத்தூதரிற் சிலரிவனேப் பிடியுங்களென்பர், சிலர் பாவி ஆவி பதறி பதைக்க விரி பாறையின் எற்றும் என்பர் — சிலர் பாவியாகிய இவனுயிர் துடித்துப் பதைக்கும்படி பரந்த கற்பாறையில் மோதுங்களென்பர், சிலர் ஈர நா அதனே ஈரும் என்பர் — சிலர் ஈரமாகிய நாக்கை வெட்டுங்களென்பர், (சிலர்) பார் எலாம் உற்று உணர்ந்து கொலேசெய்த கால் கரம் ஒடித்திர் என்று இவை உரைத்து — (சிலர்) பூமியெங்குந் திரிந்து தேடிக் கொலேசெய்த இவனது கால்களேயும் கைகளேயும் முரியுங்களென்று இன்னேரன்ன பலவற்றையுங் கூறி, முன் — முதலில், மல் தடம்புயம் முரிந்து சிந்திட வருத்தி வரிந்து கட்டினர் — வலிய விசாலமாகிய புயங்கள் முரிந்து சிதையும்படி வருத்தி (கயிற்றினல்) வரிந்து கட்டினர் எ — று.

ஏ - அசை;

(135)

அடிப்பர் பற்பல விலங்கு கொன்றுதசை யன்று மென்று நனி தின்றபல்
லொடிப்பர் மார்புபழு வூடு தைப்பர்கதை யோச்சி மேலிடவுரப்பிமே
லிடிப்பர் பாசமது கொண்டு கண்டமதி லிட்டி றுக்கியிரு கையினும்
பிடிப்பர் கண்ணிணை பிதுங்க வீர்த்துநெறி பேரு வார்முயலும் வேலையில்.

[அடிப்பர் பற்பல விலங்கு கொன்றுதசை அன்று மென்றுநனி தின்றபல்
ஓடிப்பர் மார்புபழு ஊ(டு)உ தைப்பர்கதை ஓச்சி மேலிட உரப்பிமேல்
இடிப்பர் பாசமது கொண்டு கண்டம்அதில் இட்(டு) இறுக்கிஇரு கையினும்
பிடிப்பர் கண்ணிணை பிதுங்க ஈர்த்துநெறி பேரு வார்முயலும் வேலையில்.]

இ — ள்: அடிப்பர் — அடிப்பார்கள், பற்பல விலங்கு கொன்று அன்று தசை மென்று நனி தின்றபல் ஓடிப்பர் — பலபல மிருகங்களையுங் கொலை செய்து அந்நாளில் மாமிசத்தை அதுக்கி மிகவுமுண்ட பற்களைச் சிதைப்பார்கள், மார்பு பழு ஊடு உதைப்பர் — மார்பினும் பழுவினுமுதைப்பார்கள், கதை ஓச்சி மேலிட உரப்பி மேல் இடிப்பர் — தண்டாயுதத்தை மேலே படும்படி வீசி அதட்டிச் சரீரத்திலிடிப்பார்கள், பாசம் அது கொண்டு கண்டம் அதில் இட்டு இறுக்கி — பாசத்தைக்கொண்டு கழுத்தின் மாட்டியிறுக்கி, இரு கையினும் பிடிப்பர் — இரண்டு கைகளினும் பிடிப்பார்கள், கண்இணை பிதுங்க ஈர்த்து நெறி பேருவார் முயலும் வேலையில் — கண்களிரண்டும் புறப்படும்படி இழுத்துக்கொண்டு செல்லும் வழியே செல்லுதற்குத் தொடங்கும் பொழுதில் எ — று. (136)

வணங்கி முந்தியெதிர் நின்ற நந்திதனை வருக வென்றெமது வாயில்வாழ்
கணங்கள் சென்றொரு கணத்தி னெய்தியடு காலதூ தர்கொடு போகமுன்
குணங்கெ டாதசுகு மாரனைக் கயிலை கொடுவ ரச்சடுதி கூறெனப்
பணங்கொள் பாம்புமதி பாணி வேணியணி பரம னற்கருளை பண்ணினான்.

[வணங்கி முந்தியெதிர் நின்ற நந்திதனை வருக என்(று)எமது வாயில்வாழ்
கணங்கள் சென்(று)ஒரு கணத்தின் எய்திஅடு காலதூ தர்கொடு போகமுன்
குணம்கெ டாதசுகு மாரனைக் கயிலை கொடுவரச் சடுதி கூ(று)எனப்
பணம்கொள் பாம்புமதி பாணிவேணி அணி பரமன் நற்கருளை பண்ணினான்.]

இ — ள்: பணம் கொள் பாம்பு மதி பாணி வேணி அணி பரமன் — படம்பொருந்திய பாம்புகளையும் சந்திரனையும் கங்கையையும் சடைமுடியிற் றரித்த சிவபெருமான், வணங்கி முந்தி எதிர்நின்ற நந்திதனை வருக என்று — வணக்கத்தோடு விரைந்து எதிராக நின்ற திருநந்திதேவரை இங்குவருவா யென்று அழைத்து, எமது வாயில் வாழ் கணங்கள் சென்று ஒரு கணத்தின் எய்தி — எமது வாயிலில் வசிக்கின்ற கணத்தவர்கள் போய் ஒரு கணப் பொழுதினுட்கிட்டி, குணம் கெடாத சுகுமாரனை — நல்மைதீங்காத சுது

மாரனே, அடு கால தூதர் கொடு போகமுன் — கொலைபுரிகின்ற யமதூதுவர்கள் கொண்டுபோவதற்கு முன்னரே, கயிலை கொடு வர சடுதி கூறு எனை நல்கருணை பண்ணினன் — கயிலாயகிரிக்குக் கொண்டுவரும்படி விரைவில் ஆஞ்ஞாபிக்கக் கடவையென்று நல்ல கிருபைசெய்தருளினர் எ — று. (137)

போற்றி யங்குவிடை கொண்டு வாயிலிடைபோந்து நந்திகண நாதர்போய்க்
கூற்றி னுருயிர் குடித்த காலனருள் கூர வந்த சுகு மாரனேத்
தேற்றி யாதரவு செப்பி யற்பினெடு செம்பொன் மாமணி விமானமீ
தேற்றி யோர்நொடியில் வம்மி னீரென வியம்பி யங்கவரை யேவினன்.

[போற்றி அங்குவிடை கொண்டு வாயிலிடை போந்து நந்திகண நாதர்போய்க்
கூற்றின் ஆருயிர் குடித்த காலனருள் கூர வந்தசுகு மாரனேத்
தேற்றி ஆதரவு செப்பி அற்பினெடு செம்பொன் மாமணி விமானமீ(து)
ஏற்றி ஓர்நொடியில் வம்மின் நீர்என இயம்பி அங்(கு)அவரை ஏவினன்.]

இ — ள்: நந்தி போற்றி அங்கு விடைகொண்டு வாயில் இடை போந்து — நந்திதேவர் துதித்து அவ்விடத்தினின்றும் அனுமதிபெற்று முதல் வாயிலை யடைந்து, கணநாதர் நீர் போய் — கணநிபர்காள் நீங்கள் (விரைவிற்) சென்று, கூற்றின் ஆர் உயிர் குடித்த காலன் அருள் கூரவந்த சுகுமாரனே — இயமனைக் (காலாலுதைத்து) அவனது அரிய ஆன்மாவைச் சிதைத்தருளிய சிவபெருமானனுக்கிரகஞ் செய்யும்படி தோன்றிய சுகுமாரனை, தேற்றி ஆதரவு செப்பி — தெளிவித்து உபசார வார்த்தைகளைக் கூறி, அன்பினெடு செம் பொன் மாமணி விமானம் மீது ஏற்றி — அன்போடு செம்பொன்னாற் செய்யப்பட்ட சிறந்த இரத்தினமழுத்தப்பெற்ற விமானத்தின் மேலேற்றிக் கொண்டு, ஓர் நொடியில் வம்மின் என இயம்பி அங்கு அவரை ஏவினன் — ஒருமாத்திரைப்பொழுதிலிங்கு வரக்கடவீரென்று கூறி அவ்விடத்திற்கவர்களை யனுப்பினர் எ-று. (138)

நீற னிந்திலகு நெற்றி யார்மிக நெடுத்த புன்சடை முடித்துளா
ராற னிந்தருளு மெந்தை சேவடி யகந்தி ருத்தியரு ளன்பினு
ரூற னிந்துவரு மூக்கு றும்பற வொருக்கி யோசைகள் பெருக்கநற்
பேற னிந்துகிள ரிரச தக்கிரி பிரிந்தி டாமலுறை பெட்பினர்.

[நீ(று)அ னிந்(து)இலகு நெற்றி யார்மிக நெடுத்த புன்சடை முடித்துளார்
ஆ(று)அ னிந்தருளும் எந்தை சேவடி அகத்(து) இருத்தியருள் அன்பினர்
ஊ(று)அ னிந்துவரு மூக்கு றும்(பு)அற ஒருக்கி ஓசைகள் பெருக்கநற்
பே(று)அ னிந்துகிளர் இரச தக்கிரி பிரிந்தி டாமல்உறை பெட்பினர்.]

இ — ள்: நீறு அணிந்து இலகு நெற்றியார் — விபூதியணிந்து விளங்கு கின்ற நெற்றியையுடையவர்களும், மிக நெடுத்த புன் சடை முடித்துளார் — அதிகம் நீண்ட மிருதுவாகிய சடைமுடியையுடையவர்களும், ஆறு அணிந்து அருளும் எந்தைசே அடி அகத்து இருத்தி அருள் அன்பினர் — கங்கையைத் தரித்தருளிய எமது பரமபிதாவாகிய சிவபெருமானது சிவந்த பாதங்களை மனத்திலிருத்தலால் அனுக்கிரகம்பெற்ற அன்பையுடையவர்களும், வெறு அணிந்துவரு முக்குறும்பு அற ஒருக்கி — நன்மைக்கிடையூறான காமம் வெகுளி மயக்கம் ஆகிய முக்குறும்புகளையும் முற்ற நசித்து, ஓசைகள் பெருக்க நல் பேறு அணிந்து — கீர்த்திகள் பெருகும்படி நல்ல அருட்பேறுகளைத் தாங்கி, கிளர் இரசதக்கிரி பிரிந்திடாமல் உறை பெட்பினர் — விளங்குகின்ற வெள் ளியங்கிரியை என்றும் நீங்காது வாழ்ந்திருக்கின்ற பெருமையையுடையவர் களும் எ — று. (139)

தாம மாகமிகு கண்டி கைத்தொடை தரித்து ளார்வினை யரித்துளா
ரேம மால்வரை யசைத்தொர் கையினி லெடுக்கு மற்புய மிடுக்கினர்
நாம வேறிகிரி கொந்த ழற்கழுமுணகு கைப்படைக ணவியநீள்
வாம மேவுவடி வாளி னேடுதிறன் மறலி தூதரிடை மருவியே.

[தாமம் ஆகமிகு கண்டி கைத்தொடை தரித்து ளார்வினை அரித்துளார்
ஏம மால்வரை அசைத்(து)ஓர் கையினில் எடுக்கும் மற்புய மிடுக்கினர்
நாம வேல்திகிரி கொந்(து) அழற்கழுமுள் நகுக கைப்படைகள் நவியம்நீள்
வாமம் மேவுவடி வாளி னேடு திறல் மறலி தூதரிடை மருவியே.]

இ — ள்: தாமம் ஆக மிகு கண்டிகை தொடை தரித்துளார் — மாலையாக அதிக உருத்திராக்க வடங்களைத் தரித்தவர்களும், வினை அரித்துளார் — தீவினைகளை நீக்கியவர்களும், ஏம மால் வரை அசைத்து ஓர் கையில் எடுக் கும் மல்புய மிடுக்கினர் — பெரிய மேருமலையையசைத்து ஒரு கையினால் தூக் கத் தகுந்த வலிய புயங்களையுடையவர்களும் (ஆகிய கணநாதர்கள்), நாம வேல் — அச்சம் பொருந்திய வேலும், திகிரி — சக்கரமும், கொந்து அழல் கழுமுள் — கொதித்து அழலுகின்ற ஈட்டியும், நகு கைப் படைகள் — ஒளி பொருந்திய தண்டாயுதங்களும், நவியம் — கோடரியும், நீள் வாமம் மேவு வடி வாள் — நீண்ட அழகுபொருந்திய வாளும் ஆகிய இப்படைகளுடன், திறல் மறலி தூதரிடை மருவி — வலிய யமதூதுவர்கள் செல்லுமிடத்திற் சென்று எ — று;

ஏ — அசை. (140)

விடுமி னிந்தமறை வேதி யன்றனை விடுத்தி டாவிடில் விறற் படை
யெடுமி னெம்முட னெதிர்ந்து வெஞ்சம ரியற்றி யுங்கள் வலி யாவையுங்
கெடுமி னங்கமுடி புயமெனும்பெரிய கிரியி ழந்துயிரை யெமதுகைக்
கொடுமி னென்றுசில வாச கங்களெதிர் கூறி ஞர்வலிமை கூரவே.

[விடுமின் இந்தமறை வேதி யன்றனை விடுத்தி டாவிடில் விறற்படை
எடுமின் எம்முடன் எதிர்ந்து வெம்சமர் இயற்றி உங்கள்வலி யாவையும்
கெடுமின் அங்கம்முடி புயம்எனும் பெரிய கிரி இழ்(து) உயிரை எமதுகைக்
கொடுமின் என்றுசில வாச கங்கள்எதிர் கூறினர்வலிமை கூரவே.]

இ — ள்: இந்த மறை வேதியன் தனை விடுமின் — இந்த வேதத்தை யறிந்த பிராமணனை விடுங்கள், விடுத்திடாவிடில் விறல் படை எடுமின் — விடுக்காவிடின் வலிய ஆயுதங்களை யெடுங்கள், எம்முடன் எதிர்ந்து வெம் சமர் இயற்றி உங்கள் வலியாவையும் கெடுமின் — எங்களோடு எதிர்த்துக் கொடிய யுத்தத்தைச்செய்து உங்கள் வன்மை முற்றையுமழித்துக் கொள்ளுங் கள், அங்கம் முடி புயம் எனும் பெரிய கிரி இழந்து உயிரை எமது கை கொடுமின் என்று — அவயவங்களும் தலைகளும் புயங்களென்கின்ற பெரிய மலைகளும் ஆகிய இவற்றை இழந்து நும்முயிரை நமதுகைவசப்படுத்துங்க ளென்று, சில வாசகங்கள் வலிமைகூர எதிர் கூறினர் — சில வார்த்தை களைத் தம்வலிமை அதிகரிக்க எதிர்த்துக் கூறினர்கள் எ — று.

ஏ அசை.

(141)

வேறு

முனிவர் போன்மிக நீறு பூசி முறுக்கி வேணி முடித்துளீர்
தினையி லோரொரு பாதி நீதிகள் செய்தி லீரெமை வெய்யதி
னைய வாய்மொழி பேசி யேசி யடர்த்து வன்மை நடத்துவீ
ரினைய ராயிது செய்த நீரிவண் யாவ ரேவலி னெய்தினீர்.

[முனிவர் போல்மிக நீறு பூசி முறுக்கி வேணி முடித்துளீர்
தினையில் ஓரொரு பாதி நீதிகள் செய்தி லீர்எமை வெய்யதி
னைய வாய்மொழி பேசி ஏசி அடர்த்து வன்மை நடத்துவீர்
இனைய ராய்இது செய்த நீர்இவண் யாவர் ஏவலின் எய்தினீர்.]

இ — ள்: முனிவர் போல் மிக நீறு பூசி வேணி முறுக்கி முடித்துளீர் — முனிவர்களைப்போல மிக விபூதியைத் தரித்துச் சடையை முறுக்கி முடித் திருக்கின்றீர், ஓர் தினையில் ஒருபாதி நீதிகள் செய்திலீர் — ஒரு தினையின் பாதியளவாயினும் நீதிகளைச் செய்கீரல்லீர், எமை வெய்ய நீ அனைய வாய் மொழி பேசி ஏசி அடர்த்து வன்மை நடத்துவீர் — எங்களைக் கொடிய அக் கினிபோல உமது வாயினின்றுந் தோற்றிய கடுமொழிகளாலிகழ்ந்து வைது நெருக்கி உமது வலிமையைச் செலுத்துகின்றீர், இனையராய் இது செய்த நீர் — இத்தன்மைகளையுடையராய் இச்செயல்களைச் செய்த நீவிர், யாவர் ஏவலின் இவண் எய்தினீர் — எவரது ஏவலாலிங்குவரப்பெற்றீர் எ — று. (142)

என்று வன்றிற லியம தூத ரியம்ப லுந்தவ ரென்றுபொற்
குன்று கொண்டுமுன் முப்பு ரந்தழல் கொள்ள மென்னகை கோட்டிமான்
கன்று கொண்ட கரத்த னெதிர் காம னீக்குள விழியழற் [மான்
கன்ற ளித்தரு ளாதி நாயக னன்பர் பின்பிது கூறுவார்.

[என்று வன்திறல் இயம தூதர் இயம்ப லுந்தவர் என்றுபொன்
குன்று கொண்டுமுன் முப்பு ரம்தழல் கொள்ள மெல்நகை கோட்டிமான்
கன்று கொண்ட கரத்த னெய்எதிர் காமனைக்குள விழிஅழற்(கு)
அன்(று)அ ளித்தருள் ஆதி நாயகன் அன்பர் பின்(பு)இது கூறுவார்.]

இ — ள்: என்று வன் திறல் இயமதூதர் இயம்பலும் — என்று இவ்விதமாய் மிக்க வலிமையுடைய யமதூதுவர்கள் கூறுதலும், பொன்குன்றுதவர் என்று கொண்டுமுன் முப்புரம் தழல்கொள்ள மெல்நகை கோட்டி — மேருமலையை வில்லாகத்தாங்கி முன்னைக்காலத்தில் திரிபுரங்களையும் அக்கினிகதுவும்படி புன்னகைசெய்து, மான் கன்று கொண்ட கரத்தனெய் — மான்கன்றைத் தாங்கிய திருக்கரத்தையுடையராய், எதிர் காமனை குள விழி அழற்கு அன்று அளித்து அருள் ஆதி நாயகன் அன்பர் — எதிர்த்துவந்த மன்மதனை நெற்றிக்கண்ணிற்றோன்றிய அக்கினிக்கு அந்நாளிலிரையாகக் கொடுத்தருளிய ஆதி தலைவராகிய சிவபிரானது அன்பர்களாய கணநாதர்கள், பின்பு இது கூறுவார் — பின்னரிவ்வசனங்களைக் கூறுவாராயினர் எ — று. (143)

துண்ட வான்மதி கங்கை மாநதி சூடி னேனிசை பாடிமா
வண்ட ரூமலர் முண்ட காசன மறைய வன்பொறை மண்டல
மூண்ட மான்முத லும்பர் மங்குவ ரிம்ப ரென்பதை யுன்னிமு
னெண்ட ராவிட முண்ட ராவணி கண்ட மீதி லிருத்தினேன்.

[துண்ட வான்மதி கங்கை மாநதி சூடினேன்இசை பாடிமா
வண்(டு) அரூமலர் முண்ட காசன மறைய வன்பொறை மண்தலம்
உண்ட மால்முதல் உம்பர் மங்குவர் இம்பர் என்பதை உன்னிமுன்
எண்த ராவிடம் உண்(டு) அராஅணி கண்டம்மீதில் இருத்தினேன்.]

இ — ள்: துண்ட வான்மதி கங்கை மா நதி சூடினேன் — வெள்ளிய பிறைச் சந்திரனையும் பெரிய கங்கைநதியையுந் தரித்தவரும், இசை பாடி மா வண்டு அரு மலர் முண்டகாசன மறையவன் — கீதம்பாடிப் பெரியவண்டுகள் நீங்காத தாமரைமலராசனராகிய பிரமதேவரும், பொறை மண்தலம் உண்ட மால் முதல் உம்பர் — பாரமாகிய பூமியையுண்ட விஷ்ணுமூர்த்தியும் முதலாகிய தேவர்கள், இப்பர் மங்குவர் என்பதை உன்னி — இவ்விடத்து இறந்துபடுவரென்று கருதி, முன் எண் தரா விடம் உண்டு அரா அணி கண்ட மீது இருத்தினேன் — பண்டைக்காலத்து அளவற்ற நஞ்சையுண்டு சர்ப்பங்களையணிந்த திருக்கண்டத்திலே நிறுத்தியவரும் எ — று: (144)

கால னுருயிர் கால வேயொரு காலி னுலுதை செய்துநீ
டோல மேநிக ரந்த காசுர னவனே முத்தலை யயினெடுஞ்
சூல மேகொடு குத்தி மார்பு துளைத்து வாவி லுயர்த்தியோ
லோல மேயென வாவி பாவி யுலக்கு மட்டு முணக்கினேன்.

[காலன் ஆர்உயிர் கால வேஒரு காலினுல் உதைசெய்துநீ(டு)
ஆல மேநிகர் அந்தகாசுரன் அவனே முத்தலை அயில்நெடும்
சூல மேகொடு குத்தி மார்பு துளைத்து வானில் உயர்த்திஓல
ஓலமே என ஆவி பாவி உலக்கு மட்டும் உணக்கினேன்.]

இ — ள்: காலன் ஆர் உயிர் காலவே ஒரு காலினுல் உதைசெய்து — யமனது உயிரிறந்துபடும்படி ஒரு திருப்பாதத்தினுலுதைத்தருளியவரும், நீடு ஆலமே நிகர் அந்தகாசுரன் அவனே — மிக்க நஞ்சையொத்த அந்தகாசுரனே, முத்தலை அயில்நெடும் சூலமே கொடு குத்தி — முக்கவர்பொருந்திய கூரிய நெடிய சூலாயுதத்தாற்குத்தி, மார்பு துளைத்து வானில் உயர்த்தி — மார்பைத்துளைத்து ஆகாயத்தின்கண்ணேயுயரத் தூக்கி, ஓல ஓலம் ஏ என — அபயமபயமென்றலற, பாவி ஆவி உலக்குமட்டும் உணக்கினேன் — அப்பாதகனது உயிர் இறந்துபோகும்வரையும் வருத்தியவரும் எ — று: (145)

திரிக ணைசல மதனே யம்மை திடுக்க மெய்த வெடுத்தவ
னுரிய மாமணி முடிபு னைந்தக மொருப துங்கர மிருபது
நெரிய நாரண னேன மாய்முத னேடு பாத மிரண்டிலோர்
விரியு நாண்மல ரடியி னையக விரல முழ்த்தி மிதித்துளான்.

[திரிக ணைசலம்அதனே அம்மை திடுக்கம் எய்த எடுத்தவன்
உரிய மாமணி முடிபு னைந்தகம் ஒருப துங்கரம் இருபதும்
நெரிய நாரணன் ஏனமாய் முதல் நேடு பாதம் இரண்டிலோர்
விரியும் நாண்மலர் அடியின்நாயக விரல் அழுத்தி மிதித்துளான்;]

இ — ள்: திரிகணைசலம் அதனே அம்மை திடுக்கம் எய்த எடுத்தவன் உரிய — திரிகோணசலத்தை உமாதேவியார் திடுக்கிடும்படி தூக்கிய இராவணனது, மாமணி முடிபுனைந்தகம் ஒருபதும் கரம் இருபதும் நெரிய — பெரிய இரத்தினகிரீடங்களணிந்த பத்துச் சிரசுகளும் இருபது கைகளும் நெரியும்படி, நாரணன் ஏனமாய் முதல்நேடு பாதம் இரண்டில் — மகாவிஷ்ணுமூர்த்தி பன்றிவடிவங்கொண்டு முன்னேநாளில் தேடிச்சென்ற இரண்டு திருவடிகளுள், விரியும்நாள் மலர் ஓர் அடியின் நாயகவிரல் அழுத்தி மிதித்துளான் — விரிந்த புதிய தாமரைமலரை நிகர்த்த ஒருபாதத்தின் பெருவிரலாலூன்றி மிதித்தருளியவரும் எ — று: (146)

உறுதி வானவர் மான வர்க்கிடை யூடு ருமல் விலக்கவுஞ்
சிறுமை தீர்தர முத்தி புத்திகள் செய்த வர்க்கருள் செய்யவு
மறு விலாமதி போல வால மருப்பு நெற்றியி னுங்கணும்
பெறும தாசல வதன னையொரு பிள்ளை பெட்பொடு பெற்றுளோன்.

[உறுதி வானவர் மானவர்க்(கு)இடை ஊ(டு) உருமல் விலக்கவும்
சிறுமை தீர்தர முத்தி புத்திகள் செய்(து)அ வர்க்(கு)அருள் செய்யவும்
மறு இலாமதி போல வால மருப்பும் நெற்றியினும் கணும்
பெறும்மத அசல வதன னய்ஒரு பிள்ளை பெட்பொடு பெற்றுளோன்.]

இ — ள் : உறுதி வானவர் மானவர்க்கு இடையூடு உருமல் விலக்கவும்— நிலையுள்ள தேவர்களுக்கும் மனுடர்களுக்கும் துன்பம் வராது தடுத்தற்கும், அவர்க்கு சிறுமை தீர்தர முத்தி புத்திகள் செய்து அருள்செய்யவும் — அவர்களின் சிறுமைகள் நீங்கும்படி மோட்சசுகத்தையும் போகவின்பங்களையுங் கொடுத்து அனுக்கிரகஞ்செய்யவும், மறு இலா மதிபோல வாலமருப்பும் நெற்றியின் கணும்பெறும் — களங்கமற்ற சந்திரனைப்போல வெண்மையான கொம்பையும் திருநெற்றியிற் கண்ணையும்பெற்ற, மத அசல வதனனய் — மதம்பாய்கின்ற யானைமுகத்தையுடையராய், ஒரு பிள்ளை பெட்பொடு பெற்றுளோன் — ஒரு புத்திரராகிய விநாயகக் கடவுளை அன்போடு பெற்றருளியவரும் எ — று.

நெற்றியினும் என்றதில் உம்மை அசைநிலை. கண்ணும் கணுமெனத் தொக்கது. (147)

நாலு மாமறை யோது நான்முக னரி நாசி நறுக்கிவந்
தாலு நீடிரை யத்தி யுற்றெழு மர்க்கர் பற்க டகர்த்துநற்
சாலு மாமதி விட்டி கற்புரி தக்க னைத்தலை வெட்டிமுற்
கோலும் வேள்வி யழித்தி யென்றொரு கோர வீரனை நல்கினேன்.

[நாலு மாமறை ஓது நான்முகன் நாரி நாசி நறுக்கிவந்(து)
ஆலும் நீள்திரை அத்திஉற்(று) எழும் அர்க்கர் பற்கள் தகர்த்துநல்
சாலும் மாமதி விட்(டு) இகல்புரி தக்கனைத்தலை வெட்டிமுன்
கோலும் வேள்வி அழித்தி என்(று) ஒரு கோர வீரனை நல்கினேன்;]

இ — ள் : நாலுமா மறை ஓது நான்முகன் நாரி நாசி நறுக்கி — நான்கு வேதங்களையுமோதிய பிரமதேவரது தேவியாகிய சரசுவதியினது மூக்கையரிந்து, வந்து ஆலும் நீள் திரை அத்தி உற்று எழும் அர்க்கர் பற்கள் தகர்த்து — கிளப்பி ஒலிக்கின்ற நீண்ட திரைகளையுடைய சமுத்திரத்தில் வந்து தோன்றுகின்ற ஆதித்தர்களது பற்களைச் சிதைத்து, நல் சாலும் மாமதிவிட்டு இகல்புரி தக்கனை தலைவெட்டி — நன்மைமிக்க சிறந்த புத்தியை விடுத்துப் பகைபுரிந்த தக்கனது சிரசையறுத்து, முன் கோலும் வேள்வி அழித்தி என்று — அவன் முன்னரே செய்யும்படி தொடங்கிய யாகத்தை அழிக்கக்கடவையென்று, ஒரு கோர வீரனை நல்கினேன் — ஒப்பற்ற உக்கிரகுணத்தையுடைய வீரபத்திரரைப் பெற்றருளியவரும் எ — று. (148)

கொடிய தாரக னெயி ரந்தலை கொண்ட சிங்க முகன்கடற்
படியின் மிக்குயர் சூர நீதிசெய் பற்ப ரனைவர் குலமெலாம் [தற்
வடிகொள் வேல்கொடு கொன்று பொன்றிகழ் வானநாடு புரப்ப
கடியர் தீவினை யறவ ருட்டரு மறுமு கத்தனை யருளினேன்.

[கொடிய தாரகன் ஆயிரத்தலை கொண்ட சிங்க முகன்கடல்
படியில் மிக்(கு)உயர்சூர்அ நீதிசெய் பல்பல்தானவர் குலம்எலாம்
வடிகொள் வேல்கொடு கொன்று பொன்திகழ் வானநாடு புரப்பதற்(கு)
அடியர் தீவினை அறஅருள்தரும் அறுமுகத்தனை அருளினேன்.]

இ — ள்: கொடிய தாரகன் — கொடியவனாகிய தாரகாசுரனையும், ஆயிரம் தலை கொண்ட சிங்கமுகன் — ஆயிரஞ்சிரசுகளையுடைய சிங்கமுகாசுரனையும், கடல் படியில் மிக்கு உயர்சூர் — கடலாற்சூழப்பட்ட பூமியிலே மிகவு முயர்ந்தசூரபன்மனையும், அநீதி செய் பல் பல் தானவர் குலம் எலாம் — நீதியற்றவைகளைச் செய்த பலவாகிய அசுரர்குலம் முழுவதையும், வடி கொள் வேல்கொடு கொன்று — கூரிய வேலாயுதத்தாலழிவுசெய்து, பொன் திகழ் வான நாடு புரப்பதற்கு — பொன்மயமாய் விளங்குகின்ற தேவருலகத்தைக் காக்கும்படியும், அடியர் தீவினை அற அருள் தரும் அறுமுகத்தனை அருளினேன் — அடியார்களது தியவினைப்பகுதிகளெல்லாம் அழியும் படியும் அனுக்கிரகிக்கின்ற ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியக்கடவுளைப்பெற்றருளியவருமாகிய பரமபதியானவர் எ — று. (149)

ஏவ யாமிவ ணெய்து கின்றன மிங்கி வன்றனை விட்டுநீர்
போவ தேகட னென்று நின்றுள பொறுமை யோடிவை புகலவும்
பாவ சாகர மான மானமில் பனவ னைப்பல நரகின்வாய்
மேவ வேவிட லன்றி மீள விடோமெ னவலி பேசினர்.

[ஏவ யாம்இவண் எய்துகின்றனம் இங்(கு)இவன்தனை விட்டுநீர்
போவ தேகடன் என்று நின்(று)உள பொறுமையோ(டு) இவை புகலவும்
பாவ சாகரமான மானம்இல் பனவனைப்பல நரகின்வாய்
மேவ வேவிட லன்றி மீளவிடோம்என வலி பேசினர்.]

இ — ள்: ஏவ யாம் இவண் எய்துகின்றனம்—விடைகொடுத்தனுப்பயாங்களிங்குவருகின்றோம், இங்கு இவன் தனை விட்டு நீர் போவதே கடன் என்று — இச்சுகுமாரனை விடுத்து நீங்கள் செல்லுதலே முறையென்று, உள பொறுமையோடு நின்று இவை புகலவும் — மனப்பொறுமையுடன் நின்று இவைகளைக்

கூறவும், பாவசாகரமான மானம் இல் பனவனே — பாவசமுத்திரமாகவிருக்கின்ற தகுதியில்லாத இப்பார்ப்பானே, பல நரகின் வாய் மேவவே விடல் அன்றி — பல நரகங்களிற் செல்லும்படி செலுத்துவதேயன்றி, மீள விடோம் எனு வலிபேசினர் — மீண்டு வரும்படி விடோமென்று தமது வன்மையைப் புகன்றனர் எ — று. (150)

மட்ட றப்புரி புன்ரொழிற் சுகு மார னுரவ ரைப்புயக்
கட்ட றுத்தன ருட்க றுத்தனர் கட்க னற்பொறி சுக்கவாய்
விட்ட ழைத்திதழ் பற்க டித்து விடுத்து நேமி யெடுத்துவே
ரொட்டி லக்கமில் வாளி மாமழை தூவினர்சிவ தொண்டரே.

[மட்(டு) அறப்புரி புன்தொழில் சுகுமாரன் ஆரவரைப்புயக்
கட்(டு) அறுத்தனர் உள்க றுத்தனர் கண்கனற்பொறி சுக்கவாய்
விட்(டு) அழைத்(து) இதழ் பல்கடித்து விடுத்துநேமி எடுத்துவேல்
தொட்(டு) இலக்கமில் வாளி மாமழை தூவினர்சிவ தொண்டரே.]

இ — ள்: சிவதொண்டர் — அச்சிவகணங்கள், புன் தொழில் மட்டு அறபுரி சுகுமாரன் ஆர வரை புய கட்டு அறுத்தனர் — எளிய தொழில்களே அனவில்லாமற் செய்த சுகுமாரனது மலைபோன்ற புயத்திலுள்ள கட்டுகளையறுத்து, உள்கறுத்தனர் — கோபங்கொண்டு, கண் கனல் பொறி சுக்க வாய் விட்டு அழைத்து இதழ் பல் கடித்து — கண்களினின்றும் அக்கினிப் பொறிகள் சிந்த வாயினலுரத்து அழைத்து அதரங்களைப் பற்களினற் கடித்து, நேமி எடுத்து விடுத்து — சக்கராயுதத்தையெடுத்துச் செலுத்தி, வேல்தொட்டு — வேற் படையையுமேவி, இலக்கம் இல் வாளி மாமழை தூவினர் — அளவிடற்கரிய அம்புகளை மழைபோலச் செலுத்தினர் எ — று.

ஏ அசை. (151)

கரமு றிந்தனர் வார்க ழற்புனை காறுணிந்தனர் கவுளுடன்
சிரமு டைந்தனர் சூலவேல்கதை திகிரி கால்வனை சிலைநெடுஞ்
சரமி ழந்தனர் குடர்ச ரிந்தனர் சவிகு றைந்தனர் தமதுவெந்
நுரநெ ரிந்தனர் தென்பு லத்திடை யோடினுர்யம தூதரே.

[கரம்மு றிந்தனர் வார்க ழல்புனை கால்துணிந்தனர் கவுளுடன்
சிரம்உ டைந்தனர் சூலவேல் கதை திகிரிகால் வனை சிலைநெடுஞ்
சரம்இ ழந்தனர் குடர்சரிந்தனர் சவிகுறைந்தனர் தமதுவெந்
உரம்நெ ரிந்தனர் தென்புலத்திடை ஓடினுர் யமதூதரே.]

இ — ள்: யமதூதர் — யமதூதுவர்கள், கரம் முறிந்தனர் — கைகள் முரிந்தும், வார் கழல் புனை கால் துணிந்தனர் — நீண்ட வீரக்கழலணிந்த கால்கள் வெட்டுண்டும், கவுளுடன் சிரம் உடைந்தனர் — கபோலங்களுந் சிரசுகளும்

உடைந்தும், சூலம் வேல் கதை திகிரி கால் வாள் சிலை நெடும் சரம் இழந்தனர் — சூலம் வேல் தண்டு சக்கரம் காலுறவளைக்கப்பட்ட வில்லு நெடிய அம்புகளாகிய இவற்றையிழந்தும், குடர் சரிந்தனர் — குடர்கள் சரிந்தும், சலிகுறைந்தனர் — வலிமையழிந்தும், தமது வெந் உரம் நெரிந்தனர் — தங்கள் முதுகுகளும் மார்புகளும் நெரியப்பெற்றும், தென் புலத்திடை ஓடினர் — யமபுரத்துக்கு ஓடிச்சென்றனர் எ — று.

ஏ அசை. (152)

வேறு

படிபுகழ்விஞ் சையர்நரப்புக் கருவிதட விச்சுருதிப் பண்கள்பாட
விடியொலியின் மிகவதிரு மந்தரதுந் துபிமுழங்க விரண்டு பாலுங்
கொடிகுடைகள் பலநிலவக் குலவியநற் கற்பகப்பொற் கோட்டிற் பூத்த
கடிகமழ்பூ மழைபொழியக் கற்றைமணித் திரணெடுங்காற் கவரிவீச.

[படிபுகழ்விஞ் சையர் நரப்புக் கருவிதட விச்சுருதிப் பண்கள் பாட
இடிஒலியின் மிகஅதிரும் அந்தரதுந் துபிமுழங்க இரண்டு பாலும்
கொடிகுடைகள் பலநிலவக் குலவியநல் கற்பகப்பொன் கோட்டிற் பூத்த
கடிகமழ்பூ மழைபொழியக் கற்றைமணித் திரள்நெடும்கால் கவரி வீச.]

இ — ள்: படி புகழ் விஞ்சையர் நரப்பு கருவி தடவி சுருதி பண்கள் பாட— பூமியில்வியந்துரைக்கப்படுகின்றவித்தியாதரர்கள் தமது நரம்புகள் தொடுக்கப் பட்ட இசைக்கருவிகளைக் கையினுற்றடவி வேதகீதப்பண்களைப்பாடவும், இடி ஒலியின் மிக அதிரும் அந்தர துந்துபி முழங்க — இடியினது சத்தம் போல மிகவுமாரவாரிக்கின்ற தேவதுந்துபிவாத்தியமொலிக்கவும், இரண்டு பாலும் கொடி குடைகள் பல நிலவ — இரண்டு பக்கத்திலும் பல கொடிகளும் குடைகளும் பிரகாசிக்கவும், குலவிய நல் கற்பக பொன்கோட்டில் பூத்த கடி கமழ் பூ மழை பொழிய — விளங்குகின்ற நல்ல கற்பக விருட்சத்தினது பொன்மயமான கொம்பரிற்பூத்த பரிமளமிகுந்த பூக்களை மழைபோலச் சொரியவும், கற்றை மணி திரள் நெடும் கால் கவரி வீச — கூட்டமாகிய இரத்தினங்கள் பதித்துத் திரண்டு நீண்ட கால்களையுடைய சாமரங்கள் வீசவும் எ — று. (153)

நகுமார நகைக்கருங்க ணரம்பையர்பல் லாண்டிசைப்ப நவையிற்றீர்ந்த
சுகுமாரன் றனைக்கவின்செய் மானமிசைக் கொண்டணைந்தார் சுரர்கள்போற்றத்
தகுமார னுடலடலை படவிழித்த தனிநுதற்கட் டலைவன் வைகு
மிகுமாரத் திரள்சாயத் தள்ளியரு விப்புனல்பாய் வெள்ளி வெற்பில்.

[நகும்ஆர நகைக் கருங்கண் அரம்பையர்பல் லாண்(டு)இசைப்ப நவையில் தீர்ந்த
சுகுமாரன் தனைக்கவின்செய் மானமிசைக் கொண்டணைந்தார் சுரர்கள் போற்றத்
தகுமாரன் உடல்அடலை படவிழித்த தனிநுதற்கண் தலைவன் வைகும்
மிகும்ஆரத் திரள்சாயத் தள்ளிஅரு விப்புனல்பாய் வெள்ளி வெற்பில்.]

இ — ள் : நகும் ஆர நகை கரும் கண் அரம்பையர் பல்லாண்டு இசைப்ப— ஒளிருகின்ற முத்தன்ன பற்களையும் கரியகண்களையுமுடைய தேவப்பெண்கள் பல்லாண்டு கூறவும், நவையில் தீர்ந்த சுகுமாரன் தனை — குற்றத்தினின்றும் நீங்கிய சுகுமாரனை, கவின் செய் மானம் மிசை கொண்டு — அழகமைந்த விமானத்தின்மேலேற்றிக்கொண்டு, தகு மாரன் உடல் அடலை படவிழித்த தனி நுதல் கண் தலைவன் வைகும் — தகுதியான மன்மதனது சரீரம் சாம்ப ராகும்படி திருநோக்கஞ் செய்தருளிய ஒப்பற்ற நெற்றிக்கண்ணையுடைய சிவ பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, மிகும் ஆரதிரள் சாய தள்ளி அருவி புலன் பாய் வெள்ளி வெற்பில் — மிக்க சந்தனவிருக்ஷங்களைக்கூட்டமாய்ச் சரித்துத்தள்ளி அருவிநீர்பாய்கின்ற வெள்ளியங்கிரியில், சுரர்கள் போற்ற அணைந்தார் — தேவர்கள் துதிக்கப் போனார்கள் எ — று. (154)

பொங்குகதிர் விமானத்தி னின்றிழிந்து நந்திவிடப் புகுந்து பொற்பார் மங்குறவழ் வரையரசன் மடப்பாவை யிடப்பாக மருவத் தான வெங்கரிக்கூற் றேந்தணையின் வீற்றிருக்கும் விமலனை வெண்டிரைகள் வீசுங் கங்கைநதி முடித்தசடைக் கண்ணுதலைக் கண்குளிரக் கண்ணுற்றானே.

[பொங்குகதிர் விமானத்தின் நின்(று)இழிந்து நந்திவிடப் புகுந்து பொற்(பு)ஆர் மங்குல்தவழ் வரைஅரசன் மடப்பாவை இடப்பாகம் மருவத் தான வெங்கரிக்கூற்(று) ஏந்(து)அணையில் வீற்றிருக்கும் விமலனைவெண் திரைகள்வீசும் கங்கைநதி முடித்தசடைக் கண்ணுதலைக் கண்குளிரக் கண்ணுற்றான்(ஏ).]

இ — ள் : பொங்கு கதிர் விமானத்தின் நின்று இழிந்து — பொலிந்த கிரணங்களையுடைய தெய்வவிமானத்தினின்றிறங்கி, நந்தி விட புகுந்து — நந்திதேவர்வழிவிட உட்பிரவேசித்து, பொற்பு ஆர் மங்குல் தவழ் வரையரசன் மடபாவை இடபாகம் மருவ — அழகு நிறைந்த மேகங்கள் படிகின்ற மலை யரசன் பெற்ற உமாதேவியார் வாமபாகத்தமர, தான வெம் கரி கூற்று ஏந்து அணையில் வீற்றிருக்கும் விமலனை — மதம்பாய்கின்ற வெவ்விய யானைகளுக்குப் பகையாயுள்ள சிங்கங்களினாலே தாங்கப்படுகின்ற ஆசனத்தின்மீது வீற்றிருந் தருளும் மலரகிதரும், வெண் திரைகள் வீசும் கங்கை நதிமுடித்தசடை கண்ணு தலை—வெள்ளிய திரைகளையெறிகின்ற கங்காநதியைத்தரித்தசடையையுடைய நெற்றிக்கண்ணருமாகிய சிவபெருமானை, கண்குளிர கண்ணுற்றான் — கண்கள் (மகிழ்வினாற்) குளிரடையும்படி தரிசித்தான் (அச்சுகுமாரன்) எ — று.

ஏ அசை. (155)

கறைசெறியுங் கருந்தாதைச் செந்தாதிற் புரிந்ததன்மை கடுப்ப நீதி பொறையறிவொன் றில்லேனை நல்லறிஞ ருடன்கூட்டிப் புரந்தாய்போற்றி யிறைவபரம் பரவெனவீழ்ந் திறைஞ்சுதலு மெமதுருப்பெற் றிருத்தியிங்ன னறைதருநற் கணங்களுட னெனத்திருவாய் மலர்ந்தமல னருளிச் செய்தான்.

[கறைசெறியும் கருந்தாதைச் செம்தாதில் புரிந்ததன்மை கடுப்ப நீதி பொறை அறி(வு)ஒன்(று) இல்லேனே நல்லறிஞர் உடன்கூட்டிப் புரந்தாய்போற்றி இறைவபரம் பரனெனவீழ்ந்(து) இறைஞ்சுதலும் எம(து)உருப்பெற்(று) இருத்திஇங்ஙன் அறைதருநற் கணங்களுடன் எனத்திருவாய்மலர்ந்(து)அமலன் அருளிச்செய்தான்.]

இ — ள்: கறை செறியும் கரும் தாதை செம் தாதில் புரிந்த தன்மை கடுப்ப — கறைபொருந்திய காரிரும்பைச் செம்பொன்னுகமாற்றினைப்போல. நீதி பொறை அறிவு ஒன்று இல்லேனே — நீதி பொறுமை நல்லறிவு என்பவற்றி லொன்றுமில்லாத எளியேனே, நல்ல அறிஞர் உடன் கூட்டி புரந்தாய் — நல்ல ஞானத்தையுடைய மேலோர்களுடன் சேர்த்துக் காத்தருளியவரே, இறைவ பரம்பர போற்றி என வீழ்ந்து இறைஞ்சுதலும் — தலைவரே மூன்னைவரே நமஸ்காரம் என்றுபலதுதிகளைக்கூறிவீழ்ந்துவணங்க, அமலன் — சிவபெருமான், எமது உருபெற்று அறைதரு நல் கணங்களுடன் இங்ஙன் இருத்தி என திருவாய் மலர்ந்து அருளி செய்தான் — எமது சாரூபத்தையடைந்து கூறப்படுகின்ற நல்ல கணத்தவர்களோடு இவ்விடத்திலேவசிக்கக்கடவையென்று திருவாய் மலர்ந்தருளினார் எ — று.

(156)

அக்கணத்திற் சுகுமார னரனுருப்பெற் றாண்டிருந்தா னமரிற்றோற்றுத்
தெக்கணத்திற் சென்றடைந்த தூதர்சமன் றனைத்தொழுது திரைநீ ருண்ட
மைக்கணத்தி னசனியென வந்தெம்மையடித்தறிவின் மறையோன் றன்னைப்
பொக்கணத்திற் பலியிரப்பான் கணங்கள்கயி லேயிற்கொண்டு போனா ரென்றார்;

[அக்கணத்தில் சுகுமாரன் அரன் உருப்பெற்(று) ஆண்(டு)இருந்தான் அமரில் தோற்றுத் தெக்கணத்தில் சென்றடைந்த தூதர்சமன் தனைத்தொழுது திரைநீர் உண்ட மைக்கணத்தின் அசனியென வந்(து)எம்மை அடித்(து) அறி(வு)இல்மறையோன் தன்னைப் பொக்கணத்தின் பலிஇரப்பான் கணங்கள்கயி லேயிற்கொண்டு போனர் என்றார்.]

இ — ள்: அக்கணத்தில் சுகுமாரன் அரன் உரு பெற்று ஆண்டு இருந் தான் — அப்பொழுது சுகுமாரன் சிவபெருமானது சாரூபத்தையடைந்து ஆங்குவசித்தான், அமரில் தோற்று தெக்கணத்தில் சென்று அடைந்த தூதர் - யுத்தத்திற்றோல்வியடைந்து யமபுரத்தைச்சேர்ந்ததூதுவர்கள், சமன் தனை தொழுது — யமனை வணங்கி, பொக்கணத்தில் பலி இரப்பான் கணங்கள் — பாத்திரங்கள் கொண்டு (தாருகவனத்திற்) பலியிரந்தவராகிய சிவபெருமா னது கணத்தவர்கள், திரை நீர் உண்ட மை கணத்தின் அசனி என வந்து — திரைபொருந்திய சுடல்நீரைப்பருகிய மேகக்கூட்டங்களினின்றும் வருகின்ற இடியைப்போல ஆரவாரித்து வந்து, எம்மை அடித்து — எங்களையடித்து, அறிவு இல் மறையோன் தன்னை — அறிவற்ற சுகுமாரனை, கயிலையில் கொண்டு போனர் என்றார் — கயிலாயகிரிக்குக்கொண்டுபோயினர் என்று கூறினர்கள், எ — று.

(157)

கேட்டவுட னிருவிழியுங் கனற்பொறிகான் றிடச்சினமீக் கிளரச்செய்ய
வாட்டடக்கை புடைத்துநன்றெம் மதிகார மெனப்புகன்று வரைகள் போலுந்
தோட்டடங்கள் குலுங்கநக்குச் சித்திரகுத் தனைநோக்கிச் சுகுமா ரன்பா
லீட்டருநற் புண்ணியங்க ளுண்டுகொலீ தெரிந்துவிரைந் தியம்பென் றனஞல்.

[கேட்டவுடன் இருவிழியும் கனற்பொறிகான் றிடச்சினம்மீக் கிளரச் செய்ய
வாள்தடக்கை புடைத்துநன்(று) எம் அதிகாரம் எனப்புகன்று வரைகள் போலுந்
தோள்தடங்கள் குலுங்கநக்குச் சித்திரகுத் தனைநோக்கிச் சுகுமா ரன்பால்
ஈட்டரும்நற் புண்ணியங்கள் உண்டுகொல்லீ தெரிந்துவிரைந்(து) இயம்(பு)என் றனஞல்.]

இ — ள்: கேட்டவுடன் — அதனைக்கேட்டமாத்திரத்தில், இரு விழியும் கனல் பொறி கான்றிட — இரண்டுகண்களினின்றுமக்கினிப்பொறிகள் சிதற, சினம் மீ கிளர — கோபம்அதிகரித்து, செய்ய வாள் தடக்கை புடைத்து — சிறந்தவாட்படையைத்தாங்கிய கைகளையொன்றோடொன்றுமோதி, எம் அதிகாரம் நன்று என புகன்று — எமது அதிகாரம் நன்றுயிருக்கின்றதென்றுகூறி, வரைகள் போலும் தடம் தோள்கள் குலுங்க நக்கு — மலைகளுக்குச்சமானமாகிய விசாலித்தபுயங்கள் குலுங்கும்படி சிரித்து, சித்திரகுத்தனைநோக்கி— சித்திரகுத்தனென்னுங் கணக்கனைப்பார்த்து, சுகுமாரன் பால் — சுகுமாரனிடத்து, ஈட்டரும் நல் புண்ணியங்கள் உண்டு கொல் நீ தெரிந்து விரைந்து இயம்பு என்றான் — சம்பாதித்தற்கரிய நல்ல புண்ணியச் செயல்களுண்டோ அதனை நீயாராய்ந்து விரைவிற் சொல்லுவாயென்றான் எ — று.

ஆல் அசை. (158)

மற்றவனுந் தேர்ந்துசுகு மாரனெனுங் கோரமிகு மறையோன் றீமை
முற்றுமியற் றித்திரிந்தான் சென்மமுத லின்றுடல முடியுங் காறு
நற்றவம்புண் ணியமொழுக்க மிறையளவு மில்லெனப்பின் னமனு நெஞ்சிற்
செற்றமுட னெழுந்துநதிச் சென்னியான் முன்னியான் செல்வ னென்றே.

[மற்(று)அவனும் தேர்ந்துசுகு மாரன்எனும் கோரம்மிகும் மறையோன் தீமை
முற்றும் இயற்றித்திரிந்தான் சென்மம்முதல் இன்றுடலம் முடியும் காறும்
நற்றவம்புண் ணியம்ஒழுக்கம் இறைஅளவும் இல்லெனப்பின் நமனும்நெஞ்சில்
செற்றம்உடன் எழுந்துநதிச் சென்னியான் முன்யான் செல்வன் என்றே.]

இ — ள்: அவனும் தேர்ந்து — அச்சித்திரகுத்தனுமாராய்ந்து, சுகுமாரன் எனும் கோரம் மிகும் மறையோன் தீமை முற்றும் இயற்றி திரிந்தான் — சுகுமாரனென்னும் கொடுமைமிகுந்த பார்ப்பான் பாவங்களெல்லாவற்றையுஞ் செய்து திரிந்தான், சென்மம் முதல் இன்று உடலம் முடியும் காறும் நல் தவம் புண்ணியம் ஒழுக்கம் இறை அளவும் இல்லை — சனனந்தொட்டு உடலிறக்கு

மிற்றைநாள்வரையும் நன்மைபொருந்திய தவமும் புண்ணியச் செயல்களும் தல்லொழுக்கமும் இறையளவாயினும் செய்ததில்லையென்றுகூற, பின் நமனும் நெஞ்சில் செற்றம் உடன் எழுந்து — அதன் மேல்யமனும் மனக்கோபத்தோ டெழுந்து, நதி சென்னியான் முன் யான் செல்வன் என்று — கங்காநதியைத் திருமுடியிற்றரித்தசிவபெருமான்முன்னர் யான் செல்லக்கடவேனென்று எ—று.

மற்று ஏ அசைகள்.

(159)

நிழலுமிழுஞ் சனக்கிரியி னீலமுகி லிருந்ததனே நிகர்ப்ப நீண்ட
சுழறருநாக் கண்டைகண்டத் தசைந்தடிபேர்த் திடுந்தோறுந் தொனிக்கவந்த
வழலுமிழ்கட் பெரும்பகட்டின் மிசையேறிக் குறையிறைவற் கறைவான் செம்பொற்
கழலணிசித் திரகுத்தனுடன்றூதர் சூழ்வரத்திண் கயிலையெய்தி.

[நிழல் உமிழ் அஞ் சனக்கிரியின் நீலமுகில் இருந்ததனே
நிகர்ப்ப நீண்ட
சுழல்தரு நாக் கண்டை கண்டத்(து) அசைந்(து)
அடிபேர்த்(து) இடும்தோறும் தொனிக்க வந்த
அழல் உமிழ் கண் பெரும்பகட்டின் மிசை ஏறிக் குறை இறைவற்(கு)
அறைவான் செம்பொன்
கழல் அணிசித் திரகுத்தன் உடன் தூதர் சூழ்வரத்திண்
கயிலை எய்தி.]

இ — ள்: நிழல் உமிழ் அஞ்சனக்கிரியில் நீல முகில் இருந்ததனே நிகர்ப்ப — நிழலேச்செய்கின்ற கரிய மலையின்மேல் நீலநிறமாகிய மேகம்வந்து படிந்தாற் போல, நீண்ட சுழல் தரு நா கண்டைகண்டத்து அசைந்து அடி பேர்த்திடும் தோறும் தொனிக்க — நீண்டு சுழலுகின்ற நாக்கைக்கொண்ட கண்டாமணி யானது கழுத்திற்கிடந்து அடிபெயர்க்கும்பொழுதெல்லாம் அசைந்து சத் திக்க, வந்த அழல் உமிழ் கண் பெரும் பகட்டின் மிசை ஏறி — தன்முன்பாக வந்த அக்கினியைக்காலுங் கண்களையுடைய பெரிய எருமைக்கடாவின் மேலி வர்ந்து, இறைவற்குக் குறை அறைவான் — சிவபெருமானுக்குத்தன்குறையை முறையிடும்பொருட்டு, செம் பொன் கழல் அணி சித்திரகுத்தனுடன் — செம் பொன்னாலாகிய வீரக்கழலணிந்த சித்திரகுத்தனோடு, தூதர் சூழ் வர திண் கயிலை எய்தி — தூதுவர்கள் பக்கத்தே சுற்றிவரத் திண்ணியகயிலாயகிரி யை யடைந்து எ — று.

(160)

அண்ணலுவ ணப்பாக னடலயிரா வதப்பாக னன்னப் பாகண்
பண்ணமர்யாழ்க் கந்தருவர் விஞ்சையர்வா னவர்முனிவர் பலரும் போற்ற
வொண்ணறுமா மலர்க்கரத்திற் பிரம்புபற்றிச் சுற்றிநந்தி புலவ வந்தி
வண்ணலுறை பேரவைக்கட் புகுந்தெதுக்தி யொல்லின்று வழுத்தல் செய்வான்.

[அண்ணல்உவ ணப்பாகன் அடல்அயிரா வதப்பாகள் அன்னப்பாகன்
பண்அமர்யாழ்க் கந்தருவர் விஞ்சயர்வா னவர்முனிவர் பலரும் போற்ற
ஒள்நறுமா மலர்க்கரத்தில் பிரம்புபற்றிச் சுற்றிநந்தி உலவ அந்தி
வண்ணன்உறை பேரவைக்கண் புகுந்(து) ஒதுங்கி ஒல்கிநின்று வழுத்தசெல்வான் .]

இ — ள் : அண்ணல் உவணப்பாகன் — தலைமைபொருந்திய கருடவாகனராகிய விஷ்ணுமூர்த்தியும், அடல் அயிராவத பாகன் — வலிமைபொருந்திய அயிராவதயானையின்மேலேறிவருகின்ற இந்திரனும், அன்னப்பாகன் — அன்னவாகனராகிய பிரமதேவரும், பண்ணமர் யாழ் கந்தருவர் — பண்ணமைந்த யாழையிசைக்கின்ற கந்தருவர்களும், விஞ்சையர் வானவர் முனிவர் பலரும் போற்ற — வித்தியாதரர்களும் தேவர்களும் முனிவர்களுமாகிய பலரும் தோத்திரிக்க, நந்தி ஒள் நறு மா மலர் கரத்தில் பிரம்பு பற்றி சுற்றி உலவ — நந்திதேவர் ஒளிபொருந்தியநறு மணம் வீசுகின்ற மகத்தாகிய மலர் போன்ற திருக்கரத்திலே பிரம்பைத் தாங்கிச் சுற்றி உலாவ, அந்தி வண்ணன் உறை பேர் அவைக்கட் புகுந்து — செக்கர்வானத்தையொத்த திருமேனியையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பெரியசபையையடைந்து, ஒதுங்கி ஒல்கி நின்று வழுத்தல் செய்வான் — ஓர்பக்கத்தில் ஒதுங்கி ஒடுக்கமாய் நின்று தோத்திரஞ்செய்வானுயினன் எ — று. (161)

ஆதிநடு வீறிலியா யாணுடன்பெண் ணலியலனு யவையுமாகிச்
சோதிபெறு மருவுருவாய்த் தோற்றுசரா சரமனைத்துந் தோய்ந்துந்தோயாப்
பாதிமதி நுதற்பேதை பாகனுமா யேகனுமாய்ப் பகர்தற் கெட்டாப்
பூதிபுனை திருமேனிப் புனிதநின்று மரைத்தாள்கள் போற்றி போற்றி.

[ஆதிநடு ஈ(று)இலியாய் ஆணுடன்பெண் அலிஅலனுய் அவையும் ஆகிச்
சோதிபெறும் அருஉருஆய்த் தோற்று சரா சரம் அனைத்தும் தோய்ந்தும் தோயாப்
பாதிமதி நுதற்பேதை பாகனுமாய் ஏகனுமாய்ப் பகர்தற்(கு) எட்டாப்
பூதிபுனை திருமேனிப் புனிதநின் தாமரைத் தாள்கள் போற்றிபோற்றி.]

இ — ள் : ஆதி நடு ஈறு இலியாய் — ஆதிமத்தியாந்தரகிதராயும், ஆண் உடன் பெண் அலி அலனுய் — ஆண்பெண் அலியென்னும் பேதமில்லாதவராயும், அவையுமாகி — அப்பேதங்களுடையராயும், சோதி பெறும் அரு உரு ஆய் — பிரகாசம் பொருந்திய அரூபியாயும் ரூபியாயும், தோற்று சராசரம் அனைத்தும் தோய்ந்தும் — உண்டாகிய இயங்கியற்பொருள்கள் நிலையியற் பொருள்களெல்லாவற்றினுங்கலந்தும், தோயா — அவற்றோடு கலப்பின்றியிருக்கின்ற, பாதி மதி நுதற் பேதை பாகனுமாய் — பிறைச்சந்திரனையொத்த நெற்றியையுடைய உமாதேவியாரோடுகூடிய போகியாகியும், ஏகனுமாய் — அவ்வுமையோடுகலவாது தனித்த யோகியாயும், பகர்தற்கு எட்டா பூதி புனை திருமேனி புனித — சொல்லுதற்கடங்காத விபூதிதரித்து விளங்குகின்ற திருமேனியையுடைய பரிசுத்தரே, நின் தாமரை தாள்கள் போற்றி போற்றி — உமது தாமரை மலர்போன்ற திருப்பாதங்களுக்கு நமஸ்காரம் நமஸ்காரம் எ — று. (162)

இத்தலேயா ரமுதமெழ வேண்டுமெனப் பாப்புவட மியாப்புற் ரேங்கன்
மத்தலேயா வமரர்கடைந் திடவடவை கருநிறமாய் வந்த தென்னைக்
கத்தலேவா ரிதியுதிக்குங் கடுவொடுக்கு மணிமிடற்ரூய் கருதா ரூன்உண்
முத்தலேவேற் கரநாலு மறைபுகழு மைந்துமுக முதல்வா போற்றி.

[இத்தலேஆர் அமுதம்எழ வேண்டும்எனப் பாப்புவடம் யாப்புற்(று) ஓங்கல்
மத்(து) அலேயா அமரர்கடைந் திடவடவை கருநிறமாய் வந்த(து) என்னைக்
கத்(து) அலேவாரிதி உதிக்கும் கடுஓடுக்கு மணிமிடற்றுய் கருதார் ஊன்உண்
முத்தலேவேற் கரநாலு மறைபுகழும் ஐந்துமுக முதல்வா போற்றி.]

இ — ள்: இத்தலேஆர் அமுதம் எழ வேண்டும் என — இல்விடத்தேநிறை வாகிய அமுதந்தோன்றவேண்டுமென்று, பாப்பு வடம் யாப்புற்று — வாசுகி யாகிய பாம்பைக்கயிருகமாட்டி, ஓங்கல் மத்து அலேயா அமரர் கடைந்திட — மந்தரமாகிய மலேயை மத்தாகச்சுழற்றித் தேவர்கள் கடைந்த பொழுது, வடவை கருநிறமாய் வந்தது என்ன — (உள்ளிருந்த) வடவாமுகாக்கினி கரு நிறங்கொண்டு வெளியே வந்தாற்போல, கத்துஅலேவாரிதி உதிக்கும் கடு ஓடுக்கு மணி மிடற்றுய் — ஒலிக்கின்ற திரைகளேக்கொண்ட திருப்பாற்சமுத்தி ரத்திற்ரேன்றிய நஞ்சையுண்டடக்கிய அழகிய நீலகண்டரே, கருதார் ஊன் உண் முத்தலே வேல்கர — பகைவர்களது மாமிசத்தையுண்ணுகின்ற முக்கவர் கொண்ட சூலாயுதத்தைத்தாங்கியதிருக்கரத்தரே, நாலுமறை புகழும் ஐந்துமுக முதல்வா போற்றி — சதுர்வேதங்களும் புகழ்ந்து கூறுகின்ற ஐந்து முகங்களே யுடைய கடவுளே நமஸ்காரம் எ — று. (163)

உலகுயிர்யா வையும்படைத்தற் கயனுகிப் புரந்திடுதற் குவணமூரு
மிலகுமணி மார்பினனுய்த் துடைத்திடுதற் குருத்திரனு யிவையு மன்றி
யலகிறிரு விளேயாடல் புரிந்தருளும் பராபரனீ யாதலாலுன்
சலசமலர் மருட்டியசே வடியடியேன் புன்றலேயிற் சாத்தினேனுல்.

[உல(கு) உயிர்யா வையும் படைத்தற்(கு) அயன் ஆகிப்
புரந்திடுதற்(கு) உவணம் ஊரும்
இலகுமணி மார்பினனுய்த் துடைத்திடுதற்(கு)
உருத்திரனுய் இவையும் அன்றி
அலகில்திரு விளேயாடல் புரிந்(து)அருளும் பராபரன்நீ
ஆத லால்உன்
சலசமலர் மருட்டிய சேவடி அடியேன் புன்தலேயில்
சாத்தி னேன்ஆல்.]

இ — ள்: உலகு உயிர் யாவையும் படைத்தற்கு அயன் ஆகி — உலகங்களையும் அவற்றில் வாழா நின்ற உயிர்கள் யாவற்றையுஞ்சிருட்டித்தற்குப்பிரமனாகியும், புரந்நிடுதற்கு உவணம் ஊரும் இலகு மணி மார்பினனுய் — அவற்றைக் காக்கும்பொருட்டுக் கருடவாகனத்தின்கண் இவர்ந்து வருகின்ற ஒளிபொருந்திய கௌத்துவமணியையணிந்த திருமார்பையுடைய விஷ்ணுவாகியும், துடைத்திடுதற்கு உருத்திரனுய் — சங்காரித்தற்கு உருத்திரமூர்த்தியாகியும், இவையும் அன்றி — இப்பேதரூபமின்றி, அலகில் திருவிளையாடல் புரிந்து அருளும் பராபரன் — இன்னும் பற்பலதிருவிளையாடல்களையுஞ்செய்கின்றபரம்பொருள், நீ ஆதலால் — தேவரீரேயாதலால், உன் சலச மலர் மருட்டியசேவடி அடியேன் புன்தலையில் சாத்தினேன் — உமதுதாமரைமலரையும் வென்றசிவந்த திருப்பாதங்களை அடியேன் எனது புல்லிய சிரசின்மேற்சூட்டினேன் எ — று.

ஆல் அசை. (164)

என்றினைய துதிகூறி விழுந்தெழுந்து வாய்புதைத்தங் கெறியும்பாசம்
வன்றிறல்சேர் தண்டமுதன் முத்திரையைத் திருமுன்னே வைத்துத் தாழ்ந்து
நின்றினிமே லடியேற்கிவ் வதிகாரம் போதுமென நிகழ்த்த வீச
னுன்றிறம்யா துன்னுளத்தி லுறுகுறையே தெம்முனீ யுரைத்தி யென்றான்:

[என்(று) இனைய துதிகூறி விழுந்(து) எழுந்து வாய்புதைத்(து) அங்(கு)
எறியும் பாசம்
வன்திறல்சேர் தண்டம்முதல் முத்திரையைத் திருமுன்னே
வைத்துத் தாழ்ந்து
நின்(று) இனிமேல் அடியேற்(கு) இவ்அதிகாரம் போதும் என
நிகழ்த்த ஈசன்
உன் திறம் யா(து) உன் உளத்தில் உறுகுறை ஏ(து)
எம்முன்நீ உரைத்தி என்றான்.]

இ — ள்: என்று இனையதுதி கூறி விழுந்து எழுந்து வாய்புதைத்து — என்றிவ்வாருகிய தோத்திரங்களைச் சொல்லிக் கீழேவிழுந்து நமஸ்கரித்துப் பின்னரெழுந்து வாய்பொத்தி, எறியும் பாசம் வன் திறல் சேர் தண்டம் முதல் முத்திரையை திருமுன்னே வைத்து தாழ்ந்து நின்று — வீசுகின்ற பாசக்கயிறு மிக்கவலிமையைக்கொண்ட தண்டாயுதம் முதலாகிய சின்னங்கள் யாவற்றையும் சந்நிதியில் வைத்துத் தாழ்மையாகநின்று, இனிமேல் அடியேற்கு இவ் அதிகாரம் போதும் என நிகழ்த்த — இனிமேல் அடியவனுகிய எனக்கு இந்த அதிகாரம்போதுமென்றுகூற, ஈசன் — சிவபெருமானவர், உன் திறம் யாது — உனது தன்மைகளென்ன, உன் உளத்தில் உறு குறை ஏது - உனது மனத்திற்பொருந்திய குறைகள் யாது, எம்முன் நீ உரைத்தி என்றான் — எமக்கு முன்னே நீ கூறக்கடவையென்று ஆஞ்ஞாபித்தருளினர் எ — று;

அங்கு - அசைநிலை. (165)

அரியயனே முதலமரர்க் கடுத்ததொழில் செயப்புரிந்தா யவர்க ளங்கங் குரியபடி நினதேவற் படிபுரிந்தார் குறையிலரெற் குலகத் துள்ளோர் புரிகொடுந்தி வினைகளறிந் தியைபுடைய தண்டமெனைப் புரிதி யென்ரு யெரிநரகி னவரவர்கள் வினைகளறிந் தூட்டுவித்தே னின்று காறும்.

[அரிஅயனே முதல் அமரர்க்(கு) அடுத்ததொழில்
செயப் புரிந்தாய் அவர்கள் அங்(கு) அங்(கு)
உரியபடி நின(து) ஏவற் படி புரிந்தார் குறைஇலர் எற்(கு)
உலகத் துள்ளோர்
புரிகொடுந்தி வினைகள் அறிந்(து) இயை(பு) உடைய
தண்டம் எனைப் புரிதி என்ரு(ய்)
எரிநரகின் அவர் அவர்கள் வினைகள் அறிந்(து)
ஊட்டுவித்தேன் இன்று காறும்.]

இ — ள்: அரி அயனே முதல் அமரர்க்கு அடுத்த தொழில் செயப்புரிந் தாய் — விஷ்ணு பிரமா முதலிய தேவர்களேயவரவர்களுக்குச் சார்பாகிய செயல் களே நடாத்தும்படி ஆஞ்ஞாபித்தருளினீர், நினது ஏவற்படி — தேவரீரது ஆஞ்ஞையின்படி, அவர்கள் அங்கு அங்கு உரியபடி புரிந்தார் — அவர்களும் ஆங்காங்கே தமததிகாரங்களே நடாத்தி வந்தனர், குறை இலர் — யாதுங் குறைவடைந்திலர், எற்கு உலகத்துள்ளோர் புரிகொடும் தீவினைகள் அறிந்து — அடியேனுக்கு உலகத்தின் கண்ணே வாசஞ்செய்கின்ற ஆன்மாக்கள் செய்யும் கொடிய தீமைகளேயறிந்து, இயைபு உடைய தண்டம் எனை புரிதி என்ரு(ய்) — அவ்வவற்றிற்கு ஏற்ற தண்டனைகளைச் செய்யும்படி என்னை ஆஞ்ஞாபித்தருளி னீர், அவர் அவர்கள் வினைகள் அறிந்து — அவ்வவர்கள்செய்ததீமைகளேயுள் ளபடியுணர்ந்து, எரி நரகில் இன்று காறும் ஊட்டுவித்தேன் — எரிகின்ற நர கங்களிலே இன்றுவரையுந்துன்பங்களேயனுபவிக்கும்படி செய்தேன் எ — று.

(166)

எம்பெருமா னீபணித்த கற்பனைக டவறிலனீ டிஞ்சி யோங்கி யும்பருல களவளவுங் குஞ்சரநற் புரியினிரைத் தொலிக்கு முந்நீ ரம்பரவம் பரப்புடவித் தேவர்குலத் தினிற்ரேன்றி யறத்தை நீத்துக் கம்பமிலா துளத்திரவிற் கலிகலன் பொன் றினந்திருடுங் கள்வ னாகி.

[எம்பெருமான் நீடணித்த கற்பனைகள் தவறிலன் நீ(டு) இஞ்சி ஓங்கி உம்பர் உல(கு) அளவு அளவும் குஞ்சர நற் புரியின் இரைத்(து) ஒலிக்கும் முந்நீர் அம்பர அம்பரப் புடவித் தேவர் குலத்தினில் தோன்றி அறத்தை நீத்துக் கம்பம் இலா(து) உளத்(து) இரவில் கலிகலன் பொன் தினம் திருடும் கள்வன் ஆகி.]

இ — ள்: எம்பெருமான் நீ பணித்த கற்பனைகள் தவறிலன் — எமது பரம பதியே தேவரீர் ஆஞ்ஞாபித்தகட்டளைகளினின்றும் (யான் சிறிதும்) தவறப் பெற்றிலேன், நீடு இஞ்சி ஓங்கி உம்பர் உலகு அளவு அளவும் குஞ்சர நல் புரியில் — நீண்டமதிலானது உயர்ந்து தேவருலகம்வரையுமளாவிய நல்லகுஞ் சரபுரியென்னும்நகரத்தில், இரைத்து ஒலிக்கும் முந்நீர் அம்பர அம்பரம் — இரைத்து ஆரவாரிக்கின்ற ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீராகிய மூவகை நீரால் நிறைந்த சமுத்திரத்தை ஆடையாகவுடைய, புடவி தேவர் குலத்தினில் தோன்றி — பூமியில் தேவர்களென்று சொல்லப்படுகின்ற பிராமணர் குலத்தில் பிறந்து, அறத்தை நீத்து — தருமவொழுக்கத்தை விடுத்து, உளத்து கம்பம் இலாது — மனநடுக்கஞ்சிறிதுமின்றி, தினம் இரவில் கலி கலன் பொன் திருடும் கள்வன் ஆகி — நாடோறும் இராக்காலத்தில் வஸ்திரங்களையும் ஆபரணங் களையும் பொன்னையுங்களவுசெய்கின்ற திருடனாகி எ — று. (167)

விலைமகளி ரல்லார்தங் கற்பழித்து முலைப்போகம் விழைவிற் றுய்த்துப்
புலைமகடோ ணலநுகர்ந்தங் கவளுயிர்த்தபுதல்வியரைப் புணர்ந்து சாதி
நிலைதவறி யூனருந்தி வேதியரா னினமடவார் நீத்தோர் தம்மைக்
கொலைபுரிந்த கொடுமறவன் சுகுமாரனென் றொருபேர் கொண்ட தியோன்;

[விலைமகளிர் அல்லார்தம் கற்(பு) அழித்து முலைப்போகம் விழைவில் துய்த்துப் புலைமகள்தோள் நலம் நுகர்ந்(து) அங்(கு) அவள் உயிர்த்த புதல்வியரைப் புணர்ந்து சாதி நிலை தவறி ஊன் அருந்தி வேதியர் ஆனினம் மடவார் நீத்தோர் தம்மைக் கொலை புரிந்த கொடுமறவன் சுகுமாரன் என்(று) ஒருபேர் கொண்ட தியோன்.]

இ — ள்: விலை மகளிர் அல்லார் தம் கற்பு அழித்து முலை போகம் விழைவில் துய்த்து — வேசியரல்லாதபதிவிரதைகளதுகற்பையழித்துஅவர்களது தனபோகங்களையாசையோடு அனுபவித்து, புலைமகள் தோள்நலம் நுகர்ந்து - புலைப்பெண்ணினது தோளைத்தழுவுதலால் வரும் இன்பத்தையனுபவித்து, அவள் உயிர்த்த புதல்வியரை புணர்ந்து — அப்புலைப்பெண் பெற்ற புத்திரிகளைச் சேர்ந்து, சாதி நிலை தவறி — தன் வருணச்சிரமத்தினின்றும் வழுவி, ஊன் அருந்தி — மாமிசத்தைப் புசித்து, வேதியர் ஆனினம் மடவார் நீத்தோர் தம்மை கொலை புரிந்த கொடு மறவன் — பிராமணர்களையும் பசுக் கூட்டங்களையும் பெண்களையும் துறவிகளையுங்கொலைசெய்த கொடிய கெட்ட மனத்தையுடையனாகிய, சுகுமாரன் என்று ஒரு பேர் கொண்ட தியோன் — சுகுமாரனென்னும் ஒருபெயரையுடைய கொடியவன் எ — று;

அங்கு அசை; (168)

உயிருலக்குங் காலமது கண்டெனது தூதரடைந் துருத்து நெஞ்சி
லயிரளவு மிரக்கமின்றிப் பாசமதிற் பிணித்துவரு மந்தவேலை
மயிருறுசென் னிகண்மூளை யுகத்தகர்த்து நின்கணங்கள் வலிமை காட்டிச்
செயிருடனஞ் சேனையெலா முரிந்திரிந்து குன்றவென்றி செய்த பின்னர்,

[உயிர் உலக்கும் காலம்அது கண்(டு)எனது தூதர்அடைந்(து) உருத்து நெஞ்சில்
அயிர்அளவும் இரக்கம்இன்றிப் பாசமதில் பிணித்துவரும் அந்த வேலை
மயிர்உறுசென் னிகள்மூன்ன உகத்தகர்த்து நின்கணங்கள் வலிமை காட்டிச்
செயிருடன்நம் சேனையெலாம் முரிந்(து) இரிந்து குன்றவென்றி செய்த தின்னர்.]

இ — ள்: உயிர் உலக்கும் காலம் அது கண்டு — அவனிறக்குங்காலம் பார்த்து, எனது தூதர் அடைந்து — எனது தூதுவர்கள்போய், உருத்து நெஞ்சில் அயிர் அளவும் இரக்கம் இன்றி — கோபித்து மனதில் அற்பமாயினுந்தயையில்லாமல், பாசமதில் பிணித்து வரும் அந்த வேலை — பாசத்தாற்கட்டிக் கொண்டு வரும்பொழுது, நின் கணங்கள் — தேவரீரது கணத்தவர்கள், மயிர் உறு சென்னிகள் மூன்ன உக தகர்த்து செயிருடன் வலிமை காட்டி — உரோமத்தைக்கொண்ட தலைகளை மூன்ன சிந்தும்படி சிதைத்துக் கோபத்துடன் தமது வலிமையைக்காண்பித்து, தம் சேனை எல்லாம் முரிந்து இரிந்து குன்ற — எனது சேனைகளெல்லாமுடைந்து புறங்கொடுத்துவலிமைகுன்ற, வென்றி செய்த பின்னர் — வெற்றிகொண்டபின்பு எ — று. (169)

மைதவழுங் கிரிச்சிறையிர் வச்சிரத்தோன் முதலமரர் வணங்கி வாழ்த்தச்
செய்தவமொன் றில்லாஅனநவமணிக ளிழைத்திடும்பொற் றேரி லேற்றிக்
கைதவமற் றருந்தவங்க ளிழைத்துமிக வினைத்தவர்க்குங் கற்பஞ் சென்று
மெய்தரிய நினதுபதத்தெய்து வித்தா ரிதுகுறையென் றியம்பிப் பின்னும்.

[மைதவழும் கிரிச்சிறை ஈர் வச்சிரத்தோன் முதல் அமரர் வணங்கி வாழ்த்தச்
செய்தவம் ஒன்(று) இல்லாஅன நவமணிகள் இழைத்திடும்பொன் தேரில் ஏற்றிக்
கைதவம் அற்(று) அரும்தவங்கள் இழைத்துமிக இனைத்தவர்க்கும் கற்பம் சென்றும்
எய்தரிய நினது பதத்(து) எய்துவித்தார் இதுகுறைஎன்(று) இயம்பிப் பின்னும்.]

இ — ள்: மை தவழும் கிரி சிறை ஈர் வச்சிரத்தோன் முதல் அமரர் வணங்கி வாழ்த்த — மேகங்கள் படிகின்ற மலையின்சிறகுகளைவெட்டிய வச்சிராயுதத்தையுடைய இந்திரன் முதலிய தேவர்கள் கும்பிட்டுநின்று தோத்திரஞ் செய்ய, செய் தவம் ஒன்று இல்லாஅன — செய்யப்பட்ட தவங்களொன்றுமில்லாதவனுகிய சுகுமாரனே, நவமணிகள் இழைத்திடும் பொன் தேரில்-ஏற்றி—நவரத்தினங்களும் பதித்துச்செய்த பொற்றேரிலேற்றி, கைதவம் அற்று கபடமின்றி, அரும் தவங்கள் இழைத்து மிக இனைத்தவர்க்கும் — அரிய தவங்களைச்செய்து மிகவும் இளைப்படைந்தவர்களுக்கும், கற்பம் சென்றும் எய்தரிய நினது பதத்து எய்துவித்தார் — கற்பகாலஞ்சென்றும் அடைதற்கரிய உமது பதவியையடையச்செய்தனர், இது குறை என்று இயம்பி பின்னும் — இதுவே குறையாகுமென்று கூறி பின்பும் எ — று. (170)

கனமிருண்டு துளித்தமழைத் தாரைகளைக் கணக்கிடினுங் கடலின்றீர
வனவரிவா லுகங்கடனே வான்மீனைக் கணித்தொருவர் மதித்திட்டாலுந்
தினமிவன்ருன் புரிந்தகொடும் பாதகங்கட் கிலக்கமில்லைச் செப்பு மன்னே
னனவரத தாண்டவநின்பதம் பெறவும் வழக்குளதோ வறைதி யென்ருன்.

[கனம் இருண்டு துளித்தமழைத் தாரைகளைக் கணக்கிடினும் கடலின் நீர
வனவரிவா லுகங்கள்தனை வான்மீனைக் கணித்(து) ஒருவர் மதித்திட் டாலும்
தினம் இவன்தான் புரிந்தகொடும்பாதகங்கட்(கு) இலக்கம்இல்லைச்செப்பு மன்னேன்
அனவரத தாண்டவநின் பதம்பெறவும் வழக்(கு) உளதோ அறைதி என்ருன்.]

இ — ள்: கனம் இருண்டு துளித்த மழை தாரைகளை கணக்கிடினும் — மேகங்கள் கருக்கொண்டு பெய்த மழைத்துளிகளை இவ்வளவென்று கணக்கிட்டாலும், கடலின் நீர வன வரி வாலுகங்கள் தனை வான் மீனை கணித்து ஒருவர் மதித்திட்டாலும் — கடற்கரையின்கணுள்ள அழகிய நிரையானவெண்மணல்களையும் ஆகாயத்தின் கணுள்ள நட்சத்திரங்களையும் ஒருவர் எண்ணிக் கணக்கிட்டாலும், தினம் இவன் தான் புரிந்த கொடும்பாதகங்கட்கு இலக்கம் இல்லை — தினந்தோறும் இச்சுருமாரன்செய்த கொடிய பாவங்களுக்கு அளவில்லை, செப்பும் அன்னேன் — இங்ஙனங்கூறப்பட்ட தன்மையையுடைய அவன், அனவரத தாண்டவ — எந்நாளும் திருநடனம் புரிகின்ற கடவுளே, நின்பதம் பெறவும் வழக்கு உளதோ அறைதி என்ருன் — உமதுபதவியையடைதற்கும் உரிமையையுடையனே திருவாய்மலர்ந்தருளுகவென்று வேண்டினன் எ — று. (171)

அந்தகனைக் கடைக்கணித்தங் கரனுரைப்பா னந்தணரானினமா னேர்கட்
பைந்தொடியார் பாலர்வதை மீன்மிருகம் பறவைகொன்று பகர்தறின்ற
றந்தைகுரு தாய்பிரம சந்நியாசி சதுர்வேதந் தம்மை நாளு
நிந்தைசெய்த னீதிபிழைத் தொழுகல் பொய்ச்சான் றுரைத்துநிதிகவர்தலின்னும்.

[அந்தகனைக் கடைக்கணித்து அங்கு அரன்உரைப்பான் அந்தணர் ஆன் இனம்மான் நேர்கண்
பைந்தொடியார் பாலர்வதை மீன்மிருகம் பறவைகொன்று பகர்தல் தின்றல்
தந்தைகுரு தாய்பிரம சந்நியாசி சதுர்வேதம் தம்மை நாளும் [இன்னும்.]
நிந்தைசெய்தல் நீதிபிழைத்(து) ஒழுகல் பொய்ச்சான்(று) உரைத்துநிதி கவர்தல்

இ — ள்: அரன் அந்தகனை கடை கணித்து அங்கு உரைப்பான் — சிவபெருமான்யமனைத் திருக்கடைக்கணேக்களுசெய்து திருவாய் மலர்கின்ருர், அந்தணர் ஆன் இனம் மான் நேர் கண் பைந்தொடியார் பாலர்வதை — பிராமணர்களையும் பசுக்குழாங்களையும் மான்நோக்கம்போன்ற கண்களையுடைய பசிய வளையல்களணிந்த டெண்களையும் சிசுக்களையுங்கொல்வதும், மீன் மிருகம் பறவை கொன்று பகர்தல் தின்றல் — மீன் விலங்குபுள்ளாதியவற்றைக் கொலைபுரிந்து விற்றல் உண்ணலும், தந்தை குரு தாய் பிரம சந்நியாசி சதுர்வேதம் தம்மை

நாளும் நிந்தை செய்தல்—பிதாவையும் குருவையும் தாயையும் பிராமண சந்நியாசியையும் நான்கு வேதங்களையும் நாடோறும் அவமதித்தலும், நீதி பிழைத்து ஒழுகல் — நீதிதவறிநடத்தலும், பொய்ச்சான்று உரைத்து நிதி கவர்தல் — பொய்ச்சாட்சிகூறிப்பிறர் பொருளையபகரித்தலும், இன்னும் — மேலும் எ — று. (172)

கன்னிகைபொற் கலனிழந்த கைமைகுரு வின்றேவி கணிகை தாசி
அன்னியர்பெண் ணன்னையவ ளுடன்பிறந்தார் தன்புதல்வி யன்றிமாமன்
பன்னிசகோ தரிதூரத் திரியுடனே பதிவிரதை பழிக்குஞ் சாதி
மின்னிடையார் தமைக்கூடன் மிருகங்கட மைப்புணர்தல்விரதம் வீடல்:

[கன்னிகைபொற் கலன்இழந்த கைமைகுரு வின்தேவி கணிகை தாசி —
அன்னியர்பெண் அன்னை அவன் உடன்பிறந்தார் தன்புதல்வி அன்றி மாமன்
பன்னிசகோ தரிதூரத் திரிஉடனே பதிவிரதை பழிக்கும் சாதி
மின்இடையார் தமைக்கூடல் மிருகங்கள் தமைப்புணர்தல் விரதம் வீடல்:]

இ — ள்: கன்னிகை — (விவாகஞ்செய்யாத) கன்னிகையும், பொன்கலன் இழந்த கைமை — பொன்னுற்செய்த மங்கலியத்தையிழந்த விதவையும், குரு வின் தேவி — குருபத்தினியும், கணிகை — உருத்திரகணிகையும், தாசி — வேசியும், அன்னியர் பெண் — பிறர் மனைவியும், அன்னை — தாயும், அவள் உடன் பிறந்தார் — அவளுடன் பிறந்த சிற்றன்னையரும், தன் புதல்வி — தான்பெற்ற புத்திரியும், அன்றி மாமன் பன்னி — அல்லாமலும் மாமன் மனைவியும், சகோதரி — தன்னோடு கூடிப்பிறந்தவளும், தூரத்திரி உடனே — விலக்காகவுள்ள பெண்ணுடன், பதிவிரதை — கற்புநெறிவழுவாதவளும், பழிக்கும் சாதி — இழிகுலப்பெண்ணும் ஆகிய, மின் இடையார் தமை கூடல் — பெண்களைச் சேருதலும், மிருகங்கள் தமை புணர்தல் — மிருகங்களைப் புணர்ச்சிசெய்தலும், விரதம் வீடல் — அனுஷ்டித்தவிரதங்களை விடுதலும எ — று. (173)

குளங்கூப நந்தவனங் கோயின்மடங் களைச்சிதைத்தல் குதிரை யானை
யளந்திடுமெள் ளெண்ணெய்நெய்பொன் னுபயகோ முகிதானமாக வாங்கல்
வளர்ந்தபெரு மரங்கடமைத் தறித்தன்முகை விரியாத மலரைக் கொய்தல்
விளங்குசிவா லயந்தீர்த்தங் களின்மலமூத் திரம்விடுதல் விளம்பி வற்றில்.

[குளம்கூபம் நந்தவனம் கோயில்மடங் களைச்சிதைத்தல் குதிரை யானை
அளந்திடும் எள்ளெண்ணெய் நெய்பொன் உபயகோமுகி தானம் ஆக வாங்கல்
வளர்ந்தபெரு மரங்கள்தமைத் தறித்தல் முகைவிரியாத மலரைக் கொய்தல்
விளங்குசிவா லயம்தீர்த்தங் களில்மலமூத் திரம்விடுதல் விளம்(பு)தி வற்றில்.]

இ — ள்: குளம் கூபம் நந்தவனம் கோயில் மடங்களை சிதைத்தல் — தடாகங்களையுங் கிணறுகளையும் பூஞ்சோலைகளையுங் கோவில்களையும் மடங்களையு மழித்தலும், குதிரை யானை அளந்திடும் எள்ளெண்ணெய் நெய் பொன் உபய கோமுகி தானம் ஆக வாங்கல் — குதிரை யானை அளவை செய்யப்படுகின்ற

எள்ளெண்ணெய் நெய் பொன் (ஈனுஞ்சமையத்துப்புறப்பட்டிருக்குங் கன்றின் தலையும்தாய்ப்பசுவின் தலையுமாக) இருபுறத்துந்தலையிருக்கும்பசுவுமாகியவிவை களைத் தானமாகவாங்குதலும், வளர்ந்த பெரு மரங்கள் தமை தறித்தல் — வளர்ந்திருக்கின்ற பெரிய விருட்சங்களைத்தறித்தலும், முகை விரியாத மலரை கொய்தல் — இதழ்விரியாத மலர்களைப்பறித்தலும், விளங்கு சிவாலயம் தீர்த்தங்களில் மலம் மூத்திரம் விடுதல் — பிரகாசிக்கின்றசிவதலங்களிலுந் தீர்த்தங்களிலும் மலசலமோசனஞ்செய்தலும், விளம்பு இவற்றில் — சொல் லப்பட்ட இவ்விடங்களில் எ — று. (174)

மனமறிய வுச்சிட்ட மிடல்கனகந் திருடல்கள்ளுன் மதித்து விற்றல்
சொனகுலருண் சூதகவீட் டனம்பிதிர்போ சனந்தூர்த்தர் சோறு நின்றல்
தினகரனே யராத்தீண்டு நாளேகா தசிதசமி திகழு வாவி
லனமருந்த லிடக்கரத்தா லெடுத்தொன்றை யயிறலனு சாரஞ் செய்தல்.

[மனம்அறிய உச்சிட்டம் இடல்கனகம் திருடல்கள் ஊன்மதித்து விற்றல் சொனகுலர்ஊண் சூதகவீட்(டு) அனம் பிதிர்போசனம் தூர்த்தர் சோறு நின்றல் தினகரனே அராத்தீண்டு நாள்ஏகா தசிதசமி திகழ்உ வாவில் அனம்அருந்தல் இடக்கரத்தால் எடுத்(து)ஒன்றை அயிறல்அனு சாரஞ்செய்தல்.]

இ — ள்: மனம் அறிய உச்சிட்டம் இடல் — புத்திபூருவமாக எச்சிலுமிழ் தலும், கனகம் திருடல் - பொன்னைத்திருடுதலும், கள் ஊன்மதித்து விற்றல் - கள்ளையும் மாமிசங்களையும் நிந்தித்துவிற்றலும், சொனகுலர் ஊண் - பொன்வினை மாக்களிடத்துண்ணுதலும், சூதக வீட்டு அனம் - ஆசௌசவீட்டிலன்னம்புசித் தலும், பிதிர்போசனம் — சிராார்த்த அன்னம் புசித்தலும், தூர்த்தர் சோறு நின்றல் — காமுகர்கள் கொடுக்கும் அன்னத்தைப்புசித்தலும், தினகரனே அரா தீண்டு நாள் ஏகாதசி தசமி திகழ் உவாவில் அனம் அருந்தல் — சூரியனைச் சர்ப் பம் விழுங்குகின்ற கிரகணகாலத்தும் ஏகாதசியிலும் தசமியிலும் விளங்குகின்ற அமாவாசி பூரணைகளிலும் அன்னத்தைப்புசித்தலும், இடக்கரத்தால் எடுத்து ஒன்றை அயிறல் — இடக்கரத்தினால் எவ்வகையுணவுகளையாவது எடுத்துண்ணு தலும், அனுசாரம் செய்தல் — ஆசாரமற்றசெயல்களைச்செய்தலும் எ — று. (175)

துள்ளுநடைப் பரிமுகீப்பால் சுரந்தொழுகு செருத்தனல்லான் சுருதி தூயோர்
விள்ளுமுருத் திரமணிமந் திரந்தேவ விக்கிரகம் விபூதி வேகங்
கொள்ளுமத கரியடிமை யவடதங்கன் னிகைதவளங் குலவு பன்னை
லெள்ளுநறு நெய்தயிர்பா லெண்ணெயொடு கள்ளுவிற்ற லிவைக ளாதி.

[துள்ளுநடைப் பரிமுகீப்பால் சுரந்(து)ஒழுகு செருத்தல் நல்ஆன் சுருதி தூயோர் விள்ளும் உருத் திரமணிமந் திரந்தேவ விக்கிரகம் விபூதி வேகம் கொள்ளுமத கரிஅடிமை அவடதம் கன்னிகை தவளம் குலவு பன்னல் எள்ளுநறு நெய்தயிர்பால் எண்ணெயொடு கள்ளுவிற்றல் இவைகள் ஆதி.]

இ — ள்: துள்ளு நடை பரி — தாவிப்பாய்கின்ற குதிரைகளும், முலைப்பால் சுரந்து ஒழுகு செருத்தல் நல் ஆன் — முலைகளினின்றும் பால்சுரந்து பாய்கின்ற மடியையுடைய நல்லபசுக்களும், சுருதி — வேதங்களும், தூயோர் விள்ளும் உருத்திரமணி — மேலோர்களினால் வியந்து கூறப்படுகின்ற உருத்திராக்கமணி களும், மந்திரம் — மந்திரங்களும், தேவவிக்கிரகம் — தேவவிக்கிரகங்களும், விபூதி — விபூதியும், வேகங் கொள்ளு மதகரி — வேகம் பொருந்திய மதம் பாய்கின்ற யானைகளும், அடிமை — அடிமைகளும், அவுடதம் — மருந்துகளும், கன்னிகை — விவாகஞ்செய்யாத கன்னிகைகளும், தவளம் குலவு பன்னல் — வெண்மைநிறம்விளங்குகின்ற பஞ்சும், எள்ளு — எள்ளும், நறுநெய் — நறிய நெய்யும், தயிர் — தயிரும், பால் — பாலும், எண்ணெய் — எண்ணெயும், கள்ளு விற்றலொடு—கள்ளும் ஆகிய இவைகளை விற்றலும், இவைகள் ஆதி — இவைகள் முதலாகிய ஏ — று. (176)

எண்ணருந்தீ வினைபுரிந்த கொடியோருஞ் சிவநிசிநோற் றியாமநான்குந்
தண்ணறும்பூ வாலூறங் கடையாம லருச்சித்தோர் சமான மில்லார்
நண்ணருமா மகம்புரிந்து நதிபடிந்து தானமிக நல்கி னாலும்
பண்ணருநற் பலவிரத மிழைத்தாலு மிதுபோலப் பயன்ற ராவே.

[எண்ணரும்தீ வினைபுரிந்த கொடியோரும் சிவநிசிநோற்(று) இயாமம் நான்கும்
தண்ணறும்பூவால் ஊ(று)அங்(கு) அடையாமல் அருச்சித்தோர் சமானம் இல்லார்
நண்ணரும் மாமகம்புரிந்து நதிபடிந்து தானம்மிக நல்கி னாலும்
பண்ணரும் நல்பல விரதம் இழைத்தாலும் இதுபோலப் பயன்த ராவே.]

இ — ள்: எண்ணரும் தீ வினை புரிந்த கொடியோரும் — கணக்கற்ற தீச் செயல்களைச்செய்த கொடியவர்களும், சிவநிசி நோற்று இயாமம் நான்கும் தண் நறும் பூவால் ஊறு அங்கு அடையாமல் அருச்சித்தோர் — சிவராத்திரி விரதத்தையனுட்டித்து அவ்விரவின்நான் குயாமங்களினுங் குளிர்ந்த பரிமளம் வீசுகின்ற புஷ்பங்களினால் ஆங்கே எவ்வகைக்குற்றங்களும் வராதபடி பூசை செய்தவர்கள், சமானம் இல்லார் — ஒப்பற்றவராவார்கள், நண்ணரும் மா மகம் புரிந்து — அடைதற்கரிய பெரிய யாகங்களைச்செய்தும், நதி படிந்து — நீர்த்தமாடியும், தானம் மிக நல்கினாலும் — பல தானங்களைக் கொடுத்தாலும், பண்ணரும் நல் பல விரதம் இழைத்தாலும் — செய்தற்கரிய வேறு பல விரதங் களையனுஷ்டித்தாலும், இதுபோல பயன்தரா — இச்சிவராத்திரிவிரதத்தைப் போல அதிகபலனைத்தரமாட்டா ஏ — று. ஏ - அசை: (177)

அன்னசிவ நிசிவிரதத் தாசகலு கேச்சுரத்தி லமுத மூறுங்
கன்னன்மொழி யுமையொடெமைக் கண்டிடப்பெற் றனனதனற் காயும்வெய்யோன்
முன்னரெதி ரிருளிமப்போ லுடைந்தகன்ற திவன்முதலுண் முயன்ற பாவ
மென்னருநற் சணங்களுடன் கூடுகின்ற வின்பமுத்தி யீது பெற்றான்.

[அன்னசிவ நிசிவிரதத்(து) ஆ(கு) அகல்நா கேச்சுரத்தில் அமுதம் ஊறும்
கன்னல்மொழி உமையொ(டு)எமைக் கண்டிடப் பெற்றனன் அதனல் காயும் வெய்யோன்
முன்னர்எதிர் இருள் இமம்போல் உடைந்(து) அகன்ற(து) இவன்முதல் நாள்
[முயன்ற பாவம்
என்அருள்நற் கணங்களுடன் கூடுகின்ற இன்பமுத்தி ஈது பெற்றான்.]

இ -- ள்: அன்ன சிவ நிசி விரதத்து — அவ்விதமான சிவராத்திரினத்தில், ஆகு அகல்நாகேச்சுரத்தில் — குற்றமில்லாத திருநாகேச்சுரமென்னுந்தலத்தில், அமுதம் ஊறும் கன்னல் மொழி உமையொடு எமை கண்டிட பெற்றனன் — இனிமைமிக்க கரும்பையொத்த வார்த்தையையுடைய உமையோடு எம்மைத் தரிசிக்கப்பெற்றான், அதனல் — அக்காரணத்தால், இவன் முதல் நாள் முயன்ற பாவம் — இவன் முன்னாளிற்செய்தபாவங்களெல்லாம், காயும் வெய்யோன் முன்னர் எதிர் இருள் இமம் போல் உடைந்து அகன்றது — சுடுகின்ற கிரணங் களையுடைய சூரியனுக்குமுன்னே எதிராக வருகின்ற இருளும்பனியுமழிந்துபட் டதுபோல அழிந்து நீங்கியது, (ஆகையினல்) என் அரு நல் கணங்களுடன் கூடுகின்ற இன்ப முத்தி ஈது பெற்றான் — எமதருமையாகிய நல்லகணநாதர்க ளோடு வாழுகின்ற பதமுத்தியாகிய இதனைப்பெற்றான் எ — று. (178)

என்றிறைவன் கூறுதலுந் தண்டதரன் மீண்டுரைப்பா னிரக்க மின்றிக்
கொன்றினமான் றசையருந்தி மதுக்குடித்துப் புலிமகளிர் குழற்குச் சூட்ட
மன்றன்மலர் கொய்திடுவான் வந்ததன்றி யன்புகொடு வந்தா னல்ல
னுன்றனரு ளிதுவெனின்மற் றுரைப்பதெவ னெனப்பரம னுவனே நோக்கி:

[என்(று) இறைவன் கூறுதலும் தண்டதரன் மீண்(டு) உரைப்பான் இரக்கம் இன்றி
கொன்(று) இனமான் தசைஅருந்தி மதுக்குடித்துப் புலிமகளிர் குழற்குச் சூட்ட
மன்றல்மலர் கொய்திடுவான் வந்ததன்றி அன்புகொடு வந்தான் அல்லன்
உன்தன்அருள் இதுஎனில்மற்(று) உரைப்ப(து) எவன் எனப்பரமன் உவனேநோக்கி.]

இ — ள்: என்று இறைவன் கூறுதலும் - என்றிவ்வாறு தலைவராகிய சிவ பெருமான் திருவாய் மலர்ந்தருளவும், தண்டதரன் மீண்டு உரைப்பான் — தண் டாயுதத்தைத்தாங்கிய யமன் அதனைக்கேட்டுப் பின்னருங் கூறுவான், இரக்கம் இன்றி கொன்று இனமான் தசை அருந்தி — இரக்கஞ்சிறிதுமில்லாமல் கூட்ட மாகிய மான்களைக்கொன்று அவற்றின் மாமிசத்தையுண்டும், மது குடித்து — கள்ளைப்பருகியும், புலிமகளிர் குழற்கு சூட்ட மன்றல் மலர் கொய்திடுவான் வந்தது அன்றி — தனது புலிப்பெண்களின் கூந்தலுக்குச் சூட்டும் பொருட்டுச் சுகந்தம் வீசுகின்ற புஷ்பங்களைப்பறிப்பதற்கு வந்தவனல்லாது, அன்பு கொடு வந்தான் அல்லன் — தேவரீரிடத்து அன்புகொண்டுவந்தவனல்லன், உன் தன் அருள் இது எனில் உரைப்பது எவன் எனை — உமது அனுக்கிரகமித்தன்மையா யின் யான்சொல்வதென்னையென்று விண்ணப்பஞ்செய்ய, பரமன் உவனை நோக்கி — சிவபெருமான் அந்த அந்தகனைப்பார்த்தருளி எ — று.

மற்று அசை. (179

எண்டருமெட் டுணையுளத்தன் பிலரேனு முளரேனு மிந்நா ளெம்மைக்
கண்டவர்நோற் றவர்பூசை பண்ணினர்நற் கதியடைவர் கால நீநந்
தொண்டர்தமைக் கொடும்பாசந் தனில்வீக்கித் துட்டவுருத் தோன்றக்காட்டித்
தண்டமிழைக் குதறவிருன் தூதருக்கு மிந்தவழி சாற்று கென்றான்.

[எண்தரும்எள் துணைஉளத்(து) அன்பிலரேனும் உளரேனும் இந்நாள் எம்மைக்
கண்டவர்நோ றவர்பூசை பண்ணினர்நற் கதிஅடைவர் கால நீநம்
தொண்டர்தமைக் கொடும்பாசம் தனில்வீக்கித் துட்டஉருத் தோன்றக் காட்டித்
தண்டம் இழைக்குதல் தவிர்உன் தூதருக்கும் இந்தவழி சாற்று கென்றான்.]

இ — ள்: கால — யமனே, எண் தரும் எள் துணை உளத்து அன்பு இலரேனும் உளரேனும் — மதிக்கத்தகுந்த எள்ளளவேனும் மனத்தில் அன்பில்லாதவராயினும் அன்புடையராயினும், இந்நாள் எம்மை கண்டவர் நோற்றவர் பூசை பண்ணினர் நல் கதி அடைவர் — இச்சிவராத்திரியில் எம்மைத் தரிசித்தவரும் விரதமனுஷ்டித்தவரும் பூசித்தவரும் நல்ல மோட்சத்தை யடைவர், நீ நம் தொண்டர்தமை கொடும் பாசம் தனில் வீக்கி — நீ நமது அடியார்களைக் கொடியபாசத்தாற் கட்டி, துட்ட உரு தோன்ற காட்டி — கோரரூபத்தைக் காண்பித்து, தண்டம் இழைக்குதல் தவிர் — தண்டனை செய்வதை விடுக்குதி, உன் தூதருக்கும் இந்த வழி சாற்றுக என்றான் — உன்னுடைய தூதுவர்களுக்கும் இம்முறையைக் கூறக்கடவையென்று அருள்புரிந்தனர் என்று. (180)

செறிந்தவுயிர் கவருதற்குச் சேணெறிபோய் மறந்தெனது சினவேற்றூதர்
நெறிந்தபுரிச் சடைப்பரம நின்னடியா ரென்பவரை நிணவிற் றேரா
தறிந்தறியா திழைப்பர் தண்ட மவர்செயன்மற் றடையாள மறைதி யென்ன
மறிந்ததிரைக் கடல்விடமுண் டருடிருவாய் மலர்ந்திறைவன் வகுத்துச் சொல்வான்.

[செறிந்தஉயிர் கவருதற்குச் சேண்நெறிபோய் மறந்(து)எனது சினவேல் தூதர்
நெறிந்தபுரிச் சடைப்பரம நின்அடியார் என்பவரை நிணவில் தேரா(து)
அறிந்(து)அறியா(து) இழைப்பர் தண்டம் அவர்செயல்மற்(று) அடையாளம் அறைதிஎன்ன
மறிந்த திரைக்கடல்விடம் உண்டருள் திருவாய்மலர்ந்(து) இறைவன் வகுத்துச்சொல்வான்.]

இ — ள்: நெறிந்தபுரி சடை பரம — நெறிப்புற்று முறுகிய சடையையுடைய பரமபதியே, எனது சின வேல் தூதர் — எனது கோபத்தையுடைய வேற்படையைத் தாங்கிய தூதுவர்கள், செறிந்த உயிர் கவருதற்கு சேண் நெறி போய் — நெருங்கிய ஆன்மாக்களைக் கவரும் பொருட்டு ஆகாயவழிச்சென்று, நின் அடியார் எப்படவரை நிணவில் தேராது மறந்து — தேவரீரது அடியார்களென்று கூறப்படுவோரை மனத்திலுணராது மறந்து, அறிந்து அறியாது

இழைப்பர் தண்டம் — அறிந்தும் அறியாதும் தண்டனையைச் செய்வர், அவர் செயல் அடையாளம் அறைதி என்ன — அவர்களுடைய செயலையும் அடையாளஞ்சொல்லுந்திருவாய்மலர்ந்தருளுகவென்று வேண்டலும், மறிந்த திரை கடல் விடம் உண்டு அருள் திருவாய் மலர்ந்து இறைவன் வகுத்து சொல்வான் — திரைமறிகின்ற பாற்கடலிற்றோன்றிய நஞ்சையுண்டருளிய திருவாயைத்திறந்து தலைவராகிய சிவபெருமான் வகுத்துக்கூறுவாராயினர் எ — று.

மற்று அசை. (181)

சிரங்களங்கா திரண்டுதடந் திண்டிறற்றோ டாழ்ந்தவிரு செங்கை வாய்ந்த
வுரந்தனிற்கண் டிகைபுனைவோ ருருத்திரமந் திரநவில்வோ ருற்று வேண்டும்
வரங்கடரு கரடகட மாமுகனைப் பூமுகங்கொள் வடிவேற் றோனை
கரங்கொள்விறற் சண்முகனைத் தசமுகனே டரக்கர்தமைக் காய்ந்த மாலை:

[சிரங்களம்கா(து) இரண்டுதடம் திண்திறல்தோள் தாழ்ந்தஇரு செங்கை வாய்ந்த
உரம்தனில்கண் டிகைபுனைவோர் உருத்திரமம் திரம்நவில்வோர் உற்று வேண்டும்
வரங்கள்தரு கரடகட மாமுகனைப் பூமுகம்கொள் வடிவேல் தோனை
கரம்கொள்விறல் சண்முகனைத் தசமுகனே(டு) அரக்கர்தமைக் காய்ந்த மாலை.]

இ — ள்: சிரம் — சிரசிலும், களம் — களத்திலும், இரண்டு காது — இரண்டுகாதுகளிலும், தடம் திண் திறல் தோள் — விசாலித்த திண்ணிய வலிமையையுடைய தோள்களிலும், தாழ்ந்த இரு செங்கை — தாழ்வாகவிருக்கின்ற இரண்டு சிவந்த கரங்களிலும், வாய்ந்த உரம் தனில் — சிறந்த மார்பிலும், கண்டிகை புனைவோர் — உருத்திராக்கமணியைத்தரிப்பவர்களும், உருத்திர மந்திரம் நவில்வோர் — உருத்திரமந்திரத்தைச் செபிப்பவர்களும், உற்று வேண்டும் வரங்கள் தரு கரடகட மாமுகனை — விரும்பிக் கேட்கின்ற வரங்களையெல்லாம் கொடுத்தருளுகின்றமதம்பாய்சுவட்டையுடைய யானைவதனத்தைக் கொண்ட விநாயகனையும், பூமுகங்கொள் வடிவேல் தோனை கரங்கொள் விறல் சண்முகனை — மலர்மாலையையணிந்த கூரிய வேலாயுதத்தைக்கையிற்றாங்கிய வலிய சுப்பிரமணியனையும், தசமுகனோடு அரக்கர் தமை காய்ந்த மாலை — பத்துமுகங்களையுடைய இராவணனையும் இராட்சதர்களையும் அழிவு செய்த விஷ்ணுவையும் எ — று. (182)

பரைசிவரூ பமதாகுஞ் சிவலிங்கந் தனைப்பூசை பண்ணுவோர்கள்
விரைகமழு நந்தவனம் வைத்திடுவோர் கற்புடைய மின்னார் மிக்க
வுரைபெறுவெண் டிருநீறு பூசிடுவோர் சிவாலயங்க ளுற்று கின்றோர்
திரையெறி வாரிதியுலகி லெமதடியார் தமைப்பூசை செய்யுமேலோர்.

[பரைசிவரூ பம(து)ஆகும் சிவலிங்கம் தனே பூசை பண்ணு வோர்கள்
விரைகமழும் நந்தவனம் வைத்திடுவோர் கற்புடைய மின்னர் மிக்க
உரைபெறுவெண் திருநீறு பூசிடுவோர் சிவாலயங்கள் உளற்று கின்றோர்
திரைஎறிவா ரிதிஉலகில் எம(து)அடியார் தமைப்பூசை செய்யும் மேலோர்.]

இ — ள்: பரை சிவ ரூபமது ஆகும் சிவலிங்கம் தனே பூசை பண்ணுவோர் - சத்திசிவவடிவமாயிருக்கின்ற சிவலிங்கத்தைப் பூசனைசெய்பவர்களும், நல்விரை கமழும் நந்தவனம் வைத்திடுவோர் — நல்லவாசனைவீசுகின்ற பூஞ்சோலைகளை யுண்டாக்குபவர்களும், கற்பு உடைய மின்னர் — கற்பு நெறியில் தவறுதலில் லாத பெண்களும், மிக்க உரை பெறு வெண் திருநீறு பூசிடுவோர் — மிகப்புகழ் பெற்ற வெள்ளிய விபூதியைத்தரிப்பவர்களும், சிவாலயங்கள் உளற்றுகின் றோர் - சிவாலயங்களைக்கட்டுவிப்பவர்களும், திரை எறி வாரிதி உலகில் எமது அடியார் தமை பூசை செய்யும் மேலோர் — திரைவீசுகின்ற சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியின் கண்ணே எமது அடியவர்களைப்பூசைசெய்கின்ற மேலவர் களும் எ — று. (183)

நின்மலமா மஞ்செழுத்தை யுளத்தழுத்திச் செபித்திடுவோர் நிகரில் மாக
நன்மதிநீ ராடிடுவோர் பஞ்சபா தகந்தவிர்ந்தோர் நாள்க டோறுந்
துன்மதியி லாததுற வந்தணருக் காடையன்னஞ் சொன்ன மீவோர்
மன்மதியாற் குளங்கூவல் கல்லுவிப்போர் நிழல்சாலை வழியில் வைப்போர்;

[நின்மலமாம் அஞ்செழுத்தை உளத்(து)அழுத்திச் செபித்திடுவோர் நிகரில் மாக
நன்மதிநீர் ஆடிடுவோர் பஞ்சபாத கம்தவிர்ந்தோர் நாள்கள் தோறும்
துன்மதிஇலாததுற(வு) அந்தணருக்(கு) ஆடைஅன்னம் சொன்னம் ஈவோர்
மன்மதியால் குளங்கூவல் கல்லுவிப்போர் நிழல்சாலை வழியில் வைப்போர்.]

இ — ள்: நின்மலமாம் அஞ்சு எழுத்தை உளத்து அழுத்தி செபித்திடு வோர் — குற்றமற்ற பஞ்சாக்ஷரங்களை மனத்திலேபதித்துச் செபிப்பவர்களும், நிகரில் மாக நல் மதி நீர் ஆடிடுவோர் — ஒப்பில்லாத நன்மை பொருந்திய மாசிமாதத்தில் தீர்த்தமாடுபவர்களும், பஞ்ச பாதகம்தவிர்ந்தோர் — கொலை களவு கள்ளுக்காமம் குரு நிந்தையாகிய பஞ்சபாதகங்களையும் விலக்கியவர் களும், நாள்கள் தோறும் துன்மதி இலாத துறவு அந்தணருக்கு ஆடை அன் னம் சொன்னம் ஈவோர் — தினந்தோறும் துர்ப்புத்தியில்லாத துறவிகளான பிராமணர்களுக்கு வஸ்திரங்களையும் அன்னத்தையும் பொன்னையுந்தானமாகக் கொடுப்பவர்களும், மன் மதியால் குளம் கூவல் கல்லுவிப்போர் - தருமசிந்தை யால் குளங்களையும் கூவல்களையும் வெட்டுவிப்பவர்களும், நிழல்சாலை வழியில் வைப்போர் - நிழல் மரங்களையும் சாலைகளையும் வழிகளிலுண்டாக்குபவர்களும் எ — று; [184]

காசியிரா மேச்சுரம்பொற் கனகசபை யாரூர்கா ளத்தி காஞ்சி
மாசில்கழுக் குன்றமுது குன்றமொற்றி யூர்மருதூர் மதுரையையா
றுசின் மறைக்காடு வெண்கா டானேக்கா மாயூர மருணை புள்ளூர்
தேசுதருஞ் சிரபுரநற் றிருப்புகலூர் முதற்றலங்கள் செகத்தி லுண்டால்;

[காசிஇரா மேச்சுரம்பொற் கனகசபை ஆரூர்கா ளத்தி காஞ்சி
மாசில்கழுக் குன்றம்முது குன்றம்ஒற்றி ஊர்மருதூர் மதுரை ஐயா(று)
ஆ(சு)இல்மறைக் காடு வெண்கா(டு) ஆனேக்கா மாயூரம் அருணை புள்ளூர்
தேசுதரும் சிரபுரம்நல் திருப்புகலூர் முதல் தலங்கள் செகத்தில் உண்டால்.]

இ — ள்: காசி — காசிப்பதியும், இராமேச்சுரம் — இராமேச்சுரமும், பொன் கனகசபை — பொற்சபையையுடைய சிதம்பரமும், ஆரூர் — திருவாரூரும், காளத்தி — திருக்காளத்தியும், காஞ்சி — காஞ்சியம்பதியும், மாசில் கழுக்குன்றம் — குற்றமில்லாத திருக்கழுக்குன்றமும், முதுகுன்றம் — திருமுதுகுன்றமும், ஒற்றியூர் — திருவொற்றியூரும், மருதூர் - திருவிடைமருதூரும், மதுரை — மதுரையும், ஐயாறு — திருவையாறும், ஆசில் மறைக்காடு - குற்றமில்லாதவேதாரணியமும், வெண்காடு — திருவெண்காடும், ஆனேக்கா — திருவானேக்காவும், மாயூரம் — மாயூரமும், அருணை — திருவண்ணாமலையும், புள்ளூர் — திருப்புள்ளூரும், தேசு தரும் சிரபுரம் — ஒளி விளங்குகின்ற திருச்சிரபுரமும், நல்திருப்புகலூர் முதல் தலங்கள் செகத்தில் உண்டால் — நன்மை தங்கிய திருப்புகலூரும் முதலாகியபுண்ணியதலங்கள் பூமியின்கண்ணேயுள்ளன எ-று.

(185)

அத்தலங்க டமையடைந்து புனிதநீர் படிந்தாடி யமல மாகிச்
சித்தமகிழ்ந் தியாமுறையுஞ் சிவலிங்க தெரிசனஞ்செய் தோர்கள் யாரு
மூத்தர்சிவ நிசிவிரத நோற்றவர்மற் றிவரெவர்க்கு முதற் பேராகு
மித்தகைய ருன்றூதர்க் கெளியரலர் தண்டமிவர்க்கில்லை யென்றான்.

[அத்தலங்கள் தமையடைந்து புனிதநீர் படிந்(து)ஆடி அமலம் ஆகிச்
சித்தம்மகிழ்ந்(து) யாம்உறையும் சிவலிங்க தெரிசனஞ்செய் தோர்கள் யாரும்
மூத்தர்சிவ நிசிவிரதம் நோற்றவர்மற்(று) இவர்எவர்க்கும் முதற் பேராகும்
இத்தகையர் உன்தூதர்க்(கு) எளியர்அலர் தண்டம்இவர்க்(கு) இல்லைஎன்றான்.]

இ—ள்: அத்தலங்கள் தன்மை அடைந்து — அந்தப் புண்ணியஸ்தலங்களையடைந்து, புனித நீர் படிந்து — பரிசுத்தமாகிய நீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, அமலம் ஆகி — சுத்தமுடையவர்களாய், சித்தம் மகிழ்ந்து யாம் உறையும் சிவலிங்கம் தெரிசனம் செய்தோர்கள் யாரும் மூத்தர் — மனக்களிப்புடனே யாரும் வீற்றிருக்கின்ற சிவலிங்கத்தைத் தரிசிக்கப் பெற்றவர்கள் எல்

லோருஞ் சிவன்முத்தர்களாம் (ஆயினும்), சிவநிசி விரதம் நோற்றவர் இவர் எவர்க்கும் முதல் பேர் ஆகும் — சிவராத்திரிவிரதத்தையனுஷ்டித்தவர்கள் முன் கூறப்பட்ட எல்லோரினும் விசேடமுடையராவர், இத்தகையர் உன் தூதர்க்கு எளியர் அலர் — இத்தன்மையையுடைய நமது அன்பர்கள் உனது தூதுவர்களுக்கு அகப்படத்தக்கவரல்லர், தண்டம் இவர்க்கு இல்லை என்றுன் - இவர்களுக்கு நரகதண்டனை இல்லையென்று திருவாய்மலர்ந்தருளினர் எ — று.

மற்று அசை. (186)

கருதியசொற் கேட்டுளத்தி னச்சமுடன் வீழ்ந்திறைஞ்சிக் காலனேய
தருதிவிடை யெனப்பெற்று வைத்திடுமுத் திரைதாங்கித் தன்னூ ரெய்தி
வருதிரெனத் தூதர்தமை யழைத்தரன் சொன் மாற்றமெலாம் வகுத்துக் கூறி
யொருதிகிரி தனையுருட்டித் தென்புலங்காத் தினிதிருந்தா னுவப்பி னேடும்;

[கருதியசொல் கேட்(டு)உளத்தின் அச்சமுடன் வீழ்ந்(து)இறைஞ்சிக் காலன் ஐய
தருதிவிடை எனப்பெற்று வைத்திடு முத்திரைதாங்கித் தன்னூர் எய்தி
வருதிர்எனத் தூதர்தமை அழைத்(து) அரன்சொல் மாற்றமெலாம் வகுத்துக் கூறி
ஒருதிகிரி தனைஉருட்டித் தென்புலம்காத்(து) இனி(து)இருந்தான் உவப்பி னேடும்.]

இ — ள்: காலன் — யமனுவன், கருதியசொல் கேட்டு உளத்தில் அச்சமுடன் வீழ்ந்து இறைஞ்சி — தன்மனத்தின்கண்ணே நினைத்த (சந்தேகத்தை மாற்றுதற்கேற்ற) திருவாக்கைக்கேட்டு மனத்திலச்சங்கொண்டு வீழ்ந்து நமஸ்கரித்து, ஐய தருதி விடை என பெற்று—எமது பரமபிதாவே அறுமதிதந் தருளுகவென்று விடைபெற்றுக்கொண்டு, வைத்திடு முத்திரை தாங்கி — தான் முன்னேவைத்த சின்னங்களையெடுத்துக்கொண்டு, தன் னூர் எய்தி — தனது தென்புலத்தையடைந்து, தூதர் தமை வருதிர் என அழைத்து — தூதுவர்களே வாருங்களென்று அழைத்து, அரன்சொல் மாற்றம் எலாம் வகுத்து கூறி — சிவபெருமான் உபதேசித்தன யாவற்றையும் விரித்துரைத்து, ஒரு திகிரிதனை உருட்டி—தனது ஆஞ்ஞாசக்கரமொன்றையே செலுத்தி, தென்புலம் காத்து — தனது யமபுரத்தைப் பரிபாலனஞ்செய்து, உவப்பி னேடும் இனிது இருந்தான்— களிப்புடனே நன்கு வாழ்ந்திருந்தனன் எ — று. (187)

இச்சிவராத் திரிவிரத சரிதைதனைக் கேட்டோர்மற் றின்பாய்க் கற்றோர்
கச்சையடுங் கொங்கை மங்கை பங்கனுறை கயிலை யெய்திக்களிப்ப ரென்றே
யுச்சிதமாய்ச் சூதமுனி மாதவர்கேட் டுள்ளமுற்று முருகி வாயான்
மெச்சிமகிழ்ந் திடவேத வியாதமுனி மொழிப்படியே விளம்பி னனே.

[இச்சிவராத் திரிவிரத சரிதைதனைக் கேட்டோர்மற்(று) இன்பாய்க் கற்றோர்
கச்சைஅடும் கொங்கை மங்கை பங்கன்உறை கயிலை எய்திக் களிப்பர் என்றே
உச்சிதமாய்ச் சூதமுனி மாதவர்கேட்(டு) உள்ளம்முற்றும் உருகி வாயால்
மெச்சிமகிழ்ந்திட வேத வியாதமுனி மொழிப்படியே விளம்பி னனே.]

இ — ள்: இச் சிவராத்திரி விரத சரிதை தனை கேட்டோர் — இந்தச் சிவராத்திரிவிரதத்தின் சரித்திரங்களைச் செவியுறக் கேட்டவர்களும், இன்பாய் கற்றோர் — மகிழ்ச்சியோடு படித்தவர்களும், கச்சை அடும் கொங்கை மங்கை பங்கன் உறை கயிலை எய்தி களிப்பர் என்று — கச்சை வருத்துகின்ற பயோதரங்களையுடைய உமாதேவிபங்கராகிய சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற கயிலாயமலையையடைந்து மகிழ்வோடுவாழ்வரென்று, சூதமுனி — சூதமகாமுனிவர், மாதவர் கேட்டு உள்ளம் முற்றும் உருகிவாயால் மெச்சி மகிழ்ந்திட — மிக்க தவத்தையுடைய நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்கள் கேட்டு மனம் முழுவதும் கரிவடைந்து (உள்ளடக்கலாற்றராய்வெளியே) வாயினாலும் புகழ்ந்து ஆனந்தங்கொள்ள, வேத வியாதமுனி மொழிப்படியே — (முன்னர்) வேதவியாசமுனிவர்கூறியபடி, உச்சிதமாய் விளம்பினன் — மேன்மைவிளங்கும் படி கூறியருளினர் எ — று.

மற்று ஏ அசைகள். (188)

சுகுமாரச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 343.

திருச்சிற்றம்பலம்.

அங்குலச் சருக்கம்

இன்னு மாசியிற் சிவநிசிப் பெருமையொன் றிசைப்பேன்
மின்னு வார்சடைத் துறவிர்கா ளுமக்கென விழைவாற்
றுன்னு நான்மறைப் பொருடெரி வியாதனைத் தொழுது
பின்னு மாதவச் சூதமா முனிவரன் பேசும்.

[இன்னும் மாசியில் சிவநிசிப் பெருமைஒன்(று) இசைப்பேன்
மின்னு வார்சடைத் துறவிர்காள் உமக்கென விழைவால்
துன்னு நால்மறைப் பொருள்தெரி வியாதனைத் தொழுது
பின்னும் மாதவச் சூதமா முனிவரன் பேசும்.]

இ — ள்: மா தவ சூத மா முனிவரன் — மிக்கதவத்தையுடையசூதமகா முனிவர், மின்னு வார் சடை துறவிர்காள் — ஒளிபொருந்திய நீண்டசடையை உடைய முனிவர்களே, இன்னும் மாசியில் சிவநிசி பெருமை ஒன்று உமக்கு இசைப்பேன் என—இன்னும் மாசிமாதத்தில் வருகின்ற சிவராத்திரிவிரதத்தின் மகிமையொன்றை உங்களுக்குக் கூறுவேனென்று, விழைவால் — ஆசையினால், துன்னு நால் மறைபொருள் தெரி வியாதனை தொழுது — கூட்டமாகிய நான்கு வேதங்களின் பொருள்களையுமறிந்த வேதவியாசமுனிவரை (நினைத்து) தொழுது, பின்னும் பேசும் — பின்னுங்கூறுவார் எ — று. (1)

களங்க மாய்க்குறு முயலுறு கதிர்மதி தவழ
விளங்கு மிஞ்சிசூழ்ந் தளகைமா நகரினை வென்ற
வளங்கொள் சாகர புரத்தயல் வளர்வரை வனத்தி
லுளங்கொ ளோகையோ டுறைபவன் றோலுடை யுடையோன்.

[களங்கம் ஆய்க்குறு முயல்உறு கதிர்மதி தவழ
விளங்கும் இஞ்சிசூழ்ந்(து) அளகைமா நகரினை வென்ற
வளங்கொள் சாகர புரத்(து)அயல் வளர்வரை வனத்தில்
உளங்கொள் ஓகையோ(டு) உறைபவன் தோலுடை உடையோன்.]

இ — ள்: குறு முயல் ஆய் களங்கம் உறும் — குறுகியமுயல்வடிவாய் களங்கமமையப்பெற்ற, கதிர் மதி தவழ் விளங்கும் இஞ்சி சூழ்ந்து — கிரணங் களையுடைய சந்திரன் தவழும்படி உயர்ந்து விளங்குகின்ற மதிலாற் சூழப்பட்டு, அளகை மா நகரினை வென்ற — பெருமைபொருந்திய அளகாபுரியையும் (வளத்தினால்) வென்ற, வளம் கொள் சாகர புரத்து அயல் — செழிப்புப்பொருந்திய

சாகரபுரமென்னும் நகரத்தின் பக்கத்தே, வளர் வரை வனத்தில் — வளர்ந்த மலைகள்பொருந்திய காட்டில், உளம் கொள் ஓகையோடு உறைபவன் — மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு வாழ்பவனும், தோல்உடைஉடையோன் — தோலை வஸ்திரமாகக்கொண்டவனும் எ — று. (2)

வெண்ணி ணத்தடி முடைகமழ் வெடிக்குரல் வாயா
னெண்ணில் வேட்டுவக் கிளைஞரோ டின்பமுற் றென்று
நண்ணி வாழ்பவன் காதினி னுல நால்வாயின்
றண்ணி லாமருப் பரிந்தது குழையெனத் தரிப்போன்.

[வெள்நி ணத்தடி முடைகமழ் வெடிக்குரல் வாயான்
எண்ணில் வேட்டுவக் கிளைஞரோ(டு) இன்பமுற்(று) என்றும்
நண்ணி வாழ்பவன் காதினில் நால நால்வாயின்
தண்நி லாமருப்(பு) அரிந்(து) அது குழைஎனத் தரிப்போன்.]

இ — ள்: வெள் நிண தடி முடை கமழ் வெடி குரல் வாயான் — வெள்ளிய நிணமாகிய தசையினது முடைநாற்றம் வீசப்பெற்ற உரத்த தொனியைக் கொண்ட வாயையுடையவனும், எண்ணில் வேட்டுவ கிளைஞரோடு இன்பம் உற்று என்றும் நண்ணி வாழ்பவன் — அளவில்லாத தனது வேடர்குலமாகிய சுற்றத்தாரோடு சுகம்பெற்று எந்நாளும் நிலைத்து வாழ்பவனும், காதினில் நால — காதுகளில் தூங்கும்படி, நால்வாயின் தண் நிலா மருப்பு அரிந்து அது குழை என தரிப்போன் — யானையினது குளிர்ந்த ஒளியை வீசுகின்ற கொம்பை யரிந்து அதனைக் குண்டலமாக அணிபவனும் எ — று. (3)

தேனு நீடணில் வாற்குரற் செந்தினை மாவுங்
கானி லீயலுங் கபித்தநற் கனிகளுங் கங்குன்
மானு மேனமான் மரைமுயன் முதலிய மாவி
னூனு மைவனத் துண்டியு முண்டிகொண் டுவப்போன்.

[தேனும் நீ(டு)அணில் வால்குரல் செந்தினை மாவும்
கானின் ஈயலும் கபித்தநல் கனிகளும் கங்குல்
மானும் ஏனம் மான் மரைமுயல் முதலிய மாவின்
ஊனும் ஐவனத்(து) உண்டியும் உண்டிகொண்(டு) உவப்போன்.]

இ — ள்: தேனும் - தேனையும், நீடு அணில் வால் குரல் செந்தினை மாவும் - நெடிய அணில்வால்போன்ற கதிர்களையுடைய செந்தினையின் மாவையும், கானில் ஈயலும் — காட்டிலுள்ள ஈயல்களையும், கபித்த நல் கனிகளும் — நல்ல விளாங் கனிகளையும், கங்குல் மானும் ஏனம் மான் மரை முயல் முதலிய மாவின் ஊனும் — இருளையொத்த கரிய பன்றி மான் மரை முயல் ஆகிய மிருகங்களின் மாமிசங்களையும், ஐவனத்து உண்டியும் — மலைநெற்சாதத்தையும், உண்டி கொண்டு உவப்போன்— உணவாகப் புசித்து மகிழ்பவனும் எ— று; (4)

பொங்கு வெஞ்சினத் தழல்விழிப் பொறிப்புலி போல்வான்
கங்கு லஞ்சனக் கிரிமுழக் கொடுமழை காலு
மங்கு லோருருக் கொண்டுவந் தாலென வடிவந்
தங்கு மங்குல னென்றுள னொருதனிச் சவரன்.

[பொங்கு வெஞ்சினத்(து) அழல்விழிப் பொறிப்புலி போல்வான்
கங்குல் அஞ்சனக் கிரிமுழக்(கு)ஒடு மழை காலும்
மங்குல் ஓர்உருக் கொண்டுவந் தால்என வடிவம்
தங்கும் அங்குலன் என்றுளன் ஒருதனிச் சவரன்.]

இ — ள்: பொங்கு வெம் சினத்து அழல் விழி பொறி புலி போல்வான் — கொதிக்கின்ற கொடியகோபத்தையுடைய அக்கினிபோன்ற கண்ணைக்கொண்ட புள்ளிபொருந்தியபுலியைநிகர்த்தவனும், கங்குல் அஞ்சன கிரி முழக்கொடுமழை காலும் மங்குல் ஓர் உருகொண்டு வந்தால் என — இருளும் நீலமலையும் இடி முழக்கத்தோடு மழையைச்சொரிகின்ற மேகங்களுங்கூடி ஒருவடிவமாய்த்திரண்டுவந்தாற்போன்ற, வடிவம் தங்கும் அங்குலன் என்று ஒரு தனி சவரன் உளன் — கரியஉருவத்தைக்கொண்ட அங்குலனென்னும்பெயரையுடையவனுமாகிய ஒப்பற்ற ஒருவேடனுளன் எ — று. (5)

பொன்றி கழ்ந்திடு மவ்வரைக் கருகொரு புனத்திற்
குன்றி யின்வடக் குடமுலைக் குழைக்கலை யுடுக்கு
மின்றி ருந்திடைக் கொடிச்சியோர் கொடிச்சியை வேட்டாங்
கன்றி லுஞ்சிறைச் சேவலு மாமென வணைந்தான்.

[பொன்றி கழ்ந்திடும் அவ்வரைக்(கு) அரு(கு)ஒரு புனத்தில்
குன்றியின்வடக் குடமுலைக் குழைகலை உடுக்கும்
மின்தி ருந்(து)இடைக் கொடிச்சிஓர் கொடிச்சியை வேட்(டு)ஆங்(கு)
அன்றி லும்சிறைச் சேவலு மாம்என அணைந்தான்.]

இ — ள்: பொன் திகழ்ந்திடும் அவ் வரைக்கு அருகு ஒரு புனத்தில் — அழகு விளங்குகின்ற அந்த மலையின் பக்கத்தேயுள்ள ஒரு புனத்தின் கண், குன்றியின் வட குட முலை — குன்றிமணிமாலைகளையணிந்த கலசத்தையொத்த தனங்களையும், குழை கலை உடுக்கும் மின் திருந்து கொடி இடைச்சி ஓர் கொடிச்சியை வேட்டு — இலைகளாற்சமைக்கப்பட்ட வஸ்திரத்தை உடுத்த மின்னலையும் பழிக்கின்ற கொடிபோன்ற இடையையுமுடையளாகிய ஓர் வேட்டுவமாதை விவாகஞ்செய்து, ஆங்கு அன்றிலும் சிறை சேவலுமாம் என் அணைந்தான் — அவ்விடத்தே அன்றிற்பேடும் சிறகுகளையுடைய அதன் சேவலுமென்று கூறும்படி சையோகமுற்றிருந்தான் எ — று. (6)

கொடிய கோளரிப் பிணவுவெங் குருளையின் றென்னப்
பிடிநடைக் குறப் பேதையங் கிருமகப் பெற்றுள்
கடிய புல்லுகிர்ச் சுட்டியோ டரைமணிக் கவடி
வடிவு சேர்தரு புதல்வருக் கணிந்துள மகிழ்வான்.

[கொடிய கோளரிப் பிணவுவெங் குருளைஈன்(று) என்னப்
பிடிநடைக் குறப் பேதைஅங்(கு) இருமகப் பெற்றுள்
கடிய புல்உகிர்ச் சுட்டியோ(டு) அரைமணிக் கவடி
வடிவு சேர்தரு புதல்வருக்(கு) அணிந்(து) உளம்மகிழ்வான்.]

இ — ள்: கொடிய கோளரி பிணவு வெம் குருளை ஈன்று என்ன — கொடிய குணத்தையுடைய பெண்சிங்கமானது வெவ்விய குட்டியையீன்றாற்போல, பிடி நடை குற பேதை — பெண்யானைபோன்ற நடையையுடைய அந்த வேட்டுவ மங்கை, அங்கு இரு மகப்பெற்றுள் — அவ்விடத்து இரண்டு புத்திரர்களைப் பெற்றாள், கடிய புல் உகிர் சுட்டியோடு கவடி அரைமணி — கொடிய புலி நகத்தாற் செய்யப்பட்ட நெற்றிச்சுட்டியையும் சோகிகளாற் செய்யப்பட்ட அரைமணிகளையும், வடிவுசேர் தரு புதல்வருக்கு அணிந்து — அழகு வாய்ந்த தன் புத்திரர்களுக்குத்தரித்து, உளம் மகிழ்வான் — மனமகிழ்ச்சிகொள்ளுவான் எ — று. (7)

உரையிந் நீர்மையிற் களிப்புறு மெயினனங் கொருநாள்
வரையி னீண்மரத் துரித்திடும் வற்கலை வாங்கி
யரையி னீர்த்துமான் றோற்செருப் படிகளிற் றொட்டு
விரையி னீடிருட் குஞ்சிமென் கயிற்றினுல் விசித்து.

[உரைஇந் நீர்மையில் களிப்(பு)உறும் எயினன்அங்(கு) ஒருநாள்
வரையில் நீள்மரத்(து) உரித்திடும் வற்கலை வாங்கி
அரையில் ஈர்த்துமான் தோல்செருப்(பு) அடிகளில் தொட்டு
விரையின் நீ(டு)இரு(ள்) குஞ்சிமென் கயிற்றினுல் விசித்து.]

இ — ள்: உரை இந்நீர்மையில் களிப்பு உறும் எயினன் — கூறப்பட்ட இத்தன்மையாக மகிழ்ச்சியோடு வாழுகின்ற வேடனானவன், அங்கு ஒருநாள்— அவ்விடத்து ஒரு நினத்திலே, வரையில்நீள் மரத்து உரித்திடும் வற்கலை வாங்கி அரையில் ஈர்த்து — மலையினிடத்து நீண்டு வளர்ந்த மரத்தினின்றுமுரிக்கப் பட்ட தோலாகிய வஸ்திரத்தையெடுத்து அரையிற்றரித்து, மான் தோல் செருப்பு அடிகளில் தொட்டு — மான்தோலாற்செய்யப்பட்ட செருப்பைக் கால்களிலணிந்து, விரையின் நீடு இருள் குஞ்சி மென் கயிற்றினுல் விசித்து — வாசனையூட்டப்பட்ட கரிய குடுமியை மிருதுவாகிய கயிற்றினாற்கட்டி எ — று; (8)

துரக்கும் வெஞ்சரத் தூணிதன் வெரிநிடைத் தூக்கித்
தரக்கின் றோலுறைச் சுரிகைசேர்த் தஞ்சன சயிலத்
துரக்குந் தோளில்வார் விற்றரித் துயர்சுவா வினங்கொண்
டிரக்க மச்சமொன் றில்லவன் வேட்டமே லெழுந்தான்.

[துரக்கும் வெம்சரத் தூணிதன் வெரிந்இடைத் தூக்கித்
தரக்கின் தோல்உறைச் சுரிகைசேர்த்(து) அஞ்சன சயிலத்(து)
உரக்கும் தோளில்வார் வில்தரித்(து) உயர்சுவா இனங்கொண்(டு)
இரக்கம் அச்சம்ஒன்(று) இல்லவன் வேட்டமேல் எழுந்தான்.]

இ — ள்: துரக்கும் வெம் சர தூணி தன் வெரிநிடை தூக்கி — செலுத்தப்படுகின்ற வெவ்விய அம்பருத் தூணியைத் தனது முதுகிற் றொங்கத் தூக்கி, தரக்கின் தோல் உறை சுரிகை சேர்த்து — புலித்தோலாற் செய்யப் பட்ட உறையினிடத்து உடைவாளை வைத்து, அஞ்சன சயிலத்து உரக்கும் தோளில் வார்வில் தரித்து — நீலகிரியைப்போன்ற வலிமை பொருந்திய தோளின்கண்ணே நீண்ட வில்லைத்தாங்கி, உயர் சுவா இனம் கொண்டு — உயர்ந்த நாய்க்கூட்டங்களையுங் கொண்டு, இரக்கம் அச்சம் ஒன்றும் இல்லவன் வேட்டமேல் எழுந்தான் — மன இரக்கமும் பயங்கரமும் சிறிதுமில்லாத வனாய் வேட்டையாடும்பொருட்டுப் புறப்பட்டான் எ — று. (9)

இலவு தேக்ககி லிரத்திவே லெட்டிபுன் ணகங்
குலவு கூவிளங் கொன்றைபூங் குரவசோ கீரப்
பலவு பாடலம் வன்னிசண் பகம்பட ரழிஞ்சி
னிலவு பாலைபைந் தாதுபொன் னிறத்தநீள் வேங்கை.

[இலவு தேக்(கு)அகில் இரத்திவேல் எட்டிபுன் ணகம்
குலவு கூவிளம் கொன்றைபூங் குர(வு)அசோ(கு) ஈரப்
பலவு பாடலம் வன்னிசண் பகம்படர் அழிஞ்சில்
நிலவு பாலைபைந் தாதுபொன் நிறத்தநீள் வேங்கை.]

இ — ள்: இலவு — இலவமும், தேக்கு — தேக்கும், அகில் — அகிலும், இரத்தி — இரத்தியும், வேல் — வேலும், எட்டி — காஞ்சிரையும், புன்னகம் — புன்னையும், குலவு கூவிளம் — விளங்குகின்ற வில்வமும், கொன்றை — கொன்றையும், பூங்குரவு — புஷ்பங்கள் நிறைந்த குராவும், அசோகு — அசோகும், ஈரப்பலவு — ஈரப்பலாவும், பாடலம் — பாதிரியும், வன்னி — வன்னியும், சண்பகம் — சண்பகமும், படர் அழிஞ்சில் — பரந்த அணிஞ்சிலும், நிலவு பாலை — ஒளிபொருந்திய பாலையும், பொன் நிறத்த பைதாது நீள் வேங்கை — பொன்மயமாகிய பசிய பராகத்தைக்கொண்ட நெடிய வேங்கையும் எ — று. (10)

விரித டஞ்சினைச் சந்தனம் பொரியரை வெள்ளில்
பெரிய வாகைபிப் பிலம்பிசு மந்தமுட் பிடவங்
கரிய காதிரங் கழையிருண் மதுமலர்க் கடம்பம்
வரிகொ ளார்பதஞ் செறிதரு மராமரம் வகுளம்.

[விரித டஞ்சினைச் சந்தனம் பொரியரை வெள்ளில்
பெரிய வாகைபிப் பிலம்பிசு மந்தம்முட் பிடவம்
கரிய காதிரம் கழைஇருள் மதுமலர் கடம்பம்
வரிகொள் ஆர்பதம் செறிதரும் மராமரம் வகுளம்.]

இ — ள்: விரி தடம் சினை சந்தனம் — விரிந்த விசாலமாகிய சாகைகளையுடைய சந்தனமும், பொரி அரை வெள்ளில் — பொரிந்த அரையை உடைய விளாவும், பெரிய வாகை — பெரிய வாகையும், பிப்பிலம் — அரசும், பிசுமந்தம் — வேம்பும், முள் பிடவம் — முள்ளைக்கொண்ட பிடவமும், கரியகாதிரம் — கருநிறம் பொருந்திய கருங்காலியும், கழை — மூங்கிலும், இருள் மது மலர் கடப்பம் — கரிய சுகந்த மலர்நிறைந்த கடம்பும், வரிகொள் ஆர்பதம் செறிதரும் மராமரம் — புள்ளி பொருந்திய வண்டுகள் படிகின்ற மராமரமும், வகுளம் — மகிழும் எ — று. (11)

மரவ நாகநல் வழைமுதல் மரங்களா னெருங்கி
யிரவ லாற்பக லில்லையாங் கிலங்குமா யிரஞ்செங்
கரவ ரோதயன் கதிரொளி புகுந்திடாக் கறங்கு
மரவ மாருதம் புகுந்திடா வனத்திலங் கடைந்தான்.

[பரவ நாகநல் வழைமுதல் மரங்களால் நெருங்கி
இர(வு)அ லாற்பகல் இல்லைஆங்(கு) இலங்கும்ஆ யிரஞ்செங்
கரவரோதயன் கதிரொளி புகுந்திடாக் கறங்கும்
அரவ மாருதம் புகுந்திடா வனத்தில்அங்கு அடைந்தான்;]

இ — ள்: மரவ நாக நல் வழை முதல் மரங்களால் நெருங்கி — குங்குமங்களும் நாகமும் நல்வசுர புன்னையும் முதலாகிய மரங்களினால் நெருங்குண்டு, ஆங்கு இரவு அலால் பகல் இல்லை — அவ்விடத்து இரவேயன்றிப் பகலானது இல்லையென்று சொல்லும்படி, இலங்கும் செம் ஆயிரம் கர வர உதயன் கதிர் ஒளி புகுந்திடா — ஒளி விளங்குகின்ற சிவந்த ஆயிரங் கிரணங்களையுடைய பேன்மைதங்கிய சூரியனது வெயில் செல்லப்பெறாததும், கறங்கும் அரவ மாருதம் புகுந்திடா — வீசுகின்ற ஒலிமிகுந்த காற்றுச் செல்லப் பெறாததுமாகிய, வனத்தில் அடைந்தான் — காட்டினுள் பிரவேசித்தனன் எ — று.

அங்கு அசை. (12)

புட்ட ருக்குலந் தொறும்பயில் பொங்கிருட் புனத்திற்
கட்ட ழற்பொறிக் கூருகிர்க் கவிழ்தலை யுளிய
மட்ட றச்சித லெடுத்துயர் பாழிவன் மீகந்
தொட்ட கழ்ந்ததிற் சோறுக ளருந்துமங் கொருபால்.

[புள்தருக் குலந்தொறும்பயில் பொங்(கு)இருட் புனத்தில்
கண்தழல் பொறிக் கூர்உகிர்க் கவிழ்தலை உளியம்
மட்(டு)அறச் சிதல் எடுத்(து)உயர் பாழிவன் மீகம்
தொட்(டு) அகழ்ந்(து)அதிற் சோறுகள் அருந்தும்அங்(கு) ஒருபால்:]

இ — ள்: புள் தரு குலம் தொறும் பயில் பொங்கு இருள் புனத்தில்— பட்சிகள் விருட்சங்கடோறும் வசிக்கின்ற மிக்க இருள்நிறைந்த வனத்தில், தழல் பொறி கண் கூர் உகிர் கவிழ் தலை உளியம் — அக்கினிப் பொறி போன்ற கண்களையும் கூரிய நகங்களையும் கவிழ்ந்த தலையையுமுடைய கரடிகள், மட்டு அற சிதல் எடுத்து — அளவற்ற கறையான்களாலெடுக்கப்பட்டு, உயர் பாழி வன்மீகம் தொட்டு அகழ்ந்து — உயர்ந்த பாழிகளையுடைய புற்றுகளைத் தோண்டிக் குடைந்து, அதில் சோறுகள் எடுத்து — அங்குள்ள புற்றுஞ் சோறுகளையெடுத்து, அங்கு ஒருபால் அருந்தும் — ஆங்கே ஓரிடத்து உண்ணும் எ — று. (13)

துறும யிர்ச்செறி மடிசெவித் துடிக்குரற் செந்நாய்
தெறுசி னத்துடன் சிலீமுகஞ் செல்கதி யினிற்சென்
றுறுசெ வித்துணை நிமிர்த்துகள் குமிழிநே ரொண்கட்
குறுமு யச்சிறு குருளையைத் துரத்திடு மொருபால்.

[துறுமயிர்செறி மடிசெவித் துடிக்குரல் செந்நாய்
தெறுசினத்துடன் சிலீமுகம் செல்கதி யினில்சென்(று)
உறுசெவித்துணை நிமிர்த்(து) உகள்குமிழிநேர் ஒண்கண்
குறுமுயல்சிறு குருளையைத் துரத்திடும் ஒருபால்.]

இ — ள்: துறு செறி மயிர் மடி செவி துடி குரல் செந்நாய் — நெருங்கி அடர்ந்த மயிரையும் மடிந்த செவியையும் அஞ்சுதற்கேற்ற குரலையுமுடைய செந்நாய்கள், தெறு சினத்துடன் சிலீமுகம் செல் கதியினில் சென்று — கடுங் கோபத்துடன் அம்புகள்செல்லுகின்ற வேகத்தைப்போல விரைந்துசென்று, உறு செவி துணை நிமிர்த்து உகள் குமிழி நேர் ஒண் கண் குறுமுயல் சிறு குருளையை — பொருந்திய இரண்டு செவிகளையும் நெறித்துக்கொண்டு பாய்கின்ற நீர்க்குமிழியையொத்த ஒளிபொருந்திய கண்களையுடைய குறுத்த சிறிய முயற் குட்டிகளை, துரத்திடும் ஒருபால் — துரத்திச்செல்லும் ஓர் பக்கத்தில் எ — று. (14)

வளைந்த வாலுளை மடங்கல்கைம் மாவின்மத் தகத்தைப்
பிளந்து கோடுகள் பிடுங்கியே கறித்திடத் தெறித்து
விளங்கு நித்திலஞ் சோரியிற் றுவண்டதால் விரிமா
துளஞ்செ ழுங்கனி விதையெனத் துளங்குமங் கொருபால்.

[வளைந்த வால்உளை மடங்கல் கை மாவின்மத் தகத்தைப்
பிளந்து கோடுகள் பிடுங்கியே கறித்திடத் தெறித்து
விளங்கு நித்திலம் சோரியில் துவண்டதால் விரிமா
துளம்செ ழுங்கனி விதைஎனத் துளங்கும் அங்(கு) ஒருபால்.]

இ — ள்: வளைந்த வால் உளை மடங்கல் — வளைந்த வாலையும் பிடர் மயிரையுமுடைய சிங்கம், கை மாவின் மத்தகத்தை பிளந்து — யானையினுடைய சிரசையுடைத்து, கோடுகள் பிடுங்கி கறித்திட — கொம்புகளைப் பிடுங்கிக் கடித்தலினால், தெறித்து விளங்கு நித்திலம் — நிலத்திலே சிதறிக் கிடந்து பிரகாசிக்கின்ற முத்துக்கள், சோரியில் துவண்டதால் — இரத்தத்திற் றோய்ந்தமையால், விரி செழும் மாதுளம் கனி விதை என — (வெடித்து) விரிந்த செழுமையாகிய மாதுளம்பழங்களினது வித்துக்களைப்போல, துளங்கும் அங்கு ஒருபால் — பிரகாசிக்கும் அங்கோர் பக்கத்தில் எ — று.

ஏ அசை. (15)

இடிமு கிற்குரற் றழைசெவித் துணைமருப் பேய்ந்த
கடிசி னப்புழைக் கரக்கடக் கவுட்பெருங் களிறு
துடிய டிக்கய முனிகள்பின் றொடர்ந்திடத் துன்னும்
பிடிந திப்புனல் படிந்துடன் பிளிறுமங் கொருபால்.

[இடிமு கில்குரல் தழைசெவித் துணைமருப்(பு) ஏய்ந்த
கடிசினப் புழைக் கரக்கட கவுள்பெரும் களிறு
துடிஅடிக் கயமுனிகள்பின் தொடர்ந்திடத் துன்னும்
பிடிநதிப் புனல் படிந்துடன் பிளிறும்அங்(கு) ஒருபால்.]

இ — ள்: இடி முகில் குரல் — மேகத்தினிடியைப்போன்ற சத்தத்தையும், தழை செவி — தழைத்த செவிகளையும், துணை மருப்பு — இரண்டு கொம்புகளையும், கடி ஏய்ந்த சினம் — அச்சத்தை வருவிக்கின்ற கோபத்தையும், புழை கரம் — துதிக்கையையும், கட கவுள் பெரும் களிறு — மதம் பாயும் கபோலங்களையுமுடைய பெரிய ஆண் யானைகளும், துடி அடி கயமுனிகள் பின் தொடர்ந்திட துன்னும் பிடி — உடுக்குப்போன்ற அடிகளையுடைய யானைக் கன்றுகள் பின்தொடர்ந்துவர நெருங்கிச் செல்கின்ற பெண் யானைகளும், நதி புனல் படிந்து — ஆற்றுச் சலத்திற்றோய்ந்து, உடன் பிளிறும் அங்கு ஒரு பால் — ஒன்றோய்க்கூடிச் சத்திக்கும் அங்கோர் பக்கத்தில் எ — று. (16)

முழைக்கட் டுஞ்சிடு கொடுவரிப் புலியின முழங்கி
யுழைத்த பேரொலி கேட்டுவல் லுளிமரை வரையா
டிழைத்த காரிரும் பெண்ணவே நீண்டகோட் டிரலை
யுழைக்கு லம்பயந் தொதுங்கியே யொடுங்குமங் கொருபால்.

[முழைக்கண் துஞ்சிடு கொடுவரிப் புலிஇனம் முழங்கி
உழைத்த பேரொலி கேட்டுவல்லுளிமரை வரையா(டு)
இழைத்த கார்இரும்(பு) என்னவே நீண்டகோட்(டு)இரலை
உழைக்குலம்பயந்(து) ஒதுங்கியே ஒடுங்கும் அங்(கு) ஒருபால்.]

இ — ள்: முழை கண் துஞ்சிடும் கொடு வரி புலி இனம் முழங்கி உழைத்த பேர் ஒலி கேட்டு — மலைக்குகைகளிலே உறங்குகின்ற வளைந்த வரிகளையுடைய புலிக்கூட்டங்களானவை உறுமுதலாலுண்டாகிய பெரிய சத்தத்தைக் கேட்டு, வல்லுளி — பன்றிகளும், மரை — மரைகளும், வரை ஆடு — மலையாடுகளும், இழைத்த கார் இரும்பு என்ன நீண்ட கோட்டு இரலை — கரிய இரும்பினாற் செய்யப்பட்டாற்போன்ற நீண்ட கொம்புகளையுடைய கலைமான்களும், உழை குலம் — மான் கூட்டங்களும், பயந்து ஒடுங்கி ஒதுங்கும் அங்கு ஒருபால் — பயந்து ஒடுங்கிப் பதுங்கும் அங்கோர் பக்கத்தில் எ — று.

ஏ இரண்டும் அசைகள். (17)

நீடு வேற்கரக் குமரவே ணெடியமா குலங்க
ளூடு வைத்தபல் லாயிரஞ் சுடர்விளக் கொப்பப்
பாடு சேர்படம் விரித்துயிர்ப் பெறிந்துநற் படிநின்
றாடு நாகநன் மணிகிடந் தவிருமங் கொருபால்.

[நீடு வேற்கரக் குமரவேள் நெடிய மாகுலங்கள்
ஊடு வைத்தபல் ஆயிரம் சுடர்விளக்(கு) ஒப்பப்
பாடு சேர்படம் விரித்(து) உயிர்ப்(பு) எறிந்துநல்படிநின்(று)
ஆடு நாகநன் மணிகிடந்(து) அவிரும் அங்(கு) ஒருபால்.]

இ — ள்: நீடு வேல் கர குமரவேள் நெடிய மா குலங்கள் ஊடு வைத்த — நீண்ட வேற்படையைத் தாங்கிய திருக்கரத்தையுடைய சுப்பிரமணியக் கடவுளது பெருமைபொருந்திய திருவாலயங்களில் ஏற்றப்பட்ட, பல் ஆயிரம் சுடர் விளக்கு ஒப்ப — அளவற்ற ஆயிரக்கணக்கான ஒளிவிளங்குகின்ற தீபங்களுக்குச் சமானமாக, பாடுசேர் படம் விரித்து உயிர்ப்பு எறிந்து — அகன்ற படங்களை விரித்து மூச்செறிந்து, நல் படியில்நின்று ஆடும் நாக நல்மணி கிடந்து அவிரும் அங்கு ஒருபால் — நல்ல பூமியிலேநின்று ஆடுகின்ற சர்ப்பங்களின் நல்ல இரத்தினங்கள் கிடந்து பிரகாசிக்கும் அங்கோர் பக்கத்தில் எ — று. (18)

வேறு

இத்திற நிகழும் வனத்திலவ் வேடனிருஞ்சிறைப் புட்குலம் படுக்குங்
குத்திரக் கண்ணி பற்பல வுன்றிக் குலவுமா வினங் கொலைபுரிவான்
புத்தியி னியற்று மியந்திரப் பொறிகள் புடவியிற் புதைத்துய ரடவிப்
பத்திர மரத்தி னடிகளிற் ரொடுத்துப் பலவலை வளைவுறப் பூட்டி.

[இத்திறம் நிகழும் வனத்தில்அவ்வேடன் இருஞ்சிறைப் புட்குலம் படுக்கும்
குத்திரக் கண்ணி பற்பல வுன்றிக் குலவுமா இனம்கொலை புரிவான்
புத்தியில் இயற்றும் இயந்திரப் பொறிகள் புடவியிற் புதைத்(து) உயர்அடவிப்
பத்திர மரத்தின் அடிகளில் தொடுத்துப் பலவலை வளைவுஉறப் பூட்டி.]

இ — ள்: இத்திறம் நிகழும் வனத்தில் — இவ்வாருக நடைபெறுகின்ற அக்காட்டின் கண்ணே, அவ்வேடன் — அந்த அங்குலன், குலவும் மா இனம் கொலை புரிவான் — உலாவுகின்ற மிருகக் கூட்டங்களைக் கொலைசெய்யும் பொருட்டு, இரும் சிறை புள் குலம் படுக்கும் குத்திர கண்ணி பல்பல வுன்றி — பெருமைபொருந்திய சிறகுகளையுடைய பட்சிக்குழாங்களை அகப்படுத்துகின்ற வஞ்சகமாகிய பலபல கண்ணிகளைப் பதித்தும், புத்தியில் இயற்றும் இயந்திரப் பொறிகள் புடவியில் புதைத்து — யூகமாகச் செய்யப் பட்ட இயந்திரப் பொறிகளைப் பூமியில் மறையப் புதைத்தும், உயர் அடவி பத்திர மரத்தின் அடிகளில் பல வலை தொடுத்து வளைவு உற பூட்டி — உயர்ந்த காட்டிலுள்ள இலைகள் நிறைந்த மரங்களின் அடிகளில் பல வலைகளைத் தொடுத்து வளைத்துக் கட்டியும் எ — று. (19)

மடிசெவி வளைவான் ஞாளிக ளேவி வாளிக டுரந்துபின் குறிய
தடிகளி னெறிந்து கற்றிர ளிருத்துந் தட்டைகள் சுற்றியே வீசிச்
செடிவளர் வனத்தில் விலங்குகள் கலங்கச் செய்தலன்று ரத்தலும் வலையி
னடிகளிற் பிணிக்கப் புதைத்திடும் பொறியி லகப்படா தகன்றவங் களைத்தும்:

[மடிசெவி வளைவால் ஞாளிகள் ஏவி வாளிகள் துரந்துபின் குறிய
தடிகளின் எறிந்து கல்திரள் இருத்தும் தட்டைகள் சுற்றியே வீசி
செடிவளர் வனத்தில் விலங்குகள் கலங்கச் செய்(து) அவன் துரத்தலும் வலையின்
அடிகளில் பிணிக்கப் புதைத்திடும் பொறியில் அகப்படா(து) அகன்றஅங்(கு) அனைத்தும்.]

இ — ள்: மடி செவி வளை வால் ஞாளிகள் ஏவி — மடிந்த செவிகளையும் வளைந்த வால்களையுமுடைய நாய்களை யேவிவிட்டும், வாளிகள் துரந்து — அம்புகளைச் செலுத்தியும், பின் குறிய தடிகளின் எறிந்து — பின்பு குறுகிய தடிகளிலெறிந்தும், திரள் கல் இருத்தும் தட்டைகள் சுற்றியே வீசி — திரண்ட கற்கள் வைக்கப்பட்ட கவண்களைச் சுற்றி வீசியும், செடி வளர் வனத்தில் விலங்குகள் கலங்க செய்து அவன் துரத்தலும் — செடிகள் வளர்ந்த அக்காட்டில் மிருகங்களைக் கலங்கும்படி செய்து அவன் துரத்தவும்,

வலியின் அடிகளில் பிணிக்க புதைத்திடும் பொறியில் அகப்படாது — வலியின் கீழ்ப்பக்கங்களில் கட்டும்படி புதைக்கப்பட்ட கண்ணிகளில் அகப்படாமல், அங்கு அனைத்தும் அகன்ற — அவ்விடத்து எல்லா மிருகங்களும் பிழைத்தோடின எ — று. (20)

புன்புல வருந்துந் தந்தவாய் திறந்து பொதும்பரிற் புகுந்து மாவினங்கண்
மென்சிறைப் பறவைக் குலமெலா மருள விளித்தலை போலதின் றழைக்குந்
துன்புட னுழையின் கவையடி மிதித்த சுவடுகண் டந்நெறித் தொடரு
மென்செய்கே னினியென் றங்கைகள் வங்கி லிடும்புகு முடும்புநே டற்கே.

[புன்புல(வு) அருந்தும் தந்தவாய் திறந்து பொதும்பரில் புகுந்துமா இனங்கள்
மென்சிறைப் பறவைக் குலம் எலாம் மருள விளித்(து) அலை போலதின்(று) அழைக்கும்
துன்புடன் உழையின் கவையடி மிதித்த சுவடு கண்(டு) அந்நெறித் தொடரும்
என்செய்கேன் இனிஎன்(று) அங்கைகள் வங்கில் இடும்புகும் உடும்பு நேடற்கே.]

இ — ள்: பொதும்பரில் புகுந்து — சோலைகளிற் சென்று, புன் புலவு அருந்தும் தந்த வாய் திறந்து — எளிய மாமிசத்தை யுண்ணுகின்ற பற்களையுடைய வாயைத் திறந்து, மா இனங்கள் மென்சிறை பறவை குலம் எலாம் மருள அவை போல விளித்துநின்று அழைக்கும் — கூட்டமாகிய மிருகங்களும் மிருதுவாகிய சிறகுகளையுடைய பட்சிக்கூட்டங்களும் முற்றமருளும்படி அவ்வம் மிருகங்களும் அவ்வப் பட்சிகளும்போலக் கத்தியழைப்பான், துன்பு உடன் — மனக்கவலையோடு, உழையின் கவை அடி மிதித்த சுவடு கண்டு அந்நெறி தொடரும் — மான்களின் பிளவாகிய கால்கள் மிதிக்கப்பட்ட சுவட்டைப் பார்த்து அந்தவழியே தொடர்ந்து செல்வன், இனி என் செய்கேன் என்று — இனிமேல் நான் யாதுசெய்வேனென்று துன்புற்று, புகும் உடும்பு நேடற்கு அம் கைகள் வங்கில் இடும் — புகுந்திருக்கின்ற உடும்புகளைத் தேடும்பொருட்டு அழகிய தன் கைகளைப் புற்றிற் செலுத்துவன் எ — று.

ஏ - அசை. (21)

வார்சிலை வணக்கி விடுத்திடும்வயிர வாளியான் ஞாளியால் வயங்கும்
கோரவெங் குந்தப் படையினுற் றிரண்ட கொடுங்கடுங் கதையினுற் குணிலா
லேர்பெறும் பெருங்கண் வலியினுற் புதைத்த வியந்திரப் பொறியினு லெதிர்ந்தன்
கோர்விலங் கோர்புட் கொன்றிடக் கிடையா துள்ளுறு கவலையுற் றுடைந்தான்.

[வார்சிலை வணக்கி விடுத்திடும் வயிர வாளியால் ஞாளியால் வயங்கும்
கோரவெங் குந்தப் படையினுல் திரண்ட கொடுங்கடுங் கதையினுல் குணிலால்
ஏர்பெறும் பெருங்கண் வலியினுல் புதைத்த இயந்திரப் பொறியினுல் எதிர்த்(து) அன்(கு)
ஓர்விலங்(கு) ஓர்புள் கொன்றிடக் கிடையாது உள்உறு கவலைஉற்(று) உடைந்தான்.]

இ — ள்: வார்சிலே வணக்கி விடுத்திடும் வயிர வாளியால் — நீண்ட வில்லை வளைத்துச் செலுத்திய வயிரமாகிய அம்புகளினாலும், ஞாளியால் — நாய்களினாலும், வயங்கும் கோர வெம் குந்த படையினால் — பிரகாசிக்கின்ற உக்கிரமாகிய கொடிய கைவேலினாலும், திரண்ட கொடும் கடும் கதையினால் — திரட்சியான கொடிய வேகமாகிய தண்டாயுதத்தினாலும், குணி வால் — குறுந்தடியினாலும், ஏர் பெறும் பெரும் கண் வலையினால் — அழகிய பருத்த கண்களையுடைய வலைகளினாலும், புதைத்த இயந்திரப் பொறியினால்— நிலத்தில் பதித்துவைத்த சூத்திரப் பொறிகளினாலும், எதிர்ந்து அங்கு ஓர் விலங்கு ஓர் புள் கொன்றிட கிடையாது — எதிராக அவ்விடத்தே ஒரு மிருகமாவது ஒரு பட்சியாவது கொலைபுரிதற்கு வரப்பெறுமல், உள் உறு கவலை உற்று உடைந்தான் — உள்ளாகப் பொருந்திய கவலையினால் மனக் கலக்கமடைந்தான் எ — று. (22)

இன்னணம் வேட்டத் துலைந்தவன் மேனியினைத்திடத் தழைத்தகட் டெழுந்து
துன்னரு முதரத் தழல்சுட மெலிந்து சோகமோ டிருந்தபின் பரமன்
பன்னரு மிரவி தென்றறிந் தவன்போற்பதங்களைர் பதங்கொடேர் கடவி
மன்னெடுங் கயிலை மலிவலங் கொள்வான் வாருண திசையத்தின் மறைந்தான்.

[இன்னணம் வேட்டத்(து) உலைந்தவன் மேனி இனைத்திடத் தழைத்(து) அகட்(டு) எழுந்து துன்னரும் உதரத்தழல்சுட மெலிந்து சோகமோ(டு) இருந்தபின் பரமன் பன்னரும் இர(வு)ஈ(து) என்(று) அறிந்தவன்போல் பதங்கள்ஓர் பதங்கொன்தேர் கடவி மன் நெடுங்கயிலை மலிவலங் கொள்வான் வாருண திசை யத்தின் மறைந்தான்.]

இ — ள்: இன்னணம் வேட்டத்து உலைந்தவன் — இவ்விதமாக வேட்டையினால் அலைந்த அங்குலன், மேனி இனைத்திட — சரீரங் களைகொள்ள, தழைத்து அகட்டு எழுந்து துன்னரும் உதரத்து அழல் சுட — சுவாலித்து வயிற்றிலெழுந்து சகித்தற்கரிய உதராக்கினியானது சுட, மெலிந்து சோக மோடு இருந்தபின் — வாடித் துக்கத்தோடு இருந்த பின்பு, பதங்கள் — சூரியனனவன், பரமன் பன்னரும் இரவு ஈது என்று அறிந்தவன்போல் — சிவபிரானது சொல்லுதற்கரிய சிவராத்திரி தினம் இதுவென்று அறிந்தவனைப் போல, ஓர் பதம் கொள் தேர் கடவி — ஒற்றைச் சக்கரத்தைக்கொண்ட தனது இரதத்தைச் செலுத்தி, மன் நெடும் கயிலை மலி வலம் கொள்வான் — நிலைபெற்ற நெடிய கைலாயகிரியை பிரதக்ஷிணம் செய்யும்படி, வாருண திசையத்தின் மறைந்தான் — மேற்றிசையில் அஸ்தமனமாயினன் எ — று. (23)

கொய்யுளைப் பரியேழ் கொளுவுமோ ராழிக் கொடுஞ்சிய்த் தேரொடு குடபால்
வெய்யவன் கற்றைக் கதிர்க்கரஞ் சுருக்கி விரிதிரைப் புணரிவீழ்ந் திடலுஞ்
செய்யகோ லோச்சி யுலகினி தளிக்குந் திறன்மிகு மரசர்போ யொதுங்க
வய்யமா ளுதற்குக் குறுநில வேந்து வந்தபோல் வந்ததான் மாலை.

[கொய்யுளைப் பரியேழ் கொளுவும்ஓர் ஆழிக் கொடிஞ்சிஅம் தேரொடு குடபால்
வெய்யவன் கற்றைக் கதிர்க்கரம் சுருக்கி விரிதிரைப் புணரிவீழ்ந் திடலும்
செய்யகோல் ஓச்சி உல(கு)இனி(து) அளிக்கும் திறல்மிகும் அரசர்போய் ஒதுங்க
வய்யம் ஆளுதற்குக் குறுநில வேந்து வந்தபோல் வந்ததால் மாலே.]

இ — ள்: வெய்யவன் கொய்யுளை ஏழ் பரி கொளுவும் ஓர் ஆழி கொடிஞ்சி அம் தேரொடு — சூரியனனவன் கொய்துவெட்டப்பட்ட உயிர மயிரையுடைய ஏழு குதிரையூண்ட ஒற்றைச் சக்கரத்தைக்கொண்ட கூம்புகள் பொருந்திய அழகிய இரதத்தோடு, குட பால் கற்றை கதிர் கரம் சுருக்கி விரிதிரை புணரி வீழ்ந்திடலும் — மேற்றிசையின்கண் கூட்டமாகிய ஒளி பொருந்திய கிரணங்களையொடுக்கி விரிந்த திரைகளையுடைய சமுத்திரத்தில் அமிழ்ந்துதலும், செய்ய கோல் ஓச்சி உலகு இனிது அளிக்கும் திறல் மிகும் அரசர் போய் ஒதுங்க — செங்கோல் செலுத்தி உலகத்தை நன்கு பரிபாலனம் செய்கின்ற வலிமை மிகுந்த பேரரசரொடுங்கிப்போக, வய்யம் ஆளுதற்கு குறு நிலவேந்து வந்த போல் — பூமியை ஆளுதற்குச் சிற்றரசர்கள் வந்தாற்போல, மாலே வந்தது — மாலைக்காலம் வந்து தோற்றியது எ — று.

ஆல் அசை. (24)

ஓருருட் டேரோன் குடதிசைக் கடலி லொளித்துறக் குளித்ததற் பின்னர்
வாருறு வரிவிற் றடக்கையங் குலன்றன் வடிவுநன் னகற்றிவெந் தீமை
கூருறு மவன்றன் செய்கைகுத் திரங்கள் குடிகொளு முளமும்போற் கருகிப்
பேருல கனைத்தும் விழுங்கிமா திரம்விண் புதைத்தது காரிருட் பிழம்பே.

[ஓர் உருள் தேரோன் குடதிசைக் கடலில் ஒளித்(து) உறக் குளித்ததன் பின்னர்
வார் உறு வரிவில் தடக்கைஅங் குலன்தன் வடிவுநன்(கு) அகற்றிவெந் தீமை
கூர்உறும் அவன்தன்செய்கை குத்திரங்கள் குடிகொளும் உளமும்போல் கருகி
பேருல(கு) அனைத்தும் விழுங்கிமா திரம்விண் புதைத்தது காரிருள் பிழம்பே.]

இ — ள்: கார் இருள் பிழம்பு — கரியவிருட் கூட்டமானது, ஓருருள் தேரோன் குடதிசை கடலில் ஒளித்து உற குளித்ததன் பின்னர் — ஒற்றைச் சக்கரத்தைக்கொண்ட தேரையுடைய சூரியன் மேற்றிசைச் சமுத்திரத்தின்கண் மறைந்து முற்ற அமிழ்ந்திய பின்பு, வார் உறு வரிவில் தடக்கை அங்குலன் தன்வடிவும் — நீண்ட வரிந்துகட்டிய வில்லையுடைய விசாலமாகிய கையைக்கொண்ட அங்குலனது சரீரத்தையும், நன்கு அகற்றி வெம் தீமை கூர் உறும் அவன் தன் குத்திர செய்கைகள் குடிகொளும் உளம் போல் கருகி — நன்மையை முற்றவிலக்கிக் கொடிய நிஷ்டூரங்களதிகரிக்கப்பெற்ற அவனுடைய குத்திரமாகிய செய்கைகள் குடிகொண்டிருக்கின்ற மனத்தையும் போலக் கருநிறமாகி, பேர் உலகு அனைத்தும் விழுங்கி மாதிரம் விண் புதைத்தது — பெரிய பூமிமுழுவதையும் தன்னுளடக்கித் திக்குகளையும் ஆகாயத்தையும் மறைவுசெய்தது எ — று.

ஏ - அசை. (25)

குனிசிலைச் சவரர்குலத்தினி லுதித்துக் கொடுங்கொலை புரிந்தவங் குலனுந்
தனியிருந் தாண்டு மீண்டியா மெய்தச் சரிதெரி யாதிவண் டரிக்கி
லினியவ ணின்றி மனைவியுஞ் சிறுவ ரிருவரும் பசிப்ப, ரென்றிரங்கித்
துனியுற லொழிந்து தெளித்துளந் தேறிச் சொல்லருஞ் சூட்சியொன் றுணர்ந்தான்:

[குனிசிலைச் சவரர் குலத்தினில் உதித்துக் கொடுங் கொலை புரிந்தஅங் குலனும்
தனிஇருந்(து) ஆண்டுமீண்(டு)யாம் எய்தச் சரிதெரியா(து) இவண் தரிக்கில்
இனிய வன்இன்றி மனைவியும் சிறுவர் இருவரும் பசிப்பர் என்(று) இரங்கி
துனிஉறல் ஒழிந்து தெளித்(து) உளம்தேறிச்சொல்லரும் சூட்சிஒன்(று) உணர்ந்தான்.]

இ — ள்: குனி சிலை சவரர் குலத்தினில் உதித்து கொடும் கொலை புரிந்த அங்குலனும் — வளைந்த வில்லையுடைய வேட்டுவர் குலத்திற்றோன்றிக் கொடிய கொலைத்தொழிலைச் செய்த அங்குலனும், ஆண்டு தனி இருந்து — அவ்விடத்தே தனித்தவனுயிருந்து, இவண் தரிக்கில் மீண்டு யாம் எய்த சரிதெரியாது — இவ்விடத்தில் தங்குவேனுயின் திரும்பி யான் செல்லுவதற்கும் வழிதெரியாது, இனிய வண் இன்றி மனைவியும் சிறுவர் இருவரும் பசிப்பர் என்று இரங்கி — இனிய உணவு இல்லாமையால் எனது மனைவியும் புத்திரர்களிருவரும் பசியால் வருந்துவர்களென்றும் மனவிரக்கங்கொண்டு, துனி உறல் ஒழிந்து — பின்னர் துன்புறுதலைத் தவிர்ந்து, உளம் தெளிந்து தேறி — மனத்தெளிவடைந்து துணிந்து, சொல்லரும் சூட்சி ஒன்று உணர்ந்தான் — பகர்தற்கரிய உபாயமொன்றை ஆலோசித்தனன் எ — று. (26)

பாவியேன் வாளா வெறுங்கையோ டெய்திற் பயனிலை பனியிருட் பொழுதில்
வாவிக டருவிக் குளிர்புனல் பருக வருமிரு ங்களுக் கயிலம்
பேவியே வதைத்துத் தடிகொடு போத லியல்பென மதித்துட னெழுந்து
தூவியஞ் சிறைப்புட் குலம்பயின் றிடுமோர் சூழியின் கரைக்கணுற் றனனே:

[பாவியேன் வாளா வெறுங்கையோ(டு) எய்தில் பயன்இலை பனிஇருள் பொழுதில்
வாவிகள் தருவிக் குளிர்புனல் பருக வருமிருகங்களுக்(கு) அயில் அம்(பு)
ஏவியே வதைத்துத் தடிகொடு போதல் இயல்பென மதித்(து) உடன் எழுந்து
தூவிஅம் சிறைப்புள் குலம்பயின்றிடும்ஓர் சூழியின் கரைக்கண் உற்றனனே:]

இ — ள்: பாவியேன் வாளா வெறும் கையோடு எய்தில் பயன் இலை — பாவியாகிய யான் விருதாவாகக் கையிலொன்றுமின்றிச் செல்வதிற் பிரயோசனமில்லை, பனி இருள் பொழுதில் — பனிநிறைந்த இருளிலே, வாவிகள் தருவி குளிர் புனல் பருக வரு மிருகங்களுக்கு — தடாகங்களைத் தேடிக் குளிர்ச்சிபொருந்திய சலத்தையுண்ணும்படி வருகின்ற மிருகங்களுக்கு, அயில் அப்பு ஏவி வதைத்து — கூரிய அம்புகளைச் செலுத்திக் கொலைசெய்து, தடி கொடு போதல் இயல்பு என மதித்து — இறைச்சியைக் கொண்டுபோதலே தக்கதென்று தீர்மானித்து, உடன் எழுந்து — உடனே அவ்விடம்விட்டெழுந்து,

தூவி அம் சிறை புள் குலம் பயின்றிடும் — தூவியையுடைய அழகிய சிறகு பொருந்திய பட்சிசாலங்கள் வாசஞ்செய்கின்ற, ஓர் சூழியின் கரைக்கண் உற்றனன் — ஒரு தடாகக்கரையை யடைந்தனன் எ — று.

ஏ இரண்டும் அசைகள். (27)

முறுகிய சினக்கோ ளரிவயப் புலிவெம் மும்மதக் கரடமால் யானை
குறுகுமென் றஞ்சிப் பாழிநீர்ச் சூழிக் கோட்டுறு கூவிளக்கோட்டி
லுறுவனென் றேறிச் சுரிகையான் மறைக்கு முலவைக ளரிந்தரிந் தொதுக்கி
மறுகிய மனத்தா னேனமான் மரைகள்வருமென வரவுபார்த் திருந்தான்.

[முறுகிய சினக்கோ ளரி வயப் புலிவெம் மும்மதக் கரடமால் யானை
குறுகும் என்(று) அஞ்சிப் பாழிநீர்ச் சூழிக் கோடுறு கூவிளக் கோட்டில்
உறுவன் என்(று) ஏறிச் சுரிகையால் மறைக்கும் உலவைகள் அரிந்(து) அரிந்(து) ஒதுக்கி
மறுகிய மனத்தான் ஏனம்மான் மரைகள் வருமென வரவுபார்த்(து) இருந்தான்.]

இ — ள்: முறுகிய சின கோளரி வயப்புலி வெம் மும்மத கரட மால் யானை குறுகும் என்று அஞ்சி — மிக்க கோபத்தையுடைய சிங்கங்களும் வலிய புலிகளும் கன்னமதம் கோசமதம் கைமதமாகிய மும்மதங்களும் பாய்கின்ற கவடுகளையுடைய பெரிய யானைகளும் வருமென்று பயந்து, பாழி நீர் சூழி கோட்டு உறு கூவிள கோட்டில் உறுவன் என்று ஏறி — ஆழமாகிய நீரை யுடைய அத்தடாகக் கரையில் நிற்கின்ற வில்வமரக்கொம்பில் மறைந்திருப் பேனென்று ஏறி, சுரிகையால் மறைக்கும் உலவைகள் அரிந்து அரிந்து ஒதுக்கி — உடைவாளினால் தனது கண்களை மறைக்கின்ற தழைகளை வெட்டி வெட்டியொதுக்கி, ஏனம் மான் மரைகள் வரும் என—பன்றிகளும் மான்களும் மரைகளும் வருமென்று, மறுகிய மனத்தான் — தளர்ந்த மனத்தையுடைய வனாய், வரவு பார்த்து இருந்தான் — அவைகளின் வருகையை எதிர்பார்த் திருந்தனன் எ — று. (28)

•

வடிசெய்து வகுத்த வைதிகசைவ வழிமொழி வழாமன்மந் திரத்தாற்
படியின்முற் பகலோர் முனிவரன்பூசை பண்ணிய தெண்ணிய படியே
கடியவெந்தொழிற்செய் கிராதனுங் காணுங் கவடுவிட்டுயர்மா ரூரத்
தடியினுக் கருகிற் புராதன விலிங்க மமர்ந்தினி திருந்ததொன் றன்றே.

[வடிசெய்து வகுத்த வைதிகசைவ வழிமொழி வழாமல் மந்திரத்தால்
படியில்முற் பகல்ஓர் முனிவரன் பூசை பண்ணிய(து) எண்ணிய படியே
கடியவெம் தொழில்செய் கிராதனும் காணுங் கவடுவிட்(டு)உயர்மா ரூரத்(து)
அடியினுக்(கு) அருகில்புராதன இலிங்கம் அமர்ந்(து)இனி(து) இருந்த(து)ஒன்(று)அன்றே.]

இ — ள்: வடி செய்து வகுத்த வைதிக சைவ வழி மொழி வழாமல் — கழங்கமற வகுக்கப்பட்ட வேதாகமங்களின் விதிமுறை தவறுமல், மந்திரத் தால் படியில் முன்பகல் ஓர் முனிவரன் பூசைபண்ணிய புராதன இலிங்கம் ஒன்று — மந்திரங்களோயுச்சரித்து பூமியின் கண்ணே முன்னேக்காலத்து ஒருமுனிவ ராற் பூசிக்கப்பட்ட பழைய சிவலிங்கமொன்று, கவடுவிட்டு உயரும் மாவாரத்து அடியினுக்கு அருகில் — கொம்பர்கள் விட்டுயர்ந்த வில்வமரத்தினடியின் பக் கத்தில், அமர்ந்து இனிது இருந்தது, — எழுந்தருளி நன்மையாகவிருந்தது, எண்ணியபடியே கடியவெம் தொழில் செய் கிராதனும் காணுன் — தன் மனத்திலெண்ணிய எண்ணத்தின்படியே கொடிய நீத்தொழில்களேச் செய்பவ னுகிய அவ்வேடனும் (அதனேக்) கண்டிலன் எ — று;

அன்று ஏ அசைகள். (29)

அன்றர னிரவென் றறிந்திலன் றொடுக்கு மம்பிடை தடுக்குமென் றறித்து
தன்றடங் கையா லெறிந்தபைந் தழையுந் தனியிருந் திடிற்றுயில் வருமே
யென்றதுவிலக்கி யிருட்பொழுதகற்றற் கெண்ணினன் கொய்துவிட் டெறிந்த
மென்றழை முழுதும் பழுதிலவ் விலிங்க வியன்முடி மீதுவீழ்ந் தனவே.

அன்(று)அரன் இர(வு)என்(று) அறிந்திலன் தொடுக்கும் அம்(பு) இடை தடுக்கும்என்(று)அறி தன்தடம் கையால் எறிந்தபைந் தழையும் தனிஇருந் திடில்துயில் வருமே [ந்த என்(று)அது விலக்கி இருள்பொழு(து) அகற்றற்(கு) எண்ணினன் கொய்துவிட்டு எறிந்த மென்தழை முழுதும் பழு(து)இல்அவ் இலிங்க வியன்முடி மீதுவீழ்ந் தனவே.]

இ — ள்: அன்று அரன் இரவு என்று அறிந்திலன் — அத்தினம் சிவராத்திரிதினமென்று அறியாது, தொடுக்கும் அம்பு இடை தடுக்கும் என்று அறிந்து — செலுத்தப்படுகின்ற அம்புகளே இடையிலே தடைசெய்யு மெனக்கருதி, தன் தடம் கையால் எறிந்த பைம் தழையும் — தன்னுடைய விசாலமாகிய கைகளினுல் பறித்து எறிந்த பசியதழைகளும், தனி இருந் திடில் துயில் வருமே என்று — தனித்துத் தொழிலின்றியிருந்தேனுகில் நித் திரை வருமேயென்று நினேந்து, அது விலக்கி இருள் பொழுது அகற்றற்கு எண்ணினன் — அந்நித்திரையை நீக்கி அவ்விரவை கழித்தற்கு எண்ணினவ னுய், கொய்துவிட்டு எறிந்த மென் தழை முழுதும் — பறித்துவிட்டெறிந்த மிருதுவாகிய தழைகள் முழுவதும், பழுது இல் அவ் இலிங்க வியன் முடி மீது வீழ்ந்தன — குற்றமில்லாத அச்சிவலிங்கத்தின் பெருமை தங்கிய திரு முடியின்மேல் விழுந்தன எ — று.

ஏ அசை. (30)

குறுந்துளித் திவலிப் பனிநனி மூழ்கிக் கொடும்பசிக் கருந்திடாதொழிந்தா
னுறுந்துயி றுறந்து புராரிசந் நிதியி லூறின்மா லூரவெண் டழையாற்
றெறுந்தழ னுதற்கட் சிவநிசி யதனிற் சிவார்ச்சனே புரிந்துவெந் தீமை
யறுந்தவ முடையோ ரொத்தனன் வேடன் கொடிச்சென் றிறமினி யறைவாம்:

[குறுந்துளித் திவலைப் பனிநனி மூழ்கிக் கொடும்பசிக்(கு) அருந்திடா(து) ஒழிந்(து) உறுந்துயில் துறந்து புராரி,சந் நிதியில் ஊறுஇல் மாலூரவெண் தழையால் [ஊண் தெறுந்தழல் நுதற்கண் சிவநிசி அதனில் சிவார்ச்சனை புரிந்துவெம் தீமை அறுந்தவம் உடையோர் ஒத்தனன் வேடன்,கொடிச்சிதன் திறம்இனி அறைவாம்]

இ — ள் : வேடன் — அவ்வங்குலன், குறும் துளி திவலை பனி நனி மூழ்கி — சிறிய துள்ளிகளாய்ச் சிந்துகின்ற பனியில் மிகவும் நனைந்து, கொடும்பசிக்கு அருந்திடாது ஊண் ஒழிந்து — கொடிய பசியைத் தணித்தற்கு உணவுகொள்ளாது உபவாசமிருந்து, உறும் துயில் துறந்து — பொருந்திய நித்திரையையும் விலக்கி, புராரி சந்நிதியில் — சிவலிங்கத்தினது முன்னிலையில், ஊறு இல் மாலூர வெண் தழையால் — குற்றமில்லாத வில்வத்தின் வெண்நிறமாகிய பத்திரங்களினால், தெறும் தழல் நுதல் கண் சிவ நிசி அதனில் — சுடுகின்ற அக்கினியாகிய நெற்றிக்கண்ணைக்கொண்ட சிவபெருமானுடைய இரவில், சிவார்ச்சனை புரிந்து வெம் தீமை அறும் தவம் உடையோர் ஒத்தனன் — சிவபூசைசெய்து கொடிய தீவினைகள் யாவும் நீங்கப்பெற்ற தவத்தையுடைய வர்சனை நிகர்த்தனன், இனி கொடிச்சி தன் திறம் அறைவாம் — இனிமேல் வேட்டுவ மங்கையாகிய அவன் மனைவியின் தன்மைகளைக் கூறுவாம் என்று. (31)

வேறு

உன்ன ரும்பெருங் காட்டினில் வேட்டமே லுற்ரு ன்
வன்ன வார்சிலை வலவனென் னுயிர்த்துணை மகிழ்ந
னின்ன மெய்தில னென்கொலோ வெனமனத் தெண்ணி
யன்ன மென்னடைக் குறத்திகண் டுயின்றிடா தரற்றும்.

[உன்ன ரும்,பெரும் காட்டினில் வேட்டமேல் உற்ரு ன்
வன்ன வார்சிலை வலவன்என் உயிர்த்துணை மகிழ்நன்
இன்னம் எய்திலன், என்கொலோ எனமனத்(து) எண்ணி
அன்ன மெல்நடைக் குறத்திகண் துயின்றிடா(து) அரற்றும்].

இ—ள் : அன்ன மெல் நடை குறத்தி — அன்னம்போன்ற மிருதுவாகிய நடையையுடைய அவ்வேட்டுவப் பெண்ணினவள், வன்ன வார்சிலை வலவன் என் உயிர் துணை மகிழ்நன் — அழகிய நீண்ட வில்வலிமையையுடைய எனது உயிர்த்துணையாகிய நாயகன், உன் அரும் பெரும் காட்டினில் வேட்டமேல் உற்ரு ன் — நீனைத்தற்கரிய பெரியவனத்தில் வேட்டையாடும்பொருட்டுச் சென்ரு ன், இன்னம் எய்திலன் என்கொலோ என மனத்து எண்ணி — இன்னும் வந்தானில்லன் யாதுகாரணமோவென்று மனதில் நினைத்து, கண் துயின்றிடாது அரற்றும்—நித்திரைசெய்யாதவளாய்ப் புலம்புவாள் என்று. (32)

தஞ்ச மொன்றிலன் றமியனுச் சென்றனன் றகைசா
லஞ்ச னக்கிரியா மென வுருத்தெதி ரடர்ந்து
மஞ்செ னப்பொழி மதசதுட் பதத்துணை மருப்புக்
குஞ்ச ரக்குலங் கொன்றவோ வென்றுளங் குலையும்.

[தஞ்சம் ஒன்(று)இலன் தமியனுய்ச் சென்றனன் தகைசால்
அஞ்ச னக் கிரியாம் என உருத்(து)எதிர் அடர்ந்து
மஞ்(சு) எனப்பொழி மதசதுட் பதத்துணை மருப்புக்
குஞ்ச ரக்குலம் கொன்றவோ என்(று)உளம் குலையும்.]

இ — ள் : தஞ்சம் ஒன்று இலன் தமியனு சென்றனன் — துணையொன்று மில்லாது தனித்தவனுய்ச் சென்றுன், தகைசால் அஞ்சன கிரி ஆம் என — தக்க பெரிய நீலமலையைப்போல, மஞ்சு என பொழி மத சதுட்பத துணை மருப்பு குஞ்சரக்குலம்—மேகத்தைப்போலச் சொரிகின்ற மதத்தையும் நான்கு கால்களையும் இரண்டு கொம்புகளையுமுடைய யானைக்கூட்டங்கள், உருத்து எதிர் அடர்ந்து கொன்றவோ என்று உளம் குலையும் — கோபித்து எதிராக நெருங்கிவந்து கொலைசெய்தனவோவென்று மனந்தளருவாள் எ—று. **(33)**

கரிய நீண்மயிர்க் கூருகிர்க் கவிழ்தலைக் கரடி
சரியில் வந்துயிர் கவர்ந்ததோ வென்னமெய் தளரு
முரிய வெஞ்சினக் கொடுவரி கறுத்தொறுத் துடலைப்
பெரிய வாயினிற் பெய்தது வோவெனப் பிதற்றும்.

[கரிய நீள்மயிர்க் கூர்உகிர்க் கவிழ்தலைக் கரடி,
சரியில் வந்(து)உயிர் கவர்ந்ததோ என்னமெய் தளரும்
உரிய வெஞ்சினக் கொடுவரி கறுத்(து)ஒறுத்(து) உடலைப்
பெரிய வாயினில் பெய்ததுவோ,எனப் பிதற்றும்.]

இ — ள் : கரிய நீள் மயிர் கூர் உகிர் கவிழ் தலை கரடி — கரிய நீண்ட மயிரையுங் கூரிய நகங்களையுங் கவிழ்ந்த தலையையுமுடைய கரடியானது, சரியில் வந்து உயிர் கவர்ந்ததோ என்ன மெய் தளரும் — வழியிலே வந்து உயிரைக் கவர்ந்துகொண்டு போய்விட்டதோவென்றுஞ் சரீரஞ் சோர்வடைவாள், உரிய வெம் சின கொடுவரி — பொருந்திய கடுங்கோபத்தையுடைய புலியானது, கறுத்து ஒறுத்து உடலை பெரிய வாயினில் பெய்ததுவோ என பிதற்றும் — கோபித்து வருத்திச் சரீரத்தைத் தனது பெரிய வாயின்கணிட்டு உண்டதோ என்றும் பிதற்றுவாள் எ — று. **(34)**

அனையு றும்பணி விடங்கலுழ்ந் துமிழ்ந்திடு மகல்வாய்த்
துனையெ யிற்றினே றுண்டது வோவெனச் சோருங்
கினையு டன்றிரி கரிவழிப் பகையதாங் கிளர்வா
லுனைம டங்கலா லுயிருலந் தனன்கொலென் றுன்னும்.

[அனைஉறும்பணி விடம்கலுழ்ந்(து) உமிழ்ந்திடும் அகல்வாய்த்
துனைஎயிற்றின்ஏ(று) உண்டதுவோ எனச்சோரும்
கினையுடன்திரி கரிவழிப் பகையதாம் கிளர்வால்
உனைமடங்கலால் உயிர்உலந் தனன்கொல், என்(று) உன்னும்].

இ — ள்: அனை உறும் பணி விடம் கலுழ்ந்து உமிழ்ந்திடும் — புற்றினிட மாக உசிக்கின்ற பாம்பானது விடத்தைச் சுரந்து கக்குகின்ற, அகல் வாய் துனை எயிற்றின் ஏறு உண்டதுவோ என சோரும் — விசாலமாகிய வாயின்க ணுள்ள துனைபொருந்திய பற்களினுல் கடியுண்டனனே என்றுஞ் சோருவாள், கினையுடன் திரி கரி வழி பகையதாம் கிளர் வால் உனை மடங்கலால் — கூட்ட மாகத் திரிகின்ற யானைகளுக்குக் குலப்பகையாயுள்ள உயர்ந்த வாலியும் பிடர்மயிரையுமுடைய சிங்கத்தினுல், உயிர் உலந்தனன் கொல் என்று உன் னும் — ஆன்மா நீங்கப்பெற்றனனே என்றுஞ் சித்திப்பாள் எ — று. (35)

நாட்ட மன்னநின் புதல்வர்வெம் பசியினு னலிந்து
கோட்ட முற்றனர் கொழுந்தசை கோற்கொளீஇ வெதுப்பி
யூட்ட வந்திலை யுன்றனக் குரிமையா மெனது
வாட்ட நோக்கிலை யென்கொல்செய் தாயென மயங்கும்.

[நாட்டம் அன்னநின் புதல்வர்வெம் பசியினுல் நலிந்து
கோட்டம் உற்றனர் கொழுந்தசை கோல்கொளீஇ வெதுப்பி
ஊட்ட வந்திலை உன்தனக்(கு) உரிமையாம் எனது
வாட்டம் நோக்கிலை என்கொல் செய்தாய் என மயங்கும்.]

இ — ள்: நாட்டம் அன்ன நின்புதல்வர் வெம் பசியினுல் நலிந்து கோட் டம் உற்றனர் — சண்ணையொத்த உனது புத்திரர்கள் கொடிய பசியினுல் வருந்தி வாட்டமடைந்தனர், கொழுந்தசை கோல் கொளீஇ வெதுப்பி ஊட்ட வந்திலை — கொழுமையாகிய தசைகளை அம்பிற்கோத்து (அக்கினியில்) வேகும்படிசெய்து உண்பிக்கும்பொருட்டு வந்தாயில்லை, உன் தனக்கு உரிமை யாம் எனது வாட்டம் நோக்கிலை — உனக்கு மனைவியாகிய எனது சோர்வை யும் பார்த்திலை, என் கொல் செய்தாய் என மயங்கும் — யாது செய்தா யென்று மயக்கமடைவாள் எ—று. (36)

என்றி ருந்தருந் துயருழந் திடைக்கொடிக் தொடிச்சி
குன்றி யின்வடங் கிடந்தொளிர் கொங்கைகள் குளிப்ப
வென்றி யங்கதிர் வேல்விழி நீருகுத் திடும்பை
யன்றி யொன்றில ளயர்ந்தன ளிருந்திடு மமையம்.

[என்(று)இருந்(து)அரும் துயர்உழந்(து) இடைக்கொடிக் கொடிச்சி
குன்றியின்வடம் கிடந்(து)ஒளிர் கொங்கைகள் குளிப்ப
வென்றி அம்கதிர் வேல்விழி நீர்உகுத்(து) இடும்பை
அன்றி ஒன்(று)இலள் அயர்ந்தனள் இருந்திடும் அமையம்.]

இ — ள் : கொடி இடை கொடிச்சி — கொடிபோன்ற இடையையுடைய அவ்வேட்டுவப் பெண்ணானவள், என்று இருந்து அரும் துயர் உழந்து — இவ்வாறாக இருந்து அரிய துன்பத்தையடைந்து, குன்றியின் வடம் கிடந்து ஒளிர் கொங்கைகள் குளிப்ப — குன்றிமணிமாலைகள் கிடந்து பிரகாசிக்கின்ற தனங்கள் நனையும்படி, வென்றி அம் கதிர் வேல் விழி நீர் உகுத்து — வெற்றி பொருந்திய அழகிய கிரணம் வீசுகின்ற வேலையொத்த கண்களினின்றும் நீரைச்சொரிந்து, இடும்பை அன்றி ஒன்றிலள் அயர்ந்தனள் இருந்திடும் அமையம் — துன்பமேயன்றி வேறொன்றுமில்லாதவளாய்ச் சோர்வடைந்து இருந்த சமையத்தில் எ — று. (37)

பரவி யந்தணர் வந்தனை புரிந்துமுன் பழிச்ச
விரவி யம்புயம் பொற்கதிர்க் கரங்களால் விரித்துப்
புரவி யேழ்நுகம் பூட்டிய பொற்றடந் தேரூ
ரிரவி யுங்குண புலத்துய ரிரவியி லெழுந்தான்.

[பரவி அந்தணர் வந்தனை புரிந்துமுன் பழிச்ச
விரவி அம்புயம் பொற்கதிர்க் கரங்களால் விரித்துப்
புரவி ஏழ்நுகம் பூட்டிய பொன்தடம் தேர்ஊர்
இரவி யும்,குண புலத்(து)உயர் இரவியில் எழுந்தான்.]

இ — ள் : அந்தணர் பரவி வந்தனை புரிந்து முன் பழிச்ச — பிராமணர்கள் பரந்துநின்று வந்தனங்களைச்செய்து முன்னே துதிக்க, விரவி — நெருங்கி, அம்புயம் பொன் கதிர் கரங்களால் விரித்து — தாமரைமலர்களைச் சிவந்த கிரணங்களாகிய கைகளால் விரியும்படிசெய்து, ஏழ் புரவி நுகம் பூட்டிய பொன் தடம் தேர் ஊர் இரவியும் — ஏழு குதிரைகளை நுகத்திற் பூட்டிய அழகிய விசாலித்த தேரின்கண்ணேறிச் செல்லுகின்ற சூரியனும், குணபுலத்து உயர் இரவியில் எழுந்தான் — கீழ்த்திசைக்கணுள்ள உயர்ந்த உதயகிரியில் தோற்றினன் எ — று. (38)

புலவு வாய்கம ழங்குலன் றினந்தொறும் புரிந்த
வலகில் பாவவல் லிருள்களீத் துரந்தகற் றுதலா
னிலவு நீறணி நீள்புரி சடைச்சிவ நிசியு
முலகி னீடிருட் கடிபகற் கதிருமொத் துளதால்.

[புலவு வாய்கமழ் அங்குலன் தினந்தொறும் புரிந்த
அலகில் பாவவல் இருள்களீத் துரந்(து)அகற் றுதலால்
நிலவு நீ(று)அணி நீள்புரி சடைச்சிவ நிசியும்
உலகில் நீ(டு)இருள் கடிபகற் கதிரும் ஒத்(து) உளதால்.]

இ — ள்: நிலவு நீறு அணி நீள் புரி சடை சிவ நிசி — ஒளியை வீசுகின்ற விபூதியையணிந்த நீண்ட முறுகிய சடையையுடைய சிவபெருமானது சிவராத்திரியானது, புலவு வாய் கமழ் அங்குலன் தினந்தொறும் புரிந்த — நிணநாற்றம் வாயில் வீசுகின்ற அங்குலனனவன் எந்நாளும் செய்த, அலகில் பாவவல் இருள்களீ — அளவற்ற பாவமாகிய கொடிய இருள்களீ, துரந்து அகற்றுதலால் — தொடர்ந்து நீக்குதலால், உலகில் நீடு இருளும் கடி பகற் கதிரும் ஒத்து உளது — உலகத்தின்கண்ணே வருகின்ற மிக்க இருளீயும் அவ்விருளீ ஓட்டுகின்ற சூரியனீயும் போன்றிருந்தது எ — று.

ஆல் உம் அசைகள். (39)

மேவி ளங்கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர்
வாவி ளஞ்சிறு மான்விழி யெயிற்றிதன் மைந்த
ராவி ழந்தகன் றுவரென் றங்குல னினைந்து
கூவி ளம்பணீ நின்றிழிந் தனன்வழிக் கொண்டான்.

[மே(வு)இளங்கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர்
வா(வு)இளஞ்சிறு மான்விழி எயிற்றிதன் மைந்தர்
ஆஇழந்த கன்(று) ஆவர்என்(று) அங்குலன் நினைந்து
கூவிளம்பணீ நின்(று)இழிந் தனன்,வழிக் கொண்டான்.]

இ — ள்: அங்குலன் — அங்குலனனவன், மேவு இளங் கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர் — பொருந்திய இளங் கிரணமானது பரவப்பெற்று விடிந்த பின்பு, வாவு இளம் சிறு மான் விழி எயிற்றி — பாய்கின்ற இளமையாகிய சிறிய மான்நோக்கியன்ற கண்களீயுடைய வேட்டுவ மாதும், தன் மைந்தர்— தனது புத்திரர்களும், ஆ இழந்த கன்று ஆவர் என்று நினைந்து — தாய்ப் பசுவையிழந்த கன்றுபோல வருந்துவரென்று நினைத்து, கூவிளம் பணீ நின்று இழிந்தனன் வழி கொண்டான் — வில்வக் கொம்பரினின்றுங் கீழிறங்கிச் சென்றனன் எ — று. (40)

ஈறி லாத்துய ருற்றிடு மெயிற்றிதன் னிதயந்
தேறி வேடனைத் தேடுவா னடந்துறு செப்பத்
தூறி லான்வரல் கண்டெதிர்ந் தோகையிற் றழுவி
மாறி லாதுயர் புற்குடின் மேவினர் வந்தார்.

[ஈ(று)இலாத்துயர் உற்றிடும் எயிற்றிதன் இதயந்
தேறி வேடனைத் தேடுவான் நடந்(து)உறு செப்பத்(து)
ஊ(று)இலான்வரல் கண்(டு) எதிர்ந்(து) ஓகையில் தழுவி
மா(று)இலா(து) உயர் புல்குடில் மேவினர் வந்தார்.]

இ — ள்: ஈறு இலா துயர் உற்றிடும் எயிற்றி — எல்லையில்லாத துன்பமடைந்திருந்த அக்குறமாது, தன் இதயம் தேறி வேடனைத் தேடுவான் நடந்து உறு செப்பத்து — தன்மனமானது தெளியப்பெற்று நாயகனைத் தேடும்படி செல்கின்ற வழியிலே, ஊறு இலான் வரல்கண்டு — இடையூறு யாதுமில்லாதவனுய் வருதலைக் கண்டு, எதிர்ந்து ஓகையில் தழுவி — எதிர்சென்று மகிழ்ச்சியோடு தழுவி, மாறு இலாது உயர் புல்குடில் மேவினர் வந்தார் — மாறுபாடில்லாது உயர்வுபொருந்திய தமது புற்களால் வேயப்பட்ட குடிசையினிடத்து வந்துசேர்ந்தனர் எ — று. (41)

வந்து செந்தினை மாவுடன் வம்பமர் வரைத்தேன்
முந்து புற்புத மேவுநீ வாரவெண் மூர
னந்து நற்றசை நறவுக ணுடொறு நாடித்
தந்து மற்றவ ளோடுபன் ளைவண் சார்ந்தான்.

[வந்து செந்தினை மாவுடன் வம்(பு)அமர் வரைத்தேன்
முந்து புற்புதம் மேவு நீவார வெண் மூரல்
நந்து நல்தசை நறவுகள் நாள்தொறும் நாடித்
தந்து மற்(று) அவளோடுபல் நாள்அவண் சார்ந்தான்.]

இ — ள்: வந்து — தமது இல்லத்தையடைந்து, செந்தினை மா உடன் — செந்தினை மாவுடனே, வம்பு அமர் வரைதேன் — வாசனைபொருந்திய மலைத்தேனையும், முந்து புற்புதம் — சிறந்த புல்லரிசிச் சாதத்தையும், மேவு நீவார வெண் மூரல் — மலைநெல்லினின்றும் வருகின்ற வெள்ளிய சாதத்தையும், நந்து நல் தசை — செழித்த நல்ல மாமிசங்களையும், நறவுகள் நாள்தோறும் நாடி தந்து — கள்ளையுந் தினந்தோறுஞ் சம்பாதித்துக் கொடுத்து, அவளொடு பல் நாள் அவண் சார்ந்தான் — அக்குறப் பெண்ணோடு பலநாட்களாக அக்காட்டிற் சீவித்தனன் எ — று.

மற்று அசை. (42)

முருந்தி யற்றரும் பற்கழன் றிடநரை முதிர்ந்திட்
டருந்து தற்கரி தாயுடல் பலங்கெடு மந்நாட்
பெருந்தி ரைக்கடற் கடுவுறழ் பெரும்பிணி பிணிக்க
வருந்தி மற்றவன் சடந்துறந் திறந்தனன் மன்னே.

[முருந்(து)இயல்தரும் பல்கழன் றிட, நரை முதிர்ந்திட்(டு)
அருந்துதற்(கு)அரிதாய், உடல் பலம்கெடும் அந்நாள்,
பெருந்திரைக் கடல் கடுஉறழ் பெரும்பிணி பிணிக்க
வருந்தி, மற்(று) அவன் சடம்துறந்(து) இறந்தனன் மன்னே.]

இ — ள்: முருந்து இயல் தரும் பல் கழன்றிட — இறகினடியைப்போலும் இயல்பைக்கொண்ட பற்கள் கழன்றுவிழ, நரை முதிர்ந்திட்டு — நரைமுதிர்ச்சியடைந்து, அருந்துதற்கு அரிதாய் உடல் பலம்கெடும் அந்நாள் — உணவுகளை உண்ணுதற்கியலாமல் சரீரவலிமை குன்றுங்காலத்து, பெரும் திரை கடல் கடு உறழ் பெரும் பிணி பிணிக்க வருந்தி — பெரிய திரைகளையுடைய கடலிற்றோன்றிய நஞ்சையொத்த கடுமையாகிய நோய்கள்வந்து பீடிக்க வருந்தி, அவன் சடம் துறந்து இறந்தனன் — அவ்வங்குலனவன் சரீரத்தை விட்டு ஆன்மா நீங்கப்பெற்றான் எ — று.

மன் ஓ அசைகள். (43)

வேறு

சூலமொடு வாளிசிலை தோமர முலக்கை
பாலமயில் வேல்விசிறு பாசமவை கொண்டே
வாலமதி போலெயி றிலங்கவட வைத்தீ
யாலநிகர் தூதுவர்க ளவ்வயி னடைந்தார்.

[சூலமொடு வாளிசிலை தோமரம் உலக்கை
பாலம்அயில் வேல்விசிறு பாசம்அவை கொண்டே
வாலமதி போல்எயி(று) இலங்க வடவைத்தீ
ஆலம்நிகர் தூதுவர்கள் அவ்வயின் அடைந்தார்.]

இ — ள்: சூலமொடு — சூலமும், வாளி — அம்புகளும், சிலை — வில்லும், தோமரம் — தோமரமும், உலக்கை — இருப்புலக்கையும், பாலம் — பிண்டிபாலமும், அயில் வேல் — கூரிய வேலும், விசிறு பாசம் அவைகொண்டு — வீசப்படுகின்ற பாசமும் ஆகிய இவற்றைக்கொண்டு, வாலமதி போல் எயிறு இலங்க — இளம்பிறைச் சந்திரனைப்போலப் பற்கள் பிரகாசிக்க, வடவைத் தீ ஆலநிகர் தூதுவர்கள் — வடவாமுகாக்கினியையும் ஆலகால விடத்தையும் நிகர்த்த யமதூதுவர்கள், அவ்வயின் அடைந்தார் — அவ்விடத்துவந்தனர் எ — று.

ஏ அசை. (44)

பற்றினர் புயத்துணைகள் பாசமத னுலே
சுற்றின ரடித்தனர் துடித்திட விடித்துக்
குற்றின ருடற்சவி குறைத்தவச மேன்மே
லுற்றிட வுதைத்துவழி யொல்லிபட ரெல்லை.

[பற்றினர், புயத்துணைகள் பாசம் அதனுலே
சுற்றினர், அடிந்தனர், துடித்திட இடித்துக்
குற்றினர், உடற்சவி குறைத்(து) அவசம் மேல்மேல்
உற்றிட உதைத்து, வழி ஒல்லிபடர் எல்லை.]

இ — ள்: பற்றினர்புய துணைகள் பாசம் அதனுலே சுற்றினர் — பிடித்துப் புயங்களிரண்டையும் பாசத்தாற் கட்டி, அடித்தனர் துடித்திட இடித்துக் குற்றினர் — அடித்துத் துடிக்கும்படி இடித்துக்குற்றி, உடல் சவி குறைத்து அவசம் மென் மேல் உற்றிட உதைத்து — சரீரத்தின் வலிமையைக் குறைத்து மேலும் மேலும் மயக்கமடையும்படி உதைத்து, வழி ஒல்லி படர் எல்லை — வழியே வேகமாய்ச் செல்லும்போது எ — று. (45)

மங்கையொரு பங்கன்மழு மான்மறி மரைப்பூஞ்
செங்கையி லிருத்திறை சிலாதனன் மகற்கூய்ச்
சங்கைபெறு மங்குல னெனுஞ்சவ ரனீத்தம்
மங்கைகொள் கயிற்றினிடை யாத்தியம தூதர்.

[மங்கை ஒரு பங்கன் மழு மான்மறி மரைப்பூஞ்
செங்கையில் இருத்(து)இறை, சிலாதனன் மகன்கூய்ச்,
சங்கைபெறும் அங்குலன் எனுஞ்சவ ரனீத்தம்
அங்கைகொள் கயிற்றின்இடை யாத்(து) யமதூதர்.]

இ — ள்: மங்கை ஒரு பங்கன் — உமாதேவியாரை இடப்பாகத்திற் கொண்டவராகிய, மழு மான் மறி மரை பூ செங்கையில் இருத்து இறை — கோடரியையும் மான்கன்றையும் தாமரைமலர் போன்ற சிவந்த திருக்கரங்களிற்றுங்கிய எம்பெருமான், சிலாதனன் மகற் கூய் — சிலாதமுனிவரின் புத்திரராகிய நந்திதேவரை வரவழைத்து, சங்கை பெறும் அங்குலன் எனும் சவரீன — மேன்மை பொருந்திய அங்குலன் என்னும் வேட்டுவனை, யமதூதர் தம் அங்கை கொள் கயிற்றினிடை யாத்து — யமதூதுவர்கள் தமது அகங்கையிற் பொருந்திய பாசத்தாற் கட்டிக்கொண்டு எ — று. (46)

சென்றனர் விலக்கியொளிர் செம்பொனணி தேர்மே
லின்றவனே யேற்றியொ ரிமைப்பினிவ ணெய்தக்
குன்றன புயத்துவலி குன்றமரு வாரை
வென்றகண நாதரை விடுத்திடுதி யென்றான்.

[சென்றனர், விலக்கிஒளிர் செம்பொன்அணி தேர்மேல்
இன்(று) அவனே ஏற்றிஒ(ரு) இமைப்பின் இவண் எய்தக்
குன்(று)அன புயத்துவலி குன்ற மருவாரை
வென்ற கண நாதரை விடுத்திடுதி என்றான்.]

இ — ள்: சென்றனர் — போகின்றனர், விலக்கி — அவ்வியமதூதுவர்களி னின்று விடுவித்து, இன்று அவனே ஒளிர் செம்பொன் அணிதேர்மேல் ஏற்றி — இத்தினத்தில் அவ்வேடனே ஒளிபொருந்திய சிவந்த பொன்னினற்செய்த அழ கிய தேரின்மேலேற்றிக்கொண்டு, ஒரு இமைப்பின் இவண் எய்த — ஒரு மாத் திரைப்பொழுதினுளிங்குவரும்படி, குன்று அன புயத்து வலிகுன்ற மருவாரை வென்ற கணநாதரை — மலைபோன்ற தோள்களின் வலிமைகுறையும்படி பகைவர்களை வெற்றிகொண்ட கணத்தலைவர்களை, விடுத்திடுதி என்றான் — அனுப்புவாயாகவென்று ஆஞ்ஞாபித்தனர் எ — று. (47)

நாதன்விடை கொண்டுகண நாதரை யழைத்தே
யேதமறு மங்குலனே யின்றுகொடு போகுந்
தூதர்தமை வென்றுவிரை விற்சுடர் விமான
மீதினிலிருத்தி யிவண் மேவவிடு கென்றான்.

[நாதன்விடை கொண்டு கணநாதரை அழைத்தே
ஏதம் அறும் அங்குலனே இன்றுகொடு போகும்
தூதர்தமை வென்று விரைவில் சுடர் விமானம்
மீதினில் இருத்தி இவண் மேவவிடுக என்றான்.]

இ — ள்: நாதன் விடை கொண்டு — சிவபெருமானுடைய உத்தரவைப் பெற்று, கணநாதரை அழைத்து — கணத்தலைவர்களை வரவழைத்து, ஏதம் அறும் அங்குலனே இன்று கொடு போகும் தூதர் தமைவென்று — குற்றமில் லாத அங்குலனென்னும் வேடனை இப்பொழுது கொண்டுசெல்லுகின்ற யம தூதுவர்களை வெற்றிகொண்டு, விரைவில் சுடர் விமானம் மீதினில் இருத்தி — வேகமாயொளி தங்கிய விமானத்தின் மேலேற்றி, இவண் மேவவிடுக என் றான் — இவ்விடத்துக்கு அழைத்துவாருங்களென்று திருவாய்மலர்ந்தருளினர் எ — று.

ஏ அசை. (48)

நந்திமொழி கொண்டுகண நாதர்கள் விரைந்து
வந்தியம தூதரை வருத்திவலி செய்தே
முந்தியவன் மொய்ம்புகண் முரிக்கவிசி பாசம்
சிந்திமணி மொய்த்தொளிகொ டேரின்மிசை வைத்தார்.

[நந்திமொழி கொண்டுகண நாதர்கள் விரைந்து
வந்(து) யம தூதரை வருத்திவலி செய்தே
முந்திஅவன் மொய்ம்புகள் முரிக்க விசிபாசம்
சிந்திமணி மொய்த்(து) ஒளிகொள் தேரின்மிசை வைத்தார்.]

இ — ள்: கணநாதர்கள் நந்தி மொழி கொண்டு — கணத்தலைவர்கள் நந்திதேவருடைய ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு, விரைந்து வந்து யம தூதரை வருத்தி வலிசெய்து — வேகமாய் வந்து யமதூதுவர்களைத் துன்புறும் படிசெய்து தமது வலிமையைக்காட்டி, முந்தி அவன் மொய்ம்புகள் முரிக்க விசி பாசம் சிந்தி — முன்னரே அவனது வலிமைகெடும்படி கட்டிய பாசத்தை யறுத்து, மணிமொய்த்து ஒளிகொள் தேரின் மிசை வைத்தார் — இரத்தினங் கள் நெருங்கி ஒளியைக் கக்குகின்ற இரதத்தின் மேலேற்றினர் எ — று.

ஏ அசை. (49)

யாவர்பணி கொண்டிவ ணெதிர்ந்திது புரிந்தீர்
போவதிவ னெங்ஙனமொர் புண்ணிய மிலாதான்
மேவவுவ ணுமினி விடோமென வெகுண்டு
காவல்புரி காலபடர் காய்ந்தெதிர் கதித்தார்.

[யாவர்பணி கொண்(டு)இவண் எதிர்ந்(து)இது புரிந்தீர்
போவ(து)இவன் எங்ஙனம்ஒரு புண்ணியம் இலாதான்
மேவ உவண் நாம்இனி விடோம்என வெகுண்டு
காவல்புரி காலபடர் காய்ந்(து) எதிர் கதித்தார்.]

இ — ள்: காவல் புரி காலபடர் — அவனைக் காத்துநின்ற யமதூதுவர் கள், யாவர் பணி கொண்டு இவண் எதிர்ந்து இது புரிந்தீர் — எவரது ஆஞ் ஞையின்படி இங்குவந்து எதிர்த்து இவைகளைச் செய்தீர்கள், ஒரு புண்ணியம் இலாதான் இவன் போவது எங்ஙனம் — ஒரு புண்ணியமுமில்லாதவனாகிய இவன் போவது எப்படி, உவண் மேவ நாம் இனி விடோம் என வெகுண்டு காய்ந்து எதிர் கதித்தார் — உவ்விடத்துக்குப் போகும்படி யாங்களினிமேல் விடோமென்று கோபங்கொண்டு மனங்கொதித்து எதிர்த்துக் கூறினர் எ — று. (50)

உங்கடலை வன்றன துரத்திடை யுதைத்தோ
னெங்கடலை வன்பணியி தென்றுமுச லத்தாற்
செங்கடலை நேர்குருதி சிந்தவெம தூதர்
தங்கடலை மோதினர் தரித்தில ரகன்ஞர்.

[உங்கள் தலைவன்தன(து) உரத்திடை உதைத்தோன்
எங்கள் தலைவன்பணி இ(து)என்று முசலத்தால்
செங்கடலை நேர்குருதி சிந்தஎம தூதர்
தங்கள்தலை மோதினர் தரித்திலர் அகன்ஞர்.]

இ — ள்: உங்கள் தலைவன் தனது உரத்திடை உதைத்தோன் — உங்கள் தலைவனுகிய யமனது மார்பின்கண்ணே உதைத்தவரும், எங்கள் தலைவன் பணி இது என்று — எங்கள் தலைவருமாகிய சிவபெருமானது ஆஞ்ஞையிதுவாகு மென்று, செம் சடலை நேர் குருதி சிந்த — செங்கடலைப்போன்ற இரத்தம் பாயும்படி, எமதூதர் தலை முசலத்தால் மோதினர் — யமதூதுவர்களுடைய தலைகளிலிருப்புலக்கை கொண்டடித்து, தரித்திலர் அகன்ஞர் — தங்காது சென் ஞர்கள் எ — று. (51)

வென்றிதரு வானவர் விரைத்தருவி னற்பூப்
பொன்றிகள் செழுந்துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த
வன்றியர மங்கையர்க ளங்கிரு மருங்கு
நின்றிணைகொள் வெண்கவரி நேசமொடு வீச.

[வென்றிதரு வானவர் விரைத்தருவின் நற்பூப்
பொன்திகழ் செழும்துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த
அன்றிஅர மங்கையர்கள் அங்(கு)இரு மருங்கும்
நின்(று)இணைகொள் வெண்கவரி நேசமொடு வீச.]

இ — ள்: வென்றி தரு வானவர் — வெற்றியையுடைய தேவர்கள், விரை தருவின் நல் பொன் திகழ் செழும் பூ துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த — வாசனை பொருந்திய கற்பகதருவிற் றேன்றிய நல்ல பொன்போல விளங்குகின்ற செழுமையாகிய பூங்கொத்துக்களைச் சொரிந்து வாழ்த்தொலி செய்யவும், அன்றி — அதுவுமல்லாமல், அர மங்கையர் — தேவமாதர்கள், அங்கு இருமருங்கும் நின்று — அவ்விடத்து இருபக்கங்களினும் நின்று, இணை கொள் வெண் கவரி நேசமொடு வீச — இணையாகிய வெஞ்சாமரங்களை உள் ளன்புகொண்டு வீசவும் எ — று. (52)

விண்டல முதிக்குமதி வெண்குடை நிழற்றப்
பண்டரு மிசைப்பனுவல் கந்தருவர் பாடக்
கொண்டலிடி யொத்ததிர் குரற்குட முழாநற்
தொண்டகம தோடமர துந்துபி முழங்க.

[விண்தலம் உதிக்கும்மதி வெண்குடை நிழற்றப்
பண்தரும் இசைப்பனுவல் கந்தருவர் பாடக்
கொண்டல்இடி ஒத்(து)அதிர் குரற்குட முழாநல்
தொண்டகம் அ(து)ஒ(டு)அமர துந்துபி முழங்க.]

இ — ள்: விண் தலம் உதிக்கும் மதி வெண் குடை நிழற்ற — ஆகாயத்தில்வந்து தோற்றுகின்ற சந்திரனனவன் வெள்ளிய குடையைத் தாங்கி நிழலிச் செய்யவும், பண் தரும் இசை பனுவல் கந்தருவர் பாட — பண்ணமைந்த இசைப்பாக்களைக் கந்தருவர்கள் பாடவும், கொண்டல் இடி ஒத்து அதிர்குரல் குடமுழா — மேகத்தினிடியைப்போல ஒலிக்கின்ற சத்தத்தையுடைய குடமுழாப்பறையும், நல் தொண்டகமதோடு — நல்ல தொண்டகப் பறையுடனே, அமர துந்துபி முழங்க — தேவதுந்துபிப்பறையுமாரவாரிக்கவும் என்று. (53)

போயமலன் முன்புக விடுத்தபொழு தெம்பா
லேயகண மாயிவ ணிருந்திடுதி யென்றே
நேயமிக வைத்தெழில்கொ ணெற்றிவிழி யுற்ற
நாயக னுரைத்துவர நல்கின னயந்தே.

[போய்அமலன் முன்புக, விடுத்தபொழு(து) எம்பால்
ஏய கணமாய்இவண் இருந்திடுதி என்றே
நேயம்மிக வைத்(து) எழில்கொள் நெற்றிவிழி உற்ற
நாயகன் உரைத்துவரம் நல்கினன் நயந்தே.]

இ — ள்: போய் அமலன் முன்புக விடுத்த பொழுது — சென்று மலரகி தராகிய சிவபெருமானது சந்நிதியிற் பிரவேசிக்கும்படி விட்ட சமயத்தில், எழில் கொள் நெற்றி விழி உற்ற நாயகன் — அழகு பொருந்திய நெற்றிக் கண்ணையுடைய பரமபதியானவர், எம் பால் ஏய கணமாய் இவண் இருந்திடுதி என்று உரைத்து — எம்மிடத்துப் பொருந்திய கணத்தவருள் ஒருவனாய் நீயுமிங்கே வாழக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளி, மிக நேயம் வைத்து நயந்து வரம் நல்கினன் — அதிகமாகிய அன்பு வைத்து ஆசைப் பெருக்க முற்று வரங்களைக் கொடுத்தருளினர் என்று.

ஏ இரண்டும் அசைகள். (54)

செங்கணெயி னன்கயிலே சேர்கணம தாகி
யங்கணமர் வுற்றபி னருந்துயர்கொ டூதர்
திங்கண்முடி யானடியர் செய்ததிற மெல்லாம்
வெங்கண் மறலிக்குமுன் விளம்பவிரை வுற்றார்.

[செங்கண் எயினன் கயிலைசேர் கணம(து) ஆகி
அங்கண் அமர்(வு)உற்றபின் அருந்துயர்கொள் தூதர்
திங்கள் முடியான் அடியர் செய்த திறம்எல்லாம்
வெங்கண் மறலிக்குமுன் விளம்பவிரை வுற்றார்.]

இ — ள்: செம் கண் எயினன் — சிவந்த கண்களையுடைய அவ்வங்குலன், கயிலே சேர் கணமது ஆகி அங்கண் அமர்வு உற்ற பின் — கயிலாயகிரியில் வசிக்கின்ற கணநாதருளொருவனுய் அவ்விடத்து வீற்றிருந்த பின்னர், அரும் துயர் கொள் தூதர் — மிக்க துன்பமடைந்த யமதூதர்கள், திங்கள் முடியான் அடியர் செய்த திறம் எல்லாம் — சந்திரனைச் சடை முடியிற்றரித்த சிவபெருமானது அடியார்கள் செய்த செய்கைகள் யாவற்றையும், வெம் கண் மறலிக்கு முன் விளம்ப விரைவு உற்றார் — தறுகண்மையையுடைய யமராசனுக்கு முன்னே கூறும்படி விரைந்து சென்றனர் எ — று. (55)

பாசமெறி தாரைதொடர் பாறுபடி சூலம்
வீசுசுடர் வேன்முசல மின்னுகதை நன்னு
ராசமுட னங்குசம தங்கையிரு நான்கிற்
றேசுற வுரத்தினிடை செந்தொடை விளங்க.

[பாசம்எறி தாரைதொடர் பாறு படி சூலம்
வீசுசுடர் வேல்முசலம் மின்னுகதை நல்நா
ராசம்உடன் அங்குசம்அ(து) அங்கைஇரு நான்கில்
தே(சு)உற உரத்தின்இடை செந்தொடை விளங்க.]

இ — ள்: பாசம் — பாசமும், எறி தாரை — எறிவல்லயமும், தொடர் பாறு படி சூலம் — தொடர்ந்து பருந்துகள் (நிணங்களைப் புசிக்கும்பொருட்டு) படிகின்ற சூலமும், சுடர் வீசு வேல் — ஒளியைக் கக்குகின்ற வேலும், முசலம் — இருப்புலக்கையும், மின்னு கதை — பிரகாசம்பொருந்திய தண்டமும், நல் நாராசம் உடன் — நல்ல நாராசமும், அங்குசம் அது — தோட்டியுமாகிய இவ்வாயுதங்கள், அம் கை இரு நான்கில் தேசு உற — அழகிய எட்டுக் கைகளிலும் பிரகாசிக்கவும், உரத்தினிடை செம் தொடை விளங்க — மார்பின்கண்ணே சிவந்த மலர் மாலை விளங்கவும் எ — று. (56)

எற்றிய கடற்றிரை யிருத்திய தெனக்கார்
முற்றிநெளி வுற்றபுரு வத்துணை முரிப்பும்
பெற்றிடி யெனக்குரல் பிறங்குபில வாயும்
பற்றிய தழற்குநிகர் பங்கியும் விளங்க.

[எற்றிய கடல்திரை இருத்திய(து) எனக்கார்
முற்றிநெளி(வு) உற்ற புருவத்துணை முரிப்பும்
பெற்(று)இடி எனக்குரல் பிறங்குபில வாயும்
பற்றிய தழற்குநிகர் பங்கியும் விளங்க.]

இ — ள்: எற்றிய கடல் திரை இருத்தியது என — எறிகின்ற கடற்றிரை களைப் பதித்தாற்போல, கார்முற்றி நெளிவுற்ற துணை புருவ முரிப்பும் — கருமை முதிர்ந்து நெளிந்த இரண்டு கட்புருவத்தின் நெறிப்புகளும், இடி என குரல் பெற்று பிறங்கு பில வாயும் — இடிபோன்ற தொனியை யுடைத் தாய் விளங்குகின்ற பகிர்ந்த வாயும், பற்றிய தழற்கு நிகர் பங்கியும் விளங்க — எரிகின்றவக்கினிக்கொப்பாகச் சிவந்த குடுமியும் பிரகாசிக்கவும் எ — று. (57)

வாதகப பித்தமுத லான பிணிமற்று
மேதமிகு சொற்பணி யியற்றியய னிற்பப்
பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்துந்
தூதரிரு பக்கமுறை சுற்றினர்கள் சூழ.

[வாதகப பித்தம்முத லான பிணிமற்றும்
ஏதம்மிகு சொல்பணி இயற்றிஅயல் நிற்பப்
பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்தும்
தூதர் இரு பக்கம்முறை சுற்றினர்கள் சூழ.]

இ — ள்: வாத கப பித்தம் முதலான பிணி — வாதம் சேடம் பித்தம் முதலான நோய்களும், மற்றும் ஏதம் — பிற துன்பங்களும், மிகு சொல் லணி இயற்றி அயல் நிற்ப — அவனுற் சொல்லப்படுகின்ற மிகுதியாகிய தொண்டுகளைச் செய்து கொண்டு பக்கத்தே நிற்கவும், பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்தும் தூதர் — பாவிகள் அஞ்சிப் பதைக்கும்படி வருத்து கின்ற தூதுவர்கள், இரு பக்கம் முறை சுற்றினர்கள் சூழ — இரண்டு பக்கத் திலும் முறைப்படி சுற்றிச் சூழ்ந்து நிற்கவும் எ — று. (58)

சாலமொழி மாதர்பலர் சாமரை யிரட்ட
வாலமதி யாமென வளைந்தெயி றிலங்க
நீலவரை போனிதி நெடுந்தவி சிருக்குங்
காலனிரு காலிலிவர் கைதொழுது வீழ்ந்தே.

[சாலமொழி மாதர்பலர் சாமரை இரட்ட
வாலமதியாம் என வளைந்(து)எயி(று) இலங்க
நீலவரை போல்நிதி நெடுந்தவி(சு) இருக்கும்
காலன்இரு காலில்இவர் கைதொழுது வீழ்ந்தே.]

இ — ள்: சால மொழி மாதர் பலர் சாமரை இரட்ட — சால வார்த்தைகளே வசனிக்கின்ற பெண்கள் பலருஞ் சாமரங்களேயசைக்கவும், வால மதியாம் என வளைந்து எயிறு இலங்க — இளம் பிறைச் சந்திரனைப் போல வளைந்து தந்தங்கள் பிரகாசிக்கவும், நீல வரை போல் — நீலமலையைப் போல, நிதி நெடுந் தவிசு இருக்கும் காலன் இரு காலில் — பொன்னைச் செய்யப்பட்ட உயர்ந்த சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற யமராசனது பாதங்களில், இவர் கை தொழுது வீழ்ந்து — இத்தூதர்கள் கைகூப்பி நமஸ்கரித்து விழுந்து எ — று.

ஏ — அசை. (59)

மூடனே யறத்திற முயன்றறித லில்லா
வேடனே வடத்தினிடை வீக்கிவரு காலே
பாடனே வருக்குமிது பண்ணிவள ரொற்றைக்
கோடனே யளித்தவர் கணங்கள்கொடு போனர்.

[மூடனே அறத்திறம் முயன்(று)அறிதல் இல்லா
வேடனே வடத்தின்இடை வீக்கிவரு காலே
பா(டு)அனே வருக்கும்இது பண்ணிவளர் ஒற்றைக்
கோடனே அளித்தவர் கணங்கள் கொடுபோனர்.]

இ — ள்: மூடனே அற திறம் முயன்று அறிதல் இல்லா வேடனே — அறிவினுய்த் தருமங்களொன்றையும் முயன்று செய்தற்கறியாத அங்குலனுகும் வேடனே, வடத்தினிடை வீக்கிவரு காலே — பாசத்தினுற் கட்டிக்கொண்டு வருஞ் சமையத்தில், அனைவருக்கும் இது பாடு பண்ணி — நம்மெல்லோருக்கும் இத்துன்பங்களைச் செய்து, வளர் ஒற்றைக்கோடனே அளித்தவர் கணங்கள் — வளர்ந்த ஒற்றைக்கொம்பையுடைய விநாயகரைப்பெற்றருளிய சிவபெருமானது கணத்தவர்கள், கொடு போனர் — கொண்டுபோயினர் எ — று.

(60)

என்றிவை யுரைத்திட வெயிற்றித ழதுக்கித்
தென்றிசை நகர்க்கிறை திரண்டெழ வளர்ந்த
குன்றின்மிகை பெற்றிடு புயத்துணை குலுங்க
நன்றிது வெனத்தனி நகைத்துட னெழுந்தே.

[என்(று) இவை உரைத்திட எயிற்(று) இதழ் அதுக்கித்
தென்திசை நகர்க்(கு)இறை திரண்(டு) எழ வளர்ந்த
குன்றின் மிகை பெற்றிடு புயத்துணை குலுங்க
நன்(று) இ(து) எனத்தனி நகைத்(து) உடன் எழுந்தே.]

இ — ள் : என்று இவை உரைத்திட — என்றிவ்வாறுகத் தூதர்கள் சொல்ல, தென் திசை நகர்க்கு இறை — தென்திசையிலுள்ள நகரத்துக் கரசனுகிய யமன், எயிற்று இதழ் அதுக்கி — பற்களினுலதரங்களைக் கடித்து, திரண்டு எழ வளர்ந்த குன்றின் மிகை பெற்றிடு துணை புயம் குலுங்க — திரண்டு உயர்ந்து வளர்ந்த மலைகளினும் மேம்பாடுற்ற இரண்டு தோள்களுங் குலுங்கும்படி., இது நன்று என தனி நகைத்து — இது நல்லது என்று மிகவுஞ் சிரித்து, உடன் எழுந்து — உடனே எழுந்து எ — று.

ஏ — அசை. (61)

சஞ்சரிக மொய்த்துமுர ணூர்களசை யப்போ
யஞ்சன வரைக்குநிக ரானபக டேறி
விஞ்சிய கணக்கனெடு வீரர்பலர் சூழ
மஞ்சன மிடற்றிறைவன் வாழ்கயிலை வந்தான்.

[சஞ்சரிகம் மொய்த்துமுரல் தார்கள் அசை யப்போய்
அஞ்சன வரைக்குநிகர் ஆனபக(டு) ஏறி
விஞ்சிய கணக்கனெடு வீரர்பலர் சூழ
மஞ்சன மிடற்(று) இறைவன் வாழ்கையிலை வந்தான்.]

இ — ள் : சஞ்சரிகம் மொய்த்து முரல் தார்கள் அசைய போய் — வண்டுகள் மொய்த்துக் கீதம் பாடுகின்ற மாலைகளசையும்படி சென்று, அஞ்சன வரைக்கு நிகர் ஆன பகடு ஏறி — நீலமலையையொத்த எருமைக் கடாவின் மேலிவர்ந்து, கணக்கனெடு விஞ்சிய வீரர் பலர் சூழ — சித்திரகுத்தனென்னுங் கணக்கனெடும் மிகுதியாகிய வீரர்கள் பலருஞ் சூழ்ந்துவர, மஞ்சன மிடற்று இறைவன் வாழ் கயிலை வந்தான் — மேகம் போன்ற நீலகண்டத்தையுடைய தலைவராகிய சிவபெருமான் எழுந்தருளிய கயிலாயகிரியையடைந்தான் எ — று. (62)

வேறு

அரியமா தவத்தோ ருள்ளமொத் துயர்ந்தோ
ரணுவினுங் களங்கமொன் றின்றிக்
கரியமா முகில்கள் படிதடஞ் சாரற்
கயிலையிற் கனகமா மணியா
லுரியநான் முகத்து விதிவிதிக் கரிய
வொளிதிகழ் கதிர்களா யிரமும்
விரியுமா தவரோர் கோடிவந்துதித்து
விளங்கல்போற் றுளங்குமண் டபத்தின்.

[அரியமா தவத்தோர் உள்ளம் ஒத்(து), உயர்ந்(து)ஓர்
அணுவினும் களங்கம்ஒன்(று) இன்றிக்
கரியமா முகில்கள் படி,தடம் சாரற்
கயிலையில், கனகமா மணியால்
உரியநால் முகத்து விதி,விதிக் கரிய
ஒளிதிகழ் கதிர்கள் ஆயிரமும்
விரியும் ஆதவர்ஓர் கோடிவந்(து) உதித்து
விளங்கல்போல் துளங்கும்மண் டபத்தின்.]

இ — ள் : அரிய மா தவத்தோர் உள்ளம் ஒத்து — செய்தற்கரிய பெரிய தவத்தையுடைய மேலோர்களது மனத்தை நிகர்த்து, உயர்ந்து — உன்னத முடைத்தாய், ஓர் அணுவினும் களங்கம் ஒன்று இன்றி — ஒரு அணுவள வாயினும் மறுவொன்றில்லாமல், கரிய மா முகில்கள் படி தடம் சாரல் கயிலையில் — கறுத்த பெரிய மேகங்கள் படிகின்ற விசாலமாகிய பக்கங்களை யுடைய கயிலாசமலையில், கனக மா மணியால் — பொன்னினாலும் பெருமை பொருந்திய இரத்தினங்களினாலும், உரிய நால் முகத்து விதி விதிக்கரிய — படைத்தற்றொழிலுக்குரிய நான்கு முகங்களையுடைய பிரமாவாலுஞ் சிருட்டித் தற்கரிய, ஒளி திகழ் — ஒளி விளங்குகின்ற, ஆயிரம் கதிர்களும் விரியும் ஓர் கோடி ஆதவர் வந்து உதித்து விளங்கல் போல் துளங்கும் — ஆயிரங் கிரணங் களையும் பரவச் செய்யும் ஒரு கோடி சூரியர்கள் வந்து உதயஞ் செய்து பிர காசிப்பதுபோல விளங்குகின்ற, மண்டபத்தில்—திருக்கோயிலில் எ—று. (63)

ஐம்படை தரித்த தண்ணறுந் துளபத்
தண்ணலு மண்முதற் படைத்த
வம்படை கமலத் தவிசுறை யயனும்
வரைச்சிறை யறுத்திடும் வசிச்சம்

பம்படை யெனக்கொள் பாகசா தனனும்
பன்னிரண் டருக்கரு மொற்றைக்
கொம்படை களிற்று முகம்படைத் தருளுங்
குடவயிற் றைங்கரக் கோவும்.

[ஐம்படை தரித்த தண்நறும் துளபத்(து)
அண்ணலும் மண்முதல் படைத்த
வம்(பு)அடை கமலத் தவி(சு)உறை அயனும்
வரைச்சிறை அறுத்திடும் வசி,ச்சம்
பம்,படை எனக்கொள் பாகசா தனனும்
பன்னிரண்(டு) அருக்கரும் ஒற்றைக்
கொம்(பு)அடை களிற்(று) முகம்படைத் தருளும்
குடவயிற்(று) ஐங்கரக் கோவும்.]

இ — ள் : ஐம் படை தரித்த தண் நறும் துளபத்து அண்ணலும் — சங்கு சக்கரம் தண்டம் தனு வாளாகிய பஞ்சாயுதங்களையுந்தரித்த குளிர்ந்த வாசனை கமழுகின்ற துளசி மாலையையணிந்த மகா விஷ்ணு மூர்த்தியும், மண்முதல் படைத்த வம்பு அடை கமல தவிசு உறை அயனும் — பூமி முதலாகிய யாவற்றையுஞ் சிருட்டித்த வாசனைதங்கிய தாமரையாசனராகிய பிரமதேவரும், வரை சிறை அறுத்திடும் வசி சம்பம் படை என கொள்பாகசாதனனும் — மலைகளின் சிறகுகளை வெட்டிய கூரிய வச்சிரத்தை ஆயுதமாகக் கொண்ட இந்திரனும், பன்னிரண்டு அருக்கரும் — பன்னிரண்டாதித்தர்களும், ஒற்றை கொம்பு அடைகளிற்று முகம் படைத்து அருளும் குட வயிற்று ஐங்கரக்கோவும் — ஒற்றைக் கொம்பைக் கொண்ட யானை வதனத்தைப் பொருந்தி அனுக்கிரகிக்கின்ற பெரிய உதரத்தையுடைய விநாயகப்பெருமானும் எ — று. (64)

வார்பெறு கலச முலைக்குறக் கொடியை
மணந்தருண் மகிழ்நனற் கடப்பந்
தார்பெறு புயத்தோன் சூரகன் சினக்கே
சரிமுகன் றகுவர்கட் கிறையாஞ்
சூர்பெறு வரங்க டொலைத்தவை வேலோன்
மூகைமே வொகரமூர்ந் தருள்வோன்
கூர்பெறு முட்டாட் செந்நிறக் குடுமிக்
கோழிசேர் கொடிக்கரக் குகனும்.

[வார்பெறு கலச முலைக்குறக் கொடியை
மணந்(து)அருள் மகிழ்நன்நல் கடப்பம்
தார்பெறு புயத்தோன் தாரகன் சினக்கே
சரிமுகன் தகுவர்கட்(கு) இறையாம்

சூர்பெறு வரங்கள் தொலைத்த வை வேலோன்
தோகைமே(வு) ஓகரம்ஊர்ந்(து) அருள்வோன்
கூர்பெறும் முள்தாள் செந்நிறக் குடுமிக்
கோழிசேர் கொடிக்கரக் குகனும்.]

இ — ள் : வார் பெறு கலச முலை குறக்கொடியை மணந்து அருள் மகிழ்ந்தன் — கச்சிறுக்கிய பூரணகும்பத்தை நிகர்த்த தனங்களையுடைய வள்ளி நாயகியாரை மணம்புரிந்தருளிய நாயகரும், நல் கடப்பம் தார் பெறு புயத்தோன் — நல்ல கடப்பமலர் மாலையையணிந்த திருப்புயங்களையுடையவரும், தாரகன் சின கேசரிமுகன் தகுவர்கட்கு இறையாம் சூர் பெறு வரங்கள் தொலைத்த வை வேலோன் — தாரகனும் கோபத்தையுடைய சிங்கமுகாசுரனும் அசுரர்கட்கெல்லாம் தலைவனாகிய சூரபன்மனும் பெற்ற வரங்களை அழித்த கூரிய வேலாயுதத்தையுடையவரும், தோகை மேவு ஓகரம் ஊர்ந்து அருள்வோன் — தோகைகளையுடைய மயில்வாகனத்தின் மேலிவர்ந்து சென்று அனுக்கிரகஞ்செய்பவரும், கூர்பெறு முள் தாள் செந்நிற குடுமி கோழி சேர் கொடி கர குகனும் — கூர்மை பொருந்திய முள்ளைக் கொண்ட கால்களையும் சிவந்த சூட்டையுமுடைய சேவலமைந்த துவசத்தைத் தாங்கிய திருக்கரத்தையுடையவரும் ஆகிய சுப்பிரமணியப் பெருமானும் எ — று. (65).

உலகமுற் றொடுங்குங் காலையி லெழுந்த
வூழிவெந் தீயென வுருத்துத்
திலகமுற் றிடுவா ணுதன்மறைக் கொடிதோள்
சேர்ந்திடுஞ் சிறுவிதி விதியிற்
கலகமுற் றிகலிப் புரிமக மரைக்காற்
கணத்தினிற் சிதைத்தவன் பிறைபோ
லிலகவிட் டெறிக்குங் கதிரெயிற் றலகை
யேறிடும் வீரபத் திரனும்.

[உலகம்முற்(று) ஒடுக்கும் காலையில் எழுந்த
ஊழிவெம் தீயென உருத்துத்
திலகம் உற்றிடும்வாள் நுதல்மறைக் கொடிதோள்
சேர்ந்திடும் சிறுவிதி விதியில்
கலகம் உற்(று) இகலிப் புரிமகம் அரைக்கால்
கணத்தினில் சிதைத்தவன் பிறைபோல்
இலகவிட்(டு) எறிக்கும் கதிர் எயிற்(று) அலகை
ஏறிடும் வீரபத் திர னும்.]

இ — ள் : திலகம் உற்றிடும் வாள் நுதல் மறைக்கொடி தோள் சேர்ந்திடுஞ் சிறுவிதி — பொட்டணிந்த ஒள்ளிய நெற்றியையுடைய வேதவல்லியினது தோள்களைப்புணர்ந்த தக்கனனவன், விதியில் கலகம் உற்று இகலி புரி மகம் —

பிரமதேவரோடு மாறுபட்டு பகைத்துச் செய்த யாகத்தை, உலகம் முற்றும் ஒடுங்குங்காலையில் எழுந்த ஊழி வெம் தீ என உருத்து அரைக்கால் கணத்தினில் சிதைத்தவன் — சர்வ உலகங்களுமழிந்து படுகின்ற ஊழி காலத்தில் உண்டாகிய கொடிய அக்கினியைப்போலக் கோபங்கெண்டு அரைக்காற் கணத்திலழிவு செய்தவரும், பிறைபோல் இலக விட்டு எறிக்கும் கதிர் எயிற்று அலகை ஏறிடும் வீரபத்திரனும் — பிறைச் சந்திரனைப் போல ஒளி விட்டுக் காலுகின்ற கிரணங்களையுடைய பற்களைக் கொண்ட பேய் வாகனத்திலிவருகின்றவருமாகிய வீரபத்திரக் கடவுளும் எ — று. (66)

புடத்திடு பசும்பொற் குழைகிழித் திடுங்கட்
பூரணை புட்கலைதரள
வடக்குட முலைக ளுழுதுழு துழக்கு
மார்பினன் மாலெனமுழங்கி
முடக்கிய தடக்கை நீட்டிமூச் சொடுக்கி
முரிதிரைக் கடலெலா முகந்துள்
ளடக்கியே யுமிழ்வெள் ளானைமே லேறு
மரிகர குமரனு னவனும்.

[புடத்(து)இடு பசும்பொன் குழைகிழித் திடும்கண்
பூரணை புள்கலை தரள
வடக்குட முலைகள் உழு(து)உழு(து) உழக்கும்
மார்பினன் மால்என முழங்கி
முடக்கிய தடக்கை நீட்டிமூச்(சு) ஒடுக்கி
முரிதிரைக் கடல்எலாம் முகந்(து)உள்
அடக்கியே உமிழ் வெள்ஆனைமேல் ஏறும்
அரிகர குமரன் ஆனவனும்.]

இ — ள் : புடத்திடு பசும்பொன் குழை கிழித்திடுங் கண் பூரணை புட்கலை — புடமிட்ட பசிய பொன்னினாற் செய்யப்பட்ட காதணிகளை ஊடுருவிச் செல்லுகின்ற கண்களையுடைய பூரணைபுட்கலையாகிய இரு தேவியர்களது, தரள வட குட முலைகள் உழுது உழுது உழக்கும் மார்பினன் — முத்து மாலைகளணிந்த குடம்போன்ற தனங்கள் தோய்ந்து தோய்ந்து தழும்புண்டாகிய மார்பையுடையவரும், மால் என முழங்கி — மேகத்தைப் போலச்சத்தித்து, முடக்கிய தடக்கை நீட்டி — முடக்கப்பட்ட விசாலித்த துதிக்கையை நீட்டி, மூச்சு ஒடுக்கி முரி திரை கடல் எலாம் முகந்து — மூச்சையடக்கிக்கொண்டு திரைமுரிகின்ற சமுத்திரம் முழுவதையுமுண்டு, உள் அடக்கி உமிழ் வெள் ஆனைமேல் ஏறும் — உள்ளேயடக்கிவைத்திருந்து வெளியே கக்கத்தகுந்த வெள்ளை யானையின்மேலேறுபவருமாகிய, அரிகரகுமரன் ஆனவனும் — ஐயனும் எ — று.

எ — அசை. (67)

வள்ளெனக் குரைக்குங் கரியநாயூரும்
வடுகனு மாருதத் தேவு
மள்ளலஞ் சேற்றுக் கருங்கடற் கிறையு
மக்கினிக் கடவுளு மளகைக்
கெள்ளருந் தலைமை பூண்டபிங் கலனு
மிருஞ்சிறைச் சுரும்புபாட்டயர்ந்து
கள்ளருந் திடுந்தார் நிருதியுஞ் சுருதி
சுருதுமீ சானனென்பவனும்.

[வள்ளனைக் குரைக்கும் கரிய நாய்ஊரும்
வடுகனும் மாருதத் தேவும்
அள்ளலம் சேற்றுக் கருங்கடற்(கு) இறையும்
அக்கினிக் கடவுளும் அளகைக்(கு)
எள்ளரும் தலைமை பூண்டபிங் கலனும்
இரும்சிறைச் சுரும்புபாட்(டு) அயர்ந்து
கள்அருந் திடும்தார் நிருதியும் சுருதி
சுருதும்ஈ சானன் என்பவனும்.]

இ — ள்: வள் என குரைக்கும் கரியநாய் ஊரும் வடுகனும் — வள் என்னும் சத்தமுண்டாகும்படி குரைக்கின்ற கரிய நாய்வாகனத்தையுடையவராகிய வயிரவக் கடவுளும், மாருத தேவும் — வாயுதேவனும், அள்ளலம் சேற்றுக் கரும் கடற்கு இறையும் — குழைந்த சேறுபொருந்திய கரிய சமுத்திர ராசனுகிய வருணனும், அக்கினிக் கடவுளும் — அக்கினிதேவனும், அளகைக்கு எள் அரும் தலைமை பூண்ட பிங்கலனும் — அழகாபுரிக்கு இகழ்வில்லாத அதிகாரத்தைப் பொருந்திய குபேரனும், இரும் சிறை சுரும்பு பாட்டு அயர்ந்து கள் அருந்திடும் தார் நிருதியும் — பெருமைபொருந்திய சிறகுகளையுடைய வண்டுகளானவை இசைகளைப்பாடித் தேனைபுண்ணுகின்ற மாலையையணிந்த நிருதியும், சுருதி சுருதும் ஈசானன் என்பவனும் — வேதங்களினல் மதிக்கப்படுகின்ற ஈசானனும் எ — று. (68)

மேவரு விரிவெண் டிரைக்கட லேழும்
விலங்கலின் குலங்களோ ரேழும்
பூவருங் கங்கை முதனதி யேழும்
பொற்புறு கற்பக நிழல்வாழ்

தேவரு முயர்கந் தருவரு நித்த
சித்தரு முத்தரா முனிவர்
யாவருஞ் செங்கை குவித்தர கரவென்
றிருமருங் கினுந்திரண் டேத்த.

[மேவரு விரிவெண் திரைக்கடல் ஏழும்
விலங்கலின் குலங்கள்ஓர் ஏழும்
பூவரும் கங்கை முதல்நதி ஏழும்
பொற்(பு)உறு கற்பக நிழல்வாழ்
தேவரும் உயர்கந் தருவரும் நித்த
சித்தரும் முத்தராம் முனிவர்
யாவரும் செங்கை குவித்(து)அர கரஎன்(று)
இருமருங்கினும் திரண்(டு) ஏத்த.]

இ — ள்: மேவரு வெண் திரை விரி கடல் ஏழும் — செல்லுதற்கரிய வெண்மையான திரைகள் விரிகின்ற ஏழு கடல்களும், விலங்கலின் குலங்கள் ஓர் ஏழும் — குலமலைகளேழும், பூ வரும் கங்கை முதல் நதி ஏழும் — பூவுல கத்திலுள்ள கங்காநதி முதலிய ஏழுநதிகளும், பொற்புறு கற்பக நிழல் வாழ் தேவரும் — அழகமைந்த கற்பகதரு நிழலில் வசிக்கின்ற தேவர்களும், உயர் கந்தருவரும் — உயர்ந்த கந்தருவர்களும், நித்த சித்தரும்—நித்தியமாய் வசிக் கின்ற சித்தர்களும், முத்தராம் முனிவர் யாவரும் — சிவன்முத்தர்களாயுள்ள முனிவர்களுமாகிய எல்லோரும், செங்கை குவித்து அரகரவென்று இரு மருங்கினும் திரண்டு ஏத்த — சிவந்த கைகளைச் சிரமேற் குவித்து அரகர வென்று இரண்டு பக்கங்களிலும் கூட்டமாய்நின்று துதிக்கவும் எ — று. (69)

பாரதன் மேலா மண்டகோ ளகைபொற்
பருப்பதந் திருப்பவும் வல்ல
சாரதர் குழுவுங் குழிவிழிப் பேழ்வாய்த்
தளர்நடைப் பேய்களுஞ் சார
நாரதன் மகதி யாழ்நரம் புளர
நந்திகைப் பிரம்பெடுத் துலவக்
காரதன் வடிவு பெறுநறுங் கூந்த
லரம்பையர் கவரி காலசைப்ப.

[பாரதன் மேலாம் அண்டகோ ளகைபொன்
பருப்பதம் திருப்பவும் வல்ல
சாரதர் குழுவும் குழிவிழிப் பேழ்வாய்த்
தளர்நடைப் பேய்களும் சார

நாரதன் மகதி யாழ்நரம்(பு) உளர
நந்திகைப் பிரம்(பு)எடுத்(து) உலவ
காரதன் வடிவு பெறுநறும் கூந்தல்
அரம்பையர் கவரிகால் அசைப்ப.]

இ — ள்: பாரதன் மேலாம் அண்டகோளகை பொன்பருப்பதம் திருப்பவும் வல்ல சாரதர் குழுவும் — பூமிக்கப்பாலுள்ள அண்டகடாகத்தையும் பொன்மலையாகிய மகாமேருகிரியையும் நிலைமாற்றத்தக்க வலிமையையுடைய பூத சேனைகளும், குழி விழி பேழ் வாய் தளர் நடை பேய்களும் சார — ஆழ்ந்த கண்களையும் பிளந்த வாயையும் தள்ளாடுகின்ற நடையையுமுடைய பிசாசங்களும் பக்கத்தே நிற்கவும், நாரதன் மகதியாழ் நரம்பு உளர — நாரதமுனிவர் மகதியாழின் நரம்புகளைத் தடவியிசைபாடவும், நந்தி கை பிரம்பு எடுத்து உலவ — நந்திதேவர் தமது திருக்கரத்திற் பிரம்பைத் தாங்கிநின்று உலாவவும், கார் அதன் வடிவு பெறு நறும் கூந்தல் அரம்பையர் கவரி கால் அசைப்ப — முகிலையொத்த கரிய நிறத்தையுடைய வாசனையூட்டப்பட்ட கூந்தலைக்கொண்ட அரம்பையர்கள் சாமரங்களால் காற்றுண்டாகும்படி வீசவும் எ — று. (70)

கொலைபயி னயனத் தஞ்சன மறுவுங்
குளிர்மொழி யமிழ்தமுங் குலவு
மலைமகள் வதன முழுமதிக் குடைந்து
வாளெயிற் றரவினுக் கிடைந்து
கலைவள ராம லுடல்குறைந் தொதுங்கிக்
கடுக்கைமா லூரமார் கபித்த
நிலைபெறு சடைக்காட் டலைநதிக் கயல்வெண்
ணிலவுகான் றிளமதி கிடப்ப.

[கொலைபயில் நயனத்(து) அஞ்சன மறுவும்
குளிர்மொழி அமிழ்தமும் குலவும்
மலைமகள் வதன முழுமதிக்(கு) உடைந்து
வாள்எயிற்(று) அரவினுக்(கு) இடைந்து
கலைவள ராமல் உடல்குறைந்(து) ஒதுங்கிக்
கடுக்கைமா லூரம்ஆர் கபித்தம்
நிலைபெறு சடைக்காட்(டு) அலைநதிக்(கு) அயல்வெண்
நிலவுகான்(று) இளமதி கிடப்ப.]

இ — ள்: கொலைபயில் நயனத்து அஞ்சன மறுவும் — கொலைத்தொழிலைப் பயின்ற கண்களின்கண்ணே திட்டிய மையின் மறுவும், குளிர் மொழி அமிழ்தமும் குலவும் — குளிர்ச்சிபொருந்திய திருவார்த்தையாகிய அமிர்தமும் விளங்குகின்ற, மலைமகள் வதன முழு மதிக்கு உடைந்து — மலையரசன்

புதல்வியாகிய உமாதேவியாரது முகமாகிய பூரணசந்திரனுக்குத் தோற்று, வாள் எயிற்று அரவினுக்கு இடைந்து — ஒளிபொருந்திய பற்களோக்கொண்ட சர்ப்பத்திற்கு அஞ்சி, கலை வளராமல் உடல் குறைந்து ஒதுங்கி — சோடச கலைகளும் நிரம்பப் பெறுமல் தேய்ந்த உடலோடு ஓர்பக்கத்தொதுங்கி, கடுக்கை மாலூரம் ஆர் கபித்தம் நிலைபெறு சடைக்காட்டு — கொன்றைமலரும் வில்வமும் ஆத்திமலரும் விளாப்பத்திரமும் நிலையாயுள்ள சடையாகிய காட்டில், அலை நதிக்கு அயல் — அலைபொருந்திய கங்கைநதிக்குப் பக்கத்தில், இள மதி — இளம்பிறைச் சந்திரன், வெண் நிலவு கான்று கிடப்ப — வெள்ளிய நிலாக் கிரணத்தை வீசிக்கொண்டிருக்க எ — று. (71)

கறங்கிடுந் திரைநீர்க் கங்கையஞ் சடையிற்
கட்செவிக் கடும்பணி சீற
வுறங்கிட றவிர்ந்து கரநக நுதியா
லுரித்துமுன் மருங்குற வுடுத்த
மறங்கிளர் தழற்கட் கொடுவரிப் புலித்தோ
லுடையனுங் கிடுந்தொறு மருண்மா
னிறங்கிட வெருவிக் குதித்தெழுந் தற்ற
நோக்கியங் கிடக்கரத் திருப்ப.

[கறங்கிடும் திரைநீர்க் கங்கைஅம் சடையில்
கட்செவிக் கடும்பணி சீற
உறங்கிடல் தவிர்ந்து கரநக நுதியால்
உரித்துமுன் மருங்(கு)உற உடுத்த
மறம்கிளர் தழல்கண் கொடுவரிப் புலித்தோல்
உடைஅனுங் கிடுந்தொறும் மருள்மான்
இறங்கிட வெருவிக் குதித்(து)எழுந்(து) அற்றம்
நோக்கிஅங்(கு) இடக்கரத்(து) இருப்ப.]

இ — ள்: மருள் மான் — வெருட்சியையுடைய மானனது, கறங்கிடும் திரை நீர் கங்கை அம் சடையில் கண் செவி கடும் பணி சீற — சத்திக்கின்ற திரைபொருந்திய நீரையுடைய கங்காநதி தங்கப்பெற்ற அழகிய சடையில் கண்ணைச் செவியாகக்கொண்ட கொடிய சர்ப்பங்கள் கிடந்து சீறுதலினால், உறங் கிடல் தவிர்ந்து — துயிலுதலையொழிந்து, கர நக நுதியால் உரித்து முன் மருங்கு உற உடுத்த — திருக்கரத்திற்கொண்ட நகத்தினுனியால் முன்னே நாளிலுரித்து அரைக்கட் காத்திய, மறம் கிளர் தழல் கண் கொடுவரி புலி தோல் உடை அனுங்கிடும் தொறும் — கொடுமை மிகுந்த அக்கினிபோன்ற கண்களையும் வளைந்த ரேகைகளையுமுடைய புலித்தோலுடையானது அசையும் பொழுதெல்லாம், இறங்கிட வெருவி — கீழேயிறங்குவதற்கு அஞ்சி, குதித்து எழுந்து — துள்ளிப் பாய்ந்து, அங்கு அற்றம் நோக்கி இடக்கரத்து இருப்ப— அங்கே (ஓடுதற்கு) சமயம் பார்த்துக்கொண்டு இடத் திருக்கரத்திலிருக்கவும் எ — று. (72)

கோல்வரை நிகர்க்கும் வரிநெடுந் தடங்கட்
குவிதனத் திரதிதோ டோய்ந்த
சேல்வரை துவசச் சித்தச னெரியத்
திறந்தகண் டிருநுதற் றிகழக்
கால்வரை யளித்தற் கரிதென விரிந்த
கடுநுகர் களனும்வித் துரும
மால்வரை யருவி யென்னமுப் புரிநூல்
வயங்குமார் பமுமிக விளங்கு.

[கோல்வரை நிகர்க்கும் வரிநெடும் தடம்கண்
குவிதனத்(து) இரதிதோள் தோய்ந்த
சேல்வரை துவசச் சித்தசன் எரியத்
திறந்தகண் திருநுதல் திகழ,
கால்வரை அளித்தற்(கு) அரி(து)என விரிந்த
கடுநுகர் களனும்வித் துரும
மால்வரை அருவி என்ன முப்புரிநூல்
வயங்குமார் பமும், மிக விளங்க.]

இ — ள்: கோல் (நிகர்க்கும்) வரி நெடும் தடம் கண் — (கூர்மையில்) அம்பையொத்த ரேகைகள் பரந்த நீண்ட விசாலமாகிய கண்களையும், வரை நிகர்க்கும் குவி தனத்து இரதி தோள் தோய்ந்த — மலையையொத்த குவிந்த தனங்களையுமுடைய இரதியென்பாளது தோள்களைத் தழுவுகின்ற, சேல் வரை துவச சித்தசன் எரிய — மற்சமெழுதிய கொடியையுடைய மன்மத னவன் எரியும்படி, திறந்த கண் திரு நுதல் திகழ — திறக்கப்பட்ட அக் கினிக்கண் திருநெற்றியில் விளங்கவும், கால்வரை அளித்தற்கு அரிது என விரிந்த கடுநுகர் களனும் — கால்மாத்திரைப் பொழுதாயினுங் காத்தற்கு இயலாதென்று சொல்லும்படி பரவிய நஞ்சையுண்டருளிய திருக்கண்டமும், வித்துரும மால் வரை அருவி என்ன முப்புரி நூல் வயங்கு மார்பமும் — பெரிய பவளமலையிற் பாய்கின்ற அருவியைப்போல முப்புரியாகச் செய்யப் பட்ட உபவீதம் விளங்குகின்ற திருமார்பும், மிக விளங்க — மிக்க ஒளியைக் காலவும் எ — று. (73)

தூயசெந் தமிழ்ச்சுந் தரன்றனக் காகத்
தூதுபோய்ப் பரவைபா னடந்து
மேயவன் றிறல்சே ரந்தக னுக
விலங்கன் முன்கலங்கிட வுதைத்துச்

சேயசெங் கமல மெனச்சிறந் தன்பர்
சிந்தையம் போருக மலரக்
காய்கதிர் விரிக்குஞ் செழுமணிச் செம்பொற்
கணிகழற் ருளிணை கவின.

[தூயசெந் தமிழ்ச்சுந் தரன்தனக்(கு) ஆகத்
தூதுபோய்ப் பரவைபால் நடந்தும்
மேய,வன் திறல்சேர் அந்தகன் ஆக
விலங்கல்முன் கலங்கிட உதைத்துச்
சேயசெம் கமலம் எனச்சிறந்(து) அன்பர்
சிந்தைஅம் போருகம் மலரக்
காய்கதிர் விரிக்கும் செழுமணிச் செம்பொன்
கணிகழல் தான்இணை கவின.]

இ — ள்: தூய செந்தமிழ் சுந்தரன் தனக்கு ஆக பரவைபால் தூது போய் நடந்தும் — சுத்தமான செந்தமிழாலாகிய தேவாரங்களைப் பாடிய சுந்தரமூர்த்திநாயனருக்காகப் பரவையாரிடத்துத் தூதாகப்போய் நடந்தும், மேய வன்திறல் சேர் அந்தகன் ஆக விலங்கல் முன் கலங்கிட உதைத்து — பொருந்திய மிக்க வலிமையையுடைய யமனது சரீரமாகிய மலையானது முன்னே நாளிற் கலக்கமடையும்படி யுதைத்தும், சேய செம் கமலம் என சிறந்து — அழகிய செந்தாமரைமலர்போலச் சிறப்படைந்து, அன்பர் சிந்தை அம்போருகம் மலர — அடியார்களது மனமாகிய தாமரை மலரும்படி, காய் கதிர் வீரிக்கும் செழுமணி செம்பொன் கணி கழல் தாள் இணை கவின — எறிக்கின்ற கிரணங்களைப் பரவச்செய்யுஞ் செழுமையாகிய மாணிக்க ரத்தினங்கள் பதித்துச் சிவந்த பொன்னினாற் செய்யப்பட்ட ஒளிபொருந்திய வீரக் கழலையணிந்த திருப்பாதங்களிரண்டும் பிரகாசிக்கவும் எ — று. (74)

சும்மையார் கலிசூ ழுலகினிற் புகலி
தோன்றிய கவுணியச் சேய்க்குக்
கொம்மைவார் முலையா ரமுதுமுத் தமிழுங்
குழைத்துமுன் குடித்திடப் பருக்கு
மம்மையோர் பாக மாகமற் றெவர்க்கு
மருள்குளித் திடும்விழி பரப்பி
வெம்மையார் மடங்க லாசனத் தெமையாள்
விமலனங் கினிதுவீற் றிருந்தான்.

[சும்மைஆர் கலிசூழ் உலகினில் புகலி
தோன்றிய கவுணியச் சேய்க்குக்
கொம்மைவார் முலைஆர் அமுதும்முத் தமிழும்
குழைத்துமுன் குடித்திடப் பருக்கும்

அம்மைஓர் பாகம் ஆகமற்(று) எவர்க்கும்
அருள்குழித் திடும்விழி பரப்பி
வெம்மைஆர் மடங்கல் ஆசனத்(து) எமைஆள்
விமலன்அங்(கு) இனிதுவீற்(று) இருந்தான்.]

இ — ள்: சும்மை ஆர்கலி சூழ் உலகினில் புகலி தோன்றிய கவுணிய சேய்க்கு — ஒலிநிறைந்த சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூவுலகத்தின்கண்ணே யுள்ள சிகாழிப்பதியிற் கவுணியர் கோத்திரத்திற் பிறந்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனருக்கு, கொம்மை வார் முலை ஆர் அமுதும் முத்தமிழும் குழைத்து முன் குடித்திட பருக்கும் அம்மை — அழகிய சுச்சிற்படிந்த தனங் களினின்றும் சிந்திய பாலையும் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழையு மொன்றுகக் குழைத்து முன்னைநாளிற் குடிக்கும்படியூட்டிய பார்ப்பதிதேவி யார், ஓர் பாகம் ஆக — இடப்பாகமாகவும், மற்றெவர்க்கும் அருள்குளித் திடும் விழி பரப்பி — மற்றைய சர்வான்மாக்களுக்கும் அருளாகிய நீரிற் குளிக் கும்படி திருநோக்கஞ் செய்தருளி, வெம்மை ஆர் மடங்கல் ஆசனத்து — உக்கிரம் நிறைந்த சிங்காசனத்தில், எமை ஆள் விமலன் அங்கு இனிது வீற் றிருந்தான் — எம்மை யடிமைகொள்ளுகின்ற அமையராகிய சிவபெருமான் அவ்விடத்து நன்கு வீற்றிருந்தருளினர் எ — று. (75)

முந்தைநாள் களினித் தன்மையி னிகழ்ந்த
முழுவது நிணைந்துநீண் முடிக்கிட்
கிந்தைமா விந்த நிகர்த்தகோ புரஞ்சேர்
கீழ்த்திசை வாயில்போய் நந்தி
யெந்தையே வலினு லடுந்திறற் கால
விருகர மிருசர ணைந்தன்
சிந்தைகம் பிதத்தோ டெம்பிரா னிருக்குந்
திருச்சபை யூடுபோய்த் துதிப்பான்.

[முந்தைநாள் களின்இத் தன்மையின் நிகழ்ந்த
முழுவதும் நிணைந்துநீள் முடிக்கிட்
கிந்தை,மா விந்த நிகர்த்தகோ புரஞ்சேர்
கீழ்த்திசை வாயில்போய் நந்தி
எந்தைஎ வலினுல் அடும்திறல் காலன்
இருகரம் இருசர ணைந்தன்
சிந்தைசம் பிதத்தோ(டு) எம்பிரான் இருக்கும்
திருச்சபை ஊடுபோய்த் துதிப்பான்.]

இ — ள்: முந்தை நாள்களின் இத்தன்மையின் நிகழ்ந்த முழுவதும் நிணைந்து — முன்னுட்களிலே இவ்விதமாக நடைபெற்ற யாவற்றையுஞ் சிந் தித்து, நீள் முடி கிட்கிந்தை மாவிந்தம் நிகர்த்த கோபுரம் சேர் கீழ் திசை

வாயில் போய் — உயர்ந்த சிகரங்களையுடைய கிஷ்கிந்தா நகரத்திலுள்ள விந்த மலையைப்போன்ற கோபுரத்தைக்கொண்ட கிழக்குவாயிலையடைந்து, எந்தை நந்தி ஏவலினுல் — எமது பிதாவாகிய திருநந்திதேவரது ஆஞ்ஞையினுல், அடும் திறல் காலன் — கொலைத்தொழிலைச் செய்கின்ற வலிமையையுடைய யமனுனவன், தன் இரு கரம் இரு சரணம் சிந்தை கம்பிதத்தோடு — தனது இரண்டு கைகளும் இரண்டு கால்களும் மனமுமாகிய இவைகளின் நடுக்கத் தோடு, எம்பிரான் இருக்கும் திருச்சபை ஊடு போய் துதிப்பான் — எமது பரமபிதாவாகிய சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற சபாமண்டபத்தை யடைந்து ஸ்தோத்திரஞ் செய்வான் எ — று. (76)

பொங்கர விதழிப் புதுமலர் புனைந்த
புரிசடைப் புனிதவம் புயத்தோன்
கங்கர கங்கா தரகர வரையுங்
காய்சினத் தரக்குமுன் னுரித்த
துங்கர வியனன் மதியமுக் கண்ணுஞ்
சுரநரை விடைவரை துவச
சங்கர வமல திகம்பர வும்பர்
தலைவனின் முண்மலர் போற்றி.

[பொங்(கு) அர(வு) இதழிப் புதுமலர் புனைந்த
புரிசடைப் புனிதஅம் புயத்தோன்
கம்கர கங்காதர, சுர வரையும்
காய்சினத் தரக்கும்முன் உரித்த
துங்க, ரவி, அனல் மதியமுக் கண்ணும்
சுரநரை விடைவரை துவச
சங்கர அமல திகம்பர உம்பர்
தலைவனின் தாள்மலர் போற்றி.]

இ — ள் : பொங்கு அரவு புது இதழி மலர் புனைந்த புரிசடை புனித — கொதித்தெழும்புகின்ற சர்ப்பங்களையும் புதிய கொன்றை மலரையுந் தரித் தருளிய முறுகிய சடையையுடைய பரிசுத்தரே, அம்புயத்தோன் கம் கர — பிரமகபாலத்தைக் கொண்ட திருக்கரத்தையுடையவரே, கங் காதர — கங்கையைத் தரித்தவரே, கரவரையும் காய் சின தரக்கும் முன் உரித்த துங்க — துதிக்கையையுடைய மலைபோன்ற யானையையும் கொதிக்கின்ற கோபத்தையுடைய புலியையும் பண்டைக் காலத்திலுரித்தருளிய மேன்மையை யுடையவரே, ரவி அனல் மதியம் முக்கண்ணும் சுர — சூரியனையும் அக்கினி யையுஞ் சந்திரனையும் மூன்று கண்களாகக்கொண்ட தேவரே, நர விடை வரை துவச — வெண்மையான இடபமெழுதிய கொடியையுடையவரே, சங் கர — ஆன்மாக்களுக்கெல்லாஞ் சுகத்தைச் செய்பவரே, அமல — அழுக்கற்

றவரே, திகம்பர — திக்குகளே ஆடையாகவுடையவரே, உம்பர் தலைவ — தேவநாயகரே, நின் மலர் தாள் போற்றி — தேவரீரது தாமரை மலர் போன்ற திருப்பாதங்களுக்கு நமஸ்காரம் எ — று. (77)

மன்றன்மைக் கூழை மலைமகட் புணர
வருத்துதி யென்றசொான் மறும
லன்றம ரருக்காச் சென்றுடற் றுவனென்
றங்கணை யைங்கணைக் கிழவன்
பொன்றமத் தகக்கட் புலக்கனல் கொழுத்திப்
புன்னகை புரிந்துமுப் புரமுங்
குன்றவிற் கனகக் குன்றவிற் குனித்த
குழகநின் குரைகழல் போற்றி.

[மன்றல்மைக் கூழை மலைமகள் புணர
வருத்துதி என்றசொல் மறுமல்
அன்(று)அம ரருக்காகச் சென்(று) உடற்றுவன்என்(று)
அங்(கு)அணை ஐங்கணைக் கிழவன்
பொன்ற மத்தகக்கண் புலக்கனல் கொழுத்திப்
புன்னகை புரிந்துமுப் புரமும்
குன்றவில் கனகக் குன்றவில் குனித்த
குழகநின் குரைகழல் போற்றி.]

இ — ள் : மன்றல் மை கூழை மலைமகள் புணர வருத்துதி என்ற சொல் மறுமல் — வாசனைபொருந்திய கரிய கூந்தலையுடைய உமையம் மையாரைச் சேரும் பொருட்டு (புஷ்பபாணங்களைச் செலுத்தி) வருத்தக் கடவையென்று (தேவர்கள்) கூறிய வாக்கை மறுக்காமல், அன்று அமரருக்காச் சென்று உடற் றுவன் என்று அங்கு அணை ஐங்கணை கிழவன் பொன்ற — அக்காலத்திலே அத்தேவர்கள் பொருட்டாகச் சென்று யுத்தஞ் செய்வேனென்று அவ்விடத்து வந்த (அரவிந்தம் மா அசோகு முல்லை நீலோற்பலமாகிய) பஞ்ச புஷ்ப பாணங்களையுமுடைய மன்மதனவன் இறந்துபடும்படி, மத்தக கண் புல கனல் கொழுத்தி — நெற்றிக்கண்ணிற் பொருந்திய அக்கினியினெழித்து, புன் நகை புரிந்து முப்புரமும் குன்ற வில் கனக குன்ற வில் குனித்த குழக — புன்முறுவல் செய்து முப்புரங்களுமழியும்படி ஒளி பொருந்திய பொன்மயமா கிய மேருமலையை வில்லாக வளைத்த இளமை நீங்கப் பெறுதவரே, நின் குரை கழல்போற்றி — தேவரீரது ஒலி பொருந்திய வீரக்கழலணிந்த திருப் பாதங்களுக்கு நமஸ்காரம் எ — று. (78)

ஒருமலை யெடுத்த விருந்திற லரக்க
னுரங்குறைந் துட்கமுன் னூன்றிப்
பொருமலைச் சலதி கடைந்திடு மந்நாட்
புத்தமு தத்துட னுதித்து

வருமலைப் பழித்த குழற்றிரு மணுளன்
மலர்விழிப் போதணிந் தடியார்
கருமலி வகற்றி யின்பவீ டளிக்குங்
கணைகழற் முண்மலர் போற்றி.

[ஒருமலி எடுத்த இரும்திறல் அரக்கன்
உரம்குறைந்(து) உட்கமுன் னுன்றிப்
பொரும்அலைச் சலதி கடைந்திடும் அந்தாள்
புத்தமு தத்துடன் உதித்து
வரும்,அலைப் பழித்த குழல்திரு மணுளன்
மலர்விழிப் போ(து) அணிந்(து) அடியார்
கருமலி(வு) அகற்றி இன்பவீ(டு) அளிக்கும்
கணைகழல் தாள்மலர் போற்றி.]

இ — ள் : ஒரு மலி எடுத்த இரும் திறல் அரக்கன் உரம் குறைந்து உட்க முன் னுன்றி — ஒப்பற்ற கயிலாச மலையைத் தூக்கிய மிக்க வலிமையையுடைய இராவணன் வலிமை குன்றி நடுங்கும்படி முன்னொருகாலிலூன்றி மிதித்தருளி, பொரும் அலை சலதி கடைந்திடும் அந்தாள் — திரைமோதுகின்ற பாற்கடலைக் கடைந்த அற்றைக்காலத்து, புது அமுதத்துடன் உதித்து வரும் அலைபோல் பழித்த குழல் திருமணுளன் மலர் விழி போது அணிந்து — புதிய அமுதத்தோடு கூடிப் பிறந்துவந்த (கருமையில்) இருளையும் பழித்த கூந்தலையுடைய இலக்குமிக்கு நாயகராகிய மகாவிஷ்ணுமூர்த்தியினது மலராகிய கண்ணைப் புஷ்பமாக அணிந்து, அடியார் கரு மலிவு அகற்றி இன்ப வீடு அளிக்கும் — அடியவர்களினது பிறவியாகிய மயக்கத்தைக்கெடுத்துச் சுகமாகிய மோட்ச பதவியைக் கொடுக்கின்ற, கணை கழல் மலர் தாள் போற்றி — சத்திக்கின்ற வீரக்கழலையணிந்த மலர் போன்ற திருப்பாதங்களுக்கு நமஸ்காரம் எ — று. (79)

வேறு

எனப்பல துதிகள் கூறி யீசனை யிறைஞ்சி யேத்தி
மனப்படு மச்ச நீங்கி வாய்புதைத் தொதுங்கி நின்றங்
கனப்பதி பாகன் றன்னை யவனிமுற் படைக்கச் செய்தாய்
கனப்படு முலகங் காக்கக் கண்ணனைக் கற்பித் தாயே.

[எனப்பல துதிகள்கூறி ஈசனை இறைஞ்சி ஏத்தி
மனப்படும் அச்சம் நீங்கி வாய்புதைத்(து) ஒதுங்கி நின்(று)அங்(கு)
அனப்பதி பாகன் தன்னை அவனிமுன் படைக்கச் செய்தாய்
கனப்படும் உலகம் காக்கக் கண்ணனைக் கற்பித்தாயே.]

இ — ள் : என பல துதிகள் கூறி ஈசனை இறைஞ்சி ஏத்தி — என்றிவ்வாறுகிய பல தோத்திரங்களைச் சொல்லிச் சிவபெருமானை வணங்கித் துதித்து,

மனம் படும் அச்சம் நீங்கி வாய் புதைத்து அங்கு ஒதுங்கி நின்று — மனத்திற் கொண்ட பயமொழிந்து வாய்பொத்தி அவ்விடத்து ஒதுக்கமாய் நின்று, முன் அன பதி பாகன் தன்னை அவனி படைக்க செய்தாய் — முன்னரே அன்னத்தை வாகனமாகக் கொண்ட பிரமாவை உலகத்தைச் சிருட்டிக்கும்படி பணித்தருளினீர், கண்ணினை கனப்படும் உலகம் காக்க கற்பித்தாய் — விஷ்ணு மூர்த்தியைப் பாரமரகிய அவ்வுலகத்தைக் காக்கும்படி பணித்தருளினீர் எ — று.

ஏ அசை. (80)

கண்ணழல் கதுவும் வெள்ளைக் கரடமால் யானையூரு
மண்ணலைப் புலவர் பொன்னு டளித்திடற் கருளிச் செய்தாய்
தண்ணெனுங் கதிர்கள் வீசுஞ் சந்திரா தித்தர் தம்மை
விண்ணினி னுலவி வையம் விளக்குவீ ரெனவி டுத்தாய்.

[கண்அழல் கதுவும் வெள்ளைக் கரடமால் யானை ஊரும்
அண்ணலைப் புலவர் பொன்நா(டு) அளித்திடற்(கு) அருளிச் செய்தாய்
தண்எனும் கதிர்கள் வீசும் சந்திர ஆதித்தர் தம்மை
விண்ணினில் உலவி வையம் விளக்குவீர் எனவிடுத்தாய்.]

இ — ள் : கண் அழல் கதுவும் வெள்ளை கரட மால் யானை ஊரும் அண்ணலை — கண்களினின்று மக்கினிப் பொறி சொலிக்கின்ற வெண்ணிறத்தைக் கொண்ட மதம்பாய் சுவட்டையுடைய பெரிய ஐராவதயானை வாகனனுகிய இந்திரனை, புலவர் பொன் நாடு அளித்திடற்கு அருளி செய்தாய் — தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்க லோகத்தைப் பரிபாலிக்கும்படி பணித்தருளினீர், தண் எனும் கதிர்கள் வீசும் சந்திர ஆதித்தர் தம்மை—குளிர்ந்த கிரணங்களைக் காலுகின்ற சந்திரனையுஞ் சூரியனையும், விண்ணினின் உலவி வையம் விளக்குவீர் என விடுத்தாய் — ஆகாயத்தின் கண்ணை சஞ்சரித்துப் பூமிக்கு ஒளி கொடுக்கும்படி பணித்தருளினீர் எ — று. (81)

ஏர்பெறு மளகை தன்னை யிருநிதிக் குபேரற் கிந்தாய்
பார்முத லெங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்றை
வார்தருஞ் சலதி யாள வருணனை வைத்தாய் தன்மச்
சீர்கெடு மவர்க்குத் தண்டஞ் செய்வதற் கமைத்தா யென்னை.

[ஏர்பெறும் அளகை தன்னை இருநிதிக் குபேரற்(கு) ஈந்தாய்
பார்முதல் எங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்றை
வார்தரும் சலதி ஆள வருணனை வைத்தாய் தன்மச்
சீர்கெடும் அவர்க்குத் தண்டம் செய்வதற்(கு) அமைத்தாய் என்னை.]

இ — ள் : ஏர் பெறும் அளகை தன்னை இரு நிதி குபேரற்கு ஈந்தாய்— பெருமை பொருந்திய அளகாபுரியை மிக்க செல்வப் பெருக்கையுடைய குபேரனுக்குக் கொடுத்தருளினீர், பார் முதல் எங்கும் வீச பவனனை பணித்தாய்— பூமி முதலெவ்விடங்களிலுமுலாவும்படி வாயுதேவனுக்கு ஆஞ்ஞாபித்தருளினீர், மற்றை வார் தரும் சலதி ஆள வருணனை வைத்தாய் — ஏனைய நீண்ட சமுத்திரத்தைப் பரிபாலிக்கும்படி வருணனுக்குப் பணித்தருளினீர், தன்ம சீர் கெடும் அவர்க்கு தண்டம் செய்வதற்கு என்னை அமைத்தாய் — தருமவொழுக்கந் தவறியவர்களுக்குத் தண்டனை புரியும்படி அடியேற்குக் கற்பித்தருளினீர் எ — று. (82)

திரிபுவ னத்து நீதான் செய்தகற் பனைக ளெல்லாஞ்
சரிவர நடந்த வொன்றுந் தமியனேன் பிழைத்த தில்லை
புரிசடைப் பரம வென்று புரிநெடும் பாசத் தோடு
முரிசெயற் கரிய தண்ட முதலமுத் திரைமுன் வைத்து.

[திரிபுவ னத்து நீதான் செய்த கற்பனைகள் எல்லாம்
சரிவர நடந்த ஒன்றும் தமியனேன் பிழைத்த(து) இல்லை
புரிசடைப் பரம என்று புரிநெடும் பாசத் தோடு
முரிசெயற்(கு) அரிய தண்டம் முதல முத்திரைமுன் வைத்து.]

இ — ள் : திரி புவனத்து நீதான் செய்த கற்பனைகள் எல்லாம் சரிவர நடந்த — (பூமி அந்தரம் சுவர்க்கமாகிய) மூவுலகத்துந் தேவரீராஞ்ஞாபித்த ஆஞ்ஞைகள் யாவுங் கிரமமாய் நடைபெற்றன, தமியேன் ஒன்றும் பிழைத்தது இல்லை — அடியேன் யாதுந் தவறிழைத்தேனல்லேன், புரிசடை பரம என்று — முறுகிய சடையையுடைய பரம் பொருளேயென்று, புரி நெடும் பாசத் தோடு முரி செய்தற்கு அரிய தண்டம் முதல முத்திரை முன் வைத்து — புரிபொருந்திய நீண்ட பாசமும் முரித்தற்கியலாத தண்டாயுதமும் முதலாகிய சின்னங்களைத் திருமுன்னியில் வைத்து எ — று. (83)

ஆக்குவா னழிக்க வெண்ணி லாரது காக்க வல்லார்
நீக்குவா யிதனை மற்றோர் பணிசெய நிறுத்து கென்று
தூக்குநீ டுலைக்கோ லன்னுன் சொற்றது கேட்டு நெஞ்சிற்
றாக்குமா றின்று வந்த தாழ்வென்கொல் சாற்று கென்றான்.

[ஆக்குவான் அழிக்க எண்ணில் ஆர்அது காக்க வல்லார்
நீக்குவாய் இதனை மற்(று)ஓர் பணிசெய நிறுத்துகென்று
தூக்குநீள் துலைக்கோல் அன்னுன் சொற்றது கேட்டு நெஞ்சில்
தாக்குமா(று) இன்று வந்ததாழ்(வு) என்கொல் சாற்றுகென்றான்.]

இ — ள்: ஆக்குவான் அழிக்க எண்ணில் ஆர் அது காக்க வல்லார் — (ஒரு பொருளை) உண்டாக்குபவனே அழிக்கவும் நினைப்பானுகில் ஆர் அதனைத் தடுத்துக் காத்தற்கு வல்லவர், நீக்குவாய் இதனை — (அடியேனிடத்திலிருந்து) இத்தொண்டை நீக்கியருளுக, மற்று ஓர் பணிசெய நிறுத்துக என்று — பின்னேர் தொழிலை நடாத்துதற்கு ஆஞ்ஞாபித்தருளுகவென்று, தூக்கும் நீள் துலை கோல் அன்னன் சொற்றது கேட்டு — தூக்கப்படுகின்ற நீண்ட தராசுக் கோலையொத்த நீதியையுடையவனுகிய யமராசன் கூறியதை (சிவபெருமான்) கேட்டு, நெஞ்சில் தாக்குமாறு இன்று வந்த தாழ்வு என்கொல் சாற்றுக என்றுன் — உனது மனத்தை வருத்தும்படி இற்றைத் தினத்தில்வந்த குறையாது அதனைக் கூறக்கடவையென்று ஆஞ்ஞாபித்தனர் எ — று. (84)

கண்ணிக ளுன்றிக் கையிற் கார்முகங் குனித்தம் பேவி
மண்ணின்மா வினங்கள் கொன்றும் வாய்த்தபுட் குலங்கண் மாய்த்தும்
வெண்ணிணத் தடிகடின்று விக்கிய சடத்தா னன்றுன்
றுண்ணிகழ் வில்லா வேட னுன்பதத் துறைத லுற்றுன்.

[கண்ணிகள் ஊன்றிக் கையில் கார்முகம் குனித்(து)அம்(பு)ஏவி
மண்ணில்மா இனங்கள் கொன்றும் வாய்த்தபுள் குலங்கள் மாய்த்தும்
வெள்நிணத் தடிகள் தின்றுவிக்கிய சடத்தான் நன்(று)ஒன்(று)
உள்நிகழ்(வு) இல்லா வேடன் உன்பதத்(து) உறைதல் உற்றுன்.]

இ — ள்: கண்ணிகள் ஊன்றி — கண்ணிகளைப் பதித்து, கையில் கார்முகம் குனித்து அம்பு ஏவி — கரத்திற்கொண்ட வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தி, மண்ணில் மா இனங்கள் கொன்றும் — பூமியின்கண்ணே வாசஞ்செய்கின்ற மிருகங்களை வதைத்தும், வாய்த்த புள் குலங்கள் மாய்த்தும் — அகப்பட்ட பறவைக் கூட்டங்களைக் கொலைபுரிந்தும், வெள் நிண தடிகள் தின்று விக்கிய சடத்தான் — வெண்ணிறமாகிய நிணத்தையுடைய மாமிசங்களைப் புசித்தலினுல் பாரித்த சரீரத்தையுடையவனும், நன்று ஒன்று உள் நிகழ்வு இல்லா வேடன் — ஒரு நன்மையாவது மனத்தின் கண்ணே பொருந்தப் பெறுத வேடனுகிய அங்குலன், உன் பதத்து உறைதல் உற்றுன் — தேவரீரது மோக்ஷபதத்தை அடையப் பெற்றுன் எ — று. (85)

பரிமகம் புரிகின் றுனை பகர்தரு மாக மாதத்
துரியநீர் படிகின் றுனை வுயர்சிவ லிங்க பூசை
புரிதர நினைகின் றுனை புண்ணியத் தலத்தி லுன்னைத்
தெரிசனஞ் செய்கின் றுனை சிவநிசி நோற்கின் றுனை.

[பரிமகம் புரிகின் றுனே பகர்தரும் மாக மாதத்(து)
உரியநீர் படிகின் றுனே உயர்சிவ லிங்க பூசை
புரிதர நினைகின் றுனே புண்ணியத் தலத்தில் உன்னைத்
தெரிசனம் செய்கின் றுனே சிவநிசி நோற்கின் றுனே.]

இ — ள் : பரிமகம் புரிகின்றுனே — அசுவமேதயாகத்தைச் செய்கின்றனனே, பகர்தரும் மாகமாதத்து உரிய நீர் படிகின்றுனே — சொல்லுதற்கரிய (புண்ணியங்களையுடைய) மாகிமாதத்தில் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்கிறுனே, உயர் சிவலிங்க பூசை புரிதர நினைகின்றுனே — மேலாகிய சிவலிங்கபூசையைச் செய்வதற்கு நினைக்கின்றனனே, புண்ணியதலத்தில் உன்னை தெரிசனம் செய்கின்றுனே — புண்ணிய ஸ்தலங்களிலே தேவரீரைத் தெரிசனஞ் செய்கின்றனனே, சிவநிசி நோற்கின்றுனே — சிவராத்திரி விரதத்தையனுஷ்டிக்கின்றனனே எ — று. (86)

எத்தவம் புரிந்தா னிங்ங னெய்துதற் கிறைவ வுன்றன்
சித்தமே தெரிந்து நீதி திறம்பிடி லறங்க டேயு
முத்தரும் பவங்கள் செய்யு மூர்க்கருஞ் சரியா யெண்ணிற்
றத்தலைக் கடனீர் சூழ்ந்த தாரணி கவிழு மன்றே.

[எத்தவம் புரிந்தான் இங்ஙன் எய்துதற்(கு) இறைவ உன்தன்
சித்தமே தெரிந்து நீதி திறம்பிடில் அறங்கள் தேயும்
முத்தரும் பவங்கள் செய்யும் மூர்க்கரும் சரியாய் எண்ணில்
தத்(து)அலைக் கடல்நீர் சூழ்ந்த தாரணி கவிழும் அன்றே.]

இ — ள் : இறைவ — தலைவரே, இங்ஙன் எய்துதற்கு எத்தவம் புரிந்தான் — இப்பதவியில் அடைதற்கு எவ்விதமாகிய தவத்தைச் செய்துகொண்டான், உன் தன் சித்தமே தெரிந்து நீதி திறம்பிடில் அறங்கள் தேயும் — தேவரீர் உம்முடைய திருவுள்ளத்தினுணர்ந்தும் நீதி வழுவுவீராயின் சர்வதருமங்களுமழிந்துபடும், முத்தரும் பவங்கள் செய்யும் மூர்க்கரும் சரியாய் எண்ணில் — (பற்றினைத்துமொழித்த) சீவன்முத்தர்களும் பாவங்களையெல்லாம் இயற்றுகின்ற துஷ்டர்களுஞ் சமமாக மதிக்கப்படுவாராயின், தத்து அலை சுடல் நீர் சூழ்ந்த தாரணி கவிழும் — தத்திப்பாய்கின்ற திரைகளையுடைய சமுத்திரத்தாற் சூழப்பட்ட நிலவுலகமானது அந்நீரிலமிழ்ந்திவிடும் எ — று.

அன்று ஏ அசைகள். (87)

என்னுடைத் தூதர் தம்மை யிகல்புரிந் திவனு லின்றிங்
குன்னுடைக் கணங்கள் செய்த துரைத்திடக் கேட்டியோட்டி
மின்னுடைப் படையாற் றண்டால் வெட்டியும் புடைத்துஞ் சென்னி
முன்னுடைத் துதிரத் தோடு மூளைகள்சிந்தி னரே.

[என்னுடைத் தூதர் தம்மை இகல்புரிந்(து) இவனுல் இன்(று)இங்(கு)
உன்னுடைக் கணங்கள் செய்த(து) உரைத்திடக் கேட்டி ஓட்டி
மின்உடைப் படையால் தண்டால் வெட்டியும் புடைத்தும் சென்னி
முன்உடைத்(து) உதிரத்தோடு மூளைகள் சிந்தி னுரே.]

இ — ள் : இவனுல் — இல் அங்குலன் பொருட்டாய், இன்று இங்கு உன் னுடை கணங்கள் — இத்தினத்திலே இவ்விடத்துள்ள தேவரீரது கணநாதர் கள், என்னுடை தூதர் தம்மை இகல் புரிந்து செய்தது உரைத்திடகேட்டி — எனது தூதுவர்களைப் பகைபுரிந்து செய்தன யாவற்றையுங் கூறுகின்றேன் கேட்டருளுக, ஓட்டி — துரத்தி, மின் உடை படையால் தண்டால் வெட்டி யும் புடைத்தும் — ஒளிபொருந்திய படைகளினுல் வெட்டியும் தண்டாயுதங் களினுலடித்தும், சென்னி முன் உடைத்து உதிரத்தோடு மூளைகள் சிந்தினர் — சிரசுகளை முன்னரே உடைத்து (பின்) இரத்தத்துடன் மூளைகள் சிந்தும்படி செய்தார்கள் எ — று.

ஏ அசை. (88)

தாவரும் பவங்கள் செய்வார் தாஞ்சிவ லோக மேவில்
யாவரைத் தண்டஞ் செய்வ தென்றெதி ரியமன் கூறத்
தேவரும் முனிவர் தாமுஞ் சிந்தையிற் றியானஞ் செய்யு
மூவருந் தானுய் நின்ற மூர்த்தியு மொழிவ தானுன்.

[தாவரும் பவங்கள் செய்வார் தாம்சிவ லோகம் மேவில்
யாவரைத் தண்டம் செய்வ(து) என்(று)எதிர் இயமன் கூறத்
தேவரும் முனிவர் தாமும் சிந்தையில் தியானம் செய்யும்
மூவரும் தான்ஆய் நின்ற மூர்த்தியும் மொழிவ தானுன்.]

இ — ள் : தா அரும் பவங்கள் செய்வார் தாம் சிவலோகம் மேவில் — நீங்குதற்கரிய பாவங்களைச் செய்பவர்களுஞ் சிவலோகத்தையடைவாராயின், யாவரைத் தண்டம் செய்வது என்று இயமன் எதிர் கூற — வேறு எவரைத் தண்டிப்பது என்று இயமராசன் திருமுன்னேநின்று கூற, தேவரும் முனிவர் தாமும் சிந்தையில் தியானம் செய்யும் — தேவர்களும் முனிவர்களும் மனத் தில் தியானஞ்செய்கின்ற, மூவரும் தானுய் நின்ற மூர்த்தியும் — பிரமா விஷ்ணு உருத்திரனுகிய மும்மூர்த்திகளும் தாமாகவிருக்கின்ற சிவபெருமானும், மொழிவதானுன் — திருவாய்மலர்ந்தருளுவாராயினர் எ — று. (89)

விற்பயில் வேடன் முன்னுள் வேட்டமே லெழுந்து நந்த
மற்படு சூலை யுண்டி யனந்தலற் றருகிற் சார்ந்து
பொற்பமர் வில்வஞ் சாத்திப் பூசனை புரித லாலே
சொற்பயில் பாவ வேலை சுவறிடத் தூர்த்திட் டானே.

[வில்பயில் வேடன் முன்நாள் வேட்டமேல் எழுந்து நம்தம்
அல்படு கால உண்டி அனந்தல்அற்(று) அருகில் சார்ந்து
பொற்(பு)அமர் வில்வம் சாத்திப் பூசனைபுரித லாலே
சொல்பயில் பாவவேலை சுவறிடத் தூர்த்திட் டானே.]

இ — ள் : வில் பயில் வேடன் முன்னாள் வேட்ட மேல் எழுந்து — விற் பிழைத்தலைப் பயின்ற அவ்வேடனானவன் முன்னைக்காலத்து வேட்டையின்பொருட்டுச் சென்று, நம் தம் அல் படு காலை உண்டி அனந்தல் அற்று அருகில் சார்ந்து — எமக்குரிய சிவராத்திரி தினத்திலே உணவும் நித்திரையுமின்றி நமது பக்கத்திலிருந்து, பொற்பு அமர் வில்வம் சாத்தி பூசனை புரிதலாலே — அழகமைந்த வில்வபத்திரங்களை எமக்குச் சூட்டி அருச்சனை செய்தமையால், சொல் பயில் பாவ வேலை சுவறிட தூர்த்திட்டான் — கூறப்படுகின்ற பாவமாகிய சமுத்திரம் வற்றும்படி தூர்த்தான் எ — று.

ஏ அசை. (90)

இத்திற மறியாய் நீயு மெழுதருங் கணக்கில் வல்ல
சித்திர குத்தன் முனுந் தெரிந்தில னென்று திங்கட்
சத்திரன் றன்னைக் காய்ந்த சங்கர னுரைப்பத் தீட்டும்
பத்திர மெடுத்துப் பார்த்துக் கணக்கனும் பரிந்து போற்றி.

[இத்திறம் அறியாய் நீயும், எழுதரும் கணக்கில் வல்ல
சித்திர குத்தன் தானும் தெரிந்திலன், என்று திங்கள்
சத்திரன் தன்னைக் காய்ந்த சங்கரன் உரைப்பத் தீட்டும்
பத்திரம் எடுத்துப் பார்த்துக் கணக்கனும் பரிந்து போற்றி.]

இ — ள் : நீயும் இத்திறம் அறியாய் — யமனே நீயுமித்தன்மையை யறிந்திலை, எழுதரும் கணக்கில் வல்ல சித்திரகுத்தன் தானும் தெரிந்திலன் என்று — எழுதுதற்கரிய கணக்கில் வல்லபத்தையுடைய சித்திரகுத்தனும் (இதனை) அறியப்பெற்றிலானென்று, திங்கள் சத்திரன் தன்னைக்காய்ந்த சங்கரன் உரைப்ப — சந்திரனைக் குடையாகவுடைய மன்மதனை எரித்த சிவபிரான் திருவாய்மலர்ந்தருள, கணக்கனும் தீட்டும் பத்திரம் எடுத்துப் பார்த்து பரிந்து போற்றி — அக்கணக்கனும் தான் (முன்) எழுதிய கணக்கேட்டை எடுத்துப் பார்த்து அன்புடனே துதித்து எ — று. (91)

சிவநிசி யென்ப தோரான் றின்பதற் கூன்கிட் டாம
லுவவசி யாகி நின்று னுவாப்புலி யெண்கு சிங்க
மவமெனைச் செய்யு மாலென் றஞ்சியவ் வில்வத் தேறித்
தவர்விடுங் கணைக ளேவிற் றடைசெயு மிடையி லென்றே.

[சிவநிசி என்ப(து) ஓரான் தின்பதற்(கு) ஊன்கிட் டாமல்
உவவசி ஆகி நின்முன் உவாப் புலி எண்கு சிங்கம்
அவம்எனைச் செய்யு மால்என்(று) அஞ்சிஅவ் வில்வத்(து) ஏறி
தவர்விடும் சுணைகள் ஏவில் தடைசெய்யும் இடையில் என்றே.]

இ — ள்: சிவநிசி என்பது ஓரான் — அன்று சிவராத்திரி என்பதை அறிந்திலன், தின்பதற்கு ஊன் கிட்டாமல் உவவசி ஆகி நின்முன் — உண்பதற்கு மாமிசமகப்படாமையால் பட்டினியாயிருந்தான், உவா புலி எண்கு சிங்கம் எனை அவம் செய்யும் என்று அஞ்சி — யானையும் புலியும் கரடியும் சிங்கமும் என்னை இடையூறு செய்யுமென்று பயந்து, அவ் வில்வத்து ஏறி — அவ்வில்வ மரத்திலேறியிருந்து, தவர் விடுங் சுணைகள் ஏவில் இடையில் தடைசெய்யும் என்று — வில்லினின்றுஞ் செலுத்தப்படுகின்ற அம்புகளை ஏவினல் இடையில் தடைசெய்யுமென்று கருதி எ — று.

ஆல் ஏ அசைகள். (92)

கூர்தருஞ் சுரிகை யாலக் குழைகளைக் கொய்து வீழ்த்தா
னீர்தரு கண்க டம்மி னித்திரை வந்தா லிந்தப்
பார்தனில் வீழ்வே னென்று பயந்ததிற் பன்னம் பண்ணி
யேர்தரு மரைமான் பன்றி யின்றிவண் வருமென் றெண்ணி.

[கூர்தரும் சுரிகை யால்அக் குழைகளைக் கொய்து வீழ்த்தான்
நீர்தரு கண்கள் தம்மில் நித்திரை வந்தால் இந்தப்
பார்தனில் வீழ்வேன் என்று பயந்(து)அதில் பன்னம் பண்ணி
ஏர்தரு மரைமான் பன்றி இன்(று)இவண் வரும்என்(று) எண்ணி.]

இ — ள்: கூர் தரும் சுரிகையால் அ குழைகளை கொய்து வீழ்த்தான்—கூரிய உடைவாளினல் அப்பத்திரங்களை அறுத்துவிழுத்தினன் (அதுவுமன்றி), நீர் தரு கண்கள் தம்மில் நித்திரை வந்தால் இந்தப் பார்தனில் விழ்வேன் என்று பயந்து—நீர்பெருகுகின்ற கண்களில் நித்திரை வருமாயின் இந்தப்பூமியின்கண்ணே விழுவேனென்று அஞ்சி, அதில் பன்னம் பண்ணி — அதின் இலைகளைப் பறித்து வீழ்த்தி, ஏர் தரு மரைமான் பன்றி இன்று இவண் வரும் என்று எண்ணி — அழகுபொருந்திய மரைமான் பன்றியாகிய மிருகங்கள் இன்றைக்கு இவ்விடத்தே வருமென்று நினைத்து எ — று. (93)

சுசிகர மில்லா வேடன் றுயிறுறந் திருந்தா னீச
னிசியென நினைந்து தொன்னூ னீதிபிற் செய்த தன்றென்
றுசித மாய்க் கணக்க ணைத வொண்ழற் சுடலை நன்னிற்
பசிதமே பூசு மேனிப் பரமனும் பகரும் பின்னும்.

[சுசிகரம் இல்லா வேடன் துயில்துறந்(து) இருந்தான் ஈசன்
நிசிஎன நிலைந்து தொல்நூல் நீதியில் செய்த(து) அன்(று)என்(று)
உசிதமாய்க் கணக்கன் ஓத ஒள்தழல் சுடலை தன்னில்
பசிதமே பூசு மேனிப் பரமனும் பகரும் பின்னும்.]

இ — ள்: சுசி கரம் இல்லா வேடன் துயில் துறந்து இருந்தான் — ஆசார மில்லாத அவ்வேடனுனவன் நித்திரையில்லாது இருந்தனன், ஈசன் நிசி என நிலைந்து தொல் நூல் நீதியில் செய்தது அன்று என்று — சிவராத்திரியென் றெண்ணிப் பழமையாகிய சாஸ்திரமுறைப்படி அனுஷ்டித்தவனல்லவென்று. உசிதமாய்க் கணக்கன் ஓத — தக்கபடி கணக்கன் கூற, ஒள் தழல் சுடலை தன்னில் பசிதம் பூசும் மேனி பரமனும் பின்னும் பகரும் — ஒளிபொருந்திய அக்கினியைக் கொண்ட மயானபூமியின்கணுள்ள சாம்பரையணிந்த திரு மேனியையுடைய சிவபெருமானும் பின்னருந் திருவாய்மலர்த்தருளுவாராயி னர் என்று.

ஏ ஆசை. (94)

அதையுனக் கறைவங் கேட்டி யறிந்திடா தியற்ற லாலே
சிதைவிலாக் கணத்திற் சேர்ந்தான் சித்திநன் முத்தி நல்கும்
விதைநிகர் கங்கு றன்னில் விதித்தநூல் வழிவ ழாம
லிதையமீ தறிந்து செய்தா லியாமவ னுவ னன்றே.

[அதைஉனக்(கு) அறைவல் கேட்டி அறிந்திடா(து) இயற்றலாலே
சிதை(வு)இலாக் கணத்தில் சேர்ந்தான் சித்துநல் முத்தி நல்கும்
விதைநிகர் கங்குல் தன்னில் விதித்தநூல் வழி வழாமல்
இதயமீ(து) அறிந்து செய்தால் யாம்அவன் ஆவன் அன்றே.]

இ — ள்: அதை உனக்கு அறைவம் கேட்டி — அத்தன்மையை உனக்கு விளங்கக் கூறுவேம் கேட்கக்கடவை, அறிந்திடாது இயற்றலால் சிதைவிலா கணத்தில் சேர்ந்தான் — (சிவராத்திரி தினமென்று) அறியாது அனுஷ்டித் தமையால் அழிவில்லாத நமது கணத்தவர்களுளொருவனுய்ச் சேர்ந்திருக்கின் றான், சித்தி நல் முத்தி நல்கும் விதை நிகர் கங்குல் தன்னில் — சர்வசித்தி களையும் நன்மைபொருந்திய மோட்சத்தையும் கொடுக்கவல்ல விதையை யொத்திருக்கின்ற அச்சிவராத்திரி தினத்தில், நூல் விதித்த வழிவழாமல் இதைய மீது அறிந்து செய்தால் — சாஸ்திரங்களிற் கூறிய விதிமுறை தவறுத லின்றி மனத்திலறிந்து அனுஷ்டிப்பானுயின், அவன் யாம் ஆவன் — அவன் சாயுச்சியத்தை யடைவான் என்று.

ஏ இரண்டும் அசைகள். (95)

செவ்விர வஜைய கூந்தற் சிவைமுத னோற்றல் செய்யு
மவ்விர தத்தின் மேன்மை யாவரே கணிக்க வல்லார்
கைவிரல் கண்ணிற் பட்டாற் செய்வதென் கவலை நீக்கி
மைவிர வியகார் மேனி மறலிநின் றூத ரோடும்.

[செவ்இர(வு) அஜைய கூந்தல் சிவை முதல் நோற்றல் செய்யும்
அவ்விர தத்தின் மேன்மை யாவரே கணிக்க வல்லார்
கைவிரல் கண்ணில் பட்டால் செய்வதென் கவலை நீக்கி
மைவிரவிய கார்மேனி மறலிநின் தூத ரோடும்.]

இ — ள்: மை விரவிய கார் மேனி மறலி — மிக்க கருமைசெறிந்த முகிலையொத்த சரீரத்தையுடைய இயமனே, செவ் இரவு அஜைய கூந்தல் சிவை முதல் நோற்றல் செய்யும் இவ்விரதத்தின் மேன்மை — நிறைந்த இருளையொத்த கரிய கூந்தலையுடைய உமாதேவி ஆதிகாலத்தில் அனுஷ்டித்த இச் சிவராத்திரி விரதத்தின் மகிமையை, யாவரே கணிக்க வல்லார் — யாவரளவுபடுத்திக் கூறவல்லர், கை விரல் கண்ணில் பட்டால் செய்வது என் — (தனது) கைவிரலானது கண்ணிலே தாக்குமாயின் அதற்கு யாது (தண்டனை) செய்வது, கவலை நீக்கி நின் தூதரோடும் — உனது மனதிற்கொண்ட துன்பத்தை நீக்கி உன் தூதுவர்களுடனே எ — று. (96)

வைத்தமுத் திரையை வாங்கி வழிக்கொள்வா யென்னஞான
வித்தகன் கருணை யோடு விடைகொடுத் தருள வேண்டி
முத்தலைப் படைகொள் காலன் முதல்வனை முறையிற்றுழ்ந்து
சித்தமுந் தெளிந்து தேறித் தென்புலத் தெய்தி னனே.

[வைத்தமுத் திரையை வாங்கி வழிக்கொள்வாய் என்ன ஞான
வித்தகன் கருணை யோடு விடைகொடுத்(து) அருள வேண்டி
முத்தலைப் படைகொள் காலன் முதல்வனை முறையில் தாழ்ந்து
சித்தமும் தெளிந்து தேறித் தென்புலத்(து) எய்தி னனே.]

இ — ள்: வைத்த முத்திரையை வாங்கி வழிக்கொள்வாய் என்ன — இவ்விடத்தில் வைத்த சின்னங்களையெடுத்துக்கொண்டு செல்லக் கடவாயென்று திருவாய்மலர்ந்தருள, முத்தலை படைகொள் காலன் முதல்வனை முறையில் தாழ்ந்து — மூக்குப்பொருந்திய சூலாயுதத்தைக்கொண்ட இயமன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை முறைப்படி வணங்கி, ஞான வித்தகன் கருணையோடு விடைகொடுத்து அருள வேண்டி — எல்லாவற்றையுமறியுந்தன்மையையுடைய அறிவுருவராகிய சிவபெருமான் உத்தரவு கொடுத்தருள அதனைப் பெற்று, சித்தமும் தேறி தெளிந்து — தன்மனத்திற்கொண்ட சந்தேகமுந் தேறித் தெளிவடைந்து, தென்புலத்து எய்தினன் — தக்கணபுரத்தையடைந்தனன் எ — று.

ஏ அசை. (97)

வேறு

வெங்கொ டுங்கொலை புரிந்த வங்குலனும்
வெள்ளி வெற்பிலொரு புள்ளிமான்
செங்கை கொண்டருளு மண்ணல் கண்ணரு
டினந்தொ றும்பெறு கணங்களுக்
கங்க ணற்றலைமை பெற்றி ருந்தபிலை
ரைந்து பைந்தரு வளந்தருந்
துங்க முற்றகன கந்தி கழ்ந்திலகு
சுரர்கள் வாழுலக மேவினன்.

[வெம்கொடும்கொலை புரிந்த அங்குலனும்
வெள்ளி வெற்பில்ஒரு புள்ளிமான்
செங்கைகொண்(டு) அருளும்அண்ணல் கண்அருள்
தினம்தொறும் பெறு கணங்களுக்(கு)
அங்கண்நல் தலைமைபெற்(று) இருந்தபின்ஒ(ரு)
ஐந்து பைந்தரு வளம்தரும்
துங்கம்உற்ற கனகம் திகழ்ந்(து) இலகு
சுரர்கள் வாழ்உலகம் மேவினன்.]

இ — ள்: வெம் கொடும் கொலை புரிந்த அங்குலனும் — மிகக் கொடிய கொலைத்தொழிலைச் செய்த அங்குலனுகிய வேடனும், வெள்ளி வெற்பில் — கயிலாசமலையில், ஒரு புள்ளிமான் செங்கை கொண்டு அருளும் — ஒப்பற்ற புள்ளிபொருந்திய மான்கன்றைச் சிவந்த திருக்கரத்திற் கொண்டருளிய, அண்ணல் கண் அருள் தினம்தொறும் பெறு கணங்களுக்கு — பெருமையிற் சிறந்த சிவபெருமானுடைய திருக்கண்ணோக்கத்தை எந்நாளும் பெறுகின்ற கணத்தவர்களுக்கு, நல் தலைமை பெற்று அங்கண் இருந்தபின் — நன்மையாகிய முதன்மையையடைந்து அவ்விடத்தில் சில நாளிருந்த பின்னர், ஓர் ஐந்து பைந்தரு வளந்தரும் — பசிய பஞ்சதருக்களின் செல்வத்தைப் பொருந்திய, துங்கம் உற்ற கனகம் திகழ்ந்து இலகு சுரர்கள் வாழ்உலகம் மேவினன் — உயர்வையுடைய பொன்னுலகு ஒளிகொண்டு பிரகாசிக்கின்ற தேவர்கள் வசிக்குஞ் சுவர்க்கலோகத்தையடைந்தனன். எ — று. (98)

ஆட கப்பொனுல கத்தி னீடுகொடி யாடு மாடுதிகழ் மாடமேற்
சூட கத்தினுறை வேட னுற்றலர்கொள் கற்ப கத்தினிழ லுற்றடிப்
பாட கத்தொலி பரப்ப ரம்பையர்கள் பலரு நின்றருகு பணிசெய
மாட சத்திவின் யாழின் விஞ்சையர்கள் வந்துபாடநனி லைகினன்.

[ஆடகப் பொன்உல கத்தில் நீடுகொடி ஆடு மாடுதிகழ் மாடமேல் [அடிப் கா(டு)அசுத்தின் உறை வேடன் உற்(று)அவர்கொள் கற்பகத்தின் நிழல் உற்(று) பாடகத்(து)ஒலி பரப்(பு) அரம்பையர்கள் பலரும் நின்(று)அருகு பணிசெய மாடகத் திவவின் யாழின் விஞ்சையர்கள் வந்துபாட நனி வைகினன்.]

இ — ள்: ஆடக பொன் உலகத்தில் — ஆடகம் என்னும் பொன்னையுடைய சுவர்க்கலோகத்தில், நீடு கொடி ஆடு மாடு திகழ் மாட மேல் — நீண்ட துவசங்களசையப்பெற்ற பக்கங்கள் விளங்குகின்ற மண்டபத்தில், காடகத்தின் உறை வேடன் உற்று — காட்டிலே வசித்த வேடனைவனிருந்தும், அலர் கொள் கற்பகத்தின் நிழல் உற்று — மலர்கள் நிறைந்த கற்பகவிருட்ச நிழலி லிருந்தும், அடி பாடகத்து ஒலி பரப்பு அரம்பையர்கள் பலரும் அருகு நின்று பணிசெய — கால்களிலணிந்த பாடகங்களினெலியானது பரவுகின்ற அரம்பா ஸ்திரீகள் பலரும் பக்கத்துநின்று தொண்டுகள் செய்யவும், மாடகத்திவவின் யாழின் விஞ்சையர்கள் வந்து பாட — முறுக்காணிகளில் (நரம்புகள்) கட்டப் பட்ட யாழினிசையைப் பாடுகின்ற வித்தியாதரர்கள் வந்துநின்று இசையைப் பாடவும், நனி வைகினன் — நன்கு வாழ்ந்திருந்தனன் எ — று. (99)

அளவி லாததின மங்கி ருந்துபுக ழளகை மாநகரின் வளமெலாந்
தளர்வி லாதவ ணருந்தி முந்திமிகு சாடியிற் றயிர்நெய் தேடியே
களவி னுலிடையர் பாடி யிற்றிருடு கண்ணன் வண்ணமுறு கன்றினை
விளவின் மீதெறி முகுந்த னங்கணர விந்தன் வாழுலக மேவினன்.

[அள(வு) இலாததினம் அங்கிருந்து புகழ் அளகை மாநகரின் வளம்எலாம் தளர்(வு)இலா(து) அவண் அருந்தி முந்திமிகு சாடியில் தயிர்நெய் தேடியே களவினுல் இடையர் பாடியில் திருடு கண்ணன் வண்ணமுறு கன்றினை விளவின் மீ(து)எறி முகுந்தன் அம்கண் அரவிந்தன் வாழ்உலகம் மேவினன்.]

இ — ள்: அளவு இலாத தினம் அங்கு இருந்து — அளவற்ற நாட்களாக அவ்விடத்தில் வாழ்ந்திருந்து, புகழ் அளகை மா நகரின் வளம் எலாம் தளர் விலாது அவண் அருந்தி — கீர்த்தியையுடைய அளகாபுரியின்கணுள்ள செல் வங்கள் யாவற்றையுங் குறைவில்லாது அவ்விடத்தனுபவித்து, முந்தி — பண் டைக்காலத்தில், களவினுல் இடையர் பாடியில் மிகு சாடியில் தயிர் நெய் தேடி திருடும் கண்ணன் — சோரத்தன்மையாய் இடையர்சேரியில் மிகுந்த சாடிகளிலிருக்கின்ற தயிரையும் நெய்யையும் ஆராய்ந்து திருடிய கண்ணபிரா னும், வண்ணமுறு கன்றினை விளவின் மீது எறி முகுந்தன் — அழகிய பசுக் கன்றை விளாமரத்தின்மேல் எறிந்த முகுந்தரும், அம் கண் அரவிந்தன் — அழகிய கண்கள் தாமரையாகவுடையவருமாகிய மகாவிஷ்ணுமூர்த்தியானவர், வாழ் உலகம் மேவினன் — வாழ்ந்திருக்கின்ற வைகுந்த பதவியை யடைந்தான் எ — று.

கொண்டல் வண்ணமுடல் கொண்ட கண்ணனருள்
கொண்டு வைகிடுவை குண்டமீ
தண்ட ரண்டினர்செய் தொண்டு கொண்டதனி
லானபோகமவை யாவுமுண்
டெண்ட விர்ந்ததின மங்கிருந்துபி னிருந்த
வத்தினர் பொருந்திடு
முண்ட கந்தனி லிருந்தி டுஞ்சதுர் முகன்றி
ருப்பதவி முன்னினன்.

[கொண்டல் வண்ணம்உடல் கொண்ட கண்ணன்அருள்
கொண்டு வைகிடு வைகுண்டம்மீ(து)
அண்டர் அண்டினர்செய் தொண்டு கொண்(டு)அதனில்
ஆனபோகம்அவை யாவும்உண்(டு)
எண்தவிர்ந்த தினம் அங்(கு) இருந்துபின்
இரும்தவத்தினர் பொருந்திடும்
முண்டகம்தனில் இருந்திடும் சதுர் முகன்திருப்
பதவி முன்னினன்.]

இ — ள் : கொண்டல் வண்ணம் உடல் கொண்ட கண்ணன் — மேக நிறத்தையொத்த திருமேனியைக்கொண்ட கண்ணபிரான், அருள் கொண்டு வைகிடு வைகுண்டமீது — அருளோடு எழுந்தருளியிருக்கின்ற வைகுந்தபதியில், அண்டர் அண்டினர் செய் தொண்டு கொண்டு — தேவர்கள் நெருங்கி வந்து செய்கின்ற ஏவல்களைப்பெற்று, அதனில் ஆன போகம் அவை யாவும் உண்டு — அவ்விடத்திலுள்ள சுகபோகங்கள் யாவையுமனுபவித்து, எண் தவிர்ந்த தினம் அங்கு இருந்து — அளவற்ற காலம் அங்கே வாழ்ந்திருந்து, பின் — அதன்மேல், இரும் தவத்தினர் பொருந்திடும் — பெருமையிற் சிறந்த தவசிரேஷ்டர்களடையப்பெற்ற, முண்டகம் தனில் இருந்திடும் சதுர்முகன் திருப்பதவி முன்னினன் — தாமரைமலரின் மேல் வீற்றிருக்கின்ற நான்குமுகங் களையுடைய பிரமதேவரது சத்தியலோகத்தையடைந்தான் எ — று. (101)

ஓதி மக்கொடி யுயர்த்த நான்முக னுவந்த லோகமதி லுற்றதிற்
கோதி றுப்புரவு துய்த்த பின்புநகை கொண்டு முப்புர மெரித்திடு
மாதி நற்கயிலை யுற்று ளத்தினி லரும்பெ ரும்பொருள்விரும்பவே
யீதி வற்கரன் மருது தந்தருள வின்ப முற்றினி திருந்தனன்.

[ஓதிமக்கொடி யுயர்த்த நான்முகன் உவந்த லோகமதில் உற்(று)அதில்
கோ(து)இல் துப்புரவு துய்த்த பின்புநகை கொண்டு முப்புரம் எரித்திடும்
ஆதிநல் கயிலை உற்(று) உளத்தில் அரும்பெரும் பொருள் விரும்பவே
ஈ(து)இவற்(கு) அரன் மருது தந்(து)அருள இன்பம்உற்(று) இனி(து) இருந்தனன்.]

இ — ள்: ஓதிம கொடி உயர்த்த நான்முகன் உவந்த லோகம் அதில் உற்று — அன்னக்கொடியுயர்த்திய நான்கு முகங்களையுடைய பிரமதேவரால் விரும்பப்பட்ட சத்தியலோகத்தையடைந்து, அதில் கோது இல் துப்புரவு துய்த்த பின்பு — ஆங்குள்ள குற்றமில்லாத அனுபவங்கள் யாவற்றையும் அனுபவித்தபின்னர், நகை கொண்டு முப்புரம் எரித்திடும் ஆதி நல் கயிலை உற்று — புன்னகையாகிய அக்கினியினால் முப்புரங்களையுந் தகித்தருளிய தலைவராகிய சிவபெருமானது நல்ல கயிலாசமலையை யடைந்து, உளத்தினில் அரும் பெரும் பொருள் விரும்ப — மனத்திலிடத்திலே பெறுதற்கரிய மோக்ஷத்தை விரும்ப, ஈது இவற்கு அரன் மருது தந்து அருள — அந்த மோக்ஷப்பேற்றைச் சிவபெருமான் இவனுக்கு மறுக்காது கொடுத்தருள, இன்பம் உற்று இனிது இருந்தனன் — நித்திய இன்பத்தை அனுபவித்து நன்கு வாழ்ந்திருந்தனன் எ—று.

ஏ அசை.

(102)

கைத வத்தினுயர் வேட னீடுசிவ கங்கு லென்பதுண ராமலே
செய்த வத்திலிது பெற்ற னன்பரம சிவநி சிப்பெருமை சிந்தையிற்
பெய்த ருச்சனை புரிந்து கண்டுயில் பிரிந்த ருந்துத றவிர்ந்துளா
ரெய்து தற்கரிய முத்தி வீடதனி லெய்து வார்களிலையையமே.

[கைதவத்தின் உயர் வேடன் நீடுசிவ கங்குல் என்ப(து) உணராமலே
செய்தவத்தில் இதுபெற்றனன் பரம சிவநிசிப் பெருமை சிந்தையில்
பெய்(து) அருச்சனைபுரிந்து கண்டுயில் பிரிந்(து) அருந்துதல் தவிர்ந்(து)உளார்
எய்துதற்(கு) அரியமுத்தி வீ(டு) அதனில் எய்துவார்கள் இலை ஐயமே.]

இ — ள்: கைதவத்தின் உயர் வேடன் — வஞ்சகமிகுதியையுடைய அங்குலன், நீடு சிவ கங்குல் என்பது உணராமல் — பெருமைமிகுத்த சிவராத்திரியென்று அறியாமல், செய் தவத்தில் இது பெற்றனன் — (அறியாமற்) செய்த தவப்பலனால் இப்பேற்றையடைந்தனன், பரம சிவநிசி பெருமை சிந்தையில் பெய்து — மேலாகிய சிவராத்திரியின் மகிமையை மனத்திற் சிந்தித்து, அருச்சனை புரிந்து கண்டுயில் பிரிந்து அருந்துதல் தவிர்ந்துளார்— பூசனைசெய்து துயில்நீத்து உணவகற்றியிருந்த மேலவர்கள், எய்துதற்கு அரிய முத்தி வீடு அதனில் எய்துவார்கள் — அடைதற்கரிய மோக்ஷவீட்டை யடைந்திருப்பார்கள், ஐயம் இலை — இதற்குச் சந்தேகமில்லை எ—று.

ஏ இரண்டும் அசைகள்.

(103)

என்று சூதமுனி யோத மாதவர்கள் யாரு மேருவி லெடுத்தெயி
லன்று நீறுபட நூறு மாறுபுனை யரச னுக்குரிய விரசனி
யொன்று பாவவல் லிருட்க ருக்கனிக ரொக்கு மென்பதை யுணர்ந்தன
நன்று தேசிகநின் னுலை முடி தளச்கி நன்மொழிக ணல்கினர்.

[என்று சூதமுனிஓத மாதவர்கள் யாரும் மேருவில் எடுத்(து) எயில்
அன்று நீறுபட நூறும் ஆறுபுனை அரசனுக்(கு) உரிய இரசனி
ஒன்றுபாவவல் இருட்(கு) அருக்கன் நிகர் ஒக்கும் என்பதை உணர்ந்தனம்
நன்று தேசிகநின்னல் எனமுடி துளக்கி நன்மொழிகள் நல்கினர்.]

இ — ள்: என்று சூதமுனி ஓத — என்று இவ்விதமாகச் சூதமுனிவர் கூறுதலும், மாதவர்கள் யாரும் — முனிவர்களெல்லோரும், மேரு வில் எடுத்து — மேருவாகிய வில்லேத்தாங்கி, எயில் அன்று நீறுபட நூறும் — முப்புரங்களும் அக்காலத்திலே நீருகத் தகித்தருளிய, ஆறு புனை அரசனுக்கு உரிய இரசனி ஒன்று — கங்கையைத் தரித்த சிவபெருமானுக்குரிய சிவராத்திரி விரதமொன்றுமே, பாவ வல் இருட்கு அருக்கன் நிகர் ஒக்கும் என்பதை — பாவமாகிய கொடிய இருளுக்கு (அதனை நீக்குகின்ற) சூரியனை யொத்திருக்குமென்னு முண்மையை, தேசிக நின்னல் நன்று உணர்ந்தனம் எனமுடி துளக்கி — எமதுகுருவே தேவரீரால் நன்முயறிந்தனமென்று சிரசுகளையசைத்து, நல்மொழிகள் நல்கினர் — நல்ல உபசார வார்த்தைகளைக் கூறினர்கள் எ — று. (104)

அங்குலச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 447.

திருச்சிற்றம்பலம்.

சௌமினிச் சருக்கம்

வாதரா யணனென் றோது மறைதெரி முனிவர் கோமான்
பாததா மரைக ளுன்னிப் பரவசத் தோடும் போற்றிச்
சீதநாண் மதியஞ் சூடுஞ் சிவநிசிப் பெருமை யின்னுஞ்
சூதமா முனிவன் மற்றை முனிவரர் தமக்குச் சொல்வான்.

[வாதரா யணன்என்(று) ஓதும் மறைதெரி முனிவர் கோமான்
பாததா மரைகள் உன்னிப் பரவசத் தோடும் போற்றிச்
சீதநாள் மதியம் சூடும் சிவநிசிப் பெருமை இன்னும்
சூதமா முனிவன் மற்றை முனிவரர் தமக்குச் சொல்வான்.]

இ — ள்: சூத மா முனிவன் — சூதமகாமுனிவர், வாதராயணன் என்று ஓதும் மறை தெரி முனிவர் கோமான் பாததாமரைகள் உன்னி — வியாத ரென்று கூறப்படுகின்ற வேதங்களையறித்த முனிசிரேஷ்டரது தாமரைமலர் போன்ற பாதங்களைத் தியானித்து, பரவசத்தோடும் போற்றி — பரவசமா கித் தோத்திரஞ்செய்து, சீத நாள் மதியம் சூடும் சிவநிசிப் பெருமை — குளிர்ந்த ஒருகலைச் சந்திரனைத் தரித்த சிவபெருமானுக்குரிய சிவராத்திரி விர தத்தினது மகிமையை, முனிவரர் தமக்கு இன்னும் சொல்வான் — (அந்த நைமிசாரணிய வாசிகளாகிய) முனிவர்களுக்குப் பின்னருங் கூறுவார் எ — று.

மற்று அசை; ஐ சாரியை. (1)

தோடுறு கமலத் தோடு துளிமதுக் குவளை யாம்பற்
காடுறு கமல வாவிக் கயலினங் குதித்தங் காடக்
கோடுறு தவளக் கோடு குமிறுந்தண் பணைசூழ்ந் தம்பொன்
னாடுறு மமரர் தாமு நாடுங்கே கயநன் னாடு.

[தோ(டு)உறு கமலத் தோடு துளிமதுக் குவளை ஆம்பல்
கா(டு)உறு கமல வாவிக் கயல்இனம் குதித்(து)அங்(கு) ஆட
கோ(டு)உறு தவளக் கோடு குமிறும்தண் பணைசூழ்ந்(து) அம்பொன்
நா(டு)உறும் அமரர் தாமும் நாடும் கேகயநன் நாடு.]

இ — ள்: தோடு உறு கமலத்தோடு துளிமது குவளை ஆம்பல் காடு உறு — இதழ்கள் பொருந்திய தாமரையும் துளிக்கின்ற தேன் பொருந்திய குவளை யும் ஆம்பலும் காடாக நிறைந்துள்ள, கமல வாவி கயல் இனம் குதித்து அங்கு ஆட — நீர்நிறைந்த தடாகத்திலுள்ள கெண்டை மற்சங்கள் குதித்து

அங்கே விளையாட, கோடுஉறு தவள கோடு குமிறும் தண் பணை சூழ்ந்து — வரம்பின்கணுள்ள வெண்ணிறமாகிய சங்குகள் முழங்குகின்ற குளிர்ந்த வயல் களினூற் சூழப்பட்ட, அம் பொன் நாடுஉறும் அமரர் தாமும் நாடும் — அழ கிய தேவலோகத்தின்கண் வாசஞ்செய்கின்ற தேவர்களும் விரும்புகின்ற, கேகய நல் நாடு — கேகயம் என்னும் (பெயரையுடைய) நல்ல நாடு (ஒன் றுளது) எ — று. (2)

அரும்புறு கமலச் சூழி யதனினின் றெழுந்து வாளை
சுரும்புறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்துங்
கரும்புறு வேலி சூழ்ந்த கழனியிற் கதிர்ச்செஞ் சாலி
விரும்புறு முத்து நத்தி னித்திலம் விளங்கு மெங்கும்.

[அரும்புறும் கமலச் சூழி அதனில்நின்(று) எழுந்து வாளை
சுரும்(பு)உறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்தும்
கரும்(பு)உறு வேலிசூழ்ந்த கழனியில் கதிர்செஞ் சாலி
விரும்புறு முத்து நத்தின்நித்திலம் விளங்கும் எங்கும்.]

இ — ள்: வாளை — வாளை மற்சங்கள், கமலம் அரும்புறும் சூழி அதனில் நின்று எழுந்து — தாமரைகளரும்புகின்ற தடாகத்தினின்றுந் துள்ளி எழுந்து, சுரும்பு உறு மலர் தண் சோலை சூத நல் கனிகள் சிந்தும் — வண்டுகள் படி கின்ற புஷ்பங்களைக்கொண்ட குளிர்ந்த சோலையின்கணுள்ள நல்ல மாங்கனி களைச் சிதறும்படி செய்கின்ற, கரும்பு உறு வேலி சூழ்ந்த கழனியில் — கரும்பு கள் வேலியாகச் சூழ்ந்திருக்கின்ற வயல்களின்கணுள்ள, கதிர் செம் சாலி விரும்புறு முத்தும் — கதிர்களையுடைய செந்நெற்களிலுண்டாகின்ற விரும்பப் படத் தகுந்த முத்துக்களும், நத்தின் நித்திலம் — சங்குகளின்ற முத்துக்களும், எங்கும் விளங்கும் — எவ்விடமும் கிடந்து பிரகாசிக்கும் எ — று. (3)

புன்றலைக் கரிய செங்கட் புரிமருப் பெருமை வாயான்
மன்றலைக் கமழும் வாவி மலர்பல மேய்ந்து வாவித்
துன்றலைப் புனல தார்ந்து சுரந்துறச் சொரியுந் தீம்பால்
கன்றலைத் துண்ண வூட்டிக் காஞ்சிமா நிழலிற் றுஞ்சும்.

[புன்தலைக் கரியசெங்கண் புரிமருப்(பு) எருமை வாயால்
மன்றலைக் கமழும் வாவி மலர்பலமேய்ந்து வாவித்
துன்(று)அலைப் புனல(து) ஆர்ந்து சுரந்(து)உறச் சொரியும் தீம்பால்
கன்(று) அலைத்(து)உண்ண ஊட்டிக் காஞ்சிமா நிழலில் துஞ்சும்.]

இ — ள்: கரிய புன் தலை செங்கண் புரி மருப்பு எருமை — கரிய புல்லிய தலையையும் சிவந்த கண்களையும் முறுகிய கொம்புகளையுமுடைய எருமைக

ளானவை, வாயால் மன்றலே கமழும் வாவி மலர் பல மேய்ந்து — வாயினால் வாசனை கமழுகின்ற தடாகத்திலுள்ள பல புஷ்பங்களையும் மேய்ந்து, வாவி துன்று அலை புனலது ஆர்ந்து — வாவுகின்ற நெருங்கிய திரைகளையுடைய அந்நீரைப் பருகி, சுரந்து உற சொரியும் தீம்பால் — மடியிற் சுரந்து மிகவுஞ் சொரிகின்ற தித்திப்பாகிய பாலை, கன்று அலைத்து உண்ண ஊட்டி — கன்றுகளானவை அலைவுசெய்து உண்ணும்படியருத்தி, மா காஞ்சி நிழலில் துஞ்சும் — பெரிய காஞ்சிமரநிழலிலே தூங்கும் எ — று. (4)

நிறம்பயின் முந்நூல் பெற்றோர் நீதிமா மறைநூல் கற்றோர்
திறம்பயி லரசர் வாசச் சீரகத் தாமர் கொங்கைப்
பறம்பயி னெடுங்கட் செவ்வாய்ப் பார்மகள் புதல்வர் முன்னு
வறம்பயில் குடிக டுன்று மந்தநாட் டகத்தி லுள்ளான்.

[நிறம்பயில் முந்நூல் பெற்றோர் நீதிமா மறைநூல் கற்றோர்
திறம்பயில் அரசர் வாசச் சீரகத் தாமர் கொங்கைப்
பறம்(பு)அயில் நெடுங்கண் செவ்வாய்ப் பார்மகள் புதல்வர் முன்ன
அறம்பயில் குடிகள் துன்றும் அந்தநாட்(டு) அகத்தில் உள்ளான்.]

இ — ள்: நிறம் பயில் முந்நூல் பெற்றோர் நீதி மா மறை நூல் கற்றோர் — மார்பிற் பொருந்திய உபவீதத்தையுடையவர்களும் நீதிக்குரிய மகிமையையுடைய வேதங்களையோதி யுணர்ந்தவர்களும் ஆகிய பிராமணர்களும், திறம் பயில் அரசர் — வன்மையை அப்பியாசஞ் செய்கின்ற அரசர்களும், வாச சீரகத் தாமர் — வாசனை பொருந்திய சீரகமாலையையுடைய செட்டிகளும், பறம்பு கொங்கை அயில் நெடும் கண் செவ்வாய் பார்மகள் புதல்வர் முன்ன — மலைபோன்ற தனங்களையும் வேற்படையையொத்த நீண்ட கண்களையும் சிவந்த வாயையுமுடைய பூமிதேவியின் புத்திரராகிய வேளாளர்களும் ஆதியாகவுள்ள, அறம் பயில் குடிகள் — தரும ஒழுக்கத்தையுடைய பிரசைகள், துன்றும் அந்த நாட்டு அகத்தில் உள்ளான் — நெருங்கியிருக்கின்ற அந்தக் கேகய நாட்டின் கண் வாசஞ்செய்பவனாகிய எ — று. (5)

வெந்தழல் வேழ்வி செய்யும் விப்பிர னொருவன் முன்னுட்
டந்தருண் மடப்பொற் பாவை சவுமினி யென்னும் பேரா
ளந்தர வானில் வாழு மரம்பையை யனையாண் மாரன்
கந்தமாரைந்து தண்பூங் கணைக்கிலக் காக நிற்பாள்.

[வெந்தழல் வேள்வி செய்யும் விப்பிரன் ஒருவன் முன்னள்
தந்(து)அருள் மடப்பொற் பாவை சவுமினி என்னும் பேராள்
அந்தர வானில் வாழும் அரம்பையை அனையாள் மாரன்
கந்தம்ஆர் ஐந்து தண்பூங் கணைக்(கு) இலக்காக நிற்பாள்.]

இ — ள் : வெம் தழல் வேள்வி செய்யும் விப்பிரன் ஒருவன் — வெவ்விய அக்கினிகொண்டு யாகஞ்செய்கின்ற பிராமணனொருவன், முன்னுள் தந்தருள் மட பொன் பாவை — முன்னுளில் பெற்ற மடமையையுடைய அழகிய பாவை போன்றவள், சவுமினி என்னும் பேராள் — சௌமினியென்னும் பெயரை யுடையவள், அந்தர வானில் வாழும் அரம்பையை அனையாள் — சுவர்க்க லோகத்தில் வாழும் அரம்பையையொத்தவள், மாரன் கதம் ஆர் ஐந்து தண் பூ கணைக்கு இலக்காக நிற்பாள் — மன்மதனது பரிமளமிகுந்த குளிர்ந்த ஐந்து புஷ்பபாணங்களுக்கு மிலக்காக நிற்பவள் எ — று. (6)

வளமிகு செல்வந் தன்னில் வளர்ந்துவற் சரமோ ரேழிற்
றளவமென் மூரற் பேதைத் தையலா ரோடு கூடி
யுளமகிழ் சிற்றில் கோலி யுறுகழங் கூச லாடி
யிளமயி லனையாண் மங்கைப் பருவம்வந் தெய்து கின்றுள்.

[வளமிகு செல்வம் தன்னில் வளர்ந்துவற் சரம்ஓர் ஏழில்
தளவமென் மூரல் பேதைத் தையலாரோடு கூடி
உளம்மகிழ் சிற்றில் கோலி உறுகழங்(கு) ஊசல் ஆடி
இளமயில் அனையாள் மங்கைப் பருவம்வந்(து) எய்துகின்றுள்.]

இ — ள் : இளமயில் அனையாள் — இளமையாகிய மயிலஞ்சாயலையுடைய அப்பெண், வள மிகு செல்வம் தன்னில் வளர்ந்து — செழிப்பான மிக்க செல்வத்தில் வளர்ந்து, வற்சரம் ஓர் ஏழில் — வயதேழாகும்போது, தளவ மென் மூரல் பேதைத் தையலாரோடுகூடி — முல்லையரும்பையொத்த மிருது வாகிய பற்களையுடைய பேதைப்பருவம் வாய்ந்த பெண்களோடுகூடி, உளம் மகிழ் சிற்றில் கோலி — மனமகிழ்ச்சியோடு சிறுவீடு கட்டியும், உறு கழங்கு ஊசல் ஆடி — பொருந்திய பந்துவிளையாடியும் ஊஞ்சல் ஆடியும், மங்கைப் பருவம் வந்து எய்துகின்றுள் — மங்கைப்பருவமானது வந்து பொருந்தப்பெற் றுள் எ — று. (7)

வேறு

தடங்கி டந்திடுந் தாமரை யரும்பெனத் தடித்துப்
படங்கி டந்தபாம் பேந்துபார் பகர்ந்திடத் தரள
வடங்கி டந்திப மருப்பிணை மருட்டிமா மணிப்பொற்
குடங்கி டந்தெனக் குலவிய கொம்மைவெம் முலையாள்.

[தடம்கி டந்திடும் தாமரை அரும்(பு)எனத் தடித்துப்
படம்கி டந்தபாம்(பு) ஏந்துபார் பகர்ந்திடத் தரள
வடம்கி டந்(து)இப மருப்(பு)இணை மருட்டிமா மணிப்பொன்
குடம்கி டந்(து)எனக் குலவிய கொம்மைவெம் முலையாள்.]

இ — ள்: தடம் கிடந்திடும் தாமரை அரும்பு என தடித்து — தடாகத்திற் பொருந்திய தாமரைமுகையென்று சொல்லும்படி அரும்பி, படம் கிடந்த பாம்பு ஏந்து பார் பகர்ந்திட — படத்தைப் பொருந்திய ஆதிசேடனுற் சுமக்கப்படுகின்ற பூமியை விலியாகப் பெறும்படி, தரள வடம் கிடந்து — முத்து மாலைகள் தங்கப்பெற்று, இப இணை மருப்பு மருட்டி — யானையினிரண்டு கோடுகளையும் மருளச்செய்து, மாமணி பொன் குடம் கிடந்தென — மகத்தாகிய இரத்தினங்களழுத்திச் செய்யப்பட்ட பொற்கலசங்கள் கிடந்தாற் போல, குலவிய கொம்மை வெம் முலையாள் — விளங்குகின்ற திரண்ட விரும்பத்தக்க தனங்களையுடையவள் எ — று. (8)

வடித்த நெட்டிலை வேலொடு மாவடு வடிவாட்
டுடித்த செங்கயல் சுரும்புவேள் கரும்பினிற் றொடுக்குங்
கடிக்க ருங்குவ ளைகடமைக் கடுத்துநீள் வள்ளைக்
கொடிக்கி ணைக்குழைக் குழைகளிற் குதிக்குநீள் விழியாள்.

[வடித்த நெட்டிலை வேலொடு மாவடு வடிவாள்
துடித்த செங்கயல் சுரும்புவேள் கரும்பினில் தொடுக்கும்
கடிக்க ரும்குவ ளைகள்தமைக் கடுத்து நீள் வள்ளைக்
கொடிக்(கு) இணைகுழை குழைகளில் குதிக்குநீள் விழியாள்.]

இ — ள்: வடித்த நெட்டு இலை வேலொடு — கூரிய நெடிய இலை போன்ற வேலும், மா வடு — மாம்பிஞ்சும், வடிவாள் — கூரியவாளும், துடித்த செம் கயல் — துள்ளுகின்ற சிவந்த கயல்மற்சங்களும், சுரும்பு — வண்டுகளும், வேள் கரும்பினில் தொடுக்கும் கடி கரும் குவளைகள் தமை கடுத்து — மன்மதன் கருப்பு வில்லினின்றுஞ் செலுத்துகின்ற வாசனைபொருந்திய கருங்குவளை மலருமாகிய இவைகளை நிகர்த்து, நீள் வள்ளைக் கொடிக்கு இணை குழை குழைகளில் குதிக்கும் நீள் விழியாள் — நீண்ட வள்ளைக்கொடியையொத்த காதுகளிலணிந்த அணிகள்வரையும் பாய்கின்ற நெடிய கண்களையுடையவள் எ — று. (9)

சுருகு சங்குல்பைங் களங்கனி முழங்கிடுங் கடனீர்
பருகு மங்குனற் பதிகமொத் ததிபரி மளங்கண்
மருவி நெய்த்துநீண் டளிக்குலம் விருந்துணை மலர்ந்த
முருக லர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள்.

[சுருகு சங்குல்பைங் களங்கனி முழங்கிடும் கடல்நீர்
பருகும் மங்குல்நற் பதிசம்ஒத்(து) அதிபரி மளங்கள்

மருவி நெய்த்துநீண்(டு) அளிக்குலம் விருந்(து)உண மலர்ந்த
முரு(கு) அலர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள்.]

இ — ள்: கருகு கங்குல் — கரிய இருளையும், பைம் களம் கனி — பசிய களாம்பழத்தையும், முழங்கிடும் கடல் நீர் பருகும் மங்குல் — ஒலிபொருந்திய சமுத்திரநீரைப் பருகுகின்ற மேகத்தையும், நல் பதிகம் ஒத்து — நல்ல பாசியையும் நிகர்த்து, அதி பரிமளங்கள் மருவி — அதிக வாசனைகள் பொருந்தி, நெய்த்து நீண்டு — கொழுமையுடையதாய் நீண்டு, அளிக்குலம் விருந்து உணமலர்ந்த முருகு அலர் தொடைசூட்டி — வண்டுக் கூட்டங்கள் விருந்தாக உண்ணும்படி மலர்ந்த தேன்பொருந்திய மலர்மாலையையணிந்து, முடிக்கும் மொய் குழலாள் — முடிக்கப்பட்ட நெருங்கிய கூந்தலையுடையவள் எ — று.

ஏ அசை. (10)

கயிர வங்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளஞ்
செயிர றுஞ்செழுஞ் செங்கிடை கொங்கிடை யிலவம்
பயில்கொ ழுந்துண ரணைத்தையும் பழித்துமைக் கடைக்க
ணயில்வி டங்கொளு மவர்க்கமு துதவுசெவ் விதழாள்.

[கயிர வம்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளம்
செயிர்அறும் செழும் செங்கிடை கொங்(கு)இடை இலவம்
பயில் கொழும்துணர் அணைத்தையும் பழித்துமைக் கடைக்கண்
அயில் விடம்கொழும் அவர்க்(கு)அமு(து) உதவும் செவ்விதழாள்.]

இ — ள்: கயிரவம் — செவ்வாம்பல் மலரும், கவிர் — முருக்கலரும், தொண்டை மென் கனி — மிருதுவாகிய கொவ்வைக் கனியும், கடல் பவளம் — சமுத்திரத்திலுண்டாகின்ற பவளமும், செயிர் அறும் செழும் செங்கிடை — குற்றமில்லாத செழித்த செங்கிடைச்சியும், கொங்கு இடை இலவம் பயிர்கொழும் துணர் அணைத்தையும் பழித்து — வாசனைக்கிடமாகிய செவ்விலவமரத்தின்கண் விளங்குகின்ற கொழுமைகொண்ட மலரும் ஆகிய இவைகளெல்லாவற்றையுமிகழ்ந்து, மை கடை கண் அயில் விடம்கொளும் அவர்க்கு — மைதீட்டிய கடைக்கண்ணுகிய வேற்படை தைத்து விடமேறப்பெற்றவர்களுக்கு, அமுது உதவு செவ் இதழாள் — (அவ்விஷத்தை மாற்றும்பொருட்டு) அமுதமாகிய பானத்தைக் கொடுக்கின்ற சிவந்த அதரங்களையுடையவள் எ — று. (11)

சலந்த ரும்பொலந் தாமரை மலர்நிகர் முகத்தாள்
கலந்த ருந்தட மார்புடைக் காளைய ரெனுமா
வலந்த ருங்கட கரிகளை வணக்குமங் குசமாய்
நலந்த ருந்திலந் திகழ்குமிழ் நாணுநா சியினாள்.

[சலத்த ருப்பொலம் தாமரை மலர்நிகர் முகத்தாள்
கலம்த ரும்தட மார்புடைக் காஜியர் எனும்மா
வலம்த ரும்கட கரிகஜ வணக்கும் அங்குசமாய்
நலம்த ரும்திலம் திகழ்குமிழ் நாணும் நாசியினுள்.]

இ — ள்: சலம் தரும் பொலம் தாமரை மலர் நிகர் முகத்தாள் — நீரிலே உண்டாகின்ற அழகிய தாமரைமலரை நிகர்த்த முகத்தையுடையவள், கலம் தரும் தட மார்பு உடை காஜியர் எனும் மா வலம் தரும் கட கரி கஜ — ஆபரணம் விளங்குகின்ற விசாலம் பொருந்திய மார்பகத்தையுடைய ஆடவர்களாகிய மிக்க வலிமையையுடைய மதயானைகளை, வணக்கும் அங்குச மாய் — வசமாக்குகின்ற தோட்டியைப்போன்று, நலம் தரும் திலம் திகழ் குமிழ் நாணும் நாசியினுள் — நன்மைபொருந்திய எட்பூவும் பிரகாசிக்கின்ற குமிழமலரும் வெட்கும்படியான மூக்கையுடையவள் எ — று. (12)

தேன லந்தரு சருக்கரை செழுங்கனி கரும்பு
பான றும்பொழிற் பசுங்கிளி மொழிகளைப் பழித்துப்
பேன வெண்டிரை கடைந்துமுன் றுளவணி பெருமான்
வான வர்க்கருண் மருந்தெனு மதுரமென் மொழியாள்.

[தேன் நலம்தரு சருக்கரை செழுங்கனி கரும்பு
பால்நறும் பொழிற் பசுங்கிளி மொழிகளைப் பழித்துப்
பேன வெண்திரை கடைந்துமுன் துள(வு)அணி பெருமான்
வானவர்க்(கு) அருள்மருந்(து) எனும் மதுரமென் மொழியாள்.]

இ — ள்: தேன் — தேனும், நலம் தரும் சருக்கரை — நன்மைபொருந்திய சர்க்கரையும், செழும் கனி — செழுமையாகிய பழங்களும், கரும்பு — கரும்பும், பால் — பாலும், நறும் பொழில் பசும் கிளி மொழிகளை பழித்து — வாசனை பொருந்திய சோலைகளில் வசிக்கின்ற பசிய கிளிகளின் பேச்சும் ஆகிய இவைகளை (இனிமையினும்) பழித்து, முன் துளவு அணி பெருமான் — முன்னொநாளில் துளசிமாலையையணிந்த மகாவிஷ்ணுமூர்த்தியானவர், பேன வெண் திரை கடைந்து — நுரைபொருந்திய வெள்ளிய திரைகளையுடைய பாற் கடலைக் கடைந்து, வானவர்க்கு அருள் மருந்து எனும் மதுர மெல் மொழி யாள்—தேவர்களுக்குக் கொடுத்தருளிய அமுதமென்று சொல்லத்தகுந்த இனிய மெல்லிய வார்த்தையையுடையவள் எ — று. (13)

பாரின் மேல்வளர் மரங்களிற் படர்ந்தமென் கொடியைக்
காரின் மேலெழு மின்னெனுண் ணூலினைக் கடிந்திட்
டேரிலு யர்மத னரசிருந்திடு மல்குற்
றேரின் மீதவ னெழுத்துநின் றெழுத்தறிற் றிடையாள்.

[பாரின் மேல்வளர் மரங்களில் படர்ந்த மென்கொடியைக்
காரின் மேல்எழு மின்னேநுண் நூலினைக் கடிந்திட்(டு)
ஏரினுல் உயர் மதன் அர(சு) இருந்திடும் அல்குல்
தேரின்மீ(து) அவன் எழுந்துநின்(று) ஒத்த சிற்றிடையாள்.]

இ — ள் : பாரின் மேல் வளர் மரங்களிற் படர்ந்த மென் கொடியை — பூமியின்மேல் வளருகின்ற விருட்சங்களிற் படர்ந்த மிருதுவாகிய கொடியையும், காரின் மேல் எழு மின்னே — மேகத்தினின்றுந் தோன்றுகின்ற மின்னலையும், நுண் நூலினை கடிந்திட்டு — நுண்ணிய நூலையும் வெறுத்துத் தள்ளி, ஏரினுல் உயர் மதன் அரசு இருந்திடும் அல்குல் தேரின்மீது — அழகிலுயர்ந்த மன்மதன் அரசுசெய்து வீற்றிருக்கின்ற நிதம்பமாகிய இரதத்தின்மேல், அவன் எழுந்து நின்று ஒத்த சிற்றிடையாள் — அம் மன்மதன் எழுந்து நின்றுற்போன்ற சிறிய இடையையுடையவள் எ — று. (14)

ஊற்றி ருந்தமு தொழுகிடு மல்குலுக் குலகின்
மேற்றி ருந்தர சிலையொடு தொடுகடல் விடுதேர்
காற்றி ரும்பசிக் கருந்திடும் கட்செவிப் படமுந்
தோற்றி ருந்தவென் முலதற் குவமையென் சொல்வாம்.

[ஊற்(று) இருந்(து) அமு(து) ஒழுகிடும் அல்குலுக்(கு) உலகின்
மேல்திருந்(து) அர(சு)இலையொடு தொடுகடல் விடுதேர்
காற்(று)இரும் பசிக்(கு) அருந்திடும் கட்செவிப் படமும்
தோற்(று) இருந்த என்முல் அதற்(கு) உவமைஎன் சொல்வாம்.]

இ — ள் : அமுது ஊற்று இருந்து ஒழுகிடும் அல்குலுக்கு — அமுதமானது ஊற்றெடுத்து ஒழுகுகின்ற (அவளது) நிதம்பத்திற்கு, உலகின்மேல் திருந்து அரசு இலையொடு — உலகத்திலிருக்கின்ற திருத்தமாகிய அரசிலையுடனே, தொடுகடல் — தோண்டப்பட்ட சமுத்திரமும், விடுதேர் — செலுத்தப்படுகின்ற தேரும், இரும் பசிக்கு காற்று அருந்திடும் கட்செவி படமும் — மிக்க பசிக்குக் காற்றை யுணவாகவுண்ணுகின்ற சர்ப்பத்தின் படமும், தோற்று இருந்த என்முல் — உவமித்துச் சொல்வதற்குத் தோற்றிருந்தனவாயின், உவமை என் சொல்வாம் — வேறு யாது உவமையைக் கூறுவேம் (இல்லையென்பதாம்) எ — று. (15)

மஞ்சஞ் சிறர வெனத்துயின் மாயவன் மணக்கு
நஞ்சஞ் சீர்விழித் திருமக ணுடொறு நயக்குங்
கஞ்சந் தோற்றிடிற் கழியனப் பெடைநடை கற்கு
மஞ்செஞ் சீறடிக் குவமைமற் றியாதெடுத் தறைவாம்.

[மஞ்சம் சி(று) அர(வு) எனத்துயில் மாயவன் மணக்கும்
நஞ்சம் சீர்விழித் திருமகள் நாள்தொறும் நயக்கும்
கஞ்சம் தோற்றிடில் கழிஅனப் பெடைநடை கற்கும்
அம்செம் சீறடிக்(கு) உவமைமற்(று) யா(து) எடுத்தறைவாம்.]

இ — ள்: கழிபெடை அன நடை கற்கும் அம் செம் சீறடிக்கு — (அப் பெண்ணினது) நீர்க்கழிகளில் வாசஞ்செய்கின்ற பெடை அன்னத்தின் நடையைப் பழகுகின்ற அழகிய சிவந்த சிறிய பாதங்களுக்கு, சிறு அரவு மஞ்சம் என துயில் மாயவன் மணக்கும் — சிறுகின்ற சர்ப்பமே சயனமாகக்கொண்டு யோகநித்திரை செய்கின்ற விஷ்ணுமூர்த்தி விவாகஞ் செய்தருளிய, நஞ்சம் சீர் விழி திருமகள் நாள்தொறும் நயக்கும் கஞ்சம் தோற்றிடில் — நஞ்சைப் பொதிந்த அழகிய கண்களையுடைய இலக்குமிதேவியானவர் தினமும் விரும்புகின்ற தாமரைமலரும் தோல்வியடையின், உவமை மற்று யாது எடுத்து அறைவாம் — ஒப்பாக வேறு எதனையெடுத்துக் கூறுவோம் எ — று. (16)

இனைய பேரெழில் வாய்ந்திடு மிளங்கொடி தனைக்கண்
டனைய தந்தைதாய் மிகமகிழ்ந் தகமதின் முந்நூல்
புனையும் பூசுர னொருவனுக் கிசைந்துளம் பொருந்தி
மனையி னன்மறைச் சடங்குடன் வதுவைசெய் தளித்தார்.

[இனைய பேரெழில் வாய்ந்திடும் இளங்கொடி தனைக்கண்(டு)
அனைய தந்தைதாய் மிகமகிழ்ந்(து) அகம் அதில் முந்நூல்
புனையும் பூசுரன் ஒருவனுக்(கு) இசைந்(து) உளம்பொருந்தி
மனையில் நால்மறைச் சடங்குடன் வதுவைசெய்(து) அளித்தார்.]

இ — ள்: இனைய பேர் எழில் வாய்ந்திடும் இளம் கொடி தனை கண்டு — இவ்விதம் பேரழகமைந்த இளமையாகிய கொடியை நிகர்த்த அச்சௌமினியைக்கண்டு, அனைய தந்தை தாய் அகம் அதில் மிக மகிழ்ந்து — அத்தந்தையும் தாயும் மனத்தில் மிக்க சந்தோஷமடைந்து, முந்நூல் புனையும் பூசுரன் ஒருவனுக்கு — உபவீதமணிந்த ஒரு பிராமணனுக்கு, இசைந்து உளம் பொருந்தி — இசைவுகொண்டு மனஞ்சம்மதித்து, மனையில் நால் மறை சடங்குடன் வதுவை செய்து அளித்தார் — தமதில்லத்தில் சதுர்வேத முறைப்படி நடத்தப்படுகின்ற கிரியைகளோடு விவாகஞ்செய்து கொடுத்தனர் எ—று. (17)

நாம னுங்கலைப் பனவனு நளிர்மதி முகத்துப்
பூம னுங்குழற் பூவையும் புரிவொடு வைகிச்
சோம னும்புக ழுரோணியுந் துவசமீ னுயர்த்த
காம னுந்துணைத் தேவியு மெனக்களித் திடுநாள்.

[நா மனும்சுசீப் பனவனும் நளிர்மதி முகத்துப்
பூ மனும்குழல் பூவையும் புரிவொடு வைகிச்
சோமனும் புகல் உரோணியும் துவசமீன் உயர்த்த
கா மனும் துணைத் தேவியும் எனக்களித் திடுநாள்.]

இ — ள் : நா மன்னும் கலி பனவனும் — நாவில் நிலையாகப் பொருந்திய சாஸ்திரங்களையுடைய அப்பிராமணனும், நளிர் மதி முகத்து பூ மன்னும் குழல் பூவையும் — குளிர்ந்த சந்திரனையொத்த முகத்தையும் புஷ்பங்களை யணிந்த கூந்தலையுமுடைய அச்சௌமினியும், புரிவொடு வைகி — அன்போடிருந்து, சோமனும் புகல் உரோணியும் (என) — சந்திரனும் வியந்துகூறப் படுகின்ற ரோகிணியும் போலவும், துவச மீன் உயர்த்த காமனும் துணை தேவியும் என — மீனக்கொடியை நாட்டிய மன்மதனும் அவன் மனைவியாகிய இரதியும் போலவும், களித்திடுநாள் — கூடிக்களித்திருக்கின்ற காலத்தில் எ — று.

நாமனும் பூமனும் என்பன் தொகுத்தல் விகாரங்கள். (18)

புலந்து றந்துவெம் பிணிகளாற் புணர்ந்துபூ சுரனு
நிலந்து றந்துட லிறந்திட நன்மதி நீங்கிக்
குலந்து றந்திடா நீதியைக் குறித்தவள் களத்திற்
கலந்து றந்துளாள் கலங்கினள் கைமையுற் றிருந்நாள்.

[புலம் துறந்துவெம் பிணிகளால் புணர்ந்துபூ சுரனும்
நிலம்து றந்(து)உடல் இறந்திட நன்மதி நீங்கிக்
குலம் துறந்திடா நீதியைக் குறித்(து)அவள் களத்தில்
கலம்துறந்துளாள் கலங்கினள் கைமை உற்றிருந் தாள்.]

இ — ள் : புலம் துறந்து வெம் பிணிகளால் புணர்ந்து — பஞ்சப்புலன்களும் உணர்வுகுன்றிக் கொடிய ரோகங்களாற் பீடிக்கப்பட்டு, பூசுரனும் நிலம் துறந்து உடல் இறந்திட — அப்பிராமணனும் பூமியைவிட்டு உடலம் அழிந்திட, அவள் — அச்சௌமினி, நல் மதி நீங்கி — நல்லறிவழிந்து, குலம் துறந்திடா நீதியை குறித்து — குல ஒழுக்கந்தவறுத நீதியை நினைத்து, களத்தில் கலம் துறந்துளாள் கலங்கினள் — கழுத்திற் பொருந்திய மங்கலியத்தை இழந்தவளாய்க் கலக்கமடைந்து, கைமை உற்று இருந்தாள் — விதவையாகியிருந்தாள் எ — று. (19)

வேறு

வனவரிக் குயிலு மன்றிலும் வானில்
வருநில வெழுமதிக் கொழுந்துந்
தினநிரை புரக்கு மாயர்வேய்ங் குழலுந்
திறம்பெறக் கறங்குசே மணியு

மனலெனக் கனலுங் காமவெந்தியை யனில
மொத் தனுதின மூட்டக்
கனதனக் கிரிகள் பசலைபூத் தணையிற்
கண்படை பொருந்திலள் கலங்கி.

[வனவரிக் குயிலும் அன்றிலும் வானில்
வருநில(வு) எழுமதிக் கொழுந்தும்
தினம்நிரை புரக்கும் ஆயர்வேய்ங் குழலும்
திறம்பெறக் கறங்குசே மணியும்
அனல்எனக் கனலும் காமவெந் தியை
அனிலம்ஒத்(து) அனுதினம் மூட்டக்
கனதனக் கிரிகள் பசலைபூத்(து) அணையில்
கண்படை பொருந்திலள் கலங்கி.]

இ — ள்: வன வரி குயிலும் — அழகிய வரிபொருந்திய குயிலும், அன்றிலும் — அன்றிற் பட்சியும், வானில் வரு நிலவு எழும் மதி கொழுந்தும் — ஆகாயத்தில் வருகின்ற நிலாக்கிரணத்தை வீசும் பிறைச்சந்திரனும், தினம் நிரை புரக்கும் ஆயர் வேய் குழலும் — எந்நாளும் பசுக்களைக் காக்கின்ற இடையர்களினது மூங்கிற்குழலோசையும், திறம் பெற கறங்கு சே மணியும் — உரமாய்த் தொனிக்கின்ற எருதிற் கட்டிய மணியும், அனல் என கனலும் காம வெம் தியை — அக்கினிபோலச் சுடுகின்ற காமமாகிய கொடிய நெருப்பை, அனிலம் ஒத்து அனுதினம் மூட்ட — காற்றைப்போன்று பிரதினமும் சொலிக்கும்படிசெய்ய, கன தனகிரிகள் பசலை பூத்து — பாரமாகிய மலைபோன்ற தனங்கள் பசலைநிறத்தையடைந்து, அணையில் கண்படை பொருந்திலள் — சயனத்தில் நித்திரையில்லாதவளாய், கலங்கி — கலக்கமடைந்து எ — று. (20)

கோடுவாய் கூடக் கலைவளர் திங்கட்
குடைமதன் படைபடும் பசும்புண்
ணூடுநீ டழற்கோ னுழைந்தெனத் தென்ற
லுலவநெட் டுயிர்த்துள முருகி
வாடுநூ லிடைபோ லங்கமு மெலிந்து
மதனநோய் பொறுக்கரி தாகித்
தேடுமா டவர்கள் பலரையுங் கரவிற்
சிந்தனை களித்திடச் சேர்ந்தாள்.

[கோடுவாய் கூடக் கலைவளர் திங்கள்
குடைமதன் படைபடும் பசும்புண்
ணூடுநீ(டு) அழற்கோல் நுழைந்தெனத் தென்றல்
உலவநெட்டுயிர்த்(து) உளம் உருகி

வாடுநூல் இடைபோல் அங்கமும் மெலிந்து
மதனநோய் பொறுக்கரி(து) ஆகித்
தேடும் ஆடவர்கள் பலரையும் கரவில்
சிந்தனை களித்திடச் சேர்ந்தாள்.]

இ — ள் : கோடு வாய் கூட கலிவளர் திங்கள் குடை மதன் படை — வனைந்த நுதிபொருந்தும்படி (சோடச) கலைகளும் வளரப்பெற்ற சந்திரனுகிய குடையையுடைய மன்மதனது புஷ்பபாணங்கள், படும் பசும் புண் ஊடு — தைத்த பசிய புண்ணினிடத்தே, அழல் நீடு கோல் நுழைந்தென — அக்கினியிற் காய்ந்த நீண்ட (இருப்புக்) கோல்புதைந்தாற்போல, தென்றல் உலவ — தென்றற்காற்று வீச நெட்டுயிர்த்து உளம்உருகி — நெடுமூச்செறிந்து மனமுருகி, வாடும் நூல் இடை போல் அங்கமும் மெலிந்து — மெலிந்த நூல்போன்ற இடையையொத்துச் சரீரமும் மெலிவடைந்து, மதனநோய் பொறுக்க அரிதாகி — காமநோயைத் தாங்குதற்கியலாது, தேடும் ஆடவர்கள் பலரையும் — தன்னை விரும்பித் தேடுகின்ற ஆண்மக்கள் பலரையும், கரவில் சிந்தனை களித்திட சேர்ந்தாள் — சோரமாய் மனம் மகிழும்படி சையோகித்தனள் எ — று. (21)

மலைக்கிணை யெனப்பொற் சுணங்கலர்ந் தகன்று
வட்டமிட் டெழுந் திறுமாந்த
முலைக்கிடை யிடையுந் தடித்தரி விளரி
முரல்செழு முளரி போன்முகமு
மலைக்கிடை யுதிக்கு மதியமொத் துடலு
மந்நிற மாயமு தூறு
மிலைக்கிடை மலர்ச்செவ் வாயிதழ் வெளுப்பக்
கருப்பமுற் றிருந்தன ளிப்பால்.

[மலைக்(கு)இணை எனப்பொன் சுணங்(கு) அலர்ந்(து) அகன்று
வட்டம் இட்(டு) எழுந்(து) இறுமாந்த
முலைக்(கு) இடை இடையும் தடித்(து)அரி விளரி
முரல்செழு முளரிபோல் முகமும்
அலைக்(கு)இடை உதிக்கும் மதியம்ஒத்(து) உடலும்
அந்நிறமுமாய் அமு(து) ஊறும்
இலைக்(கு) இடைமலர் செவ்வாய் இதழ்வெளுப்பக்
கருப்பமுற்(று) இருந்தனள் இப்பால்.]

இ — ள் : மலைக்கு இணை என பொன் சுணங்கு அலர்ந்து — மலைக்கொப்பாகப் (பருத்துப்) பொன்னிறமான தேமல் படர்ந்து, அகன்று வட்டம் இட்டு எழுந்து இறுமாந்த — பரந்து வட்டித்து உயர்ந்துநிமிர்ந்த, முலைக்கு இடை இடையும் தடித்து — தனபாரத்தினுல் வருந்துகின்ற இடையுமகன்று, அரி விளரி முரல் செழு முளரிபோல் முகமும் அலைக்கு இடை உதிக்கும் மதியம் ஒத்து — வண்டுகள் செவ்வழிப் பண்பாடுகின்ற செழுமையாகிய தாமரை

மலர்போன்ற மூகமும் கடலிற்றோன்றிய சந்திரனைப்போல வெண்ணிறமாய், உடலும் அ நிறமாய் — தேகமும் அந்த வெண்ணிறமாகி, அழுது ஊறும் இலைக்கு இடை மலர் செவ்வாய் இதழ் வெளுப்ப — அழுதழுறுகின்ற இலை களினிடையாயுள்ள மலர்போன்ற சிவந்த உதடுகள் வெளுக்க, கருப்பம் உற்று இருந்தனள் — கருப்பமடைந்திருந்தாள், இப்பால் — இதன்பின் எ—று.

கருக்கொண்டார்க்கு இக்குறிகணிகழ்தல் இயல்பாமென்க. (22)

அந்நக ருறையு மறையவ ரெவரு
மறிந்தன ரிவட்கடிந் தகற்ற
வின்னலுற் றிரங்கித் துணைவிழிப் புனலா
லிணைமுலை களைக்குளிப் பாட்டிக்
கன்னலிற் கனிந்த மொழிச்சவு மினியுங்
கான்வழிச் சென்றிடுங் காலைப்
பின்னவர் குலத்தில் வருமொரு காளை
பிறைநுத லவள்கரம் பிடித்தே.

[அந்நகர் உறையும் மறையவர் எவரும்
அறிந்தனர் இவள்கடிந்(து) அகற்ற
இன்னல் உற்(று) இரங்கித் துணைவிழிப் புனலால்
இணைமுலை களைக்குளிப் பாட்டிக்
கன்னலில் கனிந்த மொழிச்சவு மினியும்
கான்வழிச் சென்றிடு காலைப்
பின்னவர் குலத்தில் வரும்ஒரு காளை
பிறைநுதலவள் கரம் பிடித்தே.]

இ — ள்: அ நகர் உறையும் மறையவர் எவரும் அறிந்தனர் — அந்நக ரத்தில் வசிக்கின்ற பிராமணரெல்லா மிவள் கருக்கொண்டதை ய றி ந் து, இவள் சடிந்து அகற்ற — இவளைக் கோபித்துத் துரத்த, இன்னல் உற்று இரங்கி — துன்புற்றுக் கலங்கி, துணை விழி புனலால் இணை முலைகளை குளிப் பாட்டி — இருகண்களினின்றுஞ்சொரியு நீரினால் இரண்டு தனங்களையும் முழு கச்செய்து, கன்னலில் கனிந்த மொழி சவுமினியும் — கரும்பினுமினிய வசை னங்களையுடைய சௌமினியும், கான் வழி சென்றிடும் காலை — காட்டுவழி யிற் போகும்பொழுது, பின்னவர் குலத்தில் வரும் ஒரு காளை — சூத்திர குலத்திற்றோன்றிய ஒரு ஆடவன், பிறை நுதல் அவள் கரம் பிடித்து — என் னுட் பிறைபோன்ற நெற்றியினையுடைய அவளது கையிற்பிடித்து எ — று.

ஏ அசை. மிக மனநெகிழ்ந்தழுதாளென்பார், 'விழிப்புனலாலிணை முலை களைக் குளிப்பாட்டி' என்றார். (23)

எக்குலத் துனீநீ யார்மனை பேரே
தெவ்விடத் தெய்துதி யென்ன
மைக்குழற் குயிலு முற்றவா றனைத்து
மற்றவற் குணர்த்திட மயல்கூர்ந்
திக்குவிற் குனிக்கு மதனனுக் குடைந்தாண்
டிங்கிவள் கொங்கைமேற் காதன்
மிக்குனக் கினியான் பதியெனத் தனது
வியன்மனை மீதுகொண் டனைந்தான்.

[எக்குலத்(து) உனீநீ யார்மனை பேர்ஏ(து)
எவ்விடத்(து) எய்துதி என்ன
மைக்குழல் குயிலும் உற்றவா(று) அனைத்தும்
மற்(று)அவற்(கு) உணர்த்திடமயல் கூர்ந்(து)
இக்குவில் குனிக்கும் மதனனுக்(கு) உடைந்(து) ஆண்(டு)
இங்(கு)இவள் கொங்கைமேல் காதல்
மிக்(கு)உனக்(கு) இனியான் பதியெனத் தனது
வியன்மனை மீது கொண்டனைந்தான்.]

இ — ள்: நீ ஏ குலத்து உனீ — நீ எக்குலத்தவள், யார் மனை — யாருடைய மனைவி, பேர் ஏது — பெயர் யாது, எவ்விடத்து எய்துதி என்ன — எவ்விடத்துக்குச் செல்கின்றனை என்று வினவ, மை குழல் குயிலும் — கரிய கூந்தலையுடைய சௌமினியும், உற்ற ஆறு அனைத்தும் அவற்கு உணர்த்திட — நடந்தவற்றையெல்லாம் அவனுக்குச் சொல்ல, மயல்கூர்ந்து — மயக்க மிகுந்து, இக்கு வில் குனிக்கும் மதனனுக்கு உடைந்து — கரும்பை வில்லாக வளைக்கின்ற மன்மதனுக்குத் தோற்று, ஆண்டு இவள் கொங்கைமேல் காதல் மிக்கு — அங்கே இவளது முலைகளின்மேலாசை அதிகரித்தலினால், உனக்கு இனி யான் பதி என — உனக்கு இனிமேல் நானே கணவனென்று, தனது வியன் மனை மீதுகொண்டு அனைந்தான் — தனது வியக்கத்தக்க இல்லிற் கொண்டுசென்றான் எ — று.

மற்று இங்கு அசைகள் யானே என்னும் தேற்றேகாரந் தொக்கது. மிக்கு என்னும் செய்தெனெச்சம் ஏதுப்பொருட்டு. குயில் ஆகுபெயர். அவனிரங்குதற்கேற்ற இங்கிதமாகக் கூறினளென்பார். 'குயில்' என்றும், உயர்குலப் பெண்ணை யிழிகுலத்தான் புணர்தலாகாதென்னுமறிவு சிறிதுமின்றி மயக்கவயத்தனனென்பார் 'மதனனுக்குடைந்து' என்றும், இவளுக்கோரிடையூறுமின்றிக் காக்கத்தகுந்த வளப்பமுள்ள மனையென்பார் 'வியன்மனை' என்றுங் கூறினர். (24)

மருவுயிர்த் திடுதண் மலர்க்குழ லணங்கு
மற்றவன் முனுமா மலரிற்
றிருவுயிர்த் திடுமைங் கணைக்கிழ வனுநற்
றேவியு மாமெனக் கூடி
யிருவுடற் குயிரொன் றுமெனத் தழுவி
யின்பமுற் றிருந்திடு நாளிற்
கருவுயிர்த் தனள்பைங் காவியங் கண்ணி
கணவனுந் தனதுளங் களித்தான்.

[மருஉயிர்த் திடும்தண் மலர்க்குழல் அணங்கும்
மற்(று)அவன் தானும் மாமலரில்
திருஉயிர்த் திடும் ஐங்கணைக் கிழவனும்நல்
தேவியும் ஆமெனக் கூடி
இரு உடற்(கு) உயிர்ஒன்(று) ஆமெனத் தழுவி
இன்பமுற்(று) இருந்திடு நாளில்
கரு உயிர்த்தனள்பைங் காவியம் கண்ணி
கணவனும் தன(து) உளம்களித்தான்.]

இ — ள்: மரு உயிர்த்திடும் தண் மலர் குழல் அணங்கும் — வாசனை வீசுகின்ற குளிர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய சௌமினியும், அவன் தானும் — அந்தச் சுத்திரனும், மா மலரில் திரு உயிர்த்திடும் ஐங்கணை கிழவனும் நல் தேவியும் ஆம் என கூடி — மகத்தாகிய தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமிபெற்ற பஞ்சபாணங்களையுடைய மன்மதனும் அவனது நல்ல மனைவியாகிய ரதியும் என்று சொல்லும்படி கலந்து, இரு உடற்கு உயிர் ஒன்று ஆம் என தழுவி இன்பம் உற்று — இரண்டுசரீரத்துக்கும் உயிரொன்றென்று கூறும்படி புணர்ந்து இன்பமடைந்து, இருந்திடு நாளில் — இருக்கின்ற காலத்தில், பைம் காவி அம் கண்ணி — பசிய கருங்காலி மலர்போன்ற அழகிய கண்களையுடைய சௌமினி, கரு உயிர்த்தனள் — மகவைப் பெற்றாள், கணவனும் தனது உளம் களித்தான் — நாயகனும் தன்னுடைய மனம் மகிழ்ச்சியடைந்தான் எ — று. (25)

இன்னணஞ் சிலநாட் கழித்தனன் வேற்றார்க்
கிவளுயிர்க் கணவனே குதலுந்
தன்னலங் கெடுக்குங் களிமது நுகர்ந்து
தமியளா யிருந்துகங் குலின்வாய்
மின்னலந் தருநுண் ணிடைமடக் கொடியும்
விரகவெந் தீச்சுட வெதும்பி
நன்னலந் துறந்தா னருந்திடும் வேட்கை
நனியுறத் தனியிது புரிவாள்.

[இன்னணம் சிலநாள் கழிந்தனன் வேற்றூர்க்(கு)
இவள் உயிர்க் கணவன் ஏகுதலும்
தன்நலம் கெடுக்கும் களிமது நுகர்ந்து
தமியளாய் இருந்துகங் குலின்வாய்
மின்நலம் தருநுண்ணிடை மடக்கொடியும்
விரகுவெந்தீ சுடவெதும்பி
நல்நலம் துறந்(து)ஊன் அருந்திடும் வேட்கை
நனிஉறத் தனிஇது புரிவாள்.]

இ — ள்: இவள் உயிர் கணவன் — இவளது உயிர்போன்ற நாயகன், இன்னணம் சில நாள் கழிந்தனன் வேற்றூர்க்கு ஏகுதலும் — இவ்வாறு சில தினங்கள் கழித்து பிறதேசத்துக்குச் செல்ல, தன் நலம் கெடுக்கும் களி மது நுகர்ந்து — தனது ஒழுக்கத்தை அழிக்கின்ற களிப்பைத் தருதற்குரிய கள் ஊப் பருகி, தமியளாய் இருந்து — தனித்தவளாக இருந்து, கங்குலின் வாய் — இராக்காலத்தில், மின் நலம் தரு நுண் இடை மட கொடியும் — மின்னலை யொத்த அழகுவாய்ந்த நுண்ணிய இடையையுடைய மடமைதங்கிய கொடி போன்ற சௌமினியும், விரக வெம் தீ சுட வெதும்பி — காமமாகிய கொடிய அக்கினி சுடுதலினால் வாடி, நல் நலம் துறந்து — நல்ல ஒழுக்கத்தை விடுத்து, ஊன் அருந்திடும் வேட்கை நனி உற — மாமிசத்தைப் புசிக்கும் ஆசை மிகவு மதிகரித்தலினால், தனி இது புரிவாள் — தனிமையாக இதனைச் செய்வாள் எ — று. (26)

நடைதரு கொச்சை நாகுடன் புனிற்ரு
னல்லிளங் கன்றுறு தொழுவி
னிடைபுகுந் தருந்து மதுச்செருக் கதனு
லிரங்குமா னீன்றகன் றினைக்கொன்
றுடையதன் னகத்திற் கொண்டுசென் றிரவி
னூனருந் திடுவதற் கெண்ணி
மிடையிருட் கடியத் தகழிநெய் வாக்கி
மென்றிரி விளக்குமேற் றினளால்.

[நடைதரு கொச்சை நாகுடன் புனிற்ரு
நல்இளங் கன்(று)உறு தொழுவின்
இடைபுகுந்(து) அருந்து மதுச்செருக்(கு) அதனால்
இரங்கும் ஆன்ஈன்ற கன்றினைக்கொன்(று)
உடையதன் அகத்திற் கொண்டு சென்(று)இரவின்
ஊன்அருந் திடுவதற்(கு) எண்ணி
மிடைஇருள் கடியத் தகழிநெய் வாக்கி
மென்திரி விளக்கும் ஏற்றினளால்.]

இ — ள் : நடை தரு கொச்சை நாகுடன் — நடக்கத் தகுந்த வெள் ளாட்டின் இளங்குட்டிகளும், புனிற்று ஆன் நல் இளம் கன்று உறு தொழு வின் இடை புகுந்து — ஈன்றணிமையான பசுக்களின் நல்ல இளமைபொருந் திய கன்றுகளுந் தங்கிய தொழுவத்திற் சென்று, அருந்தும் மது செருக்கு அதனால் — குடித்த கள்ளின் வெறியால், இரங்கும் ஆன் ஈன்ற கன்றினை கொன்று — இரங்குகின்ற பசுவின்ற (இளங்) கன்றைக்கொன்று, உடைய தன் அகத்தில் கொண்டு சென்று — தனது இல்லத்தில் அதனைக் கொண்டுபோய், இரவில் ஊன் அருந்திடுவதற்கு எண்ணி — இரவிலே மாமிசத்தைப் புசிக்கக் கருதி, மிடை இருள் கடிய தகழி நெய் வாக்கி — நெருங்கிய இருளைப் போக் குதற்குத் தகழியில் நெய்யை வார்த்து, மென் திரி விளக்கும் ஏற்றினள் — மிருதுவாகிய திரியிட்டுத் தீபத்தையேற்றினள் என்று. (27)

அவ்வயிற் செகுத்த தாவிளங் கன்றென்
றறிந்தன ளயர்ந்தனண் மயங்கிச்
செவ்வயிற் கண்ணுள் கன்னலோ ரிரண்டு
சிவசிவ வெனத்தியா னித்துப்
பவ்வநீ ருலகோர் பழித்தகட் குடித்த
பழுதுவந் ததுவெனப் பயந்து
மெவ்வமி லாம லூனுணத் துணிந்தாள்
யாவரே விதிவலி கடப்பார்.

[அவ்வயின் செகுத்த(து) ஆஇளங் கன்(று)என்(று)
அறிந்தனள் அயர்ந்தன்ள் மயங்கிச்
செவ்வயில் கண்ணுள் கன்னல் ஓரிரண்டு
சிவசிவ எனத்தியா னித்துப்
பவ்வநீர் உலகோர் பழித்தகள் குடித்த
பழுதுவந் ததுவெனப் பயந்து
எவ்வம்இலாமல் ஊன் உணத் துணிந்தாள்
யாவரே விதிவலி கடப்பார்.]

இ — ள் : செவ் அயில் கண்ணுள் — சிவந்த வேல்போன்ற கண்களையுடைய அச்சவுமினி, அவ்வயின் செகுத்தது ஆ இளம் கன்று என்று அறிந்தனள் — அவ்விடத்துக் கொலைசெய்யப்பட்டது பசுவினிளங்கன்றென்று அறிந்து, அயர்ந் தனள் மயங்கி — சோர்வடைந்து மயக்கங்கொண்டு, கன்னல் ஓரிரண்டு சிவ சிவ என தியானித்து — இரண்டுநாழிகை நேரம் சிவசிவவென்று (இடையறாது) தியானஞ்செய்து, பவ்வ நீர் உலகோர் பழித்த — சமுத்திரத்தாற் சூழப் பட்ட பூமியின்கண்ணுள்ளவர்களாற் பழிக்கப்படுகின்ற, கள் குடித்த பழுது வந்தது என பயந்தும் — கள்ளைப் பருகியதால் வருங்குற்றம் இப்போது வந்து சம்பவித்ததென்று அஞ்சியும், எவ்வம் இலாமல் — மனம் பின்னிடாமல்,

ஊன் உணை துணிந்தாள் — மாமிசத்தை உண்ணத் துணிந்தனள், யாவரே விதி வலி கடப்பார் — யார்தாம் ஊழின் வலிமையைக் கடக்கவல்லவர் எ — று. (28)

புள்ளெனுங் கண்ணுள் புள்ளம தெடுத்துப்
புறணிக ளுரித்தரிந் துரிசை
யுள்ளவள் ளுரங்கள் வேறுவே றமைத்திட்
டுவப்புறக் கருணைசெய் தருந்தி
வள்ளவாய்க் கமல நாயகன் பூரு
வத்திசை வரும்புல ரியின்வாய்
வெள்ளெலும் பணைத்து மள்ளினள் கொணர்ந்து
வீதியிட் டிவையிசைத் திடுவாள்.

[புள்ளனும் கண்ணுள் புள்ளம(து) எடுத்துப்
புறணிகள் உரித்(து)அரிந்(து) உரிசை
உள்ள வள்ளுரங்கள் வேறுவே(று) அமைத்திட்(டு)
உவப்புறக் கருணைசெய்(து) அருந்தி
வள்ளவாய்க் கமல நாயகன் பூரு
வத்திசை வரும்புலரியின் வாய்
வெள்ளெலும்(பு) அணைத்தும் அள்ளினள் கொணர்ந்து
வீதிஇட்(டு) இவைஇசைத் திடுவாள்.]

இ — ள் : புள் எனும் கண்ணுள் — வண்டையொத்த கண்களையுடைய சௌமினியானவள், புள்ளமது எடுத்து புறணிகள் உரித்து — அரிவாளை யெடுத்துத் தோலையுரித்து, அரிந்து உரிசை உள்ள வள்ளுரங்கள் வேறு வேறு அமைத்திட்டு — வெட்டிச் சுவைகொண்ட தசைகளை வெவ்வேறாக வைத்து, உவப்புற கருணை செய்து அருந்தி — சந்தோஷமாகப் பொரியல் செய்து உண்டு, வள்ளவாய் கமல நாயகன் பூருவத்திசை வரும் புலரியின் வாய் — கிண்ணம்போன்ற வாயையுடைய தாமரைக்கு நண்பனாகிய சூரியன் கீழ்த்திசையி லுதயஞ்செய்கின்ற வைகறைப்போதில், வெள் எலும்பு அணைத்தும் அள்ளினள் கொணர்ந்து — வெள்ளிய எலும்புகள் யாவற்றையும் அள்ளிக்கொண்டுவந்து, வீதி இட்டு இவை இசைத்திடுவாள் — தெருவீதியிற் போட்டு இவ்வாறு கூறுவாள் எ — று. (29)

வெய்யதீச் சுழல்கட் கொடுவரி வடிவால்
மென்குழக் கன்றினை யொறுத்தின்
றையகோ தின்று போயது மறுகி
லினைவருங் காண்மினென் றெறிந்து

தையன்மீண் டிற்பா லெய்தினள் வேளாண்
டகைபெறு காளைகேட் டெய்திச்
செய்யவாய் மையினீ பிழைத்தனை போலு
மெனவவட் டேற்றின னிருந்தான்.

[வெய்யதீச் சுழல்கண் கொடுவரி வடிவால்
மென்குழக் கன்றினை ஒறுத்(து)இன்(று)
ஐயகோ தின்று போயது மறுகில்
அனைவரும் காண்மின் என்(று)எறிந்து
தையல் மீண்(டு)இல்பால் எய்தினள் வேளாண்
தகைபெறு காளைகேட்(டு) எய்திச்
செய்ய வாய்மையில்நீ பிழைத்தனைபோலும் எனஅவள்
தேற்றினன் இருந்தான்.]

இ — ள்: ஐயகோ — ஐயோ, வெய்ய தீ சுழல் கண் கொடுவரி — கொடிய அக்கினிப்பொறியையொத்த சுழலுகின்ற கண்களையுடைய புலியானது, வடி வால் மென் குழ கன்றினை ஒறுத்து இன்று தின்று போயது — கூரிய வாலையுடைய மிருதுவாகிய இளங்கன்றை வருத்தி இன்று கொலை செய்து தின்றுபோய்விட்டது, அனைவரும் காண்மின் என்று மறுகில் எறிந்து — அனைவருங் காணக்கடவீரென்று வீதியிலெறிந்து, தையல் மீண்டு இல்பால் எய்தினள் — அப்பெண்ணினவள் திரும்பித் தனதுவீட்டை யடைந்தனள், வேளாண்தகை பெறு காளை கேட்டு எய்தி — வேளாளனுகிய தகுதிபொருந்திய நாயகன் அதனைக்கேட்டு வந்து, செய்ய வாய்மையில் நீ பிழைத்தனை என — சிறந்த உண்மைநிலையினின்றும் நீ தவறினாய் என்று, அவள் தேற்றினன் இருந்தான் — அவளது மனத்தைத் தேற்றிக்கொண்டிருந்தான் எ — று.

போலும் — அசை. (30)

வெறுத்தன னிகவா னங்கவள் கொங்கை
விழைநல வேட்கைமீ தூர்ந்திட்
டிறுத்தபே ரன்பா லன்றுபோ லென்று
மின்பமுற் றிருந்திடு நாளிற்
கறுத்துவல் விடத்தை நிகர்த்தவெம் பிணிகள்
காயமீ துடற்றிடத் தேம்பி
மறுத்தவிர் மதியை மருட்டுவாண் முகத்தாள்
வருந்தினண் மரணமுற் றனளே.

[வெறுத்தனன் இகவான் அங்(கு)அவள் கொங்கை
விழைநல வேட்கைமீ தூர்ந்திட்(டு)
இறுத்தபேரன்பால் அன்றுபோல் என்றும்
இன்பம்உற்(று) இருந்திடும் நாளில்

கறுத்தவல் விடத்தை நிகர்த்தவெம் பிணிகள்
காயமீ(து) உடற்றிடத் தேம்பி
மறுத்தவிர் மதியை மருட்டு வாள்முகத்தாள்
வருந்தினள் மரணம் உற்றனளே.]

இ — ள்: வெறுத்தனன் இகவான் — அவளை வெறுத்து நீக்காதவனும், அவள் கொங்கை விழை நல வேட்கை மீதூர்ந்திட்டு — அவளது தனத்தை விரும்புகின்ற ஆசைப்பெருக்கம் அதிகரித்து, இறுத்த பேர் அன்பால் — பொருந்திய பெரிய அன்பினால், அன்று போல் என்றும் இன்பமுற்று இருந்திடும் நாளில் — அற்றைநாட்போல எந்நாளும் இன்பமனுபவித்திருக்கும் காலத்தில், கறுத்த வல்விடத்தை நிகர்த்த வெம் பிணிகள் — கரிய வலிய நஞ்சையொத்த கொடிய நோய்களானவை, காயமீது உடற்றிட தேம்பி — சரீரத்தை வருத்துதலினாற் கலங்கி, மறு தவிர் மதியை மருட்டு வாண்முகத் தாள் — களங்கமற்ற சந்திரனையும் மருளச்செய்கின்ற ஒளிகொண்ட முகத்தை யுடைய அச்செளமினியானவள், வருந்தினள் மரணம் உற்றனள் — துன்புற்று இறந்தாள் எ — று.

ஏ அசை. (31)

வேறு

அச்சமை யத்தினி லடர்ந்து வாரியிற்
கைச்சமைக் கடுநிகர் கால தூதுவர்
பொய்ச்சமை மின்னிடைப் பூவை மென்மொழி
மச்சமை விழியுயிர் வௌவி யேகினர்.

[அச்சமை யத்தினில் அடர்ந்து வாரியில்
கச்சமை கடுநிகர் கால தூதுவர்
பொய்ச்சமை மின்இடைப் பூவை மென்மொழி
மச்சம் மைவிழிஉயிர் வௌவி ஏகினர்.]

இ — ள்: அ சமையத்தில் — அந்தச் சமையத்தில், வாரியில் கைத்தமை கடு நிகர் கால தூதுவர் — சமுத்திரத்திற் றோன்றிய கைப்புள்ள கரிய நஞ்சை யொத்த யமதூதுவர்கள், அடர்ந்து — நெருங்கிவந்து, பொய்த்தமை மின் இடை — நுண்மையான மேகத்தினின்றுந் தோன்றுகின்ற மின்னலியொத்த இடையையும், பூவை மென் மொழி — நாகணவாய் போன்ற மிருதுவாகிய சொல்லையும், மற்சம் மை விழி — கயல்மீன்போன்ற மைதீட்டிய கண்களையு முடைய செளமினியினது, உயிர் வௌவி ஏகினர் — ஆன்மாவைக் கவர்ந்து சென்றனர் எ — று.

கைத்த — கைச்ச எனவும், பொய்த்த — பொச்ச எனவும், மற்சம் — மச்சம் எனவும் விகாரமாய் நின்றன. (32)

நந்தலி றென்புல நண்ணி நண்ணரும்
வெந்திறற் கூற்றின்முன் விடுப்ப நூன்முகத்
தந்தமி றீவினை யனைத்து மாய்ந்துபின்
பைந்தொடி முகத்தினைப் பார்த்துக் கூறுவான்.

[நந்தல்இல் தென்புலம் நண்ணி நண்ணரும்
வெந்திறல் கூற்றின்முன் விடுப்ப நூல்முகத்(து)
அந்தம்இல் தீவினை அனைத்தும் ஆய்ந்துபின்
பைந்தொடி முகத்தினைப் பார்த்துக் கூறுவான்]

இ — ள்: நந்தல் இல் தென்புலம் நண்ணி — கெடுதலில்லாத யமபுரத்தை யடைந்து, நண்ணரும் வெம் திறல் கூற்றின் முன் விடுப்ப — அடைதற்கரிய கொடிய வலிமையையுடைய யமனுக்குமுன்னே கொண்டுபோய் விடுக்க, நூன் முகத்து அந்தம் இல் தீ வினை அனைத்தும் ஆய்ந்து — நூலறிவினால் அவள் செய்த அளவற்ற தீச்செயல்களெல்லாவற்றையும் அவனராய்ந்து, பின் பைந் தொடி முகத்தினைப் பார்த்து கூறுவான் — பின்பு பசிய வளையலையணிந்த அச் சௌமினியின் முகத்தைப் பார்த்துச் சொல்லுவான் எ — று. (33)

அன்றிருட் பொழுதினி லானின் கன்றினைக்
கொன்றிருந் தரன்றிரு நாமங் கூறிய
நன்றியிற் கொடுந்தழ லரகந் துய்த்திடு
மொன்றிய தீவினைக் குரிய ளல்லைநீ.

[அன்(று)இருள் பொழுதினில் ஆனின் கன்றினைக்
கொன்(று)இருந்(து) அரன்திரு நாமம் கூறிய
நன்றியில் கொடும்தழல் நரகம் துய்த்திடும்
ஒன்றிய தீவினைக்(கு) உரியள் அல்லைநீ.]

இ — ள்: அன்று இருள் பொழுதினில் ஆனின் கன்றினை கொன்று — முன்னொருநாளிரவிற் பசுவின் கன்றைக் கொலைபுரிந்து, இருந்து அரன் திரு நாமம் கூறிய நன்றியில் — (இரண்டுநாழிகைநேரம்) இருந்து ஈசனுடைய திருநாமத்தைச் சொல்லிய நன்மையினால், கொடும் தழல் நரகம் துய்த் திடும் ஒன்றிய தீவினைக்கு — கொடிய அக்கினியையொத்த நரகத்தையனு பவித்தற்கேற்ற தீமைக்கு, நீ உரியள் அல்லை — நீ உரித்துடையையல்லை எ — று. (34)

சிலைமக ளாக்கிய தேவன் பின்வரு
மலைமகட் குடலிடம் வழங்கி வானதி
யலைமகட் சூடினே னருளிற் கூறினன்
புலைமக ளாய்ப்புவி போதி நீயென்றே.

[சிலைமகள் ஆக்கிய தேவன் பின்வரும்
மலைமகட்(கு) உடல்இடம் வழங்கி வான்நதி
அலைமகள் சூடினேன் அருளில் கூறினன்
புலைமக ளாய்ப்புவி போதி நீஎன்றே.]

இ — ள்: சிலை மகள் ஆக்கிய தேவன் பின்வரும் — (கௌதமமுனிவன் சாபத்தினால்) கருங்கல்லாக இருந்த அகலிகையைப் பழைய பெண்ணுரு வடைந்து வரும்படிசெய்த (இராமாவதாரமாகிய) விஷ்ணுவுக்குப்பின் தோன்றிய, மலைமகட்கு உடல் இடம் வழங்கி — மலையரசன் புத்திரியாகிய உமாதேவியாருக்கு வாமபாகத்தைக் கொடுத்து, வான்நதி அலைமகள் சூடினேன் — தேவகங்கையாகிய அலைபொருந்திய பெண்ணைத் திருமுடியிற் சூடிய சிவபெருமானது, அருளில் — அனுக்கிரகத்தால், புலைமகளாய் புவி போதி நீ என்று கூறினன் — புலைப்பெண்ணுருப் பூமியிற் பிறக்கக்கடவையென்று கூறினன் (யமன்) எ — று. (35)

அந்தக ஞணையா லழகின் மேனியு
நொந்துடல் பொறுக்கொணு நோய்க ளுங்கொடு
கந்தமார் குவளைநேர் கண்க ளின்றியே
வந்தொரு புலைமகள் வயிற்றிற் றோன்றினள்.

[அந்தகன் ஆணையால் அழகின் மேனியும்
நொந்(து)உடல் பொறுக்கொணு நோய்க ளும்கொடு
கந்தம்ஆர் குவளைநேர் கண்கள் இன்றியே
வந்(து)ஒரு புலைமகள் வயிற்றில் தோன்றினள்.]

இ — ள்: அந்தகன் ஆணையால் — யமனது ஆஞ்ஞையினால், அழகு இல் மேனியும் — அழகில்லாத சரீரத்தையும், நொந்து உடல் பொறுக்கொணு நோய்களும் கொடு — வருந்தி உடம்புஞ் சகிக்கலாற்றாத துன்பங்களையும் பொருந்தி, கந்தம் ஆர் குவளை நேர் கண்கள் இன்றி — வாசனைநிறைந்த கருங்குவளை மலர்போன்ற கண்களுமில்லாமல், ஒரு புலைமகள் வயிற்றில் வந்து தோன்றினள் — ஒரு புலைமாதின் வயிற்றில்வந்து பிறந்தாள் எ — று.

ஏ அசை. (36)

அறந்தவாத் துறவிர்கா ளணங்கு நோயுடன்
சிறந்தவாட் படைநிகர் திருட்டி யின்றியே
மறம்புரி புலியர்தங் குலத்தில் வந்தவள்
பிறந்தகா ரணமினிப் பேசக் கேட்டிரால்.

[அறம்தவாத் துறவிர்காள் அணங்கு நோயுடன்
சிறந்தவாட் படைநிகர் திருட்டி இன்றியே
மறம்புரி புலியர்தம் குலத்தில் வந்தவள்
பிறந்தகா ரணம்இனிப் பேசக் கேட்டிர்ஆல்.]

இ — ள்: அறம் தவா துறவிர்காள் — தருமவொழுக்கங் கெடாத முனிவர்களே!, அணங்கு நோயுடன் சிறந்த வாட்படை நிகர் திருட்டி இன்றி— வருந்துகின்ற நோய்களோடு அழகிய வாட்படைபோன்ற கண்களுமில்லாமல், மறம்புரி, புலியர்தம் குலத்தில் வந்து — கொடுந்தொழிலைச் செய்கின்ற புலியர்வம்சத்தில் வந்து, அவள் பிறந்த காரணம் இனி பேச கேட்டிர் — அவள் பிறத்தற்கு நேர்ந்த காரணத்தை இனிக் கூறுவேன் கேட்கக் கடவீர் எ—று.

ஆல் ஏ அசைகள். (37)

உம்மையிற் கற்பொரீஇ யுளத்த வாக்கொடு
கைம்மையிற் பலரையும் கலந்த தீமையாற்
செம்மையின் மேனியிற் றீய குட்டமும்
வெம்மைகொள் சூலநோய் முதல்வி யாதியும்.

[உம்மைஇல் கற்(பு)ஒரீஇ உளத்(து)அவாக் கொடு
கைம்மையில் பலரையும் கலந்த தீமையால்
செம்மைஇல் மேனியில் தீய குட்டமும்
வெம்மைகொள் சூலநோய் முதல்வி யாதியும்.]

இ — ள்: உம்மை இல் கற்பு ஒரீஇ — முற்பிறப்பிலே கற்புநெறி தவறி, உளத்து அவா கொடு — மனத்திலாசைகொண்டு, கைம்மையிற் பலரையும் கலந்த தீமையால் — விதவையாகவிருந்து பலரோடுஞ் சையோகித்த தீமையினால், செம்மை இல் மேனியில் தியகுட்டமும் — அழகற்ற சரீரத்தில் கொடிய குட்டநோயும், வெம்மைகொள் சூலநோய்முதல் வியாதியும் — கொடிய சூலநோய் முதலிய ரோகங்களும் எ — று. (38)

பெற்றன ளவளொரு பிடிய தாயினு
மற்றவர் பசிக்கன லவிக்க விட்டுணக்

குற்றம தாற்பசிக் கொடுமை கூர்துய
ருற்றவ டேம்பிடு முடலந் தாங்கிஞள்.

[பெற்றனள் அவள்ஒரு பிடியது ஆயினும்
அற்றவர் பசிக்கனல் அவிக்க இட்(டு)உணக்
குற்றம தால்பசிக் கொடுமை கூர்துயர்
உற்(று)அவள் தேம்பிடும் உடலம் தாங்கிஞள்.]

இ — ள்: பெற்றனள் — அடைந்தாள், அவள் ஒரு பிடியது ஆயினும் — அவள் ஒருபிடி அன்னத்தையாயினும், அற்றவர் பசி கனல் அவிக்க இட்டு உண குற்றமதால் — யாசகர்களது பசியாகிய அக்கினியைத் தணித்தற்குக் கொடுத்துண்ணுத குற்றத்தினுல், பசி கொடுமை கூர்துயர் உற்று — கொடுமை மிகுந்த பசித்துன்பத்தையடைந்து, அவள் தேம்பிடும் உடலம் தாங்கிஞள் — அவள் மெலிந்த சரீரத்தைக் கொண்டு பிறந்தாள் எ — று. (39)

பலத்தினே மிகத்தரும் பசுவின் கன்றினே
வலத்தினிற் செகுத்துவள் ஞரங்கண் மாந்தலா
னிலத்தினிற் புன்றெழி னீச ரென்றிடுங்
குலத்தினிற் ருேன்றினள் கொடிய நீர்மையாள்.

[பலத்தினே மிகத்தரும் பசுவின் கன்றினே
வலத்தினில் செகுத்துவள் ஞரங்கள் மாந்தலால்
நிலத்தினில் புன்தொழில் நீசர் என்றிடும்
குலத்தினில் தோன்றினள் கொடிய நீர்மையாள்.]

இ — ள்: பலத்தினே மிக தரும் பசுவின் கன்றினே — அநேக நன்மை களேக் கொடுக்கின்ற பசுவின் கன்றை, வலத்தினில் செகுத்து வள்ஞரங்கள் மாந்தலால் — வலிமையோடு கொன்று மாமிசத்தைப் புசித்தமையால், கொடிய நீர்மையாள் — கொடுங்குணத்தையுடைய அச்செளமினியானவள், நிலத்தினில் புன்தொழில் நீசர் என்றிடும் குலத்தினில் தோன்றினள் — பூமியின்கண்ணே எளிய தொழிலேயுடைய நீசர்களென்று கூறப்படுகின்ற புலேயர் குலத்தில் வந்துபிறந்தாள் எ — று. (40)

எண்ணுநல் வினேயினே யிகந்து நிவினே
பண்ணிட வியற்றுகட் குடித்த பான்மையாற்
கண்ணினே யின்றிமைக் கடவு டுத்திடு
மண்ணின்மேற் ருேன்றிமெய் வருந்தி ளைரோ.

[எண்ணுநல் வினையினை இகந்து தீவினை
பண்ணிட இயற்றுகள் குடித்த பான்மையால்
கண்இணை இன்றிமைக் கடல்உ டுத்திடும்
மண்ணின்மேல் தோன்றிமெய் வருந்தினள் அரோ.]

இ — ள்: எண்ணு நல்வினையினை இகந்து — மதிக்கப்படுகின்ற சற்கிரியைகளெல்லாவற்றையும் விட்டு, தீவினை பண்ணிட இயற்று கள் குடித்த பான்மையால் — தீமைகளைச் செய்யும்படி ஏவுகின்ற கள்ளைப் பருகியதன்மையால், கண் இணை இன்றி — கண்களிரண்டுமில்லாமல், மை கடல் உடுத்திடும் மண்ணின் மேல் தோன்றி — கரிய சமுத்திரத்தை யாடையாகவுடைய பூமியின்மேற் பிறந்து, மெய்வருந்தினள் — சரீரம் வருந்தப்பெற்றாள் எ — று.

அரோ — அசை. (41)

வேறு

இனைய நீர்மைய ளின்றதாய் தந்தைய ரிறப்ப
மனையெ னத்தனை மணந்துகொள் வார்களு மின்றி
யனைய வூர்ப்புலைச் சேரியினையமேற் றருந்தித்
தினையி னேர்நல மின்றிநல் குரவொடு திரிந்தாள்.

[இனைய நீர்மையள் ஈன்றதாய் தந்தையர் இறப்ப
மனைவ னத்தனை மணந்துகொள் வார்களும் இன்றி
அனைய ஊர்ப்புலைச் சேரியின் ஐயம்ஏற்(று) அருந்தித்
தினையின் ஓர்நலன் இன்றிநல் குரவொடு திரிந்தாள்.]

இ — ள்: இனைய நீர்மையள் — இத்தன்மைகளையுடைய அப்புலைமகள், ஈன்ற தாய் தந்தையர் இறப்ப — தன்னைப் பெற்ற தாய்தந்தையர்களிறந்துபட, மனை என தனை மணந்து கொள்வார்களும் இன்றி — மனையியாகத் தன்னை விவாகஞ் செய்பவர்களுமில்லாமல், அனைய ஊர் புலை சேரியின் — அவ்வூரின் கணுள்ள புலைச்சேரியில், ஐயம் ஏற்று அருந்தி — பிச்சையெடுத்துண்டு, தினையின் ஓர் நலன் இன்றி — தினையளவாயினும் ஒரு நன்மையுமில்லாமல், நல் குரவொடு திரிந்தாள் — வறுமையோடு திரிந்தாள் எ — று. (42)

திரைமு திர்ந்தொர்மாத் திரையுநித் திரையிலாள் களத்த
மரைமு திர்ந்திடக் குரைத்திட வனைந்துமெய் கூனி
யுரைமு திர்ந்தவ ருவமமிட் டுரைத்தகொக் கொப்பா
நரைமு திர்ந்துநல் விளமைபோய் முதுமைநண் ணியபின்.

[திரைமு திர்ந்(து)ஓர்மாத் திரையும்நித் திரையிலாள் களத்(து)
அமர்ஐமு திர்ந்திடக் குரைத்திட வனைந்துமெய் கூனி

உரைமு திர்ந்தவர் உவமம்இட்(டு) உரைத்தகொக்(கு) ஒப்பாம்
நரைமு திர்ந்துநல் இளமைபோய் முதுமைநண் ணியபின்.]

இ — ள்: திரைமுதிர்ந்து — திரை அதிகரித்து, ஓர் மாத்திரையும் நித்திரை இலாள் — ஒரு மாத்திரைப் பொழுதாயினும் நித்திரையில்லாதவளாய், களத்து அமர் ஐ முதிர்ந்திட — கண்டத்திற்பொருந்திய சேடமதிகரிக்க, குரைத்திட மெய் வலிந்து கூனி — இரைப்புண்டாகச் சரீரம் வலிந்து கூனி, உரை முதிர்ந்தவர் உவமம் இட்டு உரைத்த கொக்கு ஒப்பாம் நரைமுதிர்ந்து — கல்வியால் மேம்பட்டவர்கள் உவமித்துக் கூறிய கொக்குக்குச் சமானமாய் நரை முதிர்ச்சிகொண்டு, நல் இளமை போய் முதுமை நண்ணியபின் — நல்ல இளமைப்பருவம் நீங்கி வயோதிகப்பருவம் வந்த பின்னர் எ — று. (43)

சொன்ன மாகநற் சிவநிசி நோற்றிடத் தொடங்கி
யன்ன மாநகர்ச் சனஞ்செல வறிந்தவர் கூடப்
பின்ன மன்றிமற் றொருபுலை மடந்தைதோள் பிடித்துக்
கன்ன லார்வய றுன்னுகோ கன்னமீ நடைந்தாள்.

[சொன்ன மாகநற் சிவநிசி நோற்றிடத் தொடங்கி
அன்ன மாநகர்ச் சனம்செல அறிந்(து)அவர் கூடப்
பின்னம் அன்றிமற் றொருபுலை மடந்தைதோள் பிடித்துக்
கன்னல் ஆர்வயல் துன்னுகோ கன்னமீ(து) அடைந்தாள்.]

இ — ள்: சொன்ன நல் மாக சிவநிசி நோற்றிடத் தொடங்கி — சொல்லப்பட்ட நல்ல மாசிமாதச் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கத் தொடங்கி, அன்ன மா நகர் சனம் செல அறிந்து — அப்பெரிய நகரத்திலுள்ள மனுடர்கள் செல்வதையறிந்து, அவர் கூட பின்னம் அன்றி — அவர்களோடுகூட வேறு பாடில்லாமல், மற்றொரு புலை மடந்தை தோள் பிடித்து — வேறோர் புலைப் பெண்ணின் தோளிற் பிடித்து, கன்னல் ஆர் வயல் துன்னும் கோகன்னமீது அடைந்தாள் — கரும்புகள் நிறைந்த வயல்கள் நெருங்கிய திருக்கோகர்ணத்தையடைந்தாள் எ — று. (44)

தீய வெம்பசி கனற்றவோர் தெருத்தனி லிருந்து
தூயகண் ணிலேற் குதவுமின் சோறென விரந்து
கூய போதிலம் மறுகிடைக் குறுகுமோர் களிய
ளுய வில்வநிற் குணவிதென் றவள்கரத் தளித்தான்.

[தீய வெம்பசி கனற்றவர் தெருத்தனில் இருந்து
தூய கண்இலேற்(கு) உதவுமின் சோ(று)என இரந்து
கூய போதில்அம் மறு(கு)இடைக் குறுகும்ஓர் களியன்
ஆய வில்வெற்நிற்(கு) உண(வு)இதுஎன்(று) அவள்கரத்(து) அளித்தான்.]

இ — ள் : தீய வெம் பசி கனற்ற — அக்கினிபோன்ற கொடிய பசிபானது அழற்ற, ஓர் தெருத்தனில் இருந்து — ஒரு வீதியின்கணிருந்து, தூய கண்ணிலேற்கு உதவுமின் சோறென இரந்து கூய போதில் — சுத்தமாகிய கண்ணில்லாத எனக்குச் சோறுகொடுங்களென்று யாசித்துக்கூவுஞ் சமயத்தில், அ மறுகிடை குறுகும் ஓர் களியன் — அத்தெருவின்கண்ணேவந்த களிக்குமியல்பையுடைய ஒருவன், ஆய வில்வம் — வைத்திருந்த வில்வத்தை, நிற்கு உணவு இது என்று அவள் கரத்து அளித்தான் — உனக்கு உணவு இதுவாமென்று அவளது கையிற் கொடுத்தான் எ — று. (45)

புன்மை யாலவ நிட்டகூ விளைதனைப் புசித்தற்
கன்மை யாலய லெறிந்தன ளாங்கது பழைய
தன்மை யாகிய சிவலிங்க நாயகன் றலையிற்
றின்மை தீர்ப்பவர் சாத்திய தழையெனச் சிறந்த.

[புன்மையால் அவன் இட்டகூ விளைதனைப் புசித்தற்(கு)
அன்மையால் அயல் எறிந்தனள் ஆங்(கு)அது பழைய
தன்மை ஆகிய சிவலிங்க நாயகன் தலையில்
தின்மை தீர்ப்பவர் சாத்திய தழைஎனச் சிறந்த.]

இ — ள் : புன்மையால் அவனிட்ட கூவிளைதனை — புல்லறிவுகொண்டு அவன்கொடுத்த வில்வத்தை, புசித்தற்கு அன்மையால் அயல் எறிந்தனள் — உண்ணுதற்குத் தக்கதல்லாமையால் பக்கத்தில் எறிந்தாள், ஆங்கு அது — அவ்விடத்து அவ்வில்வபத்திரமானது, பழையதன்மை ஆகிய சிவலிங்கநாயகன் தலையில் — பூர்வீகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானது திருமுடியில், தின்மை தீர்ப்பவர் சாத்திய தழை என — தீமைகளையெல்லாமொழிக்குமியல்பையுடைய மேலோர்களினுல் சாத்தப்பட்ட பத்திரம்போல, சிறந்த — சிறப்படைந்தது எ — று. (46)

அற்றை நாட்சிவ ராத்திரி யனந்தலூ ணகற்றிப்
பற்றை நேர்கரப் பரையொரு பாகமாம் பரமன்
கற்றை வார்சடை முடியெறி கவின்கொள் வில்வத்தாற்
பிற்றை நாட்சிவ பூசனை புரிபலன் பெறுவாள்.

[அற்றை நாள்சிவ ராத்திரி அனந்தல் ஊண் அகற்றிப்
பற்றை நேர்கரப் பரைஒரு பாகமாம் பரமன்
கற்றை வார்சடை முடிஎறி கவின்கொள் வில்வத்தால்
பிற்றை நாள்சிவ பூசனை புரிபலன் பெறுவாள்.]

இ — ள் : அற்றை நாள் சிவராத்திரி அனந்தல் ஊண் அகற்றி — அந்தச் சிவராத்திரி தினத்திலே நித்திரையையும் உணவையும் நீக்கி, பற்றை

நேர் கர பரை ஒரு பாசமாம் பரமன் — செங்காந்தண் மலர் போன்ற கைகளையுடைய உமாதேவியாரை வாமபாகத்திற் கொண்டருளிய சிவபெருமானது, கற்றை வார் சடைமுடி எறி கவின் கொள் வில்வத்தால் — கூட்டமாகிய நீண்ட சடைமுடியிலெறிந்த அழகிய வில்வபத்திரத்தினால், பிற்றை நாள் — பின்னைக் காலத்திலே, சிவபூசனை புரி பலன் பெறுவாள் — சிவபூசை செய்ததனாலடையும் பலனைப் பெறுபவளானாள் எ — று. (47)

யாம நான்குமன் றிரவுபத் துகமென வெண்ணித்
தூம மாரழற் பசியினுற் றுயின்றில ளிருந்தாள்
சேம மார்தடந் தேர்கடி தருணன்முன் செலுத்தக்
காமர் செங்கதிர்க் கடவுளுங் குணபுலத் துதித்தான்.

[யாமம் நான்கும்அன்(று) இரவுபத்(து) உகம்என எண்ணித்
தூமம் ஆர்அழல் பசியினுல் துயின்றிலள் இருந்தாள்
சேமம் ஆர்தடந் தேர்கடி(து) அருணன்முன் செலுத்தக்
காமர் செங்கதிர்க் கடவுளும் குணபுலத்(து) உதித்தான்.]

இ — ள்: யாமம் நான்கும் அன்று இரவு பத்து உகம் என எண்ணி — அந்த இரவின் நான்கு சாமங்களையும் பத்துயுகம்போல நினைத்து, தூமம் ஆர் அழல் பசியினால் — புகைபொருந்திய அக்கினியையொத்த பசியினாலே, துயின்றிலள் இருந்தாள் — நித்திரைசெய்யாதவளாயிருந்தாள், சேமம் ஆர் தடம் தேர் கடிது அருணன் முன் செலுத்த — காவல்நிறைந்த விசாலமாகிய இரதத்தை (தேர்ப்பாகனுகிய) அருணன் விரைவாக முன்னே செலுத்த, காமர் செங் கதிர் கடவுளும் — அழகிய சிவந்த கிரணங்களையுடைய சூரியனும், குணபுலத்து உதித்தான் — கிழ்த்திசையிலுதயஞ்செய்தான் எ — று. (48)

விடியல் காண்டலு மீண்டொரு தெருத்தலை மேவி
யடிசி லேற்பமற் றப்புலை யரிவைதோள் பற்றி
நெடிது சேறலுங் காறளர்ந் துயிர்நிலை நீங்க
மிடிசெய் மூப்புவெந் நோய்பசி வருத்திட வீழ்ந்தாள்.

[விடியல் காண்டலும் மீண்(டு) ஒரு தெருத்தலை மேவி
அடிசில் ஏற்பமற்(று) அப்புலை அரிவைதோள் பற்றி
நெடிது சேறலும் கால்தளர்ந்(து) உயிர்நிலை நீங்க
மிடிசெய் மூப்புவெம் நோய்பசி வருத்திட வீழ்ந்தாள்.]

இ — ள்: விடியல் காண்டலும் — விடிதலை அறிந்து, மீண்டு ஒரு தெருத்தலை மேவி — பின்னர்வேறேரு வீதியிற் சென்று, அடிசில் ஏற்ப — சோற்றை யாசிக்கும்படி, அப்புலை அரிவை தோள் பற்றி நெடிது சேறலும் — அப்புலைப்

பெண்ணினது தோளைப் பிடித்துக்கொண்டு நெடுந்தூரம் நடந்துசெல்ல, கால் தளர்ந்து உயிர்நிலை நீங்க — கால்கள் சோர்வடைந்து உயிர்நிலை கலங்க, மிடிசெய் மூப்பு வெம் நோய் பசி வருத்திட — துன்பத்தைச் செய்கின்ற மூதுமையும் கொடிய நோயும் பசியும் வருத்துதலினால், விழ்ந்தாள் — கீழே விழுந்தாள் எ — று. மற்று அசை. (49)

ஆத பத்தழல் கொளுத்திய நிலத்தில்வீழ்ந் தழுந்தி
யேதமுற்றவள் பட்டவெந் துயரள விலைப்பின்
பாத கப்புலை மகளுட றணந்துயிர் பறிந்து
போத லுற்றிடத் தொடங்கியே புறப்படும் போதில்.

[ஆதபத் தழல் கொளுத்திய நிலத்தில்வீழ்ந்(து) அழுந்தி
ஏதம் உற்றவள் பட்டவெம் துயர்அள(வு) இலைப்பின்
பாதகப்புலை மகள்உடல் தணந்(து) உயிர் பறிந்து
போதல் உற்றிடத் தொடங்கியே புறப்படும் போதில்.]

இ — ள் : ஆதப தழல் கொளுத்திய நிலத்தில் வீழ்ந்து அழுந்தி — வெயிலாகிய அக்கினிபற்றிய நிலத்தில் விழுந்து வருந்தி, ஏதம் உற்றவள் பட்டவெம் துயர் அளவிலை — குற்றமுடைய அப்புலைப்பெண்ணானவள் அனுபவித்த துன்பத்திற்கு எல்லையில்லை, பின் — பின்னர், பாதக புலைமகள் உடல் தணந்து — பாவியாகிய அப்புலைப்பெண்ணினது உடலைவிட்டு, உயிர் பறிந்து போதலுற்றிட தொடங்கியே புறப்படும்போதில் — உயிரானது பிரிந்து போகத்தொடங்கி நீங்குகின்ற சமயத்தில் எ — று. (50)

பணிப்ப ணிப்புயக் கணிச்சியம் படைப்பர னருளா
லெணிக் கணிக்கருங் கணங்களீ யேவிநீர் மேவிக்
குணிக்க ரும்புலை மகளுயிர் கொணர்மினென் றுரைப்ப
மணிச்செ ழுஞ்சுடர் விமானமோ டிம்பரின் வந்தார்.

[பணிப்ப ணிப்புயக் கணிச்சிஅம் படைப்பரன் அருளால்
எணிக்க ணிக்கரும் கணங்களீ ஏவிநீர் மேவிக்
குணிக்க ரும்புலை மகள்உயிர் கொணர்மின்என்(று) உரைப்ப
மணிச்செ ழுஞ்சுடர் விமானமோ(டு) இம்பரின் வந்தார்.]

இ — ள் : பணி பணி புய கணிச்சியம்படை பரன் அருளால் எண்ணி — சர்ப்பங்களீ யாபரணமாகவணிந்த புயங்கள் பொருந்திய மழுப்படையையுடைய சிவபெருமான் கிருபையோடு நினைத்து, கணிக்க அரும் கணங்களீ ஏவி — கணக்கிடவியலாத கணத்தவர்களீயேவி, நீர் மேவி — நீங்கள் சென்று, குணிக்க அரும் புலைமகள் உயிர் கொணர்மின் என்று உரைப்ப — மதித்தற்

கிய அப்புலைப்பெண்ணினது ஆன்மாவைக் கொண்டுவாருங்களென்று ஆஞ்ஞாபிக்க, மணி செழும் சுடர் விமானமோடு — இரத்தினகசிதமாகிய அழகிய ஒளிவீசுகின்ற இரதத்தோடு, இம்பரின் வந்தார் — இப்பூமியின்கண்ணே வந்தனர் எ — று.

எணி என்பது தொகுத்தல் விகாரம். (51)

அன்ன காலியிற் புலிமக ளாவியைப் பொலமென்
றுன்ன வேவருந் திவ்விய வுருவினிற் சேர்த்துக்
கின்ன ராதியர் பாடிடக் கிளிமொழித் துவர்வாய்ச்
சின்ன நூலிடை யரம்பையர் நடம்பயில் செய்ய.

[அன்ன காலியில் புலிமகள் ஆவியைப் பொலம்என்(று)
உன்னவே வரும் திவ்விய உருவினில் சேர்த்துக்
கின்னராதியர் பாடிடக் கிளிமொழித் துவர்வாய்ச்
சின்ன நூல்இடை அரம்பையர் நடம்பயில் செய்ய.

இ — ள்: அன்ன காலியில் புலிமகள் ஆவியை — அச்சமயத்தில் அப்புலிப்பெண்ணினது உயிரை, பொலம் என்று உன்ன வரும் திவ்விய உருவினில் சேர்த்து — பொன்னென்று நினைக்கின்ற திவ்வியமாகிய ஒரு சரீரத்திற் புகுத்தி, கின்னராதியர் பாடிட — கின்னரர் முதலாயினோர் கீதங்களைப் பாடவும், கிளி மொழி துவர் வாய் சின்ன நூல் இடை அரம்பையர் நடம் பயில் செய்ய — கிளிபோன்ற இனிய சொற்களையும் பவளம்போன்ற வாயையும் மெல்லிய நூல்போன்ற இடையையுமுடைய தேவப்பெண்கள் நடனத்தையும் அபிநயத்தையுஞ் செய்யவும் எ — று.

ஏ — அசை. (52)

தக்க துந்துபி முழங்கிடச் சாமர மிரட்ட
வக்க ணத்தினி லவிர்மணித் தேர்மிசை யேற்றித்
தொக்க வெண்ணிறச் சோதிவிட் டொப்பறத் துலங்கு
மிக்க பேரெழிற் கயிலையிற் செல்லுவான் விரைந்தார்.

[தக்க துந்துபி முழங்கிடச் சாமரம் இரட்ட
அக்கணத்தினில் அவிர்மணித் தேர்மிசை ஏற்றி
தொக்க வெள்நிறச் சோதிவிட்(டு) ஒப்(பு)அறத் துலங்கும்
மிக்க பேர்எழில் கயிலையில் செல்லுவான் விரைந்தார்.]

இ — ள்: தக்க துந்துபி முழங்கிட — தகுதியாகிய தேவதுந்துபி யாரவாரிக்கவும், சாமரம் இரட்ட — சாமரங்களசைக்கவும், அக்கணத்தினில் அவிர் மணி தேர் மிசை ஏற்றி — அச்சமயத்தில் விளங்குகின்ற இரத்தினகசிதமாகிய இரதத்தின்மேலேற்றி, தொக்க வெள் நிற சோதிவிட்டு —

தொகுதியாகிய வெள்ளிய பிரபையைப் பரப்பி, ஒப்பு அற துலங்கும் மிக்க பேர் எழில் கயிலையில் — உவமையில்லாமல் விளங்குகின்ற பேரழகுபொருந்திய கயிலாசமலையில், செல்லுவான் விரைந்தார் — செல்லுதற்கு விரைந்தார் எ — று. (53)

கண்ண னுயிரங் கண்ணனெண் கண்ணனற் கதிர்க
டண்ணெ ணுண்மதிக் கடவுளுஞ் சலசநட் புடைய
வண்ணை வான்கதிர் வானவர் முனிவர ருரகர்
விண்ணு லாவிய சித்தரோ டியக்கர்விஞ் சையர்கள்.

[கண்ணன், ஆயிரங்கண்ணன், எண்கண்ணன், நல் கதிர்கள்
தண்என் நாள்மதிக் கடவுளும், சலசநட்(பு) உடைய
வண்ணை வான்கதிர், வானவர், முனிவரர் உரகர்
விண்உலாவிய சித்தரோ(டு) இயக்கர்விஞ் சையர்கள்.]

இ — ள்: கண்ணன் — மாயவனும், ஆயிரங்கண்ணன் — இந்திரனும், எண்கண்ணன் — பிரமனும், நல் கதிர்கள் தண் என் நாள் மதி கடவுளும் — நல்ல குளிர்ந்த கிரணங்களையுடைய ஒளிபொருந்திய சந்திரனும், சலச நட்பு உடைய வண்ணை வான் கதிர் — தாமரைக்கு நண்பனாகிய அழகிய சிறந்த சூரியனும், வானவர் — தேவர்களும், முனிவரர் — முனிவர்களும், உரகர் — நாகர்களும், விண் உலாவிய சித்தரோடு — ஆகாய சஞ்சாரிகளாகிய சித்தர்களுடனே, இயக்கர் — யக்ஷர்களும், விஞ்சையர்கள் — விஞ்சையர்களும் எ — று. (54)

பரிந்து போற்றிநின் றவர்க்கெலா மருள்விழி பரப்பி
வரிந்த நீள்குரன் மாடகத் திவவியாழ் வாங்கிப்
புரிந்த வார்சடை நாரதன் புகலருஞ் சுருதி
தெரிந்து பாடிய பாடலிற் செவித்துணை கொடுத்து.

[பரிந்து போற்றிநின் றவர்க்(கு)எலாம் அருள்விழி பரப்பி
வரிந்த நீள்குரன் மாடகத் திவ(வு)யாழ் வாங்கிப்
புரிந்த வார்சடை நாரதன் புகலரும் சுருதி
தெரிந்து பாடிய பாடலில் செவித்துணை கொடுத்து.]

இ — ள்: பரிந்து போற்றி நின்றவர்க்கு எலாம் அருள்விழி பரப்பி — அன்புகொண்டு ஸ்தோத்திரஞ் செய்துநின்ற யாவருக்கும் கிருபாநோக்கஞ் செய்தருளி, வரிந்த மாடக திவவு நீள் குரல் யாழ் வாங்கி — முறுக்காணிகளில் (நரம்புகள்) வரிந்துகட்டப்பட்ட நீண்ட தொனியையுடைய யாழை எடுத்து, புரிந்த வார் சடை நாரதன் — முறுகிய நீண்ட சடையையுடைய நாரதமுனிவர், புகல் அரும் சுருதி தெரிந்து பாடிய பாடலில் — சொல்லுதற்கரிய உண்மைகளை ஆராய்ந்து பாடிய பாடல்களில், செவி துணை கொடுத்து — இருசெவிகளையுஞ் சாய்த்து எ — று. (55

கையின் மான்மழுப் பிறங்கிடக் கனற்பிழம் பனைய
மெய்யி னீற்றொளி விளங்கிட விடநுகர்ந் திருண்ட
மையி னிற்றிகழ் கண்டமும் வண்டுபாண் மிழற்றச்
செய்யி னுறுசெங் கமலநேர் வதனமுந் திகழ.

[கையில் மான்மழுப் பிறங்கிடக் கனற்பிழம்(பு) அனைய
மெய்யில் நீற்(று)ஒளி விளங்கிட விடம்நுகர்ந்(து) இருண்ட
மையினில் திகழ் கண்டமும் வண்டுபாண் மிழற்றச்
செய்யில் நாறுசெங் கமலம்நேர் வதனமும் திகழ.]

இ — ள்: கையில் மான் மழு பிறங்கிட — திருக்கரங்களின் கண் ணே மானும் மழுவும் பிரகாசிக்கவும், கனல் பிழம்பு அனைய மெய்யில் நீற்று ஒளி விளங்கிட — அக்கினிப் பிழம்புபோன்ற சிவந்த திருமேனியில் விபூதியின் ஒளி பிரகாசிக்கவும், விட நுகர்ந்து இருண்ட மையினில் திகழ் கண்டமும் — நஞ்சையுண்டதனால் இருண்டு கறுத்துப் பிரகாசிக்கின்ற கண்டமும், வண்டு பாண் மிழற்ற — வண்டுகளிசையைப் பாட, செய்யில் நாறு செங் கமல நேர் வதனமும் திகழ — வயல்களின்கண்ணே பரிமளம் வீசுகின்ற தாமரைமலர் போன்ற முகமும் பிரகாசிக்கவும் எ — று. (56)

படரு மென்கொடி யறுகிலைப் பசுமையாற் பொறிப்பை
விடநெ டும்பணிச் சுடிகையிற் றிகழ்மணி வெயிலா
லடர்த டந்திரைக் கங்கையா லணிசடா டவியிற்
றொடருஞ் சந்திர னிந்திர சிலையெனத் தோன்ற.

[படரும் மென்கொடி அறு(கு)இலை பசுமையால் பொறிப்பை
விடநெ டும்பணிச் சுடிகையில் திகழ்மணி வெயிலால்
அடர்தடம் திரைக் கங்கையால் அணி சடா அடவியில்
தொடரும் சந்திரன் இந்திர சிலைஎனத் தோன்ற.]

இ — ள்: படரும் மென்கொடி அறுகு இலை பசுமையால் — படருகின்ற மெல்லிய கொடியையுடைய அறுகினிலையின் பச்சை நிறத்தினாலும், பொறி பை விட நெடும் பணி சுடிகையின் திகழ்மணி வெயிலால் — புள்ளி பொருந் திய படத்தையும் நஞ்சையுங்கொண்ட நீண்ட சர்ப்பங்களின் சிரசில் விளங்து கின்ற இரத்தினங்களின் (சிவந்த) ஒளியினாலும், அடர் தடம் திரை கங்கை யால் — நெருங்கிய விசாலித்த திரைகளையுடைய கங்காநதியினாலும், அணி சடாடவியில் தொட ருஞ்சந்திரன் — அழகிய சடைக்காட்டில் சஞ்சரிக்கின்ற பிறைச்சந்திரன், இந்திர சிலை என தோன்ற — வானவில்லைபோத்து விளங் கவும் எ — று. (57)

உழலை சேர்பவ வெயிற்கொதுங் கிடத்தன துபய
கழலை நீழலா யடியவர்க் கருள்புரி கந்தன்
குழலை யாழினை யமுதினைக் குழைத்தன குதலை
மழலை கேட்டுள மகிழ்ந்திடு வாணகை வயங்க.

[உழலை சேர்பவ வெயிற்(கு)ஒதுங்கிடத் தன(து) உபய
கழலை நீழலாய் அடியவர்க்(கு) அருள்புரி கந்தன்
குழலை யாழினை அமுதினைக் குழைத்தன குதலை
மழலை கேட்(டு)உளம் மகிழ்ந்திடு வாள்நகை வயங்க.]

இ — ள்: உழலை சேர் பவ வெயிற்கு ஒதுங்கிட — அலைதலைக்கொண்ட பிறவியாகிய வெயிலுக்கு ஒதுங்கும்படி, தனது உபய கழலை — நமது இரண்டு திருப்பாதங்களையும், நீழலாய் அடியவர்க்கு அருள் புரி கந்தன் — நிழலாக அடியவர்களுக்கு ஈந்தருளுகின்ற குமாரக்கடவுளது, குழலை யாழினை அமுதினை குழைத்தன குதலை மதலை கேட்டு — வேய்ங்குழலினிசையையும் யாழினிசையையும் அமுதத்தையும் ஒன்றுகக் குழைத்தாற்போன்ற நிரம்பா வார்த்தையாகிய மழலைச் சொற்களைக் கேட்டு, உளம் மகிழ்ந்திடும் வாள் நகை வயங்க — மனமகிழ்ச்சிகொள்ளுதலாலுண்டாகிய ஒளிபொருந்திய புன்னகை விளங்கவும் எ — று. (58)

கலக வாழ்விழி யரம்பையர் கவரிகா லசைப்ப
வுலகி லாருயி ரனைத்தையும் பெற்றசிற் றுதரத்
திலக வாணுத லுமையுடன் செம்பொ னுலியன்ற
விலகு மாமணி யாசனத் திருந்தன னிறைவன்.

[கலகவாள்விழி அரம்பையர் கவரிகால் அசைப்ப
உலகில் ஆருயிர் அனைத்தையும் பெற்றசிற்றுதரத்
திலக வாள்நுதல் உமையுடன் செம்பொனுல் இயன்ற
இலகு மாமணி ஆசனத்(து) இருந்தனன் இறைவன்.]

இ — ள்: கலக வாழ் விழி அரம்பையர் கவரி கால் அசைப்ப — (கண்டோர்க்கு) மதனகலகத்தை வினைவிக்கின்ற வாள்போன்ற கூரிய கண்களையுடைய அரம்பாஸ்திரீகள் சாமரங்களாற் காற்றுண்டாகும்படி அசைக்கவும், உலகில் ஆர் உயிர் அனைத்தையும்பெற்ற சிற்றுதர திலக வாள் நுதல் — உலகத்தின்கணுள்ள சர்வான்மாக்களையும் பெற்றருளிய சிறிய உதரத்தையும் திலகம்தீட்டிய ஒளிபொருந்திய நெற்றியையுமுடைய, உமை உடன் — உமாதேவியாருடனே, செம் பொனுல் இயன்ற இலகு மா மணி ஆசனத்து — செம்பொன்னுற் செய்யப்பட்ட ஒளிபொருந்திய சிறந்த இரத்

திருசனத்தில், இறைவன் இருந்தனன் — (விதிவழி நின்றுரைக் காத்தும் நில்லாரை ஒறுத்தும் அருளுகின்ற) எப்பொருட்குமிறைவராகிய சிவபெருமான் விற்றிருந்தருளினர் எ — று. (59)

ஆறு சூடிய வண்ணன்முன் னந்தரத் தியங்கு
மேறு சீர்மணி விளங்கிய விமானநின் றிறக்கிக்
கூறு மிப்புலை மடந்தையை விரைந்துடன் கொடுபோய்
வீறு சேர்கண நாதரக் கணத்தினில் விடுத்தார்.

[ஆறு சூடிய அண்ணல்முன் அந்தரத்(து) இயங்கும்
ஏறு சீர்மணி விளங்கிய விமானநின்(று) இறங்கிக்
கூறும் இப்புலை மடந்தையை விரைந்(து)உடன் கொடுபோய்
வீறுசேர்கண நாதர் அக்கணத்தினில் விடுத்தார்.]

இ — ள்: ஆறு சூடிய அண்ணல் முன் — கங்கையைத் தரித்த தலைவராகிய சிவபெருமானது திருமுன்னரே, அந்தரத்து இயங்கும் ஏறு சீர் மணி விளங்கிய விமானம் நின்று இறக்கி — ஆகாய மார்க்கமாய்ச் செல்கின்ற மிக்க அழகிய இரத்தினம் விளங்குகின்ற தேரினின்றும் கீழிறக்கி, கூறும் இ புலை மடந்தையை — சொல்லப்படுகின்ற இப்புலைச்சியை, விரைந்து உடன் கொடு போய் — வேகமாயுடனே கொண்டுபோய், வீறு சேர் கணநாதர் அக்கணத்தினில் விடுத்தார் — பெருமைமிகுந்த கணநிபர்கள் அப்பொழுதே விடுத்தார்கள் எ — று.

அண்ணல் முன் விடுத்தார் என்றிசையும். (60)

எம்பி ரான்திரு வுளங்கனிந் திரங்கியங் கவடன்
வம்பு லாந்திரு மலர்முக நோக்கியிவ் வரைக்க
ணம்பு லாம்விழி மாதரோ டிருத்திமற் றதற்பி
னும்பர் நாடரு முத்தியுந் தருதுமென் றுரைத்தான்.

[எம்பி ரான்திரு உளங்கனிந்(து) இரங்கிஅங்(கு) அவள்தன்
வம்(பு) உலாம்திரு மலர்முகம் நோக்கிஇவ் வரைக்கண
அம்(பு) உலாம்விழி மாதரோ(டு) இருத்திமற்(று) அதன்பின்
உம்பர் நாடரும் முத்தியும் தருதும் என்(று) உரைத்தான்.]

இ — ள்: எம்பிரான் திருவுளம் கனிந்து இரங்கி — எமது தலைவராகிய சிவபெருமான் (அப்பொழுது) திருவுள்ளங்கனிந்து இரங்கி, அங்கு அவன் தன் வம்பு உலாம் திரு மலர்முகம் நோக்கி — அவ்விடத்து அப்புலைமாதின் வாசனை வீசுகின்ற அழகிய மலர்போன்ற முகத்தைப் பார்த்து, இவரை கண் —

இந்தக் கையிலாசமலையில், அம்பு உலாம் விழி மாதரோடு இருத்தி — அம்பு போன்ற கூரிய கண்களையுடைய பெண்களோடு வசிக்கக்கடவை, அதன்பின் — அதன்பின்னர், உம்பர் நாடரும் முத்தியும் தருதும் என்று உரைத்தான் — தேவர்களும் தேடற்கரிய மோக்ஷத்தையும் (உனக்குத்) தந்தருளுவோமென்று திருவாய்மலர்ந்தருளினார் எ — று.

மற்று — அசை. (61)

அனைய ளவ்வுரை கேட்டன ளகமகிழ்ந் திருந்தா
ளினைய மாக்கதை படித்தவர் கேட்டவ ரெவரும்
வினை யொழிந்தர னருள்பெறு வாரென விரித்துப்
புனைநெ டுஞ்சடைச் சூதனம் முனிவர்க்குப் புகன்றான்.

[அனையள் அவ்வுரை கேட்டனள் அகம்மகிழ்ந்(து) இருந்தாள்
இனைய மாக்கதை படித்தவர் கேட்டவர் எவரும்
வினை ஒழித்(து) அரன் அருள்பெறு வார்என விரித்துப்
புனைநெடும் சடைச் சூதன்அம் முனிவர்க்குப் புகன்றான்.]

இ — ள்: அனையள் அவ் உரை கேட்டனள் அகமகிழ்ந்து இருந்தாள் — அந்தப் பெண்ணினவள் அவ்வருள்வாக்கைச் செவியுற்று மனக்களிப்போடு வாழ்ந்திருந்தனள், இனைய மா கதை படித்தவர் கேட்டவர் எவரும் — இந்தப் பெருமைதங்கிய சரித்திரத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களுமாகிய எல்லவரும், வினை ஒழிந்து அரன் அருள் பெறுவார் என — தமது பாவவினைகளெல்லாம் நீங்கப்பெற்றுச் சிவபெருமானது திருவருளைப்பெற்று வாழ்வார்களென்று, புனை நெடும் சடை சூதன் — அலங்காரம் பொருந்திய நீண்ட சடையையுடைய சூதமுனிவர், அம்முனிவர்க்கு விரித்து புகன்றான் — அந்த (நைமிசாரணிய வாசிகளாகிய) முனிவர்களுக்கு விரித்துக் கூறினர் எ—று. (62)

திருச்சிற்றம்பலம்.

சௌமினிச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 509.

கன்மாடபாதச் சருக்கம்

ஏதமற் றுயர்ந்த சீர்த்தி யெம்பிரா னிரவின் காதை
யோதமற் றுளதொன் றுங்கட் குணர்த்துவன் கேண்மி னென்னு
மாதவத் துயர்ந்த செய்ய மறைதெரி முனிவர் கேட்பச்
சூதனுற் றமுத மாரி சொரிந் தெனச் சொல்ல லுற்றான்.

[ஏதம்அற்(று) உயர்ந்த சீர்த்தி எம்பிரான் இரவின் காதை
ஓதமற்(று) உள(து)ஒன்(று) உங்கட்(கு) உணர்த்துவன் கேண்மின் என்னு
மாதவத்(து) உயர்ந்த செய்ய மறைதெரி முனிவர் கேட்பச்
சூதன்உற்(று) அமுதமாரி சொரிந்தெனச் சொல்ல லுற்றான்.]

இ — ள்: ஏதம் அற்று உயர்ந்த சீர்த்தி எம்பிரான் இரவின் காதை — குற்றமில்லாத உயர்வுபொருந்திய கீர்த்தியையுடைய எமது தலைவராகிய சிவபெருமானது சிவராத்திரியின் சரித்திரமானது, ஓதமற்று உளது ஒன்று உங்கட்கு உணர்த்துவன் கேண்மின் என்னு — கூறுதற்கு இன்னுமொன்றுளது உங்கட்கு அறியும்படி சொல்லுவேன் கேளுங்களென்று, மாதவத்து உயர்ந்த செய்ய மறை தெரி முனிவர் கேட்ப — மகாதவத்தின் மேன்மைபெற்ற செம்மையாகிய வேதங்களை அறிந்த முனிவர்கள் கேட்கும்படி, சூதன் உற்று — சூதமகாமுனிவர் வீற்றிருந்து, அமுதமாரி சொரிந்தென — தேவாமிர்தமாகிய மழையைச் சொரிந்தாற்போல, சொல்லல் உற்றான் — சொல்லத் தொடங்கினர் எ — று. (1)

பைம்புலி புலர்த்துங் கொங்கைப் பாவைய ரூடுங் காலச்
சம்புலிவருந்த மாலைச் சமனெயி றென்ன வேக
வெம்புலி யென்ன முன்னி மேற்றிசை தோற்று மென்கிற்
றம்புலிக் கொழுந்தூ ரிஞ்சி யயோத்திமா நகரொன் றுண்டால்.

[பைம்புலி புலர்த்தும் கொங்கைப் பாவையர் ஊடும் கால்அச்
சம்புலி வருந்த,மாலைச் சமன்எயி(று) என்ன, வேக
வெம்புலி என்ன, முன்னி மேல்திசை தோற்றும் மென்கிற்(று)
அம்புலிக் கொழுந்தூர் இஞ்சி அயோத்திமாநகர்ஒன்(று) உண்டால்.]

இ — ள்: பைம் புலி புலர்த்தும் கொங்கை பாவையர் ஊடும் கால் — பசுமையாகிய சலவைச் சாந்தை வரளச்செய்கின்ற தனங்களைக்கொண்ட பெண்கள் தம் நாயகரோடு பிணங்கிய காலத்து, அச்சம் புல்லி வருந்த — அச்சமடைந்து வருந்தும்படி, மாலை — மாலைக்காலத்தில், சமனெயிறு என்ன —

யமனுடைய வக்கிரதந்தத்தைப் போலவும், வேக வெம்புலி என்ன — வேகத்தையுடைய கொடிய புலியைப் போலவும், முன்னி — எண்ணப்பட்டு, மேல் திசை தோற்றும் மென்கிற்று அம்புலி கொழுந்து ஊர் — மேற்குத் திசையின்கண்ணே காணப்படுகின்ற மிருதுவாகிய இளம்பிறைச் சந்திரன் தவழப்பெற்ற, இஞ்சி — மதில்(சூழ்ந்த), அயோத்தி மாநகர் ஒன்று உண்டு — அயோத்தியாபுரியென்னும் பெரிய ஒரு நகரமுளது எ — று.

புல்லி — புலியெனத் தொக்கது. (2)

மன்னர்தம் மன்ன னென்ன வருந்தச ரதன்பான் முன்னுட்
பன்னக மீதிற் றுஞ்சும் பசுந்துழாய் முகுந்தன் றோன்று
மந்நக ரளிக்கும் வேந்த னுதபன் குலத்தில் வந்தோன்
கன்னலந் தருதிண் டோளான் கருதலர்க் கடியும் வாளான்.

[மன்னர்தம் மன்னன் என்னவரும்தச ரதன்பால் முன்நாள்
பன்னகம்மீதில் துஞ்சும் பசும்துழாய் முகுந்தன் தோன்றும்
அந்நகர் அளிக்கும் வேந்தன் ஆதபன் குலத்தில் வந்தோன்
கல்நலம் தருதிண் தோளான் கருதலர் கடியும் வாளான்.]

இ — ள்: மன்னர் தம் மன்னன் என்ன வரும் தசரதன் பால் — அரசர்க் கரசனென்று சொல்லும்படி வந்துதோற்றிய தசரதமகாராசனிடத்தில், முன் நாள் — பண்டைக்காலத்தில், பன்னக மீதில் துஞ்சும் பசும் துழாய் முகுந் தன் தோன்றும் — சர்ப்பத்தின்மேல் யோகநித்திரைசெய்கின்ற பசிய துளசி மாலையை அணிந்த மாயவன் (இராமசுவாமியாகப்) பிறந்தருளிய, அ நகர் அளிக்கும் வேந்தன் — அந்த அயோத்தியாபுரியைப் பரிபாலனஞ் செய்கின்ற அரசனும், ஆதபன் குலத்தில் வந்தோன் — சூரியவம்சத்தில் பிறந்தவனும், கல் நலம் தரு திண் தோளான் — கல்லைப்போன்ற வலிய தோள்களையுடைய வனும், கருதலர் கடியும் வாளான் — பகைவர்களைக் கொல்லுகின்ற வாட் படையையுடையவனும் எ — று. (3)

குத்திர மறவோர் செய்ய கோல்வலை யாமற் கோளிப்
பத்திர சயன னென்னப் பரிந்துயிர் பாது காப்போ
னத்திர நயனச் செவ்வா யிளைவையர்க் கனங்க னன்னன்
மித்திர சகன னுமம் விளங்கிலை யலங்கல் வேலோன்.

[குத்திரம் அறஓர் செய்யகோல் வலையாமல் கோளிப்
பத்திர சயனன் என்னப் பரிந்(து) உயிர்பாது காப்போன்
அத்திர நயனச் செவ்வாய் அரிவையர்க்(கு) அனங்கன் அன்னன்
மித்திர சகன்நல் நாமம் விளங்(கு)இலை அலங்கல் வேலோன்.]

இ — ள்: குத்திரம் அற — வஞ்சகச்செயல் யாவும் அழியும்படி, ஓர் செய்யகோல் வளையாமல் — ஒப்பற்ற செங்கோன்முறை வழுவாதபடி, கோளி பத்திர சயனன் என்ன — ஆலிலையிற் பள்ளிகொள்பவராகிய விஷ்ணுவைப் போல, பரிந்து உயிர் பாதுகாப்போன் — அன்புகொண்டு ஆன்மாக்களைப் பரிபாலனஞ் செய்பவனும், அத்திர நயன செவ்வாய் அரிவையர்க்கு — அம்பு போன்ற கண்களையும் சிவந்த வாயையுமுடைய பெண்களுக்கு, அனங்கன் அன்னன் — மன்மதனை ஒத்தவனும், மித்திர சகன் நல் நாமம் — மித்திரசகனென்னும் நல்ல நாமத்தையுடையவனும், விளங்கு இலை அலங்கல் வேலோன் — விளங்குகின்ற இலைத்தொழின்முற்றிய மாலையை அணிந்த வேற் படையையுடையவனும் ஆகிய (ஓர் அரசன் உளன்) எ — று. (4)

குன்றென வளர்ந்து வீங்குங் குவிமுலைப் பவளச் செவ்வாய்
மன்றலங் கோதைக் கோதை மதயந்தி யென்னு மாதைத்
தன்றடஞ் செங்கை பற்றிச் சடங்குசெய் தழல்சான் றுக
முன்றவ முடிவான் மன்றன் முடித்தவன் முயங்கு நாளில்.

[குன்(று)என வளர்ந்து வீங்கும் குவிமுலைப் பவளச் செவ்வாய்
மன்றல்அம் கோதைக் கோதை மதயந்தி என்னும் மாதைத்
தன்தடம் செங்கை பற்றிச் சடங்குசெய்(து) அழல் சான்றுக
முன்தவ முடிவால் மன்றல் முடித்(து)அவன் முயங்கு நாளில்.]

இ — ள்: குன்று என வளர்ந்து வீங்கும் குவிமுலை — மலைபோல வளர்ந்து குவிந்த பயோதரங்களையும், பவள செவ்வாய் — பவளம்போன்ற சிவந்த வாயையும், மன்றல் அம் கோதை கோதை — வாசனைபொருந்திய அழகிய மாலையையணிந்த கூந்தலையுமுடைய, மதயந்தி என்னு மாதை — மதயந்தியென்னும் பெயரையுடைய பெண்ணை, தன் தடம் செங்கை பற்றி — தனது விசாலமாகிய சிவந்த கரத்தாற் பிடித்து, அழல் சான்றுக சடங்கு செய்து — அக்கினி சாட்சியாகச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாஞ் செய்து, முன் தவ முடிவால் மன்றல் முடித்து — முன்னேசெய்த தவத்தின் பலனால் விவாகஞ்செய்து, அவன் முயங்குநாளில் — அவ்வரசன் சுகித்திருக்கும் காலத்தில் எ — று. (5)

விலங்குபுட் கலங்க மாய்க்கும் வேட்டமேன் விருப்ப முற்றி
யுலங்கெழு வயிரத் தோளா ணெண்மலர் பொதுளிப் பூத்த
பொலந்தருச் சினைகள் வானம் போனவெங் கானம் போவான்
பலங்கொள்கா ழகப்பட் டாடை பட்டிகை மருங்கிற் சேர்த்தி.

[விலங்குபுள் கலங்க மாய்க்கும் வேட்டம்மேல் விருப்பம் முற்றி
உலம்கெழு வயிரத் தோளான் ஞ்மலர் பொதுளிப் பூத்த
பொலம்தரு சினைகள் வானம்போனவெம் கானம் போவான்
பலம்கொள் காழகப் பட்(டு)ஆடை பட்டிகை மருங்கில் சேர்த்தி.

இ — ள் : விலங்கு புள் கலங்க மாய்க்கும் வேட்டம் மேல் விருப்பம் முற்றி — மிருகங்களையும் பட்சிகளையும் கலங்கும்படி வதைசெய்கின்ற வேட்டையில் விருப்பமதிகரித்து, உலம் கெழு வயிர தோளான் — திரண்ட கல்லை யொத்த வயிரித்த தோள்களையுடைய அந்த மித்திரசக மகாராசன், ஒண் மலர் பொதுளி பூத்த — ஒளிபொருந்திய புஷ்பங்களைக் கூட்டமாகப் பூத்துள்ள, பொலம் தரு சினைகள் வானம் போன — அழகிய விருட்சத்தின் கொம்புகள் ஆகாயமட்டும் ஓங்கிவளர்ந்த, வெம் கானம் போவான் — கொடிய காட்டை அடையும்பொருட்டு, பலம் கொள் காழக பட்டு ஆடை பட்டிகை மருங்கில் சேர்த்தி — பலத்த சரிய பட்டுவஸ்திரத்தையும் அரைக் கச்சையையும் அரையிலணிந்து எ — று. (6)

செஞ்சுட ரெறிக்குஞ் செம்பொற் செழுமணி மகுட நீக்கிக்
குஞ்சிபூந் தொடையிற் சூழ்ந்து குலவிட விசித்துக் கூர்மை
விஞ்சிய சுரிகை சேர்த்து வெறுக்கையி னமைத்த பச்சை
மஞ்செனத் தோற்றுஞ் சோதி மரகதக் கவச மிட்டு.

[செஞ்சுடர் எறிக்கும் செம்பொன் செழுமணி மகுடம் நீக்கிக்
குஞ்சிபூந் தொடையில் சூழ்ந்து குலவிட விசித்துக் கூர்மை
விஞ்சிய சுரிகைசேர்த்து வெறுக்கையின் அமைத்த பச்சை
மஞ்(சு)எனத் தோற்றும் சோதி மரகதக் கவசம் இட்டு.]

இ — ள் : செம் சுடர் எறிக்கும் செம்பொன் செழுமணி மகுடம் நீக்கி— சிவந்த ஒளியைக் கக்குகின்ற செம்பொன்னைச் செய்யப்பட்ட செழுமையாகிய இரத்தினகிரீடத்தை விலக்கி, குஞ்சி பூ தொடையில் சூழ்ந்து குலவிட விசித்து — குடுமியைப் புஷ்பமாலையினைச் சுற்றி விளங்கும்படி கட்டிக்கொண்டு, கூர்மை விஞ்சிய சுரிகை சேர்த்து — கூர்மை மிகுந்த உடைவாளை வைக்குமிடத்தில் வைத்து, வெறுக்கையின் அமைத்த — பொன்னினைச் செய்யப்பட்ட, பச்சை மஞ்சு எனத் தோற்றும் — பச்சைநிறமாகிய மேகத்தைப்போலத் தோன்றுகின்ற, சோதி மரகத கவசமிட்டு — ஒளியமைந்த மரகத இரத்தினம் பதித்துச் செய்யப்பட்ட சட்டையைத் தரித்து எ — று. (7)

கைப்புடை கட்டி வெள்ளிற் கடுங்கணைத் தூணி தூக்கி
மைப்புடை வரையுங் கண்ணுர் நுதனிகர் வரிவில் வாங்கி
மெய்ப்புடை மனங்கா லொத்து விரையுமைங் கதியிற் செல்லு
நெய்ப்புடை மேனி மேக நீனிறப் பரிமேற் கொண்டான்.

[கைப்புடை கட்டி வெள்வில் கடுங்கணைத் தூணி தூக்கி
மைப்புடை வரையும் கண்ணுர் நுதல்நிகர் வரிவில் வாங்கி
மெய்ப்புடை மனம்கால் ஒத்து விரையும் ஐங்கதியில் செல்லும்
நெய்ப்(பு)உடை மேனி மேக நீல்நிறப் பரிமேல் கொண்டான்.]

இ — ள்: கை புடை கட்டி — கைப்புட்டிலைக் கட்டிக்கொண்டு, வெள் வில் கடுங்கணை தூணி தூக்கி — முதுகின்கண்ணே கொடிய அம்பருத்தூணி யைத் தொங்கக்கட்டி, மை புடை வரையுங் கண்ணுர் நுதல் நிகர் வரிவில் வாங்கி — இமைப்பக்கங்களில் மைதீட்டிய கண்களையுடைய பெண்களது நெற்றியையொத்த வரிந்துகட்டிய வில்லைவளைத்துக்கொண்டு, மெய்ப்புடை மனம் கால் ஒத்து விரையும் ஐ கதியில் செல்லும் — உண்மையாகிய மனத் தையும் காற்றையும்போல ஒருசேர வேகம்பொருந்திய மல்லகதி மயூரகதி வியாக்கிரகதி வானரகதி விடபகதி ஆகிய பஞ்சகதிகளினுஞ் செல்லத்தக்க, நெய்ப்பு உடை மேனிமேக நீல் நிற பரிமேல் கொண்டான் — கொழுமைபொருந் திய சரீரத்தையும் முகிலையொத்த நீலநிறத்தையும் உடைய குதிரையின் மேலேறினன் எ — று. (8)

சங்கொடு படகங் கொம்பு தவிறுடி தழங்கி யார்ப்ப
வெங்கொடுங் கொலைசெய் வாளி வில்லொழி விளங்கும் வைவே
லங்கவை தரித்த தாணை யளவில சூழ மண்ணிற்
பொங்குநுண் டூளி யோரெண் புலம்புக விசும்பு போர்ப்ப.

[சங்கொடு படகங் கொம்பு தவில்துடி தழங்கி ஆர்ப்ப
வெம்கொடும் கொலைசெய் வாளி வில்ஒளி விளங்கும் கைவேல்
அங்(கு)அவை தரித்த தாணை அளவில சூழ மண்ணில்
பொங்குநுண் தூளி ஓர்எண் புலம்புக விசும்பு போர்ப்ப.]

இ — ள்: சங்கொடு படகம் கொம்பு தவில் துடி தழங்கி ஆர்ப்ப — சங் கும் ஒரு கட்பறையும் கொம்பும் தவிலும் உடுக்கும் மிக்க சத்தத்தோடு ஆர வாரிக்கவும், வெம் கொடும் கொலை செய் வாளி — மிக்க கொடிய கொலைத் தொழிலைச் செய்கின்ற அம்புகளும், வில் — வில்லும், ஒளி விளங்கும் வை வேல் — ஒளி பிரகாசிக்கின்ற கூரிய வேலும், அங்கு அவை தரித்த தாணை அளவில சூழ — ஆகிய அவ்வாயுதங்களைத் தரித்த பல சேனைகள் அங்கே சுற்றிவரவும், மண்ணில் பொங்கு நுண் தூளி — பூமியின் கண்ணே பொங்கியெழும்புகின்ற நுண்ணிய தூளியானது, ஓர் எண் புலம் புகவிசும்பு போர்ப்ப — எட்டுத் திக்குகளினுஞ் செல்லவும் ஆகாயத்தை மறைக்கவும் எ — று. (9)

பெரும்புரி வலிவார் கூந்தற் பிடியினஞ் சுமந்து செல்ல
விரும்புறு வேடர் கையில் விரைந்தெதிர் குரைக்கு ஞாளி
யிரும்புறு தொடரிற் பூட்டி யீர்த்தனர் செல்ல வல்லே
சுரும்புமிர் தொடையான் கானச் சூழல்வாய்ச் சென்று புக்கான்.

[பெரும்புரி வலி,வார் கூந்தல் பிடிஇனம் சுமந்து செல்ல
விரும்புறு வேடர்கையில் விரைந்(து) எதிர்குரைக்கும் ஞாளி
இரும்(பு)உறு தொடரில்பூட்டி ஈர்த்தனர் செல்ல வல்லே
சுரும்(பு)இமிர் தொடையான் கானச் சூழல்வாய்ச் சென்று புக்கான்.]

இ — ள் : பெரும் புரி வலே — பெரிய முறுக்கையுடைய வலேகளே, வார் கூந்தல் பிடியினம் சுமந்து செல்ல — நீண்ட கழுத்து மயிரையுடைய பெண் யானேக்கூட்டங்கள் சுமந்துசெல்லவும், விரும்புறு வேடர் கையில் விரைந்து எதிர் குரைக்கும் ஞாளி இரும்பு உறு தொடரில் பூட்டி ஈர்த்தனர் செல்ல— விரும்பப்படுகின்ற வேடர்கள் தங்கள் கையினுல் வேகமாய் எதிர்த்துக் குரைக் கின்ற நாய்களே இரும்புச்சங்கிலியிற் பூட்டி இழுத்துச்செல்லவும், சுரும்பு இமிர் தொடையான் — வண்டுகள் கீதம்பாடுகின்ற மாலேயையணிந்த பித்திர சகமகாராசன், கான சூழல்வாய் வல்லே சென்று புக்கான் — மரச்செறிவை யுடைய காட்டின்கண்ணே வேகமாய்ச்சென்று புகுந்தான் எ — று. (10)

வேறு

வலேவார்பல நிலேயாநெடு வானூடு வளேப்பார்
சிலேகோலினர் சிறுநாணெலி திசையேற விடுப்பார்
கலேமான்மரை முயனீடிய களிறேடு களிற்றின்
றலேபோயற விறன்மீளிகள் சரமாரி தொடுப்பார்.

[வலேவார்பல நிலேயாநெடு வான்ஊடு வளேப்பார்
சிலேகோலினர் சிறுநாண்ஒலி திசைஏற விடுப்பார்
கலேமான்மரை முயல்நீடிய களிறேடு களிற்றின்
தலேபோய்அற விறல்மீளிகள் சரமாரி தொடுப்பார்.]

இ — ள் : வார் பல வலே நிலேயா நெடு வானூடு வளேப்பார் — நீண்ட பல வலேகளே நிலேயாகவுயர்ந்த ஆகாயம் வரையும் வளேத்துக் கட்டுவார்கள், சிலே கோலினர் சிறு நாண் ஒலி திசை ஏற விடுப்பார் — வில்லே வளேத்துச் சிறிய நாணேதையைத் திசைகளெங்குஞ் செல்லும்படி எழுப்புவார்கள், கலே மான் மரை முயல் நீடிய களிறேடு களிற்றின் தலே போய் அற — கலேமான் மரை முயல் மிகுதியாகிய ஆண்பன்றி யானே ஆகிய இவைகளின் தலேகள் வெட்டுண்டு போகும்படி, விறல் மீளிகள் சர மாரி தொடுப்பார் — வலிய வீரர்கள் அம்புகளே மழைபோலச் சொரிவார்கள் எ — று. (11)

கொடிகொண்டிடு தருவிற்படர் கொம்பேறி விழிப்பார்
மடியுஞ்செவி வளேவாலகல் வாய்நாய்கள் விடுப்பார்
தடிகொண்டெறி தருவார்சுழல் தழலின்க லுகைப்பார்
பொடிகொண்டிடு நிலனிற்சில பொறிநின்று புதைப்பார்.

[கொடிகொண்டிடு தருவில்படர் கொம்(பு)ஏறி விழிப்பார்
மடியும்செவி வளேவால்அகல் வாய்நாய்கள் விடுப்பார்
தடிகொண்(டு)எறி தருவார்சுழல் தழலின்கல் உகைப்பார்
பொடிகொண்டிடு நிலனில்சில பொறிநின்று புதைப்பார்.]

இ — ள் : கொடி கொண்டிடு தருவில் படர் கொம்பு ஏறி விழிப்பார் — கொடிகள் படர்ந்த விருட்சங்களிலே பரந்த கொம்பர்களின்மேல் ஏறிப் பார்ப்பார்கள், மடியும் செவி வலை வால் அகல்வாய் நாய்கள் விடுப்பார் — மடிந்த செவியையும் வலைந்த வாலையும் அகன்ற வாயையுமுடைய நாய்களை ஏவுவார்கள், தடி கொண்டு எறி தருவார் — வலைதடிகொண்டு எறிவார்கள், சுழல் தழலின் கல் உகைப்பார் — சுழலுகின்ற கவண்களினால் கற்களை எறி வார்கள், பொடி கொண்டிடு நிலவில் சில பொறி நின்று புதைப்பார் — புழுதிநிறைந்த நிலத்திலே சில இயந்திரப்பொறிகளைப் புதைத்து நிற்பார் கள் எ — று. (12)

அடல்சேருழை படர்தாரியி னடிதேடினர் தொடர்வார்
மிடல்சேர்தரு மிருகாரியை விறல்வேலினி லெறிவார்
வடவாமுக வனலார்சின வலுநீடுகி ருளியத்
துடலூடுற வடிவாளிக ளுடனேவினர் விடுவார்.

[அடல்சேர் உழை படர்தாரியின் அடிதேடினர் தொடர்வார்
மிடல்சேர் தரு மிருகாரியை விறல்வேலினில் எறிவார்
வடவாமுக அனல் ஆர்சின வலுநீ(டு) உகிர் உளியத்(து)
உடல் ஊடுற வடிவாளிகள் உடன்ஏவினர் விடுவார்.]

இ — ள் : அடல் சேர் உழை படர் தாரியின் அடி தேடினர் தொடர் வார் — வலிமைமிகுந்த மான்கள் செல்லுகின்ற வழியிலே அவற்றின் அடி களைத் தேடிச் செல்லுவார்கள், மிடல் சேர் தரு மிருகாரியை விறல் வேலி னில் எறிவார் — வலிமை மிகுந்த சிங்கத்தை வலிய வேற்படைகொண்டு வீசு வார்கள், வடவா முக அனல் ஆர் சின வலு நீடு உகிர் உளியத்து உடல் ஊடுற — வடவாமுகாக்கினியையொத்த கோபத்தையும் வலிமையையும் நீண்ட நகங்களையுமுடைய கரடிகளினது உடலத்தை ஊடுருவும்படி, வடி வாளிகள் உடன் ஏவினர் விடுவார் — கூரிய அம்புகளை உடனே வேகமாய்ச் செலுத்துவார்கள் எ — று. (13)

வருமித்திரன் மரபுற்றிடு மனன்முற்றரி யலர்போர்
பொருமித்திர சகனுற்றுரு புரிவிற்றனி குனிவித்
துருமிற்றெடு கணையிற்பல மிருகத்தை யொறுத்துத்
தருமித்திற லெவரிப்புவி தனிலொப்பென நின்றான்.

[வருமித்திரன் மர(பு)உற்றிடு மனன்முன் தரியலர்போர்
பொரும்மித்திர சகன்உற்(று) ஒருபுரிவில் தனி குனிவித்(து)
உருமில்தொடு கணையில்பல மிருகத்தை ஒறுத்துத்
தரும்இத்திறல் எவர்இப்புவி தனில் ஒப்(பு)என நின்றான்.]

இ — ள்: வரு மித்திரன் மரபு உற்றிடு மன்னன் — சூரியவம்சத்தில் வந்து தோற்றிய அரசனுகிய, முன் தரியலர் போர் பொரும் மித்திரசகன் — எதிர்த்துவரும் பகைவர்களோடு யுத்தம்செய்கின்ற அம்மித்திரசகன், உற்று ஒரு புரி வில் தனி குனிவித்து — போய் ஒப்பில்லாத வரிந்துகட்டிய வில் ஒன்றை வளைத்து, உரும் இல் தொடு கணையில் பல மிருகத்தை ஒறுத்து — இடியேற்றைப் போலத் தொடுக்கப்பட்ட அம்புகளினுல் பல மிருகங்களைக் கொலைபுரிந்து, தரும் இ திறல் — பொருந்திய இந்த வலிமைக்கு, எவர் இப் புவி தனில் ஒப்பு என நின்ருன் — எவர்கள் இப்பூமியின்கண்ணே சமமுடையவர் என்று சொல்லும்படி நின்ருன் எ — று.

மன்னன் மனன் எனத்தொக்கது.

(14)

வேறு

இவ்வண்ண நெடுங்கானி லடும்வேட்டம் புரிந்திடுமவ்வெல்லை காலை மைவண்ணத் தடலரக்க ரிருவரொரு வயிற்றுதித்தோர் வந்து தோன்றிப் பைவண்ணப் பெரும்பாந்த ளேந்துலக மொருகுடைக்கீழ்ப் பாதுகாக்குஞ் செவ்வண்ணக்கதிர்வேலோனுடன்றருக்கி நெருக்கியமர் செய்கின் ருரால்.

[இவ்வண்ணம் நெடும்கானில் அடும்வேட்டம் புரிந்திடும்அவ் எல்லை கால [றிப் மைவண்ணத்(து) அடல்அரக்கர் இருவர் ஒருவயிற்(று) உதித்தோர் வந்து தோன் பைவண்ணப் பெரும்பாந்தன் ஏந்(து)உலகம் ஒருகுடைக்கீழ்ப் பாது காக்கும் செவ்வண்ணக் கதிர்வேலோன் உடன்தருக்கி நெருக்கிஅமர் செய்கின் ருரால்.]

இ — ள்: இ வண்ணம் நெடும் கானில் அடும் வேட்டம் புரிந்திடும் அவ்வெல்லை — இவ்வாருக நெடிய காட்டில் கொலைபொருந்திய வேட்டையாடும் அச்சமயத்தில், காலை மை வண்ணத்து அடல் அரக்கர் இருவர் — (கார்)காலத்து மேகத்தையொத்த கருநிறத்தையுடைய அரக்கர்களிருவர், ஒரு வயிற்று உதித்தோர் — ஒருவயிற்றிற் பிறந்தவர்கள், வந்து தோன்றி — வந்து காணப்பட்டு, பை வண்ண பெரும் பாந்தள் ஏந்து உலகம் ஒரு குடைகீழ் பாதுகாக்கும் — படத்தையுடைய அழகிய ஆதிசேடனுல் தாங்கப்படுகின்ற உலகத்தை ஒருகுடை நிழலிலமைத்துப் பரிபாலிக்கின்ற, செவ்வண்ண கதிர் வேலோன் உடன் — சிவந்த நிறத்தையுடைய ஒளிபொருந்திய வேற்படையைத் தரித்த மித்திரசக மகாராசனுடன், தருக்கி நெருக்கி அமர் செய்கின்ருர் — செருக்கடைந்து அடர்த்து யுத்தஞ் செய்கின்றனர் எ — று.

ஆல் அசை.

(15)

அந்நிலைகண் டன்னவரின் முன்னவனைத் துரந்தரச னங்கை வாளாற் சென்னிதுணித் தனன்குருதி நீரோட வாங்கதனைத் தெரிய நோக்கி யிந்நிலையில் வெலற்கரிதென் றிளையோனும் வஞ்சகங்க வியற்றி யானே பின்னிவனை வெல்வனென மீண்டோடி மனிதருருப் பெற்று வந்தான்.

[அந்நிலைகண்(டு) அன்னவரின் முன்னவனைத் துரந்(து) அரசன் அங்கை வாளால்
சென்னி துணித்தனன் குருதிநீர் ஓடஆங்(கு) அதனைத் தெரிய நோக்கி
இந்நிலையில் வெலற்(கு) அரிதென்(று)இகலோனும் வஞ்சகங்கள் இயற்றியானே
பின்இவனை வெல்வன்என மீண்(டு)ஓடி மனிதர்உருப் பெற்று வந்தான்.]

இ — ள்: அந்நிலை கண்டு—அத்தன்மையைப் பார்த்து, அன்னவனின் முன்னவனை — அவ்விருவருள் மூத்தவனை, அரசன் துரந்து — அவ்வரசன் துரந்து போய், குருதி நீர் ஓட — இரத்தநீர் பாய, அம் கை வாளால் சென்னி துணித்தனன் — அழகிய கையிலிருக்கிற வாளினற் சிரசை வெட்டினன், ஆங்கு அதனை தெரிய நோக்கி — அங்கே அதனை வெளியாய்க்கண்டு, இந்நிலையில் வெலற்கு அரிது என்று — இத்தன்மையாக இவனை வெல்லுதற்கியலாது என்று (எண்ணி), இகலோனும் — இன்ன அரக்கனும், வஞ்சகங்கள் இயற்றி யானே பின் இவனை வெல்வன் என — கபடங்கள் செய்து யானே பின்னர் இவனை வெல்லுவேனென்று (நினைத்து), மீண்டு ஓடி மனிதர் உரு பெற்று வந்தான் — புறங்கொடுத்து ஓடி மானிடவடிவங்கொண்டுவந்தான் எ — று. (16)

வந்தரசன் றன்னிருதா டொழுதெழலு மாங்கவனுன் வரவே தென்னச்
சந்தணிகுத் திரப்புயமித் திரசகனே யுனதேவல் சலிப்பி லாம
லிந்தவுட லுள்ளளவு மிழைத்திடுவா னெண்ணிவந்தே னென்ன முன்னங்
கொந்தழலி லடிசிலிடும் வாலுவர்தந் தொழிலவர்க்குக் கொடுத்தான் மன்னே.

[வந்(து) அரசன் தன்இருதாள் தொழு(து)எழலும் ஆங்(கு)அவன்உன்
வர(வு)ஏ(து) என்ன
சந்(து)அணி குத்திரப் புயமித்திர சகனே உன(து) ஏவல்
சலிப்(பு)இ லாமல்
இந்த உடல் உள்ளளவும் இழைத்திடுவான் எண்ணிவந்தேன்
என்ன முன்னம்
கொந்(து) அழலில் அடிசில் அடும் வாலுவர்தம் தொழில் அவற்குக்
கொடுத்தான் மன்னே.]

இ — ள்: வந்து அரசன் தன் இரு தாள் தொழுது எழலும் — வந்து அரசனுடைய இரண்டுபாதங்களையும் நமஸ்கரித்து எழுதலும், ஆங்கு அவன் உன் வரவு ஏது என்ன — அவ்விடத்தில் அவ்வரசன் உன்னுடைய வரவு யாது காரணம்பற்றியென்று வினவ, சந்து அணி குத்திரப்புய மித்திரசகனே — சந்தனமணிந்த மலையையொத்த புயங்களையுடைய மித்திரசகமகாராசனே, உனது ஏவல் — உமது தொண்டை, சலிப்பிலாமல் இந்த உடல் உள்ளளவும் இழைத்திடுவான் எண்ணி வந்தேன் என்ன — சோர்வில்லாமல் இவ்வுடலமிருக்கும்வரையும் செய்யும்படி நினைத்துவந்தேன் என்று கூறுதலும், முன்னம் — முன்னரே, கொந்து அழலில் அடிசில் அடும் வாலுவர்தம் தொழில் அவற்கு கொடுத்தான் — கூட்டமாகிய அக்கினியிற் போசனபதார்த்தங்களைச் சமைக்கின்ற சமையற்காரரின்தொழிலை அவனுக்கு நல்கினன் எ — று.
மன் ஓ அசைகள். (17)

வன்புலஞ்சா னனம்பயிலும் வனநீங்கி யயோத்திநகர் வந்து தாங்கும்
பின்புலஞ்செய் திரடோளான் மதயந்தி யுடன்வாழ்விற் பெருகுநாளிற்
றென்புலஞ்சென் றடைந்தபிதிர்க் கடன்கழிக்குந் திவசமுறச் சிந்தை மேவுந்
தன்புலங்கொண் டுத்தரத்திற் சாலிதவன் வரவழைத்துத் தாளிற் சூழ்ந்தே.

[வல்புல் அஞ்சானனம் பயிலும் வனம்நீங்கி அயோத்திநகர் வந்து தாங்கும்
பின்(பு)லம்செய் திரள்தோளான் மதயந்தியுடன் வாழ்வில் பெருகு நாளில்
தென்புலம்சென்(று) அடைந்தபிதிர்க் கடன்கழிக்கும் திவசம்உறச் சிந்தைமேவும்
தன்புலம் கொண்(டு) உத்தரத்தில் சாலிதவன் வரவழைத்துத் தாளில்
தாழ்ந்தே.]

இ — ள்: வன் புல் அஞ்சானனம் பயிலும் வனம் நீங்கி — வலியபுலி
ஞ்சு சிங்கங்களும் வாழ்கின்ற காட்டைவிட்டு நீங்கி, பின்பு அயோத்தி நகர்
வந்து — பின்னர் அயோத்தி நகரத்தையடைந்து, தாங்கும் உலம் செய் திரள்
தோளான் — (உலகபாரத்தைத்) தாங்குகின்ற திரண்ட கல்லியொத்த புயங்
களையுடைய மித்திரசகன், மதயந்தி உடன் வாழ்வில் பெருகுநாளில் — மத
யந்தியோடு வாழ்ந்திருக்குங் காலத்தில், தென்புலம் சென்று அடைந்த பிதிர்
கடன் கழிக்கும் திவசம் உற — (இறந்து) தென்புலத்தையடைந்த (ஆன்
மாக்களின் பொருட்டு) பிதிர் தேவதைகளுக்கு உணவு கொடுக்க வேண்டிய
தினமானது வந்துசேர, சிந்தை மேவும் தன் புலங்கொண்டு — மனத்திற்
பொருந்திய தனது எண்ணத்தினால், உத்தரத்தில் சாலிதவன்வர அழைத்து —
வடதிசைக்கண் வசிக்கின்ற அருந்ததிநாயகராகிய வசிஷ்டரை வரும்படி
அழைத்து, தாளில் தாழ்ந்து — பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எ—று.

ஏ—அசை.

(18)

ஆசனத்தி லிருத்தியபின் னருக்கியபாத் தியமுதலர்ச் சனைக ளாற்றிப்
போசனத்துக் கெழுந்தருளப் புரிதியென வருந்தவனும் போந்த போதி
னீசனெனத் தகுநிருத னடுமமுதத் தொடு தனது நினைவின் வண்ணம்
பாசனத்தின் மனிதருடற் றடியரிந்து சமைத்ததனைப் படைத்திட்டானே.

[ஆசனத்தில் இருத்தியபின் அருக்கியபாத் தியம்முதல்அர்ச் சனைகள் ஆற்றிப்
போசனத்துக்(கு) எழுந்தருளப் புரிதியென அருந்தவனும் போந்த போதில்
நீசன்எனத் தகுநிருதன் அடும்அமுதத் தொடும்தனது நினைவின் வண்ணம்
பாசனத்தில் மனிதர்உடல் தடிஅரிந்து சமைத்(து)அதனைப் படைத்திட் டானே]

இ — ள்: ஆசனத்தில் இருத்தியபின் — ஆசனத்தின்கண்ணே இருக்கச்
செய்த பின்னர், அருக்கிய பாத்தியம் முதல் அர்ச்சனைகள் ஆற்றி — அருக்
கியம் பாததீர்த்தம் முதலாகிய உபசாரங்களோடு பூசைசெய்து, போசனத்
துக்கு எழுந்தருள புரிதி என — போசனஞ் செய்தற்கு எழுந்தருளுகவென்று

வேண்டலும், அரும் தவனும் போந்த போதில் — அரிய தவத்தையுடைய வசிஷ்ட முனிவருஞ் சென்றபோது, நீசன் எனத்தகும் நிருதன் — சண்டாள னென்று சொல்லத்தக்க இயல்பையுடைய அவ்வரக்கனனவன், அடும் அமு தத்தொடு — சமைக்கப்படுகின்ற சாதத்தோடு, தனது நினவின் வண்ணம் — தன்னுடைய (வஞ்சக) எண்ணத்தின்படி, மனிதர் உடல் தடி அரிந்து சமைத்து — மனுடர்களுடைய சரீரத்தின் தசையை வெட்டிச் சமைத்து, பாசனத்தில் அதனை படைத்திட்டான் — போசன பாத்திரத்தில் அந்த நர மாமிசத்தைப் படைத்தான் எ — று.

ஏ–அசை. (19)

வண்டு படும்பசுந்துளபத் தொடையான்வெள் விடையான்முன் மலர்களுள்ளங் கொண்டுபெருந் தவமியற்றும் வசிட்டமுனி முனிவுடனிக் கொற்ற வேந்தன் றொண்டுபடு மிவனுடனிந் நரரூனிக் கலத்தினிடச் சொன்னு னென்று கண்டுகனற் பொறிகாலக் கண்ணிணைகள் சிவந்துமிகக் கனன்று நோக்கி.

[வண்டுபடும் பசுந்துளபத் தொடையான்வெள் விடையான்தாள்
மலர்கள் உள்ளம்
கொண்டு, பெரும் தவம்இயற்றும் வசிட்டமுனி முனிவுடன்இக்
கொற்ற வேந்தன்
தொண்டுபடும் இவனுடன்இந் நரர்ஊன் இக்கலத்தின்இடச்
சொன்னான் என்று
கண்டுகனற் பொறிகாலக் கண்இணைகள் சிவந்துமிகக்
கனன்று நோக்கி.]

இ — ள்: வண்டு படும் பசும் துளப தொடையான் — வண்டுகள் படி கின்ற பசுமையாகிய துளசி மாலையையணிந்த மாயவனதும், வெள் விடை யான தான் மலர்கள் உள்ளம் கொண்டு — வெள்ளிய இடப வாகனத்தை யுடைய சிவபெருமானதும் மலர்போன்ற பாதங்களை மனத்திற் சிந்தித்து, பெரும் தவம் இயற்றும் வசிட்டமுனி — பெரிய தவங்களைச் செய்கின்ற வசிஷ்ட முனிவர், முனிவுடன் — கோபத்தோடு, இக் கொற்ற வேந்தன் — இந்த வெற்றி பொருந்திய அரசனனவன், தொண்டு படும் இவனுடன் — தொண்டு செய்கின்ற இவ்வேவலனிடத்தில், இ நரர் ஊன் இ கலத்தில் இடச் சொன் னான் என்று கண்டு — இந்த நர மாமிசத்தையிப்பாத்திரத்திற் படைக்கக் கற் பித்தானென்றெண்ணி, கனல் பொறி கால கண் இணைகள் சிவந்து — அக்கி னிப் பொறிகள் சிந்தும்படி கண்களிரண்டுஞ் சிவப்பேற, மிகக்கனன்று நோக்கி — மிகவுங் கோபித்துப் பார்த்து எ — று. (20)

மறுவையவித் தொளிருமுழு மதிக்கவிகைத் தனிச்செங்கோன் மன்ன முந்நீ ரறுவையுடைப் பெருநிலத்திற் றிருவிழந்து கருநிறங்கொ ளரக்கயாக்கை

பெறுவையெனச் சபித்திடலு மனத்தழுங்கியரைக்கணத்துட் பின்புதேறித்
தெறுவையயிற் கரனுயர்மித் திரசகனு மனமதனிற் சினமீக் கொண்டே.

[மறுவைஅவித்(து) ஒளிரும் முழுமதிக் கவிகைத் தனிச்செங்கோல்
மன்ன, முந்நீர்
அறுவை உடைப் பெருநிலத்தில், திருஇழந்து கருநிறங்கொள்
அரக்க யாக்கை,
பெறுவை, எனச் சபித்திடலும் மனத்(து) அழுங்கி அரைக்கணத்துள்
பின்பு தேறித்
தெறுவைஅயில் கரன்உயர்மித் திரசகனும் மனம்அதனில்
சினமீக் கொண்டே.]

இ — ள் : மறுவை அவித்து ஒளிரும் முழு மதி கவிகை தனி செங்கோல் மன்ன — களங்கத்தை நீக்கிப் பிரகாசிக்கின்ற பூரண சந்திரனையொத்த குடையையுடைய ஒப்பில்லாத செங்கோலைக்கொண்ட அரசனே, முந்நீர் அறுவை உடை பெரு நிலத்தில் — சமுத்திரத்தை ஆடையாகவுடைய பெரிய பூமியின் கண்ணே, திரு இழந்து — செல்வமெல்லாமிழந்து, கரு நிறம் கொள் அரக்க யாக்கை — கருநிறத்தையுடைய அரக்க சரீரத்தை, பெறுவை என சபித்திடலும் — பெறக்கடவையென்று சபித்தலும், மனத்து அழுங்கி — மனத்திலே கலக்கங்கொண்டு, அரைக்கணத்துள் பின்பு தேறி — அரைக்கணப் பொழுதினுள் பின்னர் மனந்தெளிந்து, தெறு வை அயில் கரன் உயர் மித்திரசகனும் — கொலை செய்கின்ற கூரிய வேலைத் தாங்கிய கையையுடைய உயர்ந்த மித்திரசகமகாராசனும், மனம் அதனில் சினம் மீ கொண்டு — மனதிலே மிகவும் கோபங்கொண்டு எ — று.

ஏ அசை

(21)

மனுதிகளிற் பிழைத்தறியா வெனைச்சூளிட் டனையுனையும் வைவேனென்னுத்
தனுதிதழ்த்தா மரைக்கரத்துச் சலங்கொண்ட சலங்கண்டு தாழ்ந்து தேவி
தினுதிபகோத் திரமுதல்வ தேசிகனே மாசின்மறை செப்புந் தெய்வ
மெனுதினிநீ சபித்தறகா தெவரரசர் குரவரைச்சூ ளிட்டா ரென்றே.

[மனஆதிகளில் பிழைத்(து)அறியா எனைச்சூள் இட்டனை; உனையும்
வைவேன் என்னுத்,
தனு(து)இதழ்த்தா மரைக்கரத்துச் சலம்கொண்ட சலம்கண்டு,
தாழ்ந்து தேவி,
தினஆதிபகோத் திரமுதல்வ தேசிகனே, மாசில்மறை
செப்பும் தெய்வம்
எனு(து),இனிநீ சபித்தல்தகா(து) எவ்வரசர் குரவரைச்சூள்
இட்டார் என்றே.]

இ — ள் : மனுதிகளில் பிழைத்து அறியா என்னை சூள் இட்டனை — மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங்களினாலும் தவறு செய்யாத எனக்குச்

சாபங் கொடுத்தீர், (ஆதலினால்) உனையும் வைவேன் என்ன–உம்மையும் யான்சபிப்பேன் என்று, தனது இதழ் தாமரை கரத்து சலம் கொண்ட சலம் கண்டு–தன்னுடைய இதழ் விரிந்த தாமரை மலர் போன்ற கையில் தண்ணீர் அள்ளிய கோபத்தைப் பார்த்து, தேவி தாழ்ந்து — அவனது மனோவியாகிய மதயந்தி வணங்கி, தினதிப கோத்திர முதல்வ — சூரியவமிசத்திற் பிறந்த தலைவனே, தேசிகனே மாசில் மறைசெப்பும் தெய்வம் எனது — குருவே குற்றமில்லாத வேதங்களாற் சொல்லப்பட்ட தெய்வம் என்று நினையாமல், இனி நீ சபித்தல் தகா — இனிமேல் நீருஞ் சபித்தல் தக்கதன்று, எவர் அரசர் குரவரை சூள் இட்டார் என்று — எந்த அரசர் தமது குருவைச் சபித்தவர்கள் என்று கூறி எ—று.

என்னை–எனை எனத்தொக்கது. ஏ அசை. (22)

தன்மாடத் தளிரியனின் றுரைத்திடலும் பாணியிற்கொள் சாபப்பாணி
பொன்மாட வயோத்திநகர்ப் புரவலன்றன் குரைகழற்றுட் போதிற் பெய்தான்
சொன்மாட மெனக்கறுத்த தக்கணத்தந் நீர்மையினுற் சுடர்வேல் வேந்தன்
கன்மாட பாதனெனப் பேர்படைத்தா னீர்படைத்த கடற்பாரெங்கும்.

[தன்மா(டு)அத் தளிர்இயல் நின்(று) உரைத்திடலும், பாணியில்கொள்
சாபப் பாணி,
பொன்மாட அயோத்திநகர்ப் புரவலன், தன் குரைகழல்தாள்
போதில் பெய்தான்,
சொல்மாடம் எனக்கறுத்த(து) அக்கணத்து அந்நீர்மையினால்
சுடர்வேல் வேந்தன்
கன்மாட பாதன்எனப் பேர்படைத்தான் நீர்படைத்த
கடற்பார் எங்கும்.]

இ — ள் : தன் மாடு அ தளிரியல் நின்று உரைத்திடலும் — தனது பங்கத்தே மாந்தளிர்போன்ற இயல்பையுடைய அம்மனோவியானவள் நின்று கூறுதலும், பாணியில் கொள் சாப பாணி — சபிக்கும்படி தனது கையில் அள்ளிய நீரை, பொன்மாட அயோத்தி நகர் புரவலன் — பொன்னாலாகிய மண்டபங்களையுடைய அயோத்தியாபுரிக்கரசனுகிய மித்திரசகன், தன் குரைகழல் தாள் போதில் பெய்தான் — தனது ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த பாத தாமரையில் சொரிந்தனன், அ கணத்து சொல் மாடம் எனக் கறுத்தது — அப்பொழுதே கூறப்படுகின்ற உழுந்தைப்போல அவனுடைய பாதங் கறுப்படைந்தது, அ நீர்மையினால் சுடர் வேல் வேந்தன் — அத்தன்மையினால் பிரகாசம் பொருந்திய வேற்படையைத் தாங்கிய அவ்வரசன், நீர் படைத்த கடல் பார் எங்கும் — நீர் நிறைந்த சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமி எவ்விடமும், கன்மாடபாதன் என பேர் படைத்தான் — கன்மாடபாதன் என்னும் (காரணப்) பெயரை உடையவனுயினன் எ — று. (23)

வேறு

கன்றிய வெகுளி நீங்கிக் காவல னிற்ப முன்ன
ரொன்றிய தவத்தின் மேலா முறுவனுங் கோப நீங்கிப்
பின்றிய வரக்கன் செய்த பிழையிது பிழைத்தொன் றென்பா
லின்றிவன் புரிந்த தீமை யின்றென யோகிற் றேர்ந்தான்.

[கன்றிய வெகுளி நீங்கிக் காவலன் நிற்ப முன்னர்,
ஒன்றிய தவத்தின் மேலாம் உறுவனும் கோபம் நீக்கிப்
பின்றிய அரக்கன் செய்த பிழைஇது, பிழைத்(து)ஒன்(று) என்பால்
இன்(று)இவன் புரிந்த தீமை இன்(று)என யோகில் தேர்ந்தான்.]

இ — ள்: கன்றிய வெகுளி நீங்கி காவலன் முன்னர் நிற்ப — கொதிக்கின்ற கோபமானது தவிர்ந்து கன்மாடபாதனுனவன் முன்பாக நிற்கவும், ஒன்றிய தவத்தின் மேலாம் உறுவனும் கோபம் நீங்கி — பொருந்திய தவ ஒழுக்கத்தால் மேம்பட்ட வசிட்ட முனிவரும் கோபந்தணிந்து, பின்றிய அரக்கன் செய்த பிழை இது — பின்னவனுகிய இந்த இராட்சதன் செய்த தவறு இதுவாகும், இவன் பிழைத்து என்பால் இன்று புரிந்த தீமை ஒன்று இன்று என — இவன் பிழைபட்டு எனக்கு இத்தினத்தில் செய்த தீமை ஒன்றுமில்லை யென்று, யோகில் தேர்ந்தான் — யோகத்திலறிந்தார் எ — று. (24)

விற்சர நுதற்கட் செவ்வாய் விரிதிரை யமுத மானுஞ்
சொற்சர சுவதி கேள்வன் ரேன்றல்மான் றடந்தேர் மன்னே
யற்சர ஞகிக் கானி லடைந்துசஞ் சரித்தீ ராறு
வற்சரங் காறு நிற்றி மாறுமுன் சாப மென்ரூன்.

[வில்சர நுதல்கண் செவ்வாய் விரிதிரை அமுதம் மானும்
சொல்சர சுவதி கேள்வன் தோன்றல்மான் தடந்தேர் மன்னே
அற்சரன் ஆகிக் கானில் அடைந்து சஞ்சரித்(து)ஈ ராறு
வற்சரம் காறும், நிற்றி, மாறும் உன்சாபம் என்ரூன்.]

இ — ள்: வில் நுதல் — விற்போன்ற நெற்றியையும், சர கண் — அம்பு போன்ற கூரிய கண்களையும், செவ்வாய் — சிவந்த வாயையும், விரி திரை அமுதம் மானும்சொல் — விரிந்த திரைகளைப் பொருந்திய பாற்கடலிற்ரோன்றிய அமுதத்தையொத்த சொல்லையுமுடைய, சரசுவதி கேள்வன் தோன்றல் — சரசுவதிக்கு நாயகராகிய பிரமாவின் புத்திரராகும் வசிட்டமுனிவர், மான் தடம் தேர் மன்னே — குதிரை பூட்டிய விசாலித்த தேரையுடைய அவ்வரசனைப் (பார்த்து), அற்சரன் ஆகி கானில் அடைந்து சஞ்சரித்து — அரக்கனுகிக் காட்டையடைந்து சீவித்து, ஈராறு வற்சரம் காறும் நிற்றி — பன்னிரண்டு வருடம் வரையும் நிற்கக்கடவை, மாறும் உன் சாபம் என்ரூன் — அதன்மேல் உனது சாபம் நீங்குமென்ரூர் எ — று. (25)

உளந்தனி லுணர வொண்ணு வூழ்வினை வசத்தாற் கூத்தர்
வளங்கொண்முற் கோல நீங்கி மற்றொரு கோலங் கொண்டு
துளங்கிடத் தோற்றல் போலத் தொல்லுருக் கரந்து திங்க
ளிளம்பிறைக் குழவி போலு மெயிறுடை யரக்க னுனன்.

[உளம்தனில் உணர ஒண்ணு ஊழ்வினை வசத்தால், கூத்தர்
வளம்கொள்முன் கோலம் நீங்கி, மற்றொரு கோலம் கொண்டு,
துளங்கிடத் தோற்றல் போலத், தொல்உருக் கரந்து, திங்கள்
இளம்பிறைக் குழவி போலும், எயி(று)உடை அரக்கன் ஆனன்.]

இ — ள்: உளம் தனில் உணர ஒண்ணு ஊழ்வினை வசத்தால் — மனத்தினுலறியமுடியாத ஊழ்வினையின் வலிமையினுல், கூத்தர் — கூத்தாடிகள், வளம் கொள் முன் கோலம் நீங்கி — இயல்பாயுள்ள தங்களுடைய முந்திய வேடத்தைவிட்டு, மற்று ஒரு கோலம் கொண்டு — வேறு ஒரு வேடத்தைப் பூண்டு, துளங்கிட தோற்றல் போல — விளங்கும்படி காணப்படுதல்போல, தொல் உரு கரந்து — பழைய தனது இராசவடிவம் மறைந்து, திங்கள் இளம் பிறை குழவி போலும் — மாதந்தோறும் வருகின்ற இளம் பிறைச் சந்திரனைப்போன்ற, எயிறு உடை அரக்கன் ஆனன் — வக்கிரதந்தங்களைக் கொண்ட இராட்சதனனுன் எ — று. (26)

மைக்கணத் திதழ்ப்பூங் கோதை மனைமடந் தையர்க ளெல்லாந்
தெக்கணத் தியம னென்னச் சிந்தையில் வெருக்கொண் டேகி
யக்கணத் தகன்று போனு ரருந்தவக் கிழமை பூண்ட
மெய்க் கணத் தவர்கள் சாபம் யாவரே விலக்க வல்லார்.

[மைக்கணத்(து) இதழ்ப் பூங்கோதை மனைமடந்தையர்கள் எல்லாம்,
தெக்கணத்(து) இயமன் என்னச், சிந்தையில் வெருக்கொண்(டு) ஏகி,
அக்கணத்(து) அகன்று போனுர், அருந்தவக் கிழமை பூண்ட
மெய்க்கணத் தவர்கள் சாபம், யாவரே விலக்க வல்லார்.]

இ — ள்: மை கணத்து இதழ் பூ கோதை மனை மடந்தையர்கள் எல்லாம் — மேகக் கூட்டங்களையொத்த இதழ் விரிந்த பூக்களைத்தரித்த கூந்தலையுடைய மனைவி முதலாகிய பெண்கள் யாவரும், தெக்கணத்து இயமன் என்ன சிந்தையில் வெருக்கொண்டு ஏகி — தென்புலத்தரசனுகிய யமராசனென்று மனத்திலே அச்சங்கொண்டு சென்று, அ கணத்து அகன்று போனுர் — அப்பொழுதே தூரமாயகன்று போயினர், அரும் தவ கிழமை பூண்ட மெய் கணத்தவர்கள் சாபம் — அருமையாகிய தவ ஒழுக்கத்தைப் பொருந்திய உண்மையையுடைய முனிவர்களது சாபத்தை, யாவரே விலக்க வல்லார் — யார் தாம் நீக்குதற்கு வல்லவர் எ — று. (27)

வேறு

வடிக்குரன் மணியா ழிசைமுரன் றறுகால்
வரிச்சுரும் பரற்றுபூ மாலைக்
கடிக்குரன் மடவார் பாற்கடற் றிரையின்
கற்றைவெண் கவரிகா லசைப்ப
விடிக்குரன் மடங்கல் சுமந்த பேரணையி
லிருந்தர சியற்றிய விறைவ
னடிக்குர னிகராங் கரிகொடு வரிசே
ரடவியி னக்கணத் தடைந்தான்.

[வடிக்குரல் மணியாழ் இசைமுரன்று, அறுகால்
வரிச்சுரும்(பு) அரற்றுபூ மாலைக்
கடிக்குரல் மடவார், பாற்கடல் திரையின்
கற்றைவெண் கவரிகால் அசைப்ப
இடிக்குரல் மடங்கல் சுமந்தபேர் அணையில்
இருந்(து)அர(சு) இயற்றிய இறைவன்
அடிக்(கு) உரல்நிகராம் கரிகொடு வரிசேர்
அடவியின் அக்கணத்(து) அடைந்தான்.]

இ — ள்: வடி குரல் மணி யாழ் இசை முரன்று — தெளிவாகிய ஒலியையுடைய அழகிய யாழினிசைபோலச் சத்தித்து, அறுகால் வரி சுரும்பு அரற்றும் — ஆறுகால்களையுடைய வரிபொருந்திய வண்டுகள் ஆரவாரிக்கின்ற, பூ மாலை கடி குரல் மடவார் — பூமாலையையணிந்த நறுமணம் பொருந்திய கூந்தலையுடைய பெண்கள், பால் கடல் திரையின் கற்றை வெண் கவரி கால் அசைப்ப — பாற்கடலின் கண்ணுள்ள திரைபோன்ற திரளான வெள்ளிய சாமரங்களைக் காம்பிற் பிடித்து வீச, இடி குரல் மடங்கல் சுமந்த பேரணையில் இருந்து — இடி போன்ற சத்தத்தையுடைய சிங்கங்களாற்றாங்கப்பட்ட பெரிய அரசாசனத்திலிருந்து, அரசு இயற்றிய இறைவன் — இராச்சிய பரிபாலனஞ் செய்த அரசன், அடிக்கு உரல் நிகராம் கரி — கால்களுக்கு உரலே உவமிக்கப்படுகின்ற யானைகளும், கொடு வரி — புலிகளும், சேர் அடவியில் அ கணத்து அடைந்தான் — வாசஞ் செய்கின்ற காட்டை அப்பொழுதே அடைந்தனன் எ — று. (28)

பாய்கலைப் புரவிப் பவனனு மியங்காப்
பசுநிறப் புரவியந் தேரோன்
காய்கதிர் நுழையாக் காட்டிடை விலங்கின்
கணமெலாங் கொன்றுகொன் றருந்தித்

தீயவா ளரக்கன் றிரிதரு காலைத்
திருத்தகப் புதுக்கடி புரிந்த,
தூயவா ணகையுந் தொழுகுலத் துதித்த
தோன்றலு மாங்குறக் கண்டான்.

[பாய்கலைப் புரவிப் பவனனும் இயங்காப்
பசுநிறப் புரவிஅம் தேரோன்
காய்கதிர் நுழையாக் காட்டிடை விலங்கின்
கணமெலாம் கொன்று கொன்(று) அருந்தித்
தீயவாள் அரக்கன் திரிதருகாலைத்
திருத்தகப் புதுக்கடி புரிந்த
தூயவாள் நகையும் தொழுகுலத்(து) உதித்த
தோன்றலும் ஆங்(கு) உறக் கண்டான்]

இ — ள்: பாய் கலை புரவி பவனனும் இயங்கா — பாய்கின்ற மான் வாகனத்தையுடைய காற்றுஞ்செல்லப் பெறுததும், பசுநிற புரவி அம் தேரோன் — பசிய நிறக் குதிரைகள் பூட்டிய அழகமைந்த தேரையுடைய சூரியனது, காய் கதிர் நுழையா காட்டிடை — சுடுகின்ற கிரணங்களுஞ் செல்லப் பெறுததுமாகிய காட்டின்கண்ணே, விலங்கின் கணம் எலாம் கொன்று கொன்று அருந்தி — மிருகக்கூட்டங்களெல்லாவற்றையுங் கொலை செய்து கொலைசெய்து தின்று, தீய வாள் அரக்கன் திரிதரு காலை — கொடிய வாள் பொருந்திய அரக்கனவன் திரிகின்ற காலத்தில், திரு தக புது கடி புரிந்த — அழகுடனே புதிதாக விவாகஞ் செய்த, தூய வாள் நகையும் — சுத்தமாகிய ஒளி பொருந்திய பற்களையுடைய (ஓர் பிராமணப் பெண்ணும்), தொழு குலத்து உதித்த தோன்றலும் — பிராமண வம்சத்திற்றோன்றிய அவளது நாயகனும், ஆங்கு உற கண்டான் — அக்காட்டில் வருவதைக் கண்டான் எ — று. (29)

கண்டவா ளரக்க னுவகைமீ தூரக்
களித்தன ளொளிக்கதிர் மதியிற்
றுண்டவா ளெயிறு துலங்கிட நகைத்துத்
துண்ணென நண்ணியொண் ணிறப்பூ
முண்டகா சனன்றன் குலத்தில் வந்துதித்த
முனிவரன் புதல்வனைப் பற்றிக்
கொண்டவா டன்வெண் ணிணத்தடி யருந்துங்
கொள்கையிற் கொல்லுவான் றுணிந்தான்.

[கண்டவாள் அரக்கன் உவகைமீதூரக்
களித்தனள் ஒளிக்கதிர் மதியில்
தூண்டவாள் எயிறு துலங்கிட நகைத்துத்
தூண்ணென நண்ணிஒள் நிறப்பூ

முண்டக ஆசனன் தன்குலத்தில் வந்துதித்த
முனிவரன் புதல்வனைப் பற்றிக்
கொண்(டு) அவாவுடன் வெள் நிணத்தடி அருந்தும்
கொள்கையில் கொல்லுவான் துணிந்தான்.]

இ — ள் : கண்ட வாள் அரக்கன் — அவர்களின் வருகையைக் கண்ட வாட்படையையுடைய அரக்கனனவன், உவகை மீதூரக் களித்தனன் — மனத்தில் மிகவுங் களிப்படைந்து, ஒளிகதிர் மதியில் துண்ட வாள் எயிறு துலங்கிட நகைத்து — பிரகாசம்பொருந்திய கிரணங்களையுடைய பிறைச் சந்திரனைப்போன்ற ஒளியைக்கொண்ட வக்கிரதந்தங்கள் விளங்கும்படி சிரித்து, தூண் என நண்ணி — வேகமாய்ச் சென்று, ஒள் நிற பூ முண்டக ஆசனன் தன் குலத்தில் வந்து உதித்த — ஒளிபொருந்திய செந்தாமரைப் பூவாசனராகிய பிரமதேவரது குலத்தில் வந்து தோன்றிய, முனிவரன் புதல்வனை பற்றிகொண்டு — முனிவர் புத்திரனகிய அப்பிராமணனைப் பிடித்துக்கொண்டு, அவாவுடன் வெள் நிண தடி அருந்தும் கொள்கையில் கொல்லுவான் துணிந்தான் — ஆசையோடு வெள்ளிய நிணநீர்பாய்கின்ற மாமிசத்தை யுண்ணவேண்டுமென்ற எண்ணத்தோடு கொலைசெய்யத் துணிந்தான் என — று.

(30)

அன்னகா லையிலங் கவன்முக நோக்கி
யந்தண னருந்துணைத் தேவி
மன்னகேள் சால கடங்கடர் மரபில்
வந்தனை யல்லைநீ முனிந்து
முன்னமே யிவனைக் கொல்லுவை யாயின்
முளிதரு விறகுதீ மூட்டி
யென்ன தாருயிரு மிறப்பனின் றெனக்கோ
ருயிர்ப்பலி யீதியென் றிரங்கி.

[அன்ன காலையில் அங்(கு) அவன் முகம் நோக்கி
அந்தணன் அருந்துணைத் தேவி
மன்னகேள் சால கடங்கடர் மரபில்
வந்தனை அல்லைநீ முனிந்து
முன்னமே இவனைக் கொல்லுவை ஆயின்
முளிதரு விறகுதீ மூட்டி
என்ன(து) ஆருயிரும் இறப்பன் இன்(று) எனக்(கு) ஓர்
உயிர்ப்பலி ஈதி என்(று) இரங்கி.]

இ — ள் : அன்ன காலையில் அங்கு அவன் முகம் நோக்கி — அச்சமையத்தில் அந்தக்கன்மாட பாதனின் முகத்தைப் பார்த்து, அந்தணன் அருந்துணை

தேவி — அப்பிராமணனது அரிய துணையாகிய நாயகியானவள், மன்னகேள் — மகாராசனே கேட்கக்கடவை, நீ சால கடுங்கடர் மரபில் வந்தனை அல்லை — நீ அரக்க வமிசத்திற் பிறந்தவனல்ல, முனிந்து முன்னமே இவனை கொல்லுவை ஆயின் — கோபங்கொண்டு முன்னரே (எனது நாயகராகிய) இவரைக் கொல்லுவாயாகில், முளி தரு விறகு தீ மூட்டி — காய்ந்த விறகுகளைக் கொண்டு அக்கினியை வளர்த்து, இன்று என்னது ஆர் உயிரும் இறப்பன் — (இப்பொழுதே) எனது அரிய உயிரையும் விட்டிறப்பேன், (ஆதலினால்) எனக்கு ஓர் உயிர் பலி ஈதி என்று இரங்கி — எனக்கு ஒரு உயிர்ப்பிச்சை கொடுக்கக்கடவையென்று மனங்கலங்கி எ — று. (31)

தன்றுணைத் தடங்க ணீர்முலைத் தடத்திற்
ருரைவிட் டொழுகநின் றிரந்தே
யன்றுரைத் திடுஞ்சொற் செவிக்கொளா னகி
யந்தணன் மைந்தனை வீரைவிற்
கொன்றுடற் குருதி பிழிந்துமுன் குடித்துக்
கொழுந்தசை கறித்தகல் வாயின்
மென்றுட னருந்திப் பைந்தொடிக் கெதிரா
வெள்ளெலும் பனைத்தையு முமிழ்ந்தான்.

[தன்துணைத் தடங்கண் நீர்முலைத் தடத்தினில்
தாரைவிட்(டு) ஒழுகநின்(று) இரந்தே
அன்(று) உரைத்திடும்சொல் செவிக்கொளான் ஆகி
அந்தணன் மைந்தனை விரைவில்
கொன்(று) உடற்குருதி பிழிந்துமுன் குடித்துக்
கொழும்தசை கறித்(து) அகலவாயின்
மென்(று) உடன்அருந்திப் பைந்தொடிக்(கு) எதிரா
வெள்ளெலும்(பு) அனைத்தையும் உமிழ்ந்தான்.]

இ — ள்: தன் துணை தடம் கண் நீர் முலை தடத்தில் தாரை விட்டு ஒழுக நின்று இரந்து — தனது இரண்டு விசாலமாகிய கண்களினின்றும் நீரானது தனங்களின்மேல் தாரையாகப் பாயும்படி நின்று யாசித்து, அன்று உரைத்திடும் சொல் — அப்பொழுது அப்பெண்ணையவள் கூறிய சொல்லை, செவி கொளான் ஆகி — செவியிலேற்றுக் கொள்ளாதவனாய், அந்தணன் மைந்தனை விரைவில் கொன்று — அப்பிராமணப் புதல்வனை வேகமாய்க்கொலை செய்து, உடல் குருதி பிழிந்து முன் குடித்து — சரீரத்தின் இரத்தத்தை முன்னரே பிழிந்து குடித்து, கொழும் தசை கறித்து — கொழுமையாகிய மாமிசத்தைக் கடித்து, அகல் வாயின் மென்று உடன் அருந்தி — அகன்ற வாயினால் அதுக்கி உடனே தின்று, பைம் தொடிக்கு எதிர் — பசிய வளையலையணிந்த அப்பெண்ணுக்கெதிரே, வெள் எலும்பு அனைத்தையும் உமிழ்ந்தான் — வெண்ணிறமாகிய எலும்புகள் எல்லாவற்றையும் கக்கினான் எ — று.

ஏ அசை. (32)

என்செய்வா ளுமிழ்ந்த வென்பெலா மடியிட்
டெடுத்தன ளெய்தியவ் வென்பை
மின்செய்தீ யதனிற் பெய்திது செய்த
வேந்தர்கோன் றன்பதி மேவிப்
பொன்செய்பூண் முலையார் முலைநலப் போகம்
புணருநா ளிறக்கவென் றுருத்து
முன்செய்தீ வினையாற் சாபமீ திட்டு
முழங்கழ லூடுபுக் கவிந்தாள்.

[என்செய்வாள் உமிழ்ந்த என்(பு) எலாம் மடிஇட்(டு)
எடுத்தனள் எய்திஅவ் என்பை
மின்செய்தி அதனில் பெய்துஇ(து) செய்த
வேந்தர்கோன் தன்பதி மேவிப்
பொன்செய்பூண் முலையார் முலைநலப் போகம்
புணருநாள் இறக்கஎன்(று) உருத்து
முன்செய்தி வினையால் சாபம் ஈ(து)இட்டு
முழங்(கு)அழல்ஊடு புக்(கு) அவிந்தாள்.]

இ — ள்: என் செய்வாள் — வேறு யாது செய்குவள், உமிழ்ந்த என்பு எலாம் எடுத்தனள் மடி இட்டு எய்தி — அவ்வரக்கனவன் கக்கிய என்புக ளெல்லாவற்றையும் எடுத்து மடியிலிட்டுக்கொண்டு நடந்து போய், அவ் என்பை — அவ்வெலும்புகளை, மின் செய் நீ அதனில் பெய்து — மின்னலைப் போலப் பிரகாசிக்கின்ற அக்கினியிலிட்டு, இது செய்த வேந்தர் கோன் தன் பதி மேவி — இச்செய்கைகளைச் செய்த அரசர்க்கரசனுகிய மித்திரசகன் தனது நகரத்தையடைந்து, பொன் செய் பூண் முலையார் முலைநல போகம் புணருநாள் — பொன்னுற் செய்த ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய பெண்களோடு தனபோகத்தையனுபவிக்குங் காலத்து, முன் செய் தீவினை யால் இறக்க என்று உருத்து சாபம் ஈது இட்டு — முன்னமே செய்த தீவினை யின் காரணத்தினால் இறந்து போகக் கடவனென்று கோபங்கொண்டு இச் சாபத்தையிட்டு, முழங்கு அழல் ஊடு புக்கு அவிந்தாள் — ஆரவாரித்தெரி கின்ற அக்கினியில் விழுந்து எரிந்தாள் எ — று. (33)

வேறு

புரமுனியும் பரமனிரு பதப்போது முப்போதும் போற்றுந் தெய்வ
வரமுனிவன் சாபமகன் றரசனிரு மருப்பொருமும் மதநால் வாய்க்குஞ்
சரமுனிவன் பிடிதிரிச ரிகடொரிந்தே யிரதுருவுந் தடங்கா னீங்கிக்
கரமுனியுங் கணையுமில்லாக் காமனென வயோத்திநகர் கடிதி லுற்றான்.

[புரமுனியும் பரமன் இரு பதப்போது, முப்போதும் போற்றும் தெய்வ
வரமுனிவன் சாபமகன்(று) அரசன், இருமருப்(பு) ஒருமும் மதம்நால் வாய்க்குஞ்

சரஞ், முனி, வன்பிடி திரிசிகள் தெரிந்தே அரிதுருவும் தடம்கான் நீங்கிக்
கரமுனியும் கணையும் இல்லாக் காமன்என அயோத்திநகர் கடிதில் உற்றான்.]

இ — ள்: புர முனியும் பரமன் இருபத போது — முப்புரங்களையுமழித்த சிவபெருமானது இரண்டு திருப்பாதங்களையும், முப்போதும் போற்றும் தெய்வ வரமுனிவன் சாபம் அகன்று — காலை உச்சி மாலையாகிய முக்காலங்களினுந் துதிக்கின்ற தெய்வத்தன்மையையுடைய வசிட்ட முனிவரது சாபம் நீங்கப் பெற்று, அரசன் — அரசனுகிய மித்திர சகன், இரு மருப்பு — இரண்டு கோடுகளையும், ஒரு மும்மதம் — ஒப்பற்ற மும்மதங்களையும், நால் வாய் குஞ்சரம் — தூங்குகின்ற வாயையுமுடைய ஆண்யானைகளும், முனி — யானைக்கன்றுகளும், வன் பிடி — வலிய பிடியானைகளும், திரி சிகள் தெரிந்து — திரிகின்ற வழி களைத்தேடி, அரி துருவும் — சிங்கங்கள் தொடருகின்ற, தடம் கான் நீங்கி — விசாலித்த காட்டை விட்டு நீங்கி, கரமுனியும் கணையும் இல்லா காமன் என — கையிற் பொருந்திய கருப்பு வில்லும் புஷ்பபாணமுமில்லாத மன்மதனைப்போல, அயோத்திநகர் கடிதில் உற்றான் — அயோத்தியாபுரியை விரைவிற் சென்று அடைந்தனன் எ — று.

ஏ அசை. (34)

நெடிதுதினம் பிரிந்தகன்ற நீர்மையினற் றிரண்டதிண்டோ ணிருபன் றானு
மடியினையா மலர்கள் கன்றிச் சேப்பூர விரைந்து நடந்தன்பி னேடும்
பிடியதனே நாடிவரும் பெருந்தடக்கைக் களிறெனவேள் பெய்யும் வெய்ய
வடியயில்வா ளியினுடைந்து வருந்தியந்த மதயந்தி மனையுட்புக்கான்.

[நெடிதுதினம் பிரிந்(து) அகன்ற நீர்மையினல்
திரண்டதிண்தோள் நிருபன் தானும்
அடியினையாம் மலர்கள் கன்றிச் சேப்(பு) ஊர
விரைந்(து)நடந்(து) அன்பினேடும்
பிடிஅதனே நாடிவரும் பெரும்தடக்கைக்
களி(று)என, வேள் பெய்யும் வெய்ய
வடிஅயில் வாளியின் உடைந்து வருந்தி அந்த
மதயந்தி மனையுள் புக்கான்.]

இ — ள்: நெடிது தினம் பிரிந்து அகன்ற நீர்மையினல் — நெடுநாளாக நீங்கிப் பிரிந்திருந்த தன்மையினல், திரண்ட திண் தோள் நிருபன் தானும் — திரண்ட வலிய தோள்களையுடைய அவ்வரசனும், அடி இணையாம் மலர்கள் கன்றி சேப்பூர — பாதங்களாகிய இரண்டு மலர்களும் கன்றுதலடைந்து செந்நிறங் கொள்ள, விரைந்து நடந்து — வேகமாய் நடந்து சென்று, அன்பினேடும் பிடி அதனே நாடிவரும் பெரும் தடக்கை களிறென — அன்போடு பெண் யானையைத் தேடி வருகின்ற பெரிய துதிக்கையையுடைய ஆண் யானையைப் போல, வேள் பெய்யும் வெய்ய வடி அயில் வாளியின் உடைந்து — மன்மத

னலே செலுத்தப்படுகின்ற கொடிய மிகக்கூரிய அம்புகளினால் மனமழிந்து, வருந்தி அந்த மதயந்தி மனையுள் புக்கான் — துன்புற்று தனது மனைவியாகிய மதயந்தியுடைய மாளிகையிற் பிரவேசித்தான் எ — று. (35)

வந்தவடன் றுணைமுலைகண் மருவுவான் றுணிந்திடலு மன்னகானி
லந்தநிசி சரனுகி முனிவனைக்கொன் றனையதனு லவன்றன் றேவி
வெந்தழலின் மிகச்சீறி யுன்மனைவி மார்முதலா விளம்பு மாதர்
தந்தனமீ துறத்தழுவி லிறத்தியெனக் கொடுஞ்சாபஞ் சாற்றி வீந்தாள்.

[வந்(து) அவள்தன் துணைமுலைகள் மருவுவான் துணிந்திடலும் மன்ன, கானில்
அந்தநிசி சரன்ஆகி முனிவனைக்கொன் றனை, அதனால் அவன்தன் தேவி
வெந்தழலின் மிகச்சீறி உன்மனைவி மார்முதலா விளம்பு மாதர்
தம்தனம் மீ(து)உறத்தழுவில் இறத்தினைக் கொடும்சாபம் சாற்றி வீந்தாள்.]

இ — ள்: வந்து அவள் தன் துணை முலைகள் மருவுவான் துணிந்திடலும் — அங்ஙனம் வந்து அவளது இரண்டு தனங்களையும் தழுவும்படி துணிதலும் மன்ன — மகாராசனே, கானில் அந்த நிசிசரன் ஆகி முனிவனைக் கொன்றனை — காட்டில் அந்த அரக்கனாகி (இருந்த காலத்தில்) ஒரு பிராமணனைக் கொலை செய்தாய், அதனால் — அதனாலே, அவன் தன தேவி வெந் தழலின் மிகச் சீறி — அவனுடைய மனைவியானவள் கொடிய அக்கினியிலும் பார்க்க அதிக கோபங் கொண்டு, உன் மனைவிமார் முதலா விளம்பும் மாதர் தம் தனமீது உறத் தழுவில் — உனது மனைவியர் முதலாகக் கூறப்படுகின்ற பெண்களது தனங்களின் மேல் பொருந்தத் தழுவையாயின், இறத்தி என கொடும் சாபம் சாற்றி வீந்தாள் — இறக்கக்கடவையென்று கொடிய சாபஞ்சொல்லி இறந்தாள் எ — று. (36)

ஆதலினு லெனையணைதற் கடாதுனக்கென் றவள்கூற வரசன் மோகக்
காதலினு லிடைந்து செம்பொற் கலத்தமுதம் பெற்றருந்தக் கடனி லான்போ
னேதகவுற் றில்லமிலாற் கருமகப்ப றில்லையுவை நுனித்து நோக்கிற்
சாதகருக் கிகபரத்திற் பலன்கிடையா தெனத்தேறித் தலமீக் கொண்டே.

[ஆதலினால் எனை அணைதற்(கு) அடா(து) உனக்(கு) என்(று)
அவள்கூற அரசன் மோகக்
காதலினால் இடைந்து செம்பொன்கலத்(து) அமுதம்
பெற்(று)அருந்தக் கடன்இலான்போல்
நோதக(வு) உற்(று) இல்லம் இலாற்(கு) அருமகப் பே(று)
இல்லைஉலை நுனித்து நோக்கில்
சாதகருக்(கு) இகபரத்தில் பலன்கிடையா(து)
எனத்தேறித் தலம்மீ கொண்டே.]

இ — ள்: ஆதலினுல் எனை அணைதற்கு அடாது உனக்கு என்று அவள் கூற — அக்காரணத்தால் என்னோடு கூடிச் சையோகிப்பது உமக்குத் தகா தென்று அம்மதயந்தியானவள் சொல்லவும், அரசன் மோக காதலினுல் இடைந்து — அவ்வரசனுனவன் விகார ஆசையினுல் மிகவும் வாட்டமடைந்து, செம் பொன் கலத்து அமுதம் பெற்று அருந்த கடன் இலான் போல் நோத கவு உற்று — சிவந்த பொன்னினுற் செய்யப்பட்ட கலசத்தில் அமுதத்தைப் பெற்றும் அதனை உண்ணுதற்குக் கடனில்லாதவனைப்போலத் துன்பமடைந்து, இல்லம் இலாற்கு அருமசப் பேறு இல்லை — மனையியில்லாதவர்களுக்கு அரிய புத்திரப் பேறு இல்லை, உலை நுனித்து நோக்கில் — இதனை ஆராய்ந்து பார்க் கில், சாதகருக்கு இகபரத்தில் பலன் கிடையாது என தேறி — கொலஞ ருக்கு இம்மை மறுமைப் பலன்கள் கிடையாது என்று மனத்திற் றெளிவடைந்து, தலம் மீ கொண்டு — மேலாகிய ஒரு புண்ணிய தலத்தை யிடமாகக் கொண்டு எ — று. (37)

ஒருமனமா யிருவினையின் றுவக்கறமுக் குறும்பெறிந்திட்டு யர்நால் வேதந்
தருபொருளா யைந்தவித்தைந் தழலுப்ப ணின்று பெருந் தவங்க ளாற்றிக்
கருதருமா மறலிவலி கடந்துமுக்கா லமுமுணர்ந்து கணிக்க வல்ல
பொருவருமா முனிவரர்க ளனுமதிகொண் டரியதவம் புரியு மேல்வை.

[ஒருமனமாய் இருவினையின் துவக்(கு)அற முக்குறும்(பு) எறிந்திட்(டு)
உயர்நால் வேதம்
தருபொருள்ஆய் ஐந்(து)அவித்(து) ஐந்தழல் நாப்பண் நின்றுபெரும்
தவங்கள் ஆற்றிக்
கருதரும்மா மறலிவலிகடந்து முக்காலமும் உணர்ந்து
கணிக்க வல்ல
பொருஅருமா முனிவரர்கள் அனுமதி கொண்(டு)
அரியதவம் புரியும் ஏல்வை.]

இ — ள்: ஒரு மனமாய் — ஒரேசிந்தையையுடையவனுய், இருவினையின் துவக்கு அற முக்குறும்பு எறிந்திட்டு — நல்வினை தீவினைகளின் தொடர்பு அறும்படி காமம் வெகுளி மயக்கமாகிய முக்குறும்புகளையும் நீக்கி, உயர் நால் வேதம் தரு பொருள் ஆய் — உயர்வாகிய நான்கு வேதங்களினதும் உட்பொருளை ஆராய்ந்து, ஐந்து அவித்து — பஞ்சப்புலன்களையுமடக்கி, ஐ தழல் நாப்பண் நின்று பெரும் தவங்கள் ஆற்றி — பஞ்சாக்கினி மத்தியில் நின்று பெரிய தவங்களைச்செய்து, கருதரும் மா மறலி வலி கடந்து — நினைத்தற்கரிய பெரிய யமனது (இறப்பு என்னும்) வலியையுங் கடந்து, முக்காலமும் உணர்ந்து — செல்காலம் நிகழ்காலம் வருங்காலமாகிய முக் காலங்களையுமறிந்து, கணிக்கவல்ல பொரு அரு மா முனிவர்கள் அனுமதி கொண்டு — மதிக்கத்தக்க வலிமையையுடைய ஒப்பற்ற மகத்தாகிய முனிவர் களது அனுமதியைக்கொண்டு, அரிய தவம் புரியும் ஏல்வை — அருமையாகிய தவங்களைச் செய்கின்ற காலத்தில் எ — று. (38)

வேறு

கறைவிட முகுத்தல் போலக் காய்சின மிகுத்து வானிற்
பிறையெயி றிலங்கப் பேழ்வாய்ப் பேய்மக ளொருத்தி பற்றீ
யிறைவனே வருத்த வீதிங் கென்னெனப் பன்னு தொன்னூன்
முறைதெரிந் தருளுந் தெய்வ முனிவரை வினவி னனே.

[கறைவிடம் உகுத்தல்போலக் காய்சினம் மிகுத்து வானில்
பிறையெயி(று) இலங்கப் பேழ்வாய்ப் பேய்மகள் ஒருத்தி பற்றி
இறைவனே வருத்த ஈ(து)இங்(கு) என்னெனப் பன்னு தொல்நூல்
முறைதெரிந்(து) அருளும் தெய்வ முனிவரை வினவினனே.]

இ — ள்: கறை விடம் உகுத்தல் போல காய் சினம் மிகுத்து — கரிய நஞ்சைக் கக்கினாற்போலக் கொதிக்கின்ற கோபமதிகரித்து, வானில் பிறை எயிறு இலங்க — ஆகாயத்தின் கண்ணேயுள்ள பிறைச் சந்திரனேப்போன்ற வக்கிரதந்தங்கள் பிரகாசிக்க, பேழ்வாய் பேய் மகள் ஒருத்தி — பிளர்ந்த வாயையுடைய ஒரு பேய்ப் பெண்ணனவள், இறைவனேப் பற்றி வருத்த — அரசனேப் பிடித்து வருத்துதல் செய்யவும், இங்கு ஈது என் எனை — இவ்விடத்து என்னே வருத்துவது என்னேயென்று, பன்னு தொல் நூல்முறை தெரிந்து அருளும் தெய்வமுனிவரை வினவினன் — கூறப்படுகின்ற பழமையாகிய சாத்திரங்களேயறிந்து அனுக்கிரகிக்கின்ற தெய்வத் தன்மையையுடைய முனிவர் களே வினவினன் எ — று.

ஏ — அசை. (39)

கணித்துமுக் காலந் தேருங் கடவுண்மா முனிவர் துத்திப்
பணித்தலேக் கிடந்த ஞாலம் பரித்தரு ளரசே முன்னட்
குணித்தவா ளரக்க னாகிக் கோதில் வேதியனேக் கொன்று
பிணித்தவெம் பாவங் கண்டா யலகையாய்ப் பிணித்த தென்றூர்.

[கணித்துமுக் காலம் தேரும் கடவுள்மா முனிவர் துத்திப்
பணித்தலேக் கிடந்த ஞாலம் பரித்(து)அருள் அரசே முன்நாள்
குணித்தவாள் அரக்கன் ஆகிக் கோதில் வேதியனேக் கொன்று
பிணித்தவெம் பாவம் கண்டாய் அலகையாய்ப் பிணித்த(து) என்றூர்.]

இ — ள்: கணித்து முக்காலம் தேரும் கடவுள் மா முனிவர் — அளவு படுத்தி முக்காலங்களேயுமறிகின்ற தெய்வத்தன்மையையுடைய மகத்தாகிய முனிவர்கள், துத்தி பணி தலே கிடந்த ஞாலம் பரித்து அருள் அரசே — புள்ளி களேக்கொண்ட பணமுடத்தையுடைய ஆதிசேடன் சிரமிசைத் தங்கும் பூமி யைப் பரிபாலனஞ் செய்கின்ற மகாராசனே, முன்னாள் குணித்த வாள் அரக் கன் ஆகி — முன்னாளிலே நினேக்கத் தகுந்த வாள்போருந்திய இராட்சதனும்,

கோதில் வேதியனே கொன்று பிணித்த வெம்பாவம் — குற்றமில்லாத பிராமணனைக் கொலை செய்தமையால் பற்றிய கொடிய பாவமானது, அலகையாய் பிணித்தது என்றும் — பைசாசமாக உன்னைப் பற்றிக்கொண்டது என்று கூறினார்கள் எ — று.

கண்டாய் — முன்னிலையசை. (40)

அப்பவம் தீர்ப்பா னெண்ணி யலைகடற் சேது முன்னுச்
செப்பருந் தீர்த்தம் யாவுஞ் சென்றுடன் மூழ்கி மூழ்கி
யொப்பரும் பிரமன் றன்னை யுந்தியிற் றந்த மாயன்
பைப்பணி சடையான் வைகும் பதிபல வணக்கஞ் செய்தான்.

[அப்பவம் தீர்ப்பான் எண்ணி அலைகடல் சேது முன்னுச்
செப்பரும் தீர்த்தம் யாவும் சென்(று)உடன் மூழ்கி மூழ்கி
ஒப்பரும் பிரமன் தன்னை உந்தியில் தந்த மாயன்
பைப்பணி சடையான் வைகும் பதிபல வணக்கம் செய்தான்.]

இ — ள் : அ பவம் தீர்ப்பான் எண்ணி — அந்தப் பாவத்தை நீக்கக் கருதி, அலைகடல் சேது முன்னு செப்பரும் தீர்த்தம் யாவும் — அலைபொருந்திய கடலிலுள்ள சேதுதீர்த்தம் முதலாகச் சொல்லுதற்கரிய தீர்த்தங்கள் யாவற்றிலும், சென்று உடன் மூழ்கி மூழ்கி — போயுடனே முழுகி முழுகி, ஒப்பரும் பிரமன் தன்னை உந்தியில் தந்த மாயன் — உவமையற்ற பிரமதேவனை உந்தியங்கமலத்திற் றோற்றுவித்த மகாவிஷ்ணுமூர்த்தியும், பை பணி சடையான் — படம்பொருந்திய சர்ப்பங்களையணிந்த சடையையுடைய சிவபெருமானும், வைகும் பதி பல வணக்கம் செய்தான் — எழுந்தருளியிருக்கின்ற புண்ணியதலங்கள் பலவற்றையும் வணங்கினன் எ — று. (41)

உந்துவெண் டிரைநீர் வேலி யுலகெலா முழந்து சூழ
வந்துமப் பிரம கத்தி மாறிடா திருத்த லாலே
யிந்துமண் டலம்போ யோங்கு மிஞ்சிசூழ் மிதிலை ஞாங்கர்க்
கந்துகொல் களிற்று வேந்தன் கவலையுற் றிருந்த காலை.

[உந்துவெண் திரைநீர் வேலி உலகெலாம் உழந்து சூழ
வந்தும், அப் பிரமகத்தி மாறிடா(து) இருத்த லாலே
இந்துமண் டலம்போய் ஓங்கும் இஞ்சிசூழ் மிதிலைஞாங்கர்க்
கந்துகொல் களிற்று வேந்தன் கவலைஉற்(று) இருந்த காலை.]

இ — ள் : உந்து வெண் திரை நீர் வேலி உலகு எலாம் — வெள்ளியதிரையெறிகின்ற கடல்சூழ்ந்த உலகமெங்கும், உழந்து சூழ வந்தும் — வருந்திச் சுற்றிவர்தும், அப்பிரமகத்தி மாறிடாது இருத்தலால் — அப்பிரமகத்தி

தோஷமானது நீங்காமலிருந்தமையால், இந்துமண்டலம் போய் ஓங்கும் இஞ்சி சூழ் மிதிலை ஞாங்கர் — சந்திரமண்டலம்வரையுஞ் சென்று உயர்ந்த மதிலாற் சூழப்பட்ட மிதிலைநகரின் பக்கத்தில், கந்து கொல் களிற்று வேந்தன் — கட்டுத்தறியை முரிக்கின்ற யானைச்சேனைகளையுடைய அரசனைவன், கவலை உற்று இருந்த காலை — மனத்தில் துன்பமடைந்து இருந்த காலத்தில் எ — று.

ஏ — அசை. (42)

மாதவர் மருங்குசூழ வளரிள மதியுஞ் சூடு
நாதனிங் கிவளு மென்ன நானில மதிக்கத் தக்கோன்
பாதபங் கயங்க ணோவப் பார்த்திவ னிருக்கும் பாங்கர்க்
கோதம னென்னு நாமக் குலமறை முனிவன் வந்தான்.

[மாதவர் மருங்கு சூழ வளர்இள மதியம் சூடும்
நாதன்இங்(கு) இவளும் என்ன நானிலம் மதிக்கத் தக்கோன்
பாதபங் கயங்கள் நோவப் பார்த்திவன் இருக்கும் பாங்கர்க்
கோதமன் என்னும் நாமக் குலமறை முனிவன் வந்தான்.]

இ — ள்: மாதவர் மருங்கு சூழ — மகத்தாகிய முனிவர்கள் பக்கத்தே சூழ்ந்துவர, வளர்இளமதியம் சூடும் நாதன் இங்கு இவளும் என்ன — வளருகின்ற இளம்பிறைச் சந்திரனையணிந்த சிவபெருமானே இவராகுமென்று கூறும்படி, நால் நிலம் மதிக்கத் தக்கோன் — விசாலமாகிய பூமி எங்கும் மதிக்கத்தக்க வரும், கோதமன் என்னும் நாம குல மறை முனிவன் — கௌதமரென்னும் பெயரையுடையவருமாகிய உயர்வுபொருந்திய வேதங்களையறிந்த முனிவரான வர், பாத பங்கயங்கள் நோவ — தாமரைமலர் போன்ற பாதங்கள் வருந்தும்படி, பார்த்திவன் இருக்கும் பாங்கர் வந்தான் — மித்திரசகமகாராச னிருக்கின்ற இடத்தின் பக்கத்தே வந்தார் எ — று. (43)

அன்றிருந் தவனைப் போற்றி யடிதொழு தங்கை கூப்பி
நின்றிடும் வடிவேற் றானை நிருபனுக் காசி கூறி
நன்றிருந் தனையோ வென்ன நவின்றுநின் முகத்தின் சோதி
குன்றிய தியாது வந்த குறையெனக் கறைதி யென்றான்.

[அன்(று)இரும் தவனைப் போற்றி அடிதொழு(து) அங்கை கூப்பி
நின்றிடும் வடிவேல் தானை நிருபனுக்(கு) ஆசி கூறி
நன்(று)இருந் தனையோ என்ன நவின்றுநின் முகத்தின் சோதி
குன்றிய(து) யாது வந்த குறைஎனக்(கு) அறைதி என்றான்.]

இ — ள் : அன்று இரும் தவனே போற்றி — அப்பொழுதே பெரிய தவத்தை யுடைய அம்முனிவரைத் துதித்து, அடி தொழுது அம் கைகூப்பி நின்றிடும் — பாதங்களே நமஸ்காரம் செய்து அழகிய கைகளிரண்டையுங் குவித்துக்கொண்டு நின்ற, வடிவேல் தானே நிருபனுக்கு — கூரிய வேற்படையைத் தாங்கிய மித்திரசகமகாராசனுக்கு, ஆசி கூறி — ஆசீர்வாதஞ் சொல்லி, நன்று இருந்தனையோ என்ன நவின்று — சவுக்கியமாகவிருக்கின்றாயா என்று வினவி, நின் முகத்தின் சோதி குன்றியது — உனது முகத்திற் பொருந்திய பிரகாசம் கெட்டுப்போனது, யாது வந்த குறை எனக்கு அறைதி என்றான் — நின்மாட்டு வந்த தாழ்வு யாது எனக்குக் கூறக்கடவை யென்றார். (44)

திருந்துதி முற்றுங் கற்றோன் றிசைமுகற் குவமை சான்றோ
னருந்ததிக் காவி யன்ன வருண்முனி யரக்க னாகி
வருந்துதி யென்னச் சாபம் வழங்கலால் வந்ததென்னுப்
பெருந்துதி கூறிப் பின்னு நிகழ்ந்தவை பேச லுற்றான்.

[திருந்துதி முற்றும் கற்றோன் திசைமுகற்(கு) உவமை சான்றோன்
அருந்ததிக்(கு) ஆவி அன்ன அருள்முனி அரக்கன் ஆகி
வருந்துதி என்னச் சாபம் வழங்கலால் வந்த(து) என்னுப்
பெரும்துதி கூறிப் பின்னும் நிகழ்ந்தவை பேச லுற்றான்.]

இ — ள் : திருந்துதி முற்றும் கற்றோன் — அழகிய வேதங்களே முற்றக் கற்றவரும், திசை முகற்கு உவமை சான்றோன் — பிரமதேவருக்கு ஒப்பானவரும், அருந்ததிக்கு ஆவி அன்ன அருள்முனி — அருந்ததிதேவிக்கு உயிரொத்த நாயகருமாகிய அருளையுடைய வசிட்டமுனிவர், அரக்கன் ஆகி வருந்துதி என்ன சாபம் வழங்கலால் — இராட்சதனாகப்போய் வருந்தக்கடவை யென்று சாபமிட்டமையால், வந்தது என்னு — இவ்வாபத்து வந்ததென்று, பெரும் துதி கூறி — பெரிய துதிகளைச் சொல்லி, பின்னும் — பின்னரும், நிகழ்ந்தவை பேச லுற்றான் — நடந்த சம்பவங்களைக் கூறினன் எ - று. (45)

அரக்கனாய் வனத்தி லன்னு ளந்தணற் கொன்ற பாவ
மிரக்கமி லலகை யாகி யிங்கெனைத் தொடர்த லாலே
பரக்கும்வெண் டிரைத்தீர்த் தங்கள் பற்பல படிந்து பொற்கோ
புரக்கவின் படைத்த கோயிற் புண்ணிய தலஞ்சே வித்தேன்.

[அரக்கன்ஆய் வனத்தில் அந்நாள் அந்தணன் கொன்ற பாவம்
இரக்கம்இல் அலகை ஆகி இங்(கு)எனைத் தொடர்தலாலே
பரக்கும்வெண் திரைத்தீர்த் தங்கள் பற்பல படிந்து பொன்கோ
புரக்கவின் படைத்த கோயில் புண்ணிய தலம்சே வித்தேன்.]

இ — ள் : அரக்கன் ஆய் வனத்தில் அந்நாள் அந்தணன் கொன்ற பாவம் — இராட்சதனுகிக் காட்டிற்சென்று அக்காலத்தில் பிராமணனைக் கொன்ற பாவமானது, இரக்கம் இல் அலகை ஆகி — இரக்கமில்லாத பிசாச வடிவங்கொண்டு, இங்கு எனை தொடர்தலால் — இவ்விடத்து என்னைத் தொடர்ந்து பற்றியமையால், பரக்கும் வெள் திரை நீர்த்தங்கள் பல்பல படிந்து — பரவிய வெள்ளிய திரைகளையுடைய பலபல தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பொன் கோபுர கவின் படைத்த கோயில் புண்ணிய தலம் சேவித்தேன் — அழகிய கோபுரச் சிறப்புகளையுடைய கோவில் பொருந்திய புண்ணியத்தலங்களில் தொண்டுகள் செய்தேன் எ — று.

ஏ — அசை.

(46)

எண்ணருந் தருமஞ் செய்தே னீறின்மந் திரநவின்றேன்
விண்ணவர்க் கவிக ணல்கும் வேள்விகள் பலவுஞ் செய்தேன்
பண்ணரும் பாவ நீங்கப் பெற்றிலேன் படிவ வுன்றன்
கண்ணருள் பெற்றே னுய்யுங் காலமு முளதா மென்றே.

[எண்அரும் தருமம் செய்தேன் ஈ(று)இல்மந் திரம்நவின்றேன்
விண்ணவர்க்(கு) அவிகள்நல்கும் வேள்விகள் பலவும் செய்தேன்
பண்ணரும் பாவம்நீங்கப் பெற்றிலேன் படிவ உன்தன்
கண்அருள் பெற்றேன் உய்யும் காலமும் உளதாம் என்றே.]

இ — ள் : எண் அரும் தருமம் செய்தேன் — அளவில்லாத தருமங்களைச் செய்தேன், ஈறில் மந்திரம் நவின்றேன் — எல்லையில்லாத மந்திரங்களைச் செபித்தேன், விண்ணவர்க்கு அவிகள் நல்கும் வேள்விகள் பலவும் செய்தேன் — தேவர்களுக்கு அவிப்பாகத்தைக் கொடுக்கின்ற அனேக யாகங்களைச் செய்தேன், பண் அரும் பாவம் நீங்க பெற்றிலேன் — செய்த அரிய பாவமானது நீங்கப்பெற்றிலேன், படிவ — முனிவரே, உன் தன் கண் அருள் பெற்றேன் — உமது கிருபாநோக்கத்தையின்று அடைந்தேன், உய்யும் காலமும் உளதாம் என்று — இனி யான் உய்ந்துபடுகின்ற நற்காலமும் உண்டு என்று கூறி எ — று.

ஏ — அசை.

(47)

அன்னமா முனிவன் றூய வடிமுடி சேர்த்தி நின்ற
மன்னவன் றன்னை நோக்கி வருந்தலை மதியஞ் சூடும்
பின்னலஞ் சடையாற் கன்பு பெருக்குநோன் புகட்குண்மேலா
யுன்னரும் விரத மொன்றுண் டுணர்ந்திலை போலு மானீ.

[அன்னமா முனிவன் தூய அடிமுடி சேர்த்தி நின்ற
மன்னவன் தன்னை நோக்கி வருந்தலை மதியம் சூடும்
பின்னல்அம் சடையாற்(கு) அன்பு பெருக்குநோன் புகட்குள் மேலாய்
உன்னரும் விரதம் ஒன்(று)உண்(டு) உணர்ந்திலை போலு மால்நீ.]

இ — ள் : அன்ன மா முனிவன் தூய அடி முடி சேர்த்தி நின்ற மன்னவன் தன்னை நோக்கி — அந்தக் கௌதம முனிவர் தம்முடைய சுத்தமாகிய பாதங்களைச் சிரசிற் சூடிநின்ற அவ்வரசனைப் பார்த்து, வருந்தலை — அரசனே நீ துன்புறுதலை நீங்குவாய், மதியம் சூடும் பின்னலம் சடையாற்கு — சந்திரனை யணிந்த முறுகிய சடையையுடைய சிவபெருமானுக்கு, அன்பு பெருக்கு நோன்புகட்குள் — அன்பை அதிகரிக்கச் செய்கின்ற விரதங்களுள், மேலாய் உன் அரும் விரதம் ஒன்று உண்டு — நினைத்தற்கரிய மேலாகிய விரதம் ஒன்று உள்ளது, நீ உணர்ந்திலை போலும் — நீயறிந்திலாய்போலும் எ — று.

ஆல் — அசை. (48)

மாகமா மதியிற் றேய்ந்த மதியிற்பன் னுன்காம் பக்கத்
தேகநா யகனைப் போற்றி யீரிரு சாமந் தோறுந்
தாகமாம் பசிக்கூண் டுஞ்ச றவிர்ந்துளத் தொருமை கூரன்
பாகமா லுரந் தன்னு லரிச்சியு னரந்தை நீங்கும்.

[மாகமா மதியில் தேய்ந்த மதியில்பன் னுன்காம் பக்கத்(து)
ஏகநா யகனைப் போற்றி ஈரிரு சாமம்தோறும்
தாகமாம் பசிக்(கு) ஊண்துஞ்சல் தவிர்ந்(து)உளத்(து) ஒருமைகூர்அன்
பாக மா லுரரம் தன்னுல் அருச்சிஉன் அரந்தை நீங்கும்.]

இ — ள் : மாக மா மதியில் தேய்ந்த மதியில்—பெருமை பொருந்திய மாசி மாதத்தில் வருகின்ற அபரபக்கத்தில், பன்னுன்காம் பக்கத்து — பதினன்காந் திதியாகிய சதுர்த்தசித் திதியில், ஏக நாயகனை போற்றி — ஒரே தலைவராகிய சிவபெருமானைத் துதித்து, ஈரிரு சாமம் தோறும்—(இரவின்) நான்கு சாமங்களிலும், தாகமாம் பசிக்கு ஊண் துஞ்சல் தவிர்ந்து — தாகம் பசி என்னுமிவற்றிற்கு உணவுகொள்ளுதலும் நித்திரையுமின்றி, உளத்து ஒருமை கூர் அன்பாக — மனத்தை ஒருவழிப்படுத்தி அன்புகொண்டு, மாலுரரம் தன்னுல் அருச்சி — வில்வபத்திரங்கொண்டு பூசிக்கக் கடவை, உன் அரந்தை நீங்கும்— உனது துன்பங்கள் யாவுமழிந்துபடும் எ — று. (49)

வரையிலக் காகத் தொட்ட வாளிக டவரு வோங்கித்
தரைமிசை யடித்த கைதான் றப்பிடா ததுபோ லீசன்
குரைகழற் பதும நோக்கிக் குறித்தநோன் பியற்றி நின்றுற்
புரையறப் பலிக்கு மென்னுப் புரவலற் குரைத்துப் பின்னும்.

[வரைஇலக் காகத் தொட்ட வாளிகள் தவரு ஓங்கித்
தரைமிசை அடித்த கைதான் தப்பிடா(து) அதுபோல் ஈசன்
குரைகழல் பதுமம் நோக்கிக் குறித்தநோன்(பு) இயற்றி நின்றுல்
புரைஅறப் பலிக்கும் என்னுப் புரவலற்(கு) உரைத்துப் பின்னும்.]

இ — ள்: வரை இலக்காக தொட்ட வாளிகள் தவறு — மலையை இலக்காகக்கொண்டு செலுத்திய பாணங்கள் அம்மலையிற்படாது தவறமாட்டா, ஓங்கி தரைமிசை அடித்த கைதான் தப்பிடாது — உயர்த்திப் பூமியிலடித்த கையானது அப்பூமியில் படுதல் தவிராது, அது போல் — அதுபோல, ஈசன் குரை கழல் பதுமம் நோக்கி குறித்த நோன்பு இயற்றி நின்றுல் — சிவபெருமானது ஒலிக்கின்ற கழலணிந்த பாத தாமரைகளைச் சிந்தித்துக் குறிக்கப்பட்ட சிவராத்திரி விரதத்தை யனுஷ்டித்து வருவாயாயின், புரை அற பவிக்கும் என்னு புரவலற்கு உரைத்து — குற்றமின்றி என்னிய கருமங்களெல்லாஞ் சபலமாகுமென்று அவ்வரசனுக்குக் கூறி, பின்னும் — பின்னரும் எ — று.

(50)

நற்றல மதனி லிந்த நவையிலா விரத நோற்கிற்
சற்றல மிகுதி நன்மை தந்திடுஞ் சுடுதி யென்னைக்
குற்றமின் முனிவன் கூறக் குறிக்குமத் தலமு மெற்கே
சொற்றரு ளைய வென்னக் கௌதமன் சொல்ல லுற்றான்.

[நல்தலம் அதனில் இந்த நவைஇலா விரதம் நோற்கில்
சற்(று)அல மிகுதி நன்மை தந்திடும் சுடுதி என்னைக்
குற்றம்இல் முனிவன் கூறக் குறிக்கும்அத் தலமும் எற்கே
சொற்றருள் ஐய என்னக் கௌதமன் சொல்லல் உற்றான்.]

இ — ள்: நல் தலம் அதனில் இந்த நவை இலா விரதம் நோற்கில் — புண்ணியதலத்திலிருந்து குற்றமற்ற இவ்விரதத்தையனுஷ்டித்தால், சற்றல மிகுதி நன்மை சுடுதி தந்திடும் என்னு — குறைவில்லாத மிக்க நன்மையைச் சிக்கிரத்திலே கொடுக்குமென்று, குற்றம் இல் முனிவன் கூற — குற்றமில்லாத அம்முனிவர் சொல்ல, குறிக்கும் அத்தலமும் எற்கே சொற்றருள் ஐய என்ன — குறிக்கப்பட்ட அப்புண்ணிய தலத்தையும் ஐயனே அடியேற்குக் கூறியருளுகவென்று வேண்டலும், கௌதமன் சொல்லல் உற்றான் — கௌதம முனிவர் கூறுவாராயினர் எ — று.

(51)

வேறு

சொன்ன தலங்களின் முன்னி வருந்திய தூயோய்நீ
யுன்ன வருங்கிரி மன்ன னளித்திடு முமைகூட
மின்னவி ரஞ்சடை முன்னவ னன்பொடு மேவுங்கோ
கன்ன மெனும்பதி யொன்றுள தங்கது காணுயால்.

[சொன்ன தலங்களில் முன்னி வருந்திய தூயோய்நீ
உன்ன வருங்கிரி மன்னன் அளித்திடும் உமைகூட
மின்அவிர் அம்சடை முன்னவன் அன்பொடு மேவும்கோ
கன்னம் எனும்பதி ஒன்(று)உள(து) அங்கது காணுவாய்.]

இ — ள் : சொன்ன தலங்களில் முன்னி வருந்திய தூயோய் நீ — சொல்லப்பட்ட புண்ணியதலங்களில் விரும்பிச்சென்று தொண்டுகள்செய்து துன்பமடைந்த பரிசுத்தனே நீ, உன்ன அரும் கிரி மன்னன் அளித்திடும் உமை கூட — நினைத்தற்கரிய மலையரசன்பெற்ற உமாதேவியாரோடு, மின் அவிர் அம் சடை முன்னவன் அன்பொடு மேவும் — மின்னல்போல வொளிவிளங்குகின்ற அழகிய சடையையுடைய தலைவராகிய சிவபெருமான் அன்போடு எழுந்தருளியிருக்கின்ற, கோகன்னம் எனும் பதி ஒன்று உளது — கோகர்ணம் என்னும் பெயரையுடைய புண்ணியதலம் ஒன்றுள்ளது, அங்கு அது காணுய்— அவ்விடத்துச்சென்று அதனைத் தரிசிக்கக்கடவை எ — று.

ஆல் — அசை. (52)

அத்தல னிற்றகை முற்று முணர்த்திட வார்வல்லார்
முத்த நகைத்திரு வுக்கிறை திக்கு முகத்தோனற்
சித்த ரியக்கர் மயக்கறு நற்றவர் சேணுடர்
நித்த மியற்று தவத்தின் முயற்சியி னிற்பாரே.

[அத்தல னின்தகை முற்றும் உணர்ந்திட ஆர்வல்லார்
முத்தநகைத் திருவுக்(கு) இறைதிக்கு முகத் தோன் நல்
சித்தர் இயக்கர் மயக்(கு)அறு நல்தவர் சேண்நாடர்
நித்தம் இயற்று தவத்தின் முயற்சியில் நிற்பாரே.]

இ — ள் : அ தலனில் தகை முற்றும் உணர்த்திட ஆர் வல்லார் — அக்கோகர்ணத்தினது பெருமைகள் முழுவதையும் அறியும்படி சொல்லவல்லவர் யாவர், முத்த நகை திருவுக்கு இறை — முத்துப்போன்ற பற்களையுடைய இலக்குமிநாயகராகிய விஷ்ணுமூர்த்தியும், திக்கு முகத்தோன் — பிரமதேவரும், நல் சித்தர் — நல்ல சித்தர்களும், இயக்கர் — இயக்கர்களும், மயக்கறு நல் தவர் — மயக்கமற்ற நல்ல தவசிரேட்டர்களும், சேண் நாடர் — சுவர்க்கவாசிகளும் ஆகிய இவர்கள், நித்தம் இயற்று தவத்தின் முயற்சியில் நிற்பார் — எந்நாளுஞ் செய்யப்படுகின்ற தவமுயற்சியோடு அங்கே நிற்பார்கள் எ — று. (53)

ஏ — அசை.

ஆடு முனிக்குழு வாயிர கோடி யரன்சீரைப்
பாடு முனிக்கண மெண்ணில சித்தி படுத்தியோகில்
கூடு முனித்திரள் பற்பல வுற்றிடு கோகன்னம்
வீடு பெறற்கினி யப்பதி யொப்புற வேறுண்டோ.

[ஆடு முனிச்குழு ஆயிர கோடி அரன்சீரைப்
பாடு முனிக்கணம் எண்ணில சித்தி படுத்தி யோகில்
கூடு முனித்திரள் பற்பல உற்றிடு கோகன்னம்
வீடு பெறற்(கு)இனி அப்பதி ஒப்புற வே(று) உண்டோ.]

இ — ள்: ஆடு முனி குழு ஆயிரகோடி — (ஆனந்தத்தினுலே) கூத்தாடுகின்ற ஆயிரக்கணக்கான முனிவர் கூட்டங்களும், அரன் சிரை பாடுமுனி கணம் எண்ணில — சிவபெருமானுடைய கீர்த்திகளைப் பாடுகின்ற அளவில்லாத முனிவர் கூட்டங்களும், சித்தி படுத்தி யோகில் கூடு முனிதிரள் பற்பல உற்றிடு — (சாதனைகளைச்) சித்திபடுத்தி யோகத்திலிருக்கின்ற முனிவர்கூட்டங்கள் பற்பலவுமுள்ள, கோகன்னம் — கோகர்ணமாகிய, அ பதி ஒப்புற வீடு பெறற்கு இனி வேறு உண்டோ — அத்தலத்திற்குச் சமமாக மோட்ச வீட்டைப் பெறுதற்கு வேறுமொரு தலமுள்ளதோ எ — று. (54)

அத்துடை மாதவர் வானவர் மானவ ராளேர்மா
சித்துடை யார்வெரு வக்கட மிக்கிடு திக்காளை
முத்துடை வால மருப்பணி மார்பின் முரித்தோன்கம்
பத்துடை யானகன் முற்பக லர்ச்சனை பணைவெண்ணி.

[அத்(து)உடை மாதவர் வானவர் மானவர் ஆளேர்மா
சித்(து) உடையார் வெருவக் கடம்மிக்கிடு திக்(கு)ஆளை
முத்(து) உடைவால மருப்(பு) அணிமார்பின் முரித்தோன்கம்
பத்(து) உடையான் அகல் முற்பகல் அர்ச்சனை பணஎண்ணி.]

இ — ள்: அத்து உடை மாதவர் — காவி வஸ்திரம் தரித்த மகாதவத்தர்களும், வானவர் — தேவர்களும், மானவர் ஆளேர் — மனுடர்களும், மா சித்து உடையார் வெருவ — பெரிய சித்திபெற்ற சித்தர்களுமஞ்சும்படி, கடம் மிக்கிடு திக்கு ஆளை முத்து உடை வால மருப்பு — மதத்தை மிகப் பொழிகின்ற அட்டதிக்கு யானைகளினது முத்துக்கள் பொருந்திய வெள்ளிய கொம்புகளை, அணி மார்பின் முரித்தோன் — அழகிய மார்பின்கண்ணே முரியும்படி செய்தவனும், கம் பத்து உடையான் — பத்துச் சிரசுகளையுடையவனுமாகிய இராவணன், அகல் முற்பகல் அர்ச்சனை பண எண்ணி — சென்ற முன்னைக்காலத்துப் பூசனைசெய்யக் கருதி எ — று. (55)

ஓர்சிவ லிங்க முறும்படி வானி லுயர்ந்தோங்கு
மேர்பெறு வெள்ளி விலங்கலி னற்றவ மேசெய்யக்
கார்பெறு கண்ட னரக்கர் குலத்திறை கைதன்னிற்
பேர்பெறு லிங்க மளித்தவ னேடிவை பேசுற்றான்.

[ஓர்சிவ லிங்கம் உறும்படி வானில் உயர்ந்(து) ஓங்கும்
ஏர்பெறு வெள்ளி விலங்கலில் நற்றவமே செய்யக்
கார்பெறு கண்டன் அரக்கர் குலத்(து)இறை கைதன்னில்
பேர்பெறு லிங்கம் அளித்(து)அவ னேடு)இவை பேசுற்றான்.]

இ — ள்: ஓர் சிவ லிங்கம் உறும்படி — ஒரு சிவலிங்கத்தைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு, வானில் உயர்ந்து ஓங்கும் ஏர்பெறு வெள்ளி விலங்கலில் — ஆகாயமட்டும் உயர்ந்து விளங்குகின்ற அழகுநிறைந்த வெள்ளியங்கைலாசத்தில், நல் தவம் செய்ய — நல்ல தவத்தைச் செய்ய, கார்பெறு கண்டன் — நீலகண்டராகிய சிவபெருமான், அரக்கர் குலத்து இறை கை தன்னில் — இராட்சத வமிசத்தாருக்கு அரசனுகிய இராவணனது கையில், பேர் பெறும் லிங்கம் அளித்து — பேர்பெற்ற ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து, அவனோடு இவை பேசுற்றன் — அவ்விராவணனுக்கு இவ்வாறு கூறியருளுவார் எ — று.

ஏ — அசை. (56)

பார்தனில் வைக்கி லெடுக்க வொணாது பகர்ந்தேமுன்
னூர்தரு மூர்தி யொழிந்தனை கைக்கொடு னூர்மேவிச்
சீர்தரு லிங்க மிதைப்பிர திட்டை செயிற் பாரி
னேர்தரு முன்னை வெலற்குரி யார்பிற ரிலையென்றே.

[பார்தன்னில் வைக்கில் எடுக்க ஒணாது பகர்ந்தேம்உன்
னூர்தரும் ஊர்தி ஒழிந்தனை கைக்கொ(டு) உன்னூர் மேவிச்
சீர்தரு லிங்கம் இதைப்பிர திட்டை செயில் பாரின்
ஏர்தரும் உன்னை வெலற்(கு) உரியார் பிறர் இலையென்றே.]

இ — ள்: பார்தனில் வைக்கில் எடுக்க ஒண்ணாது பகர்ந்தேம் — இவ்விலிங்கத்தைப் பூமியில் வைப்பையாகில் பின்பு அதனை எடுக்கவியலாது கூறினேம், உன் ஊர் தரும் ஊர்தி ஒழிந்தனை — நீ இவர்ந்து செல்லுகின்ற வாகனங்களின்றி, கை கொடு உன் ஊர் மேவி — கையிலே தாங்கிக்கொண்டு உனது நகரத்தையடைந்து, சீர்தரு லிங்கம் இதை பிரதிட்டை செயில் — சிறப்புப் பொருந்திய இவ்விலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து வைப்பாயாயின், பாரின் ஏர் தரும் உன்னை — பூமியின்கண்ணே சிறப்புப் பொருந்திய உன்னை, வெலற்கு உரியார் பிறர் இலை என்று — வெல்லக்கூடியவர்கள் வேறொருவரும் இல்லையென்று எ — று.

ஏ — அசை. ஒண்ணாது ஒணாது எனத் தொக்கது. (57)

வித்தக னேதி விடுப்ப வரக்கனும் விடைகொண்டே
சித்த முவந்து நெறிக்கொடு பார்மிசை செல்போதிற்
புத்தமு தத்தினை யற்பொடு துய்த்திடு பொன்னுடர்
மத்தக வேழ முகத்த கணேசனை வந்தித்தே.

[வித்தகன் ஓதி விடுப்ப அரக்கனும் விடை கொண்டே
சித்தம் உவந்து நெறிக்கொடு பார்மிசை செல்போதில்
புத்தமு தத்தினை அன்(பு)ஒடு துய்த்திடு பொன் நாடர்
மத்தக வேழ முகத்த கணேசனை வந்தித்தே.]

இ — ள்: வித்தகன் ஓதி விடுப்ப — அறிவுருவராகிய சிவபெருமான் இவ்வாறு கூறி விடைகொடுக்க, அரக்கனும் விடைகொண்டு — இராவணனுமுத்தரவு பெற்றுக்கொண்டு, சித்தம் உவந்து நெறி கொடு பார்மிசை செல்போதில் — மனமகிழ்ந்து செல்லும் மார்க்கமாய்ப் பூமியின் கண்ணே போகுஞ் சமயத்தில், புது அமுதத்தினை அன்பொடு துய்த்திடு பொன் நாடர் — புதிய அமுதத்தை அன்புடனே குடிக்கின்ற தேவர்கள், மத்தக வேழ முகத்தகனைசனை வந்தித்து — மத்தகத்தைப் பொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுவரக் கடவுளை வந்தனைகள் செய்து எ — று.

ஏ—இரண்டும் அசைகள். (58)

எண்டகு மீச னளித்த விலிங்க மிலங்கைக்கே
கொண்டகல் கின்றன னின்றெதிர் சென்றொரு கோள்செய்தே
தண்டரு தாண்மலர் நோவ நடந்திடை தடைசெய்ய
மண்டனி னீடிய மூடிக வாகன வருகென்றூர்.

[எண்தகும் ஈசன் அளித்த இலிங்கம் இலங்கைக்கே
கொண்(டு) அகல்கின்றனன் இன்(று)எதிர்சென்(று) ஒரு கோள்செய்தே
தண்தரு தாள்மலர்நோவ நடந்(து)இடை தடைசெய்ய
மண்தனில் நீடிய மூடிக வாகன வருகென்றூர்.]

இ — ள்: எண்தகும் ஈசன் அளித்த இலிங்கம் — மதிக்கத்தக்க சிவபெருமானளித்தருளப்பட்ட இலிங்கத்தை, இலங்கைக்கு கொண்டு அகல்கின்றனன் — (இராவணன்) இலங்காபுரிக்குக் கொண்டு செல்லுகின்றனன், இன்று எதிர் சென்று ஒரு கோள் செய்து — இப்பொழுது எதிரிற்போய் ஒரு தந்தரவுபாயஞ் செய்து, இடை தடை செய்ய — இடையிலே (கொண்டு போகாது) தடுக்கும் பொருட்டு, தண் தரு தாள் மலர் நோவ நடந்து — குளிர்ந்த மலர் போன்ற பாதங்கள் வருந்தும்படி நடந்து, நீடிய மண் தனில் மூடிக வாகன வருக என்றூர் — நீண்ட பூமியின் கண்ணே ஆகுவாகனத்தையுடைய எம்பெருமானே வந்தருளுகவென்று வேண்டினர் எ — று.

ஏ—அசை. (59)

உற்றிடு வானவர் சொற்றிட நான்மறை யோனுகி
மற்றிர டோளவ் வரக்கன் வரும்பெரு வழிதன்னி
னிற்றிட மற்றவ னுந்தனி வந்தவ ணேருற்றுன்
முற்றினி லற்பச லத்தை விடுக்க முடுக்குற்றே.

[உற்றிடு வானவர் சொற்றிட நால்மறை யோனுகி
மல்திரள் தோள்அவ் அரக்கன் வரும்பெரு வழிதன்னில்
நிற்றிட மற்(று)அவ னும்தனி வந்(து)அவண் நேர்உற்றுன்
முற்றினில் அற்பசலத்தை விடுக்க முடுக்குற்றே.]

இ — ள் : உற்றிடு வானவர் சொற்றிட — வந்த தேவர்கள் இவ்வாறு வேண்டுதல் செய்ய, நான் மறையோன் ஆகி — சதுர்வேதங்களையுமறிந்த ஒரு பிராமணனாகி, மல் திரள் தோள் அவ் அரக்கன் வரும் பெரு வழி தன்னில் நிற்றிட — மல்யுத்தஞ் செய்கின்ற திரண்ட தோள்களையுடைய அவ்விராவணன் வருகின்ற பெரிய வழியின் கண்ணே நிற்க, அவனும் தனி வந்து அவன் நேர் உற்றான் — அவ்வரக்கனுந் தனித்தவனாய் வந்து அவ்விடத்தே எதிர்ப்பட்டு, அற்ப சலத்தை விடுக்க முற்றினில் முடுக்குற்று — சிறு நீரைக் கழித்தற்கு அந்த மாகிய ஆவசியகமுடையவனாய் எ — று.

ஏ—அசை. (60)

அச்சிறு வேதிய னங்கையி லிங்க மளித்தன்னேன்
மெய்ச்சிறு நீர்விட மேவிய காலை விரைந் திங்ஙன்
முச்சொலி னின்னே விளிப்ப னதற்குமுன் முன்னுயே
லிச்சிவ லிங்க நிலத்தி லிருத்துவ னென்றானால்.

[அச்சிறு வேதியன் அம்கை இலிங்கம் அளித்(து) அன்னேன்
மெய்ச்சிறு நீர்விட மேவிய காலை விரைந்(து) இங்ஙன்
முச்சொலி நின்னே விளிப்பன் அதற்குமுன் முன்னுயேல்
இச்சிவ லிங்கம் நிலத்தில் இருத்துவன் என்றானால்.]

இ — ள் : அ சிறு வேதியன் அம் கை இலிங்கம் அளித்து — அப்பிராமணப் பிள்ளையுடைய கையிலே அச்சிவலிங்கத்தைக் கொடுத்து, அன்னேன் மெய் சிறு நீர் விட மேவிய காலை — அவ்விராவணன் தனதுடலினின்றுஞ் சிறுநீரைக் கழிக்கச் சென்ற சமயத்தில், விரைந்து இங்ஙன் முச்சொலின் நின்னே விளிப் பன் — சீக்கிரத்திலுன்னே மூன்று முறை அழைப்பேன், அதற்குமுன் முன்னு யேல் — அதற்கு முன்னரே நீ வாராதிருப்பின், இ சிவலிங்கத்தைப் பூமியில் வைத்து விடுவேனென்று கூறினர் எ — று.

ஆல்—அசை. (61)

அம்முறை யாக வரக்க னிசைந்தய லகல்போதின்
மும்முறை கூவின னெய்தில னீயிரு முடியோனு
மெம்மிறை நீதியி தென்று கணத்தவ னெய்தாமுன்
மைம்முறை யாயொளிர் கண்டனை மண்டனில் வைத்திட்டான்.

[அம்முறை யாக அரக்கன் இசைந்(து) அயல் அகல்போதில்
மும்முறை கூவினன் எய்தினன் ஐயிரு முடியோனும்
எம்இறை நீதிஇ(து) என்று கணத்(து) அவன் எய்தாமுன்
மைமுறை யாய்ஒளிர் கண்டனை மன்தனில் வைத்திட்டான்.]

இ — ள்: அம்முறையாக அரக்கன் இசைந்து அயல் அகல் போதில் — இவ்வாறு கூறியதற்கு இராவணன் சம்மதித்துப் பக்கத்தே சென்ற சமயத்தில், மும்முறை கூவினன் — (இராவணு இராவணு இராவணு என்று) மூன்று முறை அழைத்தார், ஐயிருமுடியோனும் எய்திலன் — பத்துத்தலைகளையுடைய அவ் விராவணனும் வந்தானல்லன், எம் இறை நீதி இது என்று — எமது பிதாவாகிய சிவபெருமானுடைய நீதி இத்தகைய தென்று, கணத்து அவன் எய்தாமுன் — கணப்பொழுதினுள் அவன் (அவ்விடத்திற்கு) வருதற்கு முன்னமே, மை முறையால் ஒளிர் கண்டனை — கருநிறம் முறையாக விளங்குகின்ற திருமிடற்றை யுடைய சிவலிங்கப் பெருமானை, மண்தனில் வைத்திட்டான் — பூமியில் வைத் தார் எ — று. (62)

பின்பவ் வரக்கர் பிரானவ னுற்றழல் பெய்கண்ணன்
நன்புவி யிற்சிவை யோடிய தென்று நடுக்கெய்தித்
துன்பொடு பத்திரு தோள்வலி கொண்டு தொடர்ந்தோடி
வன்பொ டெடுத்தது மாபெல மென்றுன் வலியில்லான்.

[பின்(பு)அவ் அரக்கர் பிரான்அவண்உற்(று) அழல்பெய் கண்ணன்
நல்புவியில் சிவை ஓடிய(து) என்று நடுக்(கு)எய்தித்
துன்(பு)ஒடு பத்(து)இரு தோள்வலி கொண்டு தொடர்ந்(து)ஓடி
வன்பொ(டு) எடுத்(து)இது மாபெலம் என்றுன் வலிஇல்லான்.]

இ — ள்: பின்பு அவ் அரக்கர் பிரான் அவண் உற்று — பின்னர் இராக் கதர்களுக்குத் தலைவனுகிய அவ்வீராவணன் அவ்விடத்து வந்து, அழல் பெய் கண்ணன் — அக்கினியைக் கக்குகின்ற கண்களையுடையவனுய், நல்புவியில் சிவை ஓடிய தென்று நடுக்கு எய்தி — நல்ல பூமியின் கண்ணே வேருன்றியதென்று நடுக்கங்கொண்டு, துன்பொடு — துன்பத்தோடு, பத்திருதோள் வலிகொண்டு — இருபது தோள்களின் வலிமையினுல், தொடர்ந்தோடி — வேகமாயோடிவந்து, வன்பொடு எடுத்து வலியில்லான் இது மாபெலம் என்றுன் — திடத்தோடு தூக்கி வலிமையற்றவனுய் இது மகாபெலமுடையதென்று கூறினன் எ — று. (63)

மன்னவ வாதலின் மாநில மாபெல லிங்கம்பே
ரென்ன விளம்பிய தின்னமு மீளவி லங்கைக்கோன்
பன்னக மேவுகை பற்றி யெடுக்கப் படிமீதி
னன்ன ரிலிங்க மெலிந்து நிமிர்ந்தது நைந்தங்கே.

[மன்னவ! ஆதலின் மாநிலம் மாபெல லிங்கம்பேர்
என்ன விளம்பிய(து) இன்னமும் மீள இலங்கைக்கோன்
பல்நகம் மேவுகை பற்றி எடுக்கப் படிமீதில்
நன்னர் இலிங்கம் மெலிந்து நிமிர்ந்தது நைந்துஅங்கே.]

இ — ள்: மன்னவ — அரசனே!, ஆதலின் — அக்காரணத்தால், மாநிலம் — மகத்தாகிய பூவுலகமானது, மாபெலலிங்கம் பேர் என்ன விளம்பியது— மாபெலலிங்கம் என்னும் பெயரைக் கூறியது, இலங்கைக் கோன் இன்னமும் மீள — இலங்காதிபதியாகிய இராவணன் மீட்டும் மீட்டும், பல் நகம் மேவு கைபற்றி எடுக்க — பலநகங்களைக்கொண்ட தன்கைகளாற் பிடித்துத் தூக்க, படிமீதில் நன்னர் இலிங்கம் அங்கே நைந்து மெலிந்து நிமிர்ந்தது — பூமியின் கண்ணே நன்மை பொருந்திய அவ்விலிங்கமானது அவ்விடத்து நெகிழ்ந்து மெலிவு கொண்டு நிமிர்ந்தது எ — று. (64)

ஆவி னெடுஞ்செவி போல நிமிர்ந்திடு மதனல்லூர்
நாவி னெடும்பெயர் கோகன மென்றனர் நனிகூரு
மேவி னலந்தரு வாள்விழி யம்பிகை யிடமேவுந்
தேவி னருஞ்சிவ லோக மிதென்றறி திணிதோளாய்.

[ஆவின் நெடும்செவி போலநிமிர்ந்திடும் அதனல்லூர்
நாவில் நெடும்பெயர் கோகனம் என்றனர் நனிகூரும்
ஏவின் நலம்தரு வாள்விழி அம்பிகை இடம்மேவும்
தேவின் அரும்சிவ லோகம் இ(து)ன்(று) அறி திணிதோளாய்.]

இ — ள்: ஆவின் நெடும் செவி போல நிமிர்ந்திடும் அதனல் — (அவ்விலிங்கமானது) பசுவினது நெடிய செவியைப்போல நிமிர்ந்த காரணத்தினல், ஊர் நாவின் நெடும் பெயர் கோகனம் என்றனர் — உலகிலுள்ளார் நாவினல் உயர்ந்த கோகர்ணம் என்னும் பெயரைக் கூறினர், நனி கூரும் ஏவின் நலம் தரு வாள் விழி அம்பிகை — மிகக் கூரிய அம்புபோலழகுவாய்ந்த ஒளி பொருந்திய கண்களையுடைய உமாதேவியார், இடம் மேவும் தேவின் — இடப்பாகத்தமர்ந்த சிவபெருமானது, அரும் சிவலோகம் இது என்று அறி திணி தோளாய் — அருமையாகிய சிவலோகமிதுவென்று அறியக்கடவாய் திண்ணிய தோள்களையுடையமித்திரசக மகாராசனே எ — று. (65)

வேறு

மாவின்வடு நிகர்த்தவிழி மலைமகளை யிடங்கொண்ட
தேவனருள் சிவலிங்க மெடுக்கநைந்தோன் சினங்கொண்டே
காவனைய கைத்திரளாற் கனன்றரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடி புடைத்தனன்றன் சினமிகலால்.

[மாவின்வடு நிகர்த்தவிழி மலைமகளை இடம்கொண்ட
தேவன்அருள் சிவலிங்கம் எடுக்கநைந்தோன் சினம்கொண்டே
காஅனைய கைத்திரளால் கனன்(று) அரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடி புடைத்தனன் தன் சினம் மிகலால்.]

இ — ள் : மாவின் வடு நிகர்த்த விழி மலைமகளை இடம் கொண்ட — மாவடுவையொத்த கண்களையுடைய மலையரசன் புதல்வியாகிய உமையம்மை யாரை வாமபாகத்திற்கொண்ட, தேவன் அருள் — சிவபெருமான் கொடுத் தருளிய, சிவலிங்கம் எடுக்க நைந்தோன் — சிவலிங்கத்தை எடுத்தற்கியலாது துன்பமடைந்தவனும், அரக்கன் கனன்று — இராவணன் கொதித்து, சினம் கொண்டு — கோபங் கொண்டு, கா அனைய கை திரளால் — மரச்சோலை போன்ற தனது கூட்டமாகிய கைகளினால், மறை மதலை தேவனது குடுமி முடி — பிராமணப் பிள்ளையாக நின்ற விநாயகக் கடவுளது குடுமியையுடைய சிரசில், தன் சினம் மிகலால் புடைத்தனன் — தனது கோபம் அதிகரித்தமை யாற் குட்டினன் எ — று.

ஏ அசை. (66)

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவா ரணமுகத்தோ
னடித்தலமு மணிமுடியு மகலிடமும் விசும்புமுறப்
படைத்தவுரு வெனநிமிர்ந்து பணைக்கரத்தா லிராவணனைப்
பிடித்துமணிக் கழங்கென்ன வெறிந்தெறிந்து பிடித்திடலும்.

[புடைத்தஉடன் உருத்(து)எழுந்து பொழிமத வாரணமுகத்தோன்
அடித்தலமும் மணிமுடியும் அகலிடமும் விசும்பும் உறப்
படைத்தஉரு எனநிமிர்ந்து பணைக்கரத்தால் இராவணனைப்
பிடித்து,மணிக் கழங்(கு)என்ன எறிந்(து)எறிந்து பிடித்திடலும்.]

இ — ள் : புடைத்த உடன் உருத்து எழுந்து — குட்டியவுடனே கோபங் கொண்டெழுந்து, பொழி மத வாரணமுகத்தோன் — சொரிகின்ற மதம் பொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேஸ்வரக் கடவுள், அடி தலமும் மணிமுடியும் அகலிடமும் விசும்பும் உற — திருப்பாதங்கள் விசாலமாகிய பூமி யிற் பொருந்தவும் அழகிய திருமுடியானது ஆகாயத்திற் பொருந்தவும், படைத்த உரு என நிமிர்ந்து — திருட்டித்த உருவத்தைப்போல விசுவரூபங் கொண்டு, பணை கரத்தால் இராவணனை பிடித்து — விசாலித்த கையினால் இராவணனைப் பற்றி, மணி கழங்கு என்ன எறிந்து எறிந்து பிடித்திடலும் — அழகிய பந்தைப்போல எறிந்தெறிந்து பிடிக்கவும் எ — று. (67)

மறையோனென் றுனைநினைந்த மடமையினு லிதிழைத்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தே
னிறையோனே பொறுப்பதுனக் கியல்பென்றென் றேத்துதலும்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான்.

[மறையோன்என்(று) உனைநினைந்த மடமையினுல்ஈ(து) இழைத்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தேன்
இறையோனே பொறுப்ப(து) உனக்(கு) இயல்(பு)என்(று) ஏத்துதலும்
பொறையோடும் உமைபுதல்வன் புவியில்அரக்கனை விடுத்தான்.]

இ — ள் : மறையோன் என்று உனை நினைந்த மடமையினால் ஈது இழைத்தேன் — பிராமணனென்று தேவரீரை நினைத்த அறியாமையினால் இதனைச் செய்தேன், பிறை ஒங்கு மணி மகுட பெரும் களிறே — பிறைச்சந்திரன் விளங்குகின்ற அழகிய திருமுடியையுடைய பெரிய யானை வதனத்தரே, இறையோனே — தலைவரே, பிழைசெய்தேன் — தவறியற்றினேன், பொறுப்பது உனக்கு இயல்பு என்று என்று ஏத்துதலும்— பொறுத்தருளுவது தேவரிருக்கு இயற்கையாகிய குணமேயென்று சொல்லித் துதிக்க, பொறையோடும் உமை புதல்வன் புவியில் அரக்கனை விடுத்தான் — பொறுமையுடனே உமாதேவியாரது புத்திரராகிய விநாயகக்கடவுள் பூமியில் அவ்விராவணனை விடுத்தார் எ — று. (68)

நிருதர்குலத் திகல்வேந்தே நினதுபிழை யான்பொறுத்தற்
கிருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோன் முன்கவித்த
வொருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனலோடுங்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குதித்தாடி யுவப்பித்தான்.

[நிருதர்குலத்(து) இகல்வேந்தே நினதுபிழை யான்பொறுத்தற்(கு)
இருபது செங்கரத்தாலும் எழில்மலரோன் முன்கவித்த
ஒருபதுமா முடித்தலையும் உறப்புடைத்தி எனலோடும்
குருதிநிறம் கொளப்புடைத்துக் குதித்(து)ஆடி உவப்பித்தான்.]

இ — ள் : நிருதர் குலத்து இகல் வேந்தே — அரக்கர் குலத்து வலிமை மிக்க அரசனே, நினது பிழை யான் பொறுத்தற்கு — உனது குற்றத்தை யான் பொறுப்பதற்கு, இருபது செங்கரத்தாலும் — சிவந்த இருபது கைகளினாலும், எழின் மலரோன் முன்கவித்த — அழகிய பிரமாவால் முன்னரே சூட்டப்பட்ட, மா ஒருபது முடிதலையும் — மகத்தாகிய பத்து முடிகளணிந்த சிரசுகளினும், உறபுடைத்தி எனலோடும் — தாக்கும்படி குட்டக்கடவை யென்று கூறுதலும், குருதி நிறம் கொள புடைத்து — இரத்தம் போலச் சிவப்படையும்படி குட்டி, குதித்து ஆடி உவப்பித்தான் — குதித்து விளையாடி. (அப்பெருமான்) சந்தோஷங் கொள்ளும்படி செய்தான் எ — று. (69)

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்றுமுத
லென்னருணன் னலம்வேண்டி லின்றுனைப்போ லிருகரத்தாற்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகி ழுவமென்னு
மின்னின்மறைந் தனனிருதன் வேலையிலங் கையிற்புகுந்தான்.

[அன்னதுகண்(டு) உவந்(து)அருளி ஐங்கரத்தோன் இன்றுமுதல்
என்அருள்நல் நலம்வேண்டில் இன்(று) உனைப்போல் இருகரத்தால்
சென்னிஉறப் புடைத்தவர்பால் சிந்தைமகிழுவம் என்னு
மின்னில் மறைந்தனன் நிருதன் வேலைஇலங் கையில்புகுந்தான்.]

இ — ள் : ஐங்கரத்தோன் அன்னது கண்டு உவந்து அருளி — ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுள் அந்நடனத்தைக் கண்டு சந்தோஷங் கொண்டு, இன்று முதல் என் அருள் நல் நலம் வேண்டில் — இன்று முதலாக எனது அருளாகிய நன்மையையடைய விரும்பினால், இன்று உனைபோல் இரு கரத்தால் சென்னி உற புடைத்தவர் பால் — இப்பொழுது நீ உனது சிரமி சைக் குட்டியதுபோல இரண்டு கைகளினுலுந் தமது சிரசிற் பொருந்தக் குட்டின வர்களிடத்து, சிந்தை மகிழுவம் என்னு — மனமகிழ்ச்சியடைவோமென்று கூறி, மின்னின் மறைந்தனன் — மின்னலைப்போல மறைந்தருளினர், நிருதன் — இராவணன், வேலை இலங்கையில் புகுந்தான் — சமுத்திரஞ்சூழ்ந்த இலங்கா புரியையடைந்தான் எ — று. (70)

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் திறலரக்கன்
பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகைதன் கைக்கொடுப்ப
வன்னலிங்க மைங்கரத்தோ னங்கையினு னாட்டியதா
லிந்நிலத்திற் சிவலோக மெனவிளங்கி யிருந்துளதால்.

[தென்இலங்கை இராவணன்பால் சிவன்உதவத் திறல் அரக்கன்
பின்இலங்கும் ஒருமருப்புப் பெருந்தகைதன் கைகொடுப்ப
அன்னலிங்கம் ஐங்கரத்தோன் அங்கையினுல் நாட்டியதால்
இந்நிலத்தில் சிவலோகம் எனவிளங்கி இருந்துளதால்.]

இ — ள் : தென் இலங்கை இராவணன் பால் சிவன் உதவ — தக்கண திக்கிலுள்ள இலங்காபுரிக்கரசனுகிய இராவணனிடத்துச் சிவபெருமான் கொடுத்தருள, திறல் அரக்கன் பின் இலங்கும் ஒரு மருப்பு பெரும் தகை தன் கை கொடுப்ப — வலிமைபொருந்திய அவ்விராவணன் பின்னர் விளங்கு கின்ற ஒற்றைக் கொம்பையுடைய பெருந்தகமைகொண்ட விநாயகக் கடவு ளது திருக்கரத்திற் கொடுக்க, அன்ன லிங்கம் — அந்த லிங்கமானது, ஐங் கரத்தோன் அம் கையினுல் நாட்டியதால் — அவ்விநாயகக் கடவுள் தமது அழகிய திருக்கரத்தால் நாட்டியதன்மையால், இ நிலத்தில் — இப்பூமியின் கண்ணே, சிவலோகம் என விளங்கி இருந்துளது — சிவலோகம் என்று சொல் லும்படி பிரகாசித்திருக்கின்றது எ — று. (71)

ஆல் — அசை.

வேறு

இத்தகைய கோகன்னந் தனினென்ன லொருபுலச்சி யிருகண் ணில்லாள்
சுத்தவமு தெனவெளுத்த நரைதிரைநோய் மூப்புடையாள் சுருதி போற்று
மத்தனிர வெனவுணரா ளங்கடைந்து பசிமிகுத்திட் டகடு காயச்
சித்தமதி லிரக்கமுளோர் சோறிடுமி னெனக்கெனவோர் தெருவி லுற்றாள்.

[இத்தகைய கோகன்னம் தனில்நென்னல் ஒருபுலைச்சி
இருகண் இல்லாள்
சுத்த அமு(து) என வெளுத்த நரைதிரைநோய் மூப்(பு) உடையாள்
சுருதி போற்றும்
அத்தன் இர(வு) என உணராள் அங்(கு) அடைந்து பசிமிகுத்திட்டு
அகடு காய
சித்தம் அதில் இரக்கம் உளோர் சோ(று) இடுமின் எனக்(கு) எனஓர்
தெருவில் உற்றுள்.]

இ — ள் : இத்தகைய கோகன்னந்தனில் — இவ்விதமாகிய கோகர்ணம் என்னும் ஸ்தலத்தில், நென்னல் — முற்காலத்தில், இரு கண் இல்லாள் — இரண்டு கண்களுமில்லாதவளாயும், சுத்த அமுது என வெளுத்த நரை திரை நோய் மூப்பு உடையாள் — சுத்தமாகிய பால்போல வெளிறி நரைத்துத் தோல்கள் திரைத்து நோய்கள் பீடித்து மூப்படைந்தவளாயும் (உள்ள), ஒரு புலைச்சி — ஒரு புலைப்பெண்ணானவள், சுருதி போற்றும் அத்தன் இரவு என உணராள் — வேதங்களினால்நிற்றுதிக்கப்படுகின்ற சிவபெருமானது சிவராத்திரியென்று அறியாதவளாய், அங்கு அடைந்து — அவ்விடத்திற் சென்று, பசிமிகுத்திட்டு அகடு காய — பசியானது அதிகரித்து உதரம் வரள, சித்தம் அதில் இரக்கமுளோர் எனக்கு சோறு இடுமின் என — மனத்திலிரக்கமுள்ளவர்களே எனக்குச் சோறு கொடுங்களென்று (சொல்லிக்கொண்டு), ஓர் தெருவில் உற்றுள் — ஒரு வீதியின்கண்ணேயிருந்தாள் எ — று. (72)

அத்தெருவின் றலைவருமோர் களியனிழி குலத்தவட னங்கை மீதின்
முத்தளக்கூ விளமுணவென் றிடுதலுமேற் றெறிந்தனளான் முன்னாட் டாபித்
துத்தமர்பூ சித்தபுரா தனலிங்க முடிமீதி னுளத்தன் போடும்
பத்தரிடும் பச்சிலைபோ லானதவள் பசிமிகக்கண் படைசெய்யாளாய்.

[அத்தெருவின் தலைவரும் ஓர் களியன் இழி குலத்தவன் தன்
அம்கை மீதில்
முத்தளக்கூ விளம் உண(வு)என்(று) இடுதலும் ஏற்(று) எறிந்தனளால்
முன்நாள் தாபித்(து)
உத்தமர் பூசித்த புராதன லிங்கம் முடிமீதின்
உளத்(து) அன் போடும்
பத்தர் இடும் பச்சிலைபோல் ஆன(து) அவள் பசிமிகக்கண்
படைசெய் யாள் ஆய்.]

இ — ள் : அத்தெருவின் தலைவரும் ஓர் களியன் — அவ்வீதியினிடத்தே வந்த ஒரு களியனானவன், இழிகுலத்தவள் தன் அங்கை மீதில் — இழிகுலத்தவளாகிய அப்புலைச்சியின் அகங்கையில், முத்தள கூவிளம் உணவு என்று இடுதலும் — மூவிதழ் பொருந்திய வில்வப்பத்திரத்தை உணவு என்று

கொடுக்கவும், ஏற்று எறிந்தனள் — அதனை வாங்கி (உண்ணுதற்கு உணவாக இராமையின்) எறிந்தாள், முன் நாள் தாபித்து உத்தமர் பூசித்த புராதன இலிங்க முடிமீதில் — (அவ்வில்வபத்திரமானது) பண்டைக்காலத்தில் தாபனஞ் செய்து முனிவராற் பூசிக்கப்பட்ட பழைய சிவலிங்கத்தின் முடியின்மேல், உளத்து அன்போடும் பத்தர் இடும் பச்சிலை போல் ஆனது — மனத்திலன்பு கொண்டு அடியார்களிலுலே சாத்தப்பட்ட பச்சிலைக்குச் சமானமானது, அவள் பசி மிக — அவள் பசியதிகரித்ததினால், கண்படை செய்யாளாய் — நித்திரைசெய்யாதவளாய் எ — று. (73)

இருளகல விடியுமட்டும் வருந்தியிருந் திரவியுதித் தெழுந்த பின்னத்
தெருவி னிடை யிரந்திடவோர் புலைச்சியெதிர் வழிகாட்டச் செல்லுங்காலை
மருவியநோய் பசிமூப்பு வருந்திடவெஞ் சுடுமணற்கீழ் மயங்கி வீழ்ந்தங்
கொருவியுயிர் பிரிபொழுதிற் பரமனுயர் கணங்கடமை யுற்று நோக்கி.

[இருள் அகல விடியுமட்டும் வருந்தி இருந்(து) இரவி உதித்(து)
எழுந்த பின்அத்
தெருவின் இடை இரந்திட ஓர் புலைச்சி எதிர் வழிகாட்டச்
செல்லும் காலை
மருவிய நோய் பசிமூப்பு வருத்திட வெம்சுடுமணற்கீழ்
மயங்கி வீழ்ந்(து) அங்(கு)
ஒருவி உயிர் பிரிபொழுதில் பரமன் உயர் கணங்கள் தமை
உற்று நோக்கி.]

இ — ள்: இருள் அகல விடியுமட்டும் வருந்தி இருந்து — இருட்காலம் நீங்கி விடியும்வரையும் வருத்தத்தோடிருந்து, இரவி உதித்து எழுந்தபின் — சூரியனுதயஞ்செய்த பின்னர், அ தெருவினிடை இரந்திட — அவ்வீதியிற் சென்று யாசிக்கும்படி, ஓர் புலைச்சி வழி காட்ட செல்லும் காலை — ஒரு புலைப்பெண்ணானவள் முன்னே வழிகாட்டச்சென்ற சமயத்தில், மருவிய நோய் பசி மூப்பு வருத்திட — பொருந்திய நோயும் பசியும் முதியபருவமுந் துன்புறுத்த, வெம் சுடு மணல் கீழ் மயங்கி வீழ்ந்து — வெவ்விய சுடுமணலின் கண்ணே கீழே மயங்கி விழுந்து, அங்கு உயிர் ஒருவி பிரிபொழுதில் — அவ்விடத்து உயிரானது விட்டுநீங்கும்பொழுது, பரமன் உயர் கணங்கள் தமை உற்று நோக்கி — சிவபெருமான் தமது பெருமையிற் சிறந்த கணநாதர்களை உற்றுப்பார்த்து எ — று. (74)

சீர்தருகோ கன்னத்திற் சிவநிசியி லுண்டிதுயி றீர்த்து வில்வத்
தேர்தருநற் பைந்தழைகொண் டெம்மையருச் சித்ததனை லிமைக்குஞ் செம்பொற்
றேர்தனிலப் புலைமகளை யேற்றியிங்கு வருதிரெனச் செப்ப வன்னேர்
பார்தனிலுற் றனைவருமாம் பார்த்திருக்க வங்கவளைப் பணிந்து போற்றி.

[சீர் தருகோ கன்னத்தில் சிவநியில் உண்டிதுயில்
நீர்ந்து வில்வத்(து)
ஏர்தருநல் பைந்தழை கொண்(டு) எம்மை அருச்சித்ததனால்
இமைக்கும் செம்பொன்
தேர் தனில் அப் புலிமகளோ ஏற்றி இங்கு வருதிர் எனச்
செப்ப அன்னேர்
பார்தனில் உற்(று) அனைவரும் யாம் பார்த்திருக்க அங்கவளைப்
பணிந்து போற்றி.]

இ — ள்: சீர் தரு கோகன்னத்தில் — சிறப்புப் பொருந்திய கோகர்ண மென்னும் தலத்தில், சிவ நிசியில் உண்டி துயில் நீத்து — சிவராத்திரி தினத்திலே உணவும் நித்திரையுமின்றி, வில்வத்து ஏர் தரு நல் பைம் தழை கொண்டு — வில்வமரத்தினழகு பொருந்திய நல்ல பசிய தழையைக்கொண்டு, எம்மை அருச்சித்ததனால் — எம்மைப் பூசித்தமையால், இமைக்கும் செம் பொன் தேர்தனில் — பிரகாசிக்கின்ற சிவந்த பொன்னாற்செய்த தேரின்மேல், அ புலிமகளோ ஏற்றி — அப்புலிமாதை ஏற்றிக்கொண்டு, இங்கு வருதிர் என செப்ப — இங்கு வரக்கடவீர்களென்று கூறியருள, அன்னேர் பார் தனில் உற்று — அக்கணநாதர்கள் பூமியில்வந்து, யாம் அனைவரும் பார்த்திருக்க அங்கு அவளை பணிந்து போற்றி — யாமெல்லோருங் காணும்படி அவ்விடத்து அவளை வணங்கித் துதித்து எ — று. (75)

செம்பொனெடுங் கொடிஞ்சிமணித் தேர்மீதி லிருத்திமிகுசிறப்பி னேடு
மும்பர்மட மகளிர்வெண்சா மரையிரட்டப் பைந்தருவி னுலவை யீன்ற
வம்பவிழ்பூ மழைபொழிய வளங்கெழுதுந் துபிமுழங்க மழுமா னேந்து
மெம்பரம னினிதுறையுங் களதபுத கிரியின்மிசை யேகினரே.

[செம்பொன்நெடும் கொடிஞ்சிமணித் தேர்மீதில் இருத்திமிகு
சிறப்பி னேடும்
உம்பர்மட மகளிர் வெண்சாமரை இரட்டப் பைந்தருவின்
உலவை ஈன்ற
வம்(பு) அவிழ்பூ மழைபொழிய வளம்கெழு துந்துபி முழங்க
மழுமான் ஏந்தும்
எம்பரமன் இனி(து) உறையும் களதபுத கிரியின்மிசை
ஏகி னரே.]

இ—ள்: செம்பொன் நெடும் கொடிஞ்சி மணி தேர் மீதில் இருத்தி — சிவந்த பொன்னாற் செய்யப்பட்ட நெடிய கூம்புகளையுடைய அழகிய இரதத்தின்மேலிருத்தி, மிகு சிறப்பினேடும் — மிகுந்த அலங்காரத்துடன், உம்பர் மட மகளிர் வெண் சாமரை இரட்ட — தேவரம்பைகள் வெள்ளிய சாமரங்களை வீச, பைந்தருவின் உலவை ஈன்ற — பசுமையாகிய பஞ்சதருக்களின் கிளைகளிற் பூத்த, வம்பு அவிழ் பூ மழை பொழிய — வாசனை வீசுகின்ற புஷ்பங்களை

மழைபோலச் சொரிய, வளம் கெழு துந்துபி முழங்க — வளம்பொருந்திய துந்துபி வாத்தியமாரவாரிக்க, மழுமான் ஏந்தும் எம் பரமன் இனிது உறையும் — மழுவையும் மானையும் தரித்த எமது தலைவராகிய சிவபெருமான் நன்கு வீற்றிருக்கின்ற, களதபுத கிரியின்மிசை ஏகினர் — கயிலாசமலைக்குக் கொண்டு சென்றனர் எ — று.

ஏ — அசை. (76)

ஆதலின்மித் திரசகனே நீயுமந்தக் கோகன்னத் தடைந்து போற்றித்
தீதகலுஞ் சிவநிசிநோற் றிடிலுனது வினையனைத்துந் தீரு மென்று
கோதகலும் பெருந்தவத்துக் கோதமனங் கவற்குவிடைகொடுத்துப்
ரேதமின்மா தவர்சூழ்ந்துவரம்திலை நகர்நோக்கி யேகினனால். [பின்ன

[ஆதலின்மித் திரசகனே நீயும் அந்தக் கோகன்னத்(து)
அடைந்து போற்றித்
நீ(து) அகலும் சிவநிசிநோற்றிடில் உனது வினை அனைத்தும்
தீரும் என்று
கோ(து) அகலும் பெருந்தவத்துக் கோதமன் அங்(கு) அவற்குவிடை
கொடுத்துப் பின்னர்
ஏதம்இல்மா தவர்சூழ்ந்துவர மிதிலைநகர் நோக்கி
ஏகினன் ஆல்.]

இ — ள்: ஆதலின் — ஆனதன்மையினால், மித்திரசகனே — மித்திரசக மகாராசனே, நீயும் அந்த கோகன்னத்து அடைந்து போற்றி — நீயும் அந்தக் கோகர்ணம் என்னும் தலத்தையடைந்து துதித்து, நீது அகலும் சிவ நிசி நோற்றிடில் — நிமைகளெல்லாம் அழிந்துபடுகின்ற சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பாயாயின், உனது வினை அனைத்தும் தீரும் என்று — உனது தீவினைகளெல்லாம் நீங்குமென்று (சொல்லி), கோது அகலும் பெரும் தவத்து கோதமன் — குற்றமில்லாத பெரிய தவத்தையுடைய கௌதம முனிவர், அங்கு அவற்கு விடை கொடுத்து — அவ்விடத்து அக்கன்மாடபாதராசனுக்கு உத்தரவு கொடுத்து, பின்னர் ஏதமில் மாதவர் சூழ்ந்து வர — பின்பு குற்றமில்லாத பசாதலசிரேஷ்டர்கள் சுற்றிவர, மிதிலை நகர் நோக்கி ஏகினன் — மிதிலைமாநகரத்தை நோக்கிச் சென்றார் எ — று.

ஆல் — அசை. (77)

புண்ணீரின் கடிகமழப் பொருகளத்தி லொன்னலர்தம் புயந்தோய் மின்னார்
சண்ணீர்வை சலந்தொழுகக் கலுழ்ந்தணிபொற்கலன்வாங்கக் கதிர்வேல் வாங்கி
மண்ணீரின மெறட்புரந்த மன்னவனுந் தாசமுற்று வருந்தினோர்க
ளுண்ணீர்டெற் றதுவெனைத்தன் டொழிதயர்சோ சன்னமுற்று னுவப்பி னேடும்;

[புண்ணீரின் கடிகமழப் பொருகளத்தில் ஒன்னலர்தம்
புயந்தோய் மின்னுர்
கண்ணீர் மைகலந்(து)ஒழுகக் கலுழ்ந்(து) அணிபொன்
கலன்வாங்கக் கதிர்வேல்வாங்கி
மண்நீர்மை பெறப்புரந்த மன்னவனும் தாகம்உற்று
வருந்தி னேர்கள்
உண்நீர்பெற் றதுஎனத்துன்(பு)ஒழிந்(து) உயர்கோ
கன்னம் உற்றுன் உவப்பினேடும்.]

இ — ள் : புண்ணீரின் கடிகமழப் பொரு களத்தில் — இரத்தத்தின் முடை நாற்றம் வீசும்படி யுத்தகளத்தில், ஒன்னலர் தம் புயம் தோய் மின்னுர் — பகைவர்களது புயங்களைத் தழுவுகின்ற மனையியர்கள், கண்ணீர்மை கலந்து ஒழுக கலுழ்ந்து — கண்ணீரும் (தீட்டிய) மையும் கலந்து பாயும்படி அழுது, அணி பொன் கலன் வாங்க — அணிந்திருக்கின்ற பொன்னுற் செய்த மங்கலியத்தைக் கழிக்கும்படி, கதிர் வேல் வாங்கி — கூரிய வேற்படையைச் செலுத்தி, மண் நீர்மை பெற புரந்த மன்னவனும் — பூமியை நன்மை பொருந்தப் பரிபாலித்த மித்திரசகமகாராசனும், தாகம் உற்று வருந்தினேர்கள் — நீர் வேட்கையினுல் துன்புற்றவர்கள், உண் நீர் பெற்றது என துன்பு ஒழிந்து — உண்ணுவதற்குத் தண்ணீரைப் பெற்ற தன்மையைப் போலத் துன்பம் நீங்கி, உவப்பினேடும் உயர் கோகன்னம் உற்றுன் — மகிழ்ச்சியோடு உயர்வு பொருந்திய கோகர்ணம் என்னும் தலத்தையடைந்தான் எ — று : (78)

பூகநெடும் பொழில்புடைசூ ழப்பதியிற் புகல்கோடிப் புனலின் மூழ்கி
நாகர்தினந்தொழுதெழுமா பெலலிங்க நாயகனே நண்பிற் போற்றி
மாகமதிச் சிவநிசியின் மறைமுதலா கமத்துவிதி வழுவா தாற்றிச்
சோகமிகத் தரும்பழைய வினைத்தொடர்பின் அழுக்கனைத்துந் துடைத்திட் டானே.

[பூகநெடும் பொழில்புடைசூழ் அப்பதியில் புகல்கோடிப் புனலின் மூழ்கி
நாகர்தினம் தொழு(து)எழுமா பெலலிங்க நாயகனே நண்பில் போற்றி
மாகமதிச் சிவநிசியில் மறைமுதல்ஆ கமத்துவிதி வழுவா(து) ஆற்றிச்
சோகம்மிகத் தரும்பழைய வினைத்தொடர்பின் அழுக்(கு) அனைத்தும் துடைத்
திட்டானே.]

இ — ள் : பூக நெடும் பொழில் புடை சூழ் அப்பதியில் — நெடிய கமுகஞ் சோலைகள் பக்கத்திற் சூழ்ந்த அந்த தலத்தில், புகல் கோடி புனலின் மூழ்கி — கூறப்படுகின்ற கோடிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, நாகர் தினம் தொழுது எழும் மா பெல லிங்க நாயகனே — தேவர்கள் தினந்தோறும் நமஸ்காரஞ் செய்து எழும்புகின்ற மாபெலலிங்கநாயகரை, நண்பில் போற்றி — அன்போடு துதித்து, மாக மதி சிவநிசியில் — மாசி மாதத்துச் சிவராத்திரியில், மறை முதல் ஆகமத்து விதி வழுவாது ஆற்றி — வேதங்களினுஞ்

சிறந்த ஆகமங்களிலுங் கூறப்பட்ட விதி தவறுதபடியனுஷ்டித்து, சோகம் மிக தரும் பழைய வினை தொடர்பின் அழுக்கு அனைத்தும் — மிகத் துன்பத்தைத் தருகின்ற பழைய தீவினைத் தொடர்பினுலுண்டாகிய பாவங்களெல்லாவற் றையும், துடைத்திட்டான் — நீக்கிக்கொண்டனன் எ — று.

ஏ - அசை. (79)

வளமைதரு கோகனத்தில் மாகமதிச் சிவநிசியை மகிழ்ந்து நோற்றுப் பழிவினைக்கும் பிரமகத்தி பற்றறவே தீர்ந்தபினர்ப் பரமன் செய்ய கழலடைந்து பேரின்பங் கலந்திருந்தான் சிவநிசியைக் கருத்தி லுற்ற வுளமகிழ்வா னேற்றவர்கள் பேரின்ப வீடடைவ ருண்மை யென்றுன்.

[வளமைதரு கோகனத்தில் மாகமதிச் சிவநிசியை மகிழ்ந்து நோற்றுப் பழி,வினைக்கும் பிரமகத்தி பற்(று)அறவே தீர்ந்தபின்னர் பரமன் செய்ய கழல்அடைந்து பேரின்பம் கலந்(து) இருந்தான் சிவநிசியைக் கருத்தில் உற்ற உளம் மகிழ்வால் நோற்றவர்கள் பேரின்ப வீ(டு)அடைவர் உண்மை என்றுன்.]

இ — ள் : வளமை தரு கோகனத்தில் — செழிப்புப் பொருந்திய கோகர் ணம் என்னும் தலத்தில், மாகமதி சிவநிசியை மகிழ்ந்து நோற்று — மாசி மாதச் சிவராத்திரியை மனமகிழ்ச்சியோடு அனுஷ்டித்து, பழி வினைக்கும் பிர மகத்தி பற்றறவே தீர்ந்த பினர் — பழிகளையுண்டாக்குகின்ற பிரமகத்தி தோஷ மானது முற்றுய் நீங்கியபின்பு, பரமன் செய்ய கழல் அடைந்து — சிவபெரு மானுடைய சிவந்த திருப்பாதங்களையடைந்து, பேரின்பங் கலந்து இருந் தான் — மோட்ச சுகத்தை யனுபவித்திருந்தான், சிவநிசியைக் கருத்தில் உற்ற உள மகிழ்வால் நோற்றவர்கள் — சிவராத்திரி விரதத்தை தம் மனத் திற் பொருந்திய உள்ளக்களிப்போடு அனுஷ்டித்தவர்கள், பேரின்ப வீடு அடைவர் உண்மை என்றுன் — மோட்ச சுகத்தைப் பெறுவர் இது சத்திய மென்று கூறினர் எ — று. (80)

என்றுயர்ந்த மிசவனத்தி லிருந்தவிருந் தவர்மகிழ்ந்தாங் கிருகை கூப்பித் துன்றுசடை முடிதுளக்கிக் கேட்டுவப்ப விரித்தெடுத்துச் சொல்லி னுனைக் கன்றுகொடுஞ் சினமயக்கங் காமமெனு முக்குறும்பைக் கடிந்து நாளும் வென்றிபெறுந் தவஞான நிலையுணர்ந்து களங்கமின்றி விளங்குஞ் சூதன்.

[என்(று)உயர்ந்த மிசவனத்தில் இருந்த இருந்தவர் மகிழ்ந்(து) ஆங்(கு) இருகைகூப்பித் துன்றுசடை முடிதுளக்கிக் கேட்(டு)உவப்ப விரித்(து) எடுத்துச் சொல்லி னுனல்

கன்று, கொடும் சினம், மயக்கம், காமம்என்னும் முக்குறும்
பைக் கடிந்துநாளும்
வென்றிபெறும் தவஞான நிலை உணர்ந்து களங்கம் இன்றி
விளங்கும் சூதன்.]

இ — ள்: கன்று கொடும் சினம் மயக்கம் காமம் எனும் முக்குறும்பை கடிந்து — மனத்தைக் கன்றச்செய்கின்ற கொடிய வெகுளி மயக்கம் காமம் என்னும் முக்குறும்புகளையும் நாசஞ்செய்து, நாளும் வென்றி பெறும் தவ ஞானநிலை உணர்ந்து — தினந்தோறும் மேன்மையையடைவிக்கின்ற தவவொழுக் கத்தோடு கூடிய ஞானநிலையை உணர்ந்து, களங்கம் இன்றி விளங்கும் சூதன் — மனக்களங்கஞ் சிறிதுமின்றி விளங்குகின்ற சூதமகாமுனிவர், உயர் நைமிசவனத்தில் இருந்த இரும் தவர் மகிழ்ந்து — உயர்வுபொருந்திய நைமி சாரணியத்திலிருந்த பெருமையிற் சிறந்த முனிவர்கள் ஆனந்தங்கொண்டு, ஆங்கு இருகை கூப்பி — அவ்விடத்து இரண்டு கைகளையுஞ் சிரமிசைக் குவித்து, துன்று சடை முடி துளக்கி — நெருங்கிய சடைமுடியை யசைத்து, கேட்டு உவப்ப — கேட்டு மகிழும்படி, என்று விரித்து எடுத்து சொல்லினன் — என் றிவ்வாறு விரிவாக எடுத்துக் கூறினர் எ — று.

ஆல் — அசை. (81)

கன்மாடபாதச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 590.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

விபரிசச் சருக்கம்

எண்டரு மறையுண ரிருடி காடிரி
புண்டர நுதலர னிரவிற் பூசனை
கண்டவன் கதையினைக் கழறக் கேண்மினென்
றெண்டவச் சூதனு முரைப்ப தாயினன்.

[எண்தரு மறைஉணர் இருடிகாள்திரி
புண்டர நுதல்அரன் இரவில் பூசனை
கண்டவன் கதையினைக் கழறக் கேண்மின்என்(று)
ஒள்தவச் சூதனும் உரைப்ப(து) ஆயினன்.]

இ — ள் : எண் தரு மறை உணர் இருடிகாள் — மதிக்கப்படுகின்ற வேதங் களையறிந்த முனிவர்களே, திரி புண்டர நுதல் அரன் இரவில் — திரிபுண்ட ரமாக விபூதியையணிந்த நெற்றியையுடைய சிவபெருமானது இராத்திரியில், பூசனை கண்டவன் கதையினை கழறகேண்மின் என்று — சிவபூசையைத் தரித்த வனது சரித்திரத்தைக் கூறுகின்றேன் கேட்கக்கடவீரென்று, ஒள் தவச் சூதனும் உரைப்பது ஆயினன் — மேன்மை பொருந்திய தவத்தையுடைய சூத மகாமுனிவருங் கூறுவாராயினர் எ — று.

(1)

பாரினிற் புராதலப் பதிபு ரப்பவன்
போரினிற் றெவ்வர்மெய்ப் புலவு காரியு
மோரியு மருந்தவே லுறைக ழித்திடும்
வீரியன் விபரிச னென்னும் வேந்தனே.

[பாரினில் புராதலப் பதிபு ரப்பவன்
போரினில் தெவ்வர்மெய்ப் புலவு, கரியும்
ஓரியும் அருந்தவேல் உறைகழித் திடும்
வீரியன் விபரிசன் என்னும் வேந்தனே.]

இ — ள் : பாரினில் புராதல பதி புரப்பவன் — பூமியின்கண்ணே புரா தலமென்னும் நகரத்தைப் பரிபாலிப்பவனும், போரினில் தெவ்வர் மெய் புலவு — போர்க்களத்தில் பகைவர்களது சரீர மாமிசத்தை, காரியும் ஓரியும் அருந்த — காகங்களும் நரிகளும் உண்ணும்படி, வேல் உறை கழித்திடும் வீரி யன் — தனது வேற்படையை யுறையினின்றும் நீக்குகின்ற வீரத்தன்மையை யுடையவனும் ஆகிய, விபரிசன் என்னும் வேந்தன் — விபரிசனென்னும் பெயரையுடைய அரசன் (உளன்) எ — று.

ஏ — அசை.

(2)

தன்றடஞ் சிலைகொடு தானுஞ் சேனையுங்
குன்றருங் கானிடைக் குறுகி நாடொறும்
வன்றலைக் கேழன்மான் மரைபுல் வாய்களின்
மென்றசை யருந்திட வேட்ட மாடுவான்.

[தன்தடம் சிலைகொடு தானும் சேனையும்
குன்(று)அரும் கான்இடைக் குறுகி நாள்தொறும்
வன்தலைக் கேழல்மான் மரைபுல் வாய்களின்
மென்தசை அருந்திட வேட்டம் ஆடுவான்.]

இ — ள்: தன் தடம் சிலை கொடு தானும் சேனையும் — தனது விசாலமாகிய வில்லைக்கொண்டு தானுஞ் சேனைகளுமாய், குன்று அரும் கானிடை குறுகி — மலைகளிலும் அரிய காடுகளிலுஞ் சென்று, நாள்தொறும் வன் தலை கேழல் மான் மரை புல்வாய்களின் மென் தசை அருந்திட — தினந்தோறும் வலிய தலையையுடைய பன்றி மான் மரை புல்வாய் ஆகிய மிருகங்களின் மிருதுவாகிய மாமிசங்களைப் புசிப்பதற்கு, வேட்டம் ஆடுவான் — வேட்டையாடுவான் எ — று. (3)

புலந்தரு பூசுரர் புலைஞர் மற்றுள
குலந்தனி லுதித்தெழில் குலவு மாதரை
நிலந்தனி லவாவுட னேடி நித்தமுங்
கலந்துளந் தருக்கொடு களிக்கு நீர்மையான்.

[புலம்தரு பூசுரர் புலைஞர் மற்(று)உள
குலம்தனில் உதித்(து) எழில் குலவும் மாதரை
நிலம்தனில் அவாஉடன் நேடி நித்தமும்
கலந்(து)உளம் தருக்கொடு களிக்கும் நீர்மையான்.]

இ — ள்: புலம் தரு பூசுரர் புலைஞர் மற்றுள குலம் தனில் உதித்து — அறிவின் மிகுந்த பிராமணர் (குலத்திலும்) புலையர் (குலத்திலும்) வேறுமுள்ள குலங்களிலும் பிறந்து, எழில் குலவு மாதரை — அழகுபொருந்திய பெண்களை, நிலந்தனில் அவாவுடன் நேடி — பூமியின்கண்ணே ஆசையோடு தேடி, நித்தமும் கலந்து — தினந்தோறுஞ் சையோகித்து, உளம் தருக்கொடு களிக்கும் நீர்மையான் — மனச்செருக்கடைந்து களிப்புக்கொள்ளுந் தன்மையையுடையவன் எ — று. (4)

வேறு

மதிவளர் பக்கங் சுலைகுறை பக்க மதிதொறு மருவுபன் ஞன்காந்
திதிசளிற் றுயிலாண் டுறந்துதன் னடியார் சிந்தனைப் படிமுடி வில்லாக்
கதிதரும் பரனை யானினைந் தாட்டிக் கடிமலர் கூவிளஞ் சாத்தி
னிதிமுறை வழுவா துள்ளநெக் குருகி விருப்புட னருச்சனை புரிவான்.

[மதிவளர் பக்கம், கலைகுறை பக்கம் மதிதொறும் மருவு பன்னன்காம்
திதிகளில் துயில் ஊண் துறந்துதன் அடியார்சிந்தனைப் படிமுடி(வு) இல்லாக்
கதிதரும் பரனே ஆனின் ஐந்(து) ஆட்டிக் கடிமலர்க் கூவிளம் சாத்தி
விதிமுறை வழுவா(து) உள்ளம்நெக்(கு) உருகிவிருப்புடன் அருச்சனை புரிவான்.]

இ — ள்: மதி வளர் பக்கம் — சந்திரன் கலைகள் வளரப்பெற்ற பூருவ பக்கத்திலும், கலை குறை பக்கம் — கலைகள் தேய்கின்ற அபரபக்கத்திலும், மதி தொறும் மருவு பன்னன்காம் திதிகளில் — மாதந்தோறும் வருகின்ற சதுர்த்தசிகளில், துயில் ஊண் துறந்து — நித்திரையுமுணவுமின்றி, தன் அடியார் சிந்தனைப்படி — தமது அடியார்களது எண்ணத்தின்படி, முடிவில்லா கதிதரும் பரனே — அளவில்லாத நற்கதிகளைக் கொடுக்கின்ற சிவபெருமானே, ஆனின் ஐந்து ஆட்டி — பசுவிலிருந்தெடுக்கப்படுகின்ற பஞ்ச கௌயவிங்களினாலபிடேகித்து, கடிமலர் கூவிளம் சாத்தி — வாசனைபொருந்திய புஷ்பங்களையும் வில்வங்களையுஞ் சாத்தி, விதிமுறை வழுவாது — விதிக்கிரமந் தவறாமல், உள்ளம் நெக்கு உருகி — மனங்கசிந்துருகி, விருப்புடன் அருச்சனை புரிவான் — சந்தோஷத்துடனே பூசை செய்வான் எ — று. (5)

மற்றவன் மனைவி யாகிய குமுத வதியவன் மலரடி வணங்கிக்
கற்றடந் திணிதோட் புரவல விரவுங் கல்வியிற் றிறலினே ரில்லாய்
பொற்றரு விழுது விட்டெனக் கிடந்த புரிசடைப் புனிதனு ரிரவி
லுற்றருந் திடுமூண் டுயிலொழிந் துளத்தி னுவப்புடன் பூசனை புரிவாய்.

[மற்(று) அவன் மனைவி ஆகிய குமுதவதி அவன் மலர்அடி வணங்கிக்
கல்தடம் திணிதோள் புரவல, விரவுங் கல்வியில் திறலில்நேர் இல்லாய்
பொன்தரு விழுது விட்(டு) எனக் கிடந்த புரிசடைப் புனிதனுர் இரவில்
உற்(று) அருந் திடும்ஊண் துயில்ஒழிந்(து) உளத்தில் உவப்புடன் பூசனை புரிவாய்.]

இ — ள்: அவன் மனைவி ஆகிய குமுதவதி — அவ்விபரிசமகாராசனது மனைவியாகிய குமுதவதியானவள், அவன் மலரடி வணங்கி — அவனது தாமரை மலர் போன்ற பாதங்களை நமஸ்கரித்து, கல் தடம் திணி தோள் புரவல — கல்லைப்போன்ற விசாலமாகிய திண்ணிய தோள்களையுடைய அரசனே, விரவும் கல்வியில் திறலில் நேர் இல்லாய் — பொருந்திய கல்வியிலும் வன்மையிலும் பிறரொருவரும் நிகரின்றியிருப்பவனே, பொன்தரு விழுது விட்டென கிடந்த புரிசடை புனிதனுர் இரவில் — பொன்மரமானது விழுது விட்டாற் போலிருக்கின்ற முறுக்குப் பொருந்திய சடைமுடியையுடைய பரிசுத்தராகிய சிவபெருமானது இராத்திரியில், உற்று அருந்திடும் ஊண் துயில் ஒழிந்து — மனம் விரும்பியுண்ணுகின்ற உணவையும் நித்திரையையும் தவிர்த்து, உளத்தில் உவப்புடன் பூசனை புரிவாய் — மனமகிழ்வோடு சிவார்ச்சனை செய்கின்றனை எ — று.

மற்று — அசை. (6)

கூனருஞ் சிலைக்கை வேட்டுவ ரென்னக்குலவிலங் கனைத்தையுங் கொலைசெய்
தூனருந் திடுத லொழிந்திலை நிலத்தி லுயர்குலத் திழிகுலத் துதித்த
தேனருங் கனிபா னிகர்த்தசொற் கணிகைச் சேயிழை யார்முலைப் போகந்
தானருந் திடுத றவிர்ந்திலை யிந்தத் தன்மையென் சாற்றுதி யென்றுள்.

[கூன் அரும்சிலைக்கை வேட்டுவர் என்னக் குலவிலங்(கு) அனைத்தையும் கொலைசெய்து ஊன் அருந்திடுதல் ஒழிந்திலை நிலத்தில் உயர்குலத்(து) இழிகுலத்து உதித்த தேன் அருங்கனிபால் நிகர்த்தசொல் கணிகைச் சேயிழையார் முலைப்போகம் தான் அருந்திடுதல் தவிர்ந்திலை இந்தத் தன்மைஎன் சாற்றுதி என்றுள்.]

இ — ள்: கூன் அரும் சிலை கை வேட்டுவர் என்ன — வளைந்த அரிய வில் லேத்தாங்கிய கைகளையுடைய வேட்டுவர்களைப்போல, குல விலங்கு அனைத்தையும் கொலை செய்து — கூட்டமாகிய மிருகங்களெல்லாவற்றையுங் கொன்று, ஊன் அருந்திடுதல் ஒழிந்திலை — மாமிசம் புசித்தலை விடுத்திலை, நிலத்தில் உயர்குலத்து இழிகுலத்து உதித்த — பூமியின் கண்ணே உயர் குலங்களிலும் தாழ்ந்த குலங்களிலும் பிறந்த, தேன் அரும் கனி பால் நிகர்த்த சொல் கணிகை சேயிழையார் முலை போகம் தான் — தேனையும் அரிய கனிகளையும் பாலையும் நிகர்த்த மொழிகளையும் வசனிக்கின்ற சிறந்த ஆபரணங்களையணிந்த வேசிப் பெண்களது தனபோகத்தை, அருந்திடுதல் தவிர்ந்திலை — அனுபவித்தலை விடுகின்றிலை, இந்தத் தன்மை என் சாற்றுதி என்றுள் — இவ்வாறு (ஒன்றற்கொன்று மாறுபாடாக இருக்கும்) தன்மைகள் என்ன அதனைக் கூறுகவென்று வேண்டினள் எ — று. (7)

என்றவள் மொழிந்த மொழிசெவிப் படலுமிளநகை கோட்டிவே லிறைவன்
முன்றவப் பயனு லிறப்பெதிர் நிகழ்வா மூன்றுகாலங்களு முணர்வேன்
றுன்றளிக் குலம்பாட் டயர்மலர்க் கோதைச் சுரிகுழால் கேட்டியான் முன்னங்
குன்றெனு மிஞ்சிப் பம்பைமா நகரிற் குரைமுக ஞமலியா வுதித்தேன்.

[என்(று) அவள் மொழிந்த மொழிசெவிப் படலும்
இளநகை கோட்டிவேல் இறைவன்
முன்தவப் பயனுல் இறப்(பு)எதிர் நிகழ்(வு) ஆம்
மூன்று காலங்களும் உணர்வேன்
துன்(று) அளிக்குலம் பாட்(டு) அயர்மலர்க் கோதைச்
சுரிகுழால் கேட்டியான் முன்னம்
குன்றெனும் இஞ்சிப் பம்பைமா நகரில்
குரைமுக ஞமலியா உதித்தேன்.]

இ — ள்: என்று அவள் மொழிந்த மொழி செவி படலும் — என்று அக் குமுதவதி கூறிய வாக்குக் கேட்டலும், வேல் இறைவன் இளநகை கோட்டி — வேற்படையைத் தாங்கிய விபரிசமகாராசன் புன்முறுவல் கொண்டு, முன்தவப்

பயனல் — முன்னரே செய்த தவத்தின் பிரயோசனத்தால், இறப்பு எதிர் நிகழ்வாம் மூன்று காலங்களும் உணர்வேன் — செல்காலம் எதிர்காலம் நிகழ் காலமாகிய முக்கால சம்பவங்களையும் அறியவல்லேன், துன்று அளிகுலம் பாட்டு அயர் மலர் கோதை சுரிகுழால் கேட்டியால் — நெருங்கிய வண்டுக் கூட்டங்களிசைபாடுகின்ற மலர் மாலையையணிந்த சுரித்த கூந்தலையுடைய பெண்ணே கேட்கக்கடவை, முன்னம் — முற்பிறப்பிலே, குன்று எனும் இஞ்சி பம்பை மா நகரில் — மலையென்று கூறும்படியுயர்ந்த மதிலாற் சூழப்பட்ட பம்பைமாநகரத்தில், குரை முக ஞமலியா உதித்தேன் — குரைக்கின்ற முகத் தையுடைய நாயாகப் பிறந்தேன் எ — று. (8)

பாலிவென் றமுதை யடுமொழிக் கவுரி பங்கில்வாழ் பம்பைநா யகன்ற
னாலயங் குறுகிப் பலிக்கிடு மடிசி லருந்துவான் வருந்தியங் கடையுங்
காலையிற் கோயிற் கைவினை யாளர் கடிதெனைக் கடிந்திடக் கருதி
வேலையில் விடம்போற் கதைகணை குனித்த வில்லொடுங் கல்லொடுந்
[தொடர்ந்தார்.

[பாலிவென்(று) அமுதை அடுமொழிக் கவுரி
பங்கில்வாழ் பம்பை நாயகன்தன்
ஆலயம் குறுகிப் பலிக்(கு)இடும் அடிசில்
அருந்துவான் வருந்தி அங்(கு) அடையும்
காலையில் கோயில் கைவினை யாளர்
கடி(து) எனைக் கடிந்திடக் கருதி
வேலையில் விடம்போல் கதைகணை குனித்த
வில்லொடும் கல்லொடும் தொடர்ந்தார்.]

இ — ள்: பாலி வென்று அமுதை அடு மொழி கவுரி பங்கில் வாழ் — (இனிமையினுற்) பாலியும் வென்று அமுதத்தையும் வென்ற வார்த்தைகளை யுடைய உமாதேவியார் வாமபாகத்திலெழுந்தருளிய, பம்பை நாயகன் தன் ஆலயம் குறுகி — பம்பைநாயகராகிய சிவபிரானது திருக்கோயிலையடைந்து, பலிக்கு இடும் அடிசில் அருந்துவான் — பலியாக இடப்படுகின்ற சோற்றைப் புசிக்கும் பொருட்டு, வருந்தி அங்கு அடையும் காலையில் — பசியினால் வருந்தி அவ்விடத்துச் செல்லும் சமயத்தில், கோயிற்கைவினையாளர் — கோவிற் றொண்டு செய்கின்ற பரிசாரகர்கள், கடிது எனை கடிந்திட கருதி — சீக்கிரத்தி லென்னைத் தண்டிக்க நினைத்து, வேலையில் விடம்போல் — சமுத்திரத்திற் றோன்றிய நஞ்சைப்போல, கதை கணை குனித்த வில்லொடும் கல்லொடும் தொடர்ந்தார் — தண்டாயுதமும் அம்பும் வளைத்த வில்லும் கல்லும் ஆகிய இவற்றைக்கொண்டு தொடர்ந்து வந்தார்கள் எ — று. (9)

ஓடினேன் வெருவி யாலயம் வலமா யுயிர்பிழைத் துய்குவா னெறிக
டேடினேன் காணேன் பலிசொரி பீடத் தின்னயற் சென்றுழிச் சுருதி

பாடிநான் மறையோர் பழிச்சிட நெய்த்தீ பச்சுடர்த் தட்டெடுத் தேந்திப்
பீடினற் பணிமா றினர்தரி சித்தேன் பிறைமுடிப் பிஞ்ஞகன் றன்னை.

[ஓடினேன் வெருவி ஆலயம் வலமாய் உயிர்பிழைத்(து) உய்குவான் நெறிகள்
தேடினேன் காணேன் பலிசொரி பீடத்தின், அயல் சென்றுழிச் சுருதி
பாடிநால் மறையோர் பழிச்சிட நெய்த்தீ பச்சுடர்த், தட்(டு)எடுத்(து) ஏந்திப்
பீடினல் பணிமாறினர், தரி சித்தேன் பிறைமுடிப் பிஞ்ஞகன் தன்னை.]

இ — ள்: வெருவி ஆலயம் வலமாய் ஓடினேன் — அப்பொழுது பயங் கரங்கொண்டு கோயிலை வலமாகச் சுற்றி ஓடினேன், உயிர் பிழைத்து உய் குவான் நெறிகள் தேடினேன் — உயிரானது உய்ந்து பிழைத்தற்காகிய வழி களைத் தேடினேன், காணேன் — அங்ஙனமொரு வழியையுங் கண்டிலேன், பலி சொரி பீடத்தின் அயல் சென்றுழி — பலியிடப்படுகின்ற பீடத்துக்குப் பக்கத்தே சென்ற பொழுது, சுருதி பாடி நான்மறையோர் பழிச்சிட — வேதங்களைக் கூறிப் பிராமணர்கள் துதிக்க, நெய் நிற சுடர் தட்டு எடுத்து ஏந்தி பீடினல் பணிமாறினர் — ஒளி பொருந்திய நெய்த் திபத்தட்டைத் தாங்கிப் பெருமையோடு உபசரித்தனர், பிறை முடி பிஞ்ஞகன் தன்னை தரித் தேன் — (அப்பொழுது) பிறைச்சந்திரனைத் தரித்த சடை முடியையுடைய சிவபெருமானைத் தரிசனஞ் செய்தேன் எ — று. (10)

அக்கணத்தொருவன் சரந்தொட வீந்தே னன்றிராச் சிவநிசியதனின்
மிக்கவா லயத்தை வலமதாய் வந்து விமலனைத் தரிசனை புரிந்து
நக்கனூர் திருமுன் னுவிநீத் திட்ட நன்மையாற் கால மூன்றுணர்ந்து
தக்கவாழ் வுடனு னிலம்புரந் தருளுந் தலைவனுத் தரைதனி லுதித்தேன்:

[அக்கணத்(து) ஒருவன் சரந்தொட வீந்தேன் அன்(று)இராச் சிவநிசி அதனின்
மிக்க ஆலயத்தை வலமதாய் வந்து விமலனைத் தரிசனை புரிந்து
நக்கனூர் திருமுன் ஆவி நீத்திட்ட நன்மையால்காலம் மூன்(று) உணர்ந்து
தக்கவாழ்வுடன் நால்நிலம் புரந்தருளும் தலைவனுத் தரைதனில் உதித்தேன்.]

இ — ள்: அ கணத்து ஒருவன் சரம் தொட வீந்தேன் — அப்பொழுது ஒருவன் அம்புசெலுத்த அதனலிறந்தேன், அன்று இரா சிவநிசி — அன்றிர வானது சிவராத்திரியாகும், அதனில் மிக்க ஆலயத்தை வலமதாய் வந்து — அச்சிவராத்திரியில் மேன்மைபொருந்திய சிவாலயத்தைப் பிரதட்சணமாக வந்து, விமலனை தரிசனை புரிந்து — நின்மலராகிய சிவபெருமானைத் தரிசித்து, நக்கனூர் திருமுன் ஆவி நீத்திட்ட நன்மையால் — சிவபெருமானது திருமுன் னிலையில் இறந்துபட்ட நன்மையினலே, காலம் மூன்று உணர்ந்து — மூக் காலங்களையுமறிந்து, தக்க வாழ்வுடன் — நல்ல சுகவாழ்வுடனே, நால் நிலம் புரந்து அருளும் தலைவனு — பரந்த பூமியைப் பரிபாலித்தருளுகின்ற அரச னாக, தரை தனில் உதித்தேன் — இப்பூமியின்கட் பிறந்தேன் எ — று. (11)

இந்தநற் பலத்தைத் தந்தது பரம னிரவெனக் கருதியா னெதிர்ந்து
வந்தநற் றினங்க டொறுங்கலே நிறைந்து வருபிறை குறைபிறை யதனிற்
றந்தபன் னுன்காம் பக்கமென் றுரைக்குஞ் சதுர்த்தசி களிற்றவ முமை
லந்திவா னதிச்செஞ் சடிலவ னவனே யகத்தில்வைத் தருச்சனை புரிவேன்.

[இந்தநற் பலத்தை தந்தது பரமன் இரவெனக் கருதியான் எதிர்ந்து
வந்தநல் தினங்கள் தொறும்கலே நிறைந்து வரும்பிறை குறைபிறை அதனில்
தந்தபன் னுன்காம் பக்கம்என்(று) உரைக்கும் சதுர்த்தசி களில் தவறுமல்
அந்தவான்நதிச் செஞ்சடிலவா னவனே அகத்தில்வைத்(து) அச்சுனைபுரிவேன்.]

இ — ள்: இந்த நல் பலத்தை தந்தது பரமன் இரவு என யான் கருதி — இந்த நல்ல பலனைத் தந்தது சிவபெருமானது சிவராத்திரி தினத்தின் தரிசனப்பேறு என்று நான் நினைத்து, எதிர்ந்து வந்த நல் தினங்கள் தொறும் — எதிராகவந்த நன்மைபொருந்திய தினங்களிலெல்லாம், கலே நிறைந்து வருபிறை குறை பிறை அதனில் — சந்திரன் கலைகள் வளர்ந்து வருகின்ற பூருவபக்கத்திலும் தேய்ந்துவருகின்ற அபரபக்கத்திலும், தந்த பன்னுன்காம் பக்கம் என்று உரைக்கும் சதுர்த்தசிகளில் — வருகின்ற பதினான்காந் திதியாகக் கூறப்படுகின்ற சதுர்த்தசித் திதிகளில், தவறுமல் — தவறுதலில்லாமல், நதி அந்தி வான் செம் சடில வானவனே அகத்தில் வைத்து — கங்கைநதியைத் தரித்த செக்கர் வானத்தையொத்த சிவந்த சடையையுடைய சிவபெருமானே மனத்திலே சிந்தித்து, அருச்சனை புரிவேன் — பூசனை செய்வேன் என்று. (12)

புரிந்தபூ சனையாற் பிரிந்துவெம் பாவம்
போகுமோ வெனப் புகன்றனையேல்
விரிந்தபைப் பணிப்பூ ணணிந்தருண் முக்கண்
விமலனே வழிபடி லினன்முன்
சொரிந்தவெம் பனிபோற் கொடுஞ்சிகைத் தழன்முன்
றொக்குறக் குவிந்தவிந் தனம்போற்
கரிந்துநீ றாகும் பரமனே நீயும்
வழிபடக் கருதுகா ரிகையே.

[புரிந்தபூ சனையால், பிரிந்துவெம் பாவம்
போகுமோ எனப்புகன்ற னையேல்,
விரிந்தபைப் பணிப்பூண் அணிந்(து) அருள் முக்கண்
விமலனே வழிபடில் இனன்முன்
சொரிந்தவெம் பனிபோல் கொடுஞ்சிகைத் தழல்முன்
தொக்குறக் குவித்தஇந் தனம்போல்
கரிந்து நீ(று) ஆகும் பரமனே நீயும்
வழிபடக் கருது காரிகையே.]

இ — ள்: புரிந்த பூசனையால் — (இங்ஙனஞ்) செய்த சிவபூசையால், பிரிந்து வெம் பாவம் போகுமோ என புகன்றனையேல் — செய்த கொடிய பாவமானது விட்டு நீங்குமோவென்று வினவுவாயாயின், விரிந்த பை பணி பூண் அணிந்து அருள் முக்கண் விமலனை வழிபடில் — விசாலமாகிய படத்தைக் கொண்ட சர்ப்பங்களை ஆபரணமாகவணிந்த மூன்று கண்களையுடைய நின்மலராகிய சிவபெருமானை வழிபட்டால், இனன் முன் சொரிந்த வெம் பனி போல் — சூரியனுக்கு முன்னே பெய்த கொடிய பனியைப்போலவும், கொடும் சிகை தழல் முன் தொக்குற குவிந்த இந்தனம் போல் — உக்கிரமாகக் கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினியில் தொகுதியாகக் குவித்த விறகைப் போலவும், கரிந்து நீறு ஆகும் — அப்பாவங்கள் எரிந்து சாம்பராகும், பரமனை நீயும் வழிபட கருது காரிகையே — (ஆதலினால்) சிவபெருமானை நீயும் வழிபாடுசெய்ய நினைக்குதி பெண்ணே என்று. (13)

எனவெடுத் திறைவ னியம்பலுங் கதிர்கான்
றெழின்மணிக் கலன்கிடந் திமைக்குங்
கனதனக் குமுத வதியெனு மணங்குகை
தொழு தெனதுமுற் பவமு
மனமுறத் தெளிந்து சொல்லுநீ யெனலும்
வளந்தரு மல்லிகார்ச் சுனத்திற்
சினகரத் திருக்கு மென்சிறைப் புறவாச்
சென்றுதித் திருந்தனை முன்னாள்.

[எனவெடுத்(து) இறைவன் இயம்பலும், கதிர்கான்(று)
எழில்மணிக் கலன்கிடந்(து) இமைக்கும்
கன, தனக் குமுத வதியெனும் அணங்கு
கைதொழு(து) எனதுமுற் பவமும்
மனம் உறத்தெளிந்து சொல்லுநீ எனலும்
வளம்தரும் மல்லிகார்ச் சுனத் தில்
சினகரத்(து) இருக்கும் மென்சிறைப் புறவாச்
சென்(று)உதித்(து) இருந்தனை முந்நாள்.]

இ — ள்: எனவெடுத்து இறைவன் இயம்பலும் — என்று விபரிசமகாராசன் எடுத்துக்கூறுதலும், கதிர் கான்று எழில் மணி கலன் கிடந்து இமைக்கும் — ஒளியைக் கக்கி அழகிய இரத்தினபரணங்கள் கிடந்து பிரகாசிக்கின்ற, கன தன குமுதவதி எனும் அணங்கு கை தொழுது — பாரமாகிய தனங்களையுடைய குமுதவதியென்னும் பெண்ணானவள் கைகுவித்து நமஸ்கரித்து, எனது முன் பவமும் மனம் உற தெளிந்து சொல்லு நீ எனலும் — என்னுடைய முற்பிறப்பின் சம்பவங்களையும் நன்றாய் மனத்திலுணர்ந்து (எனது நாயகனே) நீர் கூறவேண்டுமென்று வேண்டலும், வளம் தரும் மல்லிகார்ச்சுனத்தில் — செல்வத்தையுடைய மல்லிகார்ச்சுனமென்னும் நக-

ரத்திலுள்ள, சினகரத்து இருக்கும் மென்சிறை புறவா — கோயிலிலிருக்கின்ற மிருதுவாகிய சிறகுகளையுடைய புருப்பட்சியாக, முன்னுள் சென்று உதித்து இருந்தனை — முன்னைக்காலத்திற்சென்று பிறந்திருந்தாய் எ — று. (14)

இறந்தமுற் பவத்திற் செந்நிறத் தசையொன்
றெடுத்துவாய்க் கவ்விநீ வரலுஞ்
சிறந்தவெங் கழுகொன் றுனைத்தொடர்ந் திடவச்
சிவாலயந் தனைவலஞ் சூழ்ந்து
பறந்தனை வந்து விடைவரை கொடிக்கம்
பத்திடைப் பயந்தொளித் திருப்ப
மறந்தரு கங்கங் கொத்திவா யலகால்
வதைத்திட வாங்குயிர் மடிந்தாய்.

[இந்தமுற் பவத்தில், செம்நிறத் தசைஒன்(று)
எடுத்துவாய் கவ்விநீ வரலும்,
சிறந்தவெம் கழு(கு)ஒன்(று) உனைத் தொடர்ந்திட,
அச்சிவாலயம் தனைவலம் சூழ்ந்து,
பறந்தனை வந்து, விடைவரை கொடிக்கம்
பத்திடைப் பயந்(து)ஒளித்(து) இருப்ப,
மறந்தரு கங்கம், கொத்தி வாய்அலகால்
வதைத்திட ஆங்(கு)உயிர் மடிந்தாய்.]

இ — ள்: இறந்த முன் பவத்தில் — கழிந்துபோன முற்பிறப்பில், செம் நிற தசை ஒன்று எடுத்து வாய் கவ்வி நீ வரலும் — செந்நிறமாகிய ஓர் மாமிசத் துண்டையெடுத்து வாயினற் கவ்விக்கொண்டு நீ வருதலும், சிறந்த வெம் கழுகு ஒன்று உனை தொடர்ந்திட — அழகிய கொடிய ஒரு கழுகானது உன்னைத் தொடர்ந்து செல்ல, அச்சிவாலயம் தனை வலம் சூழ்ந்து — அந்தச் சிவாலயத்தைப் பிரதட்சணஞ்செய்து, பறந்தனை வந்து — பறந்து வந்து, விடை வரை கொடி கம்பத் திடை — இடபமெழுதிய கொடி தூக்கிய தம் பத்திலே, பயந்து ஒளித்து இருப்ப — நீ அஞ்சி மறைந்திருக்க, மறம் தரு கங்கம் — கொடிய அக்கழுகானது, வாய் அலகால் கொத்தி வதைத்திட — தனது வாயினலகினுல் உன்னைக் கொத்திக் கொல்ல, ஆங்கு உயிர் மடிந்தாய் — அவ்விடத்தே நீ உயிரிறந்துபட்டாய் எ — று. (15)

சொல்லுமக் கங்கம் புறவதா நின்னைத்
தொடர்ந்துகொன்றி டுஞ்செயல் சொல்லில்
வல்லினில் விழைவி னீகொடு வந்த
வசைபடு தசையினை வவ்விச்

செல்லுவ னென்று வந்துனே வலிதிற்
செருத்துநின் வாய்ப்படுந் தசையைக்
கல்லெறி விரைவி னப்புறங் கொண்டு
போனதக் கடுஞ்சிறைக் கங்கம்.

[சொல்லும்அக் கங்கம், புற(வு)அதாம் நின்னைத்,
தொடர்ந்து கொன்றிடும்செயல் சொல்லில்,
வல்லினில் விழைவில் நீகொடு வந்த,
வசைபடு தசையினை, வவ்விச்
செல்லுவன் என்று வந்(து),உனே வலிதில்
செருத்து,நின் வாய்ப்படும் தசையைக்
கல்எறி விரைவின், அப்புறம் கொண்டு
போன(து),அக் கடும்சிறைக் கங்கம்.]

இ — ள்: சொல்லும் அ கங்கம் — கூறப்பட்ட அக்கழுகானது, புற வு அதாம் நின்னை தொடர்ந்து கொன்றிடும் செயல் சொல்லில் — புருவாகிய உன்னைப் பின்தொடர்ந்து கொலைசெய்த காரணத்தைச் சொல்ல வேண்டு மென்னில், வல்லினில் விழைவில் நீ கொடு வந்த வசைபடு தசையினை — வலிமையுடனே ஆசையினால் நீ கொண்டுவந்த எளிய மாமிசத்தை, வவ்வி செல்லுவன் என்று வந்து — கவர்ந்து செல்வேனென்று வந்து, உனே வலிதில் செருத்து — உன்னை வலிமையாற் கொலைசெய்து, நின் வாய் படும் தசையை — உனது வாயிற்கிடந்த மாமிசத்தை, கல் எறி விரைவில் அப்புறம் கொண்டு போனது — கல்லையெறிந்தாற்போன்ற வேகமாய் அப்பாற் கவர்ந்துகொண்டு சென்றது, அ கடும் சிறை கங்கம் — அந்த வேகமாகிய சிறகுகளையுடைய கழுகு எ — று. (16)

தீவிழி யெருவை தொடர்ந்திட வந்தச்
சிவாலயம் தனைவலம் வரலா
லாய்பிழிக் கொன்றைத் தொடைபுனை சடிலத்
தண்ணன்முன் னுவிநீத் ததனற்
பாய்திரை யுடுத்த நெடுநிலப் பரப்புப்
பரித்திடும் பார்த்திவன் மகளாத்
தூயசெங் கமலத் திருமக ளென்னத்
தோன்றியென் றுனைவியு மானாய்.

[தீவிழி எருவை தொடர்ந்திட, அந்தச்
சிவாலயம் தனைவலம் வரலால்,
ஆய்பிழிக் கொன்றைத் தொடைபுனை சடிலத்(து)
அண்ணல்முன் ஆவிநீத்த அதனால்

பாய்திரை உடுத்த நெடுநிலப் பரப்புப்
பரித்திடும் பார்த்திவன் மகளாத்
தூய செம்கமலத் திருமகள் என்னத்
தோன்றி என்துணைவியும் ஆனாய்.]

இ — ள் : நீ விழி எருவை தொடர்ந்திட — அக்கினியைப்போன்ற கண் சேயுடைய அக்கழுகானது தொடர்ந்துசெல்ல, அந்த சிவாலயம் தேவலம் வரலால் — அந்தச் சிவாலயத்தைப் பிரதட்சணம் செய்ததனாலும், ஆய் பிழி கொன்றை தொடை பூசை சடிலத்து அண்ணல் முன் ஆவி நீத்த அதனால் — தெளிந்த தேனையுடைய கொன்றைமலர் மாலையையணிந்த சடைமுடியை யுடைய சிவபெருமானுக்கு முன்னே உயிரிறக்கப்பெற்றமையாலும், பாய் திரையுடுத்த நெடு நில பரப்பு பரித்திடும் பார்த்திவன் மகளா — தத்துகின்ற திரையையுடைய சமுத்திரத்தாற் சூழப்பட்ட நெடிய பரந்த பூமியைப் பரி பாலனஞ் செய்கின்ற அரசனுடைய புத்திரியாய், தூய செம் கமல திருமகள் என்ன தோன்றி — சுத்தமாகிய செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமி யைப்போலப் பிறந்து, என் துணைவியும் ஆனாய் — எனக்கு நாயகியுமானாய் எ — று. (17)

வேறு

என்றிவை கூறக் கேட்ட வேந்திழை யெழுந்து போற்றி
நன்றிதென் றிறும்பூ தெய்தி நலனுடை நீயு நானு
மொன்றிமுன் னெடுத்த காயத் துற்பவ முரைத்தா யாங்கள்
சென்றினிப் பிறக்குந் தன்மை செப்புதி தெரிய வென்றாள்.

[என்(று) இவை கூறக்கேட்ட, ஏந்(து)இழை எழுந்து போற்றி,
நன்(று) இ(து)என்(று) இறும்பூ(து)எய்தி நலன் உடைநீயும் நானும்,
ஒன்றிமுன் எடுத்த காயத்(து) உற்பவம் உரைத்தாய், யாங்கள்
சென்(று)இனிப் பிறக்கும் தன்மை செப்புதி தெரிய என்றாள்.]

இ — ள் : என்று இவை கூற கேட்ட ஏந்திழை எழுந்து போற்றி — என்று இவைகளை விபரிசமகாராசன் கூறக்கேட்ட ஆபரணங்களைத் தரித்த சுமுதவதியானவள் எழுந்து நமஸ்கரித்து, நன்று இது என்று இறும்பூது எய்தி — இது மிகவும் நல்லதென்று குதூகலித்து, நலனுடை நீயும் நானும் ஒன்றி முன்னெடுத்த காயத்து உற்பவம் உரைத்தாய் — நன்மையையுடைய தேவரீரும் அடியேனும் இசைந்து முன்னேயெடுத்த சரீரத் தோற்றங்களை (எடுத்துக்) கூறினீர், யாங்கள் சென்று இனி பிறக்கும் தன்மை செப்புதி தெரிய என்றாள் — நாங்கள் இனிமேல் போய்ப் பிறக்கும் பிறப்பை அறியும் படி சொல்லவேண்டுமென்று வேண்டினாள் எ — று. (18)

மென்னடை யன்ன மன்னுய் வேறினி யிரண்டாஞ் சன்மம்
பன்னக வேந்த னேந்தும் பார்மிசைச் சிந்து நாட்டின்
மன்னவ னுவன் யானீ சஞ்சயன் மகளாத் தோன்றிக்
கன்னலந் தருமென் றோளிற் கலந்துறக் களித்து வாழ்வாய்.

[மெல்நடை அன்னம் அன்னுய், வே(று)இனி இரண்டாம் சன்மம்
பன்னக வேந்தன் ஏந்தும் பார்மிசைச், சிந்து நாட்டின்
மன்னவன் ஆவன் யான்;நீ சஞ்சயன் மகளாய்த் தோன்றிக்
கல்நலம் தரும்என் தோளில் கலந்(து)உறக்களித்து வாழ்வாய்.]

இ — ள்: மெல் நடை அன்னம் அன்னுய் — மிருதுவாகிய நடையையுடைய அன்னத்தைப் போன்றவளே, வேறு இனி இரண்டாம் சன்மம் — இனிவருகின்ற இரண்டாம் பிறப்பில், பன்னக வேந்தன் ஏந்தும் பார்மிசை — சர்ப்பராசனுகிய ஆதிசேடனுற் சுமக்கப்பட்ட பூமியில், யான் சிந்து நாட்டின் மன்னவன் ஆவன் — யான் சிந்துதேசத்துக்கு அரசனுகப் பிறப்பேன், நீ சஞ்சயன் மகளா தோன்றி — நீ சஞ்சய மகாராசனுடைய புத்திரியாகப் பிறந்து, கல் நலம் தரும் என் தோளில் கலந்து உற களித்து வாழ்வாய் — மலையைப்போன்ற வலிமை பொருந்திய எனது புயங்களைப் பொருந்தத் தழுவி மிகவும் மகிழ்ந்து வாழுவாய் எ — று, (19)

படியிலோர் மூன்றுஞ் சன்மம் பகர்சவு ராட்ட நாட்டில்
வடியயிற் சுடர்வே லேந்து மன்னவ னுவன் யானீ
கடிமதிற் கலிங்க நாட்டிற் கலிங்கர்கோன் மகளாத் தோன்றி
யிடிமுர சதிரும் வாயி லெண்மனைக் கிழத்தி யாவை.

[படியில், ஓர் மூன்றும் சன்மம், பகர்சவு ராட்ட நாட்டில்,
வடிஅயில் சுடர்வேல் ஏந்தும் மன்னவன் ஆவன் யான்,நீ
கடிமதில் கலிங்க நாட்டில் கலிங்கர்கோன் மகளாத் தோன்றி
இடிமுர(சு) அதிரும் வாயில் எண்மனைக் கிழத்தி ஆவை.]

இ — ள்: படியில் — பூமியில், ஓர் மூன்றும் சன்மம் — மூன்றுவதாகிய பிறப்பிலே, பகர் சவுராட்ட நாட்டில் — சொல்லப்பட்ட சௌராட்டிர மென்னும் தேசத்திலே, யான் வடி அயில் சுடர் வேல் ஏந்தும் மன்னவன் ஆவன் — யான் மிகக்கூரிய ஒளியைக்கொண்ட வேற்படையைத் தாங்கிய அரசனுவேன், நீ கடி மதில் கலிங்க நாட்டில் — நீ காவல்பொருந்திய மதிலாற் சூழப்பட்ட கலிங்கதேசத்திலே, கலிங்கர் கோன் மகளா தோன்றி — கலிங்க தேசராசனுடைய புத்திரியாகப் பிறந்து, இடி முரசு அதிரும் வாயில் எண் மனை கிழத்தி ஆவை — இடிபோல் முரசப்பறை ஆரவாரிக்கின்ற வாயிலையுடைய எனது மனைக்குரிய நாயகியாவாய் எ — று. (20)

மருவொரு நான்காஞ் சன்மம் வளங்கொள் காந்தார நாட்டிற்
றிருவள ரரச னுய்க்கோல் செலுத்துவன் யானீ சீறிப்
பொருதரி யலரை வெல்லு மகதர்கோன் புதல்வி யாகிச்
சுருதிவண் டிமிரும் பைந்தார் சூட்டியென் றுணைவி யாவை.

[மரு(வு)ஒரு நான்காம் சன்மம், வளம்கொள் காந்தார நாட்டில்,
திருவளர் அரச னுய்க்கோல் செலுத்துவன் யான்நீ சீறிப்
பொரு, தரியலரை வெல்லும் மகதர்கோன் புதல்வி ஆகிச்
சுருதிவண்(டு) இமிரும் பைந்தார் சூட்டிஎன் துணைவி ஆவை.]

இ — ள்: மருவு ஒருநான்காம் சன்மம் — பொருந்திய நாலாவதாகிய பிறப்பிலே, வளம் கொள் காந்தார நாட்டில் — செழிப்புப் பொருந்திய காந்தார தேசத்தில், யான் திருவளர் அரசனுய் செங்கோல் செலுத்துவன் — யான் இலட்சுமீகரம் வளரப்பெற்ற அரசனுகிச் செங்கோல் செலுத்தி யரசாட்சி செய்வேன், நீ சீறி பொரு தரியலரை வெல்லும் மகதர் கோன் புதல்வியாகி — நீ கோபித்து யுத்தஞ் செய்கின்ற பகைவர்களையெல்லாம் வெல்லுகின்ற மகதநாட்டரசன் புத்திரியாகி, சுருதி வண்டு இமிரும் பைந்தார் சூட்டி என் துணைவி ஆவை — இசை பொருந்திய வண்டுகள் மொய்க்கின்ற பசுமையாகிய மாலையைச் சூட்டி எனது நாயகியாவாய் எ — று. (21)

சிறந்ததோ ரைந்தாந் தோற்றந் திகழிய லவந்தி நாட்டிற்
பிறந்தர சளிப்பன் யானீ பேருல கனைத்தும் போற்று
மறந்தரு வடிவேற் றுணைத் தாருணன் மகளா வந்தென்
னறந்தரு மனைவியாகி யிருப்பையங் களவில் காலம்.

[சிறந்த(து)ஓர் ஐந்தாம் தோற்றம் திகழ்இயல் அவந்தி நாட்டில்
பிறந்(து)அர(சு) அளிப்பன் யான்நீ பேர்உல(கு) அனைத்தும் போற்றும்
மறந்தரு வடிவேல் தானை தாருணன் மகளா வந்(து)என்
அறம்தரு மனைவிஆகி இருப்பை அங்(கு)அள(வு)இல் காலம்.]

இ — ள்: சிறந்ததோர் ஐந்தாம் தோற்றம் — சிறப்புப் பொருந்திய ஐந்தாவதாகிய பிறப்பில், திகழ் இயல் அவந்தி நாட்டில் யான் பிறந்து அரசு அளிப்பன் — விளங்குகின்ற இயல்பையுடைய அவந்தி தேசத்தில் யான் பிறந்து அரசாட்சி செய்வேன், நீ பேருலகு அனைத்தும் போற்றும் மறந்தருவடிவேல் தானை தாருணன் மகளா வந்து — நீ பெரிய உலகத்திலுள்ளாரால் துதிக்கப்டுகின்ற கொடிய கூரிய வேலேத்தாங்கிய சேனைகளையுடைய தாருணதேசத்தரசன் புத்திரியாகப் பிறந்து, என் அறந்தரு மனைவியாகி — என்னுடைய தருமபத்தினியாகி, அங்கு அளவு இல் காலம் இருப்பை — அங்கே எண்ணிறந்த காலம் சீவித்திருப்பாய் எ — று. (22)

முருந்துறழ் முறுவன் மானே மூவிரண் டாம்பி றப்பிற்
பெருந்தமி ழருத்த நாட்டிற் பேரர சளிப்பன் யானீ
யிருந்தவப் பலனுல் விஞ்சும் யாதிதன் மகளாத் தோன்றி
யருந்தவத் திருமா தொத்தெ னம்புய மதனிற் சேர்வை.

[முருந்(து)உறழ் முறுவல் மானே, மூவிரண்டாம் பிறப்பில்,
பெருந்தமிழ் அருத்த நாட்டில், பேர்அர(சு) அளிப்பன் யான்நீ
இரு, தவப் பலனுல் விஞ்சும் யாதிதன் மகளாய்த் தோன்றி
அரும்தவத் திருமா(து) ஒத்(து)என் அம்புயம் அதனில் சேர்வை.]

இ — ள்: முருந்து உறழ் முறுவல் மானே — இறகின் முள்ளடியை யொத்த பற்களைக்கொண்ட பெண்ணே, மூவிரண்டாம் பிறப்பில் — ஆருவது பிறப்பிலே, பெரும் தமிழ் அருத்த நாட்டில் — மிக்க தமிழ் வாய்ந்த அர்த்த தேசத்தில், யான் பேர் அரசு அளிப்பன் — யான் பெரிய அரசாட்சியைச் செய்வேன், நீ இரும் தவ பலனுல் விஞ்சும் யாதி தன் மகளா தோன்றி — நீ மிக்க தவப்பேற்றினுல் மேம்பட்ட யயாதி மகாராசனுக்குப் புத்திரியாகி, அரும் தவ திரு மாது ஒத்து — அரிய தவப் பெருக்கையுடைய இலக்குமி தேவியைப் போன்று, என் அம்புயம் அதனில் சேர்வை — எனது அழகிய புயங்களைத் தழுவுவாய் எ — று. (23)

கழிதரு மேழாஞ் சன்மங் கைதவன் குலத்திற் றோன்றி
யெழில்பெறு பதும வன்ம னெனும்பெயர் பெற்று வாசம்
பொழிமலர்ப் பைந்தார் வேம்பின் பூந்தொடை புனைந்து நாளும்
பழிபவம் பயிலா வண்ணம் பாண்டிநா டளிப்பன் யானே.

[கழிதரும் ஏழாம் சன்மம், கைதவன் குலத்தில் தோன்றி,
எழில்பெறு பதுமவன்மன் எனும் பெயர்பெற்று வாசம்
பொழிமலர்ப் பைந்தார் வேம்பின் பூந்தொடை புனைந்து நாளும்
பழிபவம் பயிலா வண்ணம் பாண்டிநா(டு) அளிப்பன் யானே.]

இ — ள்: கழி தரும் ஏழாம் சன்மம் — கழிவதாகிய ஏழாவது பிறப்பில், கைதவன் குலத்தில் தோன்றி — பாண்டிய வமிசத்திலவதரித்து, எழில் பெறு பதுமவன்மன் எனும் பெயர் பெற்று — அழகு பொருந்திய பதுமவன்ம னென்னும் பெயரைத் தாங்கி, வாசம் பொழி மலர் பைம் தார் வேம்பின் பூம் தொடை புனைந்து — வாசனை வீசுகின்ற பசுமையாகிய மலர் மாலைகளையும் வேப்பம்பூ மாலையையும் அணிந்து, நாளும் பழி பவம் பயிலா வண்ணம் — எந்நாளும் பழி பாவங்களைச் செய்யாதபடி, யான் பாண்டி நாடு அளிப்பன் — யான் பாண்டி நாட்டை அரசாட்சி செய்வேன் எ — று.

ஏ—அசை. (24)

நீயுமப் பவத்திற் செல்வ நிறைந்திடும் விந்த நாட்டிற்
காயும்வெங் கதிர்வேன் மன்னன் கண்ணெனக் கதிர்கொண்முத்த
மேயும்வேய் மருட்டு மென்றோள் வசுமதி யென்னு நாமந்
தோயுமோ ரணங்கா வந்து தோன்றிநீ வளர்வா யுன்னே.

[நீயும்அப் பவத்தில் செல்வம் நிறைந்திடும் விந்த நாட்டில்
காயும்வெம் கதிர்வேல் மன்னன் கண்ணெனக் கதிர்கொள்முத்தம்
ஏயும்வேய் மருட்டும் மென்தோள் வசுமதி என்னும் நாமம்
தோயும்ஓர் அணங்கா வந்து தோன்றிநீ வளர்வாய் உன்னே.]

இ — ள்: நீயும் அ பவத்தில் — நீயும் அந்த ஏழாவது பிறப்பிலே, செல்வம் நிறைந்திடும் விந்த நாட்டில் — ஐசுவரியம் நிறைந்த விந்த தேசத்திலே, காயும் வெம் கதிர் வேல் மன்னன் கண் என — பகைவரை வருத்துகின்ற கொடிய ஒளி பொருந்திய வேற்படையைத் தாங்கிய அரசனது கண்களென்று சொல்லும்படி, கதிர் கொள் முத்தம் ஏயும் வேய் மருட்டும் மென்தோள் — ஒளியையுடைய முத்துக்கள் பொருந்திய மூங்கிலையும் மருளச் செய்கின்ற மிருதுவாகிய தோள்களையுடைய, வசுமதி என்னும் நாமம் தோயும் ஓர் அணங்கா வந்து தோன்றி நீ வளர்வாய் — வசுமதியென்னும் பெயரையுடைய ஓர் பெண்ணாக வந்து பிறந்து நீ வளருவாய், உன்னே — அங்ஙனம் வளருகின்ற நின்னை — று.

(25)

மங்கல முரச மார்ப்ப மன்றல்செய் தளிப்பா னுன்னிச்
செங்கதிர் மணிகள் வேய்ந்த செம்பொன்மண் டபஞ்சோ டித்துத்
துங்கவேற் கரனுன் றுதை தூதரி லோலி போக்க
வங்கண்வந் தெய்தும் வைவே லரசரை யறையக் கேட்டி.

[மங்கல முரசம் ஆர்ப்ப மன்றல்செய்(து) அளிப்பான் உன்னிச்
செங்கதிர் மணிகள் வேய்ந்த செம்பொன் மண்டபம் சோடித்துத்
துங்கவேல் கரன்உன் தாதை தூதரில் ஓலி போக்க
அங்கண்வந்(து) எய்தும் வைவேல் அரசரை அறையக் கேட்டி.]

இ — ள்: மங்கல முரசம் ஆர்ப்ப மன்றல் செய்து அளிப்பான் உன்னி — மங்கலகரமாகிய முரசப்பறை ஆரவாரிக்க விவாகஞ் செய்து கொடுக்க நினைத்து, செம் கதிர் மணிகள் வேய்ந்த செம் பொன் மண்டபம் சோடித்து — விளங்கிய கிரணங்களையுடைய இரத்தினங்கள் பதித்துச் செம்பொன்னினாற் செய்யப்பட்ட மண்டபத்தையலங்கரித்து, துங்க வேல் கரன் உன் தாதை — உயர்ச்சி பொருந்திய வேற்படையைத் தாங்கிய கையையுடைய உனது பிதாவானவன், தூதரில் ஓலி போக்க — தூதர்களிடத்தில் மணவோலையை யெழுதியனுப்ப, அங்கண் வந்து எய்தும் வை வேல் அரசரை அறைய கேட்டி — அவ்விடத்து வந்து சேருகின்ற கூரிய வேற்படையைத் தாங்கிய அரசர்களைக் கூறுவேன் கேட்கக்கடவாய் எ — று.

(26)

கொண்டல்கண் படுக்குஞ் சோலை குலவயோத் தியர்தங் கோமான்
வண்டலம் வருந்தண் பைந்தார் வளையுங்காந் தாரமன்ன
னெண்டலத் தரசர் போற்று மிருபதன் றுருப தேயன்
விண்டலத் தமரர் போற்றும் விறலுடை யவந்தி வேந்தன்.

[கொண்டல்கண் படுக்கும் சோலை குல(வு) அயோத் தியர்தம் கோமான்
வண்(டு)அலம் வரும்தண் பைந்தார் வளையும்காந் தாரமன்னன்
எண்தலத்(து) அரசர் போற்றும் இருபதன் துருப தேயன்
விண்தலத்(து) அமரர் போற்றும் விறல்உடை அவந்தி வேந்தன்.]

இ — ள்: கொண்டல் கண் படுக்கும் சோலை குலவு அயோத்தியர் தம் கோமான் — மேகங்கள் படிகின்ற சோலைகள் விளங்கப்பெற்ற அயோத்தி தேச ராசனும், வண்டு அலம் வரும் தண் பைம் தார் வளையும் காந்தார மன் னன் — வண்டுகள் சுழலுகின்ற குளிர்ந்த பசிய மாலைகள் சுற்றிய காந்தார தேசாதிபதியும், எண் தலத்து அரசர் போற்றும் இரு பதன் துருப் தேயன் — மதிக்கத் தகுந்த பூமியிலுள்ள அரசர்கள் துதிக்கின்ற இரண்டு பாதங்களையுடைய துருபதேய மகாராசனும், விண் தலத்து அமரர் போற் றும் விறல் உடை அவந்தி வேந்தன் — சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்களா லும் துதிக்கப்படுகின்ற வலிமையையுடைய அவந்திதேசராசனும் எ — று. (27)

பல்லவ தேய மாளும் பார்த்திவன் பன்னுந் தொன்னூல்
வல்லவன் யானைத் தானை வாரண வாசி மன்னன்
வில்லவ னரின்மாலை மிலைந்திடு நேரி வெற்பன்
நல்லொளி முடிசேர் மன்னர் நன்மணச் சாலை நண்ண.

[பல்லவ தேயம் ஆளும் பார்த்திவன் பன்னும், தொல்நூல்
வல்லவன், யானைத்தானை வாரண வாசி மன்னன்,
வில்லவன் ஆரின்மாலை மிலைந்திடு நேரி வெற்பன்,
நல்ஒளி முடிசேர் மன்னர் நல்மணச் சாலை நண்ண.]

இ — ள்: பல்லவ தேயம் ஆளும் பார்த்திவன் — பல்லவ தேசத்தை ஆளுகின்ற அரசனும், பன்னும் தொல் நூல் வல்லவன் யானை தானை வார ணவாசி மன்னன் — கூறப்படுகின்ற பழமையாகிய சாஸ்திரங்களில் வல்லவனிய யானைப் படைகளையுடைய காசிதேசராசனும், வில்லவன் — சேரராசனும், ஆரின் மாலை மிலைந்திடும் நேரிவெற்பன் — ஆத்திமாலையையணிந்த சோழராச னுமாகிய, நல் ஒளி முடி சேர் மன்னர் — நல்ல பிரகாசம் பொருந்திய முடியையணிந்த அரசர்களெல்லோரும், நல் மண சாலை நண்ண — நல்ல விவாக மண்டபத்தையடைய எ — று. (28)

யானுமங் கெய்த நீயன் றிசையளி முரன்று பாடுந்
தேனுமிழ் மலர்ப்பைத் தாரென் றிண்டிறற் றோளிற் சூட்டப்
பானுவின் குலத்தோர் முன்னும் பார்த்திவ ரநேக ரீண்டி
யூனுமிழ் படைக ளேந்தி யுருத்தென்னே டியுத்தஞ் செய்வார்.

[யானும் அங்(கு)எய்த, நீஅன்(று) இசைஅளி முரன்று பாடும்
தேன்உமிழ் மலர்ப்பைத் தார்என் திண்திறல் தோளில் சூட்டப்,
பானுவின் குலத்தோர் முன்னும் பார்த்திவர் அநேகர் ஈண்டி,
ஊன்உமிழ் படைகள் ஏந்தி, உருத்(து)என்னே(டு) யுத்தம் செய்வார்.]

இ — ள் : யானும் அங்கு எய்த — (பதுமவன்மபாண்டியனுகிய), யானும் அவ்விடத்திலே வர, நீ — (விந்ததேசாதிபதியின் புத்திரியாகிய லகுமதி யென்னும்) நீ, அன்று இசை அளி முரன்று பாடும் தேன் உமிழ் மலர் பைம் தார் என் திண் திறல் தோளில் சூட்ட — அற்றைக்காலத்து வண்டுகள் இசை யை ஆரவாரித்துப் பாடுகின்ற தேனைச் சொரிகின்ற பசிய மலர் மாலையை எனது மிக்க வலிமை பொருந்திய புயங்களிற் சூட்ட, பானுவின் குலத் தோர் முன்னும் பார்த்திவர் அநேகர் ஈண்டி — சூரிய வம்சத்தவர்கள் முதலா கிய அனேக அரசர்கள் திரண்டு, ஊன் உமிழ் படைகள் ஏந்தி — மாமிசங் களைக் கக்குகின்ற ஆயுதங்களைத் தாங்கி, உருத்து என்னோடு யுத்தம் செய் வார் — கோபங்கொண்டு என்னுடன் போர் புரிவார்கள் எ — று. (29)

அங்கவர் தம்மை யெல்லா மாடல்வெங் களிக்கூட் டத்தோர்
சிங்கமெ தென்ன வென்று சேயிழை யுனையான் கொண்டு
சங்கமா முரசு பம்பை தழங்கிட வானில் வாழும்
புங்கவர் பரவுங் கூடற் புரிதனிற் புகுந்த பின்னர்.

[அங்(கு)அவர் தம்மை எல்லாம், ஆடல்வெம் களிக்கூட் டத்(து)ஓர்
சிங்கம்அ(து) என்ன, வென்று, சேய்இழை உனையான் கொண்டு
சங்கம் மாமுரசு பம்பை தழங்கிட வானில் வாழும்
புங்கவர் பரவும் கூடல் புரிதனில் புகுந்த பின்னர்.]

இ — ள் : அங்கு அவர் தம்மை எல்லாம் — அவ்விடத்து அவ்வரசர்க ளெல்லாரையும், ஆடல் வெம் களி கூட்டத்து ஓர் சிங்கமது என்ன வென்று — கொலையில் வல்ல வெவ்விய யானைக் கூட்டத்துள் (சென்ற) ஓர் சிங்கத் தைப்போல வெற்றிகொண்டு, சேய் இழை — செம்மையாகிய ஆபரணங்களை யணிந்த பெண்ணே, சங்கம் மா முரசு பம்பை தழங்கிட — சங்குகளும் பெரிய முரசப்பறையும் ஒருகட்பறையும் ஆரவாரிக்க, வானில் வாழும் புங்கர் பர வும் கூடல் புரிதனில் — சுவர்க்கலோகத்தில் வாழுகின்ற தேவர்களாற் துதிக் கின்ற மதுராபுரியில், உனை யான் கொண்டு புகுந்த பின்னர் — உன்னை யான் கொண்டு சென்ற பின்பு எ — று. (30)

அளப்பருங் கால மன்போ டாயிழை நீயு நானு
முளப்படும் போகந் துய்த்திட் டுலகொரு குடைக்கீ ழாண்டு
வளப்படு மகங்க ளாற்றி வளநிதி மறையோர்க் கீந்து
களப்படுங் கறையி னன்றன் கனிகழல் பூசை செய்து.

[அளப்பரும் காலம் அன்போ(டு), ஆய்இழை நீயும் நானும்
உளப்படும் போகம் துய்த்திட்(டு), உல(கு)ஒரு குடைக்கீழ் ஆண்டு
வளப்படும் மகங்கள் ஆற்றி, வளநிதி மறையோர்க்(கு) ஈந்து,
களப்படும் கறையி னன்தன் கனிகழல் பூசைசெய்து.]

இ — ள்: அளப்பரும் காலம் அன்போடு — அளவில்லாத காலமாக அன்புடனே, ஆயிழை நீயும் நானும் உளப்படும் போகம் துய்த்திட்டு — ஆபரணங்களையணிந்த பெண்ணே நீயும் யானும் மனத்துக்கேற்ற போகசுகங்களையனுபவித்து, உலகு ஒரு குடைகீழ் ஆண்டு — உலகமுழுவதையும் ஒரு குடை நிழலிற் பரிபாலனஞ் செய்து, வளப்படும் மகங்கள் ஆற்றி — மிக்க பலன்களைத் தரவல்ல யாகங்களைச் செய்து, வள நிதி மறையோர்க்கு ஈந்து — மிகுந்த திரவியங்களைப் பிராமணர்களுக்குக் கொடுத்து, களப்படும் கறையினன் தன் கனி கழல் பூசை செய்து — நஞ்சுண்டதனற்கறுத்த திருமிடற்றையுடைய சிவபெருமானது ஒளிக்கின்ற வீரக்கழலணிந்த பாதங்களைப் பூசித்து எ — று. (31)

வள்ளைவார் குழைதோய் கண்ணுய் மழகளி றென்ன வாங்கோர்
பிள்ளையாம் பெறுவ மன்னேன் பெருங்கலை யுணர்ந்து தும்பி
கள்ளையார் கடுக்கை மாலைக் கடவுளுக் கடிமை பூண்டு
வெள்ளைவான் மதியம் போல வளர்ந்துபேர் விளங்கு நாளில்.

[வள்ளைவார் குழைதோய் கண்ணுய், மழகளி(று) என்ன ஆங்(கு)ஓர்
பிள்ளையாம் பெறுவம்; அன்னேன் பெருங்கலை உணர்ந்து தும்பி
கள்ளைஆர் கடுக்கை மாலைக் கடவுளுக்(கு) அடிமை பூண்டு
வெள்ளைவான் மதியம் போல வளர்ந்துபேர் விளங்கு நாளில்.]

இ — ள்: வள்ளை வார் குழை தோய் கண்ணுய் — வள்ளைக் கொடிபோன்ற நீண்ட காதளவும் பாய்ந்த கண்களையுடையவளே, மழ களிறு என்ன ஆங்கு ஓர் பிள்ளை யாம் பெறுவம் — இளமையாகிய ஆண்யானையைப்போல அவ்விடத்து ஒரு புத்திரனை யாங்கள் பெறுவோம், அன்னேன் பெரும் கலை உணர்ந்து — அப்புதல்வனைவன் பெரிய அறுபத்து நான்கு கலைஞானங்களையுங் கற்று, தும்பி கள்ளை ஆர் கடுக்கை மாலை கடவுளுக்கு அடிமை பூண்டு — வண்டுகள் தேனை யுண்ணுகின்ற கொன்றை மாலையையணிந்த சிவபெருமானுக்கு அடிமையாகி, வெள்ளை வான் மதியம் போல வளர்ந்து — வெண்ணிறமாகிய ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சந்திரனைப்போல வளர்ந்து, பேர் விளங்கு நாளில் — கீர்த்தி விளங்குகின்ற காலத்தில் எ — று. (32)

அணிகெழு செழும்பொற் சோதி யவிர்மணி முடியுஞ்சூட்டி
மணிமுடி யனந்தனேந்து மாநில மவன் பானல்கித்
தணிவருஞ் சனன மென்னுந் தழலினுங் கொடிய வெய்ய
பிணிகெட வேட்கை யோடும் பெருந்தவ மியற்ற வெண்ணி.

[அணிகெழு செழும்பொன் சோதி, அவிர்மணி முடியும் சூட்டி,
மணிமுடி அனந்தன் ஏந்து மாநிலம் அவன்பால் நல்கித்,
தணி(வு)அரும் சனனம் என்னும், தழலினும் கொடிய வெய்ய
பிணிகெட, வேட்கை யோடும் பெரும் தவம் இயற்ற எண்ணி.]

இ — ள்: அணி கெழு செழும் பொன் சோதி அவிர் மணி முடியும் சூட்டி — அழகு விளங்குகின்ற செழுமையாகிய பொற் பிரகாசம் தங்கிய இரத்தினங்கள் பதித்துச் செய்த முடியையுந் தரித்து, மணி முடி அனந்தன் ஏந்தும் மா நிலம் அவன் பால் நல்கி — இரத்தினங்கள் பொருந்திய ஆயிரஞ் சிரசுகளையுடைய ஆதிசேடனுற் சுமக்கப்பட்ட பெரிய பூமியை அப்புத்திரனிடத்திற் கொடுத்து, தணிவு அரும் சனனம் என்னும் — நீங்குதற்கரிய பிறப்பென்கின்ற, தழலினும் கொடிய வெய்ய பிணி கெட — அக்கினியினுங் கொடிய வெவ்விய நோயானது அற்றுப் போக வேண்டுமென்கின்ற, வேட்கை யோடும் — (நீங்காத) விருப்பத்தோடும், பெரும் தவம் இயற்ற எண்ணி — பெரிய தவங்களைச் செய்யக்கருதி எ — று. (33)

தென்றலங் கன்று சந்தச் சினைமலர் வாசம் வீசும்
குன்றமர்ந் தினிது வைகுங் குறுமுனி குறுக நம்பான்
மன்றலங் கோதை நீயும் யானுமாய் மருட்சி நீங்கி
யன்றவன் றன்னை நோக்கி யருந்தவ முழப்ப நின்றே.

[தென்றல் அம் கன்று, சந்தச் சினைமலர் வாசம் வீசும்,
குன்(று) அமர்ந்(து) இனிது வைகும் குறுமுனி குறுக நம்பால்,
மன்றல் அம்கோதை நீயும் யானுமாய், மருட்சி நீங்கி,
அன்(று) அவன் தன்னைநோக்கி, அருந்தவம் உழப்ப நின்றே.]

இ — ள்: தென்றல் அம் கன்று — இளம் தென்றற் காற்றானது, சந்த சினை மலர் வாசம் வீசும் — சந்தன மரக்கொம்பர்களிலுள்ள மலர் வாசனையை அளாவிவீசுகின்ற, குன்று அமர்ந்து இனிது வைகும் குறுமுனி தம்பால் குறுக — பொதியமலையில்கண் நன்கு வீற்றிருக்கின்ற அகஸ்திய முனிவர் எங்களிடத்திற்கு வரும்படி, மன்றல் அம் கோதை நீயும் யானுமாய் — வாசனை பொருந்திய கூந்தலையுடைய மங்கையே நீயும் யானுமாக, மருட்சி நீங்கி — மயக்கந் தவிர்ந்து, அன்று அவன் தன்னை நோக்கி — அந்நாளில் அவ்வகத்திய முனிவரைக் குறித்து, அரும் தவம் நின்று உழப்பம் — அரிய தவத்தை (நீலித்து) நின்று செய்வோம் எ — று.

ஏ — அசை, (34)

அரியநற் றவஞ்செய் காலே யகத்திய னெமக்கு ஞானத்
துரியநற் சிவயோ கத்தை யுவந்துப தேசஞ் செய்வா
னெரிசுடர்ப் பிழம்பா மேனி யெந்தையைச் சிந்தை தன்னிற்
றெரியுமவ் வியோக நின்று சித்தியா முத்தி சேர்வேம்.

[அரியநல் தவம்செய் காலே, அகத்தியன், எமக்கு ஞானத்(து)
உரியநல் சிவயோ கத்தை உவந்(து) உபதேசம் செய்வான்,
எரிசுடர்ப் பிழம்பாம் மேனி எந்தையைச் சிந்தை தன்னில்
தெரியும் அவ்யோகம் நின்று சித்தியாம் முத்தி சேர்வோம்.]

இ — ள்: அரிய நல் தவம் செய் காலே — அருமையாகிய நல்ல தவத்தைச் செய்யுங் காலத்து, அகத்தியன் — அகத்திய மகாமுனிவர், எமக்கு ஞானத்து உரிய நல் சிவ யோகத்தை உவந்து உபதேசம் செய்வான் — நம்மிருவருக்கும் ஞானத்திற்குரியதாகக் கூறப்படுகின்ற நல்ல சிவயோகாப்பியாசத்தை மகிழ்ச்சி கொண்டு உபதேசித்து அருளுவர், எரி சுடர் பிழம்பாம் மேனி எந்தையை — எரிகின்ற சுடர்ப் பிழம்பாகிய திருமேனியைக் கொண்ட எமது பிதாவாகிய சிவபெருமானே, சிந்தை தன்னில் தெரியும் அ யோகம் நின்று சித்தியா முத்தி சேர்வேம் — மனத்திலுணரத்தக்க அந்தயோக சாதனையில் நின்று அதனாற் சித்தித்த மோட்ச சாயுச்சியத்தை யடைவோம் எ — று.

(35)

நவமிகு பம்பை நாட்டி னுயுரு வெடுத்து முன்னுட்
சிவநிசி தன்னி லீசன் றெரிசனங் கிடைத்த பேற்றுற்
பவமகன் றுய்ய நன்மை பலித்தது பாவை நீயுந்
தவமதிவ் விரதந் தானே தவறிடா திழைத்தி யென்றுன்.

[நவம்மிகு பம்பை நாட்டில், நாய்உரு எடுத்து, முன்நாள்,
சிவநிசி தன்னில், ஈசன், தெரிசனம் கிடைத்த பேற்றால்,
பவம் அகன்(று) உய்ய, நன்மை பலித்தது, பாவை, நீயும்
தவம(து) இவ் விரதம் தானே தவறிடா(து) இழைத்தி என்றுன்.]

இ — ள்: நவம் மிகு பம்பை நாட்டில் நாய் உரு எடுத்து — புதுமை மிகுந்த பம்பை நாட்டில் நாயாகப் பிறந்து, முன்னுன் — பண்டைக் காலத்தில், சிவநிசி தன்னில் ஈசன் தெரிசனம் கிடைத்த பேற்றுல் — சிவராத்திரி தினத்தில் சிவதரிசனஞ் செய்த பேற்றினால், பவம் அகன்று உய்ய நன்மை பலித்தது — பாவங்களெல்லாம் நசித்து உய்யும் பொருட்டு நன்மை வாய்க்கப் பெற்றது, பாவை — பாவை போன்றவளே, நீயும் தவமது இவ்விரதம் தானே தவறிடாது இழைத்தி என்றுன் — நீயுந் தவமாகிய இச் சிவராத்திரி விரதத்தையே விதி வழுவாது அனுஷ்டிக்கக் கடவையென்று கூறினுன் எ — று.

(36)

ஒருவருந் திங்க டோறு முபயபக் கத்தி லுற்று
வருசதுர்த் தசிக டோறு மழுவலான் றன்னை வாசந்
தருமலர் கொடுபூ சித்துத் தணந்தெழு பிறப்பு நீங்கி
யிருவரும் பொருவி லாப்பே ரின்பவீ டெய்தி னரால்.

[ஒருவ அரும் திங்கள் தோறும், உபயபக் கத்தில் உற்று
வரு சதுர்த் தசிகள் தோறும், மழுவலான் தன்னை, வாசம்
தருமலர் கொடுபூசித்துத், தணந்(து) எழு பிறப்பு நீங்கி,
இருவரும், பொரு இலாப்போர் இன்பவீ(டு) எய்தினர்ஆல்.]

இ — ள்: ஒருவ அரும் திங்கள் தோறும் — நீங்குதற்கரிய மாதங்கடோறும், உபய பக்கத்தில் உற்று வரு சதுர்த்தசிகள் தோறும் — பூருவ அபர பக்கங்கள் இரண்டினும் வருகின்ற சதுர்த்தசித் திதிகளினெல்லாம், மழுவலான் தன்னை — மழுவாயுதத்தை வலக்கரத்திற்றுங்கிய சிவபெருமானை, வாசம் தரு மலர் கொடு பூசித்து — நறுமணம் வீசுகின்ற புஷ்பங்களைக் கொண்டு அருச்சனை செய்து, தணந்து எழு பிறப்பும் நீங்கி — தொடர்பாக வருகின்ற ஏழு பிறவிகளையும் நீங்கி, இருவரும் — விபரிசமகாராசனும் மனைவியாகிய குமுதவதியும், பொரு இலா பேரின்ப வீடு எய்தினர் — ஒப்பற்ற மோட்ச வீட்டையடைந்தார்கள் எ — று.

ஆல் — அசை. (37)

சிவன்றிருக் கோயின் மேவிச் சிவநிசி விரதந் தன்னிற்
சிவன்றனைத் தெரிசித் தோருஞ் சேருவர் முத்தி யென்றே
சிவன்றனை யுணர்ந்து நாளுஞ் சிந்தைசெய் முனிவர் கேட்பச்
சிவன்றனக் கடிமை பூண்ட சூதன்முன் செப்பினனே.

[சிவன்திருக் கோயில் மேவிச் சிவநிசி விரதம் தன்னில்
சிவன்தனைத் தெரிசித் தோரும், சேருவர் முத்தி என்றே
சிவன்தனை உணர்ந்து நாளும், சிந்தைசெய் முனிவர் கேட்பச்
சிவன்தனக்(கு) அடிமை பூண்ட சூதன்முன் செப்பினனே.]

இ — ள்: சிவன் திரு கோயில் மேவி சிவநிசி விரதம் தன்னில் — சிவபெருமானுடைய திருக்கோயிலின் கண்ணே சென்று சிவராத்திரி விரத தினத்தில், சிவன் தனை தெரிசித்தோரும் சேருவர் முத்தி என்று — சிவபெருமானை (விரதமனுஷ்டியாது) தரிசனை செய்தவர்களும் மோட்ச வீட்டையடைவர்களென்று, சிவன் தனை உணர்ந்து நாளும் சிந்தைசெய் முனிவர் கேட்ப — சிவபெருமானை மனத்தாலறிந்து எந்நாளுந் தியானஞ் செய்கின்ற நைமிசாரணிய முனிவர்கள் கேட்கும்படி, சிவன் தனக்கு அடிமை பூண்ட சூதன் முன் செப்பினன் — சிவபெருமானுக்கு அடியவராகிய சூதமகா முனிவர் பண்டைக் காலத்துக் கூறியருளினர் எ — று. (38)

விபரிசச்சருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் 628

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

குபேரச் சருக்கம்

ஓதமுற் றிடுபாற் கடலடுக் களைக்க ணமைத்தவா
லோதன மருந்து
நாதனற் சங்கக் குழையணி காத னகைத்துமுப்
புரமெரித் திடுநாண்
மாதனு வெனப்பொற் கிரிகுழைத் தேறும் வசுந்தரைத்
தேர்நனி கடவுஞ்
சூதனுக் கிணையாஞ் சூதன்மற் றின்னுஞ் சிவநிசிக்
கதைதொடுத் துரைப்பான்.

[ஓதம்உற் றிடுபால் கடல்அடுக் களைக்கண் அமைத்தஆல
ஓதனம் அருந்தும்
நாதன், நல் சங்கக் குழைஅணி காதன், நகைத்துமுப்
புரம்எரித் திடும்நாள்,
மாதனு எனப்பொன் கிரிகுழைத்(து) ஏறும் வசுந்தரைத்
தேர்நனி கடவும்
சூதனுக்(கு) இணையாம் சூதன்மற்(று) இன்னும் சிவநிசிக்
கதைதொடுத்(து) உரைப்பான்.]

இ — ள்: ஓதம் உற்றிடு பால் கடல் அடுக்களைக் கண் அமைத்த — திரை பொருந்திய பாற்கடலாகிய பாகசாலையில் சமைக்கப்பட்ட, ஆல ஓதனம் அருந்தும் நாதன் — நஞ்சாகிய உணவையுண்டருளிய தலைவரும், நல் சங்க குழையணி காதன் — நல்ல சங்குக் குண்டலங்களையணிந்த திருக்காதுகளையுடையவருமாகிய சிவபெருமான், நகைத்து முப்புரம் எரித்திடு நாள் — சிரித்து முப்புரங்களையுந் தகித்த அற்றைக் காலத்து, மாதனு என பொன் கிரி குழைத்து — பெருமை பொருந்திய வில்லாக மகாமேருகிரியை வளைத்து, ஏறும் வசுந்தரை தேர் நனி கடவும் — இவர்ந்து சென்ற பூமியாகிய இரதத்தை வேகமாய்ச் செலுத்திய, சூதனுக்கு இணையாம் — பாகராகிய பிரமதேவருக்கு இணையாகக் கூறப்படுகின்ற, சூதன் — சூதமுனிவரானவர், இன்னும் சிவநிசிகதை தொடுத்து உரைப்பான் — மேலுஞ் சிவராத்திரி விரத சரித்திரத்தைத் தொடுத்துக் கூறுவாராயினர் எ — று.

மற்று — அசை.

(1)

முத்தவெண் மணிதோ டரித்தநூல் வடத்தின் முறைமுறை
குறைவறக் கோத்து
வைத்தெனச் சிதறி விரிந்தபூம் பாளை மரகதக்
கமுகினிற் குலையைத்

துய்த்தலீ கடுவன் பாய்ந்துறச் சிந்தச் சுரிமுகக்
கூன்பிடர்ச் சங்கங்
கைத்தலத் தெடுத்துக் கம்பள ரெறிந்து கடிந்திடுங்
காம்பிலி நாடு.

[முத்தவெண் மணித்தோள் தரித்தநூல் வடத்தின் முறைமுறை
குறை(வு)அறக் கோத்து
வைத்(து)எனச், சிதறி விரிந்தபூம் பாளை, மரகதக்
கமுகினில் குலையைத்
துய்த்(து)அலீ கடுவன் பாய்ந்(து)உறச் சிந்தச் சுரிமுகக்
கூன்பிடர்ச் சங்கம்
கைத்தலத்(து) எடுத்துக், கம்பளர் எறிந்து கடிந்திடும்
காம்பிலி நாடு.]

இ — ள் : முத்த வெண் மணி தோள் தரித்த நூல் வடத்தில் முறை முறை குறைவு அற கோத்து வைத்து என — வெண்மையான முத்துமணிகளைத் தோளிற்றரித்த பூணூலாகிய வடத்தில் வரிசைவரிசையாகக் குறைவின்றிக் கோத்துவைத்தாற்போல, சிதறி விரிந்த பூம் பாளை — பரந்து விரிந்த பூம் பாளைகளையுடைய, மரகத கமுகினில் குலையை — மரகதரத்தினம் போன்ற (பச்சை நிறத்தையுடைய) கமுகமரத்தினது குலைகளை, துய்த்து அலீ கடுவன் பாய்ந்து உற சிந்த — உணவுகளைப் புசித்து அலைகின்ற குரங்குகளானவை பாய்ந்து மிகச் சிதைவு செய்ய, சுரிமுக கூன் பிடர் சங்கம் கை தலத்து எடுத்து — முறுக்குப் பொருந்திய முகத்தையும் வளைந்த பிடரையுமுடைய சங்குகளைக் கைகளினாலெடுத்து, கம்பளர் எறிந்து கடிந்திடும் காம்பிலி நாடு — உழவர்கள் எறிந்து துரத்துகின்ற காம்பிலி நாடு (என்று ஓர் நாடுளது) என — று.

(2)

கயமலர் துவைத்துக் கரைதவழ் பணிலங் கான்றிடத்
தோன்றுநித் திலத்தை
முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி முகைமுறுக்
குடைந்துதே னெழுக்கும்
வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி முறித்திடத்
தெறித்தவெண் மணிமுத்
தயன்முதிர்ந் திடுசூற் றவளைமேற் படநொந் தாங்கது
பொறுத்திடா தரற்றும்.

[கயமலர் துவைத்துக், கரைதவழ் பணிலம் கான்றிடத்
தோன்று நித்திலத்தை,
முயல்மதிப் பிள்ளை எனப்பகல் காவி முகைமுறுக்(கு)
உடைந்து தேன் ஒழுக்கும்

வயல் மருங்(கு) எழுந்த கரும்பினைக், கவரிமுறித் திடத்
தெறித்த வெள் மணிமுத்(து)
அயல் முதிர்ந் திடுசூல் தவளமேல் படநொந்(து) ஆங்கது
பொறுத்திடா(து) அரற்றும்.]

இ — ள்: கய மலர் துவைத்து — தடாகத்தின்கணுள்ள புஷ்பங்களை மிதித்து, கரை தவழ் பணிலம் கான்றிட — கரைகளில் தவழ்ந்து செல்லுகின்ற சங்குகளானவை கக்குதலினால் பிரகாசிக்கின்ற முத்துக்களை, முயல் மதி பிள்ளையென — முயற்களங்கத்தைக் கொண்ட இளஞ் சந்திரனென்று, பகல் காவி முகை முறுக்கு உடைந்து தேன் ஒழுக்கும் — பகற்காலத்திற் கருங்காலி முகைகளானவை இதழ் விண்டு தேனைச் சிந்துகின்ற, வயல் மருங்கு எழுந்த கரும்பினை — வயல்களின் பக்கத்தில் வளர்ந்த கரும்புகளை, கவரி முறித்திட — கவரிமான்கள் முரித்தலினால், தெறித்த வெண்மணி முத்து — சிந்திய வெள்ளிய முத்துக்களானவை, அயல் முதிர்ந்திடு சூல் தவளை மேல்பட — அயலிலுள்ள கருப்பம் முதிர்ந்த தவளைகளின் மேற் படுதலும், நொந்து — வருந்தி, ஆங்கு அது பொறுத்திடாது அரற்றும் — அவ்விடத்து அத்தவளைகளானவை சகிக்கலாற்றாது அலறும் எ — று. (3)

இலைதலை விரிந்த நெட்டுடற் பூக மேற்றவொண்
டாற்றிளங் கதலி
யலைதலைத் தவிராத் தூங்குதீங் கனிசே ராம்பிர
மனற்பொறி சிதறு
முலைமுகத் துருக்கிப் பழுத்தபொற் சுளைக ளுற்றமுட்
குடப்பழப் பனசந்
தலைவளை குலைச்செஞ் சாலிநீள் வயலின் றலைத்தலை
தழைத்துநின் றோங்கும்.

[இலைதலை விரிந்த நெட்(டு)உடல் பூகம் ஏற்றவள்
தாற்(று)இளம் கதலி,
அலைதலைத் தவிராத் தூங்குதீம் கனிசேர் ஆம்பிரம்
அனல்பொறி சிதறும்
உலைமுகத்(து) உருக்கிப் பழுத்தபொன் சுளைகள் உற்றமுள்
குடப்பழப் பனசம்
தலைவளை குலைச் செஞ்சாலிநீள் வயலின் தலைத்தலை
தழைத்(து)நின்(று) ஓங்கும்.]

இ — ள்: இலை தலை விரிந்த நெட்டு உடல் பூகம் — தலையின் கண்ணை இலை விரியப்பெற்ற நீண்ட உடலையுடைய கமுகுகளும், ஏற்ற ஒள் தாறு இளம் கதலி — உயர்வு பொருந்திய ஒளியமைந்த தாறுகளைக் கொண்ட இளமையாகிய வாழைகளும், அலை தலை தவிரா தூங்கு தீம் கனி சேர் ஆம்பிரம் —

அசைதல் ஒளியாது தூங்குகின்ற தித்திப்பாகிய பழங்கள் நிறைந்த மாமரங்களும், அனல் பொறி சிதறும் உலை முகத்து உருக்கி பழுத்த பொன் சுளைகள் உற்ற முள் குட பழ பனசம் — அக்கினிப் பொறிகளைச் சிந்துகின்ற உலை முகத்திலுருகச் செய்து பழுப்பு ஏற்றிய பொன் போன்ற சுளைகளையுடைய முட்கள் பொருந்திய குடத்துக்குச் சமானமாகிய பழங்களைக் கொண்ட பலா மரங்களும், தலை வளை குலை செம் சாலி — தலைகள் வளைந்த கதிர்களைக் கொண்ட செந்நெற்களும், நீள் வயலின் தலைத்தலை தழைத்து நின்று ஒங்கும் — நீண்ட வயல்களிலே இடமிடங்கடோறும் ஒங்கி வளர்ந்து நிற்கும் எ — று.

(4)

இரும்புகாய்ந் தொத்த செக்கர்வா னெழுந்த
விளமதிக் குழவியை யளிகள்
விரும்புபூ மலர்த்தா தினைச்சிறு நுதலின்
வெண்டிரு நீறெனச் சாத்தி,
யரும்பெனுங் கலசத் துறுநறு நெய்வார்த்
தடர்சினைத் தொட்டில்வைத் தசைத்துச்,
சுரும்புதா லிசைப்ப மென்றளிர்ச் சாணை
துயிற்றியே வளர்த்திடுஞ் சோலை.

[இரும்புகாய்ந்(து) ஒத்த செக்கர்வான் எழுந்த
இளமதிக் குழவியை, அளிகள்
விரும்புபூ மலர்த்தா தினைச்சிறு நுதலின்
வெண்திரு நீ(று)எனச் சாத்தி
அரும்(பு)எனும் கலசத்(து) உறுநறு நெய்வார்த்(து)
அடர்சினைத் தொட்டில்வைத்(து) அசைத்துச்
சுரும்புதால் இசைப்ப மெல்தளிர்ச் சாணை
துயிற்றியே வளர்த்திடும் சோலை.]

இ — ள்: இரும்பு காய்ந்து ஒத்த செக்கர் வான் எழுந்த இளமதிக் குழவியை — இரும்பைப் பழுக்கக் காய்ச்சினாற்போன்ற செக்கர் மேகத்திலுதித்த இளம்பிறைச் சந்திரனுகிய குழந்தையை, அளிகள் விரும்பு பூ மலர் தாதினை சிறு நுதலில் வெள் திருநீறு எனச் சாத்தி — வண்டுகள் விரும்புகின்ற புஷ்பங்களின் பராகத்தைச் சிறிய நெற்றியின் கண்ணே வெள்ளிய திருநீறுகத் தரித்து, அரும்பு எனும் கலசத்து உறுநறுநெய் வார்த்து — முகையாகிய கலசத்திற் பொருந்திய நறிய நெய்யை வார்த்து, அடர் சினை தொட்டில் வைத்து அசைத்து — நெருங்கிய கிளைகளாகிய தொட்டிலிற் கிடத்தி அசைத்து, சுரும்பு தால் இசைப்ப — வண்டுகள் தாலாட்டுதலாகிய இசையைப் பாட, மெல் தளிர் சாணை துயிற்றி — மிருதுவாகிய தளிர்களென்னுஞ் சாணையில் நித்திரை செய்வித்து, வளர்த்திடும் சோலை — வளரும்படி செய்யும் சோலைகளானவை எ — று.

ஏ — அசை.

(5)

இனையன வளங்கூர்ந் திடுநெடு நாட்டி லிருங்கலைத்
துறையெலா முணர்ந்தோன்
வனைதுழா யலங்கற் கண்ணனு மறியா மலரடி
வந்தனை புரிந்து
நினைவருங் காம முதலமுக் குறும்பி னெடும்பகை
கடிந்து நீணிலத்திற்
றனைநிக ரான சுத்தநல் வேள்வி தத்தனென்
றுளனெரு மறையோன்.

[இனையன வளங்கூர்ந்திடு நெடு நாட்டில்
இருங்கலைத் துறையெலாம் உணர்ந்தோன்,
வனைதுழாய் அலங்கல் கண்ணனும் அறியா
மலரடி வந்தனை புரிந்து
நினை(வ)அரும் காமம் முதலமுக் குறும்பின்
நெடும்பகை கடிந்து நீள்நிலத்தில்
தனைநிகரான சுத்தநல் வேள்வித் தத்தன்என்(று)
உளன்ஒரு மறையோன்.]

இ — ள் : இனையன வளம் கூர்ந்திடு நெடு நாட்டில் — இத்தன்மையாகிய செழிப்பு மிகுந்த நெடிய அந்தக் காம்பிலி நாட்டில், இரும் கலை துறை யெலாம் உணர்ந்தோன் — பெரிய சாஸ்திர வழிகள் எல்லாவற்றையும் அறிந் தவனும், வனை துழாய் அலங்கல் கண்ணனும் அறியா மலர் அடி வந்தனை புரிந்து — தொடுக்கப்பட்ட துளசி மாலையையணிந்த மாயவனுமறியாத (சிவ பெருமானுடைய) தாமரை மலர் போன்ற திருப்பாதங்களை நமஸ்கரித்து, நினைவு அரும் காமம் முதல முக்குறும்பின் நெடும் பகை கடிந்து — நினைத் தற்கரிய காமம் வெகுளி மயக்கமாகிய முக்குறும்புகளினதும் மிக்க பகையை அழித்து, நீள் நிலத்தில் — நீண்ட பூமியின் கண்ணே, தனை நிகரான — தனக்குப் (பிறர் ஒருவரும் நிகராகாது) தானே நிகராக இருக்கின்ற, சுத்த நல் வேள்வி தத்தன் என்று உளன் ஒரு மறையோன் — சுத்தமாகிய நன்மை பொருந்திய வேள்வித்தத்தன் என்னும் பெயரையுடையவனாகிய பிராமணன் ஒருவன் இருந்தான் எ — று. (6)

அன்னமா மறையோ னம்புலப் பகைசெற்
றுற்றிய வருந்தவப் பேற்றுற்
கன்னல்வே ளெனவோர் நன்மகப் பெற்றுன்
கருதருங் குணநிதி யவன்பேர்
முன்னமுந் நூலின் வினைவிதி முறையின்
முடித்தபின் முதுக்குறை வுடையோ
னுன்னருஞ் சுருதி முதற்கலை பயிற்ற
வோதினு ளுளத்திலுற் றுணர்ந்தான்

[அன்னமா மறையோன் ஐம்புலப் பகைசெற்(று)
ஆற்றிய அருந்தவப் பேற்றுல்
கன்னல்வேள் எனஓர் நல்மகப் பெற்றுன்
கருதஅரும் குணநிதி அவன்பேர்
முன்னம்முந் நூலின் விதிவித முறையின்
முடித்தபின் முதுக்குறை(வு) உடையோன்
உன்ன அரும்சுருதி முதல்கலை பயிற்ற
ஓதினுள் உளத்தில்உற்(று) உணர்ந்தான்.]

இ — ள்: அன்ன மா மறையோன் — அந்தப் பெருமை பொருந்திய பிராமணன், ஐம் புல பகை செற்று ஆற்றிய அரும் தவ பேற்றுல் — சத்த பரிச ரூப ரச கந்தமாகிய பஞ்சப் புலன்களின் பகைகளையும் அழித்துச் செய்த அரிய தவப் பலத்தினுல், கன்னல் வேள் என ஓர் நல் மகப் பெற்றுன் — கருப்பு வில்லையுடையவனுகிய மன்மதனைப் போல ஒரு நல்ல புத்திரனைப் பெற்றுன், அவன் பேர் கருத அரும் குணநிதி — அவனுடைய பெயர் எண்ணுதற்கரிய குணநிதியாகும், முன்னம் முந்நூலின் விதி விதி முறையின் முடித்தபின் — அவனுக்கு முன்னரே உபவிதாரணத்தை விதிப்படி செய்து முடித்த பின்பு, முதுக்குறைவு உடையோன் — பேரறிவுடைய அவனது பிதாவாகிய வேள்விதத்தன், உன்ன அரும் சுருதி முதல் கலை பயிற்ற — எண்ணுதற்கரிய வேத முதலிய சாஸ்திரங்களெல்லாவற்றையுங் கற்பிக்க, ஓதினுன் உளத்தில் உற்று உணர்ந்தான் — கற்று மனத்தில் அறிந்து தெளிந்தான் என — று. (7)

தூமமார்ந் திருண்டு சுருண்டுநீண் டிடுமைச்
சுரிகுழற் றோகையர் மருண்டு
காமனு மென்னைக் காமுறு பருவமுற்றபின்
கற்றைவெண் கதிர்க்கால்
சோமனுண் டளப்பான் முதனவக் கிரகஞ்
சுகம்பெறு முகூர்த்தநன் ஞாளார்
வாமமே கலைப்பொற் குலக்கொடி தனனை
மறைப்படி வதுவைசெய் திட்டான்.

[தூமம் ஆர்ந்(து) இருண்டு சுருண்டு நீண்டிடும் மைச்
சுரிகுழல் தோகையர் மருண்டு
காமனும் என்னைக் காமுறு பருவம் உற்றபின்
கற்றைவெண் கதிர்க்கால்
சோமன் ஆண்(டு) அளப்பான்முதல் நவக் கிரகம்
சுகம் பெறு முகூர்த்தநல் நாள் ஓர்
வாமமேகலைப் பொன் குலக்கொடி தன்னை
மறைப்படி வதுவைசெய் திட்டான்.]

இ — ள்: தூமம் ஆர்த்து இருண்டு சுருண்டு நீண்டிடும் மை சுரிகுழல் தோகையர் — நறும்புகை ஊட்டப்பட்டுக் கறுத்துச் சுருண்டு நீண்ட மயிர்ச்சாந்தணிந்த சுரித்த கூந்தலையுடைய பெண்கள், மருண்டு காமனும் என்ன காமுறும் பருவம் உற்ற பின் — மயங்கி மன்மதனேயென்று விரும்பத்தக்க பருவம் அடைந்த பின்பு, கற்றை வெள் கதிர் கால் சோமன் — கூட்டமாகிய வெள்ளிய கிரணங்களைக் கக்குகின்ற சந்திரனும், ஆண்டு அளப்பான் முதல் — ஒரு வருடத்திற்கு ஒருமுறை ஓரிராசியிற் செல்லுகின்ற வியாழனும் முதலாகிய, நவக்கிரகம் சுகம் பெறு முகூர்த்த நல் நாள் — ஒன்பது கிரகங்களுஞ் சுகத்தைத் தரும் நிலையில் நிற்கின்ற நலல முகூர்த்தத்தில், ஓர் வாமமேகலை பொன் குல கொடி தன்னை — அழகிய மேகலாபரணமணிந்த இலக்குமி போன்ற குல மகளொருத்தியை, மறைப்படி வதுவை செய்திட்டான் — வேதவிதிப்படி விவாகஞ்செய்தான் எ — று. (8)

வேறு

இன்பமுற் றன்னை தந்தை யில்வயி னிருக்கு மந்நாண்
மன்பதை மதிக்குஞ் சீர்த்தி வளர்குண நிதியா மைந்தன்
புன்புல மீதூர்ந் தூழின் பொறித்திடு விதியின் கொட்பாற்
றுன்பமும் பகையு நல்குஞ் சூதின்மேன் மனம்வைத் தானே.

[இன்பம்உற்(று) அன்னை தந்தை இல்வயின் இருக்கும் அந்நாள்
மன்பதை மதிக்கும் சீர்த்தி வளர்குண நிதியாம் மைந்தன்
புன்புலம் மீதூர்ந்(து) ஊழின் பொறித்திடும் விதியின் கொட்பால்
துன்பமும் பகையும் நல்கும் சூதின்மேல் மனம்வைத் தானே.]

இ — ள்: இன்பம் உற்று — அவளுடன் போகசுகத்தை யனுபவித்துக் கொண்டு, அன்னை தந்தை இல் வயின் இருக்கும் அந்நாள் — தாய் தந்தையரது இல்லத்தில் வாழ்ந்திருக்கும் அற்றைக் காலத்து, மன்பதை மதிக்கும் சீர்த்தி வளர் குண நிதியாம் மைந்தன் — மனுடர்களினால் மதிக்கப்படுகின்ற சீர்த்திகள் வளரப்பெற்ற குணநிதியென்னும் பெயரையுடைய புத்திரன், புன்புலமீதூர்ந்து — தீய அறிவு மிகுந்து, ஊழின் பொறித்திடும் விதியின் கொட்பால் — ஊழ்வினையின்படியெழுதப்பட்ட விதியின் வலியால், துன்பமும் பகையும் நல்கும் — துன்பங்களையும் பகைகளையும் விளைவிக்கின்ற, சூதின் மேல் மனம் வைத்தான் — சூதாட்டத்தின்மேல் விருப்பங்கொண்டனன் எ — று.
ஊ — அசை. (9)

அற்புள னய தந்தை யறிவுரு வண்ணங் கல்விச்
சொற்பயி லாதா ரோடு துன்னிவெங் கழகந் நண்ணி
னற்பக லிரவெப் போது நன்மதி மருட்சி கூர்ந்து
பொற்கலன் கலிபொற் காசு பொருதுநா டோறுந் தோற்பன்.

[அற்(பு)உளன் ஆய தந்தை அறி(வு)உரு வண்ணம் கல்விச்
சொல்பயி லாதாரோடு துன்னிவெம் கழகம் தன்னில்
நல்பகல் இர(வு)எப் போதும் நல்மதி மருட்சி கூர்ந்து
பொன்கலன் கலிபொன் காசு பொருது நாள்தோறும் தோற்பன்.]

இ — ள்: அன்பு உளன் ஆய தந்தை அறிவு உரு வண்ணம் — அன்பு பொருந்தியவனுகிய தனது பிதா அறியாதபடி, கல்வி சொல் பயிலாதாரோடு துன்னி — கல்வியென்னுஞ் சொல்லேத்தானும் அப்பியாசஞ் செய்யாத (மூட்டர்களோடு) கூடி, வெம் கழகம் தன்னில் — கொடிய சூதாடுமிடத்தில், நல் பகல் இரவு எப்போதும் — நல்ல பகலுமிரவுமாகிய எக்காலத்தினும், நல் மதி மருட்சி கூர்ந்து — நல்லறிவு மயங்கப் பெற்று, நாள் தொறும் பொருது — தினந்தோறுஞ் சூதாடி, பொன் கலன் கலி பொன் காசு தோற்பன் — பொன்னுபரணங்களையும் வஸ்திரங்களையும் பொற்காசுகளையுந் தோல்வியடைவான் எ — று. (10)

தனையன் யாண் டுற்ரு னென்று தாதைகேட் டிடும்போ தெல்லா
மனைமிக வெருவி யோதற் ககன்றன னென்று தீய
வினையம தானகூது மறைத்தனள் விளம்ப முந்நூல்
வனைதரு மார்பன் சற்று முணர்ந்திலன் வாழு நாளில்.

[தனையன் யாண்(டு)உற்றுன் என்று தாதைகேட் டிடும்போ(து) எல்லாம்
மனைமிக வெருவி ஓதற்(கு) அகன்றனன் என்று தீய
வினையம(து) ஆனகூது மறைத்தனள் விளம்ப முந்நூல்
வனைதரு மார்பன் சற்றும் உணர்ந்திலன் வாழும்நாளில்.]

இ — ள்: தனையன் யாண்டு உற்றுன் என்று தாதை கேட்டிடும் போது எல்லாம் — மகன் எங்குச் சென்றுனென்று பிதாக் கேட்கும் போதெல்லாம், மனை மிக வெருவி — தாயானவள் மிகவும் பயங்கரமடைந்து, ஓதற்கு அகன்றனன் என்று — படித்தற்குச் சென்றுனென்று, தீய வினையமதான சூது மறைத்தனள் விளம்ப — கொடிய தொழிலாகிய சூதாட்டத்திற்குச் சென்றமையை மறைத்துக் கூற, முந்நூல் வனைதரும் மார்பன் — முப்புரியாகிய உபவீதந்தரித்த மார்பையுடைய வேள்விதத்தனுவன், சற்றும் உணர்ந்திலன் வாழும் நாளில் — சிறிதுமறியாதவனுய்ச் சீவிக்குங் காலத்தில் எ — று. (11)

ஆய்மகன் றன்னை வாவென் றழைத்துநீ யிழைக்கு மிந்தத்
தீயசூ துற்றை தேரி னுனையுமிங் கெனையுஞ் சிறிக்
காய்வனென் றுள்ளத் தஞ்சிக் கவறுக டவறுசெய்யுந்
தாயநீ யாடுஞ் சூது தனையொழித் துரைத்தேன் முற்றும்.

[ஆய்மகள் தன்னை வாவென்(று) அழைத்துநீ இழைக்கும் இந்தத்
தீயசூ(து) உந்தை தேரின் உன்னையும்இங்(கு) எனையும் சீறிக்
காய்வன்என்(று) உள்ளத்(து) அஞ்சிக் கவறுகள் தவறுசெய்யும்
தாயம்நீ ஆடும் சூது தனைஒழித்(து) உரைத்தேன் முற்றும்.]

இ — ள்: ஆய் மகள் தன்னை வா என்று அழைத்து — தாயானவள் புத்திரனுடைய குணநிதியை வருகவென்றழைத்து, நீ இழைக்கும் இந்த நீய சூது உந்தை தேரின் — நீ யாடுகின்ற கொடிய இச் சூதை உனது பிதா அறிவராயின், உன்னையும் இங்கு எனையும் சீறி காய்வன் என்று உள்ளத்து அஞ்சி — உன்னையுமென்னையும் இவ்விடத்திற் கோபங்கொண்டு கண்டிப்பாரென்கின்ற மனப்பயத்தினால், நீ ஆடும் தவறுகள் கவறு செய்யும் தாயம் சூது தனை — நீ விளையாடுகின்ற கவறுட்டமுந் தீமையை வருவிக்கின்ற தாயமும் சூதுமாகிய இவைகளை, முற்றும் ஒழித்து உரைத்தேன் — முழுவதையும் மறைத்துக் கூறினேன் எ — று. (12)

உந்தைதன் னொழுக்க நீதி யுணர்ந்திலை யந்த ணாளர்
மைந்தர்க ணடக்கை கண்டு மதிக்கிலை யென்று மாழ்கிக்
கந்தமைக் குவளை வாட்கண் கலுழ்ந்தவ ளுரைக்கு மாற்றஞ்
சிந்தையிற் கொள்ளான் வஞ்சக் கணிகையர் திறத்திற் சேர்வான்.

[உந்ததன் ஒழுக்கம் நீதி உணர்ந்திலை அந்தணாளர்
மைந்தர்கள் நடக்கை கண்டு மதிக்கிலை என்று மாழ்கிக்
கந்தமைக் குவளை வாட்கண் கலுழ்ந்(து) அவள் உரைக்கும் மாற்றம்
சிந்தையில் கொள்ளான் வஞ்சக் கணிகையர் திறத்தில் சேர்வான்.]

இ — ள்: உந்தை தன் ஒழுக்கம் நீதி உணர்ந்திலை — உன் பிதாவினது நல்லொழுக்கத்தையும் நீதி நிலையையும் அறிந்தாயில்லை, அந்தணாளர் மைந்தர்கள் நடக்கை கண்டு மதிக்கிலை — பிராமணர்களது புத்திரர்களின் நடக்கையைப் பார்த்து (நல்லவொழுக்கமின்னது தீயவொழுக்கமின்னதென்று) மதித்தாயுமில்லை, என்று மாழ்கி — என்று (கூறி) மனம்வருந்தி, கந்தமை குவளை வாள் கண் கலுழ்ந்து — வாசனை பொருந்திய கருங்குவளை மலரையும் வாளையுமொத்த கண்களிலிருந்து நீர் சொரிந்து, அவள் உரைக்கும் மாற்றம் சிந்தையில் கொள்ளான் — அவள் கூறுகின்ற வார்த்தைகளை மனத்திற் சிந்தியாதவனும், வஞ்ச கணிகையர் திறத்தில் சேர்வான் — வஞ்சகத்தன்மைகள் குடிகொண்ட வேசியர்களிடத்திற் செல்வான் எ — று. (13)

வாட்டடங் கருங்கட் சூளை மகளிர்மேன் மனம்வைப் போரைக்
கோட்டரு கள்ளு நாளுங் குடிப்பவர் நம்மைக் கூடி
யீட்டரும் பொருள வாவுற் றிருந்தவ ரூடு வோரை
வேட்டமேன் மனம்வைப் போரை யாவரே விலக்க வல்லார்.

[வாள்தடம் கருங்கண் சூனை மகளிர்மேல் மனம்வைப் போரைக்
கோள்தரு கள்ளு நாளும் குடிப்பவர் தம்மைக் கூடி
ஈட்டஅரும் பொருள் அவாஉற்(று) இரும்கவ(று) ஆடுவோரை
வேட்டம்மேல் மனம்வைப்போரை யாவரே விலக்க வல்லார்.]

இ — ள் : வாள் தடம் கரும் கண் சூனை மகளிர்மேல் மனம் வைப்போரை — வாள்போன்ற விசாலமாகிய கரிய கண்களையுடைய வேசிப் பெண்களிடத்து மனப்பற்று வைப்பவர்களையும், கோள் தரு கள்ளு நாளும் குடிப்பவர் தம்மை — கோள்களை விலக்கின்ற கள்ளை எந்நாளுங் குடிப்பவர்களையும், கூடிஈட்ட அரும்பொருள் அவாவுற்று இரும்கவறு *ஆடுவோரை — கூடித்தேடுதற் கரிய பொருளிச்சை கொண்டு பெரிய சூதாடுபவர்களையும், வேட்டம் மேல் மனம் வைப்போரை — வேட்டையாடுவதில் மனம் வைப்பவர்களையும், யாவரே விலக்க வல்லார் — (அத்தொழில்களினின்றும்) யார்தான் தடுக்க வல்லவர் எ — று. (14)

இனையநீர் மையினு னென்று மிசைந்துளா னில்லி னேர்நா
ளனைதுயி லமைய நோக்கி யத்தன்மு ன்னவள்பா னல்கும்
புனைமணி யாழி தன்னைப் பொருக்கெனத் திருடிப் போகி
வினையவெங் கவற்றி னடித் தோற்றனன் வேறொன் றில்லான்.

[இனையநீர் மையினுன் என்றும் இசைந்(து) உளான் இல்லில் ஓர்நாள்
அனைதுயில் அமையம் நோக்கி அத்தன்மு ன் அவள்பால் நல்கும்
புனைமணி ஆழிதன்னைப் பொருக்கெனத் திருடிப்போகி
வினைய வெம்கவற்றின் ஆடித் தோற்றனன் வே(று) ஒன்று இல்லான்.]

இ — ள் : இனைய நீர்மையினுன் என்றும் இசைந்து உளான் — இவ்விதமாகிய செயல்களை எந்நாளும் பொருந்தப் பெற்றவனுகிய அக்குணநிதியானவன், இல்லின் ஓர் நாள் அனைதுயில் அமையம் நோக்கி — இல்லத்தில் ஓர்தினத்துத் தாயானவள் நித்திரை செய்யுஞ் சமயம் பார்த்து, அத்தன்முன் அவள் பால் நல்கும் புனை மணி ஆழி தன்னை — பிதாவானவன் அவளிடத்து முன் கொடுத்துவைத்த அழகிய இரத்தின மோதிரத்தை, பொருக்கென திருடி போகி — வேகமாய்க் களவு செய்து போய், வினைய வெங்கவற்றின் ஆடி — தீவினையாகிய கொடிய கவருட்டத்தில் வைத்து விளையாடி, தோற்றனன் வேறு ஒன்று இல்லான் — வேறு பொருள் ஒன்றுமில்லாதவனுய்த் தோல்வியடைந்தான் எ — று. (15)

அந்தமோ திரத்தைக் கையி லணிந்துளா னெருவன் றன்னைத்
தந்தையாம் வேள்வி தத்தன் தனித்தொரு மறுகிற் கண்டு
சிந்தையிற் கவலை கூர்ந்து தெளிந்துபின் னறிவ னென்றுங்
கிந்தமா மணிப்பொன் னூழி யாருனக் கீந்த தென்றான்.

[அந்தமோ திரத்தைக் கையில் அணிந்துளான் ஒருவன் தன்னைத்
தந்தையாம் வேள்வி தத்தன் தனித்(து) ஒரு மறுகில் கண்டு
சிந்தையில் கவலை கூர்ந்து தெளிந்து பின் அறிவன் என்(று) ஆங்(கு)
இந்தமா மணிப்பொன் ஆழி யார்உனக்(கு) ஈந்த(து) என்றான்.]

இ—ள்: அந்த மோதிரத்தை கையில் அணிந்துளான் ஒருவன் தன்னை—அந்த மோதிரத்தை கையிலே அணிந்திருந்த ஒருவனை, தந்தையாம் வேள்வித்தத்தன் தனித்து ஒரு மறுகில் கண்டு — பிதாவாகிய வேள்வித்தத்தன் தனிமையாக ஒரு வீதியிற் கண்டு, சிந்தையில் கவலை கூர்ந்து — மனத்தில் துக்கங்கொண்டு, பின் தெளிந்து — பின்னர் ஒருவாறு தேறுதலடைந்து, அறிவன் என்று — இதனை விளுவுவோமென்று, இந்த மா மணி பொன் ஆழி யார் உனக்கு ஈந்தது என்றான் — இந்தப் பெரிய இரத்தினங்கள் பதித்துச் செய்த பொன் மோதிரத்தை யார் உனக்குக் கொடுத்ததென்று விளவினன் எ — று.

ஆங்கு — அசை. (16)

அரவின்மேற் கிடந்த வையத் தமரர்கள் பதியே யானுங்
கரவினிற் கொண்ட தன்றுன் காதல்கூர் மைந்தன் சூது
பொரவிருப் புடையோ னேற்றென் புட்டகம் வென்று னின்றிவ்
விரன்மணி யாழி தோற்றுன் மேவுவ னாளை யின்னும்.

[அரவின்மேல் கிடந்த வையத்(து) அமரர்கள் பதியே யானும்
கரவினில் கொண்ட(து) அன்(று) உன் காதல்கூர் மைந்தன் சூது
பொரவிருப்(பு)உடையோன்நேற்(று)என்புட்டகம்வென்றுன்இன்(று) இவ்
விரல்மணி ஆழி தோற்றுன் மேவுவன் நாளை இன்னும்.]

இ — ள்: அரவின் மேல் கிடந்த வையத்து அமரர்கள் பதியே — ஆதிசேடனது சிரசின் மேற்றங்கிய பூமியின்மேல் வசிக்கின்ற பிராமணர்களுக் கெல்லாந் தலைவரே, யானும் கரவினில் கொண்டது அன்று — யானும் களவினாற் பெற்றேனல்லேன், உன் காதல் கூர் மைந்தன் — உமது அன்பு பொருந்திய புத்திரனுவன், சூது பொர விருப்புடையோன் — சூதாட்டத்தில் மிகப் பிரியமுடையவன், நேற்று என் புட்டகம்வென்றுன் — நேற்றைத்தினத்தில் என் வஸ்திரத்தை வென்றனன், இன்று இவ்விரல் மணி ஆழி தோற்றுன் — இன்றைக்கு இந்த விரலிலணிந்த இரத்தின மோதிரத்தைத் தோற்றுன், இன்னும் நாளை மேவுவன் — இனி நாளைக்கும் வருவான் எ — று. (17)

ஒதுநூற் கலைவல் லாய்நின் னெருமகன் விலையி லாமென்
போதுபோற் கோசி கஞ்செம் பொன்புனை கலன்கள் யாவுஞ்
சூதுபோர் பொருது நாளுந் தொழிலிது வாகத் தோற்பா
னீதுந் யுணராய் போலு மென்றவ னெடுத்துக் கூற.

[ஒதுநூல் கலிவல் லாய்நின் ஒருமகன் விலியி லாமென்
போதுபோல் கோசி கம்செம் பொன்புலீ கலன்கள் யாவும்
சூதுபோர் பொருது நாளும் தொழில்இது ஆகத் தோற்பான்
ஈதுநீ உணராய் போலும் என்(று) அவன் எடுத்துக் கூற.]

இ — ள்: ஒது நூல் கலி வல்லாய் — ஓதப்படுகின்ற நூற்கலிகளை ஆராய்ந்தறிந்த வன்மையையுடையவரே, நின் ஒரு மகன் — உமது ஏகபுத்திரனுகிய குணநிதியானவன், விலி இலா மென் போது போல் கோசிகம் — விலிமதிப்பற்ற மிருதுவாகிய பூவையொத்த வஸ்திரங்களும், செம்பொன் புலீ கலன்கள் யாவும் — சிவந்த பொன்னினுற்செய்த ஆபரணங்களுமாகிய எல்லாவற்றையும், சூது போர் பொருது நாளும் தொழில் இதுவாகத் தோற்பான் — சூதாடி எந்நாளும் இதுவே தொழிலாகக் கொண்டு தோல்வியடைவான், ஈது நீ உணராய் போலும் என்று — இதை நீவிர் அறிந்திலீர்போலுமென்று, அவன் எடுத்துக் கூற — அவன் இவைகளை யெடுத்துச் சொல்ல எ — று. (18)

கன்னபா கத்திற் காய்ந்த கதிர் நுனிச் சலாகை யிட்ட
தென்னவெந் துருகி யிற்பா லெய்தியில் லவளை நோக்கி
யுன்னதா குயிரொப் பான புதல்வனெவ் வுழையி லுற்ரு
னென்னமற் றவனீ ராட நீர்த்துறை புகுந்தா னென்ருள்.

[கன்ன பாகத்தில் காய்ந்த கதிர்நுனிச் சலாகை இட்ட(து)
என்னவெந்(து) உருகி இப்பால் எய்திஇல் லவளை நோக்கி
உன்ன(து) ஆர்உயிர் ஒப்(பு)ஆன புதல்வன்எவ் உழையில் உற்றான்
என்னமற்(று) அவன்நீர் ஆட நீர்த்துறை புகுந்தான் என்றாள்.]

இ — ள்: கன்ன பாகத்தில் காய்ந்த கதிர் நுனி சலாகை இட்டது என்ன — காதிலே நெருப்பீற் காய்ந்த ஒளிபொருந்திய கூர்மையாகிய இருப்புச்சலாகையைச் செருகினுற்போல, வெந்து உருகி இல் பால் எய்தி — மனங்கொதித்து உருகித் தனது இல்லத்தையடைந்து, இல்லவளை நோக்கி — மனைவியைப் பார்த்து, உனது ஆர் உயிர் ஒப்பான புதல்வன் எவ்வுழையில் உற்றான் என்ன — உனது அரிய ஆன்மாவையொத்த மைந்தன் யாண்டுச் சென்றனன் என்றவினவ, அவன் நீராட நீர்த்துறை புகுந்தான் என்றாள் — அப்புத்திரனவன் ஸ்நானஞ்செய்தற்கு நீர் நிலையை அடைந்தான் என்று கூறினள் எ — று.
உன்னது விரித்தல்விகாரம். (19)

என்னலு நென்ன லுன்பா லெண்ணெயாட் டயர்போ தீந்த
வன்னநன் மணிப்பொன் ஞழி தருகென மறையோன் கேட்பக்
கன்னலிற் கனிந்த மூரல் பகற்கடன் கழித்துத் துய்த்த
பின்னர்யான் றருவ லென்று பெட்புறப் பேச லோடும்.

[என்னலும் நென்னல் உன்பால் எண்ணெய் ஆட்(டு) அயர்போ(து) ஈந்த
வன்னநல் மணிப்பொன் ஆழி தருகென மறையோன் கேட்பக்
கன்னலில் கனிந்த மூரல் பகல்கடன் கழித்துத் துய்த்த
பின்னர் யான்தருவல் என்று பெட்(பு)உறப் பேச லோடும்.]

இ—ள்: என்னலும் — என்று கூறுதலும், நென்னல் உன் பால் எண்ணெய் ஆட்டு அயர் போது ஈந்த — நேற்றைத்தினம் எண்ணெய்தேய்த்து ஸ்நானஞ் செய்யும் பொழுது உன்னிடத்திற்தந்த, வன்ன நல் மணி பொன் ஆழி தருக என—அழகிய நல்ல இரத்தினமோதிரத்தைத்தருவாயாக வென்று, மறையோன் கேட்ப — அப்பிராமணன் கேட்க, கன்னலின் கனிந்த மூரல் — கரும்பைப் போலக் கனிந்த மொழிகளையுடைய அம்மனைவியானவள், பகல் கடன் கழித்து துய்த்த பின்னர்—பகலிற் செய்யப்படும் கருமங்களை முடித்துப் போசனஞ்செய்த பின்பு, யான் தருவல் என்று பெட்பு உற பேசலோடும் — யான் அதனைத் தருவேனென்று அன்பு பொருந்தக் கூறவும் எ — று. (20)

மூரல் — இருமடியாகுபெயர்

நெறியில்பொய் புகன்று கற்பி னீரல செய்தாண் மைந்த
னறிவில னகி வெஞ்சூ தாடியே படிற னனன்
குறியுடைப் பெரியோர் நூலிற் கூறிய நீதி நோக்கிற்
பொறியிலா விவரை விட்டுப் போவதே கடனென் றெண்ணி.

[நெறிஇல் பொய்புகன்று கற்பின் நீரல செய்தாள் மைந்தன்
அறி(வு)இலன் ஆகிவெம்சூ(து) ஆடியே படிறன் ஆனன்
குறிஉடைப் பெரியோர் நூலில் கூறிய நீதி நோக்கில்
பொறிஇலா இவரை விட்டுப்போவதே கடன் என்(று)எண்ணி.]

இ — ள்: நெறியில் பொய் புகன்று கற்பின் நீரல செய்தாள் — ஒழுக்க மற்ற பொய்யைக் கூறிக் கற்பு நெறிக்கிசையாதனவற்றைச் செய்தனள், மைந்தன் அறிவிலன் ஆகி வெம் சூது ஆடியே படிறன் ஆனன் — புத்திரனை வன் நல்லறிவின்றிக் கொடிய சூதாடிப் பொய்யனுமினன், குறியுடை பெரியோர் நூலில் கூறிய நீதி நோக்கில் — நெறி தவறுத பெரியோர்கள் சாஸ்திரங்களிற் கூறிய நீதிகளை ஆராயின், பொறி இலா இவரை விட்டு போவதே கடன் என்று எண்ணி — நல்லறிவில்லாத இவர்களை விட்டு நீங்குவதே நீதியென்று நினைந்து எ — று. (21)

பற்றொரு சற்று மின்றிப் பாசிழைப் பவளச் செவ்வாய்ப்
பொற்றொடி தனையும் பெற்ற புத்திரன் றனையு நீத்தன்
றுற்றொரு பதியி லெய்தி யுயர்குண வேள்வி தத்தன்
மற்றொரு மடந்தை தன்னை மணவினை முடித்து வாழ்ந்தான்.

[பற்(று) ஒரு சற்றும் இன்றிப் பாசிழைப் பவளச் செவ்வாய்ப்
பொன்தொடி தனையும் பெற்ற புத்திரன் தனையும் நீத்தன்(று)
உற்(று)ஒரு பதியில் எய்தி உயர்குண வேள்வி தத்தன்
மற்(று)ஒரு மடந்தை தன்னை மணவினை முடித்து வாழ்ந்தான்.]

இ — ள்: பற்று ஒரு சற்றுமின்றி — பற்றுச் சிறிதுமில்லாமல், பாசிழை பவள செவ்வாய் பொன் தொடிதனையும் — பசுமையாகிய ஆபரணங்களையணிந்த பவளம்போன்ற சிவந்த வாயையும் பொன்வளையலையுமுடைய மனைவியையும், பெற்ற புத்திரன் தனையும் நீத்து — பெற்ற புத்திரனையும் விடுத்து, அன்று ஒரு பதியில் எய்தி உற்று — அத்தினத்தே வேறொரு நகரத்தையடைந்து இருந்து, உயர் குண வேள்வி தத்தன் — மேலாகிய குணங்களையுடைய வேள்வி தத்தனுவன், மற்றொரு மடந்தை தன்னை மணவினை முடித்து வாழ்ந்தான் — வேறொரு பெண்ணை விவாகஞ்செய்து சுகித்திருந்தான் எ — று. (22)

இந்தமா நிலத்தி லிந்நாள் யான்புரி தவறு கண்டு
தந்தையிங் கன்னை யோடென் றன்னையுந் தணந்தா னென்று
சிந்தையிற் கவலை கூர்ந்து செய்வதொன் றறியான் மைந்த
னந்தமி றுன்ப வேலை யாழ்ந்தனன் கரைகா ணுனுய்.

[இந்தமா நிலத்தில் இந்நாள் யான்புரி தவறு கண்டு
தந்தைஇங்(கு) அன்னை யோ(டு)என் தன்னையும் தணந்தான் என்று
சிந்தையில் கவலை கூர்ந்து செய்வ(து),ஒன்(று) அறியான் மைந்தன்
அந்தம்இல் துன்ப வேலை ஆழ்ந்தனன் கரைகா ணுனுய்.]

இ — ள்: இந்த மா நிலத்தில் இந்நாள் யான் புரி தவறு கண்டு — இந்தப் பெரிய பூமியில் கண்ணே இன்று யான் செய்த குற்றத்தைக் கண்டு, தந்தை — பிதாவானவர், இங்கு அன்னையோடு என் தன்னையும் தணந்தான் என்று — இங்கே எனது தாயையும் என்னையும் வெறுத்து நீக்கினரென்று, மைந்தன் சிந்தையில் கவலை கூர்ந்து — புத்திரனுகிய குணநிதியானவன் மனத்தில் துன்பமதிகரித்து, செய்வதொன்று அறியான் — செய்வதொன்றையும் அறியாது, அந்தம் இல் துன்ப வேலை — முடிவற்ற துக்க சாகரத்தில், கரை காணுனுய் ஆழ்ந்தனன் — கரை காணப்பெருதவனுயழுந்தினன் எ — று. (23)

கற்றிலப் பொருள்க ளீட்டுங் கல்விக ளொழுக்க மேன்மை
பெற்றில மஞ்ச ளென்பார் பிறரெவ ரொருவர் பாலும்
பற்றில மற்று முள்ள பாசனத் தோர்க ணட்புஞ்
சற்றில ரென்று மாழ்கிச் சலிப்புட னிருக்கு நாளில்.

[கற்றிலம் பொருள்கள் ஈட்டும் கல்விகள்; ஒழுக்கம் மேன்மை
பெற்றிலம்; அஞ்சல் என்பார் பிறர்எவர் ஒருவர் பாலும்
பற்(று)இலம்; மற்றும் உள்ள பாசனத் தோர்கள் நட்பும்
சற்(று)இலம்; என்று மாழ்கிச் சலிப்புடன் இருக்கும் நாளில்.]

இ — ள் : பொருள்கள் ஈட்டும் கல்விகள் கற்றிலம் — பொருள்கள் சம்பாதிக்கும் வித்தைகளொன்றையும் பயின்றேமல்லேம், ஒழுக்க மேன்மை பெற்றிலம் — நல்லொழுக்கத்தையும் மேன்மையையும் பெற்றேமல்லேம், அஞ்சல் என்பார் பிறர் எவர் — இனியெங்களை அஞ்சன்மின் என்று ஆதரிப்பார் யார், ஒருவர் பாலும் பற்றிலம் — யாரிடத்துஞ் சிநேகமுடையேமல்லேம், மற்றும் முள்ள பாசனத்தோர்கள் நட்பும் சற்றிலம் என்று — மற்றுமுள்ள உறவினர்களது அன்புஞ் சிறியதாயினுமில்லேமென்று, மாழ்கி சலிப்புடன் இருக்கும் நாளில் — வருந்தித் துக்கத்தோடு இருக்குங் காலத்தில் எ — று. (24)

அரனிர வதனி லீச னுலயந் தன்னி லோர்விப்
பிரனுயர் பூசை செய்யச் செல்லுவான் பின்ன ரெய்திக்
கரவினி லமலற் கேற்று மமுதினைக் கவர்ந்து மீள்வா
னிரவினி லற்ற நோக்கி யிருந்தனன் றுயிலி லாமல்.

[அரன்இர(வு) அதனில் ஈசன் ஆலயம் தன்னில் ஓர்விப்
பிரன், உயர் பூசை செய்யச் செல்லுவான் பின்னர் எய்திக்
கரவினில் அமலற்(கு) ஏற்றும் அமுதினைக் கவர்ந்து மீள்வான்
இரவினில் அற்றம் நோக்கி இருந்தனன் துயில் இலாமல்.]

இ — ள் : அரன் இரவு அதனில் ஈசன் ஆலயம் தன்னில் — சிவராத்திரி தினத்தில் ஓர் சிவாலயத்தில், ஓர் விப்பிரன் உயர் பூசை செய்ய செல்லுவான் பின்னர் எய்தி — ஒரு பிராமணன் உயர்வாகிய சிவபூசை செய்யும்படி செல்ல அவன் பின்னே சென்று, கரவினில் அமலற்கு ஏற்றும் அமுதினை கவர்ந்து மீள்வான் — களவினால் நிர்மலராகிய சிவபெருமானுக்கு நிவேதிக்கப்படுகின்ற அமுதைக் கவர்ந்து திரும்பிப் போகும்படி, இரவினில் துயில் இலாமல் அற்றம் நோக்கி இருந்தனன் — அவ்விரவில் நித்திரையில்லாமல் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான் எ — று. (25)

எரிபெரும் பசியி னோடங் கியாமமோர் நான்கும் பூசை
புரிதர நோக்கி வைகி வைகறைப் போது நன்னி
லரியநல் விரத மாற்றி யமலனை யருச்சித் தேத்தித்
துரிசறு மறையோன் கண்க டுஞ்சியே துயிலக் கண்டான்.

[எரிபெரும் பசியினே(டு) அங்(கு) யாமம்ஓர் நான்கும் பூசை
புரிதர நோக்கி வைகி வைகறைப் போது தன்னில்
அரியநல் விரதம் ஆற்றி அமலனே அருச்சித்(து) ஏத்தித்
துரி(சு)அற மறையோன் கண்கள் தூங்கியே துயிலக் கண்டான்.]

இ — ள்: எரி பெரும் பசியினேடு அங்கு யாமம் ஓர் நான்கும் பூசை புரிதர நோக்கி வைகி — சுடுகின்ற மிகுதியான பசியுடன் அவ்விடத்து நான்கு சாமங்களும் பூசை செய்யப்பட அதனைப் பார்த்திருந்து, வைகறை போது தன்னில் — விடியற்காலத்தில், அரியநல் விரதமாற்றி — அருமையாகிய நல்ல விரதத்தையனுஷ்டித்து, அமலனே அருச்சித்து ஏத்தி — அமலமயராகிய சிவ பெருமானைப் பூசித்துத் துதித்து, துரிசு அறு மறையோன் கண்கள் தூங்கியே துயில கண்டான் — குற்றமில்லாத அப்பிராமணனுவன் கண்களில் தூக்க முண்டாகி நித்திரை செய்தலைக் கண்டான் எ — று. (26)

ஆண்டவ னெழுந்து போகி யமுதினை யெடுப்பக் கண்ணிற்
காண்டல்செய் யாது மங்குங் கனைசுடர் விளக்கைக் கையாற்
றூண்டல்செய் தீசன் முன்னர்ச் சோற்றினைக் கவர்ந்து கொண்டு
மீண்டொரு மறையோன் காலில் விரைந்தனன் மிதிக்க லுற்றான்.

[ஆண்(டு)அவன் எழுந்து போகி அமுதினை எடுப்பக் கண்ணில்
காண்டல் செய்யாது மங்கும் கனைசுடர் விளக்கைக் கையால்
தூண்டல்செய்(து) ஈசன் முன்னர்ச் சோற்றினைக் கவர்ந்து கொண்டு
மீண்(டு)ஒரு மறையோன் காலில் விரைந்தனன் மிதிக்கலுற்றான்.]

இ — ள்: ஆண்டு அவன் எழுந்து போகி — அவ்விடத்திற்கு அக் குண நிதியானவனெழுந்து போய், அமுதினை எடுப்ப கண்ணில் காண்டல் செய்யாது — அத் திருவமுதைத் திருடுதற்குக் கண்ணினாற் காண இயலாமையால், மங்கும் கனை சுடர் விளக்கை கையால் தூண்டல் செய்து — ஒளி மழுங்குகின்ற விளக்கைச் சுவாலித்தெரியும்படி கையினாற்றூண்டி, ஈசன் முன்னர் சோற்றினைக் கவர்ந்து கொண்டு — சிவபெருமானது சந்நிதியில் நிவேதித்த திருவமுதைத் திருடிக்கொண்டு, மீண்டு விரைந்தனன் — திரும்பி விரைவிற் செல்லும் பொழுது, ஒரு மறையோன் காலில் மிதிக்கலுற்றான் — ஒரு பிராமணனது காலில் மிதிக்கலாயினன் எ — று. (27)

மிதித்தவப் பொழுதி லந்த வேதியன் வீழித்து நோக்கிக்
கொதித்தனன் கள்வ னென்றே கூக்குர லெழுப்ப லோடுங்
கதித்தவெந் திறலி னேரக் கடிநகர் காப்போர் கேட்டங்
கதிர்த்தனர் வந்து பற்றி யவன்றலை யறுத்திட் டாரால்.

[மிதித்தஅப் பொழுதில் அந்த வேதியன் விழித்து நோக்கிக்
கொதித்தனன்; கள்வன் என்றே கூக்குரல் எழுப்ப லோடும்
கதித்தவெம் திறலி னோர்அக் கடிநகர் காப்போர்கேட்(டு) அங்(கு)
அதிர்த்தனர் வந்து பற்றி அவன்தலை அறுத்திட்டார் ஆல்.]

இ — ள் : மிதித்த அ பொழுதில் அந்த வேதியன் விழித்து நோக்கி — மிதித்தவுடனே அப்பிராமணன். நித்திரை தெளிந்து பார்த்து, கொதித்தனன் கள்வன் என்றே கூக்குரல் எழுப்பலோடும் — கோபம் மிகுந்து கள்வன் வந்தானென்று உரத்த ஒலியாய்ச் சத்தமிடுதலும், கதித்த வெம் திறலினோர் அக்கடிநகர் காப்போர் கேட்டு — மிக்க வெவ்விய வலிமையையுடையவர்களாகிய அந்தச் சிறந்த நகரத்தைக் காக்கின்றவர்கள் கேட்டு, அங்கு அதிர்த்தனர் வந்து பற்றி — அவ்விடத்து கர்ச்சிதத்தோடு வந்து பிடித்து, அவன்தலை அறுத்திட்டார் — அவனது தலையை வெட்டினர்கள் எ — று.

ஆல் — அசை. (28)

மேலது

அவ்வேலையி லிகலந்தக னடல்கொண்டிடு தூதர்
கைவேலயி னலியஞ்சிலை கணைவெங்கதை கொண்டே
மைவேலையில் விடமென்றிட வந்தங்கவ னிருதோ
ணைவேதர விசித்தீர்த்தவர் நடைகொண்டது கண்டே.

[அவ்வேலையில், இகல் அந்தகன் அடல் கொண்டிடு தூதர்
கைவேல், அயில், நலியம், சிலை, கணை, வெம்கதை கொண்டே
மைவேலையில் விடம் என்றிட வந்(து) அங்(கு) அவன் இருதோள்
நைவேதர விசித்(து) ஈர்த்(து) அவர் நடைகொண்டது கண்டே.]

இ — ள் : அவ்வேலையில் — அச்சமயத்தில், இகல் அந்தகன் அடல் கொண்டிடு தூதர் — வலிய யமனது போராடல் பொருந்திய தூதுவர்கள், கைவேல் — கையிற் பொருந்திய வேல், அயில் நலியம் — கூரிய மழுவாயுதம், சிலை — வில்லு, கணை — அம்பு, வெம் கதை கொண்டு — கொடியதண்டு ஆகிய இப்படைகளைக்கொண்டு, மை வேலையில் விடம் என்றிட அங்கு வந்து — கரிய சமுத்திரத்தில்நின்றுயர்ந்திய ஆலகால நஞ்சைப் போல வந்து, அவன் இருதோள் நைவே தர — அவனது இரண்டு தோள்களும் வருந்தும்படி, விசித்து ஈர்த்து — கட்டியிழுத்துக்கொண்டு, அவர் நடை கொண்டது கண்டு — அவர்கள் நடந்து போவதைக் கண்டு எ — று. (29)

கடுவெங்கரி யுரிகொண்டகண் ணுதறன்கண நாதர்
வடுவின்றிய மணிதுன்றிய மானத்திடை வந்தே
விடுமின்க ளிவன்றன்னே யெனச்சென்று விலக்கக்
கொடுசென்றிடு நமதூதர் குறித்திங்கிவை சொல்வார்.

[கடுவெம்கரி உரிகொண்ட கண்ணுதல்தன்கண நாதர்
வடுஇன்றிய மணிதுன்றிய மானத்திடை வந்தே
விடுமின்கள் இவன்தன்னே எனச்சென்று விலக்கக்
கொடுசென்றிடு நமதூதர் குறித்(து)இங்(கு)இவை சொல்வார்.]

இ — ள்: கடு வெம் கரி உரி கொண்ட கண்ணுதல் தன் கண நாதர் — மிகக் கொடிய யானையையுரித்த நெற்றிக்கண்ணராகிய சிவபெருமானது கணத்தவர்கள், வடுவின்றிய மணி துன்றிய மானத்திடை வந்து — குற்றமில்லாத இரத்தினங்கள் நெருங்கிய விமானத்தில் வந்து, விடுமின்கள் இவன் தன்னே யெனசென்று விலக்க — இவனே விடுங்களென்று போய்த்தடுப்ப, கொடு சென்றிடு நமதூதர் — அவனைக்கொண்டு சென்ற யமதூதர்கள், குறித்து இங்கு இவை சொல்வார் — குறிப்பாக இவ்வசனங்களைக் கூறுவார்கள். எ — று.

அ — அசை. (30)

பொருடங்கிய மறைவாண ரொழுக்கம்புற நீத்திட்
டருடங்கிய வவைசொற்றவை யறிவின்றி முனிந்து
மருடங்கிய சூதாடிநல் விலைமாதை மணந்து
கருடங்கிய மனத்தான்சிவ னிர்மாலியங் கவர்ந்தான்.

[பொருள்தங்கிய மறைவாணர் ஒழுக்கம்புறம் நீத்திட்(டு)
அருள்தங்கிய அ(வ்)வை சொற்றவை அறி(வ)இன்றி முனிந்து
மருள்தங்கிய சூ(து)ஆடிநல் விலைமாதை மணந்து
கருள்தங்கிய மனத்தான் சிவன் நிர்மாலியம் கவர்ந்தான்.]

இ — ள்: பொருள் தங்கிய மறை வாணர் ஒழுக்கம் புற நீத்திட்டு — உண்மைப்பொருள் தங்கிய வேதத்தை அறிந்த அந்தணர்களது ஆசாரத்தைப் புறத்தேயகற்றி, அருள் தங்கிய அவ்வை சொற்றவை அறிவின்றி முனிந்து — அருள் நிறைந்த தாயாற் கூறப்பட்டவைகளை நல்லறிவில்லாமல் வெறுத்துத் தள்ளி, மருள் தங்கிய சூதாடி — மயக்கம் பொருந்திய சூதை விளையாடி, நல் விலை மாதை மணந்து — அழகிய வேசிகளைப் புணர்ந்து, கருள் தங்கிய மனத்தான் — இருண்ட மனத்தையுடையவனுய், சிவன் நிர்மாலியம் கவர்ந்தான் — சிவபெருமானுக்கு நிவேதித்த திருவமுதைக்களவுசெய்தான். எ — று.

அவ்வை அவையெனத்தொக்கது. (31)

உய்யும்வகை யேதிங்கிவ னுறுமிப்பவ மதனிற்
செய்யுந்தவ முளதோவெனச் சிவகங்குலி னுதரம்
பெய்யுந்தழ னிகர்வெம்பசி பெரிதாயெழத் துயினீத்
தெய்யுங்கணை மதனைச்சுடு மிறைதாளிணை கண்டான்.

[உய்யும்வகை ஏ(து)இங்(கு)இவன் உறும்இப்பவம் அதனில்
செய்யும்தவம் உளதோஎனச் சிவகங்குலின் உதரம்
பெய்யும்தழல் நிகர்வெம்பசி பெரிதாய்எழத் துயில்நீத்(து)
எய்யும்கணை மதனைச்சுடும் இறைதாள்இணை கண்டான்.]

இ — ள்: இங்கு இவன் உய்யும் வகை ஏது — இவன் உய்யத்தக்க செயல் யாது, உறும் இ பவம் அதனில் செய்யும் தவம் உளதோ என — பொருந்திய இப்பிறப்பில் செய்து கொண்ட தவமானது இருக்கின்றதோ என்று (யமதூதர்) வினவ, (கணநாதர் கூறுவார்) சிவகங்குலின் — சிவராத்திரியில், உதரம் பெய்யும் தழல் நிகர் வெம் பசி பெரிதாய் எழ — வயிற்றிற்பொருந்திய அக்கினியை யொத்த கொடிய பசியானது மிகமூள, துயில் நீத்து — நித்திரையையொழித்து, எய்யும் கணை மதனை சுடும் இறைதாள் இணை கண்டான் — ஏவப்படுகின்ற புஷ்பபாணங்களையுடைய மன்மதனை யெரித்த சிவபெருமானது இரண்டு திருப்பாதங்களையுந் தரிசித்தான் எ — று. (32)

அடல்சேர்விடை யுடையானெதி ரவியுஞ்சுட ரதனை
மடல்சேர்மலர்க் கரத்தாலொளி வரத்தூண்டின னதனுல்
மிடல்சேர்கொடு வினையாவையும் வித்தான்றுயர் நீத்தான்
கடல்சேர்நெடு நிலமீதுயர் கலிங்கத்திறை யாவான்.

[அடல்சேர் விடை உடையான்எதிர் அவியும் சுடர் அதனை
மடல்சேர் மலர்க் கரத்தால் ஒளி வரத் தூண்டினன் அதனால்
மிடல்சேர்கொடு வினையாவையும் வித்தான்; துயர் நீத்தான்
கடல்சேர்நெடு நிலம்மீ(து)உயர் கலிங்கத்(து)இறை ஆவான்.]

இ — ள்: அடல் சேர் விடை உடையான் எதிர் அவியும் சுடர் அதனை — வலிமை பொருந்திய இடபவாகனத்தையுடைய சிவபெருமானது சந்நிதியில் மங்கிய தீபத்தை, மடல் சேர் மலர் கரத்தால் — இதழ்பொருந்திய தாமரை மலர்போன்ற கையினுல், ஒளி வர தூண்டினன் — பிரகாசித்தெரியும்படி தூண்டினன், அதனுல் — அக்காரணத்தாலும், மிடல் சேர் கொடு வினை யாவையும் வித்தான் — வலிமை பொருந்திய கொடிய தீவினைப்பலன்கள் யாவற்றையும் அழித்து, துயர் நீத்தான் — துன்பங்களை யொழித்தான், (இனி மேல்) கடல் சேர் நெடு நிலமீது — கடலாற் சூழப்பட்ட நெடிய பூமியின் கண்ணே, உயர் கலிங்கத்து இறையாவான் — உயர்வுபொருந்திய கலிங்கதேசாதிபதியாய்ப் பிறப்பான் எ — று. (33)

என்றேசிவ கணநாத ரியம்பச்சமன் றூத
ரன்றேயவ ரடிபோற்றிநின் றருள்சேர்குண நிதிதோட்
குன்றேபிணி யவிழ்த்தங்குநீர் கொடுபோமென விடுத்துச்
சென்றேபுலிக் குழுவன்னவர் தென்றிக்கினி லுற்றார்.

[என்றேசிவ கணநாதர் இயம்பச்சமன் தூதர்
அன்றேஅவர் அடிபோற்றிநின்(று) அருள்சேர்குண நிதிதோள்
குன்றேபிணி அவிழ்த்(து)அங்(கு)நீர் கொடுபோம்என விடுத்துச்
சென்றேபுலிக் குழுஅன்னவர் தென்திக்கினில் உற்றார்.]

இ — ள் : என்றே சிவ கணநாதர் இயம்ப — என்றிவ்வாறுகச் சிவபெருமானுடைய கணத் தலைவர்கள் கூறுதலும், புலி குழு அன்னவர் சமன் தூதர் அன்றே அவர் அடி போற்றி நின்று — புலிக்கூட்டத்தையொத்த யமதூதுவர்கள் அப்பொழுதே அவர்களுடைய பாதங்களைத் துதித்து நின்று, அருள் சேர் குண நிதி தோள் குன்று ஏய் பிணி அவிழ்த்து — அருள் பொருந்திய குணநிதியென்னும் அந்தணனது மலைபோன்றபுயங்களின் கட்டையவிழ்த்து, அங்கு நீர் கொடுபோமென விடுத்து — அவ்விடத்து நீங்கள் கொண்டுபோங்களென்று விடுத்து, சென்றே தென் திக்கில் உற்றார் — போய்த்தென்புலத்தை யடைந்தார்கள் எ — று. (34)

வேறு

ஈச னன்பரக் காலியிற் குணநிதி யென்பவன் முகநோக்கிக்
காச ணிந்தபொன் முடிதரித் துயர்புகழ்க் கலிங்கநா டளிக்கின்ற
வாச மாலிகை யருந்தமன் மதலையா வளங்கொளுத் தமனென்னு
மாச கன்றபே ரொடுபிறந் திடுதியென் றறைந்தன ரகல்கின்றார்.

[ஈசன் அன்பர்அக் காலியில் குணநிதி என்பவன் முகம்நோக்கி
கா(சு) அணிந்த பொன் முடிதரித்(து) உயர்புகழ்க் கலிங்கநா(டு) அளிக்கின்ற
வாச மாலிகை அருத்தமன் மதலையா வளம்கொள் உத்தமன் என்னும்
மா(சு) அகன்றபோர் ஒடுபிறந் திடுதிஎன்(று) அறைந்தனர் அகல்கின்றார்.]

இ — ள் : ஈசன் அன்பர் — சிவபெருமானுடைய அன்பர்களான கணநாதர்கள், அ காலியில் குணநிதி என்பவன் முகம் நோக்கி — அவ்வேளையிற் குணநிதி யென்பவனுடைய முகத்தைப்பார்த்து, காசணிந்து பொன் முடிதரித்து — இரத்தினங்கள் பதித்துப் பொன்னாற் செய்யப்பட்ட முடியைத் தரித்து, உயர் புகழ் கலிங்க நாடு அளிக்கின்ற — உயர்ந்த கீர்த்தி தங்கிய கலிங்க தேசத்தைப் பரிபாலிக்கின்ற, வாச மாலிகை அருந்தமன் மதலைய —

வாசனை பொருந்திய மாலையையணிந்த அருந்தம ராசனது புத்திரனும், வளம் கொள் உத்தமன் என்னும் ஆசு அகன்ற பேரொடு பிறந்திடுதி என்று — வளம் பொருந்திய குற்றமற்ற உத்தமனென்னும் நாமத்தைக் கொண்டு பிறக்கக்கட வையென்று, அறைந்தனர் அகல்கின்றார் — கூறிச்செல்வாரானார்.

எ — று. (35)

அனைய னப்படிக் கலிங்கநாட்டிறைமக னகிமுற் பவந்தன்னிற்
றனையுணர்ந்துறத் தொடர்முதுக் குறைவினற் சங்கரன் குலந்தோறும்
கனைசெ ழுஞ்சுடர் நெய்விளக் கேற்றி நற்கடிகமழ் நறுந்தூபம்
புனையு மாமலர் சாத்தியே யருச்சனை புரிந்தறம் பலசெய்தான்.

[அனையன் அப்படிக் கலிங்க நாட்(டு) இறைமகன் ஆகிமுன் பவம் தன்னில் தனை உணர்ந்(து) உறத்தொடர்முது குறைவினல் சங்கரன் குலம்தோறும் கனைசெழும்சுடர் நெய்விளக்(கு) ஏற்றி நல்கடி கமழ்நறும் தூபம் புனையும் மாமலர் சாத்தியே அருச்சனை புரிந்(து) அறம் பல செய்தான்.]

இ — ள்: அனையன் அப்படி கலிங்க நாட்டு இறை மகன் ஆகி — அக்குண நிதியானவன் அவ்வாறு கலிங்கதேசத்தரசனது புத்திரனாகி, முன்பவம் தன் னில் தனை உணர்ந்து உற தொடர் முதுக்குறைவினல் — முற்பிறப்பில் தன்னை யாரென்று அறியும்படி தொடர்ந்த பேரறிவினல், சங்கரன் குலம் தோறும் — சிவபெருமானுடைய திருவாலயங்களெங்கும், கனைசெழும் சுடர் நெய் விளக்கு ஏற்றி — பிரகாசிக்கின்ற மிக்க ஒளியைக் கொண்ட நெய்த்தீபங்களையேற்றி, நல் கடி கமழ் நறும் தூபம் — வாசனைபொருந்திய நல்ல சுகந்த தூபமிட்டு, புனையும் மாமலர் சாத்தி — அலங்கரிக்கப்படுகின்ற பெருமை பொருந்திய புஷ்பங்களைச் சாத்தி, அருச்சனை புரிந்து அறம் பல செய்தான் — பூசனை செய்து பல தருமங்களையும் புரிந்தான் எ — று.

ஏ — அசை. (36)

இன்ன வாறுபற் பலதினந் தருமங்க ளியற்றியா யிரஞ்சென்னிப்
பன்ன காதிபன் சுமந்தபார் புரந்துநீர் பட்டழிந் திடுமொக்கு
ளன்ன மானுடச் சட்டைநீத் துத்தரத் தளகைமா நகர்காக்கு
மன்ன னாகிவீற் றிருந்தனன் யாவரும் வந்தடி தொழுதேத்த.

[இன்ன வாறுடல் பலதினம் தருமங்கள் இயற்றிஆ யிரம் சென்னிப் பன்ன காதிபன் சுமந்தபார் புரந்துநீர் பட்(டு)அழிந்திடும் மொக்குள் அன்ன மானுடச் சட்டைநீத்(து) உத்தரத்(து) அளகைமாநகர் காக்கும் மன்னன் ஆகிவீற் றிருந்தனன் யாவரும் வந்(து)அடி தொழு(து) ஏத்த.]

இ — ள்: இன்னவாறு பல் பல தினம் தருமங்கள் இயற்றி — இவ்வாறு பல பல காலங்களாய்த் தருமங்களைச் செய்து, ஆயிரம் செல்வி பன்னக அதிபன் சுமந்த பார் புரந்து — ஆயிரஞ்சிரசுகளையுடைய ஆதிசேடனாற்றாங்கப்படுகின்ற பூமியைப் பரிபாலித்து, நீர் பட்டு அழிந்திடு மொக்குள் அன்ன — நீரில் தோன்றி அழிகின்ற குமிழியைப்போல, மானுட சட்டை நீத்து — மானுட சரீரத்தைக் கழித்து, உத்தரத்து அளகை மாநகர் காக்கும் மன்னன் ஆகி — வடக்குத் திசையின் கண்ணுள்ள அளகாபுரியை ஆளுகின்ற குபேரனாகி, யாவரும் வந்து அடி தொழுது ஏத்த வீற்றிருந்தனன் — எல்லோரும் வந்து பாதங்களை வணங்கித் துதிக்க வாழ்ந்திருந்தான் எ — று. (37)

சிலப கற்கழிந் திட்டபின் றெண்டிரை திரிவர நதிசூழ்ந்து
நலமி கத்தருங் காசியிற் சிவலிங்க நாட்டியர்ச் சனைசெய்தா
னிலகுபேரொளிச் சுடர்ப்பிழம் பாய்ச்சசி யிருத்திய சடைப்பெம்மான்
கலகவாள்விழி மலைமக ளோடுமக் கணத்தினில் வெளிப்பட்டான்.

[சிலபகல் கழிந் திட்டபின் தெண்திரை திரிவர நதிசூழ்ந்து
நலம் மிகத்தரும் காசியில் சிவலிங்கம் நாட்டி அர்ச்சனை செய்தான்
இலகு பேர் ஒளிச் சுடர்ப் பிழம்பாய்ச்சசி இருத்திய சடைப் பெம்மான்
கலக வாள்விழி மலைமகளோடும்அக் கணத்தினில் வெளிப்பட்டான்.]

இ — ள்: சிலபகல் கழிந்திட்டபின் — சிலதினங்கள் சென்றபின்பு, தெண்திரை திரிவரநதி சூழ்ந்து — தெள்ளிய திரைவீசுகின்ற கங்காநதியாற் சூழப்பட்டு, நல மிக தரும் காசியில் சிவலிங்கம் நாட்டி அர்ச்சனை செய்தான் — நன்மையை மிகவுந் தருகின்ற காசியம் பதியில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூசனை செய்தான், இலகு பேர் ஒளி சுடர் பிளம்பாய் — விளங்குகின்ற மிக்க ஒளியைக் கொண்ட அக்கினிப்பிழம்பையொத்த, சசி இருத்திய சடைபெம்மான் — சந்திரனைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான், கலக வாள் விழி மலைமகளோடும் — (கண்டோர்க்கு) கலகத்தை விளைக்கின்ற வாள் போலுங் கண்களையுடைய உமையம்மையாரோடும், அ கணத்தினில் வெளிப்பட்டான் — அப்பொழுதே பிரசன்னமாயினர் எ — று. (38)

உன்ன ருந்தவம் வியந்தனன் தனதநின் னுளத்தினில் விருப்புற்ற
தின்ன தென்றுரை தருதுமென் றுரைத்திட விரவியா யிரங்கோடி
துன்ன ருங்கதிர் விரித்துநின் றனையமெய்ச் சோதியுன் னுருக்காண
நன்ன லந்தரு கண்ணினை கூடிடா நல்வரந் தருகென்றான்.

[உன் அரும் தவம் வியந்தனன் தனத, நின் உளத்தினில் விருப்(பு) உற்ற(து) இன்ன(து) என்(று) உரை தருதும் என்(று) உரைத்திட இரவி ஆயிரம் கோடி துன் அரும் கதிர் விரித்து நின்(று) அனைய மெய்ச் சோதி உன் உருக்காண நல் நலம் தரு கண் இனை கூடிடா நல்வரம் தருக என்றான்.]

இ — ள்: தனது உன் அரும் தவம் வியந்தனம் — குபேரனே உனது அரிய தவத்தில் மகிழ்வுற்றும், நின் உளத்தினில் விருப்புற்றது இன்னது !என்று உரை—உனது மனத்திற் கொண்ட விருப்பத்தை இன்ன தென்று கூறக்கடவை, தருதும் என்று உரைத்திட — தந்தருள்வோமென்று திருவாய் மலர்ந்தருள, இரவி ஆயிரங்கோடி துன் அரும் கதிர் விரித்து நின்று அனைய — ஆயிரகோடி சூரியர் நெருங்கி அரிய கிரணங்களைப் பரப்பி நின்றுற் போன்ற, மெய் சோதி உன் உரு காண — உண்மைப் பிரகாசத்தைக் கொண்ட தேவரீரது திருவடிவத்தைக் காணும்படி, நல் நலம் தரு கண் இரு கூசிடா நல்வரம் தருக என்றுன் — மிக்க நன்மையைத் தருகின்ற கண்களிரண்டும் கூசுதலில்லாத நல்ல வரத்தைத் தந்தருளுகவென்று வேண்டினுன் எ — று. (39)

காக்கு மாலயன் காணெணை வடிவவன் கட்புலங் கதுவுற்று
நோக்கு மாறருள் செய்தனன் றழலுமிழ் நுதல்விழிப் பெருமானும்
பூக்கு மாமலர் மணமெனப் பொருந்திய புனிதனே யெஞ்ஞான்று
நீக்கு மாறரி தாவுறை நிமலையைப் பார்த்திது நினைக்கின்றுன்.

[காக்கும் மால் அயன் காண்ஒணை வடி(வு) அவன் கட்புலம் கதுவுற்று
நோக்கு மா(று) அருள் செய்தனன் தழல் உமிழ் நுதல்விழிப் பெருமானும்
பூக்கு மாமலர் மணம்எனப் பொருந்திய புனிதனே எஞ்ஞான்றும்
நீக்குமா(று) அரிதா உறை நிமலையைப் பார்த்(து)இது நினைக்கின்றுன்.]

இ — ள்: தழல் உமிழ் நுதல் விழி பெருமானும் — அக்கினியைக் கக்குகின்ற நெற்றி நாட்டத்தையுடைய பரமசிவனும், காக்கும் மால் அயன் காணெணை வடிவ — காத்தற்றொழிலையுடைய விஷ்ணுமூர்த்தியும் பிரம தேவரும் தேடியும் காணவியலாத திருவுருவத்தை, அவன் கண் புலம் கதுவுற்று நோக்குமாறு அருள் செய்தனன் — அக்குபேரனுடைய கண்ணெழியானது பற்றித் தரிசிக்கும்படி அருள்செய்தார், பூக்கு மா மலர் மணமென — விரிந்த பெரிய புஷ்பத்தினது மணத்தைப்போல, பொருந்திய புனிதனே எஞ்ஞான்றும் நீக்குமாறு அரிதா உறை — கலந்திருக்கின்ற சிவபிரானே எக்காலத்தும் நீக்குதற்கரிதாய் வீற்றிருந்தருளுகின்ற, நிமலையை — பார்ப்பதிதேவியாரை, பார்த்து இது நினைக்கின்றுன் — பார்த்து இவ்வாறு சிந்திக்கின்றுன் எ — று. (40)

தீது தீர்த்தருள் சிவன்றிரு மேனியிற் செறிந்துறைந் திடமுன்னுள்
ளாது நற்றவ மியற்றினள் ளிவளென வெண்ணிநோக் குறவெற்பின்
மாது ளங்கறுத் திட்டனள் ளோர்விழி மறைந்ததங் கவற்கந்நா
ளோது மாமறை யளவிடற் கரியவ னுமையவட் கிவை சொல்வான்.

[தீது தீர்த்(து) அருள் சிவன்திரு மேனியில் செறிந்(து) உறைந் திடமுன் நாள்
ளாது நற்றவம் இயற்றினள் இவள்என எண்ணி நோக்குறவெற்பின்
மா(து)உளம் கறுத்திட்டனள் ஓர்விழி மறைத்(து) அங்கு அவற்கந் நாள்
ஓது மாமறை அளவிடற்(கு) அரியவன் உமையவட்(கு) இவை சொல்வான்.]

இ — ள் : நிது நிர்த்து அருள் சிவன் திருமேனியில் செறிந்து உறைந்திட — சர்வதிமைகளையும் நீக்கியருளுகின்ற சிவபெருமானது திருமேனியில் (ஒன்றுப்) பொருந்தி வீற்றிருத்தற்கு, முன் நாள் யாது நல் தவம் இயற்றினள் இவளென எண்ணி நோக்குற — முன்னைக்காலத்தில் இத்தேவியாளவர் என்ன நல்ல தவத்தைச் செய்தனர் என்று நினைத்துப் பார்த்தவுடன், வெற்பின் மாது உளங் கறுத்திட்டனள் — மலையரசன் புதல்வியாராகிய உமாதேவியார் திருவுள்ளத்தே கோபங்கொண்டனர், அங்கு அவற்கு ஓர் விழி மறைந்தது — அக்குபேரனுக்கு அவ்விடத்தே ஒருகண் ஒளிகுன்றப்பெற்றது, அந்நாள் — அப்பொழுது, ஒது மா மறை அளவிடற்கு அரியவன் — ஓதப்படுகின்ற பெரிய வேதங்களினாலும் அளத்தற்கரிய சிவபெருமானவர், உமையவட்கு இவை சொல்வான் — உமாதேவியாருக்கு இவைகளைக் கூறுவார் என்று.

(41)

ஊறி னின்றவப் பெருமையை வியந்துளத் துவந்தன னினைக்கின்றான்
வேறி வன்புரி தவறிலை முனியலை விழியிவற் கருளென்னச்
சீறி வெம்பொறிக் கனலெனக் கனன்றுதன் சிந்தையுற் றெழுங்கோப
மாறியம்பிகை யம்பகம் வழங்கினள் பொற்கண்ணுய் வயங்கிற்றால்.

[ஊ(று)இல் நின்தவப் பெருமையை வியந்(து) உளத்(து)
உவந்தனன் நினைக்கின்றான்
வே(று) இவன்புரி தவ(று)இலை முனியலை
விழி இவற்(கு) அருள் என்னச்
சீறி வெம் பொறிக் கனல் எனக் கனன்றுதன்
சிந்தை உற்(று) எழும் கோபம்
மாறி அம்பிகை அம்பகம் வழங்கினள்
பொன்கண்ணுய் வயங்கிற்(று) ஆல்.]

இ — ள் : ஊறு இல் நின் தவ பெருமையை வியந்து உளத்து உவந்தனன் நினைக்கின்றான் — பழுதில்லாத உனது தவத்தின் மகிமையை அதிசயங்கொண்டு மனமகிழ்ச்சியுடையனுய்ச் சிந்திக்கின்றான், வேறு இவன் புரி தவறு இலை — இவன்செய்த வேறுகுற்றங்கள் ஒன்றுமில்லை, முனியலை — கோபஞ் செய்யேல், இவற்கு விழி அருள் என்ன — இவனுக்குக் கட்பார்வையைக் கொடுக்குக வென்று திருவாய் மலர்ந்தருள, சீறி வெம் பொறி கனலென கனன்று தன் சிந்தை உற்று எழும் கோபம் மாறி — வெகுண்டு கொடிய அக்கினிப் பொறியைப்போல அழல்கொண்டு தன்னுடைய திருவுள்ளத்தில் மிகுந்து எழுந்த கோபந்தணிந்து, அம்பிகை அம்பகம் வழங்கினள் — உமாதேவியார் கட்பார்வையைக் கொடுத்தருளினர், பொன் கண்ணுய் வயங்கிற்று — அழகிய நேத்திரமாகப் பிரகாசித்தது என்று.

ஆல் — அசை.

(42)

விழியி ழந்தது பெற்றபி னியக்கர்தம் வேந்தனும் வியப்போடவ்
வுழியெ ளப்பிறை முடித்தருள் சடாடவி யுடை வினடக் கொடியோனைத்

கழிவ ருங்கயன் மருட்டுவாட் டடநெடுங் கட்கவ ரியைவேரி
பொழிசெ ழுந்துண ரிறைத்துநற் றுதிபல புகழ்ந்துவிழ்ந்
[தெழுகின்றன்.

[விழி இழந்(து) அது பெற்றபின் இயக்கர்தம் வேந்தனும் வியப்போ(டு) அவ்
உழி இளம் பிறை முடித்தருள் சடா அடவி உடைவிடைக் கொடியோனைக்
கழிவரும் கயல் மருட்டுவாள் தடநெடும் கண்கவ ரியைவேரி
பொழி செழும் துணர் இறைத்து நல்துதிபல புகழ்ந்து வீழ்ந்(து) எழுகின்றன்.]

இ — ள் : விழி இழந்து அது பெற்றபின் — கண்ணை இழந்து அதனைப் பெற்றபின்னர், இயக்கர் தம் வேந்தனும் — இயக்கர்களுக்குத் தலைவனுமிய குபேரனும், வியப்போடு அவ்வழி — அதிசயத்தோடு அவ்விடத்து, இளம் பிறை முடித்து அருள் சடாடவி உடை விடை கொடியோனை — இளமை யாகிய பிறைச்சந்திரனைச் சூடியருளுகின்ற சடைக்காட்டையுடைய இடபக் கொடியைக்கொண்ட சிவபெருமானையும், கழி வரும் கயல் மருட்டு வாள் தட நெடும் கண் கவரியை — நீர்க்கழிகளில் வசிக்கின்ற கெண்டை மற்சங்கனை மயக்குகின்ற வாள்போன்ற விசாலமாகிய நெடிய கண்களையுடைய உமாதேவி யாரையும், வேரி பொழி செழும் துணர் இறைத்து — தேனைப் பிலிற்றுகின்ற செழித்த மலர்களைத் தூவி, நல் துதி பல புகழ்ந்து வீழ்ந்து எழுகின்றனன் — நல்ல தோத்திரங்கள் பலவற்றால் புகழ்ச்சிகளைக்கூறி விழுந்து [1]நமஸ்கரித்து எழுகின்றனன் எ — று. (43)

மன்று ணட்டமே புரியரன் கைகளான் மற்றவ னுடலறைவந்
தின்று தொட்டுநீ யென்னுடைத் தோழனு யிருத்தியென் றிசைத்தான்பொற்
குன்று கிட்டிய தனநிதிப் பெருக்கொடு குலவுபுட் பகம்பெற்றே
யன்று தொட்டவ னளகைமா நகரர சளித்தவ ணிருக்கின்றன்.

[மன்றுள் நட்டமே புரிஅரன் கைகளால்
மற்(று) அவன் உடல் தைவந்(து)
இன்று தொட்டுநீ என்னுடைத் தோழனுய்
இருத்தி என்(று) இசைத்தான் பொன்
குன்று கிட்டிய தனநிதிப் பெருக்கொடு
குலவுபுட் பகம் பெற்றே
அன்று தொட்(டு) அவன் அளகைமா நகர் அர(சு)
அளித்(து) அவண் இருக்கின்றன்.]

இ — ள் : மன்றுள் நட்டம் புரி அரன் — கனகசபையின் கண்ணே திருத் தஞ் செய்பவராகிய சிவபெருமான், கைகளால் அவன் உடல் தைவந்து — தமது திருக்கரங்களினால் அவனது சரீரத்தைத் தடவி, இன்று தொட்டு நீ என்னுடைய தோழனுய் இருத்தி என்று இசைத்தான் — இற்றைநாள் தொட்டு எனது தோழனாகி இருக்கக்கடவை யென்று திருவாய் மலர்ந்தருளினர், பொன் குன்று கிட்டிய தன நிதி பெருக்கொடு குலவு புட்பகம் பெற்று — பொன்மலை

யைப் போலுயர்ந்த மிக்க செல்வப் பெருக்கத்துடன் விளங்குகின்ற புட்பக விமானத்தையும் பெற்றுக்கொண்டு, அன்று தொட்டு அவன் அளகை மா நகர் அரசளித்து அவன் இருக்கின்றான் — அற்றைக்காலந்தொடங்கி அக் குபேரனவன் அளகாபுரியைப் பரிபாலனஞ் செய்து அவ்விடத்தேயிருக்கின்றான் எ — று.

மற்று ஏ அசைகள். (44)

இன்ப மார்சிவ நிசியினின் மாலிய மெடுத்தருந் திடற்கீசன்
முன்ப விந்திடு விளக்கினைத் தூண்டிய முற்பய னதனாலே
நன்பு வித்தல மரசளித் தளகைமா நகர்தனக் கிறையாகிப்
பின்ப ரன்றனைப் பிரிந்திடாத் தோழமைப் பெருமையும்
[பெறலுற்றான்.

[இன்பம் ஆர்சிவ நிசியில் நின்மாலியம் எடுத்(து) அருந்திடற்(கு) ஈசன் முன்(பு) அவிந்திடு விளக்கினைத் தூண்டிய முன்பயன், அதனாலே நன்புவித் தலம் அர(சு) அளித்(து) அளகைமா நகர்தனக்(கு) இறை ஆகி பின்(பு) அரன்தனைப் பிரிந்திடாத் தோழமைப் பெருமையும் பெறலுற்றான்.]

இ — ள்: இன்பம் ஆர் சிவநிசியில் — சுகத்தைக் கொடுத்தற்குரிய சிவராத்திரியில், நின்மாலியம் எடுத்து அருந்திடற்கு — நிவேதித்த திருவமுதைக் காணுமல் எடுத்துண்ணும்படி, ஈசன் முன்பு அவிந்திடு விளக்கினைத் தூண்டிய — சிவபெருமானது சந்நிதியில் மங்கிய தீபத்தைத் தூண்டிவிட்ட, முன் பயன் அதனாலே — முற்பிறப்பிற்செய்த புண்ணியத்தினால், நன் புவி தலம் அரசு அளித்து — நல்ல பூமியைப்பரிபாலனஞ்செய்து, அளகை மாநகர் தனக்கு இறையாகி — அளகாபுரிக்கு அரசனுய், பின்பு அரன் தனை பிரிந்திடா தோழமை பெருமையும் பெறலுற்றான் — பின்னர்ச் சிவபெருமானை விட்டு நீங்காத தோழமையும் பெருமையையுமடைந்தனன் எ — று. (45)

சேற்றி னுர்செழுந் தாமரைக் கண்ணனுந் தேடருஞ் சிவன் மெய்யி
னீற்றி னுன்றிருக் கோயிலி னுயர்சிவ நிசிகளி னெய்த்திப
மேற்றி னுர்பெறும் பேற்றினை விரித்தெடுத் தியம்பவேண்டிடி லெண்க
ணுற்றி சாமுகம் படைத்தருள் விரிஞ்சனு நவின்றிடற் கரிதாமால்.

[சேற்றின் ஊர்செழும் தாமரைக் கண்ணனும் தேடரும் சிவன்மெய்யில் நீற்றினுன் திருக் கோயிலின் உயர்சிவ நிசிகளில் நெய்த் தீபம் ஏற்றினுர் பெறும்பேற்றினை விரித்(து) எடுத்(து) இயம்ப வேண்டிடில் எண்கண் நால் திசா முகம் படைத்(து) அருள் விரிஞ்சனும் நவின்றிடற்(கு) அரிதாம் ஆல்.]

இ — ள்: சேற்றின் ஊர் செழும் தாமரை கண்ணனும் — சேற்றிற் செழித்து வளருகின்ற தாமரைக்கண்ணனுகிய மாயவனும், தேடரும் சிவன் மெய்யில் நீற்றினுன் — தேடுதற்கரிய திருமேனியிற் பொருந்திய விபூதியை

யுடைய சிவபெருமானது, திருக்கோயிலில் — திருவாலயத்தில், உயர் சிவ நிசிகளில் — உயர்வு பொருந்திய சிவராத்திரிகளில், நெய் தீபம் ஏற்றினர் பெறும் பேற்றினை — நெய் விளக்கேற்றியவர்கள் பெறும் பலனை, விரித்து எடுத்து இயம்ப வேண்டிடில் — விரித்தெடுத்து விசாலமாகக் கூறவேண்டுமாயின், எண் கண் நால் திசாமுகம் படைத்து அருள் விரிஞ்சனும் — எட்டுக் கண்களையும் நான்கு திக்கினும் நோக்கிய சதுர்முகங்களையும் உடைய பிரமதேவனும், நவின்றிடற்கு அரிதாம் — சொல்லி முடித்தற்கு இயலாததாகும் எ — று.

ஆல் — ஆசை (16)

அன்றி யெண்ணிரண் டாமுப சாரத்திற் கடுத்தவை யந்நாளிற்
குன்றி யத்துணை யீயினு மாயிர கோடியாய்ப் பயனல்கு
மென்றி ருட்குறும் பறவெறி கணைசுடரிரவிசெங் கதிரென்னத்
துன்றி ருஞ்சடைத் துறவர்கேட் டுவப்புறச்சூதனுண்டுரைசெய்தான்.

[அன்றி எண்ணிரண்டாம் உபசாரத்திற்(கு) அடுத்தவை அந்நாளில்
குன்றி அத்துணை ஈயினும் ஆயிரம் கோடியாய்ப் பயன்நல்கும்
என்(று) இருள் குறும்(பு) அறஎறி கணைசுடர் இரவிசெம் கதிர் என்னத்
துன்(று) இரும் சடைத் துறவர் கேட்(டு) உவப்(பு)உற சூதன் ஆண்டு
[உரைசெய்தான்.]

இ — ள் : அன்றி — அதுவுமல்லாமல், எண்ணிரண்டாம் உபசாரத்திற்கு அடுத்தவை — சோடசோபசாரத்திற்குரிய திரவியங்களை, அந்நாளில் குன்றி அத்துணை ஈயினும் — அற்றைக்காலத்துக் குன்றிமணியளவு உபகரிப்பினும், ஆயிரகோடி ஆய் பலன் நல்கும் — ஆயிரக் கோடிக்கணக்கான பலன்களைக் கொடுக்கும், என்று — இவ்வாறுக, இருள் குறும்பு அற எறி கணை சுடர் இரவி செம் கதிர் என்ன — இருளாகிய கெடுதியை முற்றுக அழிக்கின்ற மிக்க ஒளியையுடைய சூரியனது சிவந்த கிரணத்தைப்போல, துன்று இரும் சடை துறவர் கேட்டு உவப்புற — நெருங்கிய பெரிய சடை முடியையுடைய முனிவர்கள் கேட்டு மனங்களிக்கும்படி, ஆண்டு சூதன் உரை செய்தான் — அவ்விடத்துச் சூதமாமுனிவர் கூறினர் எ — று. (17)

குபேரச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 675

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

சாலிகோத்திரச் சருக்கம்

கழனிமலி கயல்கள் வள்ளைக் கொடி குதிப்ப
தெனக்குழைபாய் கருங்கட் பைந்தார்க்
குழனிமலி முலையமுத மணமிறைவாய் கமழ
முத்தங் கொடுப்போன் போரி
னழனிமலி கடக்கரிதென் றருக்கனுளந்
தடுமாற வவுணர்க் கொன்று
பழனிமலி குடிபுகுந்த பகவனிரு
சரணமலர் பரவி வாழ்வாம்.

[கழனிமலி கயல்கள் வள்ளைக் கொடிகுதிப்ப(து)
எனக்குழைபாய் கரும்கண் பைந்தார்க்
குழல்நிமலி முலைஅமுத மணம் இறைவாய் கமழ
முத்தம் கொடுப்போன் போரில்
அழனிமலி கடக்க அரி(து) என்(று) அருக்கன் உளம்
தடுமாற அவுணர்க் கொன்று
பழனிமலி குடிபுகுந்த பகவன் இரு
சரண மலர் பரவி வாழ்வாம்.]

இ — ள் : கழனி மலி கயல்கள் வள்ளை கொடி குதிப்பது என — வயல்களிற் பொருகின்ற கயல் மீன்கள் வள்ளைக் கொடிகளிற் பாய்வதைப்போல, குழை பாய் கரும் கண் — காதணிவரையும் நீண்ட கரிய கண்களையும், பைம் தார் குழல் — பசுமையாகிய மாலைகளையணிந்த கூந்தலையுமுடைய, நிமலை முலை அமுத மணம் — நின்மலையாகிய உமாதேவியாரது முலைப்பாலின் மணமானது, இறை வாய் கமழ முத்தம் கொடுப்போன் — சிவபெருமானது திருவாயின்கண் பரிமளிக்கும்படி முத்தமிடுபவரும், போரில் அழனி மலை கடக்க அரிது என்று — யுத்தகளத்திலுள்ள உடற்குறைகளாகிய மலைகளைக் கடத்தலியலாதென்று, அருக்கன் உளம் தடுமாற — சூரியனது மனம் அலையும்படி, அவுணர் கொன்று — அசுரர்களையழித்து, பழனி மலை குடிபுகுந்த பகவன் — திருப்பழனிமலையிலெழுந்தருளியிருக்கின்ற சுப்பிரமணியக் கடவுளது, இரு சரணமலர் பரவி வாழ்வாம் — இரண்டு தாமரைமலர் போன்ற திருப்பாதங்களையும் துதித்து (சுகமாய்) வாழக்கடவேம் என — று. (1)

அங்கிராப் பிருகுவிட பன்றதீசி யத்திரிகா சிபன்சு பேதன்
டங்கமில்வான் மீகிசர பங்கன்சா பாலியருட் பரத்து வாசன்
றுங்கமுறு புலத்தியனற் சுசீலனு ரதன்மரிசி சுகன்மார்க் கண்ட
னெங்குமிசை பெறுசனகன் முற்கலன்முற் படுமுனிவ ரிவர்கள் யாரும்.

[அங்கிரா, பிருகு, விட பன், ததீசி, அத்திரி, காசிபன், சுபேதன்,
பங்கம், இல் வான்மீகி, சர பங்கன், சா பாலி, அருள் பரத்து வாசன்,
துங்கம்உறு புலத்தியன், நல் சுசீலன், நா ரதன், மரீசி, சுகன், மார்க் கண்டன்,
எங்கும்இசை பெறுசனகன், முற்கலன், முன் படுமுனிவர் இவர்கள் யாரும்.]

இ — ள் : அங்கிரா — அங்கிராவும், பிருகு — பிருகுவும், விடபன் — விடபனும், ததீசி — ததீசியும், அத்திரி — அத்திரியும், காசிபன் — காசிபனும், சுபேதன் — சுபேதனும், பங்கம் இல் வான்மீகி — குற்றமில்லாத வான்மீகியும், சரபங்கன் — சரபங்கனும், சாபாலி — சாபாலியும், அருள் பரத்துவாசன் — (எவ்வுயிர்களிடத்தும்) அருளையுடைய பரத்துவாசனும், துங்கம் உறு புலத்தியன் — உயர்வு பொருந்திய புலத்தியனும், நல் சுசீலன் — நல்ல சுசீலனும், நாரதன் — நாரதனும், மரீசி — மரீசியும், சுகன் — சுகனும், மார்க்கண்டன் — மார்க்கண்டனும், எங்கும் இசை பெறு சனகன் — எவ்விடங்களிலுங் கீர்த்தி பரந்த சனகனும், முற்கலன் முற்படு முனிவர் இவர்கள் யாரும் — முற்கலனும் முதலாகிய இந்த முனிவர்கள் எல்லோரும் எ — று. (2)

பாடளிக்கு மதுவளிக்கும் பசுந்துளவோன்
முதலமரர் படிவர் யார்க்குங்
கேடளிக்க வருங்கடுவுண் டவனருள்சேர்
சூதன்முகங் கிளர நோக்கிப்
பீடளிக்குந் தவமுனிவ சிவநிசிநோற்
றவர்க்கிறந்த பின்பே ரின்ப
வீடளிப்ப தன்றியிகம் விழைந்தனவு
மளிக்குமோ விளம்பு கென்றார்.

[பா(டு) அளிக்கு மதுஅளிக்கும், பசும்துளவோன்,
முதல் அமரர் படிவர் யார்க்கும்,
கே(டு) அளிக்க வரும்கடு உண்டவன், அருள்சேர்
சூதன் முகம் கிளர நோக்கிப்,
பீ(டு) அளிக்கும் தவமுனிவ சிவநிசி, நோற்
றவர்க்(கு), இறந்த பின்பேரின்ப
வீ(டு), அளிப்ப(து)அன்றி இகம் விழைந்தனவும்
அளிக்குமோ விளம்புக என்றார்.]

இ — ள் : பாடு அளிக்கு மது அளிக்கும் — பண்ணைப் பாடுகின்ற வண்டுகள் உண்ணுதற்குத் தேனைக்கொடுக்கின்ற, பசும் துளவோன் முதல் அமரர் படிவர் யார்க்கும் — பசுமையாகிய துளசிமாலையை யணிந்த விஷ்ணுமுதலிய தேவர்களும் முனிவர்களுமாகிய எல்லோருக்கும், கேடு அளிக்க வரும் கடு உண்டவன் அருள் சேர் — அழிவைச் செய்யும்படி வந்த நஞ்சையுண்ட சிவ பெருமானது திருவருளைப் பொருந்திய, சூதன் முகம் கிளர நோக்கி — சூத முனிவரது முகம் மலரும்படி பார்த்து, பீடு அளிக்கும் தவமுனிவ — பெருமையைத் தருகின்ற தவங்களையுடைய முனிவரே, சிவநிசி — சிவராத்திரி

விரதமானது, நோற்றவர்க்கு — அனுஷ்டித்தவர்களுக்கு, இறந்தபின் பேரின்ப வீடு அளிப்பது அன்றி — உயிர் நீங்கியபின்பு பேரின்பத்தைத் தருதற்குரிய மோட்சத்தைப் பயப்பதேயல்லாமல், இகம் விழைந்தனவும் அளிக்குமோ — இம்மையில் விரும்பிய போக சுகங்களையும் கொடுக்குமோ, விளம்புக என்றார் — கூறியருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் எ — று. (3)

அரவுமதி முடித்தசடை யரனிரவிற்
கண்படைநீத் தருச்சித் தானல்
குரவுதுகள் படுத்திநெடு நிலத்தின்மிகு
செல்வமெலாங் கொடுக்கு மைந்தாய்
விரவுகொலை முதற்பாவ வல்வினையின்
வேர்பிடுங்கி வீடு நல்கும்
பரவுமிதி னிகழ்காதை யொன்றுளதென்
றுயர்சூதன் பகர்வ தானன்.

[அரவுமதி முடித்தசடை அரன்இரவில்,
கண்படை நீத்(து) அருச்சித்தால், நல்
குரவு, துகள் படுத்தி, நெடு நிலத்தின்மிகு
செல்வம்எலாம் கொடுக்கும், ஐந்தாய்
விரவுகொலை முதல்பாவம் வல்வினையின்
வேர் பிடுங்கி வீடு நல்கும்,
பரவும் இதில் நிகழ்காதை ஒன்(று) உள(து) என்று
உயர் சூதன் பகர்வ(து) ஆனன்.]

இ — ள்: அரவு மதி முடித்த சடை அரன் இரவில் — சர்ப்பங்களையுஞ் சந்திரனையுந் தரித்த சடையையுடைய சிவபெருமானது சிவராத்திரியில், கண்படை நீத்து அருச்சித்தால் — நித்திரையின்றிச் சிவபூசை செய்தால், நல்குரவுதுகள் படுத்தி — வறுமைத் துன்பங்களை முற்ற நசித்து, நெடு நிலத்தில் மிகு செல்வமெலாம் கொடுக்கும் — நெடிய பூமியின் கண்ணே (இப்பிறப்பிற்றானே) மிக்க திரவியங்களெல்லாவற்றையுங் கொடுக்கும், ஐந்தாய விரவு கொலை முதல் பாவ வல்வினையின் வேர் பிடுங்கி வீடும் நல்கும் — ஐந்து வகையாகக் கூறப்படுகின்ற கொலை களவு கள் காமம் குருநிந்தையாகிய கொடிய வினைகளின் உற்பத்தியை முற்ற நசித்து (மறுமைக்கண்) மோட்சத்தையுங் கொடுக்கும், பரவும் இதில் நிகழ் காதை ஒன்று உளது என்று — துதிக்கத் தக்கதாய் இச்சிவராத்திரியினிகழ்ந்த ஒரு சரித்திரமுளதென்று, உயர்சூதன் பகர்வதானன் — உயர்வு பொருந்திய சூதமகா முனிவர் கூறுவாராயினர் எ — று. (4)

காலிகோத் திரத்தியல்பிற் புரந்தருளுங்
கண்ணன்முதற் கருதற் கொண்ணாச்
சூலிகோத் திரத்தவர்கொண் டெயிலொருமூன்
றழற்களித்த தொல்லோன் றிங்கண்

மோலிகோத் திரவருளே பெறவேண்டி
யறையுமறை முறையி னின்றோன்
சாலிகோத் திரனெனப்பேர் தரித்துடையா
னொருவனுளன் றவத்தின்மிக்கோன்.

[காலிகோத் திரத்(து) இயல்பில் புரந்(து) அருளும்
கண்ணன் முதல் கருதற்(கு) ஒண்ணுச்
சூலி;கோத் திரத்தவர் கொண்(டு) எயில் ஒரு மூன்(று)
அழற்(கு) அளித்த தொல்லோன் திங்கள்
மோலிகோ திரஅருளே பெறவேண்டி
அறையும் மறைமுறையில் நின்றோன்
சாலிகோத் திரன்எனப்பேர் தரித்துடையான்
ஒருவன்உளன் தவத்தின் மிக்கோன்.],

இ — ள் : காலி கோத்திரத்து இயல்பில் புரந்து அருளும் கண்ணன் முதல் — பசுக்கூட்டங்களை வமிசஒழுக்கத்தின்படி பாதுகாத்தருளிய கோபாலன் முதலிய தேவர்களும், கருதற்கு ஒண்ணு சூலி — அறிதற்கரிய சூலாயுதத்தைத் தாங்கியவரும், கோத்திர தவர் கொண்டு எயில் ஒரு மூன்று அழற்கு அளித்த தொல்லோன் — மேருமலையாகிய வில்லைக் கொண்டு முப்புரங்களையும் அக்கினிக்கு உணவாகக் கொடுத்த பழையோரும், திங்கள் மோலி கோ — சந்திரனைத் தரித்த சடைமுடியையுடையவருமாகிய சிவபெருமானது, திர அருளே பெறவேண்டி — உறுதியாகிய அனுக்கிரகத்தைப் பெற விரும்பி, அறையும் மறை முறையின் நின்றோன் — கூறப்படுகின்ற வேத விதிப்படி ஒழுகுபவனும், சாலி கோத்திரன் என பேர் தரித்துடையான் — சாலிகோத்திரனென்னும் பெயரைப் பெற்றுடையவனுமாகிய, தவத்தின் மிக்கோன் ஒருவன் உளன் — மிக்க தவப்பேற்றையுடைய ஒரு (அந்தண) இருந்தான் எ — று. (5)

வேதியர்தம் குலத்திலுயர் விண்மணிகண்
மணியெனவே விளங்கும் வேத
மோதியுணர்ந் தறிவரிய கலைக்கடலின்
கரைகடந்திட் டுயர்நூல் வல்ல
வாதியரை வென்றுசந்தி வந்தனைகண்
முப்பொழுதும் வழுவா தாற்றிச்
சாதிமுறை தவறுமவ னீதியுட
னெடிதுதினஞ் சரிக்கு நாளில்.

[வேதியர்தம் குலத்தில் உயர் விண்மணிகண்
மணிஎனவே விளங்கும் வேதம்
ஓதி உணர்ந்(து) அறிவரிய கலைக்கடலின்
கரைகடந்திட்(டு) உயர்நூல் வல்ல

வாதியரை வென்றுசந்தி வந்தனைகள்
முப்பொழுதும் வழுவா(து) ஆற்றிச்
சாதிமுறை தவறுமல் நீதியுடன்
நெடிதுதினம் சரிக்கும் நாளில்.]

இ — ள்: வேதியர் தம்குலத்தில் உயர் விண் மணி கண் மணி என — பிராமணர்களது குலத்திற் பிறந்து உயர்வாகிய ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சூரியனைப்போலவும் கண்ணினுள்ளிருக்கின்ற மணியைப்போலவும், விளங்கும் வேதம் ஓதி உணர்ந்து — (உலகமெங்கும்) விளங்குகின்ற சதுர்வேதங்களையும் கற்றறிந்தும், அறிவரிய கலை கடலின் கரை கடந்திட்டு — அறிதற்கரிய அறுபத்துநான்கு கலைஞானங்களாகிய சமுத்திரத்தின் கரையைக் கடந்தும், உயர் நூல் வல்ல வாதியரை வென்று — உயர்வாகிய சாஸ்திரங்களில் வன்மையையுடைய தார்க்கிகர்களை வெற்றிகொண்டும், சந்தி வந்தனைகள் முப்பொழுதும் வழுவாது ஆற்றி — சந்தியாவந்தனங்களைத் திரிகாலங்களிலும் விதிவழுவாது கிரமமாகச் செய்தும், சாதி முறை தவறுமல் — குலத்திற்குரிய ஒழுக்கங்கள் தவறுதலின்றி, நீதியுடன் நெடிது தினம் சரிக்கு நாளில் — தரும ஒழுக்கத்தோடு அநேககாலஞ் சீவித்து வருகையில் எ — று.

ஏ — அசை.

(6)

வம்பவிழுங் குழன்மனைவி மக்கள்சுற்ற
முதற்குடும்ப மலியநாளுஞ்
செம்பவள விதழ்க்கமலை திருக்கடைக்க
ணேக்கமின்றிச் சிறுமை யெய்த
வெம்பரம னருளிதுவோ வென்செய்வே
னென்னமனத் தெண்ணித் தென்பாற்
கும்பமுனி வரனிருக்கு மிடந்தேடிச்
செல்வனெனக் குறித்துக் கொண்டே.

[வம்(பு) அவிழும் குழல்மனைவி மக்கள் சுற்றம்
முதல் குடும்பம் மலியநாளும்
செம்பவள இதழ்க்கமலை திருக்கடைக்கண்
நோக்கம் இன்றிச் சிறுமை எய்த
எம்பரமன் அருள் இதுவோ என்செய்வேன்
என்னமனத்(து) எண்ணித் தென்பால்
கும்பமுனி வரன் இருக்கும் இடம் தேடிச்
செல்வன் எனக் குறித்துக் கொண்டே.]

இ — ள்: வம்பு அவிழும் குழல் மனைவி மக்கள் சுற்றம் முதல் குடும்பம் நாளும் மலிய — நறுமணங் கமழுகின்ற கூந்தலையுடைய மனைவியும் பிள்ளைகளுஞ் சுற்றத்தவர்களுமாகிய குடும்பங்கள் நாள்தோறும் பெருக, செம்பவள இதழ் கமலை திரு கடைக்கண் நோக்கம் இன்றி சிறுமையெய்த — சிவந்த பவளம்போன்ற அதரங்களையுடைய கமலாசனியாகிய இலக்குமிதேவி

யின் திருக்கடாட்சமின்றி வறுமையடைய, எம் பரமன் அருள் இதுவோ என் செய்வேன் என்ன மனத்து எண்ணி — எமது கடவுளாகிய சிவபெருமானது கிருபை இத்தகையதோ! யான் யாதுசெய்வேன் என்று மனத்தில் நினைந்து, தென்பால் கும்ப முனிவரன் இருக்கும் — தக்கணதிக்கின்கணுள்ள கும்போற்பன்னராகிய அகஸ்தியமுனிவ ரெழுந்தருளியிருக்கின்ற, இடம் தேடி செல்வன் என குறித்துக்கொண்டு—பொதியமலையைத் தேடிச்செல்லக் கடவே னென்று நிச்சயித்துக்கொண்டு எ — று.

ஏ — அசை. (7)

தடங்கரைகொண் டிரங்குதிரை சுருட்டியெறிந்
திடும்பெரு நீர்ச் சலதியேழுங்
குடங்கையினிற் கொண்டுமுதற் குடித்தகுறு
முனிவனடி குறுகிப் போற்றி
விடங்கலுழ்பற் பணிவாயி லகப்படுமண்
டுகமென மிடிவாய்ப் பட்டேன்
நிடங்கொடுளந் தேறியுய்யும் படியடியேற்
குனதருட்கண் செய்தி யென்றான்.

[தடம்கரை கொண்(டு) இரங்குதிரை சுருட்டிஎறிந்
திடும்பெரு நீர்ச்சலதி ஏழும்
குடம்கையினில் கொண்டு முதல் குடித்தகுறு
முனிவன் அடி குறுகிப் போற்றி
விடம் கலுழ்பல் பணிவாயில் அகப் படும்மண்
டுகமென மிடிவாய்ப் பட்டேன்
நிடம் கொ(டு)உளம் தேறி உய்யும்படி அடியேற்(கு)
உன(து) அருள்கண் செய்தி என்றான்.]

இ — ள்: தடம் கரை கொண்டு இரங்த திரை சுருட்டி எறிந்திடும் பெரு நீர் சலதி ஏழும் — விசாலமாகிய கரைபொருந்தி யொலிக்கின்ற திரைகளைச் சுருளச்செய்து வீசுகின்ற மிக்க நீர்நிறைந்த சப்தசாகரங்களையும், குடம் கையினில் கொண்டு முதல் குடித்த குறுமுனிவன் அடி குறுகி போற்றி — உள்ளங்கையிலடக்கிப் பண்டைக்காலத்திற் பருகிய அகத்தியமுனிவரது பாதங்களையடைந்து தோத்திரஞ்செய்து, விடம் கலுழ் பல் பணி வாயில் அகப் படும் மண்டூகம் என — விஷத்தைக் கக்குகின்ற பற்களையுடைய சர்ப்பங்களினது வாயிலகப்பட்ட தவளையைப்போல, மிடிவாய்ப்பட்டேன் — வறுமையினால் பீடிக்கப்பட்டேன், நிடங் கொடு உளம் தேறி உய்யும்படி — கலங்கா நிலைமையையடைந்து மனந்தெளிந்துய்யும்படி, அடியேற்கு உனது அருள் கண் செய்தியென்றான் — அடியேற்கு உமது கிருபாநோக்கத்தைச் செய்தருளுகவென்று வேண்டினன் எ — று. (8)

ஆங்கவனு முளத்தருள்கூர்ந் தந்தணனே
முகநோக்கி யவனி மீதிற்
றீங்ககற்றுஞ் சிவநிசிநோற் றிடில்வறுமைப்
பெருங்கடலின் றீரங் காண்பாய்
பூங்கமலத் தயனுலும் புகலரிய
போகமெல்லாம் புசித்துப் பின்னர்
நீங்கரிய சிவபதமும் பெறுவாயென்
றுறுதியுட னிகழ்த்தி னனல்.

[ஆங்(கு) அவனும் உளத்(து) அருள் கூர்ந்(து) அந்தணனே
முகம் நோக்கி அவனிமீதில்
தீங்(கு) அறு சிவநிசிநோற்றிடில் வறுமைப்
பெருங்கடலின் தீரம் காண்பாய்
பூங்கமலத்(து) அயனுலும் புகல் அரிய
யோகம் எல்லாம் புசித்துப் பின்னர்
நீங்கரிய சிவபதமும் பெறுவாய் என்(று)
உறுதியுடன் நிகழ்த்தி னன் ஆல்.]

இ — ள் : ஆங்கு அவனும் உளத்து அருள் கூர்ந்து — அவ்விடத்து அவ்வகத்தியமுனிவரும் மனத்தில் இரக்கங்கூர்ந்து, அந்தணனே முகம் நோக்கி— பிராமணனாகிய சாலிகோத்திரனது முகத்தைப் பார்த்து, அவனி மீதில் — பூமியின் கண்ணே, தீங்கு அகற்றும் சிவநிசி நோற்றிடில் — எல்லாத் தீங்குகளையும் நாசஞ்செய்கின்ற சிவராத்திரி விரதத்தை யனுட்டித்தால், வறுமை பெருங் கடலின் தீரம் காண்பாய் — வறுமையாகிய பெரிய சமுத்திரத்தின் கரையைக் காண்பாய், பூ கமலத்து அயனுலும் புகல் அரிய போகம் எல்லாம் புசித்து — தாமரைமலரில் வாசஞ்செய்கின்ற பிரமதேவராலுஞ் சொல்லமுடியாத சுகானுபவங்களையெல்லாம் அனுபவித்து, பின்னர் நீங்கரிய சிவபதமும் பெறுவாய் என்று — மறுமைக்கண் நீங்குதலில்லாத சிவபதவியாகிய மோட்சத்தையும் பெறுவாயென்று, உறுதியுடன் நிகழ்த்தினன் — துணிவாய்க் கூறினர் எ — று.

ஆல் — அசை.

(9)

அனையசிவ நிசிநோற்கு முறைமறையா
கமப்படி நீ யடிய னேனுக்
கினையபரி செனவிரித்தீண் டியம்புகென
விருக்குமுன்னு வியம்பும் வேதந்
தனையுணருங் குடத்தனய னவ்விரதந்
தனைநோற்குந் தன்மை யெல்லாங்
கனைகடலுண் டருடிருவாய் மலர்ந்தவனுட்
புலங்களிக்கக் கழறிப் பின்னும்.

[அனைய சிவ நிசிநோற்கும் முறைமறைஆ
கமப்படி நீ அடிய னேனுக்(கு)
இனைய பரி(சு) எனவிரித்(து) ஈண்(டு) இம் புகளென
இருக்கு முன்னு இயம்பும் வேதம்
தனை உணரும் குடத்தனயன் அவ்விரதம்
தனைநோற்கும் தன்மை எல்லாம்
கனைகடல் உண்(டு) அருள் திருவாய் மலர்ந்(து) அவன் உள்
புலம் களிக்கக் கழறிப் பின்னும்.]

இ — ள் : அனைய சிவநிசி நோற்கும் முறை — அந்தச் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கின்ற கிரமத்தை, மறை ஆகமப்படி — வேதாகமவிதிப்படி, நீ அடியேனுக்கு இனைய பரிசு என விரித்து ஈண்டு இயம்புக என — தேவரீர் அடியவனுகிய எனக்கு இத்தன்மையையுடையதென்று விரிவாய் இப்பொழுது கூறியருளுகவென்று வேண்டுதலும், இருக்கு முன்னு இயம்பும் வேதம் தனை உணரும் குடத்தனயன் — இருக்கு முதலாகக் கூறப்படுகின்ற வேதங்களெல்லாமறிந்த கும்போற்பன்னராகிய அகத்தியமுனிவர், அவ்விரதம் தனை நோற்கும் தன்மை எலாம் — அவ்விரதத்தை யனுட்டிக்கும் விதங்களெல்லாவற்றையும், கனை கடல் உண்டு அருள் திருவாய் மலர்ந்து — ஒலிக்கின்ற சமுத்திரத்தை உண்டருளிய திருவாயைத் திறந்து, அவன் உள் புலம் களிக்க கழறி பின்னும் — அச்சாவிகோத்திரனது மனம் மகிழும்படி கூறிப் பின்னரும் எ — று. (10)

பொன்னிலமே வியபுலவர் புகழ்விரத
மிதனிலைமை புகலற் பாற்றே
வெந்நிலமுந் தொழத்தகுநற் றலத்திலிருந்
திவ்விரத மியற்ற லுற்றே
னன்னிலவித் தெனவோங்கிச் சின்னளிற்
பெரிதுபய னல்கு மென்ன
வந்நிலமு மெனக்கறியச் சொல்லுதிநல்
லோதிபயி லறிஞ வென்ஞான்.

[பொன்நிலம்மே வியபுலவர் புகழ்விரதம் இதன்நிலமை புகலல்பாற்றே
எந்நிலமும் தொழத்தகும்நல் தலத்தில் இருந்(து) இவ்விரதம் இயற்றல் உற்றால்
நல்நில வித்(து) என ஓங்கிச் சில்நாளில் பெரிது பயன் நல்கும் என்ன
அந்நிலமும் எனக்(கு) அறியச் சொல்லுதிநல் ஓதிபயில் அறிஞ என்ஞான்.]

இ — ள் : பொன் நிலம் மேவிய புலவர் புகழ் — பொன்னுலகமாகிய சுவர்க்கலோகத்தின்கண் வசிக்கின்ற தேவர்களாலும் புகழப்படுகின்ற, விரதம் இதன் நிலைமை புகலல் பாற்றே — இந்த விரதத்தினது பெருமையைக் கூறவியலுமோ, எ நிலமும் தொழ தகும் நல் தலத்திலிருந்து — எவ்வுலகத்தாராலும் வணங்கப்படத்தக்க புண்ணிய தலத்திலிருந்து, இவ் விரதம் இயற்றல் உற்றால் — இவ்விரதத்தை யனுஷ்டித்தால், நல் நில வித்து என ஓங்கி — அது) நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட வித்தைப்போல வளர்ந்து, சில்

தாளில் பெரிது பயன் நல்கும் என்ன — சில தினங்களில் அளவற்ற பிரயோசனத்தைத் தருமென்று கூற, நல் ஓதி பயில் அறிஞ அந்நிலமும் எனக்கு அறிய சொல்லுதி என்முன் — நல்ல ஞானத்தைப்பயின்ற அறிவையுடையவரே அப்படிப்பட்ட தலத்தையும் யானறியும்படி கூறியருளவேண்டுமென்முன் எ — று. (11)

சீதவனம் பொழியுமிருட் கொண்டனிறங்
கொண்டிடுமெய்ச் செய்ய செங்கண்
மாதவனம் புயன்றவள வாரணத்தின்
வருமகவான் வானில் வாழ்ஞர்
பாதவன சம்பரவ வுமையாளோ
டெமையாளும் பரமன் வைகும்
வேதவன மென்றுலகி லொன்றுளதங்
கதன் றகையார் விரிக்க வல்லார்.

[சீதவனம் பொழியும்இருள் கொண்டல் நிறம்
கொண்டிடும் மெய்ச் செய்ய செம்கண்
மாதவன், அம்புயன், தவள வாரணத்தில்
வரும் மகவான் வானில் வாழ்ஞர்
பாதவனசம், பரவ உமையாளோ(டு)
எமை ஆளும் பரமன் வைகும்
வேதவனம் என்(று) உலகில் ஒன்(று) உள(து) அங்(கு)
அதன் தகையார் விரிக்க வல்லார்.]

இ — ள்: சீதவனம் பொழியும் இருள் கொண்டல் நிறம் கொண்டிடும் மெய் — குளிர்ந்த நீரைப்பொழிகின்ற கரியமேகம் போன்ற நிறத்தைக்கொண்ட திருமேனியும், செய்ய செம் கண் — செம்மையாகிய சிவந்த கண்களையுமுடைய, மாதவன் — மாயவனும், அம்புயன் — பிரமனும், தவள வாரணத்தில் வரும் மகவான் — வெள்ளிய அயிராவத யானையின் மேல் ஏறிவருகின்ற இந்திரனும், வானில் வாழ்ஞர் — சுவர்க்கவாசிகளாகிய மற்றுந்தேவர்களும், பாதவனசம் பரவ — பாததாமரைகளைத் துதிக்க, உமையாளோடு எமையாளும் பரமன் வைகும் — பார்வதிதேவியுடன் எங்களையாண்டருளுகின்ற சிவபெருமானெழுந்தருளிய, வேதவனம் என்று உலகில் ஒன்று உளது — மறைக்காடென்னுந் திருப்பெயரையுடைய ஒரு தலமுள்ளது, அங்கு அதன் தகை யார் விரிக்க வல்லார் — அவ்விடத்து அதன் பெருமையை யார் விரித்துக் கூற வல்லுநர் எ — று. (12)

முன்னுருவம் பலவெடுத்து முயன்று செய்தீ
வீனைக்கிழங்கே மூலமாகப்
பின்னுருவ மெடுத்துழலும் பித்தருமத்
தலத்திறக்கப் பெற்றுரென்னிற்

பொன்னுருவச் சடாமௌலிப் புனிதன்ரு
ரகப்பிரமம் போதித் தாதித்
தன்னுருவந் தருவதனு லத்தலத்துக்
கிணை புகலச் சரிவே றுண்டோ.

[முன் உருவம் பல எடுத்து முயன்று செய்தி
விணைக் கிழங்கே மூல மாகப்
பின்உருவம் எடுத்(து) உழலும் பித்தரும்அத்
தலத்(து) இறக்கப் பெற்றூர் என்னில்
பொன்உருவச் சடா மௌலிப் புனிதன், தா
ரகப்பிரமம் போதித்(து) ஆதித்
தன்உருவம் தருவதனுல் அத்தலத்துக்(கு)
இணைபுகலச் சரிவே(று) உண்டோ.

இ — ள் : முன் உருவம் பல எடுத்து முயன்று செய் தீவினை கிழங்கே-மூலமாக— முன்னைக்காலங்களோறும் பல பிறவிகளிலுஞ் சரீரங்களை யெடுத்துப் பிறந்து முயற்சி கொண்டு செய்த தீவினையாகிய கிழங்கை ஆதாரமாகக் கொண்டு, பின் உருவம் எடுத்து உழலும் பித்தரும் — பின்னும் பின்னும் பிறந்துழலுகின்ற அறிவிலிகளும், அத்தலத்து இறக்க பெற்றூர் என்னின் — அந்த வேதவனத்திலே இறப்பாராயின், பொன் உருவ சடா மௌலி புனிதன்— பொன்போன்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான், தாரக பிரமம் போதித்து — ஓம் என்னும் பிரணவத்தை உபதேசித்து, ஆதி தன் உருவம் தருவதனுல் — ஆதியாகிய தமது சாரூபத்தைக் கொடுத்தலால், அத்தலத்துக்கு இணை புகல சரி வேறு உண்டோ — அந்தத்தலத்திற்கு ஒப்பாகக் கூறுதற்கு வேறொரு தலமுளதோ எ — று. (13)

பொன்னிமுத னதிப்புனல்பாய் புலவுகமழ்
கடற்றீரப் புளினந்தோறுங்
கன்னியிளம் பெடையொடனங் கலந்துவளங்
காட்டுமறைக் காட்டுவேணிச்
சென்னிதனின் மதிமுடித்த சிவபெருமான்
சந்நிதியிற் றிருமுன் னுக
வன்னிமர மொன்றுளதாங் கடியர்வினைக்
காடுசுடும் வன்னி யாமால்.

[பொன்னிமுதல் நதிப்புனல் பாய் புலவு கமழ்
கடல் நிரப் புளினம் தோறும்
கன்னிஇளம் பெடையோ(டு) அனம் கலந்துவளம்
காட்டு மறைக் காட்டு வேணிச்

சென்னிதனில் மதிமுடித்த சிவபெருமான்
சன்னிதியில் திருமுன் ஆக
வன்னிமரம் ஒன்(று) உள(து) ஆங்(கு) அடியர்வினைக்
காடு சுடும் வன்னி ஆமால்.]

இ — ள் : பொன்னி முதல் நதி புனல் பாய் புலவு கமழ் கடல் திரம் புனிலம் தோறும் — காவிரியாறு முதலிய புண்ணிய நதிகளின் நீரானது வந்து பாய்கின்ற புலால் நாற்றம் வீசப் பெற்ற சமுத்திரத்தின் கரையிலுள்ள மணற் குன்றுகளில், கன்னி இளம் பெடையோடு அனம் கலந்து — இளமையாகிய கன்னிப்பருவத்தையுடைய பெடையன்னத்தோடு சேவலன்னமானது சேர்க்கை செய்து, வளம் காட்டும் மறைக்காட்டு — நீர்வளத்தைக் காட்டுகின்ற வேதாரணியப்பதியிலெழுந்தருளிய, வேணி சென்னி தனில் மதி முடித்த சிவபெருமான் சந்நிதியில் திரு முன் ஆக — சடைபொருந்திய சிரசிலேசந்திரனைத்தரித்த சிவபெருமானது திருக்கோயிலின் முன்னே, வன்னி மரம் ஒன்று உளது — ஒரு வன்னிவிருட்சமிருக்கின்றது, ஆங்கு அடியர் வினை காடு சுடும் வன்னியாம் — அது அவ்விடத்து வருகின்ற அடியார்களின் பாவமாகிய காடுகளைத் தகனச் செய்கின்ற அக்கினியேயாகும் எ — று.

ஆல் — அசை. (14)

விண்ணவர்பூ சனைபுரியா மறையொழுக்கம்
வழுக்கியவே தியர்கோல் கோடி
மண்ணவரை வருத்துகின்ற மன்னர்நெறி
பிழைத்தொழுகும் வணிகர் முன்னு
வெண்ணவரும் பின்னவர் சங்கரசாதி
யரிவையர்மற் றிவரீ ருகப்
பண்ணவர்நா டெனத்தகுமத் தலமேவும்
பொழுதெந்தப் பதக ரேனும்.

[விண்ணவர்பூ சனைபுரியா மறைஒழுக்கம்
வழுக்கியவேதியர், கோல் கோடி
மண்ணவரை வருத்துகின்ற மன்னர், நெறி
பிழைத்(து) ஒழுகும் வணிகர், முன்னு
எண்ணவரும் பின்னவர், சங்கர சாதி
அரிவையர் மற்(று) இவர் ஈருகப்,
பண்ணவர் நா(டு) எனத்தகும்அத்
தலம்மேவும் பொழு(து), எந்தப் பதகர் ஏனும்.]

இ — ள் : விண்ணவர் பூசனை புரியா மறை ஒழுக்கம் வழுக்கிய வேதியர்— தேவபூசை செய்யாத வேத ஒழுக்கத்தினின்றுந் தவறிய பிராமணர்களும், கோல் கோடி மண்ணவரை வருத்துகின்ற மன்னர் — செங்கோன் முறை தவறிப்

பூமியிலுள்ளாரைத் துன்புறுவிக்கின்ற அரசர்களும், நெறி பிழைத்து ஒழுகும் வணிகர் — தமது குலாசாரத்தை விட்டுத் தீயவழியில் நடக்கின்ற செட்டிகளும், முன்னு — முதலாக, எண்ணவரும் பின்னவர் — மதிக்கப்படுகின்ற வேளாளர் களும், சங்கரசாதி — சங்கரசாதியாரும், அரிவையர் இவர் ஈறுக — பெண் களும் ஆகிய இவர்கள் இறுதியாக, பண்ணவர் நாடு என தகும் — தேவர்களது சுவர்க்கலோகமென்று சொல்லத்தக்க, அதலம் மேவும் பொழுது — அந்த வேதவனத்தையடையும்பொழுது, எந்த பதகரேனும் — எவ்வகைப் பாவிகளா யினும் எ — று.

மற்று — அசை. (15)

சிறையுறுமிப் பிறவியெனும் பிணிக்குடைந்தீர்
வம்மினது தீர்ப்பன் யானென்
றறைபறையிற் கறங்குதிரை மறைநதிக்க
ணடைந்துகுடைந் தாடிக் கோடித்
துறையதனிற் படிந்துமுதற் சுருதிதொட்ட
வாரிதனிற் மூழ்ந்து தொன்னூன்
முறைவழுவா துன்னிமணி கன்னிகையிற்
றுன்னியந்நீர் மூழ்கி யேறி.

[சிறைஉறும் இப்பிறவிஎனும் பிணிக்(கு) உடைந்தீர்,
வம்மின் அது தீர்ப்பன் யான் என்(று)
அறைபறையில் கறங்கு திரை மறைநதிக்கண்
அடைந்து குடைந்(து) ஆடிக், கோடித்
துறைஅதனில் படிந்துமுதல் சுருதிதொட்ட
வாரிதனில் தோய்ந்து, தொல்நூல்
முறைவழுவா(து) உன்னி, மணி கன்னிகையில்
துன்னி, அந்நீர் மூழ்கி ஏறி.]

இ — ள்: சிறை உறும் இ பிறவி எனும் பிணிக்கு உடைந்தீர் — பிறவிச் சிறையாகிய இந்தந் துன்பத்திலுள் வருத்த முற்றீர், வம்மின் யான் அது தீர்ப்பன் என்று — இங்கு வாருங்கள் யான் அந்நோயைத் தீர்க்கவல்லேனென்று, அறை பறையில் கறங்கு திரை — அடிக்கப்படுகின்ற முரசைப்போல ஒலிக்கின்ற திரைகளையுடைய, மறை நதிக்கண் அடைந்து குடைந்து ஆடி — வேதநதியை யடைந்து அதிலே முழுகி நீராடி, கோடி துறை அதனில் படிந்து — (பின்னர்) கோடி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, முதல் சுருதி தொட்ட வாரிதனில் தோய்ந்து — (பின்பு) முதன்மை பொருந்தியவேதாமிர்தநதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, தொல் நூல் முறை வழுவாது உன்னி — பழைய சாஸ்திரவிதிதவறாமல் தியானஞ்செய்து, மணி கன்னிகையில் துன்னி அந்நீர் மூழ்கி ஏறி — (பின்னர்) மணிகன்னிகையென்னுந் தீர்த்தத்தையடைந்து அதில் ஸ்நானஞ் செய்து ஏறி எ — று. (16)

விடமுனிய வருமமையத் திமையவர்க்கா
வுண்டுவட விண்டுபண்டு
தடமுனியிற் குனித்துநகைத் தெயிலொருமுன்
றழற்களித்த தலிவற் போற்றிற்
றிடமுனிய பொருளனைத்துஞ் சித்தியுற
முத்தியினுஞ் சேர்வ ரென்றே
குடமுனிவன் சுருதிவனப்பெருமை யெல்லா
மவற்கறியக் கூறிப் பின்னும்.

[விடம்முனிய வரும் அமையத்(து) இமையவர்க்கா
உண்டு வடவிண்டு பண்டு
தடமுனியில் குனித்து நகைத்(து) எயில்ஒரு மூன்(று)
அழற்(கு) அளித்த தலிவன் போற்றில்
திடம்உ(ன்)னிய பொருள் அனைத்தும் சித்தி உற
முத்தியினும் சேர்வர் என்றே
குடமுனிவன் சுருதிவனப் பெருமைஎலாம்
அவற்(கு) அறியக்கூறிப் பின்னும்.]

இ — ள் : விடம் முனிய வரும் அமையத்து — விஷமானது கொல்லவருஞ் சமயத்திலே, இமையவர்க்கா உண்டு — தேவர்கள் பொருட்டு அதனைப் புசித்து, வட விண்டு பண்டு தடமுனியிற் குனித்து — மகாமேருமலையை முன்னைக் காலத்து விசாலமாகிய வில்லாக வளைத்து, நகைத்து எயில் ஒரு மூன்று அழற்கு அளித்த தலிவற் போற்றில் — புன்னகை புரிந்து முப்புரங்களையும் அக்கினிக்கு உணவாகக் கொடுத்த பரமசிவனைத் தோத்திரஞ் செய்யில், உன்னிய பொருள் அனைத்தும் சித்தியுற — நினைத்த பொருள்களெல்லாம் சித்தியடைந்து, முத்தியினும் சேர்வர் — மோட்சத்தையுமடைவர், திடம் என்று — இது நிச்சயமென்று, குடமுனிவன் — அகத்திய முனிவர், சுருதி வன பெருமை எல்லாம் — வேதவனத்தின் மகிமைகளெல்லாவற்றையும், அவற்கு அறிய கூறி பின்னும் — அச்சாலிகோத்திரனுக்குத் தெரியும்படி சொல்லிப்பின்னரும் எ — று.

ஏ — அசை.

(17)

அத்தல மாரூர் காசி யம்பலமற்
றெவற்றினுக்கு மதிக மென்றே
முத்தலமும் புகழவரு முனிவரனை
வருமொழிந்தார் மொழியாநின்ற
வெத்தலமு மதிக்கு மிந்தத்
தலத்திலிருந் திவ்விரத மியற்றிச்சித்தி
கைத்தலத்தில் வைத்த நெல்லிக் கனிபோலக்
காண்டியெனக் கழறிப் பின்னர்.

[அத்தலம் ஆரூர் காசி அம்பலம் மற்(று)
எவற்றினும் அதிகம் என்றே,
முத்தலமும் புகழுவரு முனிவர் அனை
வரும்மொழித்தார், மொழியா நின்ற
எத்தலமும் மதிக்கும் இந்தத் தலத்தில், இருந்(து)
இவ்விரதம் இயற்றில், சித்தி
கைத்தலத்தில் வைத்த நெல்லிக் கனிபோலக்
காண்டி எனக் கழறிப் பின்னர்.]

இ — ள்: அத்தலம் — அந்த மறைக்காடானது, ஆரூர் காசி அம்பலம் மற்று எவற்றினிற்கும் அதிகம் என்று — திருவாரூர் காசி சிதம்பரம் முதலாகிய மற்றைய எல்லாத் தலங்களிலும் விசேடமுடையதென்று, முத்தலமும் புகழுவரும் முனிவர் அனைவரும் மொழிந்தார் — திரிலோகத்தாரும் புகழத்தக்க முனிவர் யாவரும் கூறினர், மொழியா நின்ற எத்தலமும் மதிக்கும் இந்த தலத்தில் இருந்து — கூறப்படுகின்ற எத்தலத்தவர்களாலும் மதிக்கப்படும் இத்தலத்திலிருந்து, இ விரதம் இயற்றில் — இந்த விரதத்தை யனுஷ்டித்தால், கை தலத்தில் வைத்த நெல்லி கனி போல — கையிலே வைத்த கருநெல்லிப் பழத்தைப்போல, சித்தி காண்டி என கழறி பின்னர் — சித்தியடையப் பெறுவாயென்றுகூறிப் பின்பு எ — று.

ஏ — அசை. (18)

நல்வலனே யதனமலி நங்கையொடு
கிராதவுரு நண்ணிக் கானிற்
செல்வலனே வருங்காண வெல்வலருச் சுனனே
யென்னச் செயிர்த்துப் போர்செய்
மல்வலனே யுளத்திருத்தி மறைவலனும்
வாதாவி மடியச் சீறி
வில்வலனே முனிந்தமுனி விடைகொடுப்ப
மறைசைநகர் மேவ லுற்றான்.

[நல்வல் அனைய தனமலி நங்கையொடு
கிராத உருநண்ணிக் கானில்
செல்வல்: அனைவரும்காண வெல்வல் அருச்சுனனே
என்னச் செயிர்த்துப் போர்செய்
மல்வலனே உளத்(து)இருத்தி மறைவலனும்
வாதாவி மடியச் சீறி
வில்வலனே முனிந்தமுனி விடைகொடுப்ப
மறைசை நகர் மேவல் உற்றான்.]

இ — ள்: நல் வல் அனைய தன மலி நங்கையொடு — நல்ல சூதாடுகருவியை நிகர்த்த தனமாகிய மலைகளையுடைய உமாதேவியாருடன், கிராத உருநண்ணி — வேடவடிவங்கொண்டு, கானில் செல்வல் — காட்டையடைவேன், அனைவரும்காண அருச்சுனனே வெல்வல் என — யாருங் காணும்படி அருச்

சுனனே வெல்லுவேனென்று, செயிர்த்து போர்செய் மல்வலனே உளத்து இருத்தி — கோபித்துப் போர்செய்த மல்யுத்தத்தில் வலிமையுடையவராகிய சிவபெருமானே மனத்திற் சிந்தித்து, மறை வலனும் வாதாவி மடிய சீறி — மந்திரவலிமையையுடையவனுகிய வாதாவியென்னுமசுரன் அழியும்படி கோபித்து, வில்வலனே முனிந்தமுனி — வில்வலனுகியஅசுரனையும் கோபித்தழித்த அகத்திய முனிவர், விடைகொடுப்ப — அனுமதி கொடுக்க, மறைசை நகர் மேவல் உற்றனன் — வேதாரணியப்பதியையடைந்தான் எ — று. (19)

உற்றவணுற் றிடும்புனித தீர்த்தமெலாம்
படிந்தாடி யுயர்பொற் கோவில்
சுற்றிவலம் வந்துகொற்ற வீரகத்திச்
சேதகன்ரு டொழுது முன்ரு
ளற்றமிலன் மறைநறைப்போ தாலருச்சித்
தருளிறைசே வடிகள் போற்றிக்
குற்றமில்யா ழைப்பழித்த மொழியம்மை
நூபுரத்தாள் கும்பிட் டேத்தி.

[உற்(று) அவண் உற்றிடும் புனித தீர்த்தம் எலாம்
படிந்(து) ஆடி, உயர்பொன் கோவில்
சுற்றி, வலம் வந்து, கொற்ற வீரகத்திச்
சேதகன்தாள் தொழுது முன்நாள்
அற்றம்இல் நான்மறை நறைப்போதால் அருச்சித்(து)
அருள் இறைசேவடிகள் போற்றி
குற்றம்இல் யாழைப் பழித்த மொழி அம்மை
நூபுரத் தான் கும்பிட்(டு) ஏத்தி.]

இ — ள்: உற்று அவண் உற்றிடும் புனித தீர்த்தம் எலாம் படிந்து ஆடி — போய் அங்குள்ள பரிசுத்தமாகிய தீர்த்தங்கள் யாவற்றினும் ஸ்நானஞ்செய்து, உயர் பொன் கோவில் சுற்றி வலம் வந்து — உயர்வுபொருந்திய பொன்மய மாகிய திருக்கோயிலைப் பிரதட்சிணம் வந்து, கொற்ற வீரகத்தி சேதகன் தாள் தொழுது — வெற்றியையுடைய வீரக்கொலையாலாகிய பழியைத் துடைத்த விநாயகக் கடவுளது திருப்பாதங்களே நமஸ்கரித்து, முன்னாள் அற்ற மில் நால் மறை — பண்டைக்காலத்துக் குற்றமில்லாத நான்கு வேதங்களும், நறை போதால் அருச்சித்து அருள் — வாசனை பொருந்திய புஷ்பங்களினால் பூசனைசெய்த, இறை சே அடிகள் போற்றி — சிவபெருமானது சிவந்த திருப் பாதங்களே ஸ்தோத்திரஞ் செய்து, குற்றமில் யாழைப் பழித்த மொழி அம்மை — குற்றமில்லாத யாழ்ப்பழித்த மொழி அம்மைபாரது, நூபுரத் தான் கும்பிட்டு ஏத்தி — சிலம்பணிந்த திருப்பாதங்களே வணங்கித் துதித்து எ — று. (20)

ஒருபொருளே யுணர்ந்திருகண் பனிதூங்க
முப்பொழுது முயர்நால் வேதந்
தருபொருளா மஞ்செழுத்தை நெஞ்சமுத்தி
யறுதொழிலோர் தலைவன் பாரில்
வருபொருளா ருயிரனைத்தும் படைத்தளிக்குந்
தன்மையினன் மண்ணோர் விண்ணோ
ரிருபொருளென் றிடுமயன்மாற் கெட்டாத
பதம்பெறுவா னிதயத் தெண்ணி.

[ஒரு பொருளே உணர்ந்(து) இருகண் பனிதூங்க
மூப்பொழுதும் உயர்நால் வேதம்
தரு பொருளாம் அஞ்(சு)எழுத்தை நெஞ்(சு) அழுத்தி
அறுதொழிலோர் தலைவன் பாரில்
வருபொருள் ஆருயிர் அனைத்தும் படைத்(து) அளிக்கும்
தன்மையினன் மண்ணோர் விண்ணோர்
இருபொருள் என்றிடும் அயன்மாற்(கு) எட்டாத
பதம்பெறுவான் இதயத்(து) எண்ணி.]

இ — ள் : ஒரு பொருளே உணர்ந்து — ஒப்பில்லாத முழுமுதற்பொருளாகிய சிவத்தையறிந்து, இரு கண் பனி தூங்க — இரண்டு கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரிய, மூப்பொழுதும் — காலை உச்சி மாலையாகிய திரிகாலங்களிலும், உயர் நால் வேதம் தரு பொருள் ஆம் அஞ்செழுத்தை நெஞ்சமுத்தி — மேன்மைதங்கிய நான்கு வேதங்களினாலும் உணர்த்தப்படுகின்ற ஆப்தமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாட்சரங்களே மனத்திற் சிந்தித்து, அறுதொழில் ஓர் தலைவன் — ஒதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் ஆகிய அறுதொழில்களையுமுடைய பிராமணோத்தமனாகிய அச்சாலிகோத்திரன், பாரில் வரு பொருள் ஆர் உயிர் அனைத்தும் படைத்து அளிக்கும் தன்மையினால் — பூமியின் கண்ணேயுள்ள சர்வான்மாக்களையும் முழுதுஞ் சிருட்டித்துக் காக்கின்ற தன்மையினால், மண்ணோர் விண்ணோர் இருபொருள் என்றிடும் — பூமியிலுள்ள மனுடர்களும் சுவர்க்க வாசிகளும் இரண்டு பொருளென்று எடுத்துப்பேசுகின்ற, அயன் மாற்கு எட்டாத — பிரம விஷ்ணுக்களினது அறிவுக்குமகப்படாத, பதம் பெறுவான் இதயத்து எண்ணி — திருப்பாதங்களையடையும்படி மனத்திற் சிந்தித்து எ — று. (21)

சிவநிசியாஞ் சதுர்த்தசியிற் றிங்கடொறுந்
துயிலுணவு சிறிதுமின்றித்
தவழுயல்வா னீராடி வில்வமுடன்
கந்தமலர்சந்தஞ் சாத்திப்
பவமறமந் திரநவின்று பரிந்துநிவே
தனம்புரிந்து பாடியாடி
நவநவமாச் சிவபூசை நாலுயா
மமுமுடித்து நடத்து நாளில்.

[சிவநிசியாம் சதுர்த்தசியில் திங்கள்தொறும்
துயில் உணவு சிறிதும் இன்றித்
தவம்முயல்வான் நீர்ஆடி வில்வம் உடன்
கந்தமலர்ச் சந்தம் சாத்திப்
பவம் அற மந்திரம் நவின்று பரிந்து
நிவேதனம் புரிந்து பாடி ஆடி
நவம் நவம்ஆய்ச் சிவபூசை நாலுயாமமும்
முடித்து நடத்தும் நாளில்.]

இ — ள் : திங்கள் தொறும் சிவநிசியாம் சதுர்த்தசியில் — மாதந்தோறும் வருஞ் சதுர்த்தசியாகிய சிவராத்திரிகளினெல்லாம், துயில் உணவு சிறிது மின்றி — நித்திரையுமுணவுஞ் சற்றேனுமில்லாமல், தவமுயல்வான் நீராடி — விரதத்தையனுஷ்டிக்கும்படி (சுத்தோதகத்தில்) ஸ்நானஞ் செய்து, வில்வ முடன் கந்த மலர் சந்தம் சாத்தி — வில்வபத்திரத்தையும் பரிமளம் வீசுகின்ற புஷ்பங்களையும் சந்தனத்தையுஞ் சாத்தி, பவம் அற மந்திரம் நவின்று — பிறவித்துன்பம் நெடும்படி மந்திரங்களைச் செபித்து, பரிந்து நிவேதனம் புரிந்து — அன்புடனே அன்னம் முதலியவற்றை நிவேதனஞ்செய்து, பாடி ஆடி — ஸ்தோத்திரங்களைப்பாடி ஆனந்தக் கூத்தாடி, நவம் நவமாய்சிவபூசை நாலுயாமமும் முடித்து நடத்தும் நாளில் — புதுப்புதிதாய்ச் சிவபூசையை நான்கு யாமங்களிலும் நடாத்தி வருங்காலத்தில் எ — று. (22)

சூடுடைய தலைச்சேவற் றுவசனைப்பெற்
றெடுத்தவிடைத் துவசன் பொற்று
ளேடுடைய மனக்கமலத் திருத்தியருச்
சித்திடுமோ ரிரவி னைப்பண்
கோடுடைய கயிலைநடை கொண்டனைய
வெள்விடைமேற் கொண்டு கூந்தற்
காடுடைய மலைமகளோ டெதிர்நின்றுண்
மற்றவன்கண் களிக்க மன்னே.

[சூ(டு)உடைய தலைச்சேவல் துவசனைப் பெற்(று)
எடுத்தவிடைத் துவசன் பொன்தாள்
ஏ(டு) உடைய மனக்கமலத்(து) இருத்தி அருச்
சித்திடும் ஓர் இரவில் நாப்பண்
கோ(டு) உடைய கயிலை நடைகொண்(டு) அனைய
வெள்விடைமேல் கொண்டு கூந்தல்
கா(டு) உடைய மலைமகளோ(டு) எதிர் நின்றுண்
மற்(று) அவன்கண் களிக்க மன்னே.]

இ — ள் : சூடு உடைய தலை சேவல் துவசனை பெற்று எடுத்த — சூடு பொருந்திய சிரசையுடைய சேவலாகிய கொடியையுயர்த்திய சுப்பிரமணியக் கடவுளைப் பெற்றருளிய, விடை துவசன் பொன் தாள் — இடபக் கொடியையுடைய சிவபெருமானது பொன்மயமாகிய திருப்பாதங்களை, ஏடு உடைய மன

கமலத்து இருத்தி — (நற்குணமாகிய) இதழ்களையுடைய இதயதாமரையில் ஆவாகித்து, அருச்சித்திடும் ஓர் இரவின் நாப்பண் — பூசை செய்த ஒரு சிவராத்திரியின் அர்த்தயாமத்தில், கோடு உடைய கயிலை நடை கொண்டு அணைய — சிகரத்தையுடைய ஒரு கயிலாய மலை நடந்து வந்தாற் போன்ற, வெள்விடை மேல் கொண்டு — வெண்ணிறமாகிய இடப வாகனத்தின் மேலிவர்ந்து, கூந்தல் காடு உடைய மலைமகளோடு — கூந்தலாகிய காட்டையுடைய மலையரசன் புத்திரியாகும் உமாதேவியாரோடு, அவன் கண் களிக்க எதிர் நின்றுன் — அச்சாலிகோத்திரனது கண்கள் ஆனந்தமடையும்படி முன் வந்து நின்றருளினர் எ — று.

மற்று மன் ஓ அசைகள். (23)

பிறைகாட்டுஞ் சடைமுடியும் பிரமரங்கா
மரமூரன்று பிரசமாந்த
நறைகாட்டுங் கொன்றையந்தா ரணிந்திலகு
திருமார்பு நயனமூன்றுங்
கறைகாட்டுங் கந்தரமு மந்தரத்திண்
புயநான்குங் கண்டு முத்தித்
துறைகாட்டுங் கடற்றீரச் சுருதிவனத்
திறைவனடி துதித்தல் செய்வான்.

[பிறைகாட்டும் சடைமுடியும் பிரமரம்கா
மரம் காமரம் முரன்று பிரசம் மாந்த
நறைகாட்டும் கொன்றை அம்தார் அணிந்(து) இலகு
திருமார்பும் நயனம் மூன்றும்
கறைகாட்டும் கந்தரமும் மந்தரத் திண்
புயம் நான்கும் கண்டு முத்தித்
துறைகாட்டும் கடல் நீரச் சுருதி வனத்(து)
இறைவன் அடி துதித்தல் செய்வான்.]

இ — ள்: பிறை காட்டும் சடை முடியும் — இளம் பிறைச்சந்திரன் விளங்குகின்ற சடை முடியும், பிரமரம் காமரம் முரன்று பிரசம் மாந்த — வண்டுகள் இசையைப்பாடித் தேனையுண்ணும்படி, நறை காட்டும் கொன்றை அம்தார் அணிந்து இலகு திருமார்பும் — பரிமளம் வீசுகின்ற அழகிய கொன்றை மலர்மாலையையணிந்து பிரகாசிக்கின்ற திருமார்பையும், நயனம் மூன்றும் — சோமசூரியாக்கினியாகிய மூன்று கண்களையும், கறை காட்டும் கந்தரமும் — (நஞ்சுண்டதனால்) கறுத்த திருக்கண்டத்தையும், மந்தர திண்புயம் நான்குங் கண்டு — மந்தரமலைக்கொப்பாகிய வலிய நான்கு புயங்களையுந் தரிசித்து, முத்தி துறை காட்டும் கடல் நீர — மோட்சத்தையடைதற்காகிய துறையைக் காட்டுகின்ற சமுத்திரத்தின் கரையையுடைய, சுருதி வனத்து இறைவன் அடி துதித்தல் செய்வான் — வேதாரணியப்பதியிலெழுந்தருளிய சிவபெருமானது திருப்பாதங்களை ஸ்தோத்திரிப்பானுயினன் எ — று. (24)

வேறு

களக்கோலவல் விடமுண்டருள் களத்தாய்கவின் றருஞ்சா
மளக்கோமளத் திருமேனிகொண் மலைமாதின் மணாளா
தளக்கோகன தக்கண்ணினன் றருவேடனைச் சுடுதீக்
குளக்கோவுடை யானேகுறிக் குங்கோவுடை யானே.

[கள,கோல,வல் விடம்,உண்(டு) அருள் களத்தாய்,கவின் தரும்,சா
மளக் கோமளத் திருமேனிகொள் மலைமாதின் மணாளா,
தளக் கோகனதக், கண்ணினன் தருவேள்தனைச் சுடுதீக்
குளக் கோஉடை யானே, குறிக் கும்கோ உடையானே.]

இ — ள் : கள கோல வல் விடம் உண்டு அருள் களத்தாய் — கரு நிறம் பொருந்திய கொடிய ஆலகாலவிஷத்தையுண்டருளிய நீலகண்டரே, கவின் தரும் சாமள கோமள திருமேனிகொள் மலை மாதின் மணாளா — அழகமைந்து விளங்குகின்ற பச்சை நிறம் பொருந்திய இளமையாகிய திருமேனியையுடைய உமாபதியே, தளகோகனத கண்ணினன் — இதழ்களமைந்த செந்தாமரை மலராகிய திருநயனத்தையுடைய விஷ்ணுமூர்த்தி, தருவேள் தனை சுடு தீ கோ குளம் உடையானே — பெற்றருளிய மன்மதனைத் தகித்த அக்கினி நேத்திரத்தையுடைய திரு நெற்றியைக் கொண்டவரே, குறிக்கும் கோ உடையானே — தீட்டப்பட்ட இடபக்கொடியையுடையவரே எ — று.

குறிக்கும் கோ உடையானே என்பதற்கு குறிக்கப்படுகின்ற திக்கையாடையாகவுடையவரே எனினுமாம். (25)

சுடுஞ்சூகரத் தடிமென்றுறு சுவைகண்டவையுதவுங்
கடுங்கானவர் குலந்தோன்றிய கண்ணப்பனை யாண்டாய்
தொடுங்காய்கணை யெனமால்வரத் துன்னார்புர முன்னா
ளடுங்கார்முகத் தானேயொரைந் தழகார்முகத் தானே.

[சுடும்சூகரத் தடிமென்(று),உறு சுவைகண்(டு) அவை உதவும்
கடும் கானவர் குலம் தோன்றிய கண்ணப்பனை ஆண்டாய்
தொடும் காய் கணை எனமால் வரத் துன்னார்புரம் முன்நாள்
அடும்கார் முகத்தானே ஓர்ஐந்(து) அழகார் முகத்தானே.]

இ — ள் : சுடும் சூகர தடி மென்று உறு சுவை கண்டவை உதவும் — சுடப்பட்ட பன்றியிறைச்சியைப் பற்களினாலதுக்கிப் பார்த்து நல்ல சுவையாகக் காணப்பட்டவைகளைக் கொடுத்த, கடும் கானவர் குலம் தோன்றிய கண்ணப்பனை ஆண்டாய் — கொடிய வேட்டுவர் குலத்திற் பிறந்த கண்ணப்ப நாயனாரையாண்டருளியவரே, மால் தொடும் காய் கணை என வர — விஷ்ணுமூர்த்தியானவர் செலுத்தப்படுகின்ற சுடுசரமாகவுருவெடுத்து வர, துன்னார் புரம் முன்னாள் அடும் கார் முகத்தானே — பகைவர்களது முப்புரங்களையும் முன்னைநாளில் அப்பாணத்தையேவியழித்த (மேருவாகிய) வில்லையுடையவரே, அழகு ஆர் ஓரைந்துமுகத்தானே — அழகு நிறைந்த ஐந்து திருமுகங்களையுடையவரே எ — று. (26)

சும்புக்கினே கினேயின்கினே தாஞ்ய்வர மீஞர்
மொய்ம்புற்றிடு கொடிமன்னவன் முன்னேகொடு வந்தா
யம்புற்றநன் முடியாய்விற லரிதேடரு மடியாய்
கம்புக்குழை யானேகயக் கம்புக்குழை யானே.

[சம்புக்கினே, கினேயின்கினே தாஞய்வர மீன்ஆர்
மொய்ம்(பு) உற்றிடு கொடிமன்னவன் முன்னேகொடு வந்தாய்
அம்(பு)உற்றநல் முடியாய்விறல் அரிதேடஅரும் அடியாய்
சும்புக் குழையானே கயக்கம் புக்(கு) உழையானே.]

இ — ள் : சும்புக்கினே கின்னேயின் கினே தாஞய் வர — நரிக்கூட்டங்களானவை குதிரைக் கூட்டங்களாயுருமாறி வர, மொய்ம்புற்றிடு மீன் ஆர் கொடி மன்னவன் முன்னே கொடுவந்தாய் — வலிமை பொருந்தியமற்ச மெழுதிய கொடியையுடைய அரிமர்த்தன பாண்டியராசன்முன் அவைகளைக் கொண்டுவந்தருளியவரே, அம்பு உற்ற நல் முடியாய் — 'கங்கா நதியைத் தரித்த நல்லசடைமுடியையுடையவரே, விறல் அரி தேட அரும் அடியாய் — வலிய விஷ்ணுமூர்த்தியினலும் தேடுதற்கரிய திருப்பாதங்களேயுடையவரே, சும்புகுழையானே — சங்கக்குண்டலங்களேயணிந்த திருச்செவிகளேயுடையவரே, கயக்கம் புக்கு உழையானே — துன்பங்களேயடைந்து வருந்தாதவரே எ — று.

கின்னே கினே எனத்தொக்கது. (27)

ஈரக்குளிர்ப் புனல்வைகையி னிடியுங்கரை நொடியிற்
றூரச்சொரி மண்கூடை சுமந்தேயடி பட்டாய்
கோரச்சின மிக்காகிய கொக்கின்சிறை யக்கி
னூரச்சடை யானேநினே யாரச்சடை யானே.

[ஈரக்குளிர்ப் புனல்வைகையின் இடியும்கரை நொடியில்
தூரச் சொரி மண்கூடை சுமந்தேஅடி பட்டாய்
கோரச்சினம் மிக்(கு)ஆகிய கொக்கின் சிறை, அக்கின்
ஆரச் சடையானே நினேயார் அச்(சு)அடையானே.]

இ — ள் : ஈர குளிர் புனல் வைகையின் இடியும் கரை — மிக்க குளிர்மை பொருந்திய நீரைக்கொண்ட வைகைநதியிலிடிந்த கரையை, நொடியில் தூர சொரி மண் கூடை சுமந்தே அடி பட்டாய் — கணப்பொழுதில் தூரும்படி கொட்டிய மண்கூடையைச் சுமந்து அடிபட்டவரே, கோர சினம் மிக்கு ஆகிய கொக்கின் சிறை — உக்கிரத்தைக்கொண்ட கோபம் மிகுந்து தோன்றிய பகாசுரனுகிய கொக்கின் சிறகுகளேயும், அக்கின் ஆர சடையானே — எலும்புமாலேகளேயுமணிந்தசடையையுடையவரே, நினேயார் அச்சு அடையானே — தியானியாதவர்களுடைய உள்ளத்தின்கண்ணே (சிந்தித்த வழியுந்) செல்லப்பெருதவரே எ — று. (28)

கலிமாமறை யயனீறுறு கற்பந்தொறு நல்குந்
தலிமாலி புனேந்தாய்வட தருநீழ லிருந்தாய்
கொலியார்கதி ராழிப்படை கொண்டேசலந் தரனே
மலிமாதிடத் தானேயிம மலிமாதிடத்தானே.

[கலிமாமறை அயன்ஈ(று)உறு கற்பம் தொறும் நல்கும்
தலிமாலி புனேந்தாய் வடதருநீழல் இருந்தாய்
கொலிஆர் கதிர் ஆழிப்படை கொண்டே சலந்தரனே
மலி, மாதிடத்தானே, இம மலி மா(து) இடத்தானே.]

இ — ள்: கலி மா மறை அயன் ஈறு உறு கற்பம் தொறும் நல்கும் — பெருமைபொருந்திய வேதசாஸ்திரங்களையறிந்த பிரமதேவன் அழிந்துபடுகின்ற கற்பகாலங்களிலெல்லாம் கொடுத்த, தலி மாலி புனேந்தாய் — பிரமாலிகளைத் தரித்தருளியவரே, வடதரு நீழல் இருந்தாய் — கல்லாலவிருட்ச நீழலிலெழுந்தருளியவரே, கொலி ஆர் கதிர் ஆழி படை கொண்டு — கொலித்தொழில் பொருந்திய ஒளியையுடைய சக்கராயுதத்தைக்கொண்டு, சலந்தரனே மலி மா திடத்தானே — சலந்தராசுரனோடு யுத்தஞ்செய்து அழித்த மிக்க வலிமையையுடையவரே, இம மலி மாது இடத்தானே — இமயமலையரசன் புத்திரியாகிய உமாதேவியாரை வாமபாகத்திற்கொண்டருளியவரே எ — று.

ஏ — அசை.

(29)

சிலித்தூண்டனி லுதித்தோங்கிமண் டிகைத்தேங்கமுன் சிரித்தே
யுலித்தாண்டுபொன் னிறத்தியவ னுடற்கீண்டிடு மரியை
யலித்தாங்குயிர் கொளச்சிம்புள தாணையி லார்முத்
தலித்தானேயி னனேபுலித் தலித்தானேயினனே.

[சிலித் தூண்தனில் உதித்(து) ஓங்கி மண்திகைத்(து) ஏங்குமுன் சிரித்தே
உலித்(து)ஆண்டு பொன்நிறத் தியவன் உடல் கீண்டிடும் அரியை
அலித்(து) ஆங்(கு) உயிர்கொளச் சிம்புள் அ(து)ஆணை அயில் ஆர்முத்
தலித்தானேயினனே புலித்தலித் தானேயினனே.]

இ — ள்: சிலை தூண் தனில் உதித்து ஓங்கி — கற்றூணினிடத்துத் தோன்றி வளர்ந்து, மண் திகைத்து ஏங்க முன் சிரித்து உலித்து — பூமியானது நடுங்கி அஞ்சும்படி முன்னேக்காலத்து நகைத்துக் கலங்கச் செய்து, ஆண்டு பொன்னிற தியவன் உடல் கீண்டிடும் அரியை — அப்பொழுதே இரணியனுகிய கொடியவனது உடலைக் கிழித்த நரசிங்கத்தை, அலித்து ஆங்கு உயிர் கொள சிம்புள் அது ஆணை — அவ்விடத்து வருத்தி உயிர்கவரும்படி சரபப்பட்சிவடிவங்கொண்டவரே, அயில் ஆர் முத்தலை தானையினனே — கூர்மபொருந்திய மூக்குவரைக்கொண்ட சூலப்படையையுடையவரே, புலித் தலை தானையினனே — புலியிற்பொருந்திய தோலை உடையாகக்கொண்டருளியவரே எ — று.

(30)

பணப்பாம்பரைப் பரவைக்குநம் பரவைப்பெரு விரக
முணர்த்தாங்கென விடுஞ்சுந்தரற் கொருசந்து நடந்தாய்
மணப்பூந்துகள் குடைந்தூதிமை வரிவண்டிமிர் மதலைத்
துணர்ப்பூங்கணி யானேதொழுந் தொண்டர்க்கணி யானே.

[பணம்பாம்(பு)அரைப் பரவைக்கு, நம்,பரவைப் பெருவிரகம்
உணர்த்(து)ஆங்'கு)என, விடும்சுந்தரற்(கு) ஒருசந்து நடந்தாய்;
மணப்பூந்துகள் குடைந்(து),ஊதி, மைவரிவண்(டு)இமிர், மதலைத்
துணர்ப்பூ கு(ண்)ணியானே தொழும்தொண்டர்க்(கு) அணியானே.]

இ — ள் : பணம் பாம்பு அரை பரவைக்கு — சர்ப்பபடத்தை யொத்த நிதம்பத்தையுடைய பரவையாருக்கு, நம் பரவை பெரு விரகம் உணர்த்து ஆங்கு என — நமது சமுத்திரம் போன்ற பெரிய மயக்கத்தை ஆங்குச் சென்று நிவிர்த்திக்குகவென்று, விடும் சுந்தரற்கு ஒரு சந்து நடந்தாய் — அனுப்பிய சுந்தரமூர்த்திநாயனாருக்கு ஒரு தூதாகச் சென்றருளியவரே, மண பூ துகள் குடைந்து ஊதி மை வரி வண்டு இமிர் — வாசனை பொருந்திய பூம்பராகங்களை காலினாற்றுதைத்தாதிக் கரிய புள்ளிபொருந்திய வண்டுகளானவை படிந்து பாடுகின்ற, மதலை துணர் பூ கண்ணியானே — இதழமைந்த கொன்றை மலர் மாலையையுடையவரே, தொழும் தொண்டர்க்கு அணியானே — என்றும் வழிபாடு செய்கின்ற அடியவர்களுக்குச் சமீபமாயுள்ளவரே எ — று.

கண்ணி கணியெனத்தொக்கது. (31)

சுதைக்கும்பநன் முலைமாதரைத் துகடீர்புவிச் சுரரை
வதைக்கும்பழி தணமாற்றிடு மணிகன்னிகை யுடையாய்
பதைக்கும்படி யடலார்கொடும் பகடூர்சமன் மருமத்
துதைக்குங்கழ லானேகரத் தொளிர்பொங்கழ லானே.

[சுதைக், கும்ப, நல்முலைமாதரைத், துகள்தீர்புவிச் சுரரை,
வதைக்கும், பழி, தணமாற்றிடும் மணிகன்னிகை உடையாய்,
பதைக்கும், படி, அடல்ஆர் கொடும் பக(டு) ஊர் சமன் மருமத்(து)
உதைக்கும் கழலானே, கரத்தொளிர் பொங்(கு) அழலானே.]

இ — ள் : சுதை கும்ப நல் முலை மாதரை — அமுதகலசத்தைப்போன்ற நல்ல தனங்களையுடைய பெண்களையும், துகள் தீர் புவி சுரரை — குற்ற மற்ற பிராமணர்களையும், வதைக்கும் பழி தணமாற்றிடும் — கொன்ற கொலைத் தோஷங்களை நாசஞ்செய்யவல்ல, மணி கன்னிகை உடையாய் — மணிகன்னிகையென்னும் தீர்த்தத்தையுடையவரே, பதைக்கும் படி — மிகவும் வருந்தும்படி, அடல் ஆர் கொடும் பகடு ஊர் சமன் மருமத்து — வலிமை பொருந்திய கொடிய எருமைக்கடாவிலேறிய யமனது மார்பினிடத்து, உதைக்கும் கழலானே — உதைத்த திருவடியையுடையவரே, கரத்து ஒளிர் பொங்கு அழலானே — திருக்கரத்தில் கண்ணை ஒளிகொண்டு சுவாலிக்கின்ற அக்கினியையுடையவரே எ — று. (32)

சலத்தான்மிகுங் கொடியோனிசை தருவீணையின் கொடியோன்
புலத்தார்கரி யிருநான்குடன் பொருதன்றடல் புரியு
முலத்தோடலை நெரிபட்டுர னுட்கும்படி யூன்று
மலர்க்கானகத் தானேதிரு மறைக்கானகத் தானே.

[சலத்தால் மிகும் கொடியோன், இசைதரு வீணைபின் கொடியோன் புலத்(து), ஆர்கரி இருநான்குடன் பொரு(து), அன்(று) அடல் புரியும், உலம்தோள், தலை, நெரிபட்(டு), உரன் உட்கும்படி ஊன்றும் மலர்க்கால் நகத்தானே, திருமறைக்கான் அகத்தானே.]

இ — ள்: சலத்தால் மிகும் கொடியோன் — கோபத்தினால் மிகுந்த கொடியவனும், இசை தரு வீணையின் கொடியோன் — பண்ணமைந்த யாழ்க் கொடியையுடையவனுமாகிய இராவணனது, புலத்து ஆர் கரி இரு நான்குடன் பொருது — திக்குகளிலுள்ள எட்டுயானைகளோடும் எதிர்த்து, அன்று அடல் புரியும் — அக்காலத்து போராடல் புரிந்த, உலம் தோள் தலை நெரி பட்டு உரன் உட்கும்படி — திரண்ட கல்லையொத்த புயங்களும் தலைகளும் நெரிந்து வலிமைகுன்றும்படி, ஊன்றும் மலர் கால் நகத்தானே — ஊன்றி மிதித்த மலர்போன்ற திருப்பாத நகத்தையுடையவரே, திருமறை கானகத் தானே — இலட்சுமிகரம் பொருந்திய வேதவனத்தையுடையவரே என்று. (33)

துன்பந்தரு பிறவிப்பினி தொலையும்படி நிலையா
மன்பங்கியி னிழுதிட்டென வகநெக்குரு கிப்பூ
நன்பங்கய நிகர்நின்பத நாளுந்தொழு மடியார்க்
கின்பந்தரும் பித்தாவர மெனைநீவிரும் பித்தா.

[துன்பம்தரு, பிறவிப்பிணி, தொலையும்படி நிலையாம் அன்(பு) அங்கியின் இழு(து) இட்(டு) என, அகம்நெக்(கு) உருகிப்பூ நல்பங்கயம் நிகர்,நின்பதம் நாளும் தொழும் அடியார்க்(கு) இன்பம் தரும், பித்தா; வரம் எனை நீ, விரும்பித் தா.]

இ — ள்: துன்பம் தரு பிறவி பிணி தொலையும்படி — (இடையறாது) வருத்தஞ்செய்கின்ற பிறவிநோயானது அழியும்வண்ணம், அங்கியின் இழுது இட்டு என — அக்கினியின்கண்ணே நெய்யைச் சொரிந்தாற்போல, நிலையாம் அன்பு அகம் நெக்கு உருகி — நிலைத்த அன்பையுடைய மனமானது கனிந்து உருகப்பெற்று, நல் பங்கய பூ நிகர் நின்பதம் — நல்ல தாமரை மலரையொத்த உமது திருப்பாதங்களை, நாளும் தொழும் அடியார்க்கு இன்பம் தரும் பித்தா — என்றும் வழிபடுகின்ற அடியவர்களுக்கு நித்திய சுகத்தையீந்தருளுகின்ற பித்தரே, எனை நீ விரும்பி வரம் தா — அடியேனிடத்துத் தேவரீர் அருள்கொண்டு மோட்சவரத்தைத் தந்தருளும் என்று. (34)

வேறு

என்றுபல துதிகூறி யானந்த மிகுந்துபுன லிருகண்சோரத்
துன்றுமயிர்ப் புளகமெழப் பரவசனுய் வீழ்ந்தெழுந்து துள்ளியாடித்
தன்றுணைச்செங் கரங்கூப்பி முடியில்வைத்துப் படியினின்றேன் றன்னேநோக்கிக்
கன்றுசினக் கருங்காலன் றனையுதைத்த செங்காலன் கழறு மன்றே.

[என்றுபல துதிகூறி, ஆனந்தம் மிகுந்து, புனல் இருகண் சோரத்
துன்றுமயிர் புளகம்எழப், பரவசனுய், வீழ்ந்(து) எழுந்(து) துள்ளி ஆடி,
தன்துணைச் செம்கரம் கூப்பி முடியில் வைத்துப் படியில்நின்றேன்தன்னைநோக்கிக்
கன்றும் சினக் கருங்காலன் தனை உதைத்த செங்காலன் கழறும் அன்றே.]

இ — ள்: என்று பல துதி கூறி — இவ்வாறு பல தோத்திரங்களைச் சொல்லி, ஆனந்தம் மிகுந்து — சந்தோஷம் அதிகரிக்கப்பெற்று, புனல் இரு கண் சோர — கண்ணீர் இரண்டு கண்களினின்றுஞ் சொரிய, துன்று மயிர் புளகமெழ — நெருங்கிய உரோமங்கள் சிலிர்த்து எழ, பரவசனுய் வீழ்ந்து எழுந்து துள்ளி ஆடி — (தன்வசமற்றுச்) சிவவசப்பட்டுப் பூமியில் விழுந்து வணங்கியெழுந்து துள்ளி ஆனந்தக்கூத்தாடி, தன்துணை செம் கரம் கூப்பி முடியில் வைத்து — தன்னுடைய இரண்டு சிவந்தகைகளையுங் குவித்துச் சிரசில் வைத்துக்கொண்டு, படியில் நின்றேன் தன்னை நோக்கி — பூமியின்கண்ணே நின்ற சாவிகோத்திரனைத் திருநோக்கஞ் செய்து, கன்று சின கரும் காலன் தனை உதைத்த செம் காலன் — கொதிக்கின்ற கோபத்தையுடைய கரிய யமனையுதைத்த சிவந்த திருப்பாதத்தையுடைய சிவபெருமான், கழறும் — திருவாய்மலர்ந்தருளுவார் எ — று.

அன்று ஏ அசைகள். (35)

உவரிவளைநெடுநிலத்தி லுடற்கணிலா கண்டலன்போ லுவப்பி னேடுத்
துவரிதழ்வாய் மனைவிமகார் சூழமிகு போகமெலாந்துய்த்துக் கற்றைக்
கவரிசிலர் புடையிரட்டக் கணங்களெதிர் கொண்டழைப்பக் காயநீத்துத்
தவரிதய மெனவிளங்குங் கயிலைமலை வருதியெனச் சாற்றிப் போனன்.

[உவரிவளை நெடுநிலத்தில், உடல்கண்இல் ஆகண்டலன்போல், உவப்பினேடும்
துவர்இதழ்வாய் மனைவி, மகார் சூழமிகு போகம்எலாம் துய்த்தக், கற்றைக்
கவரிசிலர் புடை இரட்டக், கணங்கள் எதிர்கொண்(டு)அழைப்பக்காயம் நீத்துத்
தவர்இதயம் எனவிளங்கும் கயிலைமலை வருதி எனச், சாற்றிப் போனன்.]

இ — ள்: உவரி வளை நெடு நிலத்தில் — உப்புச்சமுத்திரத்தாற் சூழப்பட்ட பெரிய பூமியின் கண்ணே, உடல் கண் இல் ஆகண்டலன் போல் — சரீரத்திற் கண்களில்லாத இந்திரனைப்போல, உவப்பினேடும் — சந்தோஷத்துடனே, துவர் இதழ் வாய் மனைவி — பவளம் போலும் சிவந்த உதடுகளையுடைய வாய் பொருந்திய மனைவியும், மகார் — மக்களும், சூழமிகுபோகம் எலாம் துய்த்து — சூழ இருந்து மிகுந்த சுகானுபவங்களெல்லாவற்றையு மனுபவித்து, (பின்னர்) கற்றை கவரி சிலர் புடை இரட்ட — கூட்டமாகிய சாமரங்களைப் பக்கத்தே நின்று சிலர் வீச, கணங்கள் எதிர்கொண்டு அழைப்ப — நமது கணங்களெதிர்

கொண்டழைக்க, காயம் நீத்து — இவ்வுடலத்தைக் கழித்து, தவர் இதயமென விளங்கும் கயிலை மலை வருதியென — தவத்தையுடையவர்களது இருதயத்தைப் போல (வெண்ணிறமாய்) பிரகாசிக்கின்ற கயிலாயமலையை யடையக்கடவை யென்று, சாற்றி போனான் — திருவாய்மலர்ந்தருளிச் சென்றனர் எ—று. (36)

அன்றுமுத லளகைநகர்க் கதிபதிபோ னிதிபலபெற் றவனிமீதிற்
றுன்றுபல போகமெலாந் துய்த்துநெடு நாட்கழித்துத் துதித்துவாணர்
நின்றுதொழப் பதஞ்சலியும் புலிமுனியுங் காணநித்த நிருத்தந் தில்லை
மன்றுதனி லாடியபொற் பூவடிவாழ் சேவடியின் மருவி னானே.

[அன்றுமுதல் அழகை நகர்க்(கு) அதிபதிபோல் நிதிபல பெற்(று) அவனி மீதில் துன்றுபல போகமெலாம் துய்த்துநெடு நாள்கழித்துத் துதித்து வாணர் நின்றுதொழப், பதஞ்சலியும், புலிமுனியும் காண, நித்தம் நிருத்தம் தில்லை மன்றுதனில் ஆடியபொன் பூவடிவாம் சேவடியில் மருவி னானே.]

இ — ள் : அன்று முதல் அழகை நகர்க்கு அதிபதிபோல் — அந்நாள் முதல் அளகாபுரிக்கரசனுகிய குபேரனைப்போல, நிதிபல பெற்று — பலவகைச் செல்வங்களையுமடைந்து, அவனி மீதில் துன்று பல போகம் எலாம் துய்த்து — பூமியின் கணுள்ள நிறைந்த பலவகைச் செல்வங்களையுமனுபவித்து, நெடுநாள் கழித்து — அநேககாலஞ்சென்ற பின்னர், வாணர் நின்று துதித்து தொழ — தேவர்கள் கூடிநின்று தோத்திரஞ் செய்து வணங்கவும், பதஞ்சலியும் புலி முனியும் காண — பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் தரிசிக்கவும், நித்தம் நிருத்தம் தில்லை மன்று தனில் ஆடிய — என்றும் பஞ்சகிருத்திய காரணமாகிய நடனத்தைப் பொன்னம்பலத்தின் கண்ணே ஆடுகின்ற, பொன் பூவடிவாம் சேவடியில் மருவினன் — பொற்குமரை மலர்போல விளங்குகின்ற சிவந்த திருப்பாதங்களை அடைந்தனன் எ — று. (37)

ஈதுமுத லிகழ்காதை யாரேனுஞ் சிவநிநோற் றிடுவோர் பேறிங்
கோதுவதெ னுளத்தில்விழைந் தனபெறுவ ருலகமதி னுடலம் விட்டார்
சுதவிழ்பூங் கொன்றையந்தார்ச் சடைமுடியோ னிருசரணஞ் சார்வ ரென்று
சூதமுனி வரன்முனிவ ரனைவருங்கேட் டுளமகிழச் சொன்னன் மன்னோ.

[ஈதுமுதல் நிகழ்காதை, யாரேனும் சிவநிநோற் றிடுவோர், பேறு(று)இங்(கு) ஓதுவ(து)என், உளத்தில் விழைந்தனபெறுவர் உலகம்அதில், உடலம்விட்டால் தா(து) அவிழ்பூம் கொன்றை அந்தார்ச் சடைமுடியோன், இருசரணம் சார்வர், என்று சூதமுனிவரன் முனிவர் அனைவரும் கேட்(டு) உளம்மகிழச் சொன்னன் மன்னோ.]

இ — ள் : ஈது முதல் நிகழ் காலதை — இஃது முன்னைக் காலத்தில் நடந்த சரித்திரமாகும், யாரேனும் சிவநிசி நோற்றிடுவோர் — யாவராயினும் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பவர்கள், பேறு இங்கு ஒதுவது என் — பெறுகின்ற பயனே இங்கே கூறுவது என்னை, உளத்தில் விழைந்தன உலகமதில் பெறுவர் — மனத்தில் விரும்பிய யாவற்றையும் இவ்வுலகத்திற்றானே அடைவர், உடலம் விட்டால் — இவ்வுடலம் இறந்து படின், தாது அவிழ் பூ கொன்றை அம் தார்சடை முடியோன் இரு சரணம் சார்வர் என்று — (மறுமைக்கண்) இதழ் விரிந்த கொன்றைமலர் மாலையையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருப்பாதங்களை அடையப் பெறுவரென்று, முனிவர் அனைவரும் கேட்டு உள மகிழ — நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களெல்லோருங்கேட்டு மனமகிழும்படி, சூத முனிவரன் சொன்னன் — சூதமகா முனிவர் கூறினர் எ — று.

மன் ஓ அசைகள். (38)

வேறு

வாழி மாதவர் வாழி மனுநெறி
வாழி மாநிலம் வாழிநல் லானினம்
வாழி நான்மறை வாழி மழைமுகில்
வாழி வைதிக சைவ வழக்கமே.

[வாழி மாதவர்; வாழி மனுநெறி;
வாழி மாநிலம்; வாழிநல் ஆன் இனம்;
வாழி நால்மறை; வாழி மழை முகில்;
வாழி வைதிக சைவ வழக்கமே.]

இ — ள் : மாதவர் வாழி — மகாதவத்தையுடைய முனிவர்கள் வாழ்க, மனுநெறி வாழி — மனுவினுலே செய்யப்பட்ட நீதிநெறிகள் வாழ்க, மாநிலம் வாழி — பெரியபூலகம் வாழ்க, நல் ஆன் இனம் வாழி — நன்மையைத் தருகின்ற பசுக்கூட்டங்கள் வாழ்க, நால் மறை வாழி — நான்கு வேதங்களும் வாழ்க, மழை முகில் வாழி — மழையைப்பொழிகின்ற மேகங்கள் வாழ்க, வைதிக சைவ வழக்கம் வாழி — வேத ஒழுக்கங்களும் சிவாகம ஒழுக்கங்களும் (எந்நாளும்) வாழ்க எ — று.

ஏ — அசை. (39)

சாலிகோத்திரச் சருக்கம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் 714.

சிவராத்திரி புராணம்
முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்

பாட்டு	பக்கம்
அ	
அகலந்தனி	43
அக்காலியி	45
அக்கணத்தொ	348
அக்கணத்திற்	181
அங்கவர்	92
அங்கவர்தம்	359
அங்கிராப்	391
அசிக்கணுமை	95
அச்சமைய	280
அச்சிறு வேதி	330
அடல்சேருழை	302
அடல்சேர் விடை	382
அடிப்பர்	170
அடுசினக்	130
அணிகெழு	361
அணைதிரை	146
அண்ணலு	183
அதிசயமடை	52
அதிகமாக	70
அதையுனக்	254
அத்தலங்க	198
அத்தலனிற்	326
அத்துடைமா	327
அத்தெருவின்	336
அத்தல	403
அந்தியிளி	85
அந்தணரர	28
அந்திவெண்	116
அந்தண	149
அந்தநகர்	163
அந்தகனை	190
அந்நகருறை	273
அந்தகனுனை	282
அந்நீலகண்	303
அந்தமோதிர	373
அப்பவம்	320
அம்புயமுக	131
அம்முறையாக	330
அரசர்கோன	125
அரக்கனுய்	322
அரவின்மேற்	374
அரனிரவத	378
அரவுமதி	393
அரியநற்பரத	18
அரியயனே	187
அரிபுரத்தரன்	108
அரியமாதவ	233
அரியநற்	362
அருவமாயுருவ	57
அரும்புறு	262
அருடருஞ்	74
அலகடற்கடை	106
அலகெறிபா	93
அல்லினிரு	76
அவ்வரையி	162
அவ்வயிற்	277
அவ்வேலியி	380
அளவிலாத	257
அளப்பருங்	360
அனையுறும்	219
அறந்தவாத்	283
அறைமறை	93
அற்புளஞய	370
அற்றனின்	80
அற்றமிலத்	79
அற்றநோக்	123
அற்றைநாட்	287
அனையகோ	109
அனையரவ்	129
அனையளவ்	295
அனையனப்	384

பாட்டு	பக்கம்
அஞ்யசிவ	397
அன்புளாரன்	31
அன்றமரிலிரு	62
அன்னசிவ	193
அன்றரனி	216
அன்னகாலை	290
அன்னகாலையிலங்	313
அன்னமாமு	323
அன்றிரு	321
அன்னமாம	368
அன்றியெண்ணி	390
அன்றுமுத	415
அன்னதுகண்டு	334

ஆ

ஆக்குவாளை	248
ஆங்கவனு	397
ஆசனத்தி	305
ஆசகல்கோசல	86
ஆசிலமாவா	78
ஆடகப்பொ	256
ஆடுமுனிக்கு	326
ஆண்டெழுந்து	21
ஆண்டவனை	379
ஆதபந்தெறு	22
ஆதலாற்	35
ஆதலவன்	111
ஆதபத்தழல்	289
ஆதலிலுலை	317
ஆதலின் மித்	339
ஆதியிலம்பிகை	63
ஆதிநூலுணர	105
ஆதிநடு வீறி	184
ஆவரும்	160
ஆய்ந்தபற்பல	111
ஆய்மகன்	371
ஆவினேப்புரி	29
ஆவிந்த	63
ஆவினெடு	332
ஆறுசூடிய	294

இ

இக்குவளை	141
இங்கிதொர	166
இச்சிவநிசி	34
இச்சிவரா	199
இடிமுகிற்	208
இத்திறநி	210
இத்திறமறி	252
இத்தகையகோ	335
இத்தகைய	94
இத்தகையபுலை	147
இத்தலையா	185
இந்தநல்	97
இந்தவாறிவ	117
இந்தநற்	349
இந்தமாநில	377
இரங்குன்றன்	5
இருகையால்	20
இரும்புகாய்ந்	367
இருளகல	337
இலவுதேக்	205
இலகொளிக்கதி	56
இலை தலைவிரி	366
இல்லின்	126
இவ்வண்ணமிங்	156
இவ்வண்ணை	303
இறந்தமுற்	351
இனியன	32
இனியபே	269
இனியநீர்	285
இனியனவளங்	368
இனியநீர்மை	373
இன்ன நை	23
இன்னசிவ	82
இன்னணநற்	91
இன்னதன்மை	135
இன்றளவு	145
இன்னுமாசி	201
இன்னணம்	212

பாட்டு	பக்கம்
இன்ணஞ்	275
இன்பமுற்	370
இன்னவாறு	384
இன்பமார்	389
ஈ	
ஈசனன்ப	383
ஈட்டுவல்	133
ஈடுவாடை	115
ஈதுணரா	165
ஈதுமுதனீ	415
ஈரலைவாய	5
ஈரக்குளிர்	410
ஈறிலாத்	222
ஈறுவந்த	69
உ	
உங்கடலிலவன்	227
உட்புலமை	139
உதித்த கதிரத்	76
உந்தியிலுதித்	39
உந்துவெண்	320
உந்தை தன்	372
உம்மையிற்	283
உயிருலக்குங்	188
உய்யும் வகை	382
உருத்தணியா	8
உருப்ப வெந்த	23
உருகுமுளத்	91
உரையிந்	204
உலக்குநாள	116
உலகுயிர்	27
உலகுயிர்யா	185
உலகமுற்	235
உலங்குல	64
உவரிவலை	414
உழவருவயற்	101
உழலே சேர்	293
உளமிகத்	42
உளந்தனி	310
உறுதி வானவ	176
உற்ற பன்னிரு	72
உற்றவணு	405
உற்றிடுவான	329
உன்னரும்	217
உன்னருந்	385
ஊ	
ஊதைமுன்	74
ஊறிலானுயி	36
ஊறிலமாவாசை	78
ஊறினின்ற	387
ஊறுதீர்	118
ஊற்றிருந்	268
எ	
எக்குலத்துளே	274
எடுக்குங்குட	50
எண்டரு	343
எண்ணருந்தீ	193
எண்ணருந்	323
எண்டருமெட்	195
எண்ணுநல்	284
எண்டகுமீச	329
எத்தவம்	250
எம்பிரான்	294
எம்பெருமா	187
எய்ச்சிலே	59
எரிபெரும்	378
எழுமயங்கு	151
எற்றியகட	230
எனப்பல	246
எனவெடுத்	350
என்றுரைத்திடலு	98
என்றுபற்பல	119
என்றலுமரு	143
என்றவள்	46
என்றுவன்	174
என் செய்வாள்	315
என்றினைய	186

பாட்டு	பக்கம்
என்றிறை	194
என்றிருந்	220
என்றிவை	232
என்றுசூத	259
என்றுரைத்தி	98
என்னுடை	250
என்றிவை	353
என்றுயர்	341
என்னலு	375
என்றுபல	414
என்றேசிவ	383
ஏ	
ஏகமன	144
ஏதமின்முற்	89
ஏதமற்றுய	296
ஏந்துபூண்	100
ஏமமணி	139
ஏவயாமிவ	177
ஏர்மருவு	137
ஏர் பெறுமள	247
ஐ	
ஐம்படை தரித்	233
ஒ	
ஒப்பின் மார்	71
ஒருமலை	245
ஒருமனமாயி	318
ஒருவருந்	363
ஒருபொருளே	406
ஓ	
ஓங்கினைய	152
ஓடினேன்	347
ஓதவருஞ்	82
ஓதமூற்றிடு	364
ஓதியாயனு	55
ஓதிமக்கொ	258
ஓதுநூற்கலை	374
ஓருருட்	213
ஓர்கிவலிங்	327

பாட்டு	பக்கம்
க	
கங்குறனிற்	77
கஞ்ச நாண்	112
கஞ்சநெடு	153
கடிகமழ்	2
கடுத்தானுருத்	46
கடுவெஞ்சினை	50
கடுவெங்	381
கணித்துமு	319
கண்டந்தண	47
கண்ணுதலே	84
கண்மணி	151
கண்ணழல்	247
கண்ணனை	291
கண்டவாளர	312
கண்ணிகளை	249
கந்தமலர்	17
கந்தரநேர்	61
கந்தநாண்	99
கப்பிநாடொறு	119
கயமலர்துவை	365
கயிரவங்	266
கரமுறிந்த	178
கரியெனநின்	61
கரியநீண்	218
கருகுகங்கு	265
கருதியசொற்	199
கருது மந்நதி	101
கலகவாழ்	293
கலைமாமறை	411
கலைகள் கற்ற	100
கல்லுநீர்	134
கழனிமலை	391
கழி தருமே	356
கவளமால்	112
களங்கமா	201
களக்கோல	409
களிப்பினுஞ்	120
கறங்கிடு	240

பாட்டு	பக்கம்
கறைணிடமுகுத்த	319
கறைசெறியு	180
கற்றிலம்	377
கனமிருண்டு	190
கன்னிமாட	121
கன்னமாமதங்	52
கன்னியர்	154
கன்னிகை	191
கன்றிய	309
கன்னபாக	375
கா	
காக்குமால	386
காசியிரா	198
காசினியென்னு	123
காட்டிய	161
காந்துசெம்ம	108
காரதிருங்	11
கால்வழி	124
காலஞர்வீழத்	57
காலஞருயிர்	175
காலிகோத்திர	393
காவரசு	14
காவல்கட்டழி	122
கானிமிர்	37
கு	
குத்திரமற	297
குரமாமுகத்	49
குரைகடல்	128
குளங்கூப	191
குறுந்துளீ	216
குறையில்	103
குனி சிலை	214
குன்றென	298
கூ	
கூடவிணையாக	142
கூடியங்கிருவர்	53
கூர்தருஞ்	253
கூறுநான்	28
கூனருஞ்	346

பாட்டு	பக்கம்
கே	
கேட்டபோ	127
கேட்டவுட	182
கை	
கைதவத்தி	259
கைப்புடை	299
கையனிக்	160
கையின்மான்	292
கொ	
கொடிகொண்	301
கொடியதார	177
கொடியகோ	204
கொண்டல்கண்	358
கொண்டல்வண்	258
கொய்யுளைப்	212
கொலைபயி	239
கோ	
கோடுவாய்	271
கோழுகங்	129
கோல்வரை	241
ச	
சங்குபட	165
சங்கொடு	300
சஞ்சரிக	232
சடையர்	22
சந்தனமுற்	87
சம்புக்கிளை	410
சரிதிசைக்	37
சலத்தான்	413
சலந்தரும்	266
சறுவனே	89
சா	
சால மொழி	231
சி	
சிங்கத்தம்புலி	72
சிரங்களங்	196
சிலபகற்	385

பாட்டு	பக்கம்
சிலைமகளா	282
சிலைத்தூண்ட	411
சிவநிசியெ	252
சிவன்றிருக்	363
சிவநிசியாஞ்	406
சிறந்ததோரை	355
சிறையுறுமிப்	402
சீ	
சீதரனுந்	66
சீதவனம்	399
சீர்தந்த	2
சீர்தருகோ	337
சீறித்திசை	46
சீற்றமீக்	127
சு	
சுசிகரமில்	253
சுடுஞ்சூகரத்	409
சுதைக்கும்	412
சும்மையார்	242
சூ	
சூடுடைய	407
சூராட்டுப்	4
சூலமொடு	223
சூல்வளே	126
செ	
செக்கரெழு	154
செங்கணெயி	229
செஞ்சுடரெறி	299
செம்மையா	15
செம்பவள	144
செம்பொனெ	338
செய்யதழற்	10
செவ்விரவளே	255
செறிந்தவுயி	195
சென்றனர்	225
சென்றுமுறை	158
சே	
சேயவரிவா	138
சேற்றினுர்	389

பாட்டு	பக்கம்
சொ	
சொல்லுமக்	351
சொற்பகர்	3
சொற்றவேதி	110
சொன்னசூதனே	67
சொன்னவிண்டு	113
சொன்னமாக	286
சொன்னதலங்	325
த	
தக்கதுந்து	290
தஞ்சமொன்	218
தடங்கரை	396
தடங்கிடந்	264
தத்திவீழ்	131
தரைபயிலா	145
தரைமிசைத்	155
தனையன் யான்	371
தன்மாடத்	308
தன்றனைத்	314
தன்றடஞ்	344
தா	
தாமமாகமிகு	172
தாலமொத்த	168
தாவரும்	251
தி	
திங்களின்கலை	68
திதித்திரயஞ்	80
திரிகணசல	175
திரிபுவனத்	248
திரைமுதிர்	285
திலகவாணுதற்	19
தீ	
தீதுதீர்த்தருள்	386
தீயவெம்பசி	286
தீரமுறுவேலை	141
தீவிழியெருவை	352

பாட்டு	பக்கம்
து	
துண்டமாமதி	107
துண்டவான்	174
துப்புறள்	152
துய்யவெண்	84
துரக்கும்	205
துள்ளுநடை	192
துறுமயிர்ச்	207
துன்பந்தரு	413
துன்றுகொன்	21
தூ	
தூமமார்	369
தூயநீத்திழி	120
தூயவெண்	134
தூயகுமுதத்	142
தூயசெந்த	241
தெ	
தெருண்மனத்	24
தென்றலந்	114
தென்னிலங்	335
தென்றலங்	361
தே	
தேனலந்த	267
தேனுநீட	202
தொ	
தொல்லினை	162
தொழுகுலத்தவர்	121
தோ	
தோடுறுகம	261
தோன்றுமைந்	110
ந	
நகுமார	179
நடைதரு	276
நந்திமொழி	226
நந்தனிறன்	281
நல்லுணர்	65
நல்வலினை	404
நவமிகு	362
நற்றலமத	325
நன்றென	26
நா	
நாட்டமன்ன	219
நாதன்விடை	225
நாமத்தினிரு	90
நாமனுங்	269
நாலுமாமறை	176
நி	
நிருதர்குலத்	334
நிலத்தானைக்	60
நிலவுமாமணி	103
நிழலுமிழஞ்	183
நிறம்பயின்	263
நின்மலீதனக்கு	51
நின்மலமா	197
நீ	
நீடலுறழ்	8
நீடுருதுநல்	118
நீடுவேற்க	209
நீயுமப்பவ	357
நீருகந்தகார்	102
நீர்வடிவான	58
நீலகண்டமு	54
நீளிரண்டு	11
நீறணிந்தி	171
நெ	
நெடிதுதினம்	316
நெறியில்	376
ப	
பகர்தரு	95
பங்கயத்தயனை	38
பங்கயத்தயன்	51
பங்கயக்	147
பஞ்சணி	136
படருமென்	292
படிபுகழ்	179

பாட்டு	பக்கம்
படியிலோர்	354
மணப்பாம்	412
மணிப்பணி	289
பரவியந்த	220
பரிமகம்புரி	249
பரிந்துபோ	291
பருவமாறுள	69
பரைசிவ	196
பலத்தினே	284
பல்லொடிந்	157
பல்லவதே	358
பழுதிலன்புட	114
பற்றுமென்ப	169
பற்றினர்	224
பற்றொருசற்	376
பா	
பாசமெறி	229
பாடளிக்கு	392
பாய்கலைப்பு	311
பாரகத்தும்	7
பாரணந்தா	96
பாரதன்மே	238
பாரினிற்	343
பாரின்மேல்	267
பாருலகெலை	40
பார்தனில்	328
பாலிலென்ற	347
பாவியேன்	214
பி	
பிறங்கிய	146
பிறர்மனே	117
பிறைகாட்டு	408
பின்னுமோர்	35
பின்னரோர்	41
பின்பவ்வரக்கர்	331
பு	
புக்குபுனற்	149
புடத்திடு	236
புடைத்தவு	353
புட்டருக்கு	207
புண்ணீரின்	339
புரமுனியும்	315
புரிந்தபூசனே	349
புலவுவாய்	221
புலந்துறந்	270
புலந்தரு	344
புள்ளெலுங்	278
புன்புலவருந்	211
புன்றலே	262
புன்மையால	287
பூ	
பூகநெடு	340
பூசுரகுலேச	125
பூதியமைந்தி	39
பூவந்தியில்	44
பெ	
பெண்டான் முடி	49
பெய்யுமாமழை	113
பெரியவாயர	168
பெருவரை	155
பெருவாவிக்	6
பெருவாதபித்	14
பெரும்புரி	300
பெற்றன	283
பெற்றுயர்	33
பை	
பைம்புலி	296
பொ	
பொங்குகதிர்	180
பொங்குவெஞ்	203
பொங்கரவி	244
பொடியெழப்	58
பொய்விரவு	16
பொருடங்கி	381
பொருதிப்படி	48
பொருவினறு	9
பொன்னில	398

பாட்டு	பக்கம்
பொன்னிமு	400
பொன்னுல	137
பொன்றிகழ்	203
போ	
போயமலன்	228
போற்றியங்கு	171
ம	
மகரதிங்க	73
மங்குனிறத்	13
மங்குனிற	138
மங்கலமுர	357
மங்கையொ	224
மஞ்சஞ்சீறர	268
மடிசெவி	210
மட்டறப்	178
மண்டலந்	19
மண்டனிலு	135
மதிமுடியோ	83
மதிவளர்	344
மத்தகமால்	75
மம்மருற	143
மரவநாக	266
மருவுயிர்த்தி	275
மருவொரு	355
மருவருந்	53
மருவிரி	59
மலைக்கிணை	272
மழைக்கரு	25
மறமறலி	148
மறுவையவி	306
மறையோனென	333
மறைகளிற்	30
மறைநாலு	44
மறைவிரித்	107
மற்றொரு	30
மற்றவனுந்	182
மற்றவன்	345
மனமறிய	192
மனுதிகளிற்	307
மன்றல்கம	136
மன்னுநெடு	148
மன்றன்மை	245
மன்னர்தம்	297
மன்றணட்	388
மன்னவ	331
மா	
மாகமாமதிச்	67
மாகமாம	324
மாசிமாதத்தி	54
மாதவர்	321
மாமனை	115
மாரிவளந்	153
மாவின்வடு	332
மாறதாமென	104
மாறின் மார்கழி	71
மி	
மிதித்தவப்	379
மின்னேநேர்	26
மீ	
மீட்டுமந்த	167
மு	
முண்டகமுற்	88
முதிரச்சின	47
முத்தியினை	96
முத்தமிதினு	122
முத்தியிலவ	131
முத்தவெண்	364
முந்தைநாள்	243
முரிதிரைச்	152
முருந்தியற்ற	223
முருந்துறழ்	356
முழைக்கட்	209
மூனத்தெரி	140
முறுகியசி	215
மூற்றியி	81
மூற்சாமம்	87
மூவிவர்போ	173
மூனிவர்முன்	20
மூன்னமுதற்	85
மூன்னின்ற	159
மூன்னுருவ	399
மூ	
மூண்டவெம்	132
மூடனையறத்	231
மெ	
மெய்வசமழி	140
மெலிக்கு நூலிடை	105
மென்னடைய	354

பாட்டு	பக்கம்
மே	
மேவருவிரி	237
மேவிவளர்	150
மேவிளங்க	221
மை	
மைக்கணத்	310
மைதவழுங்	189
யா	
யானுமங்கெ	359
யாமமோர்	30
யாம நான்	238
யாவரிது	158
யாவர்பணி	226
வ	
வடிக்குரன்	311
வடிசெய்து	215
வடித்த நெட்டிலை	265
வணங்கி	170
வண்டுபடும்	306
வந்தமா முனிவன்	24
வந்த நல்ல	156
வந்து செந்தினை	222
வந்தரசன்	304
வந்தவடன்	317
வம்பவிழுங்	395
வருமித்தி	302
வரையிலக்	324
வலிசேர்புய	45
வலிவார்	301
வளமிகுசெல்	264
வளைந்த	208
வள்ளெனக்	237
வள்ளவார்	360
வனவரிச்குயி	270
வன்புலஞ்சா	205
வளைதரு	341
வா	
வாட்டடங்	372
வாதகப	250
வாதராயண	261
வாயிலோர்	124
வார்விசித்தி	106
வார்சில	211
வார்பெறு	234
வாழி மாதவ	416
வி	
விடமுனிய	403
விடியல்காண்	288
விடுங்கதிர்	99
விடுமினிந்த	172
விடைக்கொடியு	55
விண்ணினின்	42
விண்ணுடெரி	48
விண்ணுறு	130
விண்டலமுதி	228
விண்ணவர்பூ	401
வித்தகனெதி	328
விரித்துல	56
விரியும்வெண்	70
விரித்தசெழுங்	75
விரிந்த	150
விரிதடஞ்	206
விலங்குபுட்	298
விலோமகனி	188
வில்வநொச்சி	88
விழியிழந்த	387
விற்சரநுதற்	309
விற்பயில்வேட	251
வீ	
வீணிலிவன்	17
வீழ்ந்து விண்	102
வெ	
வெங்குருவிற்	12
வெங்கொடுங்	256
வெண்டரளத்	164
வெண்ணிண	202
வெந்தழல்	263
வெறுத்தவ	279
வெய்யவேல்	128
வெய்யகொ	163
வெய்யதிச்	278
வென்றிதரு	227
வே	
வேதநூன்	109
வேதியர்தம்	394
வை	
வைத்தமுத்	255
வையம்யாவை	104

6695 c.c